
ஈழத்து

இடப்பெயர் ஆய்வு

யாழ்ப்பாண மாவட்டம்



கலாநிதி இ. பாலசுந்தரம்

ஈழத்து இடப்பெயர் ஆய்வு

(யாழ்ப்பாண மாவட்டம்)

கலாநிதி இ. பாலசுந்தரம்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ரொறன்ரோ - கனடா
2002

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Eelathu Idap Peyar Aayvu – YaalppaNa MaavaTTam** (Sri Lankan Place Names Studies: Jaffna District)
Author	:	Dr. Elayathamby Balasundaram
Subject:	:	Toponymy
Language	:	Tamil
Date of Publication	:	April 06th 2002
Edition	:	First
Size of the book	:	1/8 Demy
Printing types used	:	11 and 12 points
Number of pages	:	XIII + 434
Price	:	C$ 20/=
Number of copies printed	:	1000
Type Setting	:	Mrs. Santhira Sathiyalingham, Tronto
Printer	:	Viveka Printers, Toronto
Publisher	:	Thamilar Senthamarai Publish ing House, Toronto
Copy right	:	The Author.

நூலின் பெயர்	:	ஈழத்து இடப்பெயர் ஆய்வு - யாழ்ப்பாண மாவட்டம்
ஆசிரியர்	:	கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம்
பதிப்பு	:	முதற் பதிப்பு
வெளியீடு	:	06. 04. 2002
அச்சகம்	:	விவேகா அச்சகம், ரொறன்ரோ
வெளியீடு	:	தமிழர் செந்தாமரை வெளியீட்டகம், ரொறன்ரோ.
பதிப்புரிமை	:	நூலாசிரியருக்கே உரியது.

பொருளடக்கம்

அணிந்துரை

பேராசிரியர் க. ப.
அறவாணன்,பி.ஓ.எல்.,எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.,
துணைவேந்தர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, தமிழ்நாடு.

வருங்காலம் அறிந்து வரும் வரவு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டலில் 'ஈழத்து இடப்பெயராய்வு (யாழ்ப்பாண மாவட்டம்)' எனும் இந்நூல் பேரா சிரியர் இ. பாலசுந்தரம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈழத்தில் நிலவிய தமிழரசு - அதன் வரலாறு - பண்டைய வரலாறு என்பன பற்றிய முழுமையான வரலாற்று ஆவணம் இல்லாத சூழலில், அவற்றை எழுதுவோருக்குரிய வரலாற்று உண்மைகளை வழங்கக் கூடிய வகையில் இவ்வாய்வு இன்றைய காலக் கட்டத்தின் ஒரு சிறந்த தேவையாக அமைகிறது.

ஈழத்தில் தமிழ் இடப்பெயர்களுக்குச் சிங்கள மொழி மூலம் விளக்கம் கூறி அரசியல் இலாபமும், சுயவிளம்பரமும், சுய இன்பமும் பெற்றுக் கொள்ளும் நிலைப்பாடு காணப்பட்டது. இதனால் நாட்டுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இத்தகையதொரு காலக் கட்டத்தில் இடப்பெயர்களின், திராவிட மொழி மூலங் களைத் தேடி ஆராய்ந்து, முன்னோரின் முரண்பட்ட பிழையான கருத்துகளைத் தகுந்த ஆதாரத்துடன் மறுத்து, அவை தமிழ் மூலமொழிப் பெயர்கள் என்பது நூலில் நிறுவப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சான்றாக, 'வில்', 'இட்டி', 'பாய்' என வரும் ஈறுகளைக் கொண்ட இடப்பெயர் ஆய்வுகளைக் குறிப்பிடலாம். வியக்கத்தக்க புதுப்புது விளக்கங்கள் நூலெங்கும் காணப்படுகின்றன.

காலத்திற்குக் காலம் ஏற்பட்ட இந்தியக் குடியேற்றங் களும், அவற்றின் மூலம் ஏற்பட்ட இடப்பெயர்களும், அவற்றின் வரலாற்றுப் பின்னணிகளும் நூலில் தரப்பட்டுள்ளன. தெலுங்கு - கன்னடம் - மலையாள மொழி மூலமான இடப்பெயர்கள்,

பல்லவர் - சோழர் ஆட்சித் தொடர்பான இடப்பெயர்கள் என்பனவும் விளக்கப்படுகின்றன. நூலின் பின்னிணைப்பிலே தமிழகத்திலும், ஈழத்திலும் (யாழ்ப்பாண மாவட்டம்) காணப்படும் பெயர் ஒற்றுமையுடைய இடப்பெயர்ப் பட்டியல் தரப்பட்டுள்ளமை மேலாய்வுக்குத் துணையாகின்றது.

நீர் நிலை, நில இயல்பு, நிலப் பயன்பாடு, ஆட்சி நிலை, குடியிருப்பு நிலை, தெய்வம், மானுடம், விலங்கு, பறவை, மரம், செடி - கொடி - என்பனவற்றின் அடிப்படையில் இடப் பெயர்கள் ஆக்கம் பெற்றுள்ளமை விளக்கப்பட்டுள்ளது. இப் பகுப்பு முறை இடப்பெயராய்வுக்குச் சிறந்த அணுகுமுறையாகும்.

ஊர்தோறும் சென்று களஆய்வு மேற்கொண்டு, தகவல்களை நேரிற் பெற்று இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

கடும் உழைப்பின் அறுவடை.

தமிழ், வடமொழி, சிங்களம், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிப் புலமை கொண்ட பாலசுந்தரம், இடப்பெயர் ஆய்வுக்குத் தனது அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தியுள்ளார்.

இன்றைய நாள் வரை ஈழத்து இடப்பெயர்கள் பற்றி எழுதியோரின் அனைத்து ஆக்கங்களையும் பாலசுந்தரம் படித்திருக்கிறார். ஈழத்து வரலாற்று நூல்கள், கல்வெட்டுகள், புதை பொருட் சான்றுகள் என்பன பற்றிய அறிவையும் கொண்டுள்ளார். இவை யாவற்றையும் தமது ஆய்வுக்குப் பயன்படுத்தியுள்ளமையால் இந்நூல் முழுமை கண்டுள்ளது.

தமிழீழ விடுதலை வேண்டப்பெறும் இந்நாளில் தமிழீழத் தாயகத்தின் இடப்பெயர் ஆய்வு பற்றி இந்நூல் வெளிவருதல் சாலப் பொருத்தமான ஒன்றாகும்.

திரு. பாலசுந்தரத்தின் அரிய உழைப்புக்கு என் பாராட்டுகளும், வாழ்த்துகளும்.

அன்புடன்,
க.ப. அறவாணன்
27.04.2000

மதிப்புரை

பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை,
தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

உலகப் பண்பாட்டுக்குத் திராவிடர், சிறப்பாகத் தமிழர் சிறப்பான பங்களிப்புச் செய்துள்ளனர். ஆனால், அப் பங்களிப்பினை உலகமோ, திராவிடரோ, தமிழரோ இன்று உணர்ந்திருக்கின்றார்களெனக் கூறுவதற்கில்லை. 'காலமென்பது கறங்குபோற் சுழன்று கீழது மேலாய், மேலது கீழாய்' மாறி வரும்போது, தமிழர் நிலை மிகத் தாழ்ந்து போய்விட்டது. இன்றைய உலகம் அன்றைய தமிழர் பங்களிப்பினைத் தேடி அறிய வேண்டிய நிலையிலில்லை. இன்றைய தமிழர்களுக்கு அன்றைய தமிழர் பங்களிப்பு நினைவில் இல்லை. ஆனாலும் எட்டுக் கோடித் தமிழ் மக்கள் இன்றைய உலகில் வாழ்கின்றார்கள். அவர்களுட் சிலருக்காவது, வாழ வேண்டும் என்ற துடிப்பு இருக்கிறது. அந்தத் துடிப்பு தமிழர் பிறரையும் பற்றிப் பிடிக்கலாம். காரிருளிலும் ஒளிக்கீற்றுத் தென்படுகிறது.

தமிழருடைய பங்களிப்பினை உலகம் உணர்ந்து கொள்வது உலகத்துக்கே பயனுள்ளதும் தேவையானதுமாகும் என்ற கருத்தோட்டமே சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோன்ற வழிவகுத்தது. தமிழக அரசு தொடங்கி நடத்திவருகிற இந்த நிறுவனத்துக்கு வெளி உலக ஆதரவு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு இன்னும் கிடைக்கவில்லை. எனினும் டாக்டர், ச. வே. சுப்பிரமணியம் வழிகாட்டலில் இயங்கிய இந்நிறுவனம் எடுத்துச் சொல்லக்கூடிய சில பணிகளை ஆற்றியுள்ளது. அப்பணிகளுள் இடப்பெயராய்வு பாராட்டப்பட வேண்டிய ஒன்று. பேராசிரியர் சேதுப்பிள்ளை 'ஊரும் பேரும்' எழுதிய காலத்திலிருந்து, இன்றுவரை இத் துறையில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது. இடப்பெயர் ஆராய்ச்சி மேனாடுகளில் வளர்ந்து வரும் ஆராய்ச்சித் துறைகளுள் ஒன்று. இடப்பெயராய்வை நோக்கமாகக் கொண்டு,

அங்கு பல குழுக்கள் இயங்குகின்றன. பல சஞ்சிகைகள் வெளி யிடப்படுகின்றன.

தென்னிந்தியாவிலே, அண்மைக் காலத்திலே, இடப்பெய ராய்வு முக்கியமான ஒரு துறையாக அங்கீகரிக்கப்பட்டு வரு கிறது. இடப்பெயராய்வு பற்றிய கருத்தரங்குகள் சில நடை பெற்றுள்ளன. இடப்பெயராய்வு டாக்டர் பட்டம் பெறுவதற்கான ஆராய்ச்சிப் பொருளாக இன்று காணப்படுகிறது. கேரளப் பல் கலைக்கழகத் தமிழ்த் துறையில் கோயம்புத்தூர் மாவட்ட இடப் பெயர்களை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவரும் அத்துறை யிலேயே பேராசிரியராக விளங்குபவருமான நாச்சிமுத்துவின் 'தமிழில் இடப்பெயராய்வு' (1983) என்ற நூல் இடப்பெயராய்வு முறைகளைத் தமிழிலே அறிமுகஞ் செய்வதாக அமைந்தது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டு மாவட்டங்கள் சிலவற்றிலுள்ள இடப்பெயராய்வுகளை வெளியிட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களின் இடப்பெயராய்வுகளும் விரைவில் வெளிவருமென்று எதிர்பார்ப்போம்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வேண்டுகோளை ஏற்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறையைச் சேர்ந்த கலாநிதி இ. பாலசுந்தரம் இலங்கை இடப்பெயராய்வு களில் முனைந்து நிற்கிறார். அவர் முயற்சியின் முதல் அறுவடை காங்கேயன் கல்வி வட்டார இடப்பெயர்களைப் பற்றிய நூலாகும். யாழ்ப்பாண மாவட்டம், தமிழ் உலகத்தின் ஒரு பகுதி என்று கூறத்தக்க முறையில், தமிழர் செறிந்து செல்வாக்குடன் வாழும் பகுதியாகும். புவியியல் நோக்கிலே, தமிழ்நாட்டுக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ள இலங்கைப் பிரதேசம் யாழ்ப் பாணமே. ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்ற முன்பு, யாழ்ப் பாணத்திலே சில நூற்றாண்டுகளாகத் தமிழரசு நிலவியதென்பது வரலாற்றுண்மை. இவ்வாறெல்லாமிருந்தும், யாழ்ப்பாணப் பிரதேச வரலாறு இன்னும் மிகவும் கருகலாகவே காணப்படுகிறது.

இலங்கைத் தமிழர் வரலாறு பேணப்பட்டு வரவில்லை. சோழப் பெருமன்னர் இலங்கையைக் கைப்பற்றி ஆள்வதற்கு முன்பு, யாழ்ப்பாண மாவட்டம் இருந்த நிலைபற்றி அறியத் தமிழ் நூல்கள், தமிழ்ச் சாசனங்கள் கிடைக்கவில்லை. சிங்கள பௌத்த குருமார் பாளி மொழியில் எழுதி வந்த கால ஏடுகளான மகாவம்சம், சூளவம்சம் முதலான நூல்களிலே, இலங்கைத் தீவு முழுவதும் தம்முடையதென உரிமை பாராட்டி வந்துள்ளனர்.

தமிழ்நாட்டிலும், இடப்பெயராய்வு நடைபெற்றிராத நிலையிலே, பிரபலமான தமிழ்நாட்டு இடப்பெயர்களிலிருந்து வேறுபாடுடை யனவாக யாழ்ப்பாணத்து இடப்பெயர்கள் பல காணப்படுவதனா லும், அப்பெயர்களுட் சில கூறுகள் தென்னிலங்கையிலும் பயின்று காணப்படுவதினாலும், அப்பெயர்கள் சிங்கள மூலத்தி லிருந்து வந்தனவாதல் வேண்டும் என்ற கருத்து இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே அறிஞர் சிலரால் முன் வைக்கப் பட்டுள்ளது.

வட இந்தியர் இலங்கைக்குக் குடியேற வந்தபோது, வட இலங்கையிலும் மேற்கு இலங்கையிலும் வாழ்ந்தோர் நாகர் என்று மகாவம்சம் கூறுகிறது. இவர்களின் மொழி, இனம், பண்பாடு பற்றிய விளக்கம் எதுவும் மகாவம்சத்தில் இடம் பெறவில்லை. அண்மையில் இலங்கையிலே தொல்லியல் ஆய்வு நடத்திய அறிஞர் சிலர், வட இந்தியர் வருகைக்கு முன்பு இலங்கையிலே, சிறப்பாக யாழ்ப்பாணத்திலே திராவிடப் பண்பாடு நிலைபெற்றிருந்ததென்ற முடிவுக்கு வந்துள்ளனர். சங்க காலத்திலும் அதற்கு முன்பும் திராவிடரிடையே சிறப்பாகக் காணப்பட்ட பெருங்கற் பண்பாடு இலங்கையின் பல பகுதி களிலும் காணப்பட்டவற்றை கலாநிதி சி. க. சிற்றம்பலமும் (1980) ஆதித் திராவிடர் குடியேற்றங்கள் யாழ்ப்பாண மாவட்டத் தில் இடம்பெற்றவற்றைக் கலாநிதி பொ. இரகுபதியும் (1983) எடுத்துக் காட்டிய பின், யாழ்ப்பாண மாவட்ட ஊர்ப்பெயர்கள் பெரும்பாலும் திராவிடத் தோற்றுவாயையுடையனவாயிருக்கலாமா என மறு பரிசீலனை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது.

இலங்கையின் ஆதிவாசிகளெனக் கூறப்பட்ட நாகர்கள் தமிழர்களாக இருக்கலாமா அல்லது பிறிதொரு திராவிடமொழி பேசுவோர்களாக இருக்கலாமா என்பது ஒரு சிக்கல். இலங்கை இடப்பெயர்களிற் காணப்படும் தனித்துவமான கூறுகள் எனப்படு பவை தென்னிந்தியத் தமிழில் முற்றாக இடம்பெறவில்லையா என்பது இனித்தான் தெரிய வர வேண்டும். இந்தத் தனித்துவமான கூறுகள் சில, திராவிட மொழிகளான மலையாளம், தெலுங்கு என்பவற்றுட் காணப்படுவதாகக் கலாநிதி பாலசுந்தரம் எடுத்துக் காட்டுகிறார். தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து இலங்கையிற் குடியேறியோரின் செல்வாக்கு இலங்கை இடப் பெயர்களிற் காணப்படுகிறதென்ற கருத்து பாலசுந்தரத்தால் முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுத் தமிழ், இலங்கைத் தமிழ் என்பன வெவ்வேறு கிளை மொழிகள். இலங்கைத் தமிழ் நீண்டகாலமாகத் தனித்துவத்தோடு வளர்ந்துள்ளது. இத்தகைய வளர்ச்சியிலே, தனித்துவமான இடப்பெயர்க் கூறுகள் தோன்றுவதில் வியப்பில்லை. இலங்கைப் பேச்சுத் தமிழில் இடம்பெறும் சொற்கள் சில, இடப்பெயர்க் கூறுகளாக வருவதை நூலாசிரியர் காட்டியுள்ளார். வில் என்ற சொல் குளத்தைக் குறிக்க வழங்குவதை உதாரணமாக எடுத்துக் காட்டலாம். பளை என்ற இடப்பெயரிலும் இலங்கைச் சூழலிலே தோன்றியதாகலாம் என்று நூலாசிரியர் கூறுவதை, வேறு தக்க காரணம் காட்டமுடிந்தாலன்றி, நிராகரித்து விட முடியாது.

இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தெனக் கொள்ளப்படும் சிங்களம் இந்தோ - ஐரோப்பிய மொழிகள் பிறவற்றிலில்லாத கூறுகளை இலங்கைச் சூழலிலே பெற்று வளர்ச்சியடைந்துள்ளதெனக் கூறக் கூடுமாயின், திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழும் திராவிட மொழிகள் பிறவற்றிலில்லாத கூறுகளை இலங்கைச் சூழலிலே பெற்று வளர்ச்சியடைந்திருக்கலாமெனக் கூறுவதிலே தவறில்லை.

இலங்கை முழுவதும் பயின்று காணப்படும் இடப்பெயர்க் கூறுகள் தென்னிந்தியாவிலே காணப்படாவிட்டால், அவற்றின் தோற்றத்துக்கு இன்னொரு விளக்கம் கூறலாம். இலங்கையின் ஆதிக் குடிகளெனப்படும் நாகர்களின் மொழிக்கு அக்கூறுகள் உரியனவாகலாம். தமிழர்களும் சிங்களவர்களும் இந்தியாவிலிருந்து வந்து இங்கு வாழ்ந்த நாகர்களோடு கலந்த போது, சிங்களத்திலும் இலங்கைத் தமிழிலும் இக்கூறுகள் இடம்பெற்றிருக்கக் கூடும்.

யாழ்ப்பாண மாட்ட இடப்பெயர்களைப் பற்றி விளக்குவதற்கு நூலாசிரியர் இயலுமான வழிகளைக் கையாண்டுள்ளார். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று கள ஆய்வு நிகழ்த்தி இடங்களின் புவியியலமைப்பையும் பழம்பொருட் சின்னங்களையும் ஐதீகக் கதைகளையும் நாட்டாரியல் துறையில் மக்களிடையே வழங்கும் விளக்கங்களையும் நூலாசிரியர் தொகுத்துள்ளார். யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயர்கள் பற்றிய முன்னையோர் வெளியிட்ட கட்டுரைகளைத் தொகுத்த இவர், இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரையில் வெளிவந்த நூல்களையும் தமிழ்ப் பேரகராதி, பேராசிரியர்கள் பறோவும் எமெனோவும் கூட்டாக ஆக்கிய திராவிட மொழிகளின் சொற்பிறப்பியலகராதி (1961) முதலியவற்றையும் இங்குள்ள நூலகங்களிற் கிடைக்கும் பல்வேறு வெளியீடுகளையும் நன்கு பயன்படுத்தியுள்ளார். நூலிலே கையாளப்பட்டுள்ள ஆய்வு முறை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்துள்ள வழிகாட்டல்களுக்கு ஏற்ப அமைந்திருப்பதும் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்டத்து ஊர்களின் எல்லைகளும் ஊர்களுள் அடங்கிய குறிச்சிகளும் வெவ்வேறு காரியங்களுக்கு வெவ்வேறாக அமைவதினால், அவற்றைப்பற்றிக் கருத்து வேறுபாடு காணப்படுவது தவிர்க்க முடியாதது.

யாழ்ப்பாண மாவட்டத்து இடப்பெயர்கள் முழுவதன் தோற்றத்தையும் நூலாசிரியர் ஆராய்ந்து நிறுவியுள்ளாரெனக் கூற இயலாது. எனினும் வேறு எவராவது இன்னும் சிறப்பான ஒரு நூலை இன்று இது தொடர்பாக இயற்றித் தரமுடியுமென்று நான் கருதவில்லை. யாழ்ப்பாணப் பிரதேச வரலாறும் இலங்கைத் தமிழர் வரலாறும் தெளிவாக இருந்திருந்தால், யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயராய்வில் இன்னும் கூடிய நிச்சயமான தன்மை காணப்படும். ஆனால், இடப்பெயராய்வு யாழ்ப்பாணப் பிரதேச வரலாற்றையும் இலங்கைத் தமிழர் வரலாற்றையும் துலக்க வேண்டிய நிலையில் இன்று காணப்படுகிறது.

பல்வேறு ஆராய்ச்சித் துறைகளும் இன்று வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றன. ஆராய்ச்சித் துறை ஒன்றின் வளர்ச்சி வெகுவிரைவில் ஆராய்ச்சித்துறைகள் பிறவற்றைப் பாதிக்கிறது. இலங்கைத் தமிழர் வரலாறும் யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயராய்வும் வெகு விரைவில் இன்னும் கூடிய நிச்சயமான தன்மை பெறும் என்று எதிர்பார்க்கலாம். இத்தகைய நிலை ஏற்படுவதற்கும் கலாநிதி. இ. பாலசுந்தரத்தின் நூல் ஒரு முக்கியமான பங்களிப்பு.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களின் இடப்பெயர்களையும் நூலாசிரியர் தொடர்ந்து ஆராய்ந்து வர வேண்டும்.

31.08.89 **ஆ. வேலுப்பிள்ளை**

முன்னுரை

இடப்பெயர்கள், இடங்களின் அமைவிடங்களை அறிந்து கொள் ளப் பயன்படும் அதே வேளையில், அப்பெயர்கள் குறிக்கும் பகுதிகளின் வரலாறு, மொழி, மானிடவியல், நாட்டார் வழக்கியல் முதலிய ஆய்வுத்துறைகளுக்குரிய பெறுமதிமிக்க ஆய்வு மூலங் களாகவும் விளங்குவனவாகும். குறிப்பாக ஒரு நாட்டின் அல்லது ஓர் இனத்தின் வரலாற்றை மீளாய்வு செய்து எழுதுவதற்குரிய ஆவணங்களில் இடப்பெயர்களும் சிறப்புப் பெறுகின்றன. மூதாதையர்களின் சமூக நடைமுறைகள், மரபுகள், ஒழுங்குகள், சமய ஒழுக்க நடைமுறைகள், சடங்குகள், நம்பிக்கைகள், பழ மரபுக் கதைகள், பொழுதுபோக்குகள், அரசியல் நடவடிக்கை கள், நிருவாக ஒழுங்குகள் முதலான பல்வேறு கூறுகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் இடப்பெயர்கள் துணையாகின்றன. இடப்பெயர் ஆய்வின் மூலம் குறிப்பிட்ட இடங்களின் தரைத் தோற்றம், நிலவளம், குடியேற்றம், தொழில்வளம், போக்கு வரத்து, வணிகம் முதலாம் கூறுகளும் அறியப்படுகின்றன. இடப் பெயர்கள் பல்வேறு ஆய்வுப் புலங்களுடன் தொடர்பு கொண்டி ருப்பதால், இத்துறையிலீடுபடுவோர் அறிவியலடிப்படையிலான ஆய்வு முறைகளை அறிந்திருத்தல் இன்றியமையாததாகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஐரோப்பிய நாடுகளிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் இடப்பெயர் ஆய்வினைப் பல்கலைக்கழகங்களும், இடப்பெயர்க் கழகங்களும் மேற்கொண்டு வருகின்றன. கருத்தரங்குகள், மாநாடுகள், நூல் வெளியீடுகள், ஆய்விதழ் வெளியீடுகள் என்பன தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளன. பெல்ஜியத்தில் இயங்கி வரும் 'அனைத் துலக இடப்பெயர் ஆய்வுக் கழகம்' வெளியிட்டு வரும் 'Onama' என்ற ஆய்விதழ் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் இடப்பெயர் ஆய்வு கடந்த முப்பது ஆண்டு களாகவே வளர்ந்து வருகிறது. இடப்பெயர் ஆய்விலீடுபாடு கொண்ட தென்னிந்திய அறிஞர்கள் இணைந்து 1983 இல் கேரளத்தில் 'இடப் பெயர்க்கழகம்' (Plans) ஒன்றை அமைத்து பயன்தரத்தக்க செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அக் கழகம் வெளியிடும் Plans Bulletin என்ற இதழும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும். மேலும், தென்னிந்தியப் பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் இடப்பெயர் ஆய்வு M, A., M.Phil, Ph.D. ஆகிய மேற்பட்டப் படிப்புக்குரிய பொருளாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அறிவியல் அடிப்படையிலான இடப்பெயர் ஆய்வு ஈழத் தில் இன்னும் வளரவில்லை. இத்துறையின் சிறப்பு இன்னும் ஈழத்தமிழ் அறிஞர் சிலரால் உணரப்படவில்லை. இத்தகைய தொரு சூழ்நிலையில் இலங்கைத் தமிழ் இடப்பெயர் ஆய்வுத் துறையில் எனது மூன்றாவது வெளியீடாக இந்நூல் வெளி வருகிறது.

நாட்டார் வழக்கியல் துறையிற் கடந்த 15 ஆண்டு காலமாகக் கொண்டிருந்த ஈடுபாடும், தமிழ் இடப்பெயர் ஆய்வுத் துறையின் சிறந்த ஆய்வாளரும் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியருமான டாக்டர் சி. நாச்சிமுத்து அவர்களுடன் கொண்டிருந்த தொடர்பும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன முன்னை நாள் இயக்குநர் பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் ஈழத்து இடப்பெயர் ஆய்வினை நிகழ்த்துமாறு பணித்த அன்புக் கட்டளையும், ஈழத்து இடப்பெயர்கள்பற்றி வெளிவந்த 'பக்கச்சார்பு' கொண்ட கட்டுரைகளும், நூல்களும் என்னை இத்துறையில் ஈடுபடுத்தின. இவற்றின் பெறுபேறாக 1988 இல் 'ஈழத்து இடப்பெயர் ஆய்வு' என்ற நூல் எழுதப்பட்டு 420 பக்கங்களைக் கொண்ட தட்டச்சுவடிவில் நூல் வெளியீட்டுக்காகக் காத்துநின்றது. இரண்டாவது முயற்சியாக, 1988இல் இலங்கை இடப்பெயர் ஆய்வு - 1 (காங்கேசன் கல்வி வட்டாரம்) என்ற நூல் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடகரையிலே தொண்டை மானாறு பிரிக்கும் வடபகுதியும் அதனோடிணைந்த வடகிழக்குப் பகுதியும், தென்பகுதியும் வடமராட்சி, தென்மராட்சி என்ற பெரும் பகுதிகளாகும். இவை முறையே வடமராட்சி வடக்கு - கிழக்கு, வடமராட்சி தெற்கு - மேற்கு, தென்மராட்சி என்ற மூன்று நிர்வாகப் பிரிவுகளாக அமைந்திருந்தன. 1989இல் வடமராட்சி கிழக்கு என்ற தனி நிர்வாகப் பிரிவும், ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப் பிர தேசம் 522.64 சதுர மைல் பரப்பினைக் கொண்டது. அடுத்த முயற்சியாக ஈழத்து இடப்பெயர் ஆய்வு - 2 (வடமராட்சி - தென்மராட்சி) என்ற நூல் 1989இல் வெளியிடப்பட்டது.

ஈழத்தமிழர் வரலாறு இன்னும் வரன்முறையாக எழுதப் படவில்லை என்பது கசப்பான உண்மை தான். ஈழத்தின் தொல் குடிகளாக ஆதித்திராவிடர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பண்டை நாள் தொடக்கமாக ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் பல்வேறு அடிப்படையிலான தொடர்புகள் இருந்து வந்துள்ளன. தமிழகத் தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு காலகட்டங்களில் தமிழர் குடியேற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. தமிழ்ப் பௌத் தம் வடஇலங்கையிலே நிலைபெற்றிருந்திருக்கிறது. திராவிட மொழிக் குடும்பத்திற்குரிய அடிச்சொற்கள் ஈழத்து இடப்பெயராக் கத்திற் பரவலாக இடம் பெற்றிருக்கிறன்றன - என்ற உண்மை களை ஈழத்து இடப்பெயர் ஆய்வு வெளிப்படுத்துகின்றது. ஆனால் இலங்கையிற் பிரித்தானிய மேலாட்சி நிலை பெற்றிருந்த காலத்தில் வட இலங்கையில் அவர்களின் அதிகாரிகளாக இருந் தோர் சிலர், ஈழத்தமிழரது வரலாறு விளக்கமில்லாதிருந்த அக் காலச் சூழலில், ஈழத்தமிழர் தம் தொல்பதிகளுக்கு (எ + டு: வல்லிபுரம், கந்தரோடை) 'சிங்கள மூலம்' கற்பித்திருக்கிறார்கள். சிங்களத்திற் புலமையுள்ள தமிழறிஞர் சிலர் இதே நோக்கில் மேலும் விளக்கம் தந்து கொண்டிருக்கின்றனர். இதுவரை கால மும் முன்வைக்கப்பட்ட தவறான விளக்கங்கள் இவ்வாய்வின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டு, இம்மாவட்டத்தில் இடம் பெற் றிருந்த தொன்மையான குடியிருப்பு இடங்கள் எவ்வாறு பெயர் ஆக்கம் பெற்றுக் கொண்டன என்பது நிறுவப்பட்டுள்ளது.

இடப்பெயர் ஆய்வின் மூலம் ஈழத்தமிழர் தம் அரசியல், பண்பாட்டு வரலாறுகளை நன்கு எழுதுவதற்குரிய பெறுமதிமிக்க சான்றுகளைப் பெற வாய்ப்புண்டு. எனவே ஈழத்திலேயுள்ள அனைத்து இடப்பெயர்களை மாவட்ட அடிப்படையில் உடனடி யாகத் திரட்டித் தொகுத்து வெளியிட வேண்டும். இத்துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர்கள் இடப்பெயர் ஆய்வில் ஈடுபட வேண்டும். இதற்குரிய வசதிகளைப் பல்கலைக்கழகங்களும் பண்பாட்டு நிறுவனங்களும், சமூக அமைப்புக்களும் வழங்க முன்வர வேண்டும்.

1981 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டு அறிக்கை யிலுள்ள இடப்பெயர்ப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடப்பெயருக்கும் அருகில் அடைப்புக் குறியினுள்ளே- தரப்பட்டுள்ள எழுத்துக்களும் எண்களும் முறையே அந்த இடம் அமைந்த உதவி அரசஅதிபர்

பிரிவினையும், அவ்விடத்தின் கிராமசேவகர் பிரிவு இலக்கத்தை யும் சுட்டுவனவாகும். எடுத்துக்காட்டாக கொடிகாமம் (தென்ம. 109) என்பது, தென்மராட்சியில் 109ஆம் இலக்க கிராமசேவகர் பிரிவிலுள்ள ஓரிடம் கொடிகாமம் என்பதைக் குறிக்கும்.

ஒவ்வொரு இடப்பெயரினதும் ஆக்கக் கூறுகள் பிரித்துக் காட்டப்பட்டு அதற்குரிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. சொற் பொருள் விளக்கம் முதலிலே கொடுக்கப்பட்டு, பின்பு அவ்விடப் பெயர் காலப்போக்கில் அடைந்துள்ள மாற்றங்களும் காட்டப் பட்டுள்ளன. பொதுமக்கள் வழக்கிலே இப்பெயர்கள் உச்சரிக்கப் படும் முறையும் ஆங்காங்கே காட்டப்பட்டுள்ளன. இப்பெயர்கள் தொடர்பாகப் பொதுமக்கள் கூறும் விளக்கங்களும் பொருத்த மான இடங்களிலே தரப்பட்டுள்ளன. தென்னிந்தியத் தொடர்பு டையனவாகக் காணப்படும் பெயர்கள் தென்னிந்திய வரலாறு, இலக்கியம், இடப்பெயர்கள் ஆகியனவற்றுடன் தொடர்புபடுத்தி விளக்கப்பட்டுள்ளன. இன்று உருத்திரிந்து வழங்கும் சில இடப் பெயர்கள் முன்னர் எவ்வாறு வழங்கியிருக்கலாம் என்ற ஊகங் களும் சான்றுகளுடன் காட்டப்பட்டுள்ளன. மேலும் ஓர் ஊரின் பெயர் விளக்கம் கூறப்படும்போது, இயன்றவரை, அந்த ஊரி லுள்ள குறிச்சிப் பெயர்கள், காணிப் பெயர்கள், குளப் பெயர்கள், கோயிற் பெயர்கள் என்பனவும் தரப்பட்டுள்ளன. இத் தரவுகள் மேலாய்வு செய்வோருக்கு உறுதுணையாக அமையத்தக்கவை.

தனித்தமிழில் எழுத வேண்டும் என்பது எனது குறிக் கோள். தமிழ் மொழி பாரெல்லாம் பரவி நிற்கும் இக் காலக்கட்டத் தில் தனித் தமிழில் இந்நூலை ஆக்க முயன்றுள்ளேன். பிறரது மேற்கோள்களில் வரும் வடசொற்களை மாற்றுதல் ஆய்வுத்துறை சார்ந்த நெறியன்று. ஆதலால் அத்தகைய இடங்களில் வடசொற் கள் இடம்பெறுதல் தவிர்க்க முடியாததாயிற்று.

இந் நூலாக்கத்தின் போது எழுந்த ஐயங்களைத் தீர்த்து, பயனுள்ள கருத்துக்களை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைகழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப் பிள்ளை அவர்களுக்கு நான் கடப்பாடுடையேன். மேலும் அவர் களது மதிப்புரை இந்நூலை அணிசெய்கிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியற்றுறைப் பேராசிரியர் சு. சுசீந்திரராசா அவர்களது அறிவுரைகளும் இந்நூலை செம்மையுறச் செய் கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பலருட

னும் இவ்வாய்வு தொடர்பாக கருத்துப்பரிமாற்றம் நடைபெற்ற மையை நன்றியுடன் நினைவு கொள்கின்றேன். இடப்பெயர் பற்றிய விளக்கங்களை ஊர்கள் தோறும் எனக்குக் கூறிய பெரியவர்கள் அனைவரையும் இவ்வேளையில் நினைத்துப் பார்த்தலே அவர்களுக்கு நான் செய்யும் கைமாறாகும்.

ஆய்வின்போது பேருந்து, மோட்டார் சைக்கிள், ஈருருளி ஆகியவற்றின் மூலம் சுமார் 2000 மைல்கள் பயணம் செய் தமையை நினைத்து நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன். கள ஆய்வுப் பயணங்களில் பல தடவைகள் என்னுடன் துணையாக வந்துதவிய விரிவுரையாளர் செ. கிருஷ்ணராசா, இவ்லின் பல் லினப் பண்பாட்டு நூலகப் பொறுப்பாளர் ந. செல்வராசா, சட்டத்தரணி ஆ. தேவராசா ஆகியோரும் நன்றிக்குரியவர்கள். யாழ்ப்பாணத்து ஈழமுரசு, ஈழநாடு ஆகிய இரு பத்திரிகைகளும் இவ் ஆய்வு தொடர்பாகப் போதிய விளம்பரத்தைத் தந்திருந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் தகவல் கள் சேகரிப்பதில் எனக்கு உதவி செய்தனர். எழுத்துப் பிரதி யைப் பார்வையிட்டுப் பயனுள்ள பல கருத்துக்களைக் கூறிய பேராசிரியர் அ. சண்முகதாஸ், கவிஞர் வே. பரமநாதன், காலஞ் சென்ற தொல்புரக்கிழார் புலவர் நா. சிவபாதசுந்தரனார் ஆகி யோருக்கும் என் நன்றி உரித்தாகுக.

கனடாவுக்கு வருகை தந்திருந்த தமிழகம் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன் அவர்கள் இந் நூலைப் படித்து மகிழ்ச்சியடைந்து நேரடியாகவே பாராட்டும், உற்சாகமும் அளித்து அணிந்துரையும் வழங்கினார். அவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள். இந் நூல் ஆக்கம் பெறுவதற்குப் பல்வேறு வழிகளிலே செயலூக்கத் துணைவராகவும், என் முயற்சிகளுக்கு உற்ற வலுவாகவும் அமைந்த பேருள்ளம் படைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியம் அவர்களை நன்றியுணர்வோடு நினைத்துப் பார்க்கிறேன்.

நூலின் அட்டைப் படத்தை வரைந்துதவிய டிஜிகிராபிக் - கருணா அவர்களுக்கும், இந்நூலை அழகுற கணனியில் பொறித்து, தக்க முறையில் பக்கங்கள் அமைத்து நூல் வடிவம் ஆக்கித் தந்த திருமதி. சந்திரா சத்தியலிங்கம் அவர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய விவேக் அச்சகத்தினருக் கும் எனது உளங் கனிந்த நன்றிகள்.

முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த துணை நூலகரும் என் துணைவியுமாகிய விமலாம்பிகை பாலசுந்தரம் பல்கலைக்கழக நூலகத்திலிருந்து ஆய்வுக்குத் தேவைப்படும் நூல்களைத் தேடித் தருவதிலும், கையெழுத்துப் படியைப் பார்வையிட்டு கருத்துக்கள் கூறுவதிலும் பெரும் உதவியாக இருந்தார். அவர் அளித்த ஊக்கத்தினாலேயே இந்நூல் இப் போதாவது வெளிவருகிறதென்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

06.04.2002 இ. பாலசுந்தரம்

ரொறன்ரோ

குறிப்பு: இந் நூல் முழுமையாகவும் ஈழ வரலாற்று ஆவணமாகவும் அமைய வேண்டும் என்பதே என் நோக்கம். இதிலே தரப்படும் குறிப்புக்களில் மேற் கொள்ள வேண்டிய திருத்தங்கள், மேலுஞ் சேர்க்க வேண்டிய தரவுகள் இருப்பின் அவற்றை எனக்கு அறியத் தாருங்கள். இம் மாவட்டத்திலுள்ள சில இடப்பெயர்கள் தவறுதலாக விடுபட்டிருக்கலாம், சில ஊர்களின் எல்லைகள் பற்றிய செய்திகளில் மாற்றங்கள் இருக்கலாம். அவற்றை எனக்கு அறியத் தந்தால் இதன் இரண்டாம் பதிப்பிற் சேர்த்துக் கொள் வேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின் றேன். இந்நூல் பாரெல்லாம் பரந்து வாழும் தமிழர் கரங்களிற் சேர்ந்திடல் வேண்டும் என்பதும் என் குறிக்கோள் ஆகும்

இயல் ஒன்று

இடப்பெயராய்வு அறிமுகம்

இடப்பெயர்களின் தோற்றம்

உலக மக்கள் நீர்க்கரை ஓரங்களிலும், காடுகளிலும் அலைந்து திரிந்து வேட்டையாடித் தமது உணவுத் தேவைகளைப் பெற்று வாழ்ந்த தொடக்க காலத்து நிலையில் அவர்களுக்கு நிலையான இருப்பிட வசதிகளை அமைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படவில்லை. காலம் செல்லச்செல்ல பண்பாட்டு வளர்ச்சியும், சமூக, பொருண்மியத் தேவைகளும், சமூக ஒழுங்குகளும் ஏற்பட்ட நிலையில், நிலையாக ஓரிடத்திலிருந்து தொழிற்பட வேண்டிய இன்றியமையாமை ஏற்படலாயிற்று. அத்தகைய சூழ்நிலையே இடப்பெயர்களின் தோற்றத்திற்கும் காரணமாயிற்று.

நிலையாகக் குறிப்பிட்ட இடங்களில் வாழத் தொடங்கிய பண்டைக் கால மக்கள் தங்கள் வசிப்பிடங்களுக்குப் பெயரிடும் வழக்கம் கொண்டிருந்தனர் என்ற செய்தியும் எம்மைக் கருத்தூன்றி எண்ண வைக்கிறது. இது தொடர்பாக மானுடவியல் அறிஞரான லெவிஸ்ட் ராஸ் (Claude-Levi Straauss) கூறும் கருத்து ஈண்டுப் பொருத்தமாகிறது:

> 'வளர்ந்த சமூகங்களைவிட மரங்களைப் பற்றியும், செடி, கொடிகள், பறவைகள் பற்றியும் மிக நுண்மையான விபரங்களும் அம் மக்களுக்குத் தெரிந்திருந்ததால்தான் அச்செடி, கொடிகளையும் விலங்குகளையும் சரியாகப் பாகுபடுத்தி அறிந்திருந்தனர். பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள கனூனோ (Hanunoo) என்னும் மக்கள் தங்களைச் சுற்றிய இடங்களிலிருந்து 93 சதமானம் செடி வகைகளைத் தெரிந்து வைத்திருந்தனர். சுமார் 12 வகைப் பாம்புகளை இனம்பிரித்து வைத்திருந்தனர். 60 வகை மீன்களை அறிந்திருந்தனர். ஆயிரக்கணக்கான பூச்சிகளை 108 வகைகளாகப் பிரித்து அவற்றிற்குப் பெயரிட்டு வழங்கலாயினர்."
> (தமிழவன்:1982:66)

இப்பெயர்கள் அவர்களது இடப்பெயர்க் குறியீடுகளுக்கும் பயன்படலாயின எனக் கொள்ளலாம். பண்டைக்கால மக்கள் தாம் வாழ்ந்த இயற்கையான இடங்களையே வாழ்க்கைச் சூழலாக அமைத்துக் கொண்டு தமது தொழில்களையும், அச் சூழலோடு இணைத்துக் கொண்டனர். தாம் வாழும் இடங்களை மற்றவர்களுக்குச் சுட்டிக் காட்டவும், ஏனைய இடங்களிலிருந்து இன்னோரிடத்தை வேறுபடுத்திக் காட்டவும் இடப்பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். அன்றைய நிலையில் அவர்களுக்கு இயற்கை வளங்களே பெயர்க் கருவூலங்களாக அமைந்தன. எனவே அவற்றின் அடியாக மரப் பெயர்கள், ஆற்றுப் பெயர்கள், நிலவியல்புப் பெயர்கள், விலங்கு, பறவைகளின் பெயர்கள் முதலியன இடப்பெயர்களைக் குறிக்கப் பயன்படலாயின. அன்று தொடக்கம் தோன்றிய பெயர் சூட்டும் பண்பாடு அதே சூழலிலே தொடர்ந்தும் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்தும், பின்பற்றப்பட்டும் வந்தமை வியப்பாகவே அமைகிறது.

காலப்போக்கில் அவ் வழக்கில் சில புதிய மரபுகளும் தவிர்க்க முடியாதவாறு இணைவதாயின. மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு அமைய அரசர், தலைவர், சான்றோர்கள், ஆட்சியாளர்கள் என்போரின் பெயர்களும், மற்றும் தொழில் அடிப்படையிலான புதுப்பெயர்களும், புராண இதிகாச இலக்கியப் பெயர்களும் இடப்பெயர் ஆக்கத்தில் இடம்பிடித்தன. மனிதன் எவ்வாறு தனது வாழ்க்கையை வளமடையச் செய்தானோ அவ்வாறே தன் வசிப்பிடங்களுக்குப் பெயரிடுவதிலும் முன்னேறிக் கொண்டான். இம் முன்னேற்றத்தில் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், கலை, பண்பாடு என்பனவும் இடம்பிடித்துக் கொண்டமை வரலாற்று நிகழ்வாகும்.

ஒரு பழம்பதியிலிருந்து பஞ்சம், பகை, பேரவா, போர் வேட்கை, வணிக மேம்பாட்டுநோக்கம் முதலான காரணங்களின் அடிப்படையில் பிற நாடுகளுக்குச் சென்று, அங்கே காடாய்க் கிடந்த ஓரிடத்தை வெட்டித் திருத்தி, மேலும் அவ்விடத்துப் பழங் குடியினரான மாற்றாரை வெற்றி கொண்டோட்டி, அன்னவர் நாட்டைக் கைப்பற்றியேனும், பிறநாட்டு வேந்தனிடமிருந்து ஒரு வெற்றிடத்தைப் பரிசாகப் பெற்றேனும் குடிகொள்ளும் மாந்தரானவர் தமது நினைவில் நின்றும் நீங்குதற்கரிய தம் தொல்பதியின் மேல் கொண்ட பற்றினாலேனும், தம் வரலாற்றை எதிர்கால வழிமுறையினர்க்கு விளக்கும் நோக்கத்தினாலேனும் அத் தொல்

பதியின் கண் உள்ள சில இடப்பெயர்களைத் தம்மாற் புதிதாய் அமைக்கப்பட்ட இடங்களுக்கு இட்டு வழங்குதல் உலகத்திலே எங்கணும் உள்ள ஒரு பெரு வழக்காகக் காணப்படுகிறது. பழைய ஊரிலுள்ள ஓரிடத்தைப் புதிய ஊரிலுள்ள ஓரிடம் எவ்வாறாயினும் ஒத்திருத்தல் உண்டாயின் அதன் பெயராலேயே புது இடத்தையும் வழங்குதலும் வழக்கமாக இருந்து வந்துள்ளது.

ஈழத்தில் ஒல்லாந்தர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், ஒல்லாந்து நாட்டின் கடல் தீவுகளும் ஈழத்தின் வட பாலமைந்துள்ள தீவுளும் தரைத்தோற்ற வடிவ அமைப்பில் ஒத்துக் காணப்பட்டமையினால் அவர்கள் தம் ஒல்லாந்துத் தீவுப் பெயர்களை ஈழத்துத் தீவுகளுக்கும் இட்டு வழங்கினர். அவ்வகையில் வட இலங்கையின் தீவுகளுக்கு அவர்கள் முறையே Kayts (ஊர்காவல்துறை), Rotterdam (அனலைதீவு), Leyden (வேலணைத்தீவு), Middleburgh (புங்குடுதீவு), Amsterdam (காரைதீவு), Delft (நெடுந்தீவு), Harlem (நயினாதீவு) முதலான பெயர்களை இட்டு வழங்கினர் (இ. பாலசுந்தரம்:1987:26). ஆயினும் ஆண்டாண்டு காலமாக வாய் மொழி மரபில் வழங்கி வந்த இடப்பெயர்களைப் புதுப்பெயர்கள் எளிதில் மாற்றிவிட முடியாது என்ற உண்மையின் அடிப்படையில் புதிய இடப்பெயர்களிற் பல வழக்கொழிந்தும், சில அரிதாகவும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

பண்டைத் தமிழரின் பண்பாடு ஐந்திணை நிலத்தைக் களமாகக் கொண்டு அப் பின்னணியிலேயே வளர்ந்து வந்துள்ளது. அவர்களது வாழ்வும், வளமும், தொழிலும், கலையும், நிலப்பாகுபாடு, அவற்றின் கருப்பொருட்கள் என்பவற்றிற்கு ஏற்பவே அமையலாயின. அம்முறையில் அவர்கள் தாம் வாழ்ந்த இடங்களுக்கும் இயற்கையோடிணைந்த கருப் பொருட்களாகிய மரம் செடிகள், விலங்குகள், பறவைகள், தானிய வகைகள், நீர்நிலைகள், நில இயற்கை, திணைமாந்தர், தெய்வம் என்ற அடிப்படையில் பெயர்கள் வைக்கலாயினர். இவற்றிற்குச் சான்றாக முறையே கச்சி, புலியூர், நாரையூர், நெல்வேலி, தெள்ளாறு, மணலூர், எயினரூர், தேவூர் முதலியவற்றைக் குறிப்பிடலாம். எனவே இவ்வகையில் நோக்கும்போது இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பண்டைத் தமிழரது பண்பாட்டைப் புலப்படுத்துவனவாக அவர் தம் இடப்பெயர்கள் அமைந்துள்ளமை தெளிவாகின்றது.

ஈழத்து இடப்பெயர்களும் இந்நாட்டு மக்களது பண்பாட்டுப் பாரம்பரியம், வரலாற்று நிகழ்வுகள், பிறநாட்டு அரசியல் தொடர்புகள், போர்கள், குடியேற்றங்கள், சமய நிகழ்ச்சிகள், சமூக நடவடிக்கைகள், பொருண்மியமேம்பாட்டு நடவடிக்கைகள் என்பனவற்றைப் பதிவு செய்து விளக்கம் தருவனவாக அமைகின்றன. மேலும், சமூகப் பெரியார்கள், சாதி அமைப்புக்கள், தொழில் முறைகள் முதலியனவற்றின் அடிப்படையிலும் இடப்பெயர்கள் தோற்றம் பெற்றுள்ளன. ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டுக்குச் சென்று குடியேறுவோர் தம் தாய் நாட்டின் ஊர்ப் பெயர்களை அவ்வாறே தாம் புதிதாகக் குடியேறிய இடங்களுக்கு இட்டு வழங்கும் உலகளாவிய பொதுப்பண்பின் உண்மைத் தன்மை தென்னிந்திய ஊர்ப் பெயர்களையும், ஈழத்து இடப்பெயர்களையும் ஒப்பு நோக்கும் போது வெள்ளிடைமலையாகின்றது.

குமரிக்கண்டம், லெமுரியாக் கண்டம் பற்றிய உண்மைகள் குறித்து ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்குத் துணையாக ஆபிரிக்க நாட்டார் கதைகளும் பல உண்மைகளைத் தருவனவாக உள்ளன. மடகாஸ்கார்தீவிற்கு 'குமர்' (Komar) என்ற பெயர் வழங்குவதும், மற்றும் அங்கு வாழ் மக்களைக் 'கொம்ரி' (Komri) என்பதும், அங்குள்ள கடல் கொமொறோஸ் (Comoroos) என்ற பெயரில் வழங்கப்படுவதும், சில தீவுகள் 'கொமரோ' (Comero Islands) என்று பெயர் பெற்றிருப்பதும், குமரிக் கடல், குமரிக்கண்டம் என்பன பற்றிய எண்ணக் கருத்தின் தெளிவைக் காட்டுகின்றன என்கிறார் பேராசிரியர் க. ப. அறவாணன் (1978:39). பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே இடப்பெயர் சூட்டும் மரபு பேணப்பட்டு வந்தமையைக் 'குமரி' என்ற தொடக்கத்தையுடைய இவ்விடப் பெயர்களும் சான்றுபடுத்துகின்றன.

15ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பிய மேலாண்மை இந்தியாவிலும் ஈழத்திலும் படிப்படியாக ஏற்படுவதாயிற்று. அன்று முதல் ஐரோப்பியர் தொடர்பின் வழியாகத் தமிழர் வாழிடங்களும் புதுப்பெயர்களைப் பெறுவதாயின. ஓரிடத்தைப் புதிதாக எவர் ஒருவர் கண்டுபிடித்தாரோ அவர் பெயராலே அவ்விடம் வழங்கப்படும் மரபு மேனாட்டாரிடம் காணப்படுகின்றது. சான்றாகக் கொலம்பஸ்தீவைக் குறிப்பிடலாம். இவ்வகையில் 'பிரித்தானியத் துரைமார்' இலங்கையில் பெருந்தோட்டங்களை அமைப்பதற்காகத் தேர்ந்தெடுத்த புது இடங்கள் அவர்களின் பெயர்

களாலேயே இன்றும் வழங்கி வருவதை மலையகப் பகுதிகளில் வழக்கிலுள்ள நோர்வூட், ஸ்காட், ஹற்றன் முதலான இடப்பெயர் கள் எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

தனிமனிதன் அல்லது மக்கட்குழுவினர் என்ற நிலையில் இடப்பெயர்கள் தோன்றிய நிலைக்கு அடுத்தபடியாக அம் மக்கட் கூட்டத்தினரின் தலைவன் அல்லது அரசன் என்ற நிலையிலும் இடப்பெயர்கள் தோன்றலாயின. குறிப்பிட்ட ஓரிடம் ஒரு மன்ன னின் ஆட்சிக்குக் கீழ் புதிதாகக் கொண்டு வரப்படுமிடத்து, அவ்விடம் அம் மன்னனின் பெயர் பெறுதல் வரலாற்று நிகழ் வாகும். சான்றாக முதலாம் இராசேந்திரன் இலங்கையைச் சோழராட்சியின் கீழ் கொண்டுவந்தபோது (கி.பி.1014) அவனது 'மும்முடிச் சோழன்' என்ற விருதுப் பெயரிலிருந்து 'மும்முடிச் சோழமண்டலம்' என்ற பெயர் சோழர் ஆள்புலமாக அமைந்த ஈழத்திற்கு வழங்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். பிற்காலங்களில் அரசியல், மொழி, பண்பாடு என்பனவற்றின் வளர்ச்சிப் பின்னணி யில் அவ்வவ்விடங்களில் வாழ்ந்த ஆட்சியாளர்கள், அறிஞர்கள், மாமனிதர்கள், எழுத்தாளர்கள் முதலிய இன்னோரன்னோரின் பெயர்களாலும் இடப்பெயர்கள் ஆக்கம் பெற்ற வரலாறும் அறியப்பட வேண்டியதாகும்.

இடப்பெயர் மாற்றம்

இடப்பெயர்கள் காலத்திற்குக் காலம் மாற்றம் அடைந்து வந்துள்ளமைக்குரிய மூன்று காரணங்கள் வருமாறு கூறப்படு கின்றன (மா. நயினார்:1978:99):

(அ) அரசர்கள் தங்கள் வெற்றியின் நினைவாகவும், தாங்கள் வெற்றி கண்ட ஊர்களில் தங்களது உரிமைகளை நிலைநாட்டவும், வெற்றிகொண்ட ஊர்களின் பெயர்களை மாற்றுதல்.

(ஆ) அரசர்கள் கோயில்களுக்கும், அந்தணர்கள் முதலியோர்களுக் கும் நன்கொடையாக வழங்கும் நிலங்களுக்குத் தங்கள் பெயர்களைச் சூட்டுதல். மிகப்பெரும்பான்மையான ஊர் களுக்குப் பெயர் மாற்றம் ஏற்பட இதுவே முதன்மைக் காரணமாக இருந்தது.

(இ) அரசர்கள் தங்களது உறவினர்கள், தங்களுக்கு வேண்டப்பட்ட வர்கள் ஆகியோரது பெயர்களாலும் ஊர்களுக்குப் பெயர் மாற்றம் செய்தல்.

இத்தகைய பெயர் மாற்றங்கள் பற்றிய செய்திகளின் மூலம் அக்கால அரசியல், சமூக நிகழ்ச்சிகள், பெயர் மாற்றம் செய்தோரின் வாழ்க்கைப் பின்னணி என்பவற்றை அறிந்து கொள் ளும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

இடப்பெயர் ஆய்வு

இடப்பெயர்கள் மொழியில் வழக்குப்பெறும் பொழுது மாற்றங்களுக்கு உட்பட்டும், மாற்றங்களுக்கு உட்படாமலும் வழங்கும் இயல்பு கொண்டவை. மொழியிலுள்ள மற்றைய சொற் களைவிட நிலைபேறுடைய இப்பெயர்ச் சொற்கள் வரலாற்றோடு நேரடித் தொடர்பு கொண்டு பழைமையின் எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும், பண்பாட்டையும் விளக்கும் ஆற்றல் கொண்டவை. இப்பெயர்கள், மனிதக் கற்பனைக்கு இடம் தந்து கொண்டே இருந்த புராணம், நாட்டார் கதைகள் ஆகியவற்றைப் படைக்கும் வல்லமை உடையன. எல்லாவற்றிற்கும் மேலாக இவை அனைத்து மொழிகளையும் எளிதில் ஊடுருவும் பொதுத் தன்மை கொண்டவை. இவ்வாறு மொழியியல், வரலாறு, பண் பாட்டியல், நாட்டார் வழக்கியல் (Folklore), இனவியல் (Ethnol- ogy) ஆகிய பல துறைகளோடு உறவுடைய இடப்பெயர்கள் மொழியின் ஒரு கூறாக விளங்குகின்றன. இடப்பெயர்கள் மொழி யின் ஒரு கூறாக இருந்தும், இவற்றின் சிறப்பு இயல்புகளால் 'இடப்பெயராய்வு' என்ற தனித்துறையாக வளர்ந்து இருக்கிறது என்பர் பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியம் (1972:339).

இடப்பெயர் ஆய்வின் பயன்

ஒரு நாட்டின் விடுபட்டுப்போன வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ளும் சான்றுகளைத் தருவது நாட்டார் வழக்கிய லாகும். அவ்வகை ஆய்வினைச் சார்ந்ததே இடப்பெயர் ஆய்வு.

பொதுவாக ஒரு நாட்டு வரலாற்றின் உண்மைகளையும், பண்பாட்டுச் செய்திகளையும், கல்வெட்டுக்கள், மற்றும் புதைபொருட் சான்றுகள், கட்டிட, சிற்ப, ஓவியங்கள், இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்ற தரவுகளைத் தக்கவாறு அறிந்து கொள்ளத் துணையாவன இடப்பெயர்களாகும். அன்றியும் இடப்பெயராய்வு, மொழி மாற்றம், மொழியில் ஏற்பட்ட பிறநாட்டார் தாக்கம் என்பன பற்றியும் அறியக்கூடிய வாய்ப்பினையும் தருகின்றது. இவ்வாய்வின் மூலம் இடங்களின் புவியியல் அமைப்பு, பிறநாட்டார் தொடர்பு, அரசியல் நிகழ்வுகள், பிறமொழித் தொடர்பு முதலாகப் பல்வேறு கூறுகளையும் அறிந்து கொள்ளத்தக்க வாய்ப்பு ஏற்படுகின்றது.

இலங்கை முழுவதிலும் தென்னிந்தியாவுடன் ஒத்த பெருங்கற் பண்பாட்டுக் கூறுகள் (South Indian Phenomenon of Megalithic Culture) பரவியிருந்தன என்பது புதைபொருள் ஆய்வுகளின் மூலம் நன்கு நிறுவப்பட்டுள்ளது (S.K.Sittampalam:1980). யாழ்ப்பாண மாவட்டத்திற் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற் பண்பாட்டுத் தளங்களிற் கிடைத்த தொல்லியற் சான்றுகள் பற்றிய ஆய்வுகள் மூலம் ஈழத்திற் பெருங்கற் பண்பாடு எவ்வாறு நிலைத்து இருந்தது என்ற வரையறையான கருத்துக்களும் விளக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன (P.Ragupathy:1983). இடப்பெயர்களின் மூலங்கள் அல்லது அவற்றின் விளக்கங்கள் பற்றி ஆராயும்போது இத்தகு பண்பாட்டு வரலாற்றுப் பின்னணிகளை கருத்திற்கொள்ள வேண்டியதும் இன்றியமையாததாகும்.

இந்திய பெருநிலப்பரப்பிலிருந்து இலங்கை கடற்கோள்களாற் பிரிக்கப்படுவதற்கு முன்னர் தென்னிந்தியாவில் இருந்து திராவிட இனத்தைச் சேர்ந்த மக்கள் கால்நடையாக வந்து, ஈழத்தின் வடபால் குடியேறி இருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது (G.C.Mendis:1946:3). மிகப் பழங்காலந் தொடக்கமாக இந்திய - இலங்கைத் தொடர்புகள் பல்வேறு வழிகளில் இடம்பெற்று வந்துள்ளன. வணிகக் குடியேற்றம், சமயக் குடியேற்றம், அரசியல் குடியேற்றம், அமைதிக்காலக் குடியேற்றம் என்ற வகையில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட குடியேற்றத் தொடர்புகளால் இந்திய இடப்பெயர்கள் அப்படியே ஈழத்திலும் இடம்பெறலாயின. காலப் போக்கில் அப்பெயர்களிற் சில திரிபடைதலும் இயல்பாயிற்று.

ஈழத்தமிழர் வரலாற்றில் இடப்பெயர்கள்

வரலாறு எங்கே அமைதி கொள்கின்றதோ அங்கே இடப்பெயர்கள் வாய்திறந்து பேசக்கூடும் என்பர். ஓரினத்தின் வரலாற்றை மீளாய்வு செய்து எழுதுவதற்குரிய ஆவணங்களில் இடப்பெயர்களும் முதன்மை பெறுகின்றன. அன்றியும் அம்மக்களின் சமூக நடைமுறைகள், மரபுகள், ஒழுங்குகள், சமய ஒழுக்கங்கள், பழ மரபுக் கதைகள், அரசியல் நடவடிக்கைகள், ஆட்சி ஒழுங்குகள் முதலான பல்வேறு கூறுகளை அறிந்து கொள்ளவும் இடப்பெயர்கள் வழிவகுக்கின்றன. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட வரலாற்றை அறிந்து கொள்வதற்குத் தொல்பொருட் சான்றுகள், மானுடவியல் ஆய்வு, இடப்பெயராய்வு என்பன துணையாகின்றன. இடப்பெயர்கள் வரலாறு, இலக்கியம், இலக்கணம், பண்பாடு, சமூகவியல் என்பனவற்றோடு பின்னிப் பிணைந்தவை.

ஈழத்தின் தொல்குடிகளாக ஆதித்திராவிடர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பண்டை நாள் தொடக்கமாக ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் பல்வேறு அடிப்படையிலான தொடர்புகள் இருந்து வந்துள்ளன. தென்னிந்தியாவின் பல பகுதிகளிருந்தும் பல்வேறு காலக் கட்டங்களில் தமிழர் குடியேற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இலங்கையிலே திராவிட மொழிக் குடும்பத்திற்குரிய அடிச்சொற்கள் ஈழத்து இடப்பெயர் ஆக்கத்தில் பரவலாக இடம்பெற்றிருக்கின்றன என்ற உண்மையை இடப்பெயராய்வு வெளிப்படுத்துகின்றது.

ஈழத்து அரசியல் வரலாற்றில் தொடக்க காலத்தில் தமிழரும் சிங்களவரும் இலங்கை முழுவதையும் மாறி மாறி அரசாண்டு வந்துள்ளனர். பின்னர் இலங்கையின் வடக்கும் கிழக்கும் தமிழ் மன்னர்களாலும், அவை தவிர்ந்த தென்னிலங்கை சிங்கள மன்னர்களாலும் ஆளப்பட்டு வந்தன. பிரித்தானிய காலனித்துவ ஆட்சி இலங்கையில் நிலவியபோது, இவ்விரு ஆள்நிலப் பரப்புக்களும் ஒன்றிணைக்கப்பட்டன. இலங்கையின் இன்றைய அரசியல் அவல நிலைமைக்கு அடிப்படைக் காரணம், இந் நாட்டின் வரலாற்று உண்மைகள் உரிய முறையில் வெளிப்படுத்தப்படாமை மட்டுமன்றி, அவை திட்டமிட்டு மறைக்கப்பட்டு வருவதுமாகும். ஈழ வரலாற்றில் மறைந்து கிடக்கும் அல்லது

மறைக்கப்பட்டு வரும் வரலாற்று உண்மைகள் இடப்பெயராய்வு மூலம் வெளிப்படுத்தப்படக் கூடிய வாய்ப்புக்களுள்ளன.

இலங்கையில் பௌத்த சிங்கள வரலாறு விஜயன் வருகையுடன் தொடங்குவதாக மகாவம்சம், சூளவம்சம் முதலான நூல்கள் கூறுகின்றன. அதற்கும் முற்பட்டதே ஈழத் திராவிடர் வரலாறாகும். தென்னிந்தியாவில் வரலாற்றுத் தொடக்க காலத்தில் நிலவிய பெருங்கற் பண்பாடே (Megalithic Culture) இலங்கையின் தொன்மைக்கால வரலாற்றிலும் காணப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தொன்மைக் குடிகள் பெருங்கற் பண்பாட்டிற்கு உரியவர்கள் என்பதும், பௌத்தத்தின் வருகைக்கு முன்பே அவர்கள் இங்கு வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதும் ஐயம் திரிபற நிறுவப்பட்டுள்ளது (P.Ragu pathy:1983).

எனவே இலங்கையில் பெருங்கற் பண்பாட்டை அடிப் படையாகக் கொண்டு தமிழர் குடியிருப்புக்கள், ஊர்கள், நகரங் கள், அரசுகள் தோன்றலாயின. அவ்வகையில் கதிரமலையைத் தலைநகராகக் கொண்டு வட இலங்கையில் தோன்றிய தமிழரசு பழைமையும் முதன்மையும் பெறுகின்றது. இக் கதிரமலை > கந்தரோடை எனக் காலப் போக்கில் வழக்குப் பெறுவதாயிற்று. இலங்கையில் உள்ள பெருங்கற் பண்பாடு என்பது தென்னிந் தியப் பண்பாட்டை ஒத்ததாகவும், அதனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகவும் காணப்படுவதுடன், அவ்வாறான ஒரு பெருங்கற் பண்பாட்டிலிருந்துதான் தமிழ், சிங்களம் என்னும் இரு பண் பாட்டுப் பிரிவுகளும் தோன்றி வளர்ந்தன என்பதும் புலனா கின்றன. தொடர்ந்தும் தென்னிந்திய அரசியல், பண்பாட்டு அலை களுக்கு இலங்கை வரலாறு உட்பட்டே வந்துள்ளது. பொன் பரிப்பு, ஆனைக்கோட்டை, கந்தரோடை, பூநகரி, வல்லிபுரம், வவுனியா, கந்தளாய், மாத்தளை, மாத்தறை, கதிர்காமம் முதலான இடங்களில் கிடைத்துள்ள தொல்பொருட் சான்றுகள் ஆதித் திராவிடப் பண்பாட்டில் தமிழர் தொடர்பினைக் குறித்துக் காட்டுகின்றன.

இராமாயண காலத்தில் இலங்காபுரியைத் தலைநகராகக் கொண்டு இராவணன் ஆண்ட செய்தியும், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இலங்கையின் கிழக்கு எல்லையில் திருக் கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், மண்டூர், மேற்கெல்லையில் திருக்கேதீஸ்வரம், முன்னீஸ்வரம், வடக்கே நகுலேஸ்வரம், தென் கோடியில் திருமால்கோயில், கதிர்காமம் முதலான இந்து ஆல

யங்கள் அமைந்திருந்தமையும், பண்டைக் காலம் முதலாக இலங்கைத் தீவின் கரையோரப் பகுதிகள் முழுவதிலும் தமிழர் குடியிருப்புக்களும் அவர்களது பண்பாடும் நிலைபெற்றிருந் தமையைச் சான்றுபடுத்துகின்றன.

ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்ற தமிழ் ஊர்ப்பெயர்கள் தமிழரின் மிகப்பழைய குடியிருப்புக்களை நினை வூட்டுவதோடு, மலையாளம், தெலுங்கு முதலான திராவிட மொழிகளின் தொடர்பினையும் சுட்டிக்காட்டுகின்றன. தென்னிந் தியக் குடியேற்றமும் அரச மேலாட்சியும் காலத்திற்குக் காலம் ஈழத்தில் இடம்பெற்று வரலாயின. பல்லவர், பாண்டியர், சோழர் ஆகியோரின் ஆட்சிக்கு இலங்கை உட்பட்டிருந்த காலத்தில் அவர்களது தொடர்பை நினைவூட்டுவனவாகத் தோற்றம்பெற்ற தமிழ் இடப்பெயர்களும் தமிழர் வரலாற்றுச் சான்றுகளாக உள் ளன. ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆதித்திராவிடரின் தொல் பொருட்கள், பிராமி எழுத்துச் சான்றுகள், தமிழ்க் கல்வெட்டுக்கள் முதலியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை யாவற்றையும் துணைக்கொண்டு நோக்கும்போது பண்டைக் காலம் முதலாக இலங்கையின் பல பகுதிகளிலும் தமிழர் வாழ்ந்து வந்திருக்கிறார் கள் என்ற உண்மை உறுதியாகின்றது.

கிரேக்க புவியில் அறிஞரான தொலமி (Ptolemy) கி.பி. 140ல் வரைந்த இலங்கைப் படத்தில் தமிழ் இடப்பெயர்கள் பல குறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கையின் தென்கோடி யிலுள்ள டொன்ரா என்ற இடத்தில் (இதன் பழைய பெயர் தேவன்துறை) சந்திரமௌலீசர் என்ற கோயில் அமைந்திருந்தமை யும் எழுதப்பட்டுள்ளது. தமிழ்ப் பேரரசன் எல்லாளன் தன் ஆட்சிக் காலத்தில் (கி.மு.161-117) அநுராதபுரத்தைத் தலை நகராகக்கொண்டு ஆட்சி செய்தான். தமிழ் ஆள்புலப் பரப்பின் தலைநகரான அநுராதபுரம் எல்லாளன் கொலை செய்யப்பட்ட பின்னர் சிங்களவரிடம் கை மாறியது. அன்றுமுதல் இன்றுவரை இனவாதத்தினால் தமிழர் தாயகமும் தமிழினமும் அழிக்கப்பட்டே வருகின்றன.

இலங்கையில் சிங்கள பௌத்த ஐதீகமும், தம்மதீபக் கோட்பாடும் தோன்றியதன் விளைவாக மகாவம்சம், சூளவம்சம் முதலான நூல்கள் எழுதப்பட்டன. அந் நூல்களில் பழந்தமிழ் இடப்பெயர்கள் திரிபுபடுத்தப்பட்டுள்ளமைக்குப் பல்வேறு சான்று கள் உள்ளன. ஆதித் திராவிடருடன் தொடர்புடைய நாகர்

இனத்தவர் இலங்கையில் பண்டைக் காலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர் வழித் தோன்றல்களே ஈழத்தமிழர்கள். அவ் வரலாற்றைச் சான்றுபடுத்துவனவாக நாக தீபம், நாகர்கோவில், நாகபடுவான் முதலான இடப்பெயர்கள் காணப்படுகின்றன. ஈழத் திலுள்ள தமிழ், சிங்கள இடப்பெயர்க் கூறுகளுட் சில, தென்னிந் திய இடப்பெயர்களிற் காணப்படவில்லை. அத்தகைய இடப் பெயர்க் கூறுகள் இலங்கையின் ஆதிக்குடிகளான நாகரின் மொழிக்கு உரியனவாக அமையலாம். தமிழரும் சிங்களவரும் அத்தகைய இடப்பெயர்க் கூறுகளை ஏற்றுத் தத்தம் மொழியில் சேர்த்து இடப்பெயர்களை உருவாக்கியிருக்கலாம். எனவே தமிழுக்கும் சிங்களத்திற்கும் பொதுவான சில இடப்பெயர்க் கூறுகளின் மூலமொழி நாகர்மொழி என்பதைக் கருத்திற் கொள்ளுதல் பொருத்தமாகும்.

இடப்பெயர்கள் பொதுவாக நிலஅமைப்பு, நீர்நிலைகள், தாவரம், விலங்கு, தொழில், நிகழ்வுகள் முதலான காரணிகளின் அடிப்படையில் அங்கு வாழ் மக்களின் மொழி வழியாகத் தோற்றம் பெறுதல் வழக்கமாகும். தமிழகத்தைப் போன்றே ஈழத்திலும் பண்டைத் தமிழர் திணைக் கோட்பாட்டின் அடிப்படை யிலும் இடப்பெயர்கள் அமைந்துள்ளன. இவ்வாறாகத் தோற்றம் பெற்ற தமிழ் இடப்பெயர்கள் பின்னாளில் போர்த்துக்கீசர், ஒல் லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர் முதலியோரால் உருத்திரிக்கப் பட்டு, வரலாற்று முரண்பாடுகளுக்கு இடமளித்தன. பல தூய தமிழ்ப் பெயர்களுக்கு, சான்றாக யாழ்ப்பாணம் என்பது யாப் பானய, யாப்பாப்பட்டுன எனவும், மட்டக்களப்பு (மட்டு+களப்பு) என்பது மடக்களப்புவ எனவும், மணலாறு என்பது வெலிஓயா எனவும் சிங்களமொழி வடிவம் கொடுக்கப்பட்டு, அவற்றோடு புதுக் கதைகளும் இணைக்கப்படலாயின.

பண்டைக்காலம் முதலாக, ஈழத்தின் பல பகுதிகளிலும் தமிழர் பரந்து வாழ்ந்து வந்த போதிலும் கால ஓட்டத்தில் பல் வேறு காரணங்களால் வடக்கும் கிழக்கும் தமிழர் பாரம்பரியத் தாயகம் என எல்லை சுருக்கப்படுவதாயிற்று. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழீழ எல்லைகள் மேலும் சிக்கலாக்கப் பட்டன. 1948க்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சிறிலங்காவின் அரசுகள் திட்டமிட்டுத் தமிழர் தாயக எல்லைகளை மாற்றி வருவதோடு, தமிழர் தாயகத்திலும் திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றங்களை இராணுவப் பாதுகாப்புகளுடன் மேற்கொண்டு

வந்துள்ளன. பூகோள முதன்மை வாய்ந்த தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையைச் சிங்கள மயப்படுத்துவதில் சிறிலங்கா அரசு மிகமும் முரமாகச் செயற்பட்டுவருகின்றது. 1850ல் ஹென்றி சாள்ஸ் என்பவர் Ceylon and the Sinhalese என்ற நூலில் கி.பி. 125ஆம் ஆண்டுக்கு முன்பாகவே திருகோணமலை தமிழர்களின் நகரமாக விளங்கியமை பற்றி எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங் கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றன. தனித்தமிழ் ஊர்ப் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இதற்குச் சான்றாகப் பின்வரும் சில இடப்பெயர்களைக் குறிப்பிடலாம்:

முதலிக்குளம்	>	மொறவேவ
பனிக்கட்டிமுறிப்பு	>	பனிக்கட்டியாவ
கல்லாறு	>	சோமபுர
நீலாப்பளை	>	நீலப்பெல
பூநகர்	>	மகிந்தபுர
திருமங்கலை	>	சிறிமங்கலகம
பெரியவிளான்குளம்	>	மகாதிவுல்லவெவ
குமரேசன்கடவை	>	கோமரன்கடவெல
குஞ்சிமடம்	>	அபயபுர

இராணுவ அட்டூழியங்களால் தமிழ் மக்கள் தம் பாரம் பரியத் தமிழ் ஊர்களினின்றும் விரட்டியடிக்கப்பட்டு அங்கு சிங்கள வர்கள் குடியேற்றபட்டு வருகின்றனர். தமிழர் தாயகமான திரு கோணமலை மாவட்டத்தில் மட்டும் 100க்கும் மேற்பட்ட சிங்கள ஊர்ப்பெயர்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. சான்றாக அபய புர, சிறிமாபுர, ஜெயந்திபுர, சுமதிபுர, சோமபுர, உள்பத்துவ முதலான இடப்பெயர்களைக் குறிப்பிடலாம்.

திருகோணமலைக்கு வடபால் அமைந்துள்ள பதவியாப் பகுதியில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தித் தமிழர் தாய கத்தை வடக்குத் தெற்காகப் பிரிக்கும் நோக்கமுடையனவாகவும் இந் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. கந்தளாய் தமிழ்ப் பிர தேசத்தில் 20சதுர கிலோ மீட்டர் பரப்பில் சிங்களக் குடியேற்ற

நடவடிக்கைகள் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'அபிவிருத்தித் திட்டம்' என்ற பெயரில் தமிழர் தாயக நீர் வளமும் நில வளமும் சிங்கள மயப்படுத்தப்பட்டு வருகின்றன. 1901இல் எடுக்கப்பட்ட குடிசனப் புள்ளி விபரத் தின்படி 100 தமிழருக்கு 20 சிங்களவரே அங்கு தொழில் காரணமாக வாழ்ந்தனர். ஆனால் 1981இல் இவ் விகிதாசாரம் 100 தமிழருக்கு 1560 சிங்களவர் எனப் பெருகியுள்ளமையைக் குடிசனப்புள்ளி விபர அறிக்கையும், மற்றும் வரலாற்றுச் சான்று களும் தெளிவாக நிரூபிக்கின்றன. இம் மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் தொடங்கப்பட்ட மொறவெவ, மகாதிவுல்ல வெவ, கோமரன்கடவெல குடியேற்றத் திட்டங்களால் திருகோணமலை யின் 25சத வீதமான நிலப்பரப்பு சிங்களமாக மாற்றப்பட்டுள் ளமைமை இடப்பெயர் ஆய்வு தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இதுபோன்றே தென்தமிழீழத்தில் ஏற்படுத்தப்பட்ட சிங் களக் குடியேற்றங்களால் 1960இல் அம்பாறை மாவட்டமும், 1970இல் அம்பாறைத் தொகுதியும் தோற்றம் பெற்றுள்ளன. வன்னி மண்ணில் மணலாறு என்ற ஊர்ப்பகுதியில் வெலிஓயா என்ற பெயரில் ஒரு பெரும் சிங்களக் குடியேற்றமே ஏற்படுத்தப் பட்டுள்ளது. 1997இல் வவுனியா - மன்னார் வீதியிலுள்ள பறை யாலன்குளம் என்ற தமிழ்ப் பெயரை 'சப்புமால்புர' எனப் பெயர் மாற்றம் செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகளும் ஈண்டுக் குறிப் பிடத்தக்கன.

ஈழத்தின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள தமிழர் வர லாற்றுத் தொடர்புடைய இடப்பெயர்களிற் காணப்படும் தமிழ் மொழிச் செல்வாக்குப் பற்றியும் அதன் பின்னணி பற்றியும் ஆராய வேண்டும். இத்தகைய ஆய்வுகள் இதுவரை தீர்க்கப் படாத அரசியல் சிக்கல்களுக்கும் அறியப்படாத உண்மைகளுக் கும் விளக்கம் அளிக்கும் என்பது உறுதி. இன்றைய நிலையில் தமிழீழத் தாயகத்தின் அனைத்து இடப்பெயர்களும் உடனடியாக அட்டவணைப்படுத்தப்பட்டு, வரலாறு, சமூகவியல், பண்பாட்டி யல், மானிடவியல், மொழியியல் ஆகியவற்றின் அடிப்படையில் அப்பெயர்கள் யாவும் ஆராயப்படும்போது ஈழத் தமிழரின் தொன்மை வரலாற்றுண்மைகளை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப் புக்கள் உள்ளன.

இலங்கையில் இடப்பெயர்கள்

ஈழத்து இடப்பெயர்களை அறிந்து கொள்ளுதல் அதன் வரலாற்றுத் தொன்மையை அறிந்து கொள்ளுதலின் ஒரு பகுதி யாகும். இலங்கைக்குரிய பல்வேறு பெயர்கள் மட்டுமன்றி, இத்தீவிலுள்ள ஊர்களின் பெயர்களும் வரலாற்றுப் பழைமை மிக்கன. இந்நாட்டில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த இயக்கர், நாகர் ஆகிய மக்களும் இத்தீவிற்குக் காலத்திற்குக் காலம் வருகை தந்த உலகப் புகழ் பெற்ற பயணிகளும், இதனை வென்று ஆட்சி புரிந்த சோழர், பாண்டியர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலியோரும், இத்தீவில் இற்றை ஞான்று வாழ்ந்து வரும் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், பறங்கியர், மலையாளத்தார் முதலியோரும் தத்தம் மொழிக்கு ஏற்ப இத்தீவுக்கும் இதன் இடங்களுக்கும் பெயர்களை இட்டு வழங்கலாயினர். இலங்கை, ஈழம், சீழம்தீப், செரண்டிப், தப்ர பேன், சிலாங், சிலன், சிலோன், பாலாசி மண்டு, சிவபூமி, இரத்தினத்தீபம், சயலிதீபம், சீலத்தீவு, சலாபதீவம், சாலிக என்பன அவ்வப்போது இலங்கைத் தீவுக்கு வருகை தந்த பிற நாட்டவரால் வழங்கப்பட்ட பெயர்களாகும். ஒவ்வொரு பெயரும் தனித்தனி வரலாற்றுச் செய்தியைத் தாங்கி நிற்கின்றது.

இலங்கையிலே தமிழ் இடப்பெயர்கள் பற்றிய தகவல் களைத் தரத்தக்க இலக்கியங்கள் 13 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவாகவே உள்ளன. ஒல்லாந்தர் காலத்தில் (1656-1796) எழுதப்பட்ட தோம்புகளில் அக்காலத்தில் வழக்கில் இருந்த ஊர்ப் பெயர்கள், குறிச்சிப் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுப் பேணப்பட்டுள்ளன. ஆயினும் பழைய இடப்பெயர்கள் பற்றிய விளக்கங்களையும், மற்றும் தகவல்களையும் வாய்மொழி மூலமா கவே பெறவேண்டியுள்ளது. இடப்பெயர்கள் தொடர்பான இலக்கி யத் தரவுகளும், கல்வெட்டுச் சான்றுகளும் மிக அரிதாகவே கிடைக்கின்றன.

சிங்களவர் தமிழரிலும்விடப் பெரிதாக வரலாற்று உணர்ச்சி உடையோராக இருந்திருக்கின்றனர். மகாவம்சம், சூளவம்சம், தீபவம்சம் முதலியன சிங்களவருடைய 2000 ஆண்டு களுக்கு மேலான வரலாற்றை மதப் பின்னணியில் தொடர்ச்சி யாக எடுத்துக் கூறும் நூல்களாகும். காலத்திற்குக் காலம்

புத்த பிக்குகள் மகாவிகாரையின் வரலாற்றைக் கூறும்வகையில் அதனைப் பாளி மொழியிலே எழுதி வந்துள்ளார்கள். அன்றியும் 2000 ஆண்டுகளுக்கு மேலாகச் சிங்கள மொழிக் கல்வெட்டுக்கள் தொடர்ச்சியாகப் பொறிக்கப்பட்டு வந்துள்ளன (ஆ.வேலுப் பிள்ளை 1971:378). இத்தகைய ஒரு சூழலும், முயற்சியும் ஈழத் தமிழரிடையே காணப்படாமை பேரிழப்பாகும். தமிழ்ப் பேரரசு கண்ட சோழப் பேரரசர்களும் பழந்தமிழர் வரலாற்றை வரன்முறையாகத் தனி நூலாக எழுதினார் அல்லர். பழைய இலக்கியங்களைத் தேடிச் சேகரித்துப், பேணிப் பாதுகாத்த சோழ மன்னர்கள், பண்டைத் தமிழர் தம் வரலாற்றை உலக ளாவிய நிலையில் நோக்கி எழுதியிருந்தால் தமிழர் வரலாற்றின் பழைமைச் சிறப்பு சான்றுகளுடன் திகழ்ந்திருக்குமன்றோ. சோழர் களால் தொகுத்துப் பேணப்பட்ட பழந் தமிழ் இலக்கியங்கள், பன்னிரு திருமுறைகள், ஆழ்வார் பாடல்கள், பல்லவர், சோழர், பாண்டியர் ஆகியோரது கல்வெட்டுக்கள், பட்டயங்கள் முதலி யனவும் தமிழர் வரலாற்றுத் தொடர்பினைத் தொடுத்துக் காட்டு வனவாக உள்ளன.

வடமாகாணத்து இடப்பெயர்களிற் சில பாளி அல்லது சிங்கள மொழிச் சாயல் பெற்றிருக்கக் காணலாம். இவை பற்றிப் புத்த ஜாதகக் கதைகளிலும், 'நம் பொத்த' என்ற சிங்கள நிகண்டிலும் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த ஜாதகக் கதைகள் கி.பி 6 ஆம் நூற்றாண்டினவாதலால் இவை குறிப்பிடும் இடப்பெயர்களும் அத்தகு பழைமை வாய்ந்தவை யாகும். ஈழத்தின் இடப்பெயர்களை ஆராய்ந்து நோக்கும்போது வட இலங்கையில் உள்ள தமிழ்ப் பெயர்கள் அப் பகுதியின் வரலாற்றுப் பழைமையைச் சான்றுபடுத்துவனவாக உள்ளன. இது பற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (1962:95) அவர் களின் கருத்து ஈண்டுப் பொருத்தம் நோக்கித் தரப்படுகிறது:

> "ஈழத்து ஊர்ப்பெயர்களை நாம் நோக்குமிடத்து வடபகுதி யானது பண்டைக்காலம் தொட்டு நாகரிகம் படைத்துச் சிறந்த பகுதியாக விளங்கியது எனத் தெரிகின்றது. இலங்கைக்குத் தமிழரோ, ஆரியரோ வரும் முன்னர் அங்கு நாகர் என்போர் வாழ்ந்தனர். இவர்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழி பேசிய மக்கள் என ஆராய்ச்சியாளர் கருதுவர். பண்டைக் காலத்திலே புகழ்பெற்றுத் திகழ்ந்து விளங்கிய ஊர்ப்பெயர்கள் பலவற்றை இன்னும் வழக்கில் காண்கிறோம். அது போலவே புத்த சமயம் பரவியிருந்த் காலத்தில் பல ஊர்கள் சிறப்பு எய்தின. அவ்வூர்ப் பெயர்கள் சிறுசிறு மாற்றம் அடைந்த வடிவங்களோடு இன்னும் உள்ளன. அதன் பின்னர் பல்லவ, சோழ, பாண்டிய, நாயக்க அரசுகள் தென் னகத்தில் சிறப்படைந்திருந்த காலங்களில் அவ்வரசுகளின் தொடர்பு காரணமாக ஈழத்திலும் சில ஊர்களுக்குப் பெயர்கள் எழுந்தன."

இலங்கையில் இடப்பெயர் ஆய்வு

இலங்கையில் தமிழ் இடப்பெயர் ஆய்வுகள் அறிவியல் அடிப்படையில் முழுமையாக இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை. ஆயினும் சைமன்காசிச்செட்டி, சுவாமி ஞானப்பிரகாசர், S.W. குமாரசுவாமி, ஹோர்ஸ் பேர்க், எஸ். சபாரத்தினமுதலி யார், ஜே.பி. லூயிஸ் முதலியோர் யாழ்ப்பாண மாவட்ட இடப் பெயர்கள் பற்றி கி.பி. 1834-1950 ஆகிய காலப்பகுதிகளில் கட்டுரைகளும், நூல்களும் எழுதியுள்ளனர். அவை யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்துப் பெயர்களையும் ஆராய்வதாக அமையவில்லை. குறிப்பிட்ட ஒரு சில இடப்பெயர்கள் பற்றியே மீண்டும் மீண்டும் கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றுள்ளன. 1955ஆம் ஆண்டளவில் இடப்பெயர்கள் பற்றி எழுத வேண்டும் என்ற ஓர் உணர்வு பத்திரிகை எழுத்தாளர்களிடையே பெரிதும் காணப்பட்டது. 'ஈழ நாட்டில் உள்ள இடப்பெயர்களை நன்கு ஆராய்ந்து ஒரு தனி நூலாக இதுவரை எவராவது எழுத முன் வராமை ஒரு பெரும் குறையென்றே சொல்லலாம்' என்ற வாசகம் ஸ்ரீலங்கா பத்திரிகையில் (யூன் 1955:11) வெளி வந்தும், இற்றை வரை அத்தகைய முழுமையான முயற்சிகள் மேற்கெள்ளப்பட வில்லை.

சைமன்காசிச்செட்டி ஈழத்து இடப்பெயர்கள்பற்றி ஆராய்ந்து 'The Ceylon Gazetteer- An Account of the Districts, Provinces, Cities, Towns, Principal Villages, Harbours, Rivers, Tanks, etc. of the Island of Ceylon' என்ற நூலினை 1834இல் வெளியிட்டார். இந் நூலில் 410 இடப்பெயர்கள் பற்றியே ஆராயப்பட்டுள்ளன. ஆனால் இந் நூலில் யாழ்ப்பாண மாவட்டத்தின் 40 இடப்பெயர் களைப்பற்றிய குறிப்புக்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன. சைமன்

காசிச்செட்டி தனது நூலில் இடப்பெயர்கள் பற்றி எழுதும்போது இடத்தின் அமைவிடம், மரபுகள், நிறுவனங்கள், விவசாயம், வணிகம், விளைபொருட்கள், வருமானம்-வரி, மக்கட் பரவல், சாதிகள், சமயம், வரலாறு என்ற அடிப்படையில் குறிப்புக்கள் தந்துள்ளார்.

சுமார் 50 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்பு சைமன் காசிச்செட்டி அவர்களின் வழியில் பல இடப்பெயர் நூல்கள் வெளி வரலாயின. அரச உள்ளூராட்சிச்சேவை அலுவலர் களாகக் கடமையாற்றிய ஆங்கிலேயர்களும், மற்றும் உள்ளூர் அரச அலுவலர்களும் இம் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். சைமன் காசிச் செட்டி முழு இலங்கை என்ற நிலையில் எழுத முயன்ற போதிலும், அனைத்துப் பகுதிகளிலுமுள்ள இடப்பெயர்கள் பற்றி எழுதாமையால், அந்நூலும் முழுமை பெற்றிலது. அவருக்குப் பின்வந்தோர் மாவட்டம், மாகாணம் என்ற அடிப்படையில் இடப்பெயர்கள் பற்றிய நூல்களை வெளியிட்டனர். அவைபற்றி அறிந்துகொள்ள முயல்வோருக்குப் பயன்படும் வகையில் அந் நூல்களின் பட்டியல் இங்கே தரப்படுகிறது:

1. W.S. Boake	- Mannar: A Monograph, 1888
2. Le. Mesurier	- Manual of the Nuwara Eliya District, 1893
3. Herbert White	- Manual of the Province of the Uva, 1893
4. J.P. Lewis	- Manual of the Vanni District (Vavuniya and Mullaitivu) of the Northern Prov ince, Ceylon, 1895
5. Sir Archibald	- A Gazetteer of the Central Province of Ceylon Cambell Lawrie (excluding Walapane), Two Volumes, 1898
6. R.W.Ivers	- Manual of the North Central Province, Ceylon, 1899
7. E.B. Denham	- The Mannar Gazetteer, 1906
8. Frank Modder	- Manual of the Puttalam District, 1908
9. Frank Modder	- Gazetteer of the Puttalam District of the North - Western Province of Ceylon, 1908
10. S.O. Kanagaratnam	- Monograph of the Batticaloa District of the Eastern Province, Ceylon, 1921
11. S.W. குமாரசுவாமி	- வடமாகாணத்துச் சில ஊர்ப் பெயர் கள், 1917 (யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலின் பின்னிணைப் பாகவே இந்நூல் வெளிவந்தது)
12. ச. சதாசிவம்	- சப்த தீவுகள், புங்குடுதீவு, 1979
13. இ.பாலசுந்தரம்	- இலங்கை இடப்பெயர் ஆய்வு - 1 (காங்கேசன் கல்வி வட்டாரம்), 1988
14. இ.பாலசுந்தரம்	- இலங்கை இடப்பெயர் ஆய்வு - 2 (வடமராட்சி - தென்மராட்சி), 1989

மேலே குறிப்பிடப்பட்ட நூல்கள் மாவட்ட அடிப்படையில் அல்லது மாகாண அடிப்படையில் அணுகிய போதிலும் முழுமை யான இடப்பெயர்த் தரவுகளையோ அன்றி முழுமையான இடப் பெயர் வரிசைகளையோ வெளிப்படுத்தவில்லை என்பதையும் குறிப்பிடுதல் பொருந்தும்.

சைமன்காசிச்செட்டிக்கு அடுத்தபடியாக S.W. குமார சுவாமி வெளியிட்ட 'வடமாகாணத்துச் சில ஊர்ப்பெயர்கள்' என்ற நூல் சிங்கள இடப்பெயர் ஈறுகளை அடிப்படையாகக் கொண்டு, அதன் அடிப்படையில் தமிழ் இடப்பெயர்களுக்கு வலிந்து சிங்களமொழி சார்ந்த விளக்கம் கொடுப்பதாக அமைவ தாயிற்று. அந்நூல் 'திராவிட தேசத்துப் பெயர் பெற்ற தலங்கள், சாவகப் பெயர் பூண்ட தானங்கள், சிங்களப் பெயர் உள்ள தானங்கள், புதுப்பெயர் பெற்ற தானங்கள்' என்னும் தலைப்புக் களில் அமைந்துள்ளது. தமிழர் பெரிதும் வாழ்ந்த இடங்களை நடுநிலையாகக் கொண்டு எழுதப்பட்ட இந் நூலின் அமைப்பு, தரவுகள், அவற்றின் அளவு ஆகியவற்றை மேலோட்டமாகப் பார்க்கும்போதே ஆசிரியரின் திரிபுபட்ட குறிக்கோள் புலனா கின்றது. இத்தகைய முயற்சிகள் தொடர்பாக த.சண்முகசுந்தரம் (1984:3) கூறும் கருத்து ஈண்டுப் பொருத்தமாகிறது:

> 'ஈழத்து இடப்பெயர்பற்றி ஆரம்ப கால ஆராய்ச்சியாளர் பலரும் கண்டபடி எழுதினர். தமிழ்ப் பெயர்களை வேற்று மொழிப் பெயர்கள் என்று எழுதினர். வடமொழியின் திரிபு என்றனர். தேவை இல்லாமல் தொன்மைக் கதைகளைப் புகுத்தியும் ஆக்கியும் ஆராய்ந்தனர். கற்பனை, ஊகம், பழைமையை மறுத்தல் போன்றவை ஆராய்ச்சியில் இடம்பெற்றன. இதனால் இப்போது பெரும் இடர்ப்பாடு தமிழுக்கு எழுந்துள்ளது.'

பிரித்தானியரிடமிருந்து இலங்கை விடுதலை பெற்றதன் பின்னர் தாய்நாட்டுக் கலைகளைப் பேணுதல், நாட்டுப்பற்றையும், தாய் நாட்டுணர்வையும் ஏற்படுத்தல் என்ற அடிப்படையில் பல்வேறு பண்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலா யின. இப் பின்னணியில் ஊர்ப்பெயர்கள் பற்றிய கட்டுரைகள் வார இறுதிச் செய்தித்தாள்களில் வெளிவந்து கொண்டிருந்தன. ஆயினும் அவை உதிரிகளாக உதிர்ந்து போயின.

மேற்குலக நாடுகளில் இத்துறை முயற்சிகள் திட்டவட்ட மான முறைகளில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அவற்றின் பேறாக இந்தியாவிலும் இடப்பெயர் ஆராய்ச்சி மாநாடுகள், கருத்தரங்குகள், இடப்பெயர் ஆய்வுக்கழகங்கள், ஆய்விதழ்கள் என்பன தோன்றலாயின. தமிழர் தம் இடப்பெயர் ஆராய்ச்சி தொடர்பாகச் சென்னையிலுள்ள 'உலகத் தமிழாராய்ச்சி நிறு வனம்' இதுவரை மாவட்ட அடிப்படையில் பல்வேறு ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளது. பல கருத்தரங்குகளை நடத்தி யுள்ளது. இத்துறையில் பலர் அந்நிறுவனத்தில் தமிழக இடப் பெயர்களை மாவட்ட அடிப்படையில் ஆராய்ச்சி செய்து கொண் டிருக்கிறார்கள்.

உலகளாவிய நிலையில் தமிழ் நூல்களை வெளியிட்டும், தமிழாய்வு செய்தும் வரும் இந்நிறுவனம் இலங்கை இடப்பெயர் கள் பற்றியும் ஆராய்ந்து நூல் வெளியிட வேண்டும் என விரும்பியது. 1980களில் இதன் இயக்குநராகக் கடமையாற்றிய பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள் இப் பெரும்பணி யினை என்னிடம் 1982 இல் ஒப்படைத்தார்கள். ஆறாண்டு கால உழைப்பின் பயனாக இந்நூல் உருப்பெற்றது. இந்நூலை அந்நிறுவனம் வெளியிடுவதற்கிடையில் ஏற்பட்ட நிருவாக மாற்றங் களால் நூல் வெளியீட்டு முயற்சி தடைப்படுவதாயிற்று. அதன் பின்னர், ஈழத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட அரசியற் காரணிகளும் இந்நூல் வெளியீட்டுக்கு இயைபாக அமையவில்லை. ஆண்டுகள் கடந்தும் இந்நூல் கனடாவில் வெளிவருவதற்குரிய வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையின் இடப்பெயர் பற்றிய முழுநிலையிலான நூல் எழுதும் படியான வேண்டுகோளின் அடிப்படையில் முதலில் 'யாழ்ப்பாண மாவட்டம்' பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வினைத் தொடங்கியபோது தற்போதைய கிளிநொச்சி மாவட்டப் பகுதிகளும் யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்தன

வாகவே இருந்தன. அதனால் இவ்விரு மாவட்டங்களிலுள்ள இடப்பெயர்களும் இவ்வாய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். இதற்கு முதற்படியாக அரச ஆவணங்களாகிய தோம்புப் பதிவுகளைப் பார்க்க வேண்டி யிருந்தது. ஆயினும் நாட்டின் அரசியற் சூழல் அதற்கு வாய்ப்பு அளிக்கவில்லை. அரச வெளியீடான 1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டு அறிக்கையைத் துணைக் கொண்டு ஆய்வுக்குரிய இடப்பெயர்ப் பட்டியல் முதலிலே தயாரிக்கப்பட்டது. அப்பெயர் கள் பற்றி ஆராய்வதற்குதவியாக அப்பெயர்களிலே காணப்பட்ட இயற்கைநிலை, செயற்கைநிலைக் கூறுகள் வருமாறு வகைப் படுத்தப்பட்டன:

இயற்கைநிலைக் கூறுகள் - 48

அகம்	குடா	பளை
அளை	குண்டு	பிட்டி
ஆரை	குளம்	புலம்
ஆவி	குழி	பை
ஆறு	கேணி	மடு
ஊர்	கொல்லை	மணல்
ஓட்டை	செம்பாடு	மரம்
ஓடை	தரை	மலை
கண்டி	திசை	முனை
கரை	திடல்	மூலை
கல்	தீவு	வட்டை
கலட்டி	துறை	வத்தை
களப்பு	தோட்டம்	வயல்
காடு	தோப்பு	வளை
காமம்	பண்ணை	வில்
கிரி	பள்ளம்	வெளி

செயற்கைநிலைக் கூறுகள் - 29

அணி	குறிச்சி	நிலை
அலை	கூடல்	பள்ளி
ஆரை	கொட்டு	பற்று
ஆலை	கோட்டம்	பாய்
இட்டி	கோட்டை	புரம்
உடை	கோவில்	மடம்
கட்டி	சேரி	வாய்க்கால்
கட்டு	தரிப்பு	வெட்டி
கடவை	நகர்	வேலி
குடியிருப்பு	நாடு	

இப்பெயர்க் கூறுகளின் அடிப்படையில் அனைத்து இடப் பெயர்களும் நீர்நிலை, நிலவியல்பு, நிலப்பயன்பாடு,குடியிருப்பு, ஊராட்சி, தெய்வம், மானுடம், விலங்கு, பறவை, மரம், செடி என்ற வகையில் தனித்தனி இயல்களாக வகைப்படுத்தப்பட்டுள் ளன. இவற்றில் வகைப்படுத்தப்பட முடியாத பெயர்கள் 'சிறப் புப்பெயர்கள்' என்ற தனி இயலில் தரப்பட்டுள்ளன. இவ்வாறு வகைப்படுத்திய பின்னர், அவற்றின் அமைவிடத்தை வாசகர் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் இடப்பெயர்களுக்குச் சுருக்கக் குறியீடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

குறியீட்டு முறைகள்

யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய இடப்பெயர்த் தொகுதி இலங்கை அரச வெளியீடான 1981ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகும். இம் மாவட்டத்தில் இடம்பெறும் இடப்பெயர்கள், குறியீட்டு எண் களின் மூலம் காட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய ஆட்சியியல் அடிப்படையிலான குறியீட்டு எண் 10 ஆகும். அதன் உட்பிரிவுகளாக அமைந்த 16 உதவி அரசஅதிபர் பிரிவுகளுக்கும் சுருக்கக் குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன (நூல்: பக்:29.) இதற்கு எடுத்துக்காட்டாக வடமராட்சி வடக்கு - கிழக்கு என்ற

உதவி அரச அதிபர்பிரிவை (வடம.வ.கி.) என்ற சுருக்கம் குறித் தல் காண்க. உதவி அரசஅதிபர் பிரிவில் இடம்பெறும் கிராம சேவகர் பிரிவுக்கும் ஆட்சியியல் அடிப்படையில் எண்கள் தரப் பட்டுள்ளன. வடமராட்சி கிழக்கு உதவி அரசஅதிபர் பிரிவிலுள்ள நாகர் கோவில் என்ற கிராமசேவகர் பிரிவு (10: வடம.கி.145) என வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கும். இதில் இடம்பெறும் குடா ரப்பு என்ற இடம் (10: வடம.கி.145.1) எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவின்கீழும் பல இடங்கள் அமைந் திருப்பின் அவை ஒவ்வொன்றிற்கும் தொடரிலக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. சான்றாக வலிகாமம், தெற்கு மேற்கிலுள்ள ஆனைக் கோட்டை கிராமசேவகர் பிரிவு எண் 40 இல், எட்டு இடங்கள் உள்ளன. அதில் 5ஆம் இடத்தைக் குறிக்க (வலி.தெ. மே.40.5) என்ற குறியீடு நூலிற் பயன்படுத்தப்பட்டுள்ளமையை நோக்குக.

இயல் இரண்டு

யாழ்ப்பாண மாவட்டம்

புவியியல் அமைப்பு

உலக நாடுகளின் இடப்பெயர்த் தோற்றமும், அப்பெயர்களின் வழக்காறுகளும் அவ்வந் நாடுகளின் புவியமைப்பு, அங்கு வாழ் மக்களின் பன்முக வரலாறு என்பவற்றுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும். அதன் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயர்களை ஆராய்வதற்குத் துணையாக இம் மாவட்டம் பற்றிய பல்வேறு பின்னணிக் கூறுகளும் இவ்வியலிலே சுருக்கமாகத் தரப்படுகின்றன. உலக வரைப்படத்தில் யாழ்ப் பாண மாவட்டம், 79.39' - 80. 38' கிழக்கு நெடுங்கோடுகளுக் கிடையிலும், 9.15' - 9.49' வடக்கு அகலக்கோடுகளுக் கிடை யிலும் அமைந்துள்ளது. இதன் பரப்பு 2158 ச.கி.மீற்றர்களாகும். இம் மாவட்டத்தின் இயற்கை அமைப்பின் அடிப்படையில் இதனை ஆனையிறவுக்கு வடக்கேயுள்ள பகுதி, ஆனையிற வுக்குத் தெற்கேயுள்ள பகுதி, தீவுப்பகுதிகள் என மூன்றாகப் பகுத்து நோக்கலாம்.

யாழ்ப்பாணக் குடாநாடும், தீவுப்பகுதிகளும் சுண்ணக்கல் அடையல்களால் ஆக்கம் பெற்றவை ஆகும். யாழ்ப்பாணக் குடாநாடும் இலங்கையின் வடமேல் கரையோர வலயமும் 'மயோ சின்' எனப்படும் புவிச்சரிதவியற் காலத்திற் கடலின் கீழிருந்தன என்றும், அக்காலத்தில்தான் சுண்ணக்கற் பாறைகள் உருவாகின எனவும், பின்னர் பூமியின் அசைவால் மேலேழுந்தனவெனவும் அறியப்படுகிறது (E.J.Wayland & A.M.Davies: 1923:577-602). சுண்ணக் கற்பாறைகள் வெப்பம், மழை முதலியவற்றின் தாக்கு தல்களினால் சிதைவடைந்து மேற்பரப்பில் அதிக ஆழமற்ற மண்படையை உருவாக்கியுள்ளன. குடாநாட்டின் வட கரையோர மாகவும், புன்னாலைக் கட்டுவன், வசாவிளான் பகுதிகளிலும் இப் பாறைகள் பரவலாக வெளிப்பட்டுக் காணப்படுகின்றன. ஏனைய பகுதிகளில் அவை மேற்பரப்பு மண்படையினால் மூடப் பட்டு ஆழத்தில் அமைந்துள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் எப்பகுதியிலும் 50 அடிக்கு மேற்பட்ட உயரமான பகுதி கிடை யாது. அதேபோன்று கொக்குவில், கோண்டாவில் ஆகியவற்றிற் கிடையேயுள்ள நந்தாவில் பகுதி கடல் மட்டத்திலிருந்து சற்றுத் தாழ்ந்த பகுதியாகக் காணப்படுகிறது. இம்மாவட்டத்தின் சராசரி வெப்ப நிலை 81.5f.h ஆகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் மண்ணியல்பானது, செம்மண், நரைமண், உவர்மண், களிமண், வெண்மணல், சுண்ணக்கல் என்ற அமைப்பிற் காணப்படுகின்றது. குடாநாட்டின் செம்மண் மிகவும் வனப்பும் வளமும் வாய்ந்தது. அச்சுவேலி, மாவிட்டபுரம், பெரிய விளான், சங்கானை, சுதுமலை, நீர்வேலி என்னும் இடங்களை இணைக்கும் முக்கோண வடிவினைக் கொண்ட வலிகாமம் செம்மண் தரைப் பகுதியாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர் வளம் குறைவென்றே கூற வேண்டும். தரைக்கீழ் நீரைக் குளங்கள், கேணிகள், கிணறுகள் மூலமாகப் பெற்றே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படு கிறது. வற்றாத நீரூற்றுக்கள் பல இங்கு காணப்படுகின்றன. புத்தூரிலுள்ள 'நிலா வரை', குரும்பசிட்டியிலுள்ள 'பேய்க்கிணறு', ஊரெழுவிலுள்ள 'பொக்கணை', விளான்கிணறு, கட்டுடைக் கிணறு ஆகியன வற்றாத கிணறுகள் ஆகும். யாழ்ப்பாண மாவட் டத்தில் பெருங்காடுகளோ அன்றி மலைகளோ இன்மையால் பாய்ந்தோடும் ஆறுகளும் இல்லை. ஆயினும் யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் தொண்டை மானாறும், வழுக்கை ஆறும் உள்ளன. முன்னது உப்பாறு; பின்னது நன்னீராறு. மாரிகாலத்து மழைநீர் வடிந்தோடும் ஆறே வழுக்கை ஆறு. கட்டுவன் என்ற ஊரில் இதன் தொடக்கம் அமைகின்றது. கட்டுவனில் திரண்ட மழைநீர், தெல்லிப்பழை, அம்பனை, அளவெட்டி முதலான ஊர்களினுடாக ஓடி அராலிக் கடலோடு கலக்கின்றது. வளா + கை + ஆறு என்பது வளாக்கை ஆறு > வளுக்கைஆறு > வழுக்கைஆறு எனத் திரிபடைந்து வழங்குகிறது. வளா என்பது நீர்ப்பரப்பைக் குறிக்கும் சொல்லாகும்.

இவற்றைவிடக் குடாநாட்டுக்குத் தெற்கே இயல்பாய மைந்த பல நன்னீர்ச் சிற்றாறுகள் பூநகரி, கரச்சிப் பகுதிகளில் அமைந்துள்ளன. அவற்றில் பாலியாறு, பல்லவராயன்கட்டு ஆறு, மண்டிக் கல்லாறு என்பன பூநகரிக் குடாக் கடலிலும், அக்கராயன் ஆறு, கலாவலப்பு ஆறு, தட்டுவான், வடலி என்பன யாழ்ப்பாணக் கடனீரேரியிலும், கனகராயன் ஆறு, புலத்தியாறு, கொடிகத்தை ஆறு, பிரமந்தலாறு, தேரவிலாறு என்பன ஆனையிறவுக் கடனீ

ரேரியிலும், மருதப்பிலி, பேராறு இரண்டும் வங்காள விரிகுடாக் கடலிலும் வந்து கலக்கின்றன. இவை யாவும் வடகீழ்ப் பருவக் காற்று மழைக் காலத்தில் நீர் பாயும் ஆறுகளாகும்.

சமுதாய நிலை

யாழ்ப்பாண மாவட்டம் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது. ஈழத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களில் 42 வீதமானோர் இம் மாவட்டத்தினர் என்பது 1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரமாகும். அதன்படி இம் மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகை நிலையைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது:

இனம்	மொத்தம்	சமயம்	மொத்தம்	வீதம்
இலங்கைத் தமிழர்	792246	இந்துக்கள்	708004	85%
இந்தியத்தமிழர்	20001	இஸ்லாமியர்	14169	01.7%
சோனகர்	13757	றோமன் கத்தோலிக்கர்	95566	11.5%
பறங்கியர்	350	ஏனைய கிறிஸ்தவர்	9144	01.1%
சிங்களவர்	4615	பௌத்தர்	4068	00.5%
மலாயர்	46	ஏனையோர்	161	0.02%
ஏனையோர்	97			
மொத்தம்	**831112**	மொத்தம்	**831112**	**100%**

மூலம்: Census of Population and Housing, 1981

மத அடிப்படையில் நோக்கும்போது 85 வீதம் இந்துக்களும், இரண்டாவது நிலையில் கத்தோலிக்கர்களும் காணப்படுகின்றனர். கத்தோலிக்க மக்கள் யாழ்ப்பாண நகரின் கரையோரப் பகுதிகளிலும், ஊர்காவல்துறை, கரம்பன், மாதகல், சில்லாலை, பண்டத்தரிப்பு, விளான் முதலிய இடங்களிலும் பெரும்பான்மையோராக வாழ்கின்றனர். யாழ்ப்பாண மக்களின் சமுதாயநிலையை நோக்குகையில், மரபு வழிப்பட்ட பழைமைசார் சமுதாய அமைப்பு நிலையூன்றி இருப்பதைக் காணலாம். எனினும் அரசியல், பொருளியல், சமூகம், தொழில் சார்ந்த காரணிகளால் அச் சமுதாய அமைப்பின் கட்டுக் கோப்புக்கள் நெகிழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதும் உண்மையே. சமூக மாற்றத்துக் குரிய காரணிகளில் கல்வி மிகவும் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. ஆங்கிலக் கல்வியின் பயனாக யாழ்ப்பாண மக்கள் அரச பதவிகளில் உயர்நிலை பெறலா யினர். வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்வோர் தொகையும் 19ஆம் நூற்றாண்டின் கடைக்கூறு முதலாக அதிகமாகவே இருந்து வருகிறது. இதனால் பல்வேறுபட்ட சமூகங்களிடையே பொருண் மியச் சமன்பாடு ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

சொத்தும், சொத்துரிமைகளும் 'தேசவழமை' என்னும் மரபு வழிச் சட்டங்கள் மூலம் பேணப்பட்டு வருகின்றன. யாழ்ப் பாணச் சமூகத்தினரிடையே மணக்கொடை ஒரு 'பெரும் நோய்' போன்றே தொடர்ந்து வருகின்றது. திருமணம் பெரும்பாலும் ஒத்த சமூகத்தினருள்ளே நடைபெறுகின்றது. கலப்புத் திருமணங் களும் இப்போது இடம்பெறுகின்றன. பெரும் நிலக்கிழார் வேளா ளர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களது நிலங்களில் விவ சாயத் தொழிலாளர் தொழில் புரிந்து வாழ்வர். வணிக சமூகத் தினரான பலவகை மக்களும் தம்மைப் பொருள் வருவாயால் உயர்த்திக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிப் பாகுபாடு ஒழிந்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் ஒவ் வொரு ஊரிலும் பல்வகைக் குழுமத்தினர் வாழ்கின்றனர். அண்மைக்காலத் தமிழீழ அரசியல் கோட்பாடுகள் சமூகச் சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்துள்ளமையால் சாதியமைப்புக்கள் ஒழிக்கப்பட்டு வருகின்றன.

1983 இல் எடுக்கப்பட்ட புள்ளிவிபர மதிப்பீட்டின்படி சுமார் 8000 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த தாகவும், ஏறத்தாழ 5100 மீன்பிடிப் படகுகள் மீன் பிடித்தொழிலில்

ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் அறியப்படுகிறது. கரையோர மீன் பிடிப்பிலும், ஆழ்கடல் மீன்பிடிப்பிலும் மீனவர் ஈடுபட்டு வந்துள் ளனர். மீனவர்களுக்கு வசதியான முறையில் மயிலிட்டியில் மீன்பிடித்துறைமுகம் அமைக்கப்பட்டிருந்தது. குருநகரிலும், கொழும்புத்துறையிலும் சிறிய அளவிலான மீனவர் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இலங்கையில் 25 வீதமான மீன் யாழ்ப்பாண மாவட்டத்திற் பிடிக்கப்பட்டது (கா.ரூபாமூர்த்தி: 1983:123) என்ற செய்திகளும் நோக்கத்தக்கன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலே யாழ்ப்பாண மாவட்டத்திற் பல கைத்தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அறியப்படுகிறது. புடை வைக்குச் சாயம் ஊட்டுதல், பனம் கருப்ப நீரில் சீனி உற்பத்தி என்பன அப்போதைய கைத்தொழில்களாகும். வதிரியிலும் அல்லைப்பிட்டியிலும் ஒல்லாந்தர் காலத்தனவாகக் கண்டெடுக் கப்பட்ட மட்குழாய்கள் அங்கு சீனி உற்பத்தித் தொழில் நடை பெற்றமைக்குச் சான்றாகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் கனிப்பொருளான சுண்ணக் கற்களைப் பயன்படுத்தும் வகையில் காங்கேசன்துறையில் சுமார் 1500 தொழிலாளர்கள் வேலை புரியத்தக்க பெரியதொரு சீமெந் துத் தொழிற்சாலை அமைந்துள்ளது. ஆனையிறவில் கடல் வளத்தைப் பயன்படுத்தி உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலை ஒன்று தொழிற்பட்டு வந்துள்ளது. குடத்தனை, வல்லிபுரப்பகுதியிற் காணப்படும் வெண்மணலைப் பயன்படுத்திக் கண்ணாடித் தொழிற்சாலையும் முன்னர் இயங்கிற்று. மேலும் சவர்க்காரம், புடைவை, பாத்திரங் கள் முதலான பல்வகைக் கைத்தொழில்களும் இடம்பெற்றுள் ளன. வதிரியில் தோல் கைத்தொழில் மூலம் சப்பாத்து உற்பத்தி பெரிதும் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 77 இலட்சம் பனை மரங்கள் நின்றதாகக் கணக்கிடப்பட்டுள்ளது (கா. ரூபாமூர்த்தி: 1983:123-124). இந்த இயற்கை மூலவளத்தைப் பயன்படுத்தி 'பனம் பொருள் அபிவிருத்திச் சபை' பல்வகை உற்பத்திப் பொருட்களின் அடிப்படையில் தனது உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டு வருகிறது. 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டிலேற் பட்ட அரசியல், பொருண்மியம், சமூகம் சார்ந்த பல்வேறு காரணிகளால், யாழ்ப்பாணக் குடாநாட்டில் பலரும் தமது கைத் தொழில் நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டு

வந்தமையும், பின்னர் ஏற்பட்ட தேசிய விடுதலைப் போராட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளின்போது இவை அனைத்தும் சீரழிக்கப் பட்டதும் வரலாற்றுச் செய்திகளாகும்.

நிருவாகப் பிரிவுகள்

இலங்கை நிருவாக அடிப்படையில் 9 மாகாணங்களாக வும், 25 மாவட்டங்களாகவும் 242 உதவி அரசஅதிபர் பகுதி களாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமசேவகர் பிரிவுகளாக வும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தின் நிருவாகப் பொறுப்பும் அரசஅதிபர் செயலகத்தை (கச்சேரியை) நடுநிலைய மாகக் கொண்டு அரசஅதிபரின் (Government Agent) பொறுப்பின் கீழுள்ளது. அரசஅதிபர் ஒவ்வொருவருக்கும் உட்பட்ட மாவட்டம் பல உதவி அரசஅதிபர் பிரிவுகளைக் (Assistant Government Agent Divisions) கொண்டதாக அமைந்திருக்கும். ஊள்ளூராட்சி நிறுவனங்களாக வளர்ச்சி நிலையில் முறையே ஊராட்சிமன்றம் (Village Council), பட்டினசபை (Town Council), நகரசபை (Urban Council), மாநகரசபை (Municipal Council) ஆகிய நான்கு அமைப்புக்கள் உள்ளன. மேலும் இவை அனைத்தையும் உள்ள டக்கி மாவட்ட அபிவிருத்திச் சபையும் (District Development Council) செயற்பட்டு வந்துள்ளது.

இம் மாவட்டத்தின் தலைநகர் யாழ்ப்பாணம் ஆகும். இதனை யாழ்நகர் என்றும் வழங்குவர். இதனைச் சூழவுள்ள 20.2.ச.கி.மீ. பரப்புடைய பகுதி மாநகரசபை நிருவாகத்தைப் பெற்றுள்ளது. பருத்தித்துறை, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் நகரசபை நிருவாகமும், மானிப்பாய், பண்டத் தரிப்பு, சங்கானை, சுன்னாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், ஊரெழு, நெல்லியடி, ஊர்காவல்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் பட்டினசபை நிருவாகமும் அமைந்துள்ளன. ஏனைய இடங்கள் அனைத்தும் 44 ஊராட்சி மன்றங்களின் நிருவாகத்தின் கீழுள்ளன (See: Integrated Rural Development Plan, Jaffna District). யாழ்ப்பாண மாவட்டம் பதினாறு உதவி அரச அதிபர் பிரிவுகளாக வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடம்பற்றி ஆராயப் படும்போது அவற்றுக்குரிய சுருக்கக் குறியீடுகள் ஆங்காங்கே நூலில் தரப்பட்டுள்ளன.

உதவி அரசஅதிபர் பிரிவுகளின் சுருக்கக் குறியீடுகள்:-

1.	நெடுந்தீவு	(நெ.தீ)
2.	தீவுகள் வடக்கு	(தீவு. வ)
3.	தீவுகள் தெற்கு	(தீவு.வ.தெ)
4.	யாழ்ப்பாணம்	(யாழ்)
5.	நல்லூர்	(நல்)
6.	வலிகாமம் தென்மேற்கு	(வலி.தெ.மே)
7.	வலிகாமம் மேற்கு	(வலி.மே.)
8.	வலிகாமம் தெற்கு	(வலி.தெ.)
9.	வலிகாமம் வடக்கு	(வலி.வ.)
10.	வலிகாமம் கிழக்கு	(வலி.கி.)
11.	வடமராட்சி வடக்கு, கிழக்கு	(வடம.வ.கி)
12.	தென்மராட்சி	(தென்ம.)
13.	வடமாரட்சி தெற்கு, மேற்கு	(வடம.தெ.மே)
14.	பூநகரி	(பூ)
15.	பச்சிலைப் பள்ளி	(பச்)
16.	கரச்சி	(கர)

யாழ்ப்பாணம் - பெயர்த் தோற்றம்

"எண்சா ணுடம்பிற்கு சென்னி சிறந்திடும்
என்றே உரைப்பது போல
பொன்சேரிலங்கைச் சிரமெனவே வரும்
புண்ணிய மோங்கிடும் யாழ்ப்பாணம்".
(தாலவிலாசம்:107)

இவ்வாறு சோமசுந்தரப் புலவர் யாழ்ப்பாணத்தைப் புகழ்ந்து பாடினார். யாழ்ப்பாணம் ஈழத்தாயின் தலை எனப் போற்றப்படுவது. இத் தலையின் கூந்தல் போன்றமைந்த பகுதி வடமராட்சி கிழக்காகும். இலங்கையின் தலைப்பகுதியின் பின் பக்கமாக, கழுத்துக்கு மேலே ஆனையிறவு அமைந்து கிடப்பதை இலங்கைப் படம் காட்டுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தின் எழில் மிகு நகராக விளங்குவது யாழ்ப்பாணம். இது யாழ் + பாணம் ஆகிய இரு தூய தமிழ்ச் சொற்களின் இணைப்பாக அமைந்த இயற்றமிழ்ப் பெயரென்க. தமிழர் பண்பாட்டில் இவ்விரு சொற்களும் மிகவும் ஆழமுறப் பதிந்தவையாகும்.

யாழ்

தமிழர் பண்பாட்டிலே யாழும், யாழிசையும் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டவை. தொல்காப்பியர் கருப்பொருள் பற்றிக் கூறும்போது யாழின் பகுதிகள் (தொல்: அகம்:18) பற்றிக் விளக்குகிறார். சுவாமி விபுலாநந்தர் (1947:22-23) யாழ்நூலில் ஐவகை நிலங்களுக்குமுரிய யாழ்வகைகள், அவற்றுக்குரிய பண் வகைகள், யாழ் வாசிக்கப்படும் நேரங்கள் என்பன பற்றி விரிவாகக் கூறினார். யாழிசைக்கு யானையும் கட்டுப்படும் என்பர். உதயணன் 'கோடபதி' என்னும் யாழை வாசித்து மதங்கொண்ட யானையை அடக்கினான் என்பது பெருங்கதை கூறும் இலக்கியச் செய்தி ஆகும். யாழ்க் கருவி பண்டை நாளிலே தெய்வம் போலப் போற்றப்பட்டது. மாதவி கோவலனிடத்து யாழை வாங்கிய போது, "இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ் கையிற் றொழுது வாங்கி.." (சிலம்பு: கானல்வரி:4) என இளங்கோ பாடுவதால் யாழ் தொழப்படும் தகுதி கொண்டதென்பது அறியப் படுகிறது. யாழுக்குரிய தெய்வம் 'மாதங்கி ' என சீவகசிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் கூறுவர். தமிழ்நாட்டைப் போலவே வேறு பல நாடுகளிலும் யாழ்க்கருவி தெய்வமாகப் போற்றப் பட்டமை பற்றிய செய்திகளும் அறியப்படுகிறன.

பாணர்

"பாணர் பறையன் துடியன் கடம்பனென்றிந் நான்கல்லது குடியுமில்லை" எனத் தொல்காப்பியர் (புறத்திணையில்-535) குறிக்கும் நான்கு பெயர்களுள்ளே மூன்று பெயர்கள் இசைக் கருவியாற் பெற்ற பெயர்களாகும். பழந்தமிழ் நாட்டிலே இசை யறிவு பெருகப் பரவி இருந்ததென அறியப்படுகிறது. பொரு நராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய நூல்கள் பாணருடைய வரன் முறை யினை விரிவாகக் கூறுகின்றன. திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார், திருப்பாணாழ்வார், பாணபத்திரர் என்னுந் தெய்வப் பாணர்கள் இடைக்காலத்தில் வாழ்ந்து இறைவனருள் பெற்றவர் களாவர். இசைவாணரை அரசர் முதலியோர் நன்கு ஆதரித்தனர். பாணர் பொன்னாலாகிய தாமரைப் பூவையும், விறலியர் பொற்

கலன்களையும் பரிசாகப் பெற்றுச் சிறப்புடன் விளங்கினர். பாடலில் வல்லாருக்கு நாடும், ஊரும் பரிசாகப் பலர் வழங்கினர்' (சு.வித்தியானந்தன்:1954:312-314). இப் பின்னணியில் யாழ்ப் பாணம் என்ற பெயர் விளக்கமும் ஆராயப்பட வேண்டியதாகும்.

யாழ்ப்பாணன் > யாழ்ப்பாணம்

யாழிசைப்பாணர் மரபினனான யாழ்பாடி என்பவன் நர சிங்கராசனைப் பாடி மணற்றியைப் பரிசாகப் பெற்றான் என்பதும், அவ்விடமே பின்னாளில் யாழ்ப்பாணம் என வழங்கப்படுமிடம் என்பதும் மரபுவழியாக வழங்கி வரும் செய்திகளாகும். இது பற்றி யாழ்ப்பாண வரலாற்றுத் தமிழ் நூல்களும் மரபுக்கதை களும் விளக்கம் கூறுகின்றன. கைலாயமாலை இந் நிகழ்வு பற்றிக் கூறும் பகுதி ஈண்டு நோக்கத்தக்கதாம்:

> "பாவலர்கள் வேந்தன் பகருமியாழ்ப் பாணன்
> காவலன்றன் மீது கவிதைசொல்லி - நாவலர்முன்
> ஆனகவி யாழி னமைவுற வாசித்திடலும்
> மானபரன் சிந்தை மகிழ்வாகிச் - சோனைக்
> கருமுகி னேருங் கரன் பரிசிலாக
> வருநகர மொன்றை வழங்கத் -தருநகரம்
> அன்றுமுதல் யாழ்ப்பாண மானபெரும் பெயராய்
> நின்ற பதியி னெடுங்காலம் .. .. .."
>
> (கைலாயமாலை:59-67)

இந்நூற் செய்திகளை அடியொற்றி எழுதப்பட்ட யாழ்ப் பாண வைபவமாலையிலே (பக். 23-24) இக் கதை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> 'அக் காலத்திலே சோழ நாட்டிலிருந்து இரண்டு கண்ணும் குருடனாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கடக நகரிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்க மகாராசன் பேரிற் பிரபந்தம் இயற்றி, யாழ் வாசித்துப் பாடினான். அரசன் அதைக் கேட்டு மகா சந்தோசமாய் அவனுக்கு பரிசிலாக இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடர் என்னும் இந் நாட்டைக் கொடுத்தான். யாழ்ப்பாணன் இதற்கு யாழ்ப்பாணம் என்று பெயரிட்டு இவ்விடத்தில் வந்திருந்து, வடதிசையில் சில தமிழ்க் குடிகளை அழைப்பித்துக் குடியேற்றினான்'.

'மணற்றிடர்' என்ற பெயர் யாழ்பாடி என்ற கதையுடன் தொடர்புடையது. இக் கதை மிகப் பிந்திய காலத்தது என்கிறார் சுவாமி ஞானப்பிரகாசர். அந்தகக்கவி வீரராகவக்கவியையும் பாணர் வழிவந்த யாழ்பாடியையும் ஒருவராகக் கருதியதாலேயே அவர் இவ்வாறு கூறினார். மேலும் செங்கடகல நகரின் தோற்ற மும் பிற் காலத்ததாக இருப்பதும் அவர் கூற்றுக்குத் துணையா கலாம். பண்டைக் காலம் முதலாகத் தமிழ் நாட்டிலிருந்து பல் வேறு குலத்தினரும் தொழில்துறை மாந்தரும் ஈழத்தில் குடியேறி யுள்ளனர் என்பது வரலாற்றுச் செய்தி. அவ்வகையில் 'யாழ்ப் பாணர்' என்ற பிரிவினர் மணற்றிடர் என்ற பகுதியில் குடியேறி வாழ்ந்து, தம் குலப்பெயரையே இவ்விடத்திற்கு இட்டு வழங்கி யிருத்தல் இடப்பெயர் ஆய்வு வழியாகப் பெறப்படும் உண்மை யாகும். எனவே யாழ்ப்பாணர் + அகம் = யாழ்ப்பாணம் என மக்கட் பெயரடியாக இவ்விடப்பெயர் தோற்றம் பெற்றதென்பது பொருத்தமாகும்.

இவ்வாறாக யாழ் + பாணர் + அகம் என்னும் தனித் தமிழ்ச் சொற்கள் இணைந்து ஆக்கம் பெற்ற தூயதமிழ்ப் பெயரை சுவாமி ஞானப்பிரகாசர் (1928:17-18) சிங்களச் சொல்லா கிய 'யாப்பாபட்டுன' என்பதன் திரிபென்று கூறினார். இதே கருத்துடையவரே பரணவிதான (S.Paranavithana:1961:202) என்பது குறிப்பிடத்தக்கது. இது பற்றி கா. இந்திரபாலா (1970: 101) கூறும் கருத்து ஈண்டுப் பொருத்தமாகிறது:

> 'யாழ்ப்பாணம் என்னும் பெயர் சிங்களப் பெயர் ஒன்றின் திரிபு என்று திட்டவட்டமாக நிறுவுவதற்குச் சான்றுகள் போதா. வெறும் வெளித்தோற்ற ஒற்றுமையைக் கொண்டு இரு இடப் பெயர்களுக்கிடையில் தொடர்பினை ஏற்படுத்தி, ஒன்றிலிருந்து மற்றது பெறப்பட்டது என்று கூறுவது, இடப்பெயர் ஆராய்ச்சி முறைக்கு மாறானதாகும். ஓர் இடப்பெயருக்குச் சரியான விளக்கத்தைக் கொடுப்பதற்கு அப்பெயரின் மிக முற்பட்ட வடிவங்களைப் பழைய ஆதாரங்களில் இருந்து பெற்றுக் கொள்வது அவசியமாகும். தற்காலத்தில் ஒரு வடிவத்தை அடைந்துள்ள பெயர் ஆரம்பத்திலும் அதே வடிவத்துடன் இருந்திருக்க வேண்டுமென்று பொதுவாகக் கொள்ளமுடியாது."

யாழ்ப்பாணத்திற்கு 'மணவை' என்ற பெயரும் இருந்த தாகக் கூறப்படுகிறது. கி.மு. பதினைந்தாம் நூற்றாண்டில் யாழ்ப் பாணத்திலே நாகர்களுடைய அரசு இருந்தமைக்குச் சான்றாகப் பாரதக் கதையைத் தொடர்புபடுத்துகிறார் செ. இராசநாயகம் (1926:33). இவர், தம் நூலிற் கலிங்கத்திற்கு அப்பாலுள்ள மணிபுரம் என்னுமிடத்தில் வசித்த இளவரசி ஒருத்தியை அருச் சுனன் மணம் புரிந்த செய்தியைச் சான்றாகக் கொண்டு மணி புரத்தை யாழ்ப்பாணம் என அடையாளம் காட்டியுள்ளார். கி.பி. 14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட செகராசசேகர மாலை என்ற சோதிட நூலிலே 'மணவை' என்ற பெயர் வருமாறு கூறப் படுகிறது:

'மன்னர்மன்னு செகராசசேகரன் மணவையாரிய வரோதயன்"
(பழவினைப் படலம்:10)
'தென்டிரை சூழ் மணவையர்கோன் செகராசசேகரமன்"
(யாத்திரைப் படலம்: 31)

இந்த மணவை மணிபுரத்தினின்று தோன்றியது என்றும், புலவர்கள் மலிபுரம் அல்லது மணவூர் என்னும் பெயரை மணவை எனச் சுருக்கினர் என்றும் இராசநாயகம் (1926:7) கூறுவதும் நோக்கத்தக்கது. ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்குணகரை நாடு, ஏழ்குறும்பனைநாடு என்பன கடற்கோள்களால் அழிந்த தமிழகத்தின் பகுதிகள் எனக் கருதப்படுகின்றன. இவற்றில் வரும் 'பனைநாடு' என்பது யாழ்ப்பாணத்தைக் குறித்தது என்ற கருத்தும் நிலவுகிறது. பழந்தமிழ் நாகரிகத்தில் குமரிக் கண்டம் 49 நாடுகளைக் கொண்டிருந்ததென்றும், பின்னாளில் அவை கடற்கோள்களால் அழியுண்டு போயின என்றும் இறையனார் அகப்பொருளுரை கூறுகின்றது. அவற்றுள் இடம்பெறும் 'ஏழ் குறும்பனைநாடு' என்பதன் ஒரு பகுதியே பனைநாடு. பனைநாடு ஏழு பெரும் மாநிலங்களாக இருந்தது. அதில் ஒரு நிலமே யாழ்ப்பாணத்தை உள்ளடக்கிய நிலப்பரப்பாகும். இதன் சுற்றா டலைக் கடல் கொண்டதால் அஃது அழிந்துவிட்டது. 'பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள..' (சிலப்பதிகாரம்:காடு காண்காதை:19-20) என்ற பாடலாற் கடற்கோள் பற்றிய செய்தியும் அறியப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைச் சிலர் 'ஏழ்ப்பாணம்' என உச்சரிக்கக் கேட்கலாம். 'ஏழ்பனைநாடு' என்பதிற் சுட்டப்படும் ஏழ் என்பது ஈழத்துடன் தொடர்புடையதாகலாம். ஏழ்பனைநாடு என்ற தொடர் யாழ்ப்பாணத்தையே குறிக்கின்றது என்ற கருத்தும் உள்ளது (A.Veluppillai:1980:62-63). ஏழ்பனை என்பதே யாப்பானே எனச் சிங்களத்திலாகி, அதனிலிருந்து யாழ்ப்பாணம் எனத் தமிழாக்கப் பட்டிருக்கலாம் எனவும் சிலர் கருதுவர். கடல்கோள்களால் அள்ளுண்ட பஃறுளியாறும், குமரிக்கோடும் அவற்றிடைப்பட்ட குமரி நிலப்பரப்பும் போக, எஞ்சிய பகுதியே ஏழ்பனை நாடாம் யாழ்ப்பாணமும் அதனோடொட்டிய தென்னிலங்கையுமாகும். தென்னிலங்கை இடப்பெயர்கள், அங்கு வாழ் மக்களின் ஆட் பெயர்கள் ஆகியனவற்றை ஆராயும்போது இவ்வுண்மை புலப் படுகின்றது.

யாழ்ப்பாணம் என்ற பெயர் பற்றி ஆராயும்போது 'நாக தீவு' என்ற பெயரையும் நோக்குதல் வேண்டும். 'இலங்கையின் பண்டைக் காலக் குடிகளான நாகர் நாக வழிபாட்டை மேற் கொண்டிருந்தனர். மகாவம்சத்திலோ அல்லது வேறு எந்த ஒரு நூலிலோ நாகர் எப் பகுதியில் வாழ்ந்தார்கள் எனக் கூறப்பட வில்லை. நாக அரசர்களிடையே நடைபெற்ற இரத்தின அரசி ருக்கை தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் புத்தர் நாகதீவுக்கு வந்தார்' என மகாவம்சம் (1:47-70) கூறுகிறது. நாகர் வாழ்ந்த இடம் நாகதீவு என்கிறார் எச். பாக்கர் (H.Parker: 1909:14). ஆயினும் நாகதீவு என்பது எந்த இடத்தைக் குறித்தது என்பது எவருக்கும் திட்டவட்டமாகக் கூற முடியாதிருப்பதால் அதனைப் பயன்படுத்திக்கொண்டு பலரும் பலவித கருத்துக் களைத் தெரிவித்தனர். நாகதீவு என்பது யாழ்ப்பாணக் குடா நாட்டைக் குறித்தது என்கிறார் நிக்கலஸ் என்ற அறிஞர் (C. W. Nicholas:1959:83).

யாழ்ப்பாணம் என்பது தனித்தமிழ்ப் பெயரென்பதும், அதன் பெயர்த் தோற்றத்தில் மணற்றிடர், மணவை, யாழ்பாடி, ஏழ் பனைநாடு, நாகதீவு என்ற பெயர்களுடனான விளக்கங்கள் சேர்த்துக் கூறப்படுகின்றன என்பதும், சிலர் 'யாழ்ப்பாணம்' என்ற பெயர்த் தோற்றத்திற்குச் சிங்கள மூலம் கற்பிக்க முயன்ற தும் மேலே விளக்கப்பட்டன.

'யாழ்ப்பாணம்'-இதன் பழைய பெயர் வடிவங்கள்

காலம்	வடிவம்	சாசனம்/ இலக்கியம்
கி.பி.1435	இஆழ்ப்பாணாயந்-பட்டினம்	திருமணிக்குழிக்-கல்வெட்டு
கி.பி.1450	யாழ்ப்பாணாயன்பட்டினம்	திருப்புகழ்
“	யாபாபடுன	ஸந்தேஸ நூல்கள்
15 ஆம் நூ.டு	யாபாபடுன	மதகொடஸன்னஸ
கி.பி.1532	யாழ்பாணம்?	பாறைபட்டிக்-கல்வெட்டு
16 ஆம் நூ.டு	யாழ்ப்பாணம்	வையாபாடல்
16 ஆம் நூ.டு	யாட்பாணம்	வையாபாடல்
16 ஆம் நூ.டு	Jafanapatam	Barros
16 ஆம் நூ.டு	Jafanapatao	Couto
கி.பி.1603	யாட்பாணம்	பரராசசேகரனின் - சிதம்பரப் பட்டயம்
கி.பி.1604	யாள்பாணம்	சேதுபதி பட்டயம்
கி.பி.1665	Jaffnapatem	Van Goens
கி.பி.1685	யாப்பாணபட்டணம்	சேதுபதி பட்டயம்
கி.பி.1680	Jafanapatao	Queyroz
கி.பி.1680	Jafanapatam	Queyroz
கி.பி.1680	Jafaana-on Putalam	Queyroz
கி.பி.1680	Jafanapatanoture	Queyroz
17 ஆம் நூ.டு	யால்பாணம்	வன்னி-உபத (ஏட்டுப்பிரதி)
17 ஆம் நூ.டு	யாழ்ப்பாணம்	கயிலாயமாலை.
கி.பி.1715	இயல்பானதேசம்	சேதுபதிபட்டயம்
கி.பி.1730	யாப்பாணம்	சவுந்தரராஜபுரம்-பட்டயம்
கி.பி.1734	யாட்ப்பாணதேசம்	சேதுபதிபட்டயம்
கி.பி.1734	யாட்பாணம்	சேதுபதிபட்டயம்
கி.பி.1737	இயாட்பாணயன் பட்டணம்	சேதுபதிபட்டயம்
கி.பி.1752	யாழ்பாணம்	சேதுபதிபட்டயம்
கி.பி.1764	யால்ப்பாணம்	சேதுபதிபட்டயம்
கி.பி.1779	யாபாணபட்டணம்	சேதுபதிபட்டயம்
கி.பி.1784	யாட்பாண தேசம்	சேதுபதிபட்டயம்
கி.பி.1784	யாள்பாணபட்டணம்	சேதுபதிபட்டயம்
18 ஆம் நூ.டு	யாழ்ப்பாணம்	யாழ்ப்பாண-வைபவமாலை

மூலம்: கா.இந்திரபாலா (1972)

வரலாற்றுப் பின்னணி

காலத்திற்குக் காலம் இங்கு நடைபெற்ற தென்னிலங்கைப் படையெடுப்புக்களும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய மேலாண்மை அரசியல் நடவடிக்கைகளும் இப் பகுதியின் வரலாற்றுப் பெருமை மிக்க கலைச் செல்வங்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் அழித்துள்ளன. இதனால் இப் பகுதியின் வரலாற்றை எழுத முற்படும் வரலாற்றாய்வாளர் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

தென்னாசியாவில் பெருங்கற்காலம் முதலாக மனித சமூகங்கள் வாழ்ந்து வரும் பகுதிகளுள் யாழ்ப்பாணக் குடா நாடும் ஒன்றாகும் என்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 1970 களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டு வரும் தொல்லியல் தள புதை பொருட்கள், வல்லிபுரத்திற் பெறப்பட்ட பொற்செப்பேடு, ஆனைக் கோட்டையிலும், கந்தரோடையிலும் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகள் என்பன வரலாற்றுச் சான்றுகளாகக் கிடைத்துள்ளன. வடமாகாணத்தின் பல இடங்களின் மேற்றளத்தில் தொல்லியற் சான்றுகள் காணப்படுகின்றன. அவ்விடங்கள் அனைத்திலும் முழு நிலையிலான அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படும்போது, யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகப் பழைமையான வரலாற்று உண்மைகள் விளக்கம் பெறக்கூடிய வாய்ப்பு உண்டு.

மகாவம்சம், சூளவம்சம், தீபவம்சம் முதலிய பாளி நூல்களிலே நாகதீபத்தை நடுநிலையமாகக் கொண்ட புத்த மத நெறிப்பட்ட செய்திகளே கூறப்பட்டுள்ளன. இப் பகுதியின் மரபு வழி வரலாற்றைக் கூறும் தமிழ் நூல்களாகக் கைலாய மாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை, இராஜமுறை முதலிய நூல்களுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு வட இலங்கை பற்றிய குறிப்பிடத்தக்க வரலாற்றாய்வு நூல்கள் சி. பத்மநாதன் (1978); பொ. இரகுபதி (1983); க. சிற்றம்பலம் (1994); கா. இந்திரபாலா (1972) ஆகியோரால் எழுதப்பட்டுள்ளன. மகாவம்சத்தில் ஜம்புத்துறை பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. இத் துறைமுகத்தினூடாக, தேவநம்பியதீசன் அசோகனுக்குப் பரிசுப்பொருள் அனுப்பினான் என்றும், சங்கமித்தை என்னும்

பிக்குணி வெள்ளரசுக் கிளையுடன் இங்கேயே வந்து இறங்கினாள் என்றும், இங்கிருந்து அநுராதபுரம் நோக்கி அமைக்கப்பட்டிருந்த பெருந்தெருவினூடாக அப் போதிமரக் கிளையை எடுத்துச் சென்றனரென்றும் கூறப்பட்டுள்ளது (மகாவம்சம்:20:25-26). எனவே பண்டைய நாள் முதலாக யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையின் பெருநிலப் பரப்புடன் பெருந் தெருவினால் இணைக்கப்பட்டிருந்தது என்பது புலனாகின்றது.

வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவ மாலை முதலிய நூல்கள் யாழ்ப்பாண வரலாற்றைப் பல்வேறு மரபுவழிக் கதைகளுடனும், குடாநாட்டின் பல இடப்பெயர்களுட னும் இணைத்துக் கூறுகின்றன. விஜயனது வருகை(கி. மு.483) தொடக்கம் யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கேயர் கைப்பற்றும் வரையிலுள்ள (கி.பி.1619) வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்ற இடங்கள் யாவும் இந் நூல்களில் விளக்கம் பெற்றுள்ளன. இதிகாசங்களிலும் கந்தபுராணத்திலும் யாழ்ப்பாணக் குடாநாடு பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. நீண்ட காலமாக யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றுக்குப் பாளி நூல்களில் உள்ள கட்டுக்கதைகளையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. கடந்த சில ஆண்டுகளாக நடத்தப்பட்ட தொல்லியல் ஆராய்ச்சி யின் விளைவாக இந்நிலை மாறி இன்று இந்நிலப் பகுதியின் பண்டைக் காலம் பற்றிய நம்பகமான வரலாற்றுச் சான்றுகள் பெறப்பட்டுள்ளன. சிறப்பாக ஆனைக்கோட்டையில் 1980இல் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி ஒரு புதிய வரலாற்றுப் பக்கத் தையே தொடக்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங் கையின் பல பகுதிகளிலும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு பெருங்கற் பண்பாடு (Megalithic culture) பரவியிருந்தமை அறியப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலும் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் ஒரு பொதுப் பண்பாடு பரவியிருந்ததென இப்பொழுது நிறுவப்பட்டுள்ளது. இது பற்றிப் பேராசிரியர் பரணவிதான கூறும் கருத்து ஈண்டுப் பொருத்தம் நோக்கித் தரப்படுகிறது:

> 'These Megalithic sites and urn fields are found through - out the regions inhabited by Dravidian speaking people. The burial customs to which they bear witness are referred to in early Tamil literature. It is therefore legitimate to infer that the people who buried their dead dolmens and used as well as in large earthen ware, jars were Dravidians".
>
> (Paranavitana:1967:187)

கந்தரோடை, ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சிச் சான் றுகள் உரோமர்கள் யாழ்ப்பாணத்தில் நடத்திய வணிகத் தொடர்பு களைக் காட்டுகின்றன. அண்மைக் காலங்களில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, வல்லிபுரம் முதலாம் பழைய நகரங்களிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிச் சான்றுகளால் யாழ்ப் பாணக் குடாநாட்டிலே கி.மு.1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் முதலாக மக்கட் குடியிருப்புக்கள் இருந்து வந்துள்ளமை நிறுவப்பட்டுள்ளது. இதுவரை கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு கந்தரோடையே பண்டைக் காலக் குடியிருப்பின் நடு நிலையமாக இருந்திருக்க வேண்டும் எனவும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணப் பகுதியிலே தொடர்ச்சியான பழைய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கு மாறில்லை. கி.பி. 13ஆம் நூற்றாண்டி லிருந்தே யாழ்ப்பாண அரசு பற்றித் தொடர்ச்சியான வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. வட இலங்கையிலே ஒரு தனித் தமிழரசு இருந்தது என்பது வரலாற்றுண்மை. யாழ்ப்பாண அரசின் தோற்றம் கிறிஸ்துவுக்கு முற்பட்டது என முதலியார் இராசநாயகம் (1926) கூறுகிறார். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசு வலிமை மிகுந்து காணப்பட்டது என்ற கருத்துடையவர் சுவாமி ஞானப்பிரகாசர் (யாழ்ப்பாண வைபவ விமரிசனம்). தொடர்ச்சியானதோர் அரச மரபினர் (ஆரியச்சக்கரவர்த்திகள்) கி.பி.1250 -1620க்கு இடைப்பட்ட காலத்தில் பரராசசேகரன், செகராசசேகரன் என்ற அரச விருதுப் பெயர்களுடன் ஆட்சி செய்திருக்கிறார்கள்.

வடமாகாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் தமிழரசு 13ஆம் நூற்றாண்டு முதலாக நிலைத்திருந்தபோது அவர்களது தலைநகராகச் சிங்கைநகர் விளங்கிற்று. அப்போதும் யாழ்ப் பாணம் பற்றிய செய்தி இல்லை. திருப்புகழிலும், கி.பி.1435 ஆம் ஆண்டிற்குரிய தமிழகத்துத் திருமணிக்குழிக் கல்வெட்டிலும், யாழ்ப்பாணம் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கள இலக் கியத்தில் 'யாப்பாபட்டுன (யாழ்ப்பாணப் பட்டினம்) என்ற வழக்குக் காணப்படுகிறது. தென்னிந்திய இராமநாதபுர மாவட்ட சேதுபதி மன்னர் கல்வெட்டுக்களிலும் யாழ்ப்பாணம் என்ற வழக்குக் காணப்படுகிறது.

13ஆம் நூற்றாண்டளவிலே தமிழரசின் தலைநகர் நல்லூருக்கு மாற்றப்பட்டுள்ளது. போர்த்துக்கேயர் 16ஆம் நூற்றாண்டில் வட இலங்கைக்கு வந்தபோது யாழ்ப்பாண மன்னருடைய அரண்மனை நல்லூரில் இருந்தது. போர்த்துக்கேயர் நல்லூர் அரசை ஜவ்னா-பட்டோ (Jaffna Patao) என வழங்கி வரலாயினர். தமிழ் வழக்காகிய யாழ்ப்பாணப் பட்டினம் அல்லது யாழ்ப்பாணப் பட்டணம் என்பதே 'ஜவ்னா-பட்டோ' என மாற்றப்பட்டிருக்க வேண்டும். போர்த்துக்கேயர் கோட்டை அமைத்து ஆட்சியை நிலைபெறச் செய்த இடம் (தற்போதுள்ள யாழ்நகர்) பிற்காலத்தில் யாழ்ப்பாணம் என்ற பெயரினைப் பெறுவதாயிற்று. போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு மேற்கேயுள்ள கொழும்புத்துறை அவர்களால் துறைமுகமாகப் பெரிதும் பயன்படுத்தப் பட்டது. எனினும் யாழ்ப்பாண நகர் பற்றிய செய்திகள் 15 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவாகவே கிடைக்கின்றன. 1619 இல் யாழ்ப்பாண நகர் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்படுவதாயிற்று. 15.08.1620 இல் யாழ்ப்பாணத்திற் சிறிய அளவிலான கோட்டை கட்டும் வேலை போர்த்துக்கேயத் தளபதி பிலிப் ஒலிவேரா (Philippe de Oliveira) என்பவனால் மேற்கொள்ளப் பட்டது. யாழ்ப்பாணம் 1621இல் குடாநாட்டின் தலைநகராக மாற்றப்பட்டது. 1624இல் யாழ்ப்பாண நகரின் அமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டன. தேவாலயங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள் என்பன கட்டப்பட்டன. 1627இல் ஏற்பட்ட பெரும் புயல் இவற்றுக்குப் பெருஞ்சேதம் உண்டாக்கிய போதிலும், 1632 இல் யாழ்நகர அமைப்பு வேலைகள் முற்றாக்கப்பட்டன.

1658இல் போர்த்துக்கேயரிடமிருந்து யாழ்ப்பாணத்தை டச்சுக்காரர் கைப்பற்றி, மீண்டும் யாழ்ப்பாணக் கோட்டையைப் பயன்படுத்திக் கொண்டனர். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் (1658-1796) யாழ்நகரின் பரப்பு மேலும் விரிவாக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் (1796 - 1948) யாழ்ப்பாணம் வட மாகாணத்தின் தலைநகராக மாற்றப்பட்டதோடு, முழு இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாகவும் திகழ்வதாயிற்று. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மேலும் பல தேவாலயங்கள், பாடசாலைகள், இல்லங்கள், வணிக நிலையங்கள் ஆகியவை கட்டப்பட்டு நகரம் வளரத் தொடங்கியது. 1902இல் காங்கேசன் துறையிலிருந்து யாழ்ப்பாண நகரம் வழியாக சாவகச்சேரி வரை தொடர்வண்டிப் பாதை திறக்கப்பட்டது. 1905இல் அது அநுராதபுரம் வரையும் அமைக்கப்பட்டு, கொழும்புப் பாதையுடன் இணைக்கப்பட்டது. 1923இல் யாழ்ப்பாணத்தில் நகர மாவட்ட சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பின்பு அது 1940 இல் நகரசபை என மாற்றப்பட்டு, 1948இல் மாநகர சபை ஆக வளர்ச்சி பெற்றது.

இடப்பெயர்களும் வரலாற்று உண்மைகளும்

இடப்பெயர் ஆய்வின் பயனாக வரலாற்றில் அறியப் படாத, தெளிவற்ற பல விடயங்கள் விளக்கம் பெறுதற்குரிய வாய்ப்புகள் உண்டென்ற நிலையில் வரலாற்றுச் சான்றுகளில் இடப்பெயர்களும் பங்களிப்புச் செய்கின்றன. இக் கருத்தை இந்திய இடப்பெயர் அறிஞர் ரகுபதி கெம்துர் வருமாறு குறிப் பிடுதல் நோக்கத்தக்கது:

> " Place names of a region speak about the geographical peculiarities and historical or cultural endowments of people. It has been aptly remarked that place names do speak when history becomes silent" (Raghupati Kemtur:1972:49)

இதிகாசங்களும் காப்பியங்களும் பல இடப்பெயர் களைத் தோற்றுவித்துள்ளன. தலபுராணங்களையுடைய இடங் களின் பெயர்கள், தொன்மைக் கதைகளின் (Myths) அடிப்படை யிலான பெயர்க் காரணங்களைக் கொண்டுள்ளன. இன்னுஞ் சில இடப்பெயர்களுக்கு வரலாற்றுச் சாயல் சார்ந்த கட்டுக்கதை களின் அடிப்படையில் விளக்கம் கொடுக்கப்படுகின்றது. இந் நிலையில் மட்டுமன்றி ஒவ்வொரு நாட்டினது அரசியல், சமய, சமூக, பொருண்மிய, வரலாற்றுச் செய்திகளும் அவ்வந் நாட்டி னது இடப்பெயர்களைத் தோற்றுவித்துள்ளமை இடப்பெயராய் வின் மூலம் அறியப்படுகின்றது. அன்றியும், வரலாற்றுக் காலத் துக்கு முற்பட்ட வரலாற்றுண்மைகளை நிருபிக்கும் வகையிலும் இடப்பெயராய்வு வழி நடாத்திச் செல்வதை இத்துறை ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

ஈழத்தின் பண்டைய வரலாறு பற்றிய பல்வேறுபட்ட கருத்துக்களை அகழ்வாராய்ச்சி இன்று தெளிவுபடுத்தி வரு கின்றது. புத்தளம் மாவட்டத்தில் பெருங்கற்பண்பாட்டைச் சேர்ந்த

மக்கட் குடியிருப்பிடமாகப் பொன்பரிப்பு என்ற இடம் அடையாளம் காணப்படுவதோடு, இது தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு ஆகிய தொல்லியல் தளங்களுடன் ஒப்புடைய தென்பது நிறுவப்பட்டுள்ளது. இவற்றுடன் யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள கந்தரோடை, ஆனைக்கோட்டை முதலிய தொல் லியற் தளங்களிற் பெறப்பட்ட தொல்லியற் சான்றுகளும், அவ் விடப்பெயர்களும் வரலாற்றுண்மைகளைத் தரவுபடுத்தும் சான்று களாகின்றன. 1980இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புதை பொருள் ஆய்வுக்குழு ஆனைக்கோட்டையில் நடாத்திய ஆய்வு களின்மூலம் பெருங்கற் காலப் பண்பாட்டுச் சின்னங்கள் (Megalithic remains) அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இங்கு காணப்பட்ட ஈமத் தாழிகளைப் (Urnburials) போன்று, மன்னார், மட்டக்களப்பு, அநுராதபுரம், மாத்தளை, அம்பாறை, திஸ்ஸமகறகமை முதலிய பல இடங்களிலும் ஈமத் தாழிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சியில் கிடைத்த சான்றுகள் உறையூர், காவிரிப்பூம் பட்டினம் ஆகிய இடங்களிற் கண்டு பிடிக்கப்பட்ட சான்றுகளுடன் ஒத்துக் காணப்படுவதன்மூலம் பண்டைத் தமிழரின் பரம்பலும் வாழ்வும் வளமும் உணரப்படு கின்றன. இவைபற்றிக் கருத்துத் தெரிவித்த பேராசிரியர் எஸ். பரணவிதான மேற்குறிப்பிட்ட இப் பரந்த பகுதிகளில் திரா விடரின் முன்னோர் வாழ்ந்துள்ளனர் என்பதை மறுக்க முடியாத வராகப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> " The few megalithic monoments and urn burials discovered in Ceylon are obviously an overflow from South India" (1967:9).

இந்நிலையில், இங்குள்ள இடப்பெயர்களின் திராவிட மூலங்களைக் காணவேண்டிய தேவை ஏற்படுகின்றது. இடப் பெயர்களில் வேற்று மொழிக் கலப்புகள் ஏற்படுதல் இயல்பே. எனினும் கலப்புப் பெயர்கள் தோன்றுவதற்கு முன்பு அவ்விடங் களின் பழைய பெயர்கள் எவை என்பது அறியப்பட வேண்டும்.

வரலாற்று அழிபாட்டுச் சின்னங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பழைய கற்காலந் தொடக்க மாக வரலாற்றுச் செய்திகளைத் தருவனவாகப் பலவிடங்களிலும், பல்வேறு காலங்களுக்குரிய அழிபாட்டுச் சான்றுகள் காணப்படு கின்றன. அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ் வாராய்ச்சிகளின் மூலம் பழைய கற்கால மக்களின் வாழ்விடங் களும், இடுகாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை வரு மாறு:

அ. கந்தரோடை அழிபாடுகள்:
புதிய கற்காலப் புதை பொருட் சான்றுகள்

ஆ. ஆனைக்கோட்டைஅழிபாடுகள்:
புதிய கற்காலப் புதை பொருட் சான்றுகள்

இ. வல்லிபுரத்து அழிபாடுகள்:
வரலாற்றுக்காலப் புதை பொருட் சான்றுகள்.

ஈ. பூநகரித் தொல்பொருட் சான்றுகள்.

யாழ்ப்பாண மாவட்டத்து வரலாற்றுச் சின்னங்கள்

(அ) ஆரியச் சக்கரவர்த்திகளின் வரலாற்றுச் சின்னங்கள்:
சங்கிலியன்தோப்பு - முகப்பு வாசல்
மந்திரிமனை
சட்டநாதர் கோயில்
நல்லூர்க் கோயில்
வீரமாகாளி அம்மன் கோயில்
கைலாயநாதர் கோயில்
வெயிலுவந்த பிள்ளையார் கோயில் முதலியன.

(ஆ) பழைமை வாய்ந்த வல்லிபுரக்கோயில், மாவிட்டபுரக் கந்த சுவாமி கோயில், கீரிமலைச் சிவன்கோயில்;

(இ) தொண்டைமானாறு;

(ஈ) 1632 - இல் போர்த்துக்கேயராற் கட்டப்பட்டு, பின்பு ஒல்லாந் தராற் பேணப்பட்ட யாழ்ப்பாணக்கோட்டையின் அழிபாடுகள்;

(உ) பிறநாட்டார் ஆட்சிக் காலச் சின்னங்கள்:-

ஊர்காவல்துறையின் எதிரே கடலிலுள்ள கற்பாறையில் டச்சுக் காரராற் கட்டப்பட்ட ஹைமன்கீல்கோட்டை (Fort Hammanhiel);

1875-இல் பிரித்தானிய வேல்ஸ் இளவரசரின் (Prince of Wales) இலங்கை வருகையின் நினைவாக 1882 இல் யாழ் நகரிற் கட்டப்பட்ட மணிக்கூட்டுக்கோபுரம்;

1678-இல் டச்சுத் தேசாதிபதி பைல் (pyl) என்பவர் வட்டுக் கோட்டையில் கட்டுவித்த பழைமை வாய்ந்த கிறிஸ்தவ தேவாலயம்;

1870-இல் அமெரிக்க மிசனரியால் தொடங்கப்பட்ட யாழ்ப் பாணக் கல்லூரி என்பவை வரலாற்றுச் சின்னங்களாகும்

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் ஆட்சியை (1619-1658) நினைவூட்டும் வகையில் பல அழிபாடுகள் காணப்படு கின்றன. 1905 ஆம் ஆண்டில் வெளிவந்த 'Hand Book to the Jaffna Peninsula' என்ற நூல், அன்றைய நிலையில் காணப்பட்ட அழிபாடுகள் பற்றிய குறிப்புக்களைத் தருகின்றது. ஊர்காவல் துறையில், போர்த்துக்கேயராற் கட்டப்பட்ட கோட்டையின் அழி பாடுகள் துறைக்கு அருகே திடலாகக் காணப்படுகின்றன. வேல ணையிற் காணப்படும் கற்குவியல் போர்த்துக்கேயர் அல்லது டச்சுக்காரரின் கட்டிட அழிபாடுகளாக இருக்கலாமெனக் கருதப் படுவதோடு, அங்கு 1832 வரையில் நிலைத்திருந்த 50 அடி உயரமுடைய கோபுரத்தின் அழிபாடுகளாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. அச்சுவேலியிலும் சங்கானையிலும் போர்த்துக் கேயத் தேவாலயங்களின் அழிபாடுகள் காட்சி தருகின்றன. யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட போர்த்துக்கேயரின் கட்டிட அழி பாடுகள் பற்றி விரிவாக சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய கட்டு ரையும் (1921) ஈண்டுக் கருத்திற் கொள்ளத்தக்கது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தரின் ஆட்சிக் கால (1658 - 1796) நினைவாகச் சில அழிபாட்டுச் சின்னங்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலைத்துள்ளன. காங்கேசன்துறை சுங்கத் தீர்வை இடத்திற்கு அருகில் காணப்படும் மிகப் பெரிய கட்டிட அடித்தளம் டச்சுக்காரரின் கோட்டை அமைந்த இடமாக

இருக்கலாமெனக் கருதப்படுகின்றது. ஆனையிறவு அரச வாடி வீட்டுக்கு அருகில் டச்சுக்கோட்டையின் அழிபாடுகள் காணப்படு கின்றன. சங்கிலியன் தோப்பினுள் யமுனாஏரிக்குச் செல்லும் வழி ஓரமாகப் பழைய கட்டிட அடித்தளக் கட்டுத்தொடர் ஒன்று வெளியரும்பிக் காணப்படுகிறது. இது பண்டைய நல்லூர்க் கோயிலின் அழிபாட்டுத் தளமாகவோ அல்லது ஒல்லாந்தருடைய கட்டிட அழிபாடுகளாகவோ இருக்கலாம்.

நாணயங்கள்

மனித நாகரிக வரலாற்றில் நாணயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பொருண்மிய வளர்ச்சியின் குறியீடாகும். நாகரீக வளர்ச்சியும் அரசியல் நிலைபேறும் வணிகத் தொடர்புகளும் நாணயங்களின் புழக்கத்தை வளம்படுத்தின. குறிப்பிட்ட ஒரு நாட்டின் அரசியல், பொருண்மியம், சமயம், மொழி, பண்பாடு முதலியன பற்றி அறிந்து கொள்ளவும் நாணயங்கள் துணையா கின்றன. இடப்பெயர் ஆய்விலும் இவற்றின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கது. ஈழத்தின் பிற பகுதிகளைப் போல் யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் பண்டைக் காலம் முதலாக நாகரிகம் மிக்க மக்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதற்கு இங்கு கண்டெடுக்கப் பட்ட நாணயங்களும் சான்றாகின்றன. அவ் வகையில் யாழ்ப் பாண மாவட்டத்தின் பழைய நாணயங்கள் காணப்படுமிடங்கள் வரலாற்றுப் பழைமை மிக்கவை என்பது தெளிவு.

இம் மாவட்டத்தின் நாணயங்கள் பற்றிய ஆய்வினை முதன் முதலில் 1917இல் போல் ஈ பிரிஸ் என்பவர் கந்தரோடை யில் தொடங்கினார். அவரைத் தொடர்ந்து சுவாமி ஞானப்பிரகா சர், முதலியார் செ. இராசநாயகம், கொட்றிங்ரன், ஐராவதம் மகாதேவன், வி.சிவசாமி, சி. பத்மநாதன், செ. கிருஷ்ணராசா, கா. நா. வே. சேயோன் ஆகியோர் நாணயங்கள் பற்றி ஆராய்ந்து தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த நாணயங்கள் பல்வேறு அளவுகளில் கந்தரோடை, வல்லி புரம், நல்லூர், பூநகரி ஆகிய முதன்மையான தொல்பொருள் தளங்களிருந்தும் புலோலி, நாகர்கோயில், மட்டுவில், கோப்பாய், அச்சுவேலி, கொக்குவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப் பளை, தொல்புரம், வட்டுக்கோட்டை, அல்லைப்பிட்டி, மண்

கும்பான், நாரந்தனை, புங்குடுதீவு, உடுப்பிட்டி, ஆனைக் கோட்டை, தம்பசிட்டி, வியாபாரி மூலை முதலிய இடங்களிலும் குறிப்பிடத்தக்க அளவு நாணயங்கள் காலத்திற்குக் காலம் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்களிலே தொடர்ச்சி யான முறையிலும், கால ஒழுங்கிலும் (கி.மு.600-கி.பி.1500) உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் கிடைத்துள்ளன. இன் றைய நிலையில் பண்டைய நாணயக் களஞ்சியங்கள் எனக் கொள்ளக்கூடிய தொல்பொருள் தளங்கள் இவ்விரண்டு நிலையங் களுமேயாகும் (செ. கிருஷ்ணராசா 1983:72). இங்கு உரோம, சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாணயங்களும், சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளினது சேது நாணயங்களும், சிங்கள மன்னர் களினது நாணயங்களும் கிடைத்துள்ளன. இந் நாணயங்கள் இடப்பெயர் ஆராய்ச்சியில் அப்பெயர்களின் பழைமை, அங்கு ஏற்பட்ட குடியேற்றங்கள், அக் குடியேற்றத்தினர் அவ்விடங் களுக்கு இட்ட பெயர்கள் ஆகியன பற்றி அறிந்து கொள்வதற்கும் துணைச் சான்றுகளாகின்றன.

கிடைத்துள்ள நாணய வகைகள்

நந்தி பொறிக்கப்பட்ட சேது நாணயங்கள்,
பாண்டியரின் மீன் இலச்சினையுடைய நாணயங்கள்,
மத்தியகாலத் தமிழ் நாணயங்கள்,
சுவஸ்திகம், யானை, சைத்தியம் என்பன பொறிக்கப்பட்ட நாணயங்கள்,
கிரேக்கரின் லக்சுமி நாணயங்கள்,
இந்து ரோமன் நாணயங்கள்,
V.O.C. பொறிக்கப்பட்ட நாணயம் முதலியன.

கந்தரோடையிற் காணப்படும் உரோம நாணயங்களின் மூலம் உரோமருக்கும் தென்னிந்தியத் தமிழ் மன்னருக்கும் இடையே நடைபெற்ற வணிகத் தொடர்பினையும் அதே காலத் திற், கந்தரோடைப் பகுதியிலும் இவ்விரு சாராரும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதும், அதே காலத்தில் கந்த ரோடையில் பழைமை மிக்க ஊர், நகர் அமைத்து வாழ்ந்த மக்கள் நாகரீகம் பெற்றிருந்தனர் என்பதும் தெளிவாகின்றன.

தொல்லியல் தளங்கள்

அரியாலை	கௌதாரிமுனை	பாலாவிக்குளம்
அல்லைப்பிட்டி	குடத்தனை	புங்குடுதீவு
ஆனைக்கோட்டை	கோப்பாய்	புத்தூர்
ஆனைவிழுந்தான்	சுழிபுரம்	பூநகரி
இருபாலை	தெல்லிப்பளை	மாகியப்பிட்டி
உரும்பிராய்	தொல்புரம்	முள்ளி
கச்சாய்	நயினாதீவு	யாழ்ப்பாணம்
கந்தரோடை	நல்லூர்	வரணி
காட்டுப்புலம்	நாகர்கோயில்	வல்லிபுரம்
காரைதீவு	நெடுந்தீவு	வேலணை

பண்டைய இடப்பெயர்கள்

சிங்கை நகர்

சிங்கைநகர் என்ற பெயர் வட இலங்கையிலிருந்த அரசுக்கும், அதன் தலைநகருக்கும் வழங்கிற்று. செகராசசேகரம் என்ற மருத்துவ நூலிலே 'செயம்பெறு சிங்கைநாடன் செகராச சேகரன்' என்ற தொடர் இடம்பெறக் காணலாம். ஆரியச்சக்கர வர்த்திகள் சிங்கைநகரைத் தலைநகராகக் கொண்டு வட இலங்கை அரசை ஆட்சி புரிந்துள்ளனர். சிங்கை நகர் என்ற பெயரில் இருந்த தலைநகர் எது என்ற ஆய்வில், வல்லிபுரம், பூநகரி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய நான்கு இடங்கள் பற்றிய நிலைப்பாடுகளில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. போர்த்துக்கேயர் கி.பி.1590 இல் கொழும்புத் துறையில் இறங்கி நல்லூரைத் தாக்கியபோது சிங்கைநகரென் னும் பெயரோடு ஓர் அரண்மனை இருந்ததாகக் குவேறொஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார் (Queiroz: p.367). இது தொடர்பாகக் குலசபாநாதன் கூறும் கருத்து நோக்கத்தக்கதாகும்:

> "பூர்வ சிங்கைநகர் கொழும்புத்துறைக்கும் நல்லூருக்கும் இடையிலாமெனக்கொள்ள வேறு சான்றில்லாமையால், அச்

சிங்கைநகர் அழிந்துபட்டு, நல்லூர் தலைநகராயிற்று. பின், அப்பழைய நகர்ப்பெயரோடு ஓர் அரண் இங்கு விளங்கிய தெனக் கொள்ளலாம் என்க".

(குலசபாநாதன் - 1971:3)

எனவே அவர் கருத்துப்படி பழைய சிங்கைநகர் வல்லிபுரப் பகுதியிலேயே அமைந்திருந்ததென்பது புலப்படுகிறது. முதலியார் செ. இராசநாயகம் (1926:54) சிங்கைநகர் என்பது வல்லிபுரமே எனக் குறித்துள்ளமை ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியதாகும். அவர் தனது கருத்துக்குச் சான்றாகக் கேகாலை. மாவட்டத்து கொட்டேகம என்ற இடத்தில் பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டுப் பாடலில் வரும் 'பொங்கொலிநீர்ச் சிங்கைநகர்' என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளார். அக் கல்வெட்டுப் பாடல் வருமாறு:

"சேது,
கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர் வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் - பொங்கொலிநீர்ச்
சிங்கை நகராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்."

'பொங்கொலிநீர்ச் சிங்கைநகர்' என முன்னாட்களில் அழைக்கப்பட்ட இடம் வல்லிபுரமே என்பதை சுவாமி ஞானப்பிரகாசரும் (1928) ஏற்றுக் கொண்டு, பின்வரும் கருத்தை வெளியிட்டுள்ளார்:

'பருத்தித்துறைக்கு அணித்தாய் மணல் மேடுகள் பொருந்தியிருக்கின்ற வல்லிபுரமே பூர்வகாலச் சிங்கைநகராம்..... வல்லிபுர மணற்கும்பிகளுள் காற்றுக் காலங்களில் அகப்படும் பழம் பொருட்கள், அங்கு பலவிடங்களிற் குவிந்து கிடக்கின்ற பூர்வகாலக் கல்லோடுகள், கீச்சுக்கிட்டம் ஆகியனவும், அங்கிருந்து கரைமார்க்கமாய்ப் போன பெரும் வீதியின் அடையாளங்களும் ஒருநாள் விஸ்தார நகராய் விளங்கியது என்பதைக் கரதல கமலமாய்க் காட்டும்.'

1942 இல் நல்லூருக்கு அண்மையில் நாயன்மார்கட்டிலுள்ள அரசடிவிநாயகர்கோயிற் குளம் புனர்அமைப்பு வேலைகள்

நடை பெற்றபோது அகப்பட்ட ஒரு சிறிய கல்வெட்டிலும் சிங்கை நகரிலிருந்து ஆட்சி புரிந்த சிங்கை ஆரியச்சக்கரவார்த்தி பற்றிய குறிப்பு வருமாறு இடம் பெற்றுள்ளது:

'கலி 3025 தீர்த்தம் கொடுக்க
சிங்கை யாரியனால் அமைகப்பெற்றது'.

இக் கல்வெட்டு கலி 3025இல் நடைபெற்ற ஒரு நிகழ்வைக் குறிப்பிடுகின்றது. கலி 3025 என்பது கி.மு. 76ஆம் ஆண்டளவிலாகும். இக் கல்வெட்டின் எழுத்து கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கூறமுடியாது என்கிறார் செ. கிருஷ்ணராசா(1979). எவ்வாறாயினும் இக்கல்வெட்டிலே சிங்கை நகர மன்னர்களின் வழித்தோன்றலாகிய சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளமை காண்க. சிங்கை நகருக்கும் - வைஷ்ணவ நரசிங்கமூர்த்தி வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். பல்லவர் காலத்தின் தொடக்கத்தில் சமயப் பரப்புரை, சமயப் போட்டிகள் என்பன நடைபெற்ற போது, நாயன்மார்கள் இராவணன் கதையையும், ஆழ்வார்கள் நரசிங்கமூர்த்தி அவதாரக் கதையையும் தம் மத எதிரிகளாகிய சமண, பௌத்தர்களுக்குப் பயமூட்டும் வகையிற் பயன்படுத்தியுள்ளனர். இதனால் நரசிங்கமூர்த்தி கோயில்கள் பரவலாகத் தோற்றம் பெற்றிருக்கலாம். அத்தகைய தொரு காலகட்டத்திலே வல்லிபுரத்தில் நரசிங்க வடிவங் கொண்ட திருமாலுக்குக் கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனக் கொள்ளுதல் தவறாகாது. கோயிலுறை தெய்வங்களின் பெயரால் (நரசிங்கம்) சிங்கைநகர் என்ற பெயரும் இவ்விடத்துக்கு ஏற்பட்டிருக்கலாம் என்பதும் ஏற்புடையதாகலாம். சிங்கைநகர் தொடர்பாகப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை (1985: 238) கூறும் கருத்தும் ஈண்டுப் பொருத்தமாகிறது:

' கலிங்க நாட்டின் பழைய நகரமொன்றின் பெயர் சிங்கபுரமாகும். மேலும் கலிங்க நாட்டிலே சிங்காசலம் அல்லது சிங்கவேள் குன்றம் என்ற பிரசித்தி பெற்ற வைணவத் திருப்பதி உண்டு. திருமால் நரசிங்க அவதாரம் கொண்ட இடம் அது என்று நம்பப்படுகிறது. பல்லவர் காலத் தொடக்கத்தில் தமிழ் நாட்டின் வடபகுதியிலே நரசிங்காவதாரம் சிறப்பாகப் போற்றப் பட்டதாகத் தெரிகிறது....... தொண்டை மண்டலத்திலுள்ள

இன்னொரு பெரிய வைணவத்தலம் சோழசிங்கபுரம் என் றிருந்து இன்று மருவிச் சோளங்கிபுரம் என்று வழங்குகின்றது. .... பல்லவர் காலத்திலே இலங்கையிலே சிங்கைநகர் குறிப் பிடப்படுவதால், அக்காலத்தில் வல்லிபுரப் பகுதியிலே நரசிங்க மூர்த்தி தாபிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அம் மூர்த்தி யின் பெயராலேயே ஊர்ப் பெயர் சிங்கைநகர் என்று மாறிற் றென்றும் கொள்ளக்கிடக்கின்றது.'

பண்டைக் காலத்தில் வடஇலங்கையின் தலைநகராக விளங்கிய இடமே வல்லிபுரம். இங்கு கடற்றுறைமுகம் இருந்தது. பண்டைத் தமிழரின் தலைநகராம் சிங்கைநகரும் இதுவேயாகும் எனத் துணிந்துரைக்கிறார் பேராசிரியர் சி. பத்மநாதன் (1979:179).

சுவாமி ஞானப்பிரகாசர் (1928:63-64) சிங்கைநகர் பற்றிக் கூறும்போது கிழக்குக் கலிங்கதேசத்துக் கங்கவம்சத்தைச் சேர்ந்த உக்கிரசிங்கனின் பரம்பரையினரே சிங்கைநகரை அமைத்து ஆட்சி மேற்கொண்டனர் என்றார். கதிரைமலை அரசன் உக்கிரசிங்கனின் மகன் ஜெயதுங்க சிங்கைப் பரராசசேகரன் (9ஆம் நூற்றாண்டு) தமிழ் அரசின் தலைநகரைச் சிங்கை நகருக்கு மாற்றினான் என அறியப்படுகிறது. அவனது ஆட்சிக் காலத்திலேயே யாழ்பாடி என்ற புலவருக்கு மணற்றிடர் புலமைப் பரிசாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஸ்ரீமாற பல்லவன் (கி.பி. 815-862) வட இலங்கைக்குப் படை எடுத்து வந்து ஜெயதுங் கனை வென்று திறை பெற்றுச் சென்றமை வரலாற்றுச் செய்தி யாகும். அதன் பின்னர் கி.பி.944 இல் இரண்டாம் பராந்தகச் சோழன் படையுடன் வந்து போரிட்டு சிங்கைநகர் மன்னனைக் கொன்று, வட இலங்கையை நிருவகிக்கத் தனது சார்பாள னாகப் புவனேகபாகு என்பவனை நியமித்துச் சென்றான் என்பது தென்னிந்திய வரலாற்றுச் செய்திகளாகும். இப் புவனேகபாகுவே நல்லூர் நகரையும், நல்லூர்க் கோயிலையும் அமைப்பித்தான் எனக் கூறப்படுகிறது.

அடுத்ததாகப் பூநகரி என்ற இடமே பண்டைக் காலத்தில் சிங்கை நகர் என அழைக்கப்பட்டது என்ற கருத்தும் நிலவுகிறது. பூநகரிப் பகுதி பண்டைய குடியிருப்பிடமாகவும் வளமான பகுதி யாகவும் இருந்தமைக்கான தொல்லியிற் சான்றுகள் அகப்பட்டுள் ளன. பூநகரிப் பகுதியிலே கிடைத்துள்ள தொல்லியற் சான்று களைத் துணைக்கொண்டு, தொடக்க காலத்தில் சிங்கை நகர்

பூநகரியில் அமைந்திருந்ததென்றும், அங்கு சோழர் தொடர்பால் 'நல்லூர்' என்ற குடியிருப்பு ஏற்பட்டதென்றும், அங்கேயே நல் லூர்க் கோயில் முதலில் அமைக்கப்பட்டதென்றும் வரலாற்று விரிவுரையாளர் ப. புஸ்பரத்தினம் கருத்துக் கூறியுள்ளமை வட இலங்கைத் தமிழ் அரசின் பண்டைய பரப்புநிலையைக் குறிப்ப தாயினும், இவ் விடயம் மேலாய்வுக்குரியதாகும்.

சிங்கைநகரில் கனகசூரிய சிங்கையாரியன் (கி.பி.1440-1478) ஆட்சி செய்து கொண்டிருக்கும்போது கோட்டை அரசன் ஆறாம் பராக்கிரமபாகுவின் தளபதி சப்புமால்குமாரையா (தமி ழன்) படை எடுத்து வந்து கனகசூரிய சிங்கையாரிய அரசனைத் தோற்கடித்து, அரசைக் கைப்பற்றித், தனதாட்சியை (1450-1467) நடாத்தினான். இவனது படையெடுப்புப்பற்றி சிங்களத் தூது இலக்கியமான 'கோகில சந்தேஸய' பெருமிதத்துடன் விரிவாகக் கூறுகிறது. இந்நூல் கூறும் செய்தியிலிருந்து அறியப்படுவது என்னவெனின், பகைவனே கண்டு வியக்கத்தக்க வகையில் சிங்கைநகர் சீரும் சிறப்பும் கொண்டதாக விளங்கிற்றென்பதாம். சப்புமால்குமரையா சிங்கை நகரை முற்றாகவே அழித்தான் என்ற செய்தியை யாழ்ப்பாணச் சரித்திரம் (1933) என்ற நூல் வருமாறு கூறுகிறது:

"சப்புமால் குமாரையா தலைநகருட் புகுந்து, மதங்கொண்ட களிறெனக் கண்டாரைக் கொன்று, அந்நகர் ஆவணங்க ளெல்லாம் இரத்த வெள்ளம் பாய்ந்தோடும் ஆறுகளாக்கி, நகரில் விளங்கிய மாடமாளிகைகளை எல்லாம் இடிப்பித்துத் தரை மட்டமாக்கினான். சீரும் சிறப்போடும் செழித்து விளங்கிய பொங்கொலிநீர்ச் சிங்கை நகர், சப்புமால்குமாரையாவின் படையெடுப்பால் சிதைந்து அழிந்தது".

இதன் பின்னர் நல்லூர் வடஇலங்கை அரசின் தலை நகராக மாற்றப்பட்டது.

மணற்றி

இப்பகுதி மணற்றிடராக அமைந்திருந்தமையால் மணற்றி, மணற்றிடர் என்னும் பெயர்களால் வழங்கப்பட்டு வந்தமை பற்றி யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. முதலியார்

செ. இராசநாயகம் மணலூர், மணவூர், மணவை, மணல்புரம், மணலூர்ப்புரம் ஆகிய பெயர்களைக் குறிப்பிட்டு, இவை தென்னிந்தியக் கரையோரங்களிலும் வழங்கிய பெயர்களெனவும், இவையே யாழ்ப்பாணக்குடா நாட்டிலும் வழங்கின என்றும், பின்னாளில் யாழ்ப்பாணத்து அரசர்கள் தமது விருதுப் பெயர்களாக 'மணவையர்கோன்'. 'மணவையாரியன்' என்றும் வழங்கலாயினர் என்றும் கூறுகிறார். இப் பெயர்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் காணப்படுவதாலும் மண் > மணல் > மணற்றி என்ற பொருள்நிலையில் இடப்பெயர் ஆக்கம் பெற்றிருப்பதாலும் இவை தமிழ் மூலம் கொண்டவை என்பது உறுதியாகிறது. இவ்வாறிருக்க, கா. இந்திரபாலா (1971:63), 'மணற்றிடர் என்ற பெயர் யாழ்ப்பாணத்திற்குக் கொடுக்கப்பட்டதன் காரணம் தெரியவில்லை. இப் பெயர்கள் சிங்களப் பெயராகிய 'வெலிகம' (= மணலூர்) என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பாக இருக்கமுடியும்' என்றெழுதியுள்ளமையின் பொருத்தமின்மை இந் நூலின் பல இடங்களிலும் வலியுறுத்தப்படுகிறது.

மும்முடிச் சோழ மண்டலம்

ஈழத்தில் சோழர் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த 30 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவற்றுட் சில யாழ்ப்பாண மாவட்டத்திலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஊர்காவல்துறை ஹைமன்கீல் கோட்டையிற் கிடைத்த கல்வெட்டின் வாசகம் வருமாறு:

> 'ஸ்வஸ்தி ஸ்ரீ ஈழமான மும்முடிச் சோழ
> மண்டலத்து பாண்டியன் குலதனமாக
> வைத்த முடியும் ஈழத்தரையர் தம்முடியும்
> ஆங்கவன் தேவிமுடியும் பெண்டிர் பண்டாரமும்
> பிடிச்சுக் கொடுபோன அதிகாரத் தண்டநாயகன்"
> (கா. இந்திரபாலா:1969:41)

முதலாம் இராசேந்திரன் இலங்கையைக் கி.பி.1014இல் கைப்பற்றி 'மும்முடிச்சோழ மண்டலம்' எனப் பெயிரிட்டு, அதனைச் சோழப்பேரரசின் ஒரு மாகாணமாகச் சேர்த்துக் கொண்டமை இக் கல்வெட்டால் அறியப்படுகிறது.

சோழர் தொடர்புடைய சில இடப்பெயர்கள்

சோழர்பெயர்கள்	அமைந்துள்ள இடங்கள்
சோழங்கராயன் தோட்டம்	கட்டுவன்
கங்கைகொண்டான்	வடமராட்சிமேற்கு
செம்பியன்பற்று	வடமராட்சிகிழக்கு
செம்பியன்சோழன்	வடமராட்சிகிழக்கு
வளவர்கோன்பள்ளம்	மாவிட்டபுரம்
சோழியன்குளம்	பூநகரி
அம்பலப்பெருமாள்	பூநகரி
சித்திரமேழி	இளவாலை
ஐந்நூற்றுவன்வளவு	யாழ்ப்பாணம்

இவைபோன்ற இன்னும் பல இடப்பெயர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்காங்கே காணப்படுகின்றன. இயன்றவரை அவை யாவும் இந் நூலிற் பொருத்தமான இடங்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இப் பெயர்கள் ஈழத்தில் சோழர் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊராட்சி முறைகள், வணிக நடவடிக்கைகள், குடியேற்றங்கள், கோயில்களுக்கான நன்கொடைகள் முதலியவற்றைச் சான்றுபடுத்துவனவாக உள்ளன.

தொன்மைக் கதைகளுடன் தொடர்புடைய இடப்பெயர்கள்

அனைத்து நாடுகளினதும் ஊர்ப்பெயர்களோடு தொடர்புடையனவாகத் தொன்மைக் கதைகள் (Myths), நாட்டார் கதைகள் (Folktales), வரலாற்றுச் செய்திகள் என்பன இணைந்தே காணப்படுகின்றன. அவை அவ்வவ்வூர்களுக்குப் பழைமையும் பெருமையும் கற்பிக்கும் நோக்குடன் வழங்கப்பட்டு வந்துள்ளன. இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் தொன்மைக் கதைகளுடன் தொடர்புடையனவாகப் பல இடப்பெயர்கள் வழங்கி வரலாயின. இவ்வகையில் புண்ணியபுரம், காந்தருவநகரம்,

வீணாகானபுரம், எருமை-முல்லைத்தீவு, நாகதீவு, மணற்றிடர், வல்லிபுரம், நாகர்கோயில், கந்தரோடை முதலியன குறிப்பிடத் தக்கவை. இப் பெயர்களுக்குரிய விளக்கங்கள் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண வைபவ கௌமுதி முதலிய நூல்களிலே கூறப்பட்டுள்ளனவற்றை அப்படியே ஈண்டு நோக்கலாம்:

புண்ணியபுரம் - (கீரிமலை)

"பூர்வ காலத்திலே சிவன் பார்வதி சமேதராய் இவ்விடம் வந்து, இப்பொழுது கீரிமலை என்றழைக்கப்படும் இடத்திற்குச் சமீபமாயிருந்த திருத்தம்பலைப் பதியில் வாசம் பண்ணின ரென்றும், அப்பொழுது உமையவள் ஸ்நானஞ் செய்வதற்காய் கண்டகி தீர்த்தத்தை இவ்விடம் அழைத்து வைத்தனரென்றும், அதிலே தேவர்களும் இருடிகளும் பிறரும் வந்து தீர்த்தமாடிப் புண்ணியவான்களாயினரென்றும், அக்காரணத்தால் இந்நாடு புண்ணியபுரம் என்று அழைக்கப்பட்டதென்றும் கதைகளுள. அவ்விடத்தில் திருத்தம்பலேஸ்வரன், திருத்தம்பலேசுவரி கோயில்களும், கதிரை யாண்டவர் கோயிலும் கட்டப்பட்டிருந் தன என்ப' (யாழ்ப்பாண வைபவ கௌமுதி:1917: 2-3)

காந்தருவநகரம் + வீணாகானபுரம்

"இலங்காபுரியை அரசாண்ட இராவணன் அயோத்திமாநகர அரசனாகிய தசரதச்சக்கரவர்த்தியின் திருக்குமாரராகிய இரா மரது மனைவி சீதையைக் கவர்ந்து இலங்காபுரியிற் கொண்டு போய்ச் சிறை வைத்திருந்தபோது இராமர், தம்பியாகிய இலக்குமணருடனும், வானரவீரருடனும் சென்று இராவணனைச் சங்கரித்த பின், அவனது வீணையை வாசிக்க நெடுங்காலமாக யாசித்திருந்த சித்திராங்கதன், என்னும் பெயருடைய கந்தரு வன் அவ் வீணையைக் கையாடிக் கொண்டு போய்க் கீரி மலைச்சாரலில் வந்து தங்கி, வீணையை வாசித்து இன்புற்று ஏகாந்தமாயிருந்தனன் என்பதும் பழங்கதை. காந்தருவன் இங்கே வசித்து இவ்விடத்துக் காட்டை வெட்டி நாடாக்கின படியால் 'காந்தருவநகரம்' என்றும், அவன் வீணா பாணியாய் கானம் பாடினபடியால் வீணாகானபுரம் என்றும் இந்நாடு அழைக்கப்பட்டதாகக் கூறுவர் (யாழ்ப்பாண வைபவ கௌமுதி:1917: 3).

எருமை முல்லைத்தீவு

"யாழ்ப்பாணத்தின் வடமேற்குப் பாகத்திலிருக்கும் சிறு திடரான மலையும், அதன் பக்கத்திலிருந்து கடலுட்பாயும் நன்னீர் அருவியும், காலத்துக்குக் காலம் அயற்றேச வாசிகள் பலரை இவ்விடம் வரும்படி கவர்ந்தன. அந் நீரருவியில் நீராடியும், அந்நீரை அருந்தியும் சுகம்பெறும் நோக்கமாய்ப் பலர் இவ் விடம் வந்துள்ளனர். அவ்வாறு வந்த அந் நோயாளரே குடி யில்லா இந்நாட்டுக்கு அக் காலத்தில் எருமை-முல்லைத்தீவு எனப் பெயரிட்டனர் என்றும் கூறப்படுகின்றது" (John's:1878:6).

இப் பெயர்கள் போன்றே கீரிமலை, மாவிட்டபுரம், வல்லி புரம், கந்தரோடை, நாகர்கோயில் முதலான இடப்பெயர்களுட னும் புராணக் கதைகளும் தொன்மைக்கதைகளும் தொடர்பு படுத்தப்பட்டுள்ளமை பற்றிய விளக்கங்கள், அப்பெயர்கள் நூலில் இடம்பெறும் இடங்களிலே தரப்பட்டுள்ளமை காண்க.

இயல் மூன்று

நீர் நிலை சுட்டிய இடப்பெயர்கள்

பண்டைய நாகரிக வளர்ச்சிப் படிநிலைகளின் தொடக்க காலத்தில் நீர் நிலைப் பெயர்களே பெரிதும் தோன்றியிருக்க வேண்டும் என எதிர்பார்த்தல் இயல்பானதே. 'நீரகம் பொருந்திய ஊரகத் திரு' என்ற ஔவையார் வாக்கும் பண்டைக்கால மக்களின் குடியிருப்புக்கள் நீர் நிலை சார்ந்த இடங்களிலேயே அமைந்திருந்தன என்பதைச் சான்றுபடுத்துகின்றது. எனவே இடப்பெயர்களில் நீர் நிலைப் பெயர்களே பழைமையானவை எனக் கருதலாம். தமிழ் நிகண்டுகள் நீர் நிலைப் பெயர்களைப் பெருகக் கூறுகின்றன. சான்றாகச் சூடாமணி நிகண்டில் (5:23-27) நீர் நிலைப் பெயர்களை வரிசைப்படுத்திக் கூறும் ஒரு பாடலைக் குறிப்பிடலாம்:

> படுகரே தாங்கல் கேணிபல்வளம் படுவேட்டம்
> மடுவுளகமே பண்ணை வாவியே சுனையே வட்டம்
> தடமொடு கயம்பயம் பூந்தடாகமே குளமேகுட்டம்
> அடைவுள கிடங்கு சூழ யலந்தையே குண்டம் பங்கம்
> இலஞ்சி கோட்டகமே பொய்கையேல்வை யோடையேரி".

சங்க இலக்கியத்திலே நீர்நிலைப் பெயர்களாக ஆறு, ஊற்று, கயம், கால், சிறை, துறை, படக்கை, பாழி என்பன வழங்கியுள்ளன (சி. நாச்சிமுத்து 1983:133). யாழ்ப்பாண மாவட்டம் நீர் நிலைகளாற் சூழப்பட்டுக் காணப்படுவதால் நீர் நிலைப் பெயர்கள் இங்கு பெரிதும் இடம்பெறுதல் சிறப்பியல்பாயிற்று. அவ் வகையில் அமைந்த இடப்பெயர்க் கூறுகளை வருமாறு வகைப்படுத்தலாம்.

அளை	ஓடை	கேணி
ஆரை	கரை	கொட்டு
ஆவி	களப்பு	துறை
ஆறு	கால்	மடு
ஊருணி	குளம்	மோட்டை
		வில்

இத்தகு நீர் நிலைப் பெயர்க் கூறுகளோடு இயற்கைக் கூறுகள், ஆட்பெயர்கள், மற்றும் அடைமொழிகள் என்பன முன்னொட்டு நிலையில் இணைந்து இடப்பெயர் ஆக்கம் பெற்றுள்ளமை ஈண்டு விரிவாக ஆராயப்படுகின்றது.

'அளை' - ஈற்று இடப்பெயர்கள்

அளை என்பது புற்று, பொந்து, குகை எனப்பொருள் தரும் சொல்லாகும். வயலில் நீர் வடிந்தோடும் பொருட்டு வெட்டப்படும் வடிகாலும் அளை எனப்படும். மட்டக்களப்பு வயற்களச் சொல்லாட்சியிலும் அளை என்பது இதே பொருளில் பல்வேறு அடை மொழிகள் பெற்றுப் பெரிதும் வழங்குவதைப் பின்வரும் சொற்கள் சான்றுபடுத்துகின்றன: கையளை = சிறு வடிகால், காலளை = பெரியவடிகால், பேரளை = சிறு வடிகால்களின் வழியாக நீர்வந்து சேரும் பெரியவடிகால், தட்டளை = நெல் விதைப்பதற்கு ஏற்ப வயற்பரப்பைச் சிறுசிறு பகுதியாக வகுப்பதற்கு அமைக்கப்படும் மிகச் சிறிய வடிகால் (இ.பாலசுந்தரம்-1979:329). யாழ்ப்பாண மாவட்டத்தில் அளை ஈற்று இடப்பெயர்கள் மூன்றுள. இவற்றில் அளை = வாய்க்கால் என்ற பொருளில் இரு இடப்பெயர்களும், அளை = புற்று என்ற பொருளில் ஒரு இடப்பெயரும் ஆக்கம் பெற்றுள்ளன. நாகவழி பாட்டினரான திராவிட மக்கள் ஆதியிலே தாம் குடியேறிய இடங்களிற் காணப்பட்ட பாம்பின் உறைவிடமாகிய புற்றுக்கு, பயத்தின் காரணமாக அதற்கு முதன்மை அளித்து, அதனை நினைவுக் குறியீடாகக் கொண்டு ஊர்ப்பெயர் அமைத்தனர் எனவும் கருதலாம்.

கும்பளை (வலி.வ.62.5)

கும்பல் + அளை > கும்பளை; கும்பி + அளை > கும்பளை. கும்பல் = குவியல், கூட்டம்; கும்பி = குவியல், நரகம், சேறு, யானை (தமிழகராதி: 96). அளை = சிறு வாய்க்கால். எனவே கும்பளை என்பது சிறு வாய்க்கால்கள் நிறைந்துள்ள இடம் என்பது பொருள். இவ்வூர் அளவெட்டியின் வடக்கேயுள்ளது. அளவெட்டி என்பதும் வடிகால்கள் வெட்டப்

பட்டுள்ள இடம் எனப் பொருள் தருவதாகும். இவ்விரு இடங்களும் அயல் ஊர்களாக அமைந்திருப்பதும் சொற்பொருள் அடிப்படையில் ஒப்புடையதாகக் காணப்படுகின்றன.

இப் பகுதிகளில் களனிகளிலே தேங்கி நிற்கும் மழைநீர் வடிந்தோடும் பொருட்டுப் பல அளைகள் (கால்வாய்கள்) வெட்டப்பட்டு, அவை வழுக்கியாற்றுடன் தொடுக்கப்படுதல் வழக்கம். இக் காட்சியின் வெளிப்பாடாகவே கும்பளை, அளவெட்டி என்பன காரணப் பெயர்களாகத் தோற்றம் பெற்றன.

தும்பளை (வடம.140.2-3)

தும்பு + அளை = தும்பளை. இங்கும் அளை என்பது வாய்க்கால், ஓடை என்ற பொருளில் வந்துள்ளது. முன்பு இவ்வூரிலே தும்புக் கைத்தொழில் முதன்மை பெற்றிருந்தது என அறியப்படுகிறது. தேங்காய் மட்டையிலிருந்து (கோம்பை) தும்பைப் பெறுவதற்கு முதற்படியாகத் தேங்காய்மட்டையை நீரில் ஓரிரு வாரங்களுக்குப் போட்டு ஊறவைக்க வேண்டும். இதன் பொருட்டுச் சிறு ஓடைகளை வெட்டி நீர் பாய்ச்சி அவற்றினுள் தேங்காய்க் கோம்பைகளைப் போட்டு வைப்பது வழக்கம். இந் நிலையிலே தும்பு அளைகள் (ஓடைகள்) பல இங்கு காணப்பட்டமையால் இவ்விடத்திற்குத் (தும்பு + அளை) தும்பளை எனக் காரணப்பெயர் அமைவதாயிற்று. இவ்வூர் மக்களின் பொருண்மியத்தை நிர்ணயிக்குந் தொழிலாகத் தும்புக் கைத்தொழில் இருந்தது. அம்மக்கள் எந்நேரமும் தும்பை அளைந்து தொழில் புரிந்தமையாலே தும்பு + அளை = தும்பளை எனக் காரணப்பெயர் பெறுவதாயிற்று என்று விளக்கம் கூறப்படுதலுமுண்டு.

வடமராட்சிப் பகுதியிற் பருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள ஒரு பெரிய ஊர் தும்பளை. இதனூடாகப் பருத்தித்துறை + மருதங்கேணி தெரு செல்கிறது. இப் பதியின் பல குறிச்சிப் பெயர்கள் 'கலட்டி' என்ற ஈறுபெற்றுள்ளன. தச்சன் கலட்டி, காரைக் கலட்டி, கொம்மாகலட்டி, வண்ணார்கலட்டி, தெணிக்கலட்டி முதலிய குறிச்சிப் பெயர்களும் வழக்கிலுள்ளன. குறிப்பிடத்தக்க சில காணிப் பெயர்களும் வழங்குகின்றன. நயினாவத்தை, புங்கன்சீமா, வரானை, தும்புருவளை, மடப்பள்ளி, கணக்கிலாவத்தை என்பன இவ்வகையில் இடம்பெறுகின்றன.

ஒலிச்சொல் அடிப்படையிலும் இடப்பெயர் வழங்கும் என்பதற்கு இங்குள்ள 'கிலு கிலுப்பான' என்ற இடப்பெயர் சான்றாகின்றது. இவ்வூர்ப் பொதுக்கிணற்றில் பெண்கள் நீர் அள்ளும் போது ஏற்படும் நீரோசையும், பெண்களின் குரலோசையும் கலந்து 'கிலுகிலு' என்ற ஓசை இங்கு எந்தநேரமும் ஒலித்தமையால் இவ்விடத்திற்குக் 'கிலுகிலுப்பான' என்ற பெயரேற்படுவதாயிற்று என்பர். கடையகாடு, ஆனைவிழுந்தான், இலட்சுமாந்தோட்டம் (இலட்சுமணன் தோட்டம்) முதலிய குறிச்சிப் பெயர்களும் இங்கு வழக்கிலுள்ளன. இராமாயணத்துடன் தொடர்புபடுத்தி இலட்சுமணன் தங்கியிருந்த இடம் இலட்சுமணன் தோட்டம் எனப் பெயர் பெற்றதென்பர். அது போன்றே யானை விழுந்து இறந்த இடம் 'ஆனை விழுந்தான்' என வழங்கப்படுகின்றது. இப்பெயர் தமிழ் மன்னர் காலத்து யானை வணிகத்தையோ அல்லது பண்டை நாளில் நிகழ்ந்த யானைப்படைப் போர்களையோ நினைவுபடுத்துவதாகலாம்.

புற்றளை (வடம.வ.கி.140.3)

புற்று + அளை = புற்றளை. ஒரு பொருள் குறித்த இரு சொற்கள் இணைந்து இப்பெயர் ஆக்கம் பெற்றுள்ளது. இப்பெயரைப் புற்று + தளை எனப் பிரித்து விளக்கம் கூறப்படுதலும் உண்டு. இங்கு புற்று ஒன்றை வெட்டியபோது பிள்ளையார் சிலை காணப்பட்டது. அச்சிலை கண்டெடுக்கப்பட்ட இடத்திற் புற்றளை விநாயகர் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளது. சிலை புற்றிலிருந்து தளைத்தது (வெளிப்பட்டது) என்ற காரணத்தால் இவ்விடம் புற்றளை எனப்பெயர் பெற்றதென்பது வாய்மொழி மரபில் கூறப்படும் விளக்கமாகும். போர்த்துக்கீசரது ஆட்சிக் காலத்தில் கோயிற் சிலைகள் மரத்தடியிலும், புற்றடியிலும், கிணற்றின் உள்ளும் மறைத்து வைக்கப்பட்டமை வரலாற்றுச் செய்தி. எனவே அத்தகையதொரு சூழலில் பிள்ளையார் சிலை ஒன்றும் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம். பின்னாளில் இச்சிலை கண்டுபிடிக்கப்பட்ட போது அவ்விடத்திற்குக் காரணப் பெயராய் புற்றளை என்ற பெயர் வழங்கிற்று எனக் கூறுதல் பொருந்தும்.

‘ஆரை’ ஈற்று இடப்பெயர்கள்

ஆரை =கோட்டை மதில், அரண் எனப் பொருள்படும். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரை ஈற்றுப் பெயர்களாக அல் லாரை, கல்லாரை என்ற ஈரிடங்களுள. தமிழ் நாட்டில் ஆரைக்கல் (நாமக்கல்) என்ற பழம் பதிப் பெயர் இருந்ததாகச் ரா. பி. சேதுப்பிள்ளை (1976:5) குறிப்பிடுவர். நாஞ்சில் நாட்டிலுள்ள ஆரல் வாய்மொழி > ஆரவாய்மொழி என்பதன் திரிபென்றும், அது ஒரு கோட்டையைப் போன்று முப்புறமும் சூழ்ந்த பொதிய மலைத் தொடரின் கண் அமைந்தமையால் அப்பெயர் ஏற்பட்ட தென்றும் கூறப்படுகின்றது (செ. சதாசிவம்:1964:106-107). இங்கே ஆரை என்பது கோட்டை என்ற பொருளில் வந்தது. மட்டக் களப்புப் பேச்சு வழக்கில் மழை பெய்து நீர் வடிந்தோடும் இடம் ‘ஆரை’ அல்லது ‘ஆரைப்பற்றை’ எனப்படும். அத்துடன் மட்டக்களப்புக்குத் தெற்கே நான்கு மைல் தொலைவில் ஆரைப் பற்றை என்ற பேரூர் ஒன்றும் உள்ளது.

அல்லாரை (தென்ம.105:1.2)

அல் + ஆரை = அல்லாரை. இது கச்சாய்ப் பகுதியில் அமைந்துள்ளது. கச்சாயில் கோட்டையும் துறையும் அமைந் திருந்தன. அத்தோடு கச்சாய் தொல்லியற்றளமாகவும் கருதப் படுகிறது (இரகுபதி:1983). இப் பின்னணியில் அதன் அயற் பதியாகிய அல்லாரை என்பது கோட்டை (ஆரை) அல்லது பாதுகாப்பு அற்ற இடம் என்ற பொருளில் இப்பெயர் வழக்குப் பெற்றிருக்கலாம்.

அல்லாரை = ஒருவகை மரம். எனவே மரப் பெயரடி யாகவும் இவ்விடப் பெயர் ஆக்கம் பெற்றிருக்கலாம். மல்லாகம் என்ற ஊரிலும் அல்லாரை என்ற குறிச்சிப் பெயருண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்லாரை (வலி.வ.61.3)

கல் + ஆரை = கல்லாரை. கல் அரண் அல்லது கற் பாறை உள்ள இடம் என்ற பொருளில் இப்பெயர் ஆக்கம் பெற்றுள்ளது. மல்லாகம் பகுதியில் இவ்விடம் அமைந்துள்ளது.

‘ஆவி’ ஈற்று இடப்பெயர்கள்

ஆவி = நீர்நிலை (த.லெ.1982:251). நீர்நிலைகளைக் குறிக்கும் சொற்களுள் ஆவியும் ஒன்றாம். ஈழத்தில் ஆவி ஈறு பெற்ற இடங்கள் பல உள்ளன. திருக்கேதீஸ்வரத்தின் புனித நீர் நிலை பாலாவி எனப்படும். பால் + வாவி > பாலாவி என வும் வழங்கியிருக்கலாம். நீர் + வாவி + அடி > நீராவியடி என வழங்கியமை ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. சுந்தரமூர்த்தி நாயனார் பாலாவியின் வளம் பற்றித் திருக்கேதீஸ்வரப் பதிகத்தில் பாடினார். நீர் நிறைந்திருக்கும் இடத்திலிருந்து சூரிய வெப்பத் தினால் நீர் ஆவியாக எழும் காட்சி மிக அழகானது. அக் காட்சியினாற் கவரப்பட்ட மக்கள் குறிப்பிட்ட நீர் நிலையையும் அதன் சூழலையும் ஆவி என்றழைத்திருக்கலாம். அவற்றை ஏனைய ஆவிகளிலிருந்து பிரித்துக்காட்ட அடைகள் பயன்பட்டன. (சான்று: பாலாவி, நீராவி, புன்னைநீராவி). தமிழ்நாட்டிலும் நீராவி, கல்லாவி முதலிய ஊர்ப் பெயர்களுள்ளமை நோக்குக.

பாலாவி (தென்ம.105.6; பூ.175:3)

கச்சாய்ப் பகுதியிலும், பூநகரிப் பகுதியிலும் பாலாவி என்ற இரு இடங்களுள. கச்சாய் ஊருக்குக் கிழக்கே பாலாவி என்ற இடம் அமைந்துள்ளது. பால் + ஆவி = பாலாவி. இங்கு மந்தை வளர்ப்பு பெரிதும் காணப்படுகின்றது. ஆனால் குளம் எதுவும் இங்கில்லை. பண்டைநாள் முதலாக இங்கு பால் மாடுகள் நிறைந்து காணப்பட்டதால் இப்பெயரேற்பட்டதென்பர். இவ்வூருக்குத் தெற்கே கடற் பகுதி உள்ளது. சூரிய வெப்பத் தினால் கடல் நீரானது ஆவியாகி மேலெழுகின்ற காட்சி மாலை வேளையிலே தினமும் இங்கு இடம்பெறும். பால் போன்ற ஆவி மேலெழுமிடம் என்ற காரணப் பெயராக பாலாவி என்ற இடப்பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம்.

புன்னைநீராவி (கர.168.4)

புன்னை+நீர்+ஆவி = புன்னைநீராவி. மரம், நீர்நிலை என்பவற்றின் காரணமாக இப்பெயர் ஆக்கம் பெற்றுள்ளது. இப் பகுதியில் விசுவமடுக்குளம் அமைந்திருப்பதும் நோக்கத் தக்கது.

‘ஆறு’ ஈற்று இடப்பெயர்கள்

நதிக்கரைகளே மனித நாகரிகத்தின் ஊற்றிடங்கள். தண் பொருநையாறு என்ற அழகு தமிழ்ப்பெயர் கண்ட தமிழர், தாம் வாழ்ந்த ஆற்றுப் படுக்கைகளுக்கு அவ்வாற்றுப் பெயர் களை இட்டழைக்க, காலப்போக்கில் அதன் சூழலில் அமைந்த முழுக் குடியிருப்பும் அப்பெயர் பெறுவதாயிற்று. திராவிட, ஆரிய நாகரிகங்களிலே ஆறு தெய்வமாகப் போற்றப்பட்டது. அதனோடு இணைந்து விழாக்களும், கதைகளும் தோற்றுவிக்கப்பட்டன. இந்நிலையில் ஆறுகள் மக்கள் வாழ்வில் முதன்மை பெற்றன. அதனால் ‘ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்’ என்ற பழமொழியும் தோன்றுவதாயிற்று. ‘சோழவளநாடு சோறுடைத்து’ என்பர். ஆனால் ‘ஈழவளநாடு ஆறுடைத்து’ என்று கூறுமளவுக்கு ஆற்று வளம் பொலிந்தது ஈழநாடு. குடாநாட்டுக்குத் தெற்கே பூநகரி, கிளிநொச்சிப் பகுதிகளில் நன்னீர்ச் சிற்றாறுகளாக பாலியாறு, பல்லவராயன் கட்டுஆறு, மண்டிக்கல்லாறு, அக்கராயன்ஆறு, கலாவலப்புஆறு, கனகராயன்ஆறு, புலத்தியாறு, கொடிகத்தை ஆறு, பிரமந்தலாறு, தேரவிலாறு, மருதப்பிலியாறு, பேராறு முதலியன காணப்படுகின்றன.

இந்த ஆறுகளையடுத்துக் குளங்கள் அமைந்துள்ளன. ஆற்றுப் பெயர்களே குளங்களுக்கும் வழங்குகின்றன. சான் றாகக் கனகராயன் ஆற்றுப்படுக்கையில் அமைந்த குளம் கனக ராயன் குளம் எனப் பெயர்பெறும். அக் குளப்பெயரே பின்பு குடியிருப்பையும் சுட்டுவதாயிற்று. இம் மாவடத்தில் ‘ஆறு’ என்ற ஈற்றுப்பெயரைக் கொண்டனவாக உப்பாறு, திருவையாறு, தொண்டைமானாறு என்ற மூன்று இடப்பெயர்கள் அமைந்துள் ளன.

உப்பாறு (கர.265.2), திருவையாறு (கர.164.அ.9)

உப்பாறு, திருவையாறு என்ற இரு இடங்களும் கரச்சிப் பகுதியில் அமைந்துள்ளன. கண்டி + யாழ்ப்பாணம் பெருஞ் சாலையின் 157ஆம் மைல்கல்லின் கிழக்குப் பகுதியில் திருவை யாறு அமைந்துள்ளது. இங்கே திருவையாறு எனப் பெயருடைய குளம் ஒன்றுள்ளது. அக் குளப்பெயரினால் இவ்விடமும் வழங்கப் படுவதாயிற்று. தமிழகத்து திருவையாறு என்ற இடத்திற்கும் இவ்விடத்திற்குமுள்ள தொடர்புகள் ஆராயப்பட வேண்டும்.

தொண்டைமானாறு (வடம.வ.கி-144.2)

தொண்டைமான் + ஆறு = தொண்டைமானாறு. ஆறு = என்பது ஆறு, வழி, பக்கம், பயன், சமயம், அறம், உபாயம், விதம், இயல்பு, தணிதல், அடக்குதல் எனப் பல பொருள் தரும் சொல்லாகும்(த. லெ.1: 259). தொண்டைமானாறு என்ற இடப்பெயரை நோக்கும்போது தொண்டைமான் வெட்டுவித்த நீர் வழியே தொண்டைமானாறு எனப் பெயர் பெறுவதாயிற்று. இது ‘வல்லிநதி’ என்ற பெயருடன் வழங்கியதாகவும் அறியப்படு கிறது (வல்வை ந. நகுலசிகாமணி:1997:11). தொண்டை நாட்டை யாண்ட தொண்டைமான்களுக்கும் இத் தொண்டைமானாற்றுக் கும் தொடர்பு கூறப்படுகின்றது. வட்டுக்கோட்டையிலுள்ள ஓரிட மும் தொண்டைமான் தோட்டம் என வழங்குகிறது. தொண்டை மான்கள் பற்றிய வரலாற்றுப் பின்னணி வருமாறு கூறப்படுகிறது:

> “தொண்டைமான்கள் மிகத் தொன்மை வாய்ந்த பழங்குடிப் பரம்பரையினராவர். ஆயினும் அவர்கள் தொன்றுதொட்டு வழி வந்த அரச பரம்பரையினர் அல்லர். தமது வீரதீர பராக்கிரமங் களாலும் வீரசாகசங்களாலும் படிப்படியாகச் செல்வாக்குப் பெற்று அரச நிலைக்கு உயர்ந்தவர்கள். யானை பிடித்தல், யானைப் பயிற்சி என்பனவற்றிலும் சிறந்து காணப்பட்டனர்” என்கிறார் சிரஞ்சீவி (1980:17).

எவ்வாறாயினும் தமிழ்நாட்டரசர்கள், படைத்தலைவர்கள் என்போருடன் தொடர்புடையதாகவே இவ்விடப்பெயர் ஆக்கம் பெற்றிருத்தல் வேண்டும். தொண்டைமானாறு பற்றி யாழ்ப்பாண வைபவ கௌமுதி (பக்.8) என்ற நூலில் கூறப்படும் விளக்கமும் நோக்கத்தக்கது:

> ‘கி.பி 795 இல் உக்கிரசிங்கன் என்னும் அரசன் இந்தியாவிலே இருந்து படையெடுத்து வந்து கதிரமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யும்போது, தென்னிந்திய தொண்டை மண்டலத் தரசன் தொண்டைமான் தனது பரிவாரங்களுடன் கீரிமலையில் வந்திறங்கி, அவ்வரசனைச் சந்தித்து யாழ்ப் பாணத்துக் கரணவாய், வெள்ளப் பரவையென்னுமிடங்களில் விளையும் நல்லுப்பைத் தனது மக்களுக்குத் தரும்படி

வருந்திக் கேட்க, உக்கிரசிங்கன் அதற்கிசைந்து, அதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்யும்படி உத்தரவிட்டான். தொண்டைமான், வடகடலிலிருந்து உப்பு விளையும் இடத்திற்குத் தனது மரக் கலன்கள் சென்று உப்பேற்றி வரவும், மாரிகாலங்களில் அவற் றிற்கு ஒதுக்கிடமாக நிற்கத்தக்கதாகவும், அங்கிருந்த ஒரு சிற்றாற்றை ஆழமாக வெட்டுவித்துத் தன் பதி சென்றனன். தொண்டைமான் வெட்டுவித்த அந்த ஆறு இன்றுந் தொண்டை மானாறு என அழைக்கப்படுகிறது.'

மேற்குறிப்பிட்ட செய்தி தொன்மைக்கதையுடன் தொடர்பு பட்டிருப்பினும் அதில் இயல்புடைமை வெளிப்படவே செய்கிறது. சோழப் பேரரசன் முதலாம் குலோத்துங்கனின் படைத்தளபதி கருணாகரத்தொண்டைமான் கலிங்கப் போரை முன்னின்று நடாத்தி வெற்றி வாகை சூடியவன் ஆவான். அந்தக் கருணாகரத் தொண்டைமானின் பெயரும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்க தாகும். கருணாகரத்தொண்டைமான் மேற்கொண்ட ஈழப் படை யெடுப்புக் காரணமாக இப்பெயர் ஏற்பட்டது என்கிறார் இராச நாயகம் (1926:266). இங்குள்ள 'அத்திப்படை ஆண்டவன் கொல்லை', 'நாயினியார் கொல்லை', 'சேதுபதியார்கண்டு', 'இராக்காவளவு', 'பணிக்கவளவு' முதலிய காணிப் பெயர்களும் வரலாற்றுச் செய்திகளைப் பின்னணியாகக் கொண்டவையாகும்.

தொண்டைமானாற்றின் நீர்ப்பரப்பு உப்பாறாகக் காட்சி தருகின்றது. இது கடலிற் கலக்கும் இடத்திற்குக் கிழக்குப் பக்கமாகவுள்ள நிலப்பகுதி தொண்டைமானாறு என்ற பெயரால் வழங்குவதாயிற்று. மிகப் பழைமை வாய்ந்ததும் புகழ் பெற்றது மான 'சந்நதி' முருகன் கோயில் தொண்டைமானாற்றின் கிழக்கே அமைந்துள்ளமை இவ்விடத்திற்குத் தனிச்சிறப்பாகும். 'சந்நிதி' என்ற வடமொழிச் சொல்லே தமிழில் 'சந்நதி' என்றாயிற்று. இதனைச் செல்வச்சன்னதி என்று வழங்குவதே பெரு வழக் காகும். சந்நதி கோயில் இப் பகுதியின் புகழ்பெற்ற முருக வழிபாட்டிடமாகும். இங்கு கோணேசர் கோயில், ஆதி வைரவர் கோயில், பிள்ளையார் கோயில், பத்திரகாளி - மாகாளி அம்மன் கோயில்கள் என்பனவும் அமைந்துள்ளன. சின்னமலை, பெரிய மலை என்ற இரு சுண்ணக்கல் முனைப்புகளும் இங்கே உள் ளன. கடல் அரிப்பினால் ஏற்பட்ட இரு குகைகள் பெரிய மண்டபம், சின்ன மண்டபம் என்ற பெயரில் வழங்குகின்றன.

பிரமந்தலாறு (கர.168.2)

பெருமங்கலம் + ஆறு > பிரமந்தலாறு எனத் திரிபடைந் திருக்குமோ என ஆராய்தல் பொருத்தமாகும். கரச்சிப் பகுதியில் பிரமந்தலாறு ஓடும் பகுதியை நடுநிலையமாகக் கொண்ட குடி யிருப்புப் பகுதியே பிரமந்தலாறு எனப்பெயர் பெற்றுள்ளது

'ஊருணி' நிலை இடப்பெயர்

'ஊருணி' என்பது ஊர் நடுவே அமைந்து பல்லோரும் நீர் பெறக்கூடிய நீர் நிலையைச் சுட்டும் சொல்லாகும். ஊருணி என்பதன் திரிபே ஊரணி . "ஊருணி நீர் நிறைந்தற்றே" என்னும் திருக்குறள் தொடரால் அச்சொல்லின் பழைமை விளங்கும். ஊருக்கு அணித்தாயுள்ள நீர்நிலை ஊரணி என்பர் ரா.பி. சேதுப் பிள்ளை (1975:45).

ஊரணி (வலி.வ.33.5)

ஊர் + அணி = ஊரணி. ஊர் மக்கள் அணிதிரண்டு நின்ற நிலையில் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறுப. தமிழகத்திலுள்ள எழும்பூர் தற்போது எக்மூர் என்று அழைக்கப் படுகிறது. எழும்பூர் என்பது எதிரிகளுக்கு எதிராக அணிதிரண்டு எழுந்த ஊர் என்று பொருள் தரும் பெயராகும். அது போன்றே ஊரணி என்பதும் எதிரிக்கு எதிராக அணி திரண்டெழுந்த ஊர் என்ற நிலையில் இடப்பெயர் ஏற்பட்டது என்பதில் பொருள் பொதிந்து காணப்படுகிறது. ஊரணி என்பது ஆரணி என்பதன் திரிபாகலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. இது தொடர்பாக தாவீது அடிகள் (1970:13-14) கூறும் கருத்து ஈண்டு நோக்கத் தக்கதாகும்:

> 'ஊரணி < ஆரணி, ஆரணி = நீர்ச்சுழி. இது வடமொழி இலக் கியங்களில் ஒன்றிலுமே காணப்படவில்லை என மொனியர் வில்லியம்ஸ் வடமொழி அகராதியிற் கூறினர். ஆனால் அவர் தரும் 'அரண' (பக்.149) என்பது ஆழம் காணமுடியாத ஆழி, பாதாளம், செங்குத்தான மலைச்சரிவு என்ற பொருள்களைத் தருவதால், ஊரணி என்பது ஆரணி என்ற தமிழ்ச் சொல்லின் சிதைவேயாகும்"'

‘ஓடை’ ஈற்று இடப்பெயர்கள்

ஓடை = நீரோடை, குளம், அகழி, மலை, வழி, நெற்றிப் பட்டம், ஒரு வகை மரம் (த.லெ.6222). ‘பாசடைப் பரப்பிற் பதுமராசிகள், சேயிதழ் விரிக்குஞ் செழுமலரோடையும்.. .. ‘ (பண்டார மும்மணிக்கோவை 2:19-20) என்பதில் ஓடை என்ற சொல்லாட்சி பயின்று வந்தது. சிற்றாறு, சிற்றருவி என்பனவற் றிலும்விட, சிறிய நிலையில் இயற்கையாக நீர் வடிந்தோடும் நிலையிலுள்ளவை ஓடை எனப் பெயர் பெறும். ஓடை ஈற்றுப் பெயருடைய ஊர்ப் பெயர்கள் தென்தமிழீழத்தில் களியோடை, மீராஓடை, உப்போடை எனப் பெரிதுங் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஓடை ஈற்று ஊர்ப்பெயர்கள் மூன்றும், குறிச்சிகளைச் சுட்டும் நிலையிற் பல இடப்பெயர்களும் காணப் படுகின்றன.

ஓடு + ஐ = ஓடை. இது தமிழ்ச் சொல். இவ்வாறு தமிழ் அடிச்சொல்லைக்கொண்டு ஆக்கம் பெற்ற இடப்பெயர் களைச் சிங்கள அடிச்சொல்லிருந்து பிறந்தன என சுவாமி ஞானப்பிரகாசர் (1970: 170), லூயிஸ் (1917:14) முதலியோர் எழுதியுள்ளனர். ‘கொட’ (Goda) என்ற சிங்களமொழிச் சொல்லே ஓடை ஆயிற்று எனச் சுவாமி ஞானப்பிரகாசர் கூறுவது எவ்வாற் றானும் பொருந்துவதன்று.

கந்தரோடை (வலி.தெ.14ப.32.5)

கந்தர் + ஓடை = கந்தரோடை. யாழ்ப்பாண மாவட்டத் தின் மிகப் பழைய தொல்பொருட்சான்றுகள் அகப்பட்டுள்ள தொல்லியல் தளம் இதுவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நடுவே யாழ்நகரில் இருந்து வடமேற்கே ஆறு மைல் தொலை வில் கந்தரோடை அமைந்துள்ளது. இது மிகப் பழைமை வாய்ந்த ஊராகும். கந்தன் வழிபாட்டோடு தொடர்புடைய ஓடைக் காணி, அல்லது கந்தர் என்பவருக்குச் சொந்தமான ஓடைக்காணி, அல்லது கந்தர் என்பவரது ஆணைக்குட்பட்ட ஓடைக்காணி என்றும் இதற்கு பொருள் கூறலாம். இதன் பழைய பெயர் கதிரைமலையாகும்.

கைலாயமாலை, யாழ்ப்பாணவைபவமாலை முதலிய நூல்கள், பண்டைநாளில் கதிரமலை என்ற பெயரே வழக்கில் இருந்தமையைக் குறிப்பிடுகின்றன. பண்டை நாளில் நாக அரசர் களின் தலைநகராக விளங்கிய இவ்விடத்தில் 1967இல் அகழ் வாராய்ச்சியை மேற்கொண்ட விமலா பேக்லே (V. Begley - 1971) என்பவர், இங்கு கிடைத்த புதைபொருட்சான்றுகளைத் துணைக் கொண்டு தமிழகத்து அரிக்கமேட்டு நாகரிகத்துடன் ஒப்புடைய பண்பாட்டினர் இங்கு வாழ்ந்தனர் என நிறுவியுள்ளார். யாழ்ப் பாணக் குடாநாட்டில் இதுவரை கிடைத்துள்ள எழுத்துக்களாலான காலத்தால் முந்திய மூன்று சான்றுகள் கந்தரோடையிலேயே கிடைத்துள்ளன. இவற்றுட் பழைமையானது கி.மு. 2ஆம் நூற் றாண்டைச் சேர்ந்ததாகும். இது பிராக்கிருத மொழியில், பிராமி எழுத்தில் மட்கல ஓட்டிற் பொறிக்கப்பட்டுள்ளது. இதனை வாசித் தோரின் கருத்தினை நோக்கும் போது, தமிழகத்தைப் போன்று இங்கும் தமிழ்ப் பௌத்தம் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

அடுத்து கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டுகளில் ஆந்திரா நாட்டில் வழக்கிலிருந்த பிராமி லிபியில், சிவப்புநிறக் கார்ணேலி யன் முத்திரையிலே வடமொழியில் எழுதப்பட்ட மிகச் சிறிய கல்வெட்டைக் குறிப்பிடலாம். இதில் ‘விஷ்ணு பூதிஸ்ய’ என்னும் வாசகம் எழுதப்பட்டுள்ளது. அது ‘விஷ்ணு பூதியினுடைய’ எனப் பொருள்படும் என்கிறார் வி.சிவசாமி (1976:35-39).

கந்தரோடையில் அண்மைக் காலங்களிலே பண்டைத் திராவிடர் பற்றிய செய்திகளைத் தரும் அகழ்வாராய்ச்சிச் சான்று கள் அகப்பட்டுள்ளன. பல்வேறு காலத்து நாணயங்கள் மட் பாண்ட ஓடுகள், அணிமணிகள், பிராமி எழுத்துப் பொறித்த சுடுமண் ஓடுகள், பல்வேறு வகைப்பட்ட சிறுவடிவிலான சிற்பங் கள் முதலான தொல்பொருட்கள் அகழ்வாராய்ச்சியில் வெளிப் படுத்தப்பட்டுள்ளன. இச் சான்றுகள்பற்றி கா. இந்திரபாலா (1970) கூறும் கருத்து ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்:

> ‘கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணப் பகுதியில் மக்கள் குடியேற்றம் இருந்தது என்பதைத் தொல்பொருட்

சான்றுகள் திட்டவட்டமாக நிறுவுகின்றன. கந்தரோடைப் பிரதேசத்திற் குடியேறியிருந்த மக்கள் பண்பாட்டில் முன்னேற்றம் அடைந்தவர்களாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலிருந்து பிறநாடுகளுடன் தொடர்பு கொண்டு உலோகத்தின் உபயோகத்தையும், அறிந்து வாழ்ந்தனர் என இதே சான்றுகளைக் கொண்டு அறியலாம்.'

கண்ணகி வழிபாட்டுடனும் கந்தரோடை தொடர்புடையதாகக் காணப்படுகிறது. ஈழத்திற்குக் கண்ணகி வழிபாட்டைக் கொண்டு வந்தவன் முதலாம் கஜபாகு மன்னன் (கி.பி. 174-196) என்பது சிலப்பதிகாரப் பதிகமும், சிங்கள இலக்கியங்களும் கூறும் செய்தியாகும். தமிழகத்தில் இடம்பெற்ற கண்ணகி வழிபாட்டிற் கலந்து கொள்ளச் சென்ற கஜபாகு மன்னன் வடபாலமைந்த ஜம்பு கோளப்பட்டினம் வழியாக வந்து கந்தரோடையிலுள்ள அங்கணாமைக்கடவையில் பத்தினிக்குக் கோயில் எடுப்பித்தான் என்றும் கூறப்படுகிறது (S. Rasanayagam 1926: P74).

அடுத்ததாக, இங்கு கிடைக்கக் கூடிய அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் இங்கு இடம்பெற்றிருந்த பழந்தமிழர் பண்பாட்டை வெளிக் காட்டுகின்றன. தமிழ்ப் பண்பாட்டினர் வாழ்ந்த இடத்தில் தமிழ் மொழியே வழக்கில் இருந்ததென்றும், அவர்கள் வாழ்ந்த இடம் கதிரைமலை, கந்தரோடை என்ற பெயர்களில் வழங்கிற்றென்றும் கருதலாம். 'முருக வழிபாட்டின் தொன்மையைக் கதிர்காமமும், புத்தளம் மாவட்டத்திலுள்ள பெருங்கற்காலத் தாழிக்காடான பொன்பரிப்பிற் கண்டெடுக்கப்பட்ட 'வேல்' சின்னங்களும் உறுதி செய்கின்றன. பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் பிராமிக் கல்வெட்டுக்களிலும் 'வேல்' குறியீடாகப் பொறிக்கப்பட்டுக் காணப்படுகிறது. பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் 'வேல்', 'வேலச', 'குமர', 'விசாக' போன்ற குறிப்புக்கள் முருக வழிபாட்டுடன் தொடர்புடையவை. கதிர்காமம், செல்வச்சந்நதி, மண்டூர் முதலான இடங்களிற் காணப்படும் 'கந்தழி வழிபாடு' முருக வணக்கத்தின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன (க. சிற்றம்பலம் 1984:117). இது போன்றே கந்தரோடையின் தொல்பொருட்களும் அவ்விடத்தின் பழைமையையும், ஆங்கிருந்த முருக வழிபாட்டுத் தொன்மையினையும் உணர்ந்து கொள்ளத் துணை செய்கின்றன.

பண்டைத் தமிழகத்தில் நிலவிய "சேயோன் மேயமை வரை உலகம்" எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் செய்தியை மெய்ப்பிக்கும் வகையில் ஈழத்தில் கதிர்காமம் அமைந்துள்ளது. அவ்வழிபாட்டிடம் ஈழத்தில் முருக வழிபாட்டின் பழைமைக்கோர் எடுத்துக் காட்டாகும். இலக்கியங்களில் 'கதிரமலை' என்றே இவ்விடம் வழங்கப்பட்டமைக்குக் கதிரமலைப்பள்ளு சான்றாகும். கந்தரோடை என்பதும் கதிரமலை என்பதும் ஒரே பொருள் தருவன. எனவே பண்டு இங்கும் முருக வழிபாடு இடம்பெற்றிருந்தமையால் இவ்விடம் கந்தரோடை எனப்பெயர் பெற்றது என எண்ணத் தோன்றுகிறது. ஈழத்தில் கதிர்காமம், திருக்கோயில், மண்டூர், செல்வச்சந்நதி என்பன கந்தழி வைத்து வழிபடும் பழைமை நெறி சான்ற கோயில்களாகும். இவை கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ளன. எனவே கந்தரோடையும் ஆற்றங்கரை சார்ந்த இடமாக இருப்பதாலும் எமது கருத்தும் வலிமை பெறுகிறது. பண்டைய முருகத் தலங்களில் ஒன்றான கதிர்காமம் (கதிர் = ஒளி; காமம் = இடம்) ஒளி பொருந்திய இடம் என்ற காரணப்பெயர் பெற்றது. கதிர்காமம் ஈழத்தின் தெற்கே அமைய, வடக்கே கந்தரோடை (ஒடை = ஒளி) கந்தர் அருள் ஒளிவீசும் இடம் என்ற பொருளில் காரணப்பெயராக இடப்பெயர் பெற்றிருக்கலாம். எனவே பண்டைய ஈழத்தின் வடக்கிலும் தெற்கிலும் முருகவழிபாட்டு இடங்களும், கிழக்கிலும் மேற்கிலும் சிவவழிபாட்டு இடங்களும் அமைந்திருந்தமை தெளிவாகின்றன. கந்தழி வழிபாடு என்பது உருவமற்ற முருகனுக்கு அந்தணர் குலத்தவர் அல்லாத கப்புகன்மாரால் (பூசகர்) நடாத்தப்படும் பூசையாகும். ஈழத்திற் கந்தழி வழிபாடு நடைபெறும் முருக வழிபாட்டிடங்களில் கதிர்காமம் (தெற்கு), செல்வச்சந்நதி (வடக்கு), மண்டூர் (கிழக்கு) என்பன முதன்மையானவை. கந்தரோடையிலிருந்து சுமார் 10 மைல் தொலைவில் செல்வச்சந்நதி என்னும் பழைமை வாய்ந்த முருக வழிபாட்டிடம் அமைந்துள்ளது

பண்டு புகழ் பரப்பிய கந்தரோடையின் நினைவாகச் சுன்னாகத்தில் ஒரு திடர் 'கதிரைமலை' என அழைக்கப்படுவது பழைமையின் தொடர்ச்சி எனலாம். இதுவே பண்டைய நாகர்களின் தலைநகர் எனப்படுகிறது. வெள்ளரசுக் கிளையுடன் வந்த சங்கமித்தை கந்தரோடைக்கு வந்தாள் என்றும், அங்கு தேவநம்பியதீசன் 'பாசினாம' விகாரையைக் கட்டினான் என்றும் மகாவம்சம் கூறுகின்றது. கந்தரோடைக்கு அருகிலுள்ள சுன்னா

கத்தில் கதிரை மலைச் சிவன்கோயில் அமைந்துள்ளது. உக்கிர சிங்கன் என்ற தமிழ் அரசன் தனது அரண்மனையைக் கதிர மலையிலிருந்து குதிரை மலைக்கு மாற்றினான் என 'உக்கிர சிங்கன் நாட்டுக் கூத்து' என்ற நூலிற் கூறப்படுகின்றது. இச் செய்தியிலும் கதிரைமலை என்பது கந்தரோடையையே சுட்டு கின்றது எனலாம். கந்தரோடையில் பழைய அழிபாட்டுச் சின்னங் கள் 'கயக்கணை' என்ற குறிச்சியில் மிகுதியாகக் காணப்படு கின்றன. கயற்கண்ணி என்பது 'கயக்கணை' எனத் திரிபடைந் துள்ளது எனலாம். 'இயக்கச்சியோலை' என்பது இங்கு வழங் கும் ஒரு காணிப் பெயராகும். மேலும் பருத்தியோலை, கொட்டன் கட்டு (கொற்றன் + கட்டு), சாத்தாவத்தை (சாத்தன்வத்தை), கொத்தியாவத்தை (கொற்றன்வத்தை) முதலிய குறிச்சிப் பெயர்களும் திரிபடைந்து இங்கு வழக்கிலுள்ளன.

தொல்பொருள் ஆய்வாளரான போல் பீரிஸ் (1917-1919) கந்தரோடையில் முதன் முதலாக அகழ்வாராய்ச்சி மேற் கொண்டார். அதன் பின்பு இலங்கைத் தொல்பொருட் கழகத்தினர் அங்கு 1966 இல் ஆய்வு நடாத்தினர். மூன்றாவது கட்டமாக 1970இல் பென்சில் வேனியாப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆராய்ச்சிக் குழுவினர் ஆய்வினைத் தொடர்ந்தனர். அவர்களது ஆய்வின் பயனாகக் கந்தரோடை பண்டைக்காலப் பண்பாட்டுத் தளம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அப் பகுதி கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகள் தொடக்கம் தற்காலம் வரையிலான ஒரு தொடர்ச்சியான குடியிருப்புப் பகுதி என்பதும், மிகப் பழங் காலந் தொடக்கம் இங்கு பிறநாட்டுத் தொடர்பு இருந்து வந் துள்ளது என்பதும் புதைபொருட் சான்றுகளின் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளன (க. இந்திரபாலா:1970).

கந்தரோடையின் தொன்மைப் பெயர் கதிரைமலை என் பதைப் பலரும் நிறுவியுள்ளனர் (இராகவன்:1972:89). இவற்றைக் கருத்திற் கொள்ளாது 'கதுருகொட' என்ற சிங்களப் பெயரே கந்தரோடை ஆகியது என போல் ஈ பீரிஸ் (1917:11-30) கூறி னாரே தவிர, அதற்குத்தக்க சான்று காட்டவில்லை. 'கதுருகொட' என்பது சிங்களத்தில் எட்டிமரங்கள் நிறைந்த இடம் என்பதாகும். ஆனால் கந்தரோடையில் எட்டி மரங்கள் இருப்பதாகவோ, இருந்ததாகவோ எதுவித சான்றுகளும் கிடைக்கவில்லை (கலை ஞானி :1974:38-38). சுவாமி ஞானப்பிரகாசரும் கந்தரோடை என்பது சிங்களப்பெயர் என்கிறார். கந்தரோடை பற்றிய அவர் கூற்று (1917:47) வருமாறு:

"Kantar odai certainly had no connection with the Hindu god Kantar. It probably represents Kadurugoda".

சுவாமி ஞானப்பிரகாசர், கந்தர் என்பது கடவுளைச் சுட்டவில்லை என்பதற்குச் சான்று காட்டவில்லை. இப்பெயர் பற்றிக் கருத்து வெளியிட்ட C.E. கொடகும்புற (1968:12), கதுரு கொட என்ற சொல்லானது, கந்த்ரஸ்-→ காந்தாரகொட-→ காந்துரகொட → கதுருகொட என மருவி வந்ததென்கிறார். கந்தரோடை என்ற தமிழ்ப் பெயரே பின்னர் ஏற்பட்ட அரசியல், பண்பாடு, மதம் என்பவற்றின் ஊடுருவல்களாற் 'கதுருகொட' என மாற்றம் பெற்றது என்பதை ஈழ வரலாற்றுச் செய்திகள் சான்றுபடுத்துகின்றன. இக் கருத்தை அரண் செய்யும் வகையில் அமைந்த எஸ். இராசநாயகம் அவர்களின் கூற்றை நோக்குதல் பொருத்தமாகும்:

> "Now, it is a common place of history that, when waves of conquest or colonization come up a country, that old names of places are translated into the tongue of the invaders or settlers. Most of the old names of places are thus lost to posterity. So this place which had enjoyed the names of 'Kadira Malai' for several countries was transformed into a Sinhalese village and named 'Kadiragoda' when the Sinhalese people settled down later," (S. Rasanayagam : 1926: 59)

15ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'நம்பொத்த' என்ற சிங்கள நூலில் இவ்விடப் பெயர் 'கதிரகொட' என எழுதப் பட்டுள்ளது. போர்த்துக்கேயர் காலத்திற் 'கந்தர்கொட', 'கந்தர் குட்டே' எனவும், ஒல்லாந்தர் காலத்துத் தோம்புகளிற் 'கந்தர் ஓடை', 'கந்தர்குறிச்சி' எனவும் வழங்கி வந்துள்ளதாகவும் இராச நாயகம் (மேலது:59) குறிப்பிட்டுள்ளார்

கந்தரோடை ஜம்புகோளத் துறையிலிருந்து சுமார் 5 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. அங்கே புத்தமதக் கட்டிடத் தளங்கள் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முழுமையான அகழ்வாராய்ச்சி நடாத்தபட்டதன் பின்னரே கந்தரோடையின் சமயச் சார்பான, சமயச் சார்பற்ற கட்டிட வகைகள், அவற்றின் இயல்புகள் என்பன பற்றி ஆய்வு செய்ய வாய்ப்புண்டு. கந்த

ரோடை என்ற பெயர்த் தோற்றத்தின் அடிப்படையில் இங்கு நாட்டார்கதை ஒன்றும் வருமாறு வழங்குகின்றது:

> "இவ்வூர் நிலப்பரப்பு முற்காலத்தில் ஓர் ஓடை போன்று நீண்டு காணப்பட்டது. அந்த ஓடைக் காணிகள் யாவும் கந்தர் என்பவருக்குச் சொந்தமாக இருந்தமையால் அவர் பெயரைத் தழுவிக் 'கந்தரோடை' என்று அழைக்கப்படுவனவாயிற்று. பிற்காலத்தில் அவரது மக்களுக்கும் பிறருக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இங்கு குடியிருப்புக்கள் ஏற்பட்ட போது இவ்விடத்திற்கும் வயற் பகுதிக்கும் கந்தரோடை என்ற பெயர். வழங்கிவரலாயிற்று."

கந்தரோடையின் மேற்கெல்லையில் வழுக்கையாறு செல்கின்றது. முற்காலத்தில் இவற்றினூடாகக் கந்தரோடை அரசிருக்கை கடல் வணிகத்தில் ஈடுபட்டிருந்ததாக அறியப்படுகின்றது. செங்கையாழியான் எழுதிய 'வாராய் வாழி வழுக்கியாறு' என்ற நூலிலும் கந்தரோடை அரசு பற்றிக் கூறப்பட்டுள்ளது. கந்தரோடை அகழ்வாராய்ச்சிப் பகுதியில் கயற்கணைக்கு அடுத்து உப்புத் தரைப் பகுதி உள்ளது. அதனருகாக வழுக்கையாறு ஓடுகிறது. அதன் மருங்கில் தங்குவத்தை, திம்புத்துறை என்ற இடங்களுள்ளன. பண்டை நாளில் வழுக்கையாறு மிக அகன்று காணப்பட்டதென்றும், அதனூடாகக் கடல் நுழைந்தது என்றும், அங்கே கப்பல் போக்கு வரத்துத் தடையின்றி நிகழ்ந்தது என்றும் கூறப்படுகின்றது. வணிகர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் உள்துறை நகராகக் கந்தரோடை விளங்கிற்று. கோட்டையும் நகரும் அங்கு சிறந்து விளங்கின என்பதற்கு இற்றைவரை கிடைத்துள்ள தொல்பொருட்கள் சான்றாகின்றன.

வழுக்கையாறு, கட்டுவனிலிருந்து தொடங்கி தெல்லிப்பளை → அளவெட்டி → கந்தரோடை → கட்டுடை → நவாலி → கல்லுண்டாயில் கடலேரியை அடைகிறது. இவ்வாறு செல்லும் வழுக்கையாற்றுடன் சிறு குளங்கள் பல தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. அக் குளங்கள் யாவும் கந்தரோடையைச் சூழவே அமைந்துள்ளன. இதனைக் கருத்திற் கொண்ட பொ. இரகுபதி (1983:436), வழுக்கையாற்றை நடுநிலையமாகக் கொண்டு கந்தரோடையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆதிக்குடிகள் குடியிருப்புக்களை ஏற்படுத்தி வாழ்ந்திருக்கலாம் என்று கூறும் கருத்து

ஏனைய தொல்லியற் சான்றுகளாலும் நிறுவப்பட்டுள்ளது. கந்தரோடையின் எல்லைப் புறங்களில் கோயில்களும், குளங்களும் அமைந்துள்ளன. இங்கு அங்கணாமைக்கடவை கண்ணகி அம்மன் கோயில், ஸ்ரீமீனாட்சி அம்மன்கோயில், வத்தாக்கை அம்பாள் கோயில், கந்தரோடைச் சிவன்கோயில், வீரகத்திப்பிள்ளையார் கோயில், அருளானந்தப்பிள்ளையார் கோயில் முதலியன அமைந்துள்ளன. இங்கே குளக்கரையிலுள்ள மருத மரங்களும் மற்றும் களனிகளும் மருதத் திணைச் சூழலை நினைவூட்டுகின்றன.

கந்தரோடையிலுள்ள குறிச்சிப் பெயர்கள் வருமாறு:

வற்றாக்கை	உச்சாப்பனை	ஒட்டன்கட்டு
மடத்தடி	இயங்கம்புலம்	இனியாஇலந்தை
விளாங்கனை	கணக்கர்வளவு	பொருக்கன்புலம்
இக்கிரானை	தோப்பாம்பள்ளம்	பருத்தியோலை
சங்காவத்தை	குடாரை	கயற்கணை

மகாபாரதக் கதையில் அருச்சுனன் 'தீர்த்தயாத்திரை' மேற்கொண்ட இடங்களில் 'மணிபுரம்' என்பதும் ஒன்றெனக் கூறப்படுகிறது. மணிபுரத்தை - மணலூர் - மணற்றி - யாழ்ப்பாணம் - கீரிமலை என்பனவற்றுடன் தொடர்புபடுத்தி, மணிபுரம் என்பதும் கந்தரோடையையே குறிப்பிடுகிறது என்கிறார் முதலியார் இராசநாயகம் (1926:44). உக்கிரசிங்க மன்னன் கதிரைமலையில் ஆட்சி செய்தவன் என்றும், அவன் கந்தரோடைப் பகுதியிலிருந்த கதிரைமலைச்சிவன் கோயில், நகுலேஸ்வரர்கோயில் ஆகியனவற்றுக்குச் சென்று வழிபட்டு வந்தான் என்றும் யாழ்ப்பாண வைபவமாலை (1949) கூறுவதால், அவனது அரசிருக்கைப் பெயராலேயே 'கதிரை மலைச் சிவன்கோயில்' என்ற பெயரும் வழங்கப் பெற்றிருக்கலாம். இவ்வாறாக, புராண - வரலாற்றுச் செய்திகளோடு தொடர்பு கொண்ட இடப்பெயராகவும், ஈழத்தமிழர் வரலாற்றிற் சிறப்பிடம் வாய்ந்த தொல்பொருள் தளமாகவும் கந்தரோடை விளங்குகின்றது.

கலவாவோடை (வலி.தெ.59.4)

கலவா + ஓடை = கலவாவோடை. இது ஏழாலை ஊரின் ஒரு பகுதியாகும். சாதிக்கலப் பற்ற வகையில் ஒரே

குழுமத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்த இடம் என்ற நிலையில் இப்பெயர் வழங்கியிருக்கலாம் என்பர்.

பெரியான்ஓடை (தென்ம.111.5)

பெரியான் + ஓடை = பெரியான்ஓடை. இது மிருசுவில் ஊரின் ஒரு பகுதியாகும். ஓடை= வாய்க்கால். பெரியான் என்பவன் வெட்டிய ஓடை என்ற முறையிற் காரணப் பெயராயிற்று.

'கரை' ஈற்று இடப்பெயர்கள்

நீர்க் கரையோரங்களை அடுத்துள்ள நிலப்பகுதி அல்லது குடியிருப்புகள் 'கரை' என்ற ஈற்றுச் சொல் அமைந்த பெயர்களால் வழங்குகின்றன. இவ்வாறமைந்த நான்கு இடப் பெயர்கள் இம் மாவட்டத்தில் காணப்படுகின்றன.

ஓடக்கரை (வடம. வ.கி. 22.2), கற்கரை (வலி.தெ.அ.1), திக்கரை (வலி.தெ. 53.10), மயிலிட்டிக்கரை (வலி.72.அ.1) ஆகியன 'கரை' ஈற்று இடப்பெயர்களாகும். ஓடம் + கரை = ஓடக்கரை. ஓடக்கரை என்ற இடம் பருத்தித்துறைக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு ஓடங்கள் வந்து கரைசேரும் இடம் என்ற நிலையில் பண்டை நாளில் இப் பெயர் ஏற்பட்டிருக் கலாம். இப் பொருளில் பெயராக்கம் பெற்ற நாவாந்துறை என்ற இடப்பெயர் விளக்கம் (பக். 90) ஈண்டு நோக்கத்தக்கது.

திக்கு+கரை = திக்கரை. இது பெரியவிளான் பகுதி யிலுள்ள ஓரிடமாகும். மயில் + இட்டி + கரை = மயிலிட்டிக்கரை. மயிலிட்டிப் பதியின் கடற்கரையை அண்மித்த பகுதி மயிலிட்டிக் கரை என வழங்குகின்றது.

'களப்பு' ஈற்று இடப்பெயர்

களப்பு என்பது கடல்நீர் உள் நுழைந்து நிற்கும் ஆழ மில்லாத நீர்நிலை. கடனீரேரி என்ற பொருளில் கடல் நீரும் ஆற்று நீரும் கலந்து நிற்கும் ஆழமற்ற நீர்நிலை களப்பாகும். இலங்கையில் 'களப்பு' ஈற்று இடப்பெயர் கொண்டனவாக மட்டக் களப்பு, கோரக் களப்பு, தனங்களப்பு முதலான பல இடங்கள்

உள்ளன. மட்டம் + களப்பு = மட்டக்களப்பு = ஆழமற்ற சதுப் பேரி. மட்டக்களப்பு என்னும் பெயர் அவ்வாவியின் இரு மருங்கிலு முள்ள நாட்டிற்கும் பெயராயிற்று (இ. பாலசுந்தரம்:1979:29). இது போன்றே கோரை + களப்பு = கோரக்களப்பு என்ற பெயராக்கமும் அமைவதாயிற்று. களப்பு என்ற ஈறு பெற்ற இடப் பெயர் தமிழகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

தனங்களப்பு > தனங்கிளப்பு (தென்ம.94.1)

தனக்காரர் + களப்பு = தனங்களப்பு > தனங்கிளப்பு. களப்பு > கிளப்பு என மாற்றம் பெற்றுள்ளது. தனக்காரர் என் போர் யானை கட்டுவோர் ஆவார். ஆனையிறவிலிருந்து பத்து மைல் தூரத்தில் இவ்விடம் அமைந்திருப்பதும், பண்டை நாளில் இங்கு யானை வணிகம் நடைபெற்றமையும் கருத்திற் கொள்ளத் தக்கன. களப்பு என்ற பெயரீறு பெற்றிருப்பதற்கு ஏற்ப இவ்வூரில் நீர்நிலைகளும் அமைந்து காணப்படுகின்றன. S.W. குமாரசுவாமி (1917:67) இவ்விடப் பெயருக்குச் சிங்கள மொழி வழி விளக்கம் வருமாறு கூறுவர்:

> 'சிங்களத்தில் 'தண' = என்பது புல், குழை என்பவற்றையும், 'தன்' = என்பது நாவல் மரத்தையும் சுட்டும் சொற்களாகும். இவ்விடப் பெயர் சிங்கள 'தன்' என்ற சொல்லடியாகப் பிறந்த தென்றும், தன் + கலப்பு என்ற சிங்களப்பெயருக்குப், பண்டைத் தமிழ் மக்கள் தம்மொழி முறைமைபற்றி அம் சாரியை பெய்து தனங்கலப்பு என்னும் நாமரூபத்தைப் பிறப்பித்து, பின்னர் அதனை தனங்களப்பு அல்லது தனங்கிளப்பு எனத் திரித்துக் வழங்குவராயினர் போலும்'.

இடப்பெயர்களின் தோற்றத் தன்மையையும், அப் பெயர் களின் சொற்பொருள், இடச்சூழல் என்பன பற்றியும் அறியாதார் கருத்து இவ்வாறமைதல் இயல்பே.

'கால்' ஈற்று இடப்பெயர்கள்

கால் = என்ற சொல்லுக்குக் காலம், காலை, காலஅளவு, பாய்தல், கால்வாய்/ வாய்க்கால், காற்று, பாதம், பூவின்தாள், அடிப்பாகம், தேர் உருளை, ஏழனுருபு எனப் பொருள் கூறினார்

தாவீது அடிகள் (1970: 33-34). அகநானூற்றில் (151.5) வரும் "கால் விரிவு.." (= இடமெல்லாம் விரிந்து) என்பதில் கால் என்பது இடம் என்ற பொருள் குறித்து வந்துள்ளமையும் ஈண்டு நோக்கத்தக்கது.

ஆவரங்கால் (வலி.கி.79.1)

இப் பெயரை ஆவரம் + கால் எனவும், ஆ + அரங்கு + ஆல் எனவும் பிரித்துப் பொருள் கூறுவர். அச்சுவேலி என்ற இடத்திற்கு அருகிலுள்ள ஓரிடம் ஆவரங்கால். இது வளமான மருதநிலத்து ஊராகும். ஆவரங்கால் என்பதை ஆ + வரம் + கால் எனப் பிரித்துப் பசு வரம் பெற்ற இடம் எனப் பொருள் கொள்வாருமுளர். வேறுவிதமாக இதனை ஆ+ அரங்கு +ஆல் எனப் பிரித்து, பசுக்கள் களைப்பு ஆறும் ஆல மரத்தடி என்றும் பொருள் கூறப்படுகிறது. தெலுங்கு நாட்டிலே 'வரங்கால்' என்ற ஓரிடமுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது (Rog hain: 1982:80). கால் என்பதற்கு வழி எனப் பொருள் கொண்டு ஜே.பி. லூயிஸ் (1917:46) ஆவரங்காலுக்கு விளக்கம் கொடுத்துள்ளமை நோக்கத்தக்கது. இங்கு 'கேவளை' (கோவளை) என்ற காணிப் பெயர் வழங்குகின்றது. அப்பகுதியிற் பசுபதீஸ்வரர் கோயில் உள்ளது. இப்பெயர்த்தோற்றத்தில் தெலுங்குத் தொடர்பு உண்டோ எனவும் நோக்கலாம்.

காரைக்கால் (நல்.36.3)

இவ்வூர் கோண்டாவில் கிழக்குக் கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ளது. முன்பு இப்பகுதி இணுவிலுடன் இணைந்திருந்தது என்பர். இணுவில் கிழக்கில் காரைக்காற் சிவன் கோயில் அமைந்துள்ளது. காரைக்கால், கோயிலும் சுனையும் தோட்டமும் சூழ்ந்த ஓரிடமாகும். இதன் சூழலில் ஐந்து வகையான தெய்வ மரங்கள் நிற்கின்றன. இதனால் இவ்விடம் பஞ்சவடிநிலை எனவும் அழைக்கப்படுகிறது. முன்பு இவ்விடம் காரைக்காடு என வழங்கப்பட்டதென்பர்.

குளமங்கால் (வலி.வ.65.4)

குளம் + மண் + கால் = குளமண்கால் > குளமங்கால். குளமண் = களிமண். களிமண் எடுப்பதற்குச் செல்லும் வழி எனப் பொருள்படும். இது தெல்லிப்பளைப் பகுதியிலுள்ள ஓரிடமாகும். இங்கு வெட்டுக்குளம், கட்டுக்குளம் என்ற இரு சிறு குளங்களுள.

'குளம்' ஈற்று இடப்பெயர்கள்

ஈழத்து ஊர்ப் பெயர்களில் நீர்நிலைகளைச் சுட்டிய பெயர்களே எண்ணிக்கையில் மேம்பட்டுக் காணப்படுகின்றன. வன்னிப் பகுதியிலே குளம், கேணி முதலிய நீர் நிலைப் பெயர்களை ஈறாகக் கொண்ட 332 இடப்பெயர்கள் வழக்கிலுள்ளன என ஜே.பி. லூயிஸ் (1896:205) கணக்கிட்டுள்ளார். நீர்நிலையைக் குறிப்பனவாக மடு, கேணி, நீராவி, ஓடை, குழி, வில், தாழ்வு, மோட்டை, பள்ளம் முதலான சொற்கள் இடப்பெயர் ஈறாக அமைந்து வழங்குகின்றன. நீர்நிலைகளுக்குப் பெயர் வைக்கும்போது விவசாயிகளோ அன்றி ஏனையவரோ அவற்றைச் சூழ நின்ற சிறந்த மரங்களுக்கு முதன்மை அளித்து, அம் மரப்பெயர்களோடு ஈற்றில் நீர்நிலைப் பெயர்களையும் இணைத்து அழைக்கலாயினர். அவ்வாறு பெயரிடும் போது ஒன்றுக்கு மேற்பட்ட மரப் பெயரைச் சுட்டிய குளப்பெயர்கள் காணப்பட்டால் அவற்றுக்கு அடைமொழி கொடுத்து, ஒன்றிலிருந்து மற்றதை வேறுபடுத்தி வழங்கியுள்ளமையையும் நோக்கலாம்.

பச்சிலைப்பள்ளி, கரச்சி, பூநகரிப் பகுதிகளிலே 10ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே பல குளங்கள் அமைக்கப்பட்டுப் பயிர்ச் செய்கைக்கு நீர் பயன்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் ஏற்பட்ட கலவரங்கள், மலேரியா நோய் என்பன காரணமாக இவை கைவிடப்பட்டன. பின்னர் மறுபடியும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தோடு இக் குளங்கள் புனரமைக்கப்பட்டு நீர்ப் பாசனத்திற்குப் பயன்படலாயின. இக் குளங்களும் குளத்தாலமைந்த இடப்பெயர்களும் இப் பகுதியின் பழைமைக்கோர் எடுத்துக் காட்டாக அமைகின்றன.

அக்கராயன்குளம் (கர.181)

அக்கராயன்குளம் என்பது ஆட்பெயரால் அமைந்த இடமாகும். இது, குளத்தையும் அக்கராயன் ஆற்றின் வடிநிலப் பரப்பையும் நடுநிலையமாகக் கொண்ட குடியிருப்பாதலால், இக் குளப் பெயரடியாக இடப்பெயர் அமைந்துள்ளது. இங்கு வளம் செறிந்த நெல் வயல்கள் உள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகப் பெரியகுளங்களாக இரணைமடுச் குளம், அக்கராயன் குளம் ஆகிய இரண்டையும் குறிப்பிடலாம். யாழ்ப்பாணம் - கண்டி பெருஞ்சாலையில் முறிகண்டிக்கு மேற்கே 6 மைல் தூரத்தில் அக்கராயன்குளம் அமைந்துள்ளது. 1896 ஆம் ஆண்டளவில் இக் குளத்திலிருந்து சுமார் 1679 ஏக்கர் நெல்வயல்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டுள்ளது (J.P. Lewis, 1896:205).

இங்கு மிகப் பழைமை வாய்ந்த ஒரு பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. சோழர் ஆட்சி ஈழத்தில் நிலவிய போது நடை பெற்ற வன்னிப் பகுதிக் குடியேற்றத்தில் தொடர்புடையவர்களாகக் காணப்படும் அக்கராயன், பல்லவராயன், கனகராயன், மல்லவராயன் முதலிய தலைவர்களின் பெயர்களால் அமைந்த குடியேற்றங்களில், கனகராயன் தலைமையிலான குடியேற்றத்தையும், இங்கு குளந்தொட்டு வளம் பெருக்கிய செய்திகளையும் கனகராயன்குளம் என்ற பெயர் தாங்கியுள்ளது.

கந்தன்குளம் (கச்.164.அ.4)

இது கிளிநொச்சிப் பகுதியிலுள்ளது. கந்தன் என்னும் ஆட்பெயரால் அமைந்த இடமாகும்.

சுண்டிக்குளம் (பச்.151)

சுண்டி + குளம் எனக் குளம் ஈற்றுப் பெயருடையதாக இவ்விடம் அமைந்தாலும் இங்கு குளங்களில்லை. பதிலாகச் சுண்டி மரங்கள் (கண்டல்-கண்டைமரம்) நிறைந்த பள்ள நிலம் என்ற பொருளில் இவ்விடப்பெயர் தோன்றியுள்ளதெனலாம். யாழ்ப்பாண மாவட்டத்தின் கிழக்குக் கரையோரத்தில் ஆனையிறவுக் கடனீரேரியின் முடிவில் சுண்டிக்குளம் அமைந்துள்ளது.

சேந்தான்குளம் (வலி.வ.63.4)

சேந்தான் + குளம். இது கடற்கரை ஓரத்து ஊராகும். இங்கு குளம் இல்லை. தமிழகத்திலுள்ள சேந்தான்குளத்து மக்கள் இங்கு வந்து குடியேறியபோது இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சேந்தான்குளத்தின் ஒரு பகுதி சேந்தான் புலம் என்று வழங்கப்படுகிறது.

தவசிகுளம் (தென்ம.106.5)

இது கொடிகாமம் பகுதியிலுள்ள ஒரு சிறு பகுதியாகும். தவசி என்ற பெயரினர் ஒருவர் இங்கு வாழ்ந்து, குளம் ஒன்றை வெட்டுவித்தார். அவர் பெயரால் இடமும் குளமும் வழங்குவதாயின. ஞானவைரவர் கோயில் ஒன்றும் இங்குள்ளது.

புங்கன்குளம் (யாழ்.மா.ந.10)

புங்கை + குளம் = புங்கங்குளம். புங்கு எனப்படும் புங்கை மரமும் குளமும் சேர்ந்த நிலையில் இப்பெயர் ஏற்பட்டுள்ளது. இது அரியாலையின் எல்லைப் பகுதியாகும்.

புதுக்குளம் (கர.163.10)

புதிய + குளம் = புதுக்குளம் என்ற நிலையில் இப்பெயர் வழங்கலாயிற்று. இது கரச்சி - ஊரியான் பகுதியில் அமைந்துள்ளது.

வன்னேரிக்குளம் (பூ.176.அ.3)

இது பூநகரிப் பிரிவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள வன்னேரிக் குளத்தை மையமாகக் கொண்ட குடியிருப்பு இடமாகும். இங்கு 1953 இல் குடியேற்றத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது.

'கேணி' ஈற்று இடப்பெயர்கள்

கேணி = சிறுகுளம், கிணறு, அகழி என்பனவற்றைக் குறிக்கும் சொல்லாகும். கேணி என்ற ஈற்றுப் பெயருடையன வாகச் செட்டிக்கேணி, மருதங்கேணி, சித்தன்கேணி என்னுமிடங் கள் காணப்படுகின்றன. கேணியடி என்ற ஓரிடம் திருநெல்வேலி யில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சித்தன்கேணி (வலி.மே.50அ.4)

இது சங்கானைக் கிராமசேவகர் பிரிவில் இடம்பெறு கிறது. சித்தன் என்னும் சித்தர் ஒருவர் இவ்விடத்தில் சில காலம் வாழ்ந்தமையால், அவர் பெயரால் கேணிப்பெயர் வழங்கி, பின்பு அவ்விடத்தையும் சுட்டுவதாயிற்று எனப் பின்னாளில் விளக்கம் கூறுவர் (ஆ.முத்துத்தம்பி:1933:48). தொல்புரத்தை அடுத்து இப் பகுதி காணப்படுவதாற் பண்டைநாளில் இங்கு நிலவிய கோட்டை நாகரிக வாசிகள் பயன்படுத்திய கேணிப் பரப்பிலே பிற்றை நாளிற் சித்தன் என்பவரது தொடர்பு காரண மாகச் சித்தன்கேணி ஆயிற்று என்றுங் கருதப்படுகிறது.

செட்டிக்கேணி (தென்ம.107.1)

செட்டி + கேணி. செட்டிமார் வாழ்ந்த நிலையில் இப் பெயர் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. தென்மராட்சி பகுதியில் செட்டிக்கேணி வளம் நிறைந்த ஓரிடமாகும்

மருதங்கேணி (பச்.147.4 - 148)

மருது + அம் + கேணி = மருதங்கேணி. மருதமரமும் கேணிகளும் முதன்மை பெற்ற நிலையில் மருதங்கேணி என்ற இடப்பெயர் தோற்றம் பெற்றுள்ளது. பச்சிலைப்பள்ளிப் பகுதியில் இவ்வூர் அமைந்துள்ளது. இதனூடாகப் பருத்தித்துறை + வெற்றி லைக்கேணி தெரு செல்கிறது. இதன் கிழக்கே கடல் வளமும், மேற்கே மருதவளமும் சிறந்து காணப்படுகின்றன. இங்கு மருத மரங்கள் பல்வேறு இடங்களிலும் செழித்து நிற்கின்றன. சிறு

குளங்கள் பலவுங் காணப்படுகின்றன. மருதடிப்பிள்ளையார் என்ற ஒரு கோயிலும் உள்ளது. இவ்வூரில் நடைபெறும் 'பூசைப் பேத்தி' என்ற வழிபாட்டின் சிறப்பியல்புகள் ஆராய்ச்சிக்குரியன வாகும்.

இங்கு ஒல்லாந்தரின் கோட்டை அழிபாடுகளும் மற்றும் தொல்லியற் சான்றுகளும் காணப்படுவதைக்கொண்டு, பழைமை வாய்ந்த தொல்பொருள் தளத்திலேயே டச்சுக்காரர் கோட்டை கட்டியிருக்க வேண்டுமென இரகுபதி (1980) கருதுகின்றார். இவ்விடத்தில் தொல்லியற் சான்றுகளாக நாணயங்கள், மட்பாண்ட ஓடுகள், கல்லாயுதங்கள், கண்ணாடித்துண்டுகள், மணிகள் முதலி யன கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு நோக்கும்போது பண்டைக்காலம் முதலாக இவ்விடத்தில் தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது புலனாகின்றது. நாச்சிமாகுளம், ஒல்லாந்தாக்காடு, உடையார் துறை ஆகிய இடங்களும் இங் குள்ளன.

'கொட்டு' முன்னொட்டு இடப்பெயர்

வைரமான பாலை மரத்தின் அடிப்பகுதியை அறுத்து உட்குடைந்து கொட்டுத் தயாரிக்கப்படுகிறது. அதனை நிலத்துட் பதித்துக் (குழாய்க் கிணறுபோல்) கிணறாகப் பயன்படுத்தும் வழக்கம் மட்டக்களப்பில் அண்மைக்காலம் வரையும் இருந்து வந்துள்ளது. இதனைக் 'கொட்டுக்கிணறு' என்பர். இவ் வழக்கம் மன்னாரிலும் மலையாளத்திலும் உண்டு என்பதுங் குறிப்பிடத் தக்கது (இ. பாலசுந்தரம்:1979:297).

> "கொட்டுக்கிணறடைச்சுக் குனிஞ்சி நிண்டு தண்ணியள்ள
> எட்டுப் பணத்தாலே எறிவந்து விழுந்ததப்பா."
>
> (மேலது: பக்.412)

என்னும் நாட்டார் கவியிலும் கொட்டுக்கிணறு என்ற வழக்காறுள்ளமை நோக்கத்தக்கது. மட்டக்களப்பு மாவட்டத்தில் நீரூற்று நிலத்தின் கீழ் மிக அண்மையிலிருப்பதால் இத்தகைய கொட்டுக் கிணறுகள் அமைத்தல் இயன்ற செயலாகும். ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலமட்டத்தில் இருந்து நீரூற்று மிக ஆழத்திலே உள்ளதால் மரத்தாலான கொட்டுக் கிணறுகள்

அமைக்கப்படுவதில்லை. இங்கு மிக ஆழமாக நிலத்தைத் தோண்டி, சுண்ணக் கற்கள், சீமெந்துக் கற்கள் ஆகியனவற்றால் கிணறு கட்டப்படுகின்றது. இப் பின்னணியில் எவ்வாறு கொட்டு என்ற சொல் இடப்பெயராக்கத்தில் வழக்குப் பெற்றுள்ளது என்பது ஆய்வுக்குரியதாகும்.

கொட்டோட்டை (வடம.வ.கி. 144.2)

கொட்டு + ஓட்டை = கொட்டோட்டை. வடமராட்சிப் பகுதியில் கடற்கரையை அண்மித்த இடத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. மணற் பகுதியிற் கொட்டுக் கிணறு அமைத்தல் எளிது. எனவே பண்டைநாளில் இங்கும் கொட்டுக்கிணறு அமைக்கும் முறை பின்பற்றப்பட்டதா என ஆராய்தல் பயனுடையதாகும். யாழ் நகரின் மேற்குப் பகுதியில் 'கொட்டடி' என்ற ஓரிடம் இருத்தலும் நோக்கத்தக்கது.

'துறை' ஈற்று இடப்பெயர்கள்

துறை என்பது தமிழ்ச் சொல். துறை = இடம், நியாய வழி, பகுதி, உபாயம், கடற்றுறை, கடல், ஆறு, வண்ணான் ஒலிக்குமிடம், நீர்த்துறை, சபை கூடுமிடம், பொருட்கூறு, ஒழுங்கு (த.லெ:2005). ஆனால் துறை என்பது வடமொழிச்சொல் மூலத்திலிருந்து அல்லது "Tara" என்ற சிங்களச் சொல்லிலிருந்து வந்திருக்க வேண்டுமென்பர் யாழ்ப்பாண இடப்பெயர்கள் பற்றி எழுதிய ஜே. பி. லூயிஸ் (1917:45). இவ்வாறு பொருளற்ற விளக்கங்கள் யாழ்ப்பாண இடப்பெயர் ஆராய்ச்சியில் இடம் பெற்றுள்ளன என்பதற்கு இதுவுமோர் எடுத்துக் காட்டாகும்.

உடுத்துறை (பச்.148)

இது பச்சிலைப்பள்ளிப் பகுதியில் கிழக்குக் கடற்கரை யோரமாகச் செம்பியன்பற்றுக்குத் தெற்கே அமைந்துள்ளது. இதன் அயலிடங்களாக சோரன்பற்று, மாசார் முதலியன காணப் படுவதால் உடுத்துறைக்கும் இவ்வூருக்கும் சோழர் தொடர்பு இருந்திருக்க வேண்டும். உடுத்துறையின் மேற்கே தொண்டை

மானாற்றின் கரை அமைந்திருப்பதால் இவ்விடம் உள்துறை யாகவும் பயன்பட்டிருக்கலாம். அவ்வகையில் உள்துறை காலப் போக்கில் உடுத்துறை எனவும் மருவியிருக்க வாய்ப்புண்டு.

ஊர்காவல்துறை (தீவு.வ.2)

ஊர் + காவல் + துறை= ஊர்காவல்துறை எனவும், ஊர் + ஆ + துறை= ஊராத்துறை எனவும் சொற்பொருள் புலப்படும் வகையில் பிரித்து விளக்கம் கூறப்படுகின்றது. எவ்வாறு நோக்கினும் இவ்விடப்பெயர் தூயதமிழில் ஆக்கம் பெற்றிருத்தல் உறுதியாகின்றது. ஊரா (ஊர் + ஆ) = ஊர்ப் பசு எனப் பொருள்படும். "ஊரா மிலைக்கக் குருட்டா மிலைக்கும்.. .. " என நாலாயிரத் திவ்வியப்பிரபந்த திருவிருத்தப் பாடலடியில் அச் சொல்லாட்சி பயின்று வருகின்றமையும் கருத்திற் கொள்ளத் தக்கது (த.லெ.500).

இவ்விடத்தில் பசுப்பண்ணை வளம் இருந்திருக்கிறது. அதன் காரணமாக இதற்கு ஊராத்துறை என்று பெயரிட்டனர் என்பதிலும் பொருளுண்டு. 'காராம்பசு' என்ற தொடரும் ஈண்டு நோக்கற்பாலது. அன்றியும் இதன் அயலிலுள்ள நெடுந்தீவுக்குப் 'பசுத்தீவு' என்ற பெயர் வழங்கியதால், இதனை அதனின்றும் வேறுபடுத்திக் காட்ட 'ஊராத்துறை' என்றனர் போலும். கி.பி.12 ஆம் அல்லது 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று நயினாதீவு அம்மன்கோயிற் கற்பலகையிற் கிடைத்துள்ளது. அதில் 'ஊராத்துறை' என்ற பெயர் இடம்பெற்றுள்ளமையைக் காண்க:

.... நாங்கள்.............
..........வந்து ஊராத்துறை
(யில்) பரதெசிகள் வந்து
இருக்க வேணுமென்றும்
....................................'(கா. இந்திரபாலா: 1969)

இரண்டாம் இராஜாதிராஜ சோழனுடைய திருவாலங் காட்டுக் கல்வெட்டிலும் இவ்விடப்பெயர் 'ஊராத்துறை' என்றே குறிக்கப்பட்டுள்ளது (Epigraphica Indica:22:90). இந் நாட்டிற்குப் பின்னாளில் வந்த ஒல்லாந்தரும் அதனையே பயன்படுத்தலா

யினர். மாகனின் படைகள் தங்கியிருந்த இடங்களில் சூகரதித்த (ஊர்காவல்துறை) என்பதும் ஒன்றெனக் கூறப்படுகிறது (Cula vamsa: 1973:83:25-20). முதலாம் பராக்கிரமபாகுவின் (கி.பி.1153-1186) தமிழ்க் கல்வெட்டொன்று இங்கு நடைபெற்ற வணிகம் பற்றிக் கூறுவதாகக் கிடைத்துள்ளது. அதிலும் 'ஊராத்துறை' என்ற பெயரே இடம்பெற்றுள்ளது (K. Indrapala:1963::101-103).

ஊர்காவல்துறை என்ற இடப்பெயர் தமிழகத்திலுள்ள காவலூர் என்ற இடத்துடன் தொடர்புடையதாக அமையலாம். புறநானூறு 80ஆம் பாடலிலே " சோழன் பேரவைக் கோப் பெருநற் கிள்ளி முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனொடு பொருது வென்று நின்ற காலத்துச் சாத்தந்தையார் என்னும் சான்றோர் உடனிருந்து நேரிற் கண்டார்" என்ற குறிப்பு அவ்வை துரை சாமிப்பிள்ளை உரையிற் காணப்படுகிறது. இதுபற்றிக் கல்வெட்டுச் சான்றுடன் கருத்து உரைக்கும் க. த. திருநாவுக்கரசு (1978:88-92), "முக்காவல் நாடு எனும் பகுதி தொண்டை மண்டலத்தின் அல்லது பண்டைத் தமிழகத்தின் வட எல்லையை ஒட்டியதாக இருந்திருக்க வேண்டும் என்பது தெரிய வருகின்றது" என்றார். எனவே தமிழ்நாட்டில் காவலூர் என ஓரிடம் இருந்தமை போன்றே ஈழத்தின் பண்டைய தமிழ் அரசின் காவல்துறையாக இவ்விடம் அமைந்திருக்கலாம் எனக் கருதுதல் பொருத்தமாகும். இதன் மிகப் பழைய பெயர் ஊர்காவல்துறை என்பதேயாகும் என்றும், சிங்களத்தில் கூறப்படும் ஊறாத் தொட்ட என்பது தமிழின் சிதைந்த வடிவமாகும் என்றும் ஜே.பி. லூயிஸ் (1919:80) கருத்துத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்து இடப்பெயர் பற்றி ஆராய்ந்த சுவாமி ஞானப் பிரகாசரும் S.W. குமாரசாமி போன்றோரும் தூய தமிழ்ச் சொற் களின் பொருள் புரியாது மயங்கினர். எனினும் சுவாமி ஞானப் பிரகாசர் பின்னர் இதன் உண்மையுணர்ந்து தாம் எழுதிய கட்டுரைகளில் தம் தவறை வெளிக்காட்டினார் என்பதும் குறிப் பிடற்பாலது (சுவாமி ஞானப்பிரகாசர்:1952:25.27). இவ்விடத் திற்குத் தூய தமிழ்ப் பெயர் அமைந்திருக்க, வேற்று மொழி ஆர்வலர்கள் ஊறாத்துறை, ஊறாத் தொட்ட என அதனைச் சிங்களப் பெயராகக் கண்டனர். Ura என்பது சிங்களத்தில் பன்றி யைக் குறிக்கும் சொல்லாகும். எனவே பன்றியைக் குறிக்கும் Ura என்ற சொல்லிருந்தே Uratara, Uraturai, Urhatturei, Urhavatturei என இவ்விடப்பெயர் மாற்றம் பெற்று வந்ததென்று கூறுவாரு

முண்டு. இது சொற்பொருள் அறியார் மயக்கநிலையின் குறை பாடெனக் கூறுதல் தகும்.

இரண்டாம் பரந்தகசோழன் காலத்தில் (கி.பி.960) அவனது படைகள் ஊராத்தோட்டையில் வந்திறங்கியது என்ற செய்தியும், ஊர்காவல்துறை, திருகோணமலை ஆகிய துறைகள் சோழரின் படைகள் தங்கியிருந்த தளங்கள் என்பதும் அறியப்படு கின்றன. இவ்விடப் பெயர் பாளி நூலாகிய சூளவம்சத்திலே ஸுரகதித்த (ஸுகர = பன்றி - தித்த = துறை) எனவும், பூஜாவலிய, ராஜ வலிய, நிகாயசங்ரய முதலிய வரலாற்று இலக்கிய நூல்களிலே 'ஊராதொட்ட' அல்லது 'ஊராதொட்ட' (ஊறா > ஊரா = பன்றி) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பெயருக்கு விளக்கம் தருவதாகவும், அத்தமிழ்ப் பெயராகிய ஊராத்துறையின் சிங்கள மொழி பெயர்ப்பாகிய 'ஊராத்தொட்ட' என்பதற்கும் விளக்கம் கூறும் வகையிலும் இராஜாவலிய என்ற நூல் ஒரு பூர்வீகக் கதையையும் வருமாறு புனைந்துள்ளது:

> "விஜயவேந்தற்கு மகன் முறையினரும், அவனுக்குப்பின் இலங் கையை அரசாண்டவனுமான பாண்டுவாசன் என்பவனுக்கு, குவேனியைத் தன் துணைவி அல்லள் என்று விஜயன் மறுத் தமையினால் அன்னாளிட்ட சாபத்தின் பேறாக விஜயனுக்கு ஏற்பட்டது போன்ற திவிதோசம் என்னும் கொடியநோய் தோன் றிப் பிடித்தது. அந் நோயைக் குணமாக்குவதற்கு வழி எவன் என்று தேவுக்களை வழிபட்டு வினாவிய போழ்து, பெண் வயிற்றிற் பிறவாதவன் எவனோ அவனாலேயே தோசந் தீரு மென்று திருவுத்தரம் பிறந்தது. அத்தகையோனை ஆராய்ந் தறிந்து வரும்படி, ராகு என்பானை விண்ணவர் வேந்தனான சக்கரன் (இந்திரன்) ஏவ, அவன் மண்ணுலகெலாம் தேடி, மலரிற்றோன்றினவனும், மலராஜன் என்னும் பெயரினனுமான மாலவதேய மன்னனை அறிந்து, அன்னானை ஈழத்திற்கு இழுப்பதற்கு ஒருபாயத்தை ஓர்ந்து, பரத கண்டஞ் சென்று, சூரக (பன்றி) வடிவ மெடுத்து, மலராஜனது நந்தவனத்தை நாசமாக்கி நின்றான். அவ்வனத்தைக் காவல் பண்ணும் பரிசரர் பயந்து, பதைபதைத்து அரண்மனைக்கு அதி விரைவிற் சென்று விளைவதைத் தம் வேந்தனுக்குத் தெரிவித்தனர். வேட்டையில் வெகு தீரனான அவ் வேந்தன் வேலைக்காரரை நோக்கி 'நீவீர் இந்தச் சூரகத்தை என் முன்னே துரத்தி விடு

மின்' என்றனன். அவ்வண்ணம் ஆர நெருங்கப்பட்ட சூரகம் விறுக்கென வேந்தன் முன்னிலையிற் செல்லவே வேந்தனும் விரைந்து வெங்கணை தொட்டனன். தொட்டும் சூரகம் கிஞ்சித் தும் காயப்படாது கடிதோட, வேந்தனும் வேலைக்காரரும் தொடர்ந்து சென்றனர். அது கண்ட சூரகம் சாகரத்திலே பாய்ந்து இலங்கையின் கரையில் ஊராதொட்ட (பன்றித்துறை) என்னும் பெயருடையதாய் உத்தரத் திலேயுள்ள உத்தம துறையின் கண்ணே சேர்ந்தது"

இக் கதையின் போலித்தன்மை இது ஒரு கட்டுக்கதை என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆயினும், ஊராதொட்ட என்பது யாழ்ப்பாணத்திலேயுள்ள ஒரு துறைக்குச் சிங்களவர் இட்டு வழங்கிய பெயர் என்பதைக் குறிக்க புனையப்பட்ட கதையாகும். தூய தமிழில் வழங்கிய ஊரா என்பது ஒலியளவில் சிங்களத்தில் (ura) 'பன்றி' என்னும் பொருள் பயப்பதன் விளைவே இத் தடு மாற்றம் ஏற்படக் காரணம் எனலாம்.

ஊர்காவல்துறைக் கடல் நடுவில் ஹைமன்ஹீல் கோட்டை (Fort Hammenhill) அமைந்துள்ளது. இக் கோட்டையின் உட்புறமாகச் சோழர் கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட கற்பாளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கோட்டையைக் கட்டு வதற்குத் திருக்கேதீஸ்வரத்திலிருந்து கற்கள் கொண்டுவரப் பட்டன. அப்போதே கல்வெட்டு பொறிக்கப்பட்ட இக் கற்பாளமும் கப்பலில் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். இக் கல்வெட்டில் இலங்கை முழுவதும் வெற்றி கொண்ட ஜெயங்கொண்ட சோழ மூவேந்தன் வேளாளர் படைத்தலைவனைப் பற்றிக் கூறப்படு கிறது. இலங்கை முழுவதையும் சோழர் வெற்றி கொண்டது கி.பி. 1017இல் ஆகும். அக் காலத்தில் மாதோட்டத்தில் சோழர் பாணியில் அமைந்த பெருங் கட்டிடம் இருந்திருக்க வேண்டுமென இக் கல்வெட்டைச் சான்று காட்டி கா. இந்திரபாலா (1971:10-11) ஊகந் தெரிவித்துள்ளார்.

இங்கு கடற்கோட்டை ஒன்றைப் போர்த்துக்கேயர் கட்டத் தொடங்கினர் என்றும், அப்போது அக்கோட்டைக்குப் போர்த்துக் கேயர் இட்ட பெயர் "Fortalaza do case" (Fortress of the Quay) என்றும், பின்னர் இக் கோட்டையை 1858இல் டச்சுக்காரர் கைப்பற்றி அழித்து மீண்டும் புதிதாகக் கட்டினர் என்றும் அறியப் படுகிறது. ஊர்காவல்துறையின் ஹைம்மன்ஹீல் கோட்டைக்குத்

தெற்கே எதிர்க்கரையில் இவ்வூர்த் துறையின் நுழைவாயிலில் போர்த்துக்கேயரின் எயிரி (Eyrie) என்ற பழைய கோட்டையின் அழிபாடுகளிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது (இந்திரபாலா: 1965 :59). ஊர் காவல்துறைக் கோட்டையை இவ்வூர்மக்கள் "ஊருண் டிக் கோட்டை" என்று அழைத்தனர் என பால்தேயஸ் (Baladaeus: 1923:190) குறிப்பிட்டுள்ளார்.

வெனிஸ்நகர வணிகனான மார்க்கபோலோ சீனாவுக்குப் போகும் வழியில் ஊர்காவல்துறையில் இறங்கினான் எனவும், இதனைக் "கோளம்" எனக் குறிப்பிட்டுள்ளான் எனவும் அறியப் படுகிறது. வேறு முஸ்லீம் பயணிகள் இதனைக் "கலா" என எழுதியுள்ளனர். வேலணை, அல்லைப்பிட்டி, ஊர்காவல்துறை என்ற மூன்று பகுதிகளையும் உள்ளடக்கிய தீவுப்பகுதியை ஒல்லாந்தர் 'லைடன்' எனப் பெயரிட்டனர். பால்தேயஸ் பாதிரியார் இத்தீவை 'முன்னாள் ஊராத்துறையான லைடன்' (Leydon Olin Ourature) எனக் குறிப்பிட்டார். சைமன் காசிச்செட்டி இதனை 'பன்றித்துறை' எனப் பொருள்படும் "ஊராதொட்ட" என்றார். ஆனால் தீவு முழுவதற்குமுரிய பண்டைப் பெயர் ஊர்காவல் துறை என்றே தோன்றுகிறது. ஊர்கட்கெல்லாம் காவல் செய்யும் துறை என்பது இதன் பொருள். இதனாற்றான், பகைவர்களின் கப்பல்கள் உட்புகா வண்ணம் தடுத்துப் போர் புரிவதற்கு உதவியாக போர்த்துக்கீசரும் டச்சுக்காரரும் ஊருண்டியில் ஒரு கோட்டையையும், கடல் நடுவே ஒரு கோட்டையையும் அரண் களாக அமைத்திருந்தனர். ஊர்காவல்துறை என்னும் தமிழ்ப் பெயருக்குக் காலப்போக்கில் ஒலிஒற்றுமை கற்பித்து, பன்றித் துறை எனப் பொருள்படும் வகையில் "ஊரா தொட்ட" என சிங்களமொழியில் பொருத்தமற்ற விளக்கமும் கற்பித்து, பன்றி வந்தேறிய கதையும் புனையப்பட்டமையைத் தமிழ் அறிஞர் சிலரும் ஒப்புக் கொண்டமை விந்தையாகவே இருக்கிறது.

இங்கு சந்தியோகுமையர், சூசையப்பர், அந்தோனியர், மாதா ஆகியோருக்குரிய தேவாலயங்களும், இந்துக்கோயில் களும் அமைந்துள்ளன. ஊர்காவல்துறை தற்கால எழுத்தாளர் வழக்கிலே 'காவலூர்' என்றும் வழங்கப்படுகிறது. டச்சுமொழியி லமைந்த கயிற்ஸ் (Kayts) என்ற பெயர் வழக்குமுண்டு.

காங்கேசன்துறை (வலி.வ.33)

காங்கேயன் + துறை = காங்கேசன்துறை. இதன் வடக்கே பாக்குநீரிணைக்கடல், தெற்கே மாவிட்டபுரம், கிழக்கே மயிலிட்டி, மேற்கே கீரிமலை என்பனவும் எல்லைகளாக அமைந் துள்ளன.

மாருதப்புரவீகவல்லி என்னும் சோழநாட்டு இளவரசி தன் குதிரைமுகம் நீங்கியதன் கைமாறாக மாவிட்டபுரத்தில் கோவில் கட்டுவதற்கு வேண்டிய பொருட்களைத் தந்தையாகிய சோழ மன்னனிடமிருந்து வருவித்தாள். அப்பொருட்களைக் காங்கேயன் என்பவன் கப்பலில் கொண்டுவந்து கசாத்துறை என்ற இடத்தில் இறக்கினான். இதுவே காங்கேயன் வந்திறங்கிய துறையாகையால் இது அன்றுமுதல் காங்கேயன்துறை என வழங்கப்படுவதாயிற்று என யாழ்ப்பாணவைபவமாலை கூறுகிறது (1939:21). முருகனுக்குக் காங்கேயன் என்றும் பெயருண்டு. எனவே காங்கேயனது திருவுருவச்சிலை கொண்டு வந்து இறக் கப்பட்டதுறை என்பதால் 'காங்கேயன்துறை' என்ற பெயரையும் பெறுவதாயிற்று. மாங்கொல்லை, தையிட்டி முதலிய பல குறிச்சிப் பெயர்களும் இங்கே வழக்கிலுள்ளன.

பண்டைநாளில் காங்கேசன்துறை, கசாத்துறை என வழங்கிற்று என யாழ்ப்பாண வைபவமாலை (பக்.21) கூறுகிறது. இவ்விடத்திலிருந்து பயணிகள் புத்தகாயாவுக்குச் சென்றமையால் இத் துறை காயாத்துறையெனப் பெயர் பெற்றுப், பின்பு அது கயாத்துறை என மருவிற்று என்பர். இங்கு கசாத்துறை ஆனந்தப் பிள்ளையார் கோயிலுமுண்டு. இப் பிள்ளையாரை 'யாத்திரைப் பிள்ளையார்' என்றும் கூறுவர்.

தட்ஷிணகைலாச மான்மியத்திலே சூரனை அழித்த பின்பு, கந்தவேளும் அவர் சுற்றத்தினரும் கப்பலேறி கதிர்காமம் நோக்கி வரும் வழியில் வந்திறங்கிய இடமே காங்கேசன்துறை என வி. குமாரசுவாமி (1935.பக்.26.29) பெயர் விளக்கம் கூறு வதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு பட்டினசபை உள்ளூராட்சி மன்றம் ஆறு வட்டா ரங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. வடகடல் மீன் பிடி வலயமாக இருப்பதால் மீன்பிடித் தொழிலும் இங்கு முதன்மை பெறுகிறது. கப்பல்கள் வந்து பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு ஏற்ற துறைமுகமாகவும் இவ்விடம் விளங்கு கின்றது.

கடற்கரையில் அழகிய சிறுவர் பூங்கா அமைக்கப்பட் டுள்ளது. உல்லாசப் பயணிகளின் நலன் கருதிய பயணிகள் விடுதியும் , நகரப்பாதுகாவலர் நிலையமும் அமைந்துள்ளன. இலங்கையில் மிகப் பெரிய சீமெந்துத் தொழிற்சாலை இங்கேயே அமைக்கப்பட்டுள்ளது. 'காங்கேசன் சீமெந்து', 'லங்கா சீமெந்து' என்பனவும் இங்கேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இத் தொழிற்சாலைக்கு ஏற்ற மூலவளத்தைக் கொண்டதாக இப் பகுதியின் நிலவியற்கை அமைந்துள்ளது. இங்கு புகையிரத நிலையம், நடேஸ்வராக் கல்லூரி என்பனவும் அமைந்துள்ளன.

கொழும்புத்துறை (யாழ்-மா.ந.1.8)

யாழ்ப்பாண மாநகரசபையின் எட்டாம் வட்டாரமாக அமைந்த இடமே கொழும்புத்துறை. யாழ்ப்பாணத்துக்கு மிக அண்மித்து விளங்கும் துறை இதுவே. முன்பு கொழும்புக்குச் செல்லும் பாய் மரக்கலங்கள் (Sohoonere) இவ்வூர் துறையி லிருந்து சென்றதால் கொழும்புத்துறை என்ற பெயர் இதற்கு ஏற்பட்டதென இவ்வூர் மக்கள் கூறுவர். வரலாற்று நூல்களில் காணப்படும் சான்றுகளும் அவர்களின் கருத்துக்களை ஒத்துள் ளன.

இத் துறைமுகம் முன்பு முதன்மை பெற்றுத் திகழ்ந்தது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. கி.பி.1344 இல் இபின்வட்டுட்டா (Ibin Battuta) என்ற முகமதியப் பயணி இத் துறையிலிருந்து பூநகரிக்குச் சென்றான் என்ற செய்தியும், 1560இல் டொன் கொன்ஸன்ரைன் பிறகன்ஸா (Don Constantine Braganza) கொச்சியினின்றும் 99 கப்பல்களுடன் முதலாம் சங்கிலி மன்னனுக்கு எதிராகப் படையெடுத்து கொழும்புத் துறைக்கு வந்த செய்தியும் தொடர்புபடுத்தப்பட்டு, இத்துறையின் வரலாற் றுச் சிறப்பு விளக்கப்படுகிறது. ஆனால் இத் துறை இன்று இதன் பழம் பெருமைகளை இழந்துள்ளது. கொழும்புத்துறையின் மறுகரையிலுள்ள பூநகரி, வெட்டுக்காடு, கௌதாரிமுனை, கல் முனை ஆகிய பெரும் வயற் பகுதிகளிலிருந்து நெல், வைக் கோல், தேங்காய் முதலிய பொருட்களை ஏற்றி வருவதற்கு இத்துறை பயன்பட்டு வந்துள்ளது.

இங்குள்ள ஐயனார் கோவிலுக்கு அப்பாலுள்ள ஒரு வெளியிடம் 'துண்டி' என வழங்கப்படுகிறது. இதன் ஒரு பகுதி

இடுகாடாகும். ஊரின்று துண்டிக்கப்பட்ட இடம் துண்டி எனப் பெயர் பெற்றது போலும். தமிழகத்துப் பழைய 'தொண்டித்துறை' வாசிகளின் பழங் குடியேற்ற இடமாக இவ்விடம் அமைந்து, 'தொண்டி' எனப்பெயர் பெற்றுப், பின்னர் துண்டி என மருவி யிருக்க வாய்ப்புண்டு. கொழும்புத்துறை என்றதும் யோகர் சுவாமி களின் நினைவு முதற்கண் தோன்றுவது உண்மை. யோகர் சுவாமிகளின் நினைவாலயம் இவ்வூருக்குப் பெருமை அளிப்ப தாகும்.

சம்பில்துறை (வலி.தெ.மே.52.10)

இதன் பழைய பெயர் சம்புகோவளம், ஜம்புகோளம், சம்புக்க, ஜம்புகோளப்பட்டணம், ஜம்புத்துறை என்றறெல்லாம் வழங்கிற்று. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகன் புத்த சமயத்தைப் பரப்பும் நோக்குடன் தன் மகளாகிய புத்தபிக்குணி சங்கமித்தையைச் சுற்றத்தினருடன் இலங்கைக்கு அனுப்பினான். அவர்கள் இச் சம்புத்துறையில் வந்து இறங்கித் தரைவழிச் சாலையூடாக அனுராதபுரம் சென்றார்கள் என மகாவம்சம் (19: 35, 22:23,40:35) கூறுகிறது. தேவநம்பியதீசன் அவர்களை வரவேற்று, சங்கமித்தை கொண்டு வந்த வெள்ளரசுக் கிளையை சம்புகோளத்தில் நாட்டினான் என்பதும், அதனருகே 'திசை மருவை' என்னும் இடத்தில் திசமகாவிகாரை என்னும் பெய ருடைய புத்த பள்ளியைக் கட்டுவித்தான் என்பதும் மகாவம்சம் (20:25) கூறும் செய்திகளாகும். இவற்றின் அழிபாடுகள் சம்பில் துறை, திருவடிநிலை ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. சம்புத்துறை சிங்கள இலக்கியங்களில் ஜம்புகோள எனக் கூறப்படுகின்றது. இது சம்புக்கோவளம் என்ற பழைய பெயரின் மருஉ எனவும் கொள்ளலாம். இது மாதகல்துறைக்கு அண்மை யிலுள்ளது.

பண்டைக் காலத்தில் சம்புகோளம், மாந்தை என்ற இரு துறைமுகங்களும் மிகப் புகழ்பெற்று விளங்கின. வங்காளத் திலுள்ள தாம்ரலிப்தி என்னும் துறைமுகத்திற்கும் சம்புகோளத் திற்கும் கடல் வணிகத் தொடர்பு இருந்து வந்தது. பௌத்தம் இங்கு வர முன்பே வடபாலுள்ள சம்புகோளப்பட்டினம், வட மேற்கிலுள்ள மாதோட்டம், கிழக்கேயுள்ள கோணேஸ்வரம் ஆகியவை நாகரிக வளர்ச்சியில் முன்னின்ற துறைமுகங்கள்

என்பதை விஜயன், பாண்டுகாபயன் கதைகள் எடுத்தியம்பு கின்றன (க. சிற்றம்பலம்: 1984:111). தேவநம்பியதீசன் காலத் திற்குப் பின்பு (கி.மு.3ம் நூற்றாண்டு) சம்பு கோளத்துறைமுகம் பெரிதும் பயன்படுத்தப்படாமையினால் அதன் செல்வாக்குக் குறைவதாயிற்று என்றும் கூறப்படுகிறது (க.கணபதிப்பிள்ளை :1962:90).

இவ்விடப் பெயருடன் திருவடிநிலை என்ற இடமும் தொடர்புபடுத்தப்படுவதுண்டு. திருவடிநிலை என்ற இடத்தோடு இராமர் கதையையும் இணைத்துக் கூறும் வாய்மொழிக் கதை ஒன்று வழக்கிலுள்ளது. சீதைக்கு இறுதிக் கிரியை செய்வதற் காக இராமர் இங்கு வந்தார் என்றும், அதன் பொருட்டுக் கடலிலே நீர் எடுக்க ஓரடி எடுத்து வைத்தவுடனே கடலிலே மூழ்கி உயிர் நீத்தார் என்றும், அவரது திருவடி பதிந்த இடமே திருவடிநிலை என்றும் மரபுவழிக் கதைகள் கூறுகின்றன. திருவடி நிலைக்கு அண்மையில் பொன்னாலை வரதராசப்பெருமாள் கோயில் அமைந்திருப்பதும் இம் மரபு வழிக் கதைக்குக் காரண மாயிற்று.

நாவாந்துறை (யாழ்-மா.ந.1.20)

நாவாய் + துறை = நாவாந்துறை. நாவாய் என்பது பழந்தமிழச் சொல் என்பதை புறம்:126:15, நற்றிணை:295:6, மதுரைக்காஞ்சி:81,321 முதலிய சங்கச் செய்யுள்கள் சான்று படுத்துகின்றன. எனவே இவ்வூர் பழந்தமிழர் குடியிருப்பிடமாக இருந்திருக்க வேண்டும். பண்டைக் காலம் முதலாக வணிக நோக்குடன் நாவாய்கள் வந்து சென்ற இடம் என்ற அடிப்படை யிலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். இப்போது மீன்பிடித்துறை யாக இது பயன்படுகிறது. இது யாழ்மாநகரசபையின் கடற்கரை யோரப் பகுதியாகும்.

பருத்தித்துறை (வடம.வ.கி.ந.22)

இலங்கையின் வடகரையில் துறைமுகமும், நகரும் இணைந்த இடமாக பருத்தித்தறை அமைந்துள்ளது. இவ்விடம் 'பருத்தித்துறைமுனை', 'முனை' என்றும் வழங்கிவந்திருக்கிறது. இலங்கையின் புவியமைப்பின் அடிப்படையில் வடக்குத் தெற்காக

முறையே பருத்தித்துறைமுனையையும் தெய்வேந்திரமுனையை யும் நேர்கோடாகக் கொண்டு அளவிட்டு இலங்கையின் நீளம் 270 மைல்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் காலங்களில் இத் துறைமுக நகர் சிறந்து விளங்கியமைக்குச் சான்றாக அக்காலக் கட்டிட இடி பாட்டுச் சின்னங்கள் காணப்படுகின்றன. அத்துடன் இதன் அண் மையில் உள்ள முனையில் அவர்கள் கட்டிய வெளிச்ச வீடு அமைந்திருப்பதும் இதற்குச் சான்றாகும்.

ஒல்லாந்தர் காலத்திற் பருத்திப் புடைவை வணிகமும், சாயமூட்டுந் தொழிலும் பெரிதாக இடம்பெற்றமையால் பிறநாடு களிலிருந்து நூலோ அல்லது புடைவைகளோ இத்துறையில் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டு, அவை சாய மூட்டப் பட்டு, இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். அந்நிலை யில் இத் துறை சிறப்புப் பெயராகப் பருத்தித்துறை என வழங்கப்படுவதாயிற்று. பருத்தித்துறைக்கு அண்மையில் அல் வாய் தெற்கில் பஞ்சுத் தோட்டம் என்ற குறிச்சிப்பெயர் வழங்கு தலும் கருத்தூன்றத்தக்கதாகும். தலைமன்னாரப் பகுதியில் பருத்திப்பண்ணை என்ற இடத்தில் பருத்திச் செய்கை பெரிதும் நடைபெற்றதென்ற செய்தி, இத் துறைமுகத்தை அண்மித்த பகுதியிற் பருத்தித்தொழில் அந் நாட்களில் இடம்பெற்றமையைச் சான்றுபடுத்துகிறது.

வடமராட்சிப் பகுதியில் விளைவிக்கப்பட்ட புகையிலை இத் துறையிலிருந்து மலையாளத்திற்கு போர்த்துக்கேயர் காலம் முதலாக ஏற்றுமதி செய்யப்பட்டதாகப் பால்தேயஸ் குறிப்பிடு கிறார். போர்த்துக்கேயர் பருத்தித்துறை என்ற பெயரை Ponta das Pedras (=Rocky Point) என மாற்றினர். பின்பு அது பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் Point Pedro என ஆங்கிலப் பெயராக வழங்கு வதாயிற்று. டச்சுக்காரர் இங்கு ஒரு கோட்டை அமைத்தனரா யினும் அது அழிந்து போயிற்று என்கிறார் சைமன் காசிச்செட்டி (1834:186). சோழகிணற்றடி, பெரியன் தோட்டம், கொட்டடி முதலான இடங்கள் பருத்தித்துறைப் பகுதியிற் காணப்படுகின் றன. சோழராட்சி நிலவியபோது மக்களின் பாவனைக்காகச் சோழ அதிகாரிகளால் அமைக்கப்பட்ட கிணறு 'சோழர் கிணறு' என்று பெயர் பெற்று, இன்றும் அக் கிணறு பொதுக் கிணறாகப் பயன்பட்டு வருகிறது. பெரியன்தோட்டம் என்பதும், பெரியன் என்ற சோழத் தளபதியின் பெயரினால் ஏற்பட்டதென்பர். அடுத்த

தாகப் பெரிய தேவனத்தாய் என்ற இடத்தில் பெரியதேவன் என்ற சோழத் தளபதியின் தாய் வாழ்ந்தமையால் (பெரியதேவன் + அத்து + தாய்) அப் பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இத் துறைமுகத்திற்கருகே கொட்டடி என்னுமிடம் அமைந் துள்ளது. கொட்டையடி என்பது கொட்டடி என மருவியிருக் கலாம். பருத்தித்துறையில் பருத்தித்தொழில் முதன்மை பெற்றி ருந்த காலத்தில் இங்கு கொண்டுவரப்பட்ட பருத்திப் பஞ்சி லிருந்து கொட்டைகள் (விதைகள்) அகற்றும் சாலைகள் அமைந் திருந்தவிடம் 'கொட்டையடி' என்ற பெயரால் வழங்கியிருத்தல் இயல்பே. மேலும் 'கொட்டு' என்பது ஒருவகைத் தோணியின் பெயராகும். எனவே அத்தகைய கொட்டுத் தோணிகள் வந்து தங்குமிடம் என்ற பொருளிலும் கொட்டடி என்ற பெயர் வழங்கி யிருக்கலாம்.

பண்டிதர் சிலர் இவ்விடப் பெயருக்கு வேறு விளக்கம் கூறுதலும் நோக்கத்தக்கதே. பருதி என்பது அருணன். அருணோ தயம் காணும் துறையாக இவ்விடம் அமைந்தமையால் பருதித் துறை என வழங்கிப், பின்னாளில் பருத்தித்துறை, பருத்துறை என வழங்குவதாயிற்று என்றும் கூறுவர்.

வல்வெட்டித்துறை (வடம.வ.கி.ந.23)

வடமராட்சியில் அமைந்துள்ள வல்வெட்டித்துறை தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பிறப்பிடம் ஆதலால், உலகின் பார்வையைக் கவருமிடமாக விளங்குகிறது.

வல் + வெட்டி + துறை என்ற சொற்கள் தரும் விளக்கத் தின் அடிப்படையில் இவ்விடப் பெயர் விளக்கத்தை ஆராயலாம். யாழ்பாடிப் பாணனுக்கு மணற்றி என்ற இடம் வாலசிங்க மகா ராசனால் பரிசாக அளிக்கப்பட்டது. யாழ்பாடி மணற்றியில் (யாழ்ப் பாணத்தில்) வந்து குடியேற முற்பட்டபோது, தான் அழைத்து வந்த ஐந்துவகைத் தேவர்குலத்தலைவர்களுள் ஒருவனாகிய வல்லித்தேவன் என்பவனை இப் பகுதியில் குடியமர்த்தினான். இந்த வல்லித்தேவனுக்கு அளிக்கப்பட்ட இடம் வல்வெட்டித் துறை எனப் பெயர் பெற்றதென யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவ் வல்லித்தேவனுக்கு ஆடு, மாடுகள் பட்டியாக இருந்தன என்றும், இவ்விடத்தில் பட்டிகள் கட்டுந்துறை இருந்

தமையாலும் இவ்விடம் (வல்லி + பட்டி + தறை) வல்லிபட்டித் தறையாக வழங்கி வந்து, காலப்போக்கில் வல்வெட்டித்துறை எனப் பெயர் பெறுவதாயிற்று என்று கூறுவாருமுளர்.

இப்பெயர்த் தோற்றத்திற்குப் பிறிதொரு காரணமுங் கூறப்படுகிறது. 'தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சி நடைபெற்ற போது அவர்களில் ஒரு பிரிவினரான வல்லவர் என்போர் இங்கு வந்து தாமே வெட்டி உருவாக்கிய துறையே (வல்லவர் வெட்டிய துறை) வல்வெட்டித்துறை என்ற பெயர் பெறுவதாயிற்று என்பர். ஆனால் இதற்கான சான்றுகள் தமிழகத்திலோ அன்றி இலங்கை யிலோ கிடைப்பதாகத் தெரியவில்லை. வல்வெட்டித்துறையின் எல்லைகளாக வடக்கே பாக்குநீரணை, கிழக்கே திக்கம், தெற்கே உடுப்பிட்டி, மேற்கே தொண்டைமானாறு என்பன அமைந் துள்ளன. சமதரையாகக் காணப்படும் இப்பகுதியில் சில இடங் களில் சுண்ணக் கற்பாறைகள் மேலெழும்பிக் காணப்படுகின்றன. இங்கு இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ளது. இத் துறைமுகம் பற்றி இராஜகோபால் (1984:7-10) வருமாறு குறிப்பிட்டுவர்:

> " வல்வெட்டித்துறை ஒரு விசேட துறைமுகமாகவும் கப்பல் கட்டுந் தளமாகவும் கடலோடிகளின் வசிப்பிடமாகவும் இருந்த தென 'Bay of Bengol" என்ற நூல் குறிப்பிடுகின்றது. கப்பல் கட்டுவதிலும் கப்பல் ஓட்டுவதிலும் வல்வெட்டித்துறை மக்கள் சிறப்பு மிக்கவர்கள் என்பதை பல நாடுகளும் அங்கீகரித் துள்ளன. இத்துறைமுகத்திலிருந்து 'வெல்வெற்' என்ற பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. வேறு நாடு களிலிருந்து கொண்டுவரப்பட்ட 'வெல்வெற்' வல்வெட்டித் துறைக் களஞ்சியங்களில் நிறைத்து வைக்கப்பட்டு, ரோம், எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டனவாம். வெல்வெட்டுக்குப் பேர்போன இடமாகத் திகழ்ந்தமையால் 'வெல்வெட்டித்துறை' என அழைக்கப்பட்டு, நாளடைவில் அது வல்வெட்டித்துறை எனப் பெயர்பெற்றது."

வல்வெட்டித்துறையில் புழுவெட்டியந்துறை, பெரிய கல்லடி, கட்டைக்காடு, நெடியகாடு, நெருஞ்சிக்காடு, ஆனை விழுந்தான், வல்வெட்டிக்குறிச்சி, கொண்டைக்கட்டைசெட்டியூர், ஊரிக்காடு, ஊறணி, ஊரிழையான்தெணி, தெனியம்பை, வித்தனை, தீருவில், வேவில், கந்தவனம், நிக்கொடி, கெருடாவில், மயிலியதனை முதலிய குறிச்சிப் பெயர்கள் காணப்படுகின்றன.

வல்வெட்டித்துறைக்குக் கிழக்கே பொலிகண்டி என்னும் ஊர் உள்ளது. அங்கு கந்தவனப்பதி அமைந்துள்ளது. வல்லைச் சிவன் கோயில் வல்லெட்டித்துறைக்குப் பெருமை அளிக்கிறது. பண்டை நாளில் யானை வணிகம் நடைபெற்ற போது காங் கேசன்துறை, ஊர்காவல்துறை, வல்வெட்டித்துறை முதலிய துறைகளினூடாக யானை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். அவ்வாறு ஏற்றுமதிக்காகக் கொண்டுவரப்பட்ட யானைகளில் ஒன்று வீழ்ந்து இறந்த இடத்தை 'ஆனைவிழுந்தான்' என்ற பெயரால் வழங்கியிருக்கலாம். ஊறணி என்ற குறிச்சி கடற் கரையை அண்மித்துக் காணப்படுகிறது. இங்கே இடுகாடும் அமைந்துள்ளது. வல்வெட்டித்துறையின் கிழக்கு எல்லையில் பாழடைந்த ஒரு நீர்ச்சுனை காணப்படுகிறது. இந்நீரூற்று பண்டை நாளில் 'ஊருணி' யாகப் பயன்பட்டிருக்கலாம். அந்த ஊருணி நீரூற்றே பின்னாளில் ஊறணி எனத் திரிந்து வழங்குவதாயிற்று.

செம்பாடு என்ற குறிச்சியை அடுத்து, 'நிக்கெழு' என்ற ஓரிடம் அமைந்துள்ளது. 1830 ஆம் ஆண்டுக்குரிய இப் பகுதித் தோம்புகளில் இவ்விடம் 'நெற்கொழு' எனக் குறிப்பிடப்பட்டுள் ளது. கொழு என்பது கலப்பையைக் குறிக்கும் சொல்லாகும். நெற் செய்கைக்குரிய இடம் என்ற பொருளில் (நெல்+ கொழு=) நெற் கொழு எனப் பெயரேற்பட்டுப், பின்னாளில் நிக்கொழு என மருவிற்றெனலாம். 1617இல் இவ்விடம் 'வல்லை' என வழங்கப்பட்டமையை இங்குள்ள கோயில் இடாப்புக்கள் சான்று படுத்துகின்றன. வல்வெட்டித்துறை 1947இல் பட்டினசபையாகவும் 1972இல் நகரசபையாகவும் வளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது.

'மடு' ஈற்று இடப்பெயர்கள்

மடு என்பது நீர்நிலை, ஆற்றிடைப்பள்ளம், சிறிய கிடங்கு, குளம் என்பனவற்றைக் குறிக்கும் சொல்லாகும். சங்க இலக்கியத்திலும் மடு என்பது குளம் என்ற பொருளிற் பயின்றிருத்தலும் நோக்கற்பாலது. ஈழத்தில் பல ஊர்ப் பெயர்கள் 'மடு' ஈறு பெறுதல் பொது மரபாகக் காணப்படுகிறது.

இரணைமடு (கர.164அ.1)

இரணைமடு என்பது குளத்தையும் குளம் அமைந்துள்ள பகுதியையும் சுட்டும் பெயராக வழங்குகிறது. இரணை = இரட்டை. இவ்விடத்திலுள்ள இரு குளங்கள் வாய்க்கால்களின் மூலம் தொடுக்கப்பட்டிருப்பதால் இதனை இரணைமடு (இரட்டைக்குளம்) என்றனர். இக்குளத்தில் இரண்டு அணைகள் காணப்படுவதால் இரணைமடு எனக் குளத்திற்கும், பின்பு இவ்வூருக்கும் இப் பெயர் ஏற்படுவதாயிற்று. இவ்வூரில் இடம்பெறும் சகல நடவடிக்கைகளும் இக் குளத்தின் நீரை நம்பியே நடைபெறுவதால் இரணைமடு எனக் காரணப் பெயர் பெற்றதென்பர். மட்டக்களப்பில் 'இரணம்' என்பது சோறு என்ற பொருள் தரும் பேச்சு வழக்குச்சொல். சோற்றை 'இரணமணி' என்றும் கூறுவதுண்டு. எனவே உணவளிக்கும் குளம் என்ற பொருளிலும் இரணைமடு பொருள் தருகிறது. இரணைமடு என்பது ஆகு பெயராகும். நெல்மணி என்ற வழக்கோடு இரணைமடு என்பதையும் நோக்குக. கரச்சிப் பகுதியில் அமைந்துள்ள இக்குளம் வடமாகாணத்திலே மிகப் பெரிய நீர்த் தேக்கத்தினை உடையதாகும். இக்குளம் 5350 ஏக்கர் பரப்புடையது. இக் குளத்திலிருந்து 18500 ஏக்கர் வயற்காணிகளுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. இக் குளத்தின் பரப்பும், இப் பகுதிகளில் அவ்வப்போது கண்டெடுக்கப்படும் வரலாற்றுச் சான்றுகளும், இப் பகுதியிலுள்ள தனித்தமிழ் இடப்பெயர்களும் இக்குளத்தைச் சூழவுள்ள பகுதியில் பண்டை நாளிற் பெருங்குடியிருப்பு இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தைத் வெளிப்படுத்துகின்றன. பல்லவ மன்னரில் "இரணதீரன்" என்ற பெயர் கொண்ட ஒருவர் உளர். முதலாம் நந்திவர்மன் (கி.பி.525-550) நாகவம்சத்து சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மனை வென்றான். இம் மன்னனுக்கு "இரணதீரன்" என்ற பெயருமுண்டு. இரணதீரனின் மகனே புலிகேசி. இவர்கள் தொடர்பால் "இரணமடு" என்ற பெயர் தோன்றிற்றோ என்பதும் ஆராயப்பட வேண்டியதாகும்.

இப்பகுதி இலங்கையின் அடர்த்தியான காட்டுப் பகுதிகளில் ஒன்றாக இருந்தது. காலப்போக்கில் நாட்டிலேற்பட்ட சனத்தொகைப் பெருக்கத்தின விளைவாக, இப் பகுதியில் காடழித்து மக்கட் குடியேற்றம் ஏற்படுவதாயிற்று. இக் குடியேற்றம் இங்கு அமைந்திருந்த இரணைமடுக் குளத்தை நம்பியே நடை

பெற்றிருக்க வேண்டும். இலங்கையில் 1935இல் நில அபிவிருத்திச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் முதன்முதலாக வடமாகாணத்தில் இரணைமடுக் குளத்தைச் சார்ந்து கிளிநொச்சிப் பகுதியில் குடியேற்றத் திட்ட நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன. இரணைமடுக் குளத்தைத் தொடுத்த வண்ணம் கிளிநொச்சி, பரந்தன், உருத்திரபுரம், வட்டக்கச்சி, முரசு மோட்டை முதலிய குடியேற்றத் திட்டங்கள் செயற்படுத்தப்படலாயின.

இவ்விடத்தின் அயற் பகுதியாக கிருஷ்ணபுரமும், இன்னொரு பகுதியாக செல்வபுரமும் அமைந்துள்ளன. கிருஷ்ணபுரத்திலே முன்னொரு நாள் மக்கள் காடழித்து வளமாக்கிக் கொண்டிருக்கும் போது நாகமொன்று அவர்களைச் சீறி எதிர்கொள்ள, காளிங்கனில் நடம் புரிந்த கிருஷ்ணபகவானை நினைந்து "கிருஷ்ணா", "கிருஷ்ணா" என மக்கள் அலறியதும், நாகம் திசை திரும்பிச் சென்றதாகவும், கண்ணனின் திருவருளை உணர்ந்த அம் மக்கள், அவ்விடத்தே ஆலயம் அமைத்து, அவ்வாலயத்திற்கு கிருஷ்ணபுரம் என்ற பெயர் சூட்டி வழங்கி வரலாயினர் எனவும் கூறப்படுகிறது.

செல்வபுரம் என்ற இடமும் முன்னாள் காடாக இருந்ததென்றும், காலப்போக்கில் காடழித்துக் களனி ஆக்கி வளம் கொழிக்கும் பகுதியானதும் அவ்விடத்திற்குச் செல்வபுரம் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகின்றது.

விசுவமடு (கர.168.5)

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் 10ஆம், 13ஆம் மைல் கற்களுக்கிடையில் விசுவமடுக் குளத்தினை நடுவணாகக் கொண்டு இவ்விடம் அமைந்துள்ளது. 1966இல் இங்கு இளைஞர் குடியேற்றத் திட்டம் தொடங்கப்பட்டிருந்தது. குளத்தின் பெயர் இடத்தையும் சுட்டுவதாயிற்று. விசுவர் என்ற ஆட்பெயரடியாக இப்பெயர் வந்திருக்கலாம் என்பர்.

'மோட்டை' ஈற்று இடப்பெயர்கள்

மோட்டை < ஓட்டை = நீர் கசிந்து வெளியேறும்படி வயற் பரப்புத் துவாரம் பட்டிருக்கை (த.லெ.6: 3384). மோட்டை என்பது

பள்ள நிலம், சிறுகுளம் என்பனவற்றைக் குறிக்கும் சொல்லாகும். புல்மோட்டை (திருகோணமலை), காயாமோட்டை (புத்தளம்) முதலான இடப்பெயர்களும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியே காணப்படுகின்றன.

ஊற்றுமோட்டை (கர.103.8)

கிளிநொச்சிக்கு மேற்கே அமைந்துள்ள முறிப்புக் குளத்திற்கு அண்மையிலுள்ள காட்டுப் பகுதி ஊற்றுமோட்டை எனப் பெயர் பெறும். இக் குளம் பற்றி அவ்வூர் மக்களை விசாரித்த போது இக் குளம் வற்றாத தன்மையுடையதென்றும், அதன் அடியில் ஊற்றுக் காணப்படுகிறதென்றும், அவ்வூற்றுக் காரணமாக இக் குளமும், இக் குளம் சூழ்ந்த இடங்களும் ஊற்று மோட்டை எனப் பெயர் பெற்றதென்றும் கூறினர். இங்கு பழங் கால அழிபாட்டுச் சின்னங்களாகக் கற்றூண்களும் தொல்லியல் தடையங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நீர் வளம் கொண்ட இப்பகுதி பண்டைத் தமிழரின் குடியிருப்புத் தளமாக அமைந் திருக்கலாம் என ஊகிக்க இடமேற்படுகிறது.

பண்டிமோட்டை (கர.163.8)

முரசுமோட்டைக்கு அண்மையில் இவ்விடம் அமைந் துள்ளது. இது வளமான மருத நிலத்தூராகும். பன்றி > பண்டி + மோட்டை. பன்றிகள் கூட்டமாக நீர் அருந்த வருமிடம் என்ற பொருளில் இவ்விடப் பெயர் தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.

முரசுமோட்டை (கர.163.164)

மோட்டை = பள்ளநிலம். இயற்கையாகவே பள்ளமான இப் பகுதி மோட்டை என்ற இயற்பெயரால் வழங்குவதாயிற்று. பின்னர் 'முரசு' என்னும் அடையை முன்னொட்டாகப் பெற்றுள்ளது. முரல் > முரல்தல் > முரலல் = ஒலித்தல். முரசு என்ற முன்னொட்டுச் சொல் குளத்திலிருந்து வடிந்தோடும் நீரோசையைச் சுட்டி, ஒலியெழுப்பும் குளம் என்ற பொருளில் முரசு மோட்டை என்ற பெயர் பெற்றதெனலாம். வளமான மருத நிலத்தூர் முரசுமோட்டை. கிளிநொச்சிப் பகுதியில் பெரிதளவு

நெல் விளைச்சல் தரும் பகுதியும் இதுவேயாகும். பரந்தன் - முல்லைத்தீவு நெடுந் தெருவின் முதலாம் + நான்காம் மைற் கற்களுக்கு இடைப்பட்ட பகுதியே முரசுமோட்டை. இங்கு கேற்றுக்கண்டி, பழையகமம் என்னும் இரு பகுதிகளுள்ளன. அம்மன், முருகன், பிள்ளையார் ஆகிய தெய்வங்களுக்குரிய கோயில்களுமுள்ளன.

'வில்' ஈற்று இடப்பெயர்கள்

வில் ஈற்று இடப்பெயர்களின் அடிப்படையில் ஈழ வரலாற்றில் பல பிழையான தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதை முதலில் குறிப்பிடுதல் பொருத்தமானது. வில் என்ற சொல்லுக்குப் பல்வேறு பொருள்கள் கூறப்படுகின்றன. வில் என்னும் சொல்லானது, அம்பு எய்தற்குரிய கருவியாகிய 'வில்' (தொல்பொருள்-638), வில்லின் 'நாண்' (இலக்கண விளக்கப் பட்டியல்-608, உரை:பக்.574), வானவில் (நெடுநல் வாடை-109), ஒளி (சீவகசிந்தாமணி 2959), 'வில்மாடம்', விற்போல் வளைந்த கட்டிடப்பகுதி, 'வில்யாழ்' (பெரும்பானாற்றுப் படை 182), 'வில்லரணம்' (முல்லைப்பாட்டு 42), 'விற்றல்' (குறள்-220) முதலானவற்றுடன் தொடர்புடையதாகும் (த.லெ.6:3708).

இத்தகைய இலக்கிய வழக்குகளைவிட, ஈழத்துப் பேச்சு வழக்கில் வில் என்பது பெருங்குளத்தைக் குறிக்கும் வழக்குச் சொல்லாகும். வளைந்த இடம், அல்லது வளைவாக நீர் தேங்கி நிற்கும் இடத்தைக் காரணப்பெயராக 'வில்' என்பது குறித்து வழங்கிற்று. 'வில்' என்ற தமிழ்ச் சொல்லே சிங்களத்தில் 'வில' என்றாகிக் குளத்தைக் குறிக்கிறது. தமிழ் மொழியிலிருந்து காலத் திற்குக் காலம் சிங்களமொழி பல்வேறு சொற்களைக் கடன் பெற்றுள்ளது. அவற்றுள் குளத்தைக் குறிக்கும் வில் என்ற சொல்லும் ஒன்றாகும்.

இவ்வாறிருக்க, யாழ்ப்பாண இடப்பெயர் பற்றிய தம் கட்டுரையில் எஸ். சபாரத்தினமுதலியார் (Sabaratna mudaliyar. 1917: 170) "தமிழில் ஊர்ப்பெயர் விகுதியாக 'வில்' என முடிவுறும்போது எவ்வித பொருளும் அதற்கு இல்லை" என்று கூறினார். இது தமிழில் அவருக்குள்ள பயிற்சிக் குறைவினைக் காட்டுகின்றது. அவருக்கு முன்பு யாழ்ப்பாண இடப்பெயர் பற்றி

எழுதிய ஹோர்ஸ்பேர்க் (Hers burgh:1916:55) என்பவரும் தமிழில் இடப்பெயர் இறுதியாக வரும் 'வில்' என்பதற்கு எவ்வித பொரு ளும் இல்லை என ஆய்வின்றி எழுதினார். இவர், இத்தாவில், இணுவில், உடுவில், கெருடாவில், கோண்டாவில், நுணாவில், மட்டுவில், மந்துவில், மல்வில், மிருசுவில், முகவில் ஆகிய 12 ஊர்ப் பெயர்களைத் தந்து, இவையாவும் சிங்களப் பெயர்களின் சிதைவாகத் தமிழில் வழங்கின என்றார். ஆயினும் அப்போ திருந்த தமிழறிஞர்கள் இதனை மறுக்கத் துணியாத போது, ஜே.பி.லூயிஸ் (J.P. Lewis: 1917,171) என்ற ஆங்கில அறிஞர் அக் கருத்தை மறுத்து, இதனைக் குறித்து ஆராய வேண்டும் என்றும், இது போன்ற பெயர்கள் மன்னார் மாவட்டத்தில் 'வில்', 'வில்லு' என்ற ஈற்றையுடையனவாக உள்ளன என்றும் துணிந்து கூறினார்.

ஆனால் அதே ஆண்டில் இடப்பெயர் பற்றி எழுதிய சுவாமி ஞானப்பிரகாசர், ஹோர்ஸ்பேர்க் குறிப்பிட்ட 12 'வில்' ஈற்றுப் பெயர்களுடன், மேலும் கண்டுவில், காவில், கூவில், கொணாவில், சுளுவில், தளுவில், தலாவில், நந்தாவில், நீவில், பண்டாவில், யாவில், வேவில் ஆகிய 12 இடப்பெயர்களைக் குறிப்பிட்டு, ஹோர்ஸ்பேர்க்கின் திரிபுபட்ட கருத்தை அவ்வாறே ஏற்று, 'வில்' ஈற்று இடப்பெயர்கள் யாவும் சிங்களப்பெயரின் சிதைவென்றார் (1917:168). இதனைச் சாதகமாகக் கொண்ட ஹோர்ஸ்பேர்க் (B.Hersburgh : 1917:173) பின்வருமாறு கூறியதில் வியப்பில்லை:

> "Fr. Gnanaprahasar accept my artical as placing beyond doubt the fact of a Sinhalese occupation of the Jaffna Penninnsula antecedent to the Tamil period."

இக் கூற்றிலிருந்து, அக் காலத்தில் வாழ்ந்த சுவாமி ஞானப்பிரகாசர் உட்பட சகல அறிஞர்களும் ஈழத் தமிழரது பண்டைய வரலாற்றை மறைக்க இடப்பெயர் ஆராய்ச்சியை அரசியல் நோக்கத்துடன் நடாத்தினரோ என்ற ஐயம் எழுகின்றது. மேலே எடுத்துக் காட்டியனவற்றால் 'வில்' என்பது தமிழ்ச் சொல் என்பதும், அச் சொல், வில் போன்றமைந்த குளங்களைச் குறிக்கப்பயன்பட்டது என்பதும், குளங்களைச் சுட்டிய 'வில்' ஈற்றுப் பெயர்கள் அக் குளங்களைச் சூழ்ந்த இடங்களையும்

இருமடி ஆகுபெயராய்க் குறித்து நின்றதும் புலனாகின்றன. இக் கருத்துக்களை மேலும் சான்றுபடுத்துவதாக பொ. இரகுபதி அவர்களின் கூற்று (1983: 438) அமைவதால், தம் மதம் நிறுவுதல் என்னும் உத்திக்கமைய அவர் கருத்தை ஈண்டுத் தருதல் பொருத்தமானது:

> ":Another feature of the surface water of the penninsula is the "Vil" type of ponds. Some of these ponds are formed naturlly by the formation of shallow pits where certain areas of the lime- stone beds dissolve in the water....... The ancient had a system of rasing a half circule bund (that rendered the term vil for the ponds?) and during drought times at least muddy water could be seem preserved by this half circle bund. This could be observed in South India and in Sri Lanka espe cially in the arid plains. In the penninsula these innumerable "Vil" ponds later became nucleir for the settlements, and the name of the "Vil" became the name of the villege."(1983:438).

எனவே, வில் ஈற்று இடப்பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்கள் என்பதும், அவை பண்டைத் தமிழரின் குடியிருப்பிடங் கள் என்பதும் உண்மை என்ற அடிப்படையில் வில் ஈற்று இடப்பெயர்களின் விளக்கம் இங்கே ஆராயப்படுகிறது.

இணுவில் (வலி.தெ.57)

இணு + வில் = இணுவில். இணு = மூங்கில். இங்கு மூங்கில் அடர்த்தியாக இருந்த நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக் கலாம். இணுங்குதல் = ஒடித்தல் (தமிழகராதி: 34) எனவே இணுவில் என்பது உடைந்த குளம் எனப் பொருள்படும். யாழ்ப் பாணம் + காங்கேசன்துறை சாலையின் 4ஆம் கட்டையடியைச் சூழவுள்ள பகுதியே இணுவில். இதனூடாக வலிகாமத்தின் பல இடங்களுக்கும் செல்லும் தெருக்கள் அமைந்திருப்பதால் இவ்வூர் நடுநிலையமாகவுள்ளது. இவ்வூர், இணுவை, இணுவை யம்பதி என்றும் வழங்கப்படுகிறது. இதனைச் சிங்களப் பெயர் என்று கூறும் யாழ்ப்பாண வைபவகௌமுதியின் விளக்கம் வரு மாறு அமைகிறது:

'இப்பெயர் ஆதியில் ஹினிவில் அல்லது இனிவில் என்றே வழங்கிற்று. ஹினிவில் என்பது சின்னக்குளம், சின்னவயல் வெளி எனவும், இனிவில் என்பது உடைந்த குளம், பிரித்த வயல்வெளி எனவும் பொருள்படும். இனிவில் என்பதே மருவி இணுவில் ஆயிற்று.'

தமிழரசர் காலத்தில் திருக்கோவலூரிலிருந்து வருவிக்கப் பட்ட பேராயிரமுடையான் என்னும் வேளாளனும் அவனது பரிவாரங்களும் இணுவிலிற் குடியமர்த்தப்பட்டனர். (யாழ்ப்பாண வைபவமாலை: 28). அப்போது தலைமைப் பேரூர்களாக விளங் கிய 12 ஊர்களில் இணுவிலும் ஒன்றாகத் திகழ்ந்திருக்கிறது. பேராயிரவருக்குப் பின்பு கலிங்கராயன் இங்கு தலைமைப் பதவி பெற்றிருக்கிறான். கலிங்கராயருக்குப் பின் அவர் மகன் கைலாயநாதன் ஆட்சிப் பொறுப்பேற்று இணுவிலை ஆண்டு வந்தான். இவர்களது அரச பூந்தோட்டம் அமைந்த இடமே ('மன்னன் தோட்டம்') மன்னந் தோட்டம் என இன்றும் அழைக்கப் பட்டு வருகின்றது.

இங்குள்ள கந்தசுவாமி கோயிலின் அருகில் 'காக்காய்க் குளம்' என்ற ஒரு சிறுகுளம் இருந்து தூர்ந்து போய்விட்டதாகக் கூறப்படுகிறது. 'கமத்தான்' என்று அழைக்கப்பட்ட குறிச்சி தற் போது 'கமட்டான்' என மருவி வழங்குகிறது. இது கமக்காரர் சேர்ந்து வாழ்ந்த இடமாக இருக்கலாம். இதன் குறிச்சிகளாக மஞ்சத்தடி, இளந்தாரி கோவிலடி, பாலவோடை, பூவோடை, பருத்தியடைப்பு, மடத்துவாசல், கொட்டையடி, பின்னல், கமட் டான், தம்புளான்வத்தை, மன்னன்தோட்டம் என்பன விளங்கு கின்றன.

சித்தர்நிலை எய்திய 'இளந்தாரி' என அழைக்கப்பட்ட ஒருவரும் இங்கு வாழ்ந்திருக்கிறார். இப்பெரியார் வாழ்ந்த இடம் 'இளந்தாரி கோவிலடி' என வழங்குகிறது. இங்கு பரராசசேகரப் பிள்ளையார்கோயில் உள்ள பகுதி 'பருத்தியடைப்பு' எனப்பெயர் பெற்றுள்ளது. இங்கு முன்பு பருத்திச்செய்கை இடம்பெற்றிருக் கலாம். கருணாகரன் என்ற வேளாளர் தலைவன் கட்டிய கரு ணாகரப்பிள்ளையார் கோயிலிற் சிதைந்த நிலையில் ஒரு கல் வெட்டும் காணப்படுகிறது. இணுவிலின் கிழக்கேயுள்ள சிறுபகுதி 'மஞ்சத்தடி' எனப் பெயர் பெறும். இங்குள்ள கந்தசுவாமிகோயில் தேரானது (மஞ்சம்) அருங்கலை வேலைப்பாடுகள் பொருந்தப்

பெற்றதாகும். சிறப்பு வாய்ந்த அத் தேர் இங்கே முதன்முதலாகச் செய்யப்பட்டமையால் இவ்விடத்திற்கு மஞ்சத்தடி எனப் பெயர் வழங்குவதாயிற்று.

'வரகவி' எனப் புகழ் பெற்ற இணுவில் சின்னத்தம்பிப் புலவர், இணுவில் கோயில்கள் பற்றிச் சிற்றிலக்கியங்கள் பாடி யுள்ளார். இங்குள்ள கோயிற் பெயர்களை நோக்கும்போது இணுவில் வரலாற்றுப் பழைமை மிக்கதென்பது புலனாகும். சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் தமிழகத்திலிருந்து வருவிக்கப்பட்ட கோவூர் வேளாளரிற், கலைகள் அனைத்தும் கற்றறிந்தோர் பலர் இங்கு குடியமர்த்தப்பட்டிருந்தனர். அத்துடன் கலிங்கமாகோனின் மரபினர் பலர் இங்கு வாழ்ந்து வந்ததாக அறியப்படுகிறது. இவர்களே இங்கு பல கோயில்களைக் கட்டி யவர்களுமாவர்.

இங்கு, அமெரிக்க மிசனரிமார் மருத்துவமனை, பாட சாலை என்பன அமைத்துச் சமயப் பணிகளில் ஈடுபட்டு வந்துள் ளனர்.

இத்தாவில் (பச்.150)

இத்தி > இத்தா + வில் = இத்தாவில். இத்தி என்ற மரப்பெயர் அடியாக இப் பெயர் ஆக்கம் பெற்றுள்ளது. பச்சி லைப் பள்ளிப் பகுதியல் அமைந்துள்ள இவ்வூரில் 'இத்தாவில்' என்ற பெயருடைய குளமொன்றுமுளது. இத்தாவில் என்பதை குமாரசாமி (1918:23) சிங்களப் பெயரெனக்கொண்டு, அலரிச் செடிச் சாதியைச் சேர்ந்த 'இத்த' என்ற மரப்பெயர் அடியாகவே இப் பெயர் தோற்றம் பெற்றதெனப் பிழைபடக் கூறினார். இதன் குறிச்சிப் பெயர்களாக கோவில்காடு, ஏழுபுளியடி, வெட்டுக்காடு, தேனாவில், அரசடிக் கேணி, பறையன்குளம் என்பன காணப்படு கின்றன. இவ்வூர் முன்பு காட்டுப் பகுதியாக இருந்து, பின்பு குளங்கள், கேணிகள் அமைக்கப்பட்டு விவசாயப் பகுதியாக அமைந்துள்ளது எனக் கூறலாம்

உடுவில் (வலி.தெ.56.6)

உடு + வில் = உடுவில். உடு = நட்சத்திரம். உடுவில் வயல்வெளிகளாற் சூழப்பட்ட அழகிய ஊராகும். இவ்வூர்ப்

பெயர் விளக்கம் மேலும் ஆராயப்பட வேண்டியுள்ளது. இவவூர் கந்தரோடை, சுன்னாகம், இணுவில், மானிப்பாய் ஆகிய ஊர் களின் நடுவே அமைந்துள்ளது.

கணுவில் (வடம. தெ.மே.ப.37.6)

இது நெல்லியடிப் பகுதியிலுள்ள ஓரிடம். பண்டை நாள் முதலாக வடமராட்சியில் புகழ்பெற்று விளங்கும் வல்லிபுர ஆழ் வார் கோயிலின் செல்வாக்குக் காரணமாக இவ்விடம் கண்ணன் பதி என வழங்கிப், பின்னாளில் கண்ணாவில் > கண்ணுவில் > கணுவில் எனத் திரிந்து பெயர் பெறுவதாயிற்று என்பர்.

கூவில் (வலி.வ.63.1)

கூவல் > கூபம். கூபம் என்பது = கிணறு, நீரூற்று என்று பொருள் தரும் சொல்லாகும். கூவல் என்பதே கூவில் எனத் திரிந்தது எனக் கொள்வதில் தவறில்லை. தெல்லிப் பளைக்கு வடக்கே இவ்விடம் அமைந்துள்ளது.

கூடல் என்பது பனஞ்சோலையைக் குறிக்கும் சொல் லாகும். கூவிலிற் பனஞ் சோலைகள் நிறைந்து காணப்படு கின்றன. இதனடிப் படையில் கூடல் என்ற சொல்லே நாளடைவில் கூவில் எனத் திரிந்திருக்க வேண்டும் என்கிறார் த. சண்முக சுந்தரம். இதன் அயற் பதிகளான மாரீசன்கூடல், மயிலன்கூடல் என்ற ஊர்களும் கூடல் ஈற்றுப் பெயர் பெற்றிருத்தல் இக் கருத்தை மேலும் சான்றுபடுத்துகிறது.

கீரிமலை நீரூற்றுக்கு அருகே கூவில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணப் பகுதியில் பண்டை நாள் முதலாகப் புனித நீர்க் கிணறாகப் கீரிமலைநீரூற்று போற்றப்பட்டு வருகிறது. புலோலி தெற்கு குறணங்கவாளி என்னுமிடத்திற்கு அண்மையிலும் கூவில் என்ற ஓரிடமுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கெருடாவில் (வடம.வ.கி.123.1,தென்ம.21.3)

கருடன் > கெருடன் > கெருடா + வில் = கெருடாவில். கருடப் பறவையை வழிபட்ட இடம், பின்னாளில் கெருடாவில் எனப் பெயர் பெறுவதாயிற்று. வடமராட்சியிலும் தென்மராட்சியி

லும் கெருடாவில் என்ற இரு இடங்கள் இருப்பதும் குறிப்பிடத் தக்கது. பண்டை நாள் முதலாக வடஇலங்கையில் பொன்னாலை கிருஷ்ணன் கோயிலும், வல்லிபுர ஆழ்வார்கோயிலும் புகழ்பெற்று விளங்கலாயின. அப் பின்னணியில் கருடன் முதன்மை பெற்று, இவ்விடங்கள் கருடன்வில் எனப் பெயர்பெற்று, பின்னாளில் கெருடாவில் எனத் திரிபடைந்து வழங்கியிருக்கலாம். பருத்தித் துறையிலிருந்து கடற் கரையோரமாகப் பொன்னாலைக்குச் செல் லும் வழியில் வல்வெட்டித்துறைக்கு மேற்கே இரண்டு மைல் தொலைவில் கெருடாவில் அமைந்துள்ளது.

சாவகச்சேரிப் பகுதியிலுள்ள ஒரு குளத்தினருகே கருடப் பறவை ஒன்று வாழ்ந்து வந்ததென்றும், அதனை அப் பகுதி மக்கள் வழிபட்டு வந்தனர் என்றும், அதனால் அவ்விடமும் கருடாவில் எனப் பெயர் பெற்று, பின்னர் கெருடாவில் என மருவிற்றென்பர்.

கெல்லாவில் (வலி.தெ.மே.39.3)

கல்லுதல் = தோண்டுதல்; கல்லா = தோண்டப்படாத; குளத்தின் அணைக்கட்டை அதன் நீர்ப் பெருக்குத் தோண்டாத, துளைத்து உடைக்காத குளம் எனவும் பொருள் குறிக்கும்.

இது மாதகல் பகுதியிலுள்ள ஓரிடம். கல்லாவில் > கெல்லாவில் எனத் திரிந்து வழங்கிற்று. பேச்சு வழக்கில் அகரம் எகரமாகத் திரிதல் பொதுவானதாகும்.

கொக்குவில் (நல்.36அ)

கொக்கு + வில் = கொக்குவில். கொக்கு என்பது பற வை, மாமரம், குதிரை, செந்நாய், மூலநட்சத்திரம் என்ற பொருள் களைச் சுட்டும் சொல்லாகும் (தமிழ்கராதி:104). கொக்குவிலின் வடக்கே நந்தாவில் என்ற பெருங்குளம் ஒன்று அமைந்துள்ளது. இக்குளத்தில் நிறைந்து காணப்பட்ட கொக்குகள் இவ்வூர்ச் சோலைகளிலும் தங்கியமையால் கொக்குவில் எனப் பெயர் பெற்றது எனக் கொள்ளுதல் பொருந்தும். கொக்குவிலின் அயற் பதியாக ஆனைக்கோட்டை அமைந்துள்ளது. கொக்கு = குதிரை. அவ்வகையில் கொக்குவில் பதியுடன் குதிரையைத் தொடர்புபடுத்

தலாமோ என்பதும் ஆய்வுக்கு உரியது. இக் குளத்தின் அருகே குதிரைப்படை தங்கியிருந்திருக்கலாம். இது தொடர்பாக ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1933:17) குறிப்பிடும்போது,

> "யாழ்ப்பாணக் குடியேற்றம் ஏற்பட்டபோது நல்லூரை அடைந்த இராசகுமாரன் யானைப்பந்தி, குதிரைப்பந்திகளும், யானை குதிரை ஏற்றச்சாரி வீதிகளும் செய்வித்து நல்லூரைச் சிறந்த அரசாக்கினான்."

எனக் கூறுவதும் நோக்கத்தக்கது. இதனை அடிப்படையாகக் கொண்டு நல்லூரில் ஆனைப்பந்தி என்ற இடம் அமைந்திருப்பது போன்று, நல்லூருக்கு அயலிலே உள்ள கொக்குவிலில் குதிரைப் பந்தி அந்நாளில் அமைந்திருக்கலாம் என்ற கருத்தும் எண்ணத் தக்கதாகும். களஆய்வில் கொக்குவில் - கோண்டாவில் பகுதிக்குரிய தோம்புகளைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அதில் இவ்விரு ஊர்களில் இடம்பெறும் குறிச்சிப்பெயர்கள், காணிப்பெயர்கள் முதலியவற்றை அறியக் கூடியதாக இருந்தது. இப் பெயர்கள் ஆய்வுக்குப் பயன்படத் தக்கவை என்ற அடிப்படையில் இவை இங்கே தரப்படுகின்றன:

> பிரம்படி, தலையாளி, நந்தாவில், எருக்கலம்பிட்டி, கற்புலம், காட்டுப்புலம், குளுவாப்புலம், கொழுவற்புலம், கலியபுலம், காலிங்கராயன்புலம், மந்திப்புலம், ஓடைப்புலம், தாழ்வுப்புலம், ஐயன்பெருமாள்புலோ, கொற்புலோ, கோணாவளை, ஆத்திக் கொக்கன், கல்நிலமும் சீலக்காடும், அல்லல்குடி, ஒல்லை, பயிரக்கட்டை, பயிங்கட்டை, முல்லைக்கட்டை, ஆழ்வாக்கட்டுவான், நான்சிசெம்பாடு, புளியங்கண்ணடி, புளியோடை, கலட்டி, பயிரக்கட்டி, குளங்கரை, குரக்கன்சாட்டி, எள்சாட்டி, கம்பம்சாட்டி, வல்லுவெட்டி, விழாத்தியடி, கரவில்லடி, புளியடி, ஆத்தியடி, ஒதியடி, புன்னையடி, நறுவிலியடி, முடவன்ஆலடி, அயிஞ்சிலடி, தெற்கீரி, கூழாக்குழி, சலிக்கண்டவத்தை, பெரியசீமா, பருத்திச்சீமா, பத்தினிசீமா, பாலன்சீமா, மருதன் சீமா, ராமன்சீமா, மருதஞ்சீமா, பழையகுடியிருப்பு, நெரியொல்லை, கரம்பன் ஓடை, ஆனைவிழுந்தான், பத்தாவளை, சலம்பன், புற்பத்தை, பெரியவளவு, அரிக்கன்திடல், மண்டைக் கள்ளி, மாப்பியன், வாரித் தோட்டம், எழுவியவத்தை, கொற்றாவத்தை, கொத்தியவத்தை, கொட்டியவத்தை, பிரமந்தாழ்வு,

> கள்ளியொல்லை, ராவில் கள்ளியொல்லை, நீங்காமூலை, தேங்காய்மூலை, மாத்ததனை, நினைத்ததை முடித்தான், ஆட்கொல்லி, நொச்சிக்காடு, மணியன் காடு, நாவிதன்காடு, பள்ளக்காடு, பீத்தஜயங்காடு, மஞ்சுமாரிக் காடு, மணிக்காடு, நல்லாயன் அடைப்பு, தோப்பு, மாந்தோப்பு, வந்தத்தனை, சூளுவெந்தான், மருதன்வளவு, மந்தன்வளவு, வெல்லன் வளவு, ஆண்டிமடம், புளிமன்னாரி, பெரியபரத்தி, நெல்வேலி, விளை வேலி, விண்ணான்வேலி. (தோம்பு தந்துதவியவர் இ. கந்தையா, ஓய்வுபெற்ற அதிபர், கொக்குவில்.)

தலையாரி என்ற அதிகாரியின் பெயரால் தலையாளி என்ற குறிச்சிப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். மஞ்சவனப்பதி சுப்பிரமணியர் கோயில், பொற்பதிப்பிள்ளையார்கோயில், துர்க்கை அம்மன் கோயில், கோணாவளைவைரவர் கோயில், ஐயனார் கோயில், பிடாரிகோயில், உயரப்புலம் பிள்ளையார்கோயில் முதலிய பல வழிபாட்டிடங்கள் கொக்குவிலில் அமைந்துள்ளன.

கோண்டாவில் (நல்.36)

கொக்குவில் பதிக்கு வடக்கு எல்லையில் கோண்டாவில் அமைந்துள்ளது. கோண்டா + வில் = கோண்டாவில். தெலுங்கு நாட்டில் விஜயநகர மன்னர் ஆட்சிக் காலத்தில் ரெட்டிகள் வாழ்ந்த இடமாகக் 'கொண்டவீடு' என்ற ஊர் விளங்கிற்று. இவ்வூர் அங்கே குண்டூர் மாவட்டத்திலுள்ளது. மேலும் தெலுங்கு நாட்டில் 'நல்கொண்டா', 'நாகார்ச்சுனாகொண்டா', 'கொல் கொண்டா' முதலிய இடங்களும் காணப்படுகின்றன (H. Roghair:1982: 189). இப்பெயர்களில் 'கொண்டா' என்ற சொல் பின்னொட்டாக அமைந்திருத்தல் நோக்கத்தக்கது.

கொண்டா > கோண்டா என மாறி, வில் என்பதுடன் இணைந்து கோண்டாவில் என்ற பெயர் தோற்றம் பெற்றதா எனவும் ஆராய்தல் நன்றாம். தெலுங்கு நாட்டில் விஷ்ணு வழிபாடு முதன்மையானது போன்று, கோண்டாவில் பதியிலும் வல்லிபுர ஆழ்வார் கோயில் உள்ளமை தெலுங்குத் தொடர்பைக் காட்டுகின்றதா எனவும் நோக்குதல் தகும். தொடக்கத்தில் இக் கோயில் வல்லியப்பன்கோயில் என அழைக்கப்பட்டதாக அறியப்படுகிறது. அடுத்து, 'கோண்டா' என்பதற்குக் கோண்டம்

என்ற சொல் மூலமாயிற்றா என்பதும் ஆராயத்தக்கது. கோண்டம் என்பது குறிஞ்சாச் செடியைச் சுட்டும் சொல் (தமிழ்ச் சொல்ல கராதி:920). அவ் வகையில் இங்கே கோண்டம் + வில் = கோண்டாவில் எனப் பெயர்த் தோற்றம் ஏற்பட்டிருக்கவும் வாய்ப் புண்டு.

சிலுவில் (தென்ம.100. 5)

சிலு + வில் = சிலுவில். சில் = வட்டப் பொருள்; சில் லெனல் = குளிர்தல்; சிலும்பல் = ஒலித்தல், ஒலியுடன் நீர் முதலியன கிளம்புதல் (தமிழகராதி: 130). சில் = சிறு. எனவே இச் சொற்பொருள் அடிப்படையில் சிலுவில் என்பது சிறியகுளம், குளிரும் குளம், ஒலியெழும் குளம் என்னும் பொருள்களைத் தருகின்றது. சுலவுதல் என்பது சுழலுதல், சுழற்றுதல், சூழ்தல் என்ற பொருள் தருதலாற் சுலவு + வில் > சுலாவில் > சிலுவில் எனவுந் திரிந்திருக்கலாம். மட்டுவில் பதியின் வடபால் அமைந்த ஒரு பகுதி சிலுவில் ஆகும்.

சுண்ணாவில் (பூ.175.5)

பூநகரியிலிருந்து 10 மைல் தொலைவில் பல்லவராயன் கட்டு என்ற இடத்திற்கு வடக்கே அமைந்துள்ள பகுதி சுண்ணா வில் ஆகும். இப் பெயருடைய ஒரு குளம் ஒன்றும் இங்கு அமைந்துள்ளதால், சுண்ணாவில் என்பது குளத்தின் பெயரால் தோற்றம் பெற்ற இடப்பெயராகும். இதற்கண்மித்த பகுதியில் கோணாவில் என்ற இடமும் காணப்படுகிறது. இங்கு சோழர் காலத்தில் நிலை கொண்டிருந்த 'நானாதேசிக' வணிக கணத்தின் செயற்பாடுகள் காணப்பட்டுள்ளன என்பதை ப. புஸ்பரத்தினம் (1991) ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

சுருவில் (தீவு.வ.16)

சுரு + வில் = சுருவில். சுரு < சுரி. சுரி = வளைவு, சேறு. வேலணைத்தீவின் தென்மேற்குப் பகுதியிற் சுருவில் அமைந்துள்ளது. இத் தீவின் தென்மேற்கு மூலையில் வளைவான

இடத்தில் சுருவில் அமைந்திருப்பதால் இடத்தின் அமைவு நோக்கி இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். மேலும் இவ்விடத்தில் சேறு செறிந்த பகுதிகள் காணப்படுவதால் நிலத்தியல்பு கருதி யும் சுருவில் என்ற பெயர் வழங்கப்பட்டிருத்தல் இயல்பே. இங்கு சிவன்கோயில், ஐயனார்கோயில், மாதாகோயில் என்பன வும் அமைந்துள்ளன.

நந்தாவில் (நல்.36.3)

இது கொக்குவில் பதியின் வடக்குப்புறமாக அமைந் துள்ளது. நந்தாவில் என்ற பெயருடைய ஒரு பெரிய குள முள்ளது. கோயில்களில் நந்தாவிளக்கு ஏற்றுதல் பற்றிய செய்தி கள் கல்வெட்டுக்களிற் பெரிதும் காணப்படுகின்றன. நந்தாவிளக்கு என்பதற்கு அணையா விளக்கு என்பது பொருள். அதேபோன்று நந்தாவில் என்பதும் வற்றாத குளம் என்பதாகும். இதே பொருள் கொண்டதாக 'வற்றாப்பளை' என்ற இடம் வன்னிப் பகுதியிற் காணப்படுதல் நோக்குக.

முன்னர் இப் பகுதியில் 9 சிறிய குளங்கள் காணப்பட் டன என்றும், அவையாவும் தற்போது மூடப்பட்டுவிட்டன என்றும் அறியப்படுகின்றது. அதனால் மழைக்காலத்தில் பெரிய வெள்ளக் காடாகவே இப்பகுதி விளங்கிற்று. 'நீங்கா மூலை' என்ற குறிச்சி யும் இப்பொருள் பற்றியே வழங்கிற்று. "நாடு விளைந்தால் நந்தாவில் விளையாது, நந்தாவில் விளைந்தால் நாடு விளை யாது" என்ற ஆன்றோர் வாக்கும் இங்கு வழங்குகிறது. பண்டை நாளில் இங்கு கண்ணகி கோயில் இருந்திருக்கிறது. இந்த இடத்தில் தற்போது 'கற்புலத்து மனோன்மணி அம்மாள் ஆலயம்' அமைந்துள்ளது.

நீவில் (கர.165.4)

இது கரச்சிப் பகுதியிலுள்ள ஓரிடமாகும். இங்கு நீள மான குளம் இருந்திருக்க வேண்டும். அதனைக் குறிக்க நீள் + வில் = நீள்வில் என்ற பெயரேற்பட்டு, பின்னாளில் நீள்வில் > நீவிலாயிற்று எனலாம்.

நுணாவில் (தென்ம.91.1)

நுணா+வில் = நுணாவில். நுணா = மஞ்சணாறி மரம், தணக்கு மரம். நுணல் = தவளை; நுணவை =எண்ணோலை, மா; (மதுரைத்தமிழ்ப் பேரகராதி:2: 74). சாவகச்சேரி நகரின் மேற்குப் புறமாக நுணாவில் அமைந்துள்ளது. இங்கு நுணா மரங்கள் பெரிதும் காணப்பட்ட நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக் கிறது. மறவர் நுணாவில் என்ற குறிச்சிப்பெயரும் இங்கு உள் ளது. மறவன் புலத்து மறவர்கள் சென்று குடியேறி வாழ்ந்த பகுதி இப்பெயரைப் பெற்றிருக்கலாம்.

நுணாவை என்பது எள் எனும் தானியத்தைக் குறிக்கும் சொல்லாகவும் வழங்குகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நுணாவில் எள்ளுக்கும் நல்லெண்ணெய்க்கும் பெயர் பெற்றி ருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுத்தமான நல்லெண்ணெய் நுணாவிலிருந்து பெறப்பட்டது எனப் போர்த்துக்கேயர் குறிப்பிட் டிருந்தனர். காலப்போக்கில் இவ்விடப் பெயர் 'நுணாவை' எனத் திரிபடைவதாயிற்று. எனவே இது காரணப்பெயர் என்கிறார் கவிஞர் வி. கந்தவனம் (1971:11).

நுணுவில் (வடம.தெ.மே.37.4)

நுணு + வில் = நுணுவில். நுணு > நுணுகல் > நுணு குதல் = மெலிதல், வற்றுதல், அருகுதல், குறைதல் என்ற பொருளில் இச்சொல் வழங்கிற்று. எனவே நுணுவில் என்பது வற்றுங்குளம் அல்லது பெரிதாய் இருந்து சிறியதாக மாறிய குளம் எனப் பொருள்படும். கரவெட்டி கிழக்கில் நுணுவில் பிள்ளையார்கோயில் அமைந்துள்ளது. இக் கோயிலுக்கு அருகே நுணுவிற்குளம் அமைந்துள்ளது. வயலும் வயல் சூழ்ந்த இடமு மாக நுணுவில் விளங்குகிறது.

பெரியமந்துவில் (தென்ம.118.4)

இது மந்துவிற் பதியின் ஒரு பகுதியாகும். (மந்துவில் பெயர் விளக்கம் பார்க்க பக் 111-112).

மக்குவில் (வலி.தெ.மே.53.2)

இது பெரியவிளான் கிராமசேவகர் பிரிவிலுள்ள ஓரிடம். இங்கு குளமில்லை. மக்கிக் கற்களுள்ள பகுதியாக இப்பகுதி காணப்படுவதால் மக்கு + வில் = மக்குவில் என்ற பெயர் ஏற்படுவதாயிற்று. இங்கு யூதாதேயு ஆலயம் (St. Judes) ஒன்றுளது. புலிவளைந்தான் என்ற குறிச்சிப் பெயரும் இங்கு வழக்கிலுள்ளது.

மட்டுவில் (தென்ம.100.2)

நீர்மட்டமாக அல்லது மட்டுமட்டாக (சிறிதளவு) நிறைந்து நிற்கும் குளம் என்ற பொருள் விளக்கமும் இப் பெயருக்குக் கூறலாம். சிறுசிறு குளங்கள் பல இங்குக் காணப்படுதலும் குறிப்பிடத்தக்கது. மட்டு = தேன். இவ்வாறே மட்டக்களப்பு என்பதற்கும் மட்டு + களப்பு எனப் பிரித்து தேன்பாயும் களப்பு, மட்டமான களப்பு எனப் பெயர் விளக்கம் கூறப்படுதலும் நோக் கத்தக்கது. மட்டுவில் முன்னர் பெருங்காடாக இருந்த வேளை யில், இங்கு பெரிய அளவிலே தேன் சேகரிக்கப்பட்டதென்றும், அதனால் தேன் நிறைந்த இடம் என்ற பொருளில் மட்டுவில் பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர்.

சாவகச்சேரியை அடுத்து நுணாவில், மந்துவில், சர சாலை, கைதடி, கல்வயல் ஆகிய இடங்களுக்கு இடையே அமைந்துள்ள தோட்டப்பயிர் வளங்களுடைய குடியிருப்புப் பதியே மட்டுவில் ஆகும். இவ்வூரின் கிழக்கெல்லையில் ஐஞ்சந்தி ஒன்றுள்ளது. இதனைக் கனகம்புளியடிச்சந்தி என்றும் வழங்கு வர். அச் சந்தியிலிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித் துறை, சுன்னாகம், நுணாவில் ஆகிய ஊர்களுக்குத் தெருக்கள் செல்கின்றன.

'சந்திரபுரம்' என முன்னர் இவ்வூர் வழங்கியிருக்க வேண் டும் என்பது மட்டுவில் ம. க. வேற்பிள்ளை பாடிய 'ஈழமண்டல சதகம்" என்ற நூலால் அறியப்படுகிறது. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தின் பின்னரே இவ்விடத்திற்கு மட்டுவில் என்ற பெயர் நிலை பெற்றதென்ற கருத்தும் நிலவுகிறது. சோழர் காலத்தில் 'மட்டுவாள்' என்ற பெயரால் இவ்விடம் வழங்கப்பட்டமை 3ஆம்

இராசராச சோழனின் கல்வெட்டொன்றினால் அறியப்படுகின்றது. இங்கு சோழரின் படைகள் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன எனவும் அக்கல்வெட்டுக் கூறுகின்றது. சோழர் காலத்தில் இப் பகுதியில் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வுகள் பற்றி ஆராய்ந்தறியத் தக்க சான்றுகளுண்டா என்பதும் அறியப்பட வேண்டியதாகும். மட்டுவிலின் வடக்கு எல்லையில் 'ஆயம்' என்ற ஓரிடமுண்டு. போர்த்துக்கேயர் காலத்தில் இவ்விடத்தில் வரி (ஆயம்) அறவிடப்பட்டது. இதனால் ஆட்சியாளரின் தொடர்பினால் ஆயம் என்பது காரணப் பெயராயிற்று. ஆயத்தடி என்னுமிடத்தில் சுமைதாங்கிக் கட்டிடம், கேணி என்பனவும் உள்ளன. இது போன்றே இவ்வூரின் வடபாலுள்ள வங்களாவடி, தோப்பு என்ற இடங்களும் ஆட்சியாளருடன் தொடர்புடையனவாகும்.

இங்கே குட்டிச்சிதம்பரம், கல்லுமுலை, கப்பல்தோட்டம் முதலிய குறிச்சிகளுமுள. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் போர் வான் ஊர்தி ஒன்று பழுதடைந்து இவ்வூரில் வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அவ் வான் ஊர்தி வீழ்ந்த இடம் கப்பல் தோட்டம் என வழங்குகிறது. இவ்வூரிலுள்ள பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் பெருமையை விளக்கும் வகையில் பல்வேறு நாட்டார் கதைகள் வழங்குகின்றன. மேலும் இங்கே உப்புக்கிராய், முதலைக்கிராய், பெரியகிராய், சின்னக்கிராய், மருதங்குளம் முதலான இடங்களுமுள்ளன. கிராய் என்பது நீர்நிலையைக் குறிக்கும்சொல் ஆகும். தமிழகத்துச் சிதம்பரக் கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்ட கோயிற் காணிகள் இவ்வூரிலுள்ளன. அக் காணிகள் உள்ள பகுதி குட்டிச் சிதம்பரம் என வழங்கப்படுகிறது.

மட்டுவில் + நுணாவில் ஆகிய ஊர்களுக்கு இடைப்பட்ட பகுதி 'மட்டுவில் நுணாவில்' என்ற பெயரில் கிராமசேவகர் பிரிவாக இடம் பெற்றுள்ளது. இங்கு வேரக்கேணி என்ற குறிச்சி காணப்படுகிறது. வேரல் என்பது மூங்கில். எனவே வேரக்கேணி என்பது மூங்கிற் செடிகள் செறிந்த குளம் என்பது பொருளாகும். இங்கு பெரிய மூங்கில் காடுகள் முன்னர் இருந்ததாகக் கூறுவர். மருதமரமும் குளமும் உள்ள இடம் 'மருதங்குளம்' எனப் பெயர் பெற்றுள்ள இடமும் இங்கே உள்ளது.

மந்துவில் (தென்ம.118.3)

மந்து + வில் = மந்துவில். மந்து என்பது ஒரு வகைப் புல், பற்றைக் காடு என்பது பொருள். மந்து = ஒருவகைச் செடி. காவிளா, மந்துச்செடி என்பவற்றைப் புகையிலைப் பயிர்ச் செய்கை தொடங்க முன்பு தோட்ட நிலத்தில் புதைத்து செயற்கைப் பசளை உண்டாக்குவது யாழ்ப்பாணத் தோட்டக்காரரின் வழக்கம். அந்த மந்துச் செடிகள் இங்கே மிகப் பெரிய அளவில் வளர்ந்து காணப்பட்ட தன்மையினால் இவ்விடத்திற்கு மந்துவில் என்ற பெயர் ஏற்பட்டதென்பர்.

சிலர் மந்துவில் என்பதை மந்தை + வில் எனப் பிரித்து மந்தைகள் பெரிதும் வளர்க்கப்பட்ட இடம் எனக்கொண்டு, இவ்விடப் பெயர் மந்தைவில் என வழங்கி, மந்துவில் என மருவிற்றென்பர் என்பர். இவ்விடம் பழைமை வாய்ந்த குடியிருப்புப் பகுதியாக விளங்கிற்று என்பதற்கு ஆங்காங்கே கிடைத்திருக்கும் தொல் பொருட்கள் சான்றுகளாகின்றன. இங்கேயுள்ள வீரக்காடு என்ற இடத்தில் 25அடி உயரமான கட்டிட அழிபாடுகளைக் கொண்ட மணற்குன்று காணப்படுகிறது. சுவாமி ஞானப்பிரகாசர் (1921:119) இதனை நேரிற் பார்வையிட்டு தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். குவைறோஸ் பாதிரியார் (1930), இங்கே கோட்டை ஒன்று அமைக்கப்பட்டிருந்தமையும், அது யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் கரந்துறையும் கோட்டையாக இருந்தது என்றும், சங்கிலி மன்னன் கோப்பாயில் நடைபெற்ற போரில் தோற்றதும் இங்கே வந்து மறைந்திருந்தான் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மிகப் பழங் காலத்தில் இப் பகுதி குடியிருப்பிடமாக இருந்து பின்னாளில் கைவிடப்பட்டிருக்கவேண்டும் எனவும் ஊகிக்க இடமுண்டு. இதன் வடபால் தாழ்வளை என்ற குறிச்சியும், அப்பெயரால் ஒரு பிள்ளையார் கோயிலும் காணப்படுகின்றன. கொடிகாமத்திற்குத் தென்மேற்கே இவ்வூர் அமைந்துள்ளது.

மிருசுவில் (தென்ம.111.3)

மிரியல் = மிளகு. சிங்களமொழியில் மிரிஸ் என்பது மிள காயைச் சுட்டும் சொல்லாகும். மிரிஸ் என்ற சிங்களச்

சொல்லடியாக மிரிசுவில் என்ற பெயர்த் தோற்றம் ஏற்பட்டதாகச் சுவாமி ஞானப்பிரகாசர் (1918), குமாரசுவாமி (1918), க.வேலுப் பிள்ளை (1918), ஹேர்ஸ்பேர்க் (Hersburgh:1917) முதலியோர் குறிப்பிடுவர். ஆயினும் இப்பெயர் பற்றிய விரிவாக ஆய்வு மேற்கொள்ளும் வரை முடிபான கருத்துக்கு வருதல் தவறாகும். இவ்வூரிலுள்ள குருக்கள்மாவடி, மன்னன்குறிச்சி, பழைய வாய்க் கால், பெரியான்ஓடை, செம்பாடு, வேளாப்பள்ளம் முதலிய குறிச்சிப் பெயர்களை நோக்கும்போது மிருசுவிலுக்குச் சிங்களப் பெயர் விளக்கம் கூறுவேண்டிய தேவையில்லை. மன்னன் குறிச்சி இங்கு இருப்பதால், இவ்வூர் முரசுவில் என வழங்கியிருக்கலாம் என்ற ஐயந் தோன்றுகிறது.

வடஇலங்கையில் முரசுமோட்டை என்ற இடப்பெயர் இருப்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. மேலும் மன்னன் குறிச்சி என்ற பகுதியில் அரண்மனை ஒன்று இருந்ததாக வாய்மொழிக் கதை ஒன்றும் இங்கு வழங்குகிறது. எனவே முரசுவில் > மிருசு வில் என மருவிற்றெனலாம். இங்கு இரு வாய்க்கால்கள் காணப் படுகின்றன. இவற்றில் பழைய வாய்க்கால் பகுதியை அண்மித்த பகுதி 'பழைய வாய்க்கால்' எனப் பெயர்பெற்றுள்ளது. இவ்வூர் கொடிகாமத்திற்குக் கிழக்கே, யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ் சாலையில் எழுதுமட்டுவாள் பதிக்கு அண்மையில் அமைந் துள்ளது.

முகவில் (பச்.153.3)

முகவில், மால்வில் என்பன ஒரே பகுதியில் அமைந்த இடங்களாகும். முகவில் பகுதியில் சிறு சிறு குளங்கள் காணப் படுகின்றன. இவை மருதநிலத்து ஊர்களாகும். முகம் + வில் = முகவில் என வழங்கியிருக்கலாம். முகம் என்பதற்கு இடம், மேலிடம் என்ற பொருள்களுமுண்டு. அவ்வகையில் முகவில் என்பது குளத்தைச் சூழ்ந்த இடம் எனப் பொருள்படும்.

முழங்காவில் (பூ.175அ. 3)

முழங்கால் + வில் = முழங்காவில் எனப் பெயர் வழங்குவதாயிற்று. இங்குள்ள பள்ள நிலங்களில் முழங்கால்

அளவு நீர் எப்போதும் நிறைந்திருப்பதால் இப் பெயர் தோன்றிற்று என்று கூறுப. ஆயினும் முழங்கா என்பதற்கு 'ஒலிக்காத' எனப் பொருள் கொண்டு ஒலியலையற்ற நீர்நிலை உள்ள இடம் எனக் கொள்ளவும் அங்குள்ள இயற்கைநிலை வாய்ப்பாக உள் ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்குப் பூநகரியூடாகச் செல்லும் நெடும்சாலையில் பூநகரிக்குக்குத் தெற்கே முழங் காவில் அமைந்துள்ளது. இது நீர்வளம் செறிந்த ஓரிடமாகும்.

ராமாவில் (தென்ம.102.3)

இராமர் + வில் > ராமாவில் எனத் திரிபடைந்துள்ளது. தென்மராட்சிப் பகுதியிலுள்ள மீசாலை ஊரின் ஒரு பகுதியாகவே ராமாவில் அமைந்துள்ளது. இங்கு ராமாவில் என்ற பெயருடைய குளம் ஒன்றும் உள்ளது. இப் பெயருடன் இராமாயணக் கதை தழுவிய வாய்மொழிக்கதை ஒன்றும் இங்கே வழங்குகிறது. இராம, இராவணப் பெரும் போர் முடித்துத் தாயகம் திரும்பும் வழியில் தாக சாந்தி செய்ய விரும்பிய இராமர் தனது அம்பை நிலத்தில் ஊன்ற நீர் பெருக்கெடுத்து அவ்விடத்தில் குளம் ஏற்பட்டதாகக் கதை கூறுகிறது. இதே கதைப் பின்னணில் 'வில்லூன்றி' என்ற இடப்பெயருக்கு விளக்கம் கூறப்படுதலும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

வேரவில் (பு.175.7)

வேரல் + வில் = வேரவில். வேரல் = சிறுமூங்கில், மூங்கில்அரிசி (தழமிழகராதி: 286). " வேரல்வேலி வேர்க்கோட் பலவின்.. .." எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் வரியில் வரும் "வேரல்வேலி" என்ற வழக்காறு இவ்விடப்பெயரை நினைவு படுத்துகிறது. எனவே ஈண்டு வேரல் + வில் என்பது இடைக் குறையாய் வேரவில் ஆயிற்று. வேரவில் என்ற பெருடைய சிறு குளமும் இங்கே காணப்படுகிறது.

பூநகரிப் பகுதியில் பல்லவராயன்கட்டுக்கு மேற்கே அமைந்துள்ள பழைய குடியிருப்பு இடங்களில் வேரவில் என்ற ஊரும் ஒன்றாகும். பொன்னாவெளிப் பகுதியிலுள்ள சிறு நகர்ப் பகுதியே வேரவில் ஆகும்.

இயல் நான்கு
நிலவியல்பு குறித்த இடப்பெயர்கள்

நிலவியல்புக் கூறுகளும் இடப்பெயர்களும்

நிலவியல்பு, நிலப்புறத் தோற்றம், நில அமைப்பு என்ற அடிப் படைகளிலும் இடப்பெயர்கள் பெரிதும் ஆக்கம் பெற்றுள்ளன. பழங் காலத்து இடப்பெயர்களும் இப் பின்னணியிலேயே தோற் றம் பெற்று வழங்கி வந்தமையை அறியக் கூடியதாக இருக்கிறது. சங்க இலக்கியங்களிலுள்ள பெரும்பாலான இடப்பெயர்கள் இதற்குச் சான்றாகின்றன (கே.பகவதி.1984). தமிழ் இலக்கியம் ஐவகை நிலங்களுக் கேற்ற இடங்களைப்பற்றி விபரிக்கின்றது. ஆனால் அவ்வரையறைகள் மயங்கிக் கிடப்பதையும் சங்க இலக்கியங்களிற் பார்க்கிறோம். இதற்குக் காலந்தோறும் ஏற்பட்ட நிலஅமைப்பு மாறுபாடுகள் காரணமாகலாம் என்கிறார் கி. நாச் சிமுத்து (1983:58).

நிலப்புறத் தோற்ற அடிப்படையில் 'கலட்டி' என்றும் 'திடல்' என்றும் பண்டை நாளில் அழைக்கப்பட்ட இடங்களிற் பல இன்று வளமானதும், நேரியதுமான நிலத்தோற்றத்துடன் காட்சி தருகின்றன. ஆயினும் அவ்விடங்களுக்கு அப் பழம்பெயர் களே இன்றும் வழங்கி வரக் காணலாம். எனவே இடப்பெயர் ஆய்வின் மூலம் குறிப்பிட்ட இடங்களின் பழைய புவியமைப்பு எவ்வாறிருந்தது என்பது பற்றி அறியவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 20 வகையான நிலக் கூறுகளின் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பின்வரு மாறு வரிசைப்படுத்தலாம்:

கட்டு	குழி	பிட்டி
கல்	செம்பாடு	மணல்
கலட்டி	தரை	மலை
காடு	திட்டி	முனை
கிரி	திடல்	மூலை
குடா	தீவு	வளை
குண்டு	பள்ளம்	

நிலப்பயன்பாடு குறித்த பெயர்கள் தனித்து விரிவாக ஐந்தாம் இயலிலே ஆராயப்படுவதால், அங்கு பெயர்களின் விரிவான விளக்கங்களைப் படித்தறியலாம்.

'கட்டு' என்ற சொல் அமையும் இடப்பெயர்கள்

கட்டு என்ற இடப்பெயர் ஈறு கொண்டும் சில இடப்பெயர் கள் வழங்குகின்றன. கட்டு என்பது = அணை, கட்டிடம் என்ற இரு பொருள்களைச் சுட்டிய நிலையில் ஆறு இடப்பெயர்கள் இம் மாவட்டத்திலுள்ளன. இப்பெயர்களிற் சில வரலாற்றுத் தொடர்பு உடையனவாகக் காணப்படுதல் குறிப்பிடத்தக்கதாகும்.

கட்டுடை (வலி.தெ.மே.ப.36.1)

கட்டு + உடை = கட்டுடை. இது மானிப்பாய் மேற்கில் அமைந்துள்ளது. இங்கே 'கிராய்' என்ற குளம் ஒன்றுள்ளது. குளத்தின் அணைக்கட்டு உடைந்து நீர் பெருக்கெடுத்து ஓடிய இடம் என்ற நிலையில் இப்பெயர் தோன்றியுள்ளது. வழுக்கை யாறுக்குரிய நீர்மட்டம் மாரிகாலத்தில் பெருக்கெடுத்து மல்லாகம், அளவெட்டி முதலிய ஊர்களினூடாகப் பாய்ந்து, சண்டிலிப் பாயைக் கடந்து அராலிக்கடலை நோக்கி ஓடி வருகிறது. இந்த ஆற்று வெள்ளத்தை சண்டிலிப்பாய் மக்கள் ஒரு காலத்தில் தடுத்து, நிறுத்தி அணைகட்டி நீர்ப்பாய்ச்சலுக்குப் பயன்படுத்தி வந்தனர் என அறியப்படுகிறது. அந்த அணைக்கட்டு பின்னாளில் உடைந்து நீர்ப்பெருக்கு ஏற்றபட்டது. அதனால் இவ்விடம் கட் டுடை எனப் பெயர் பெறுவதாயிற்று. கட்டுடையின் ஒரு பகுதி 'இடிகுண்டடி' எனப் பெயர் பெறும். முன்னர் இங்கு இடி, மின் னல் தாக்கி ஒரு பெருங்குழி ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

கட்டுவன் (வலி.வ. 69.1)

வலிகாமம் வடக்கு, மயிலிட்டி தெற்கு கிராமசேவகர் பிரிவிலுள்ள கட்டுவன் என்ற ஊரின் பெயர் கட்டுவன், குட்டுவன், குட்டுவனூர் என வழங்குகிறது. பண்டைய தமிழகத்தைச் சேர்ந்த

குட்ட நாட்டு மக்கள் இங்கு வந்து குடியேறியபடியால் 'குட்டு வனூர்' என்ற பெயர் வந்ததென்பர். குட்டுவனூரே கட்டுவன் ஆயிற்று என்பர். இவ்வூர் பற்றித் த. சண்முகசுந்தரம் (1984:4) வருமாறு குறிப்பிடுகிறார்:

> 'இங்கு மலை இல்லை. வற்றாத பேராறு எதுவும் இல்லை. மாரியில் மட்டும் நீர் தேங்கி ஓடும். இந்நீரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முந்தையோர் தேக்கி வைத்தனர். தமது நிலப்பரப் பிற்கு ஏற்பக் கல்லணை, மண்ணணை என்பனவற்றை அமைத் தனர். மேட்டுப் பூமியாகிய கட்டுவன் ஊரிலே தோன்றுவது வழுக்கையாறு. இங்கு அணை ஒன்றைக் கட்டினர். ஆகவே 'அணைகட்டு வன்ஊர்' என்ற பெயர் எழுந்தது'.

குறுந்தொகையிற் 'குட்டுவன்மாந்தை' என்ற தொடர் வருகின்றது. குட்டுவன் என்னுஞ் சொல் சேர மன்னனின் பெயர் களில் ஒன்று. சேரன் செங்குட்டுவன் > குட்டுவன்> குட்டுவனூர். இப் பெயரிலிருந்தே கட்டுவன் என்ற பெயர் தோன்றிற்றென்றுங் கூறுவர். இதனைக் குமாரசுவாமி (1971:68) சிங்களப்பெயரெனக் கொண்டு சிங்களத்தில் (கட்டு = முள்: வன் = காடு) முட்காடு என்ற பொருளில் தோன்றியதே கட்டுவன் என்ற பெயரெனக் கூறினார். சேரர் தொடர்பாற் குட்டுவனூரிலிருந்து வந்தேறிய குடிகளிட்ட தம்மூர்ப் பெயரே காலப்போக்கிற் குட்டுவனூர் > கட்டுவன் என்றாயிற்று எனக்கோடலே பொருத்தமாகும்.

கல்லாக்கட்டுவன் (வலி.தெ.ப.32.2)

கல்லை + கட்டுவன் > கல்லைக்கட்டுவன் > கல்லாக் கட்டுவன். கல்லைப் பொழிந்தெடுத்துக் கோயில், வீடு முதலியன கட்டும் தொழிலில் கைதேர்ந்த கலைஞானம் பெற்றோர் வாழ்ந்த இடம் என்ற அடிப்படையில் இப்பெயர் தோற்றம் பெற்றிருக் கலாம். இவ்விடம் மருதனாமடத்திற்கும் சுன்னாகச் சந்தைக்கும் இடையேயுள்ள பெருஞ்சாலையின் மேற்கே அமைந்துள்ளது.

நாயன்மார்கட்டு

நாயன்மார் + கட்டு = நாயன்மார்கட்டு. கட்டு = கட்டிடம். நல்லூருக்குக் கிழக்கே முத்திரைச் சந்தைக்கு அடுத்து அமைந் துள்ள நாயன்மார்க்கட்டு என்ற இடத்திலே தமிழரசர் காலத்தில் 63 நாயன்மார்களுக்கும் சிலை எழுப்பி, மடங்கள் கட்டப்பட்டு, வழிபாடு நடைபெற்றுள்ளது என்பதை யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூல் வருமாறு சான்றுபடுத்துகின்றது:

> "குணபூசண சிங்கையாரியச் சக்கரவர்த்தி, அடியார்க்கு நல்லா னென்னும் பண்டிதசிரோன்மணியை வரவழைத்துத் தனக்கு முதல் மந்திரியாக்கினான். அம் மந்திரியால் ஊர் கடோறும் குளங்களும், பாடசாலைகளும், 63 நாயன்மார்களுக்கும் ஒரு மடாலயமும் அமைப்பித்தான். 63 நாயன்மாரின் மடமிருந்த இடம் நாயன்மார்கட்டு என வழங்கு கிறது" (ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை:1933:27)

இப் பழைய வரலாற்றுச் செய்தியைச் சான்றுபடுத்தும் வகையில் நாயன்மார்வீதி, நாயன்மார்கட்டுக்குளம், நாயன்மார் மடத்தின் அழிபாட்டிடம், ஆரியச்சக்கரவர்த்திகள் கட்டிய வெயிலு வந்த பிள்ளையார் கோயில், அரசகேசரிப்பிள்ளையார் கோயில் என்பன விளங்குகின்றன. போர்த்துக்கேயர் நல்லூர்க் கோயிலை இடித்துத் தரை மட்டமாக்கியபோது நாயன்மார் மடத்தையும் அழித்திருப்பர் என்பதில் ஐயமில்லை. இவ்விடத்தில் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை மேலும் இதற்குச் சான்றாகின்றது. இக் கல்வெட்டுப் பற்றி முன்னர் குறிக்கப்பட்டுள்ளமை நோக்குக (பக்48).

யாழ்ப்பாணத்து நல்லூரை அரசிருக்கையாகக் கொண்டு அரசாண்ட ஆரியச் சக்கரவர்த்திகளின் மரபில் வந்த செகராச சேகரன் காலத்தில் நல்லூர் அரசு மிகவும் சிறப்பாகத் திகழ்ந்தது என்பது வரலாற்றுச் செய்தி. 8ஆம் பரராசசேகரன் காலத்திலே அவனது தமையன் அரசகேசரி, தமிழும் வடமொழியுங் கை தேர்ந்த சிறந்த அரசசபைப் புலவனாக விளங்கினார். காளிதாச னின் இரகுவம்சத்தைத் தமிழில் முப்பெருங் காண்டங்கள், 26 படலங்கள், 2444 பாடல்கள் அமைய, ஈழத்து முதற்காப்பியமாக இயற்றினார். அவர் வாழ்ந்த இடம் நாயன்மார்கட்டு என்றும்,

அங்கே செந்தாமரை வாவியினருகே அமைக்கப்பட்டிருந்த மாளி கையின் மேன்மாடத்தேயிருந்து இதனை இயற்றினாரென்றும் கூறப்படுகின்றது (F.X.C. நடராசா:1970:67). இப் புலவர் வாழ்ந்த வளவு இன்றும் 'அரசகேசரி வளவு' என வழங்குகின்றது.

இங்கு 'புண்ணியர்மடம்' என்ற மடமொன்றும் இருந்திருக் கிறது. இவ்விடத்தில் கேணி, ஆவுரஞ்சிக்கல் என்பன காணப்படு கின்றன. இங்குள்ள பாண்டியன்துறை என்ற குறிச்சிப்பெயர் பண்டைய வரலாற்றைத் தொட்டுக் காட்டுகிறது. "கோட்டை வாசல்" என்ற இடமும் நல்லூர் அரசிருக்கையை நினைவுபடுத்து கிறது. நல்லூர் அரச இருக்கையிலிருந்து கொழும்புத்துறைக்குச் செல்லும் பண்டைய வீதியும் இப்பகுதியின் ஊடாகவே அமைந் திருத்தல், இவ்விடத்தின் சிறப்பை மேலும் எடுத்துக் காட்டுகிறது.

பல்லவராயன்கட்டு (பூ.175.அ.5)

பல்லவன் + இராயன் + கட்டு = பல்லவராயன்கட்டு. இது குளமும் குடியிருப்பும் உள்ள பண்டைய மருத நிலத்தூரா கும். பூநகரி மடத்தடியிலிருந்து தெற்காக, பூநகரி + மன்னார் சாலையில் 16ஆம் - 17ஆம் மைல் கற்களுக்கிடையிற் பல்லவ ராயன்கட்டு என்னும் ஊர் அமைந்துளது. பல்லவராயன்கட்டு என்ற பெயரில் இங்கு ஓர் ஆறும் ஓடுகிறது. இந்த ஆற்றின் குறுக்கே அணைகட்டி உருவாக்கப்பட்டதே பல்லவராயன் குளம். இக் குளத்தை அடிப்படையாகக் கொணடே இவ்விடப்பெயர் தோற்றம் பெற்றுள்ளது. பண்டைக் காலத்தில் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தரை வழியாக மக்கள் சென்றபோது பல்ல வராயன்கட்டு ஒரு தரிப்பிடமாக அமைந்திருந்ததாக அவ்வூர் மக்கள் கூறுவர். காஞ்சிப் பல்லவரோடு தொடர்புகொண்டதாக இவ்விடப் பெயர் காணப்படுகிறது. அனுராதபுரத்திலே அரசுரிமை இழந்த மானவர்மன் பல்லவரின் உதவி கோரி காஞ்சிபுரம் சென்று பல்லவ நரசிம்மவர்மனிடம் உதவி கேட்க, அவனது தமிழ்ப்படை ஒன்று இச்சிங்கள மன்னனுக்கு உதவியாக இலங் கைக்கு வந்தது. அப்படையின் ஒரு பகுதி இவ்விடத்திற்கு வந்து பாசறை அமைத்துத் தங்கியிருந்திருக்கலாம். அதன் காரணமாக இவ்விடத்தைப் பல்லவராயன்கட்டு என மக்கள் அழைத்திருக்கலாம் எனப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (1962:104) கூறுவது பொருத்தமாகும்.

இப் பெயர்த் தோற்றத்திற்கு இன்னுமொரு விளக்கம் கூறப்படுகிறது. சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி தமிழகத்திலிருந்து சில குடித்தலைவர்களையும் அவர்களது குடிமைகளையும் வர வழைத்துப் பலவிடங்களில் குடியமர்த்தியபோது, காஞ்சிபுரத்தி லிருந்து வந்த பல்லவன் என்னும் பிரபுவையும், இரண்டு துணைப் பிரபுக்களையும் 'வெளிநாடு' என்றழைக்கப்பட்ட இடத்தில் குடிய மர்த்தினான் என யாழ்ப்பாண வைபவமாலை (பக்:29) குறிப்பிடுவ தால், அப் பல்லவன் அங்கு குளந்தொட்டு, வளம் பெருக்கியமை யால் அப்பகுதி 'பல்லவராயன்கட்டு' எனப் பெயர் பெற்றது எனவும் கருத இடமுண்டு. தமிழகத்துப் புதுக்கோட்டைப் பகுதி சில காலம் 'பல்லவராயன்சீமை' என்றும், அதனை ஆண்ட மன்னர்கள் பல்லவராயர் என்றும் அழைக்கப்பட்டனர் என்று சோமலே (பக்:218,280,366) கூறுவதும் ஈண்டு நோக்கத்தக்கது. இரண்டாம் இராஜராஜன் காலத்தில் முதல் அமைச்சராக விளங்கி யவர் பெயர் நம்பிப்பல்லவராயர் என்பதும், அவரது சேவைக்காக இராஜராஜனால் இறையிலியாக அளிக்கப்பட்ட ஊர் பல்லவ ராயன்பேட்டை என வழங்கப்பட்டு வருவதும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கன.

சிங்கையாரியச் சக்கரவர்த்தி (கி.பி.950) இந்தியாவி லிருந்து தமது அடிமை குடிமைகளுடன் வந்திறங்கிய பல்லவ னையும், அவன் உறவினராகிய இரு பிரபுக்களையும் செந்நெல் விளையும் களனிகளுள்ள "வெளிநாடு" என்னும் பல்லவராயன் கட்டு முதலிய இடங்களிற் குடியேற்றினான் (யாழ்ப்பாண வைபவ மாலை:29) என்ற செய்தி இடப்பெயர்க் காரணத்தை மேலும் விளக்குகிறது.

புன்னாலைக்கட்டுவன் (வலி.தெ.60.3)

பொன் + ஆலை + கட்டுவன் = பொன்னாலைக்கட்டுவன் > புன்னாலைக்கட்டுவன் என மருவி வழங்கியிருக்கலாம். இது ஊரெழுவுக்கும் வசாவிளானுக்கும் இடையில் அமைந்த ஓர் இடமாகும். இப் பெயர் விளக்கம் மேலும் ஆராயப்பட வேண்டிய தாகும்.

'கல்' முதல்நிலை இடப்பெயர்கள்

பாறை, கல், மைற்கல், மண் என்ற முதற்பொருட்களின் அடிப்படையில் ஊர்ப்பெயர்கள் ஆக்கம் பெறுதலுண்டு. கிழக் கிலங்கையில் அழகிய பாறை அமைந்த இடத்தை 'அம்பாறை' எனவும், சொறிக்கல் உடைய முனையைச் 'சொறிக்கல்முனை' என்றும், குறுமணல் நிறைந்த இடத்தைக் 'குறுமண்வெளி' என்றும் பெயரிட்டழைத்தனர். 'கல்' முதற் பொருளாகக் கொண்டமைந்த திண்டுக்கல், ஆரைக்கல் முதலான ஊர்கள் தமிழகத்திலுள்ளன. யாழ்ப்பாண மாவட்டம் சுண்ணக்கற்பார் கொண்ட நிலப்பகுதியாக இருப்பதால் 'கல்' முன்னொட்டாகக் கொண்டு ஆறு இடப்பெயர் கள் அமைந்துள்ளன.

கல்லாகம் (தென்ம.89.4)

கல் + அகம் = கல்லாகம். இது கைதடிப்பகுதியில் அமைந்துள்ள ஓரிடமாகும். கல்லகம் > கல்லாகம் என விரிந் தது. கல்லகம் = மலையைச் சுட்டும் சொல் என்கிறது சூடாமணி நிகண்டு (பக்.99). இப்பகுதி கல் நிறைந்த பகுதியாக இருந்த மையாற் கல்லாகம் எனப் பெயர் பெற்றுள்ளது. இன்றும் இவ் விடம் கற்பூமியாகவே காணப்படுகிறது.

கல்லுவம் (வடம.தெ.மே.121.1)

கல் > கல்லு + அம் > கல்லுவம். இது உடுப்பிட்டிப் பகுதியிலுள்ளது. கற்றரைப் பாங்கான இடமே கல்லுவமாகும். வல் + தரை > வல்லுத்தரை > வலிகாமம் ஆனது போற் கல் > கல்லு> கல்லுவம் ஆயிற்று. கல்லுவம் = கற்களைத் தோண்டி எடுத்த இடம் என்ற பொருளும் அமையும். கல்லுவம் என்ற இன்னோரிடம் உடுவில் என்ற ஊரிலும் உள்ளமை காண்க.

கல்வயல் (தென்ம.ந.21.4)

கல், வயல் என்ற இரு முரண்பட்ட பொருள்களைக் கொண்ட சொற்களின் இணைப்பால் இவ்விடப்பெயராக்கம்

அமைந்துள்ளது. இது சாவகச்சேரி பட்டினசபை எல்லைக்குட் பட்ட ஓரிடமாகும். கற்பாராக இருந்த இப்பகுதியை இங்கு வாழ் மக்கள் கற்களைத் தோண்டி எடுத்து, நிலத்தை வளமாக்கி தோட்டங்களாகவும், வயல்களாகவும் பயன்படுத்தி வருகின்றனர். இங்கு சிறப்பாகக் கத்தரி பயிரிடப்படுகிறது.

கற்கரை (வலி.தெ.70.ஆ.1)

கல்தரை > கற்கரை எனத் திரிபடைந்து வழங்குகிறது. இவ்விடம் வலிகாமம் தெற்கில் குப்பிழானில் அமைந்துள்ளது. இவ்வூரின் எல்லைக்கரைகளிற் கற்கள் காணப்பட்டமையாற் கற்கரை எனக் காரணப்பெயராயிற்று என்றும் கொள்ளலாம்.

கற்கோவளம் (வடம.வ.கி.141.1)

கல் + கோவளம் = கற்கோவளம். கோவளம் என்பது கடலுக்குள் நீண்ட தரையின் முனையிலுள்ள ஊர் ஆகும் (த.லெ. 2:1198). கோவளம் என்பதற்கு ஊர்த் துறைமுகம், பாதுகாப்பான வளைகுடா எனப் பொருள் கூறுவதோடு, கோவளம் என்பதைக் கோவை + குளம் எனப் பிரித்து, கோவை (Carcum Augustifolia) என்ற மரப் பெயரடியாகப் பிறந்த இடப்பெயரென விளக்கம் கூறப்படுதலும் நோக்கத்தக்கது.

கேரளத்தில் கோவளம் என்ற அழகிய கடற்கரையூ ருண்டு. இப்பெயருடைய ஓரிடம் சென்னையிலும் இருப்பதாகக் கூறப்படுகிறது. வடஇலங்கையிற் பருத்தித்துறைக்கு அண்மையிற் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள ஓரிடமே கற்கோவளம். இப் பெயரைக் 'கற்கைநகர்' என்றும் எழுத்தாளர் பயன்படுத்துவர்.

'கலட்டி' ஈற்று இடப்பெயர்கள்

கலடு > கலட்டி + தரை = கலட்டித்தரை. கற்கள் நிறைந்த தரைப்பகுதியுடைய இடத்தைக் "கலட்டி" என்பர். யாழ்ப்பாண மாவட்டத்திற் கலட்டி என்ற பெயருடைய ஐந்து ஊர்களும், பல்வேறு குறிச்சிப் பெயர்களும் காணப்படுகின்றன. மட்டக் களப்பு வழக்கில் வயற் காணிகளில் வளம் குறைந்த நிலம் 'கலட்டி', 'கலட்டிவயல்' என வழங்கப்படுகின்றன.

கலட்டி (வடம.தெ.ம.ப.37.7: வலி.வ.66.1)

நெல்லியடிப் பட்டினசபையின் ஏழாம் வட்டாரமாகவும், கரவெட்டி மேற்குக் கிராமசேவகரின் ஒரு பிரிவாகவும் மாவிட்ட புரத்தின் ஒரு பகுதியாகவும் இப்பெயர் கொண்ட இடங்கள் அமைந்துள்ளன. இப் பகுதிகள் சுண்ணக் கற்களும் மக்கிக் கற்களும் கொண்டமைந்துள்ளன.

கொல்லன்கலட்டி (வலி.வ.64.2)

கொல் > கொல்லன் + கலட்டி = கொல்லன்கலட்டி. மரங்களை வெட்டி, வீழ்த்துவோரையும் கொல்லர் என்ற பதம் சுட்டிற்று. "மரங்கொல் தச்சர்" (சிலம்பு 5:29) என்ற தொடரும் நோக்கத்தக்கது. கொல்லர் என்பது மரத்தச்சரைக் குறிக்குமெனத் தாவீது அடிகள் கூறும் கருத்து ஈண்டுக் குறிப்பிடத்தக்கது:

> "கொல்" was employed in the sense of 'felling' or cutting down' trees. If we meditate for half an hour on all these factors we shall be obliged to admit that 'killing' or 'felling' trees was in the age of primitive man the first stage of 'tilling' or 'agriculture'. Hence we pass, painlessly for us, not for the trees concerned from 'kol' = kill to 'kol' = till". (H.S. Daaviidu:1972:35)

கொல்லன் கலட்டி என்பதில் வரும் கொல்லன் என்பது இரும்புக்கொல்லன் (Black Smith) என்ற நிலையில் தொழில் காரணமாக இந்த இடப்பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம். இவ் வூர் தெல்லிப்பளைப் பகுதியில் அமைந்துள்து. கொல்லை + அன் + கலட்டி = கொல்லன்கலட்டி என்ற அடிப்படையிலும் இதற்கு விளக்கம் கூறலாம். இங்கு பல்வகைத் தோட்டங்கள் காணப்படுவதால், இதனைக் கருவாகக் கொண்டு பிறந்த இடப் பெயர் கொல்லன்கலட்டி எனக் கொள்வதே பொருத்தமாகக் காணப்படுகிறது.

வாரிக்கலட்டி (வலி.தெ.பு.32.4)

வாரி + கலட்டி = வாரிக்கலட்டி. இது சுன்னாகம் பட்டின சபைப் பகுதியின் ஓரிடமாகும். வாரி என்பது ஆட்பெயர். வாரி என்பவனுக்குச் சொந்தமான அல்லது வாரி என்பவன் முதல் நிலை பெற்ற இடமாக இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். சாவகச் சேரியில் வாரிஅப்பர் கோவில், வாரிவனநாதஸ்வரச் சிவன் கோயில் என்ற பெயர்களும் 'வாரி' என்ற பெயருடன் அமைதல் காண்க. வாரியார் என்ற பிரிவினர் (எ+டு: கிருபானந்தவாரியார்) காரணமாகவும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். வாரி என்பதற்கு பெருகிய நெல் விளைச்சல் என்பதும் பொருளாகும். மேலும் வாரி = நீர், வழி, வெள்ளம், மதில், கோபுரவாயில், யானைக் கூட்டம், விளைவு (தமிழகராதி:272) என்ற பொருள்களுமுள்ளன. இப் பின்னணியிலும் இவ்விடப்பெயரை நோக்குதல் சாலும். சுன்னாகத்திற் "பருத்திக்கலட்டி" என்ற குறிச்சிப் பெயருள்ளமை யும் நோக்குக.

'காடு' ஈற்று இடப்பெயர்கள்

காடு = வனம், மிகுதி, நெருக்கம், செத்தை, எல்லை, தொகுதி, நான்கு அமைப்புள்ள ஒரு நில வளவு, சுடுகாடு, இடம், புன்செய் நிலம், சிறிய ஊர் (த.லெ.2.855). தமிழகத்தின் பழம்பெரும் பாடல்பெற்ற பல தலங்களிற் 'காடு' ஈற்றுப் பெயர் களும் இடம்பெற்றிருத்தல் நோக்கற்பாலது. (எ+டு: திருமறைக் காடு, திருவாலங்காடு முதலியன). இப் பெயர்கள் பழைமை யைச் சுட்டுவனவாகும். யாழ்ப்பாண மாவட்டத்திற் 'காடு' ஈறு பெற்ற பின்வரும் 19 இடங்கள் உள்ளன:

1. ஆத்திக்காடு (நல்.23.1)
2. இடைக்காடு (வலி .கி. 75.1)
3. எள்ளுக்காடு (கர. 165..2)
4. கள்ளியங்காடு (நல். 33.1)
5. குரக்கன்காடு (நல்.33.1)
6. கொட்டைக்காடு (வலி.தெ.59.5)
7. கொட்டைக்காடு (வலி.மே.45அ.4)

8. கோடாலிக்காடு (வலி.தெ.மே.52.2)
9. சாவற்காடு (வலி.தெ.மே.40.2)
10. நாவற்காடு (தென்ம.122.2)
11. பழையகோவிற்காடு (பச். 156.2)
12. பள்ளன்காடு (வலி. தெ.மே. 40.2)
13. பறையன்காடு (வலி.தெ. ப. 32.6)
14. பனங்காடு (தென்ம. 107.7)
15. மணற்காடு (வடம.வ.கி.142.2)
16. மயிலங்காடு (வலிதெ 59.6)
17. வண்ணான்காடு (வலி.தெ. 57.அ.5)
18. வெட்டுக்காடு (பு.172.3)
19. வேவில்காடு (தென்ம.106.6)

இவற்றிற் பெரும்பாலானவை மரப்பெயர், செடிப்பெயர் ஆகியவற்றின் காரணமாகப் பெயர் பெற்றுள்ளன. சாதியடிப் படையிலும் மூன்றிடங்கள் காணப்படுகின்றன. கள்ளியங்காடு, கொட்டைக்காடு, பள்ளங்காடு என்பனவற்றுடன் வரலாற்றுச் செய்திகள் தொடர்புபட்டுள்ளன. இவற்றில் சில இடப்பெயர்கள் இங்கு விளக்கம் பெறுகின்றன.

இடைக்காடு (வலி.75. 1)

கேரளத்திலேயுள்ள இடைக்காடு என்ற இடப்பெயரை இவ்வூர்ப் பெயருடனும் தொடர்புபடுத்துகின்றனர். இங்கு முன்பு கண்ணகி கோயில் இருந்ததென்றும் இந்த இடத்தில் தற்போது புவனேஸ்வரி அம்மன்ஆலயம் அமைந்துள்ளது எனவும் அறியப் படுகிறது. நிலவளமுடைய பகுதியாக இடைக்காடு விளங்குகின் றது. இங்கு ஆரியன்கலட்டி, சாடிக்கலட்டி, செம்பிகலட்டி, உலக் கன்கலட்டி, கலட்டித்தோட்டம், கோணாவளை, தங்கியவளை, தம்பியவளை, இராக்கை என்ற தொடக்கத்தனவாகப் பல குறிச் சிப்பெயர்கள் வழக்கிலுள.

கோணாவளையில் பழைய கட்டிட அழிபாடுகள், ஆவு ரஞ்சிக்கல், வற்றாதகுளம் என்பன காணப்படுகின்றன. இந்த இடத்தில் கோயில் இல்லையாயினும், மந்தை வளர்ப்போர் நேர்த்திக் கடனுக்காக இங்கு வந்து பொங்குதல் வழக்கம்.

இது முன்னர் வழிபாட்டிடமாக இருந்து, பின்னர் அழிந்திருக் கலாம். இங்கு அகழ்வாய்வுகள் மேற்கொள்ளின் வரலாற்றுண்மை கள் பல வெளிப்பட வாய்ப்புண்டு.

கள்ளியங்காடு (நல்.33.1)

கள்ளி + அம் + காடு = கள்ளியங்காடு. இது நல் லூருக்கு அருகேயுள்ள ஓரிடமாகும். தமிழரசர் காலத்திலே பரநிருபசிங்கனுக்குரிய ஊர்களில் ஒன்றாக இது இருந்திருக்கிறது (யாழ்ப்பாண வைபவமாலை – 56). பரநிருபசிங்கன் சிறந்த மருத்துவன் ஆவார். அவருடைய மருந்துத் தோட்டமே கள்ளியங் காடு. ஆயுள் வேத மருத்துவ மூலிகைச் செடிகளில் கள்ளியும் ஒரு சிறந்த மூலிகை. அதில் நாற்பது வகையான கள்ளிச் செடிகள் உள்ளன என அறியப்படுகிறது. எனவே அம் மூலிகைச் செடிகள் வகை வகையாக இங்கே வளர்ந்து காணப்பட்டமை யால் கள்ளியங்காடு என இவ்விடம் பெயர்பெறுவதாயிற்று.

'சங்கிலியன் தோப்பு' எனக் கூறப்படுமிடமும் இங்கேயே அமைந்திருக்கிறது. அத் தோப்பின் நுழைவாயிற் கோபுரம் இன் றும் யாழ்ப்பாணம் + பருத்தித்துறை சாலை அருகே காணப் படுகின்றது. தமிழரசர் காலத்துப் பழைய கட்டிட அழிபாடுகளின் அடித்தளங்களும் தென்படுகின்றன. தமிழ் மறவர் மரபில் வந் தோர் இங்கு வாழ்கின்றனர். இவர்கள் தமிழ் அரசர் காலத்து மெய்க்காப்பாளராக இருந்தனர் என அறியப்படுகிறது.

கொட்டைக்காடு (வலி.மே. 45அ.4)

இது அராலிக் கிராமத்தின் தெற்கே அமைந்துள்ளது. இங்கேயுள்ள குளத்திலிருந்து நெல் வயல்களுக்கு நீர் பாய்ச்சப் படுகின்றது. பண்டை நாளிலே தொல்புரத்தில் அகநகரும் கோட்டையும் விளங்கியபோது, கோட்டைக்காடு, புறநகர்க் காவற் காடாக இருந்திருக்கலாம். கோட்டைக்காடே பின்னாளிற் கொட் டைக்காடு என மருவிற்றெனலாம். (தொல்புரம்:நூல்:பக்:310 பார்க்க)

பள்ளன்காடு (வலி.தெ.மே.40.5)

இது ஆனைக்கோட்டையிலுள்ளது. நிலத் தோற்றத்தால் இது பள்ளமாகவும், வயற்பிரதேசமாகவும் காணப்படுகின்றது. காக்கைத்தீவில் நடைபெற்ற அகழ்வாய்வுச் சான்றுகளைக் கொண்டு, பள்ளங்காடும் பண்டைய கற்காலக் குடியிருப்புப் பகுதியாக இருந்தது எனக் கூறப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் முதன் முதலாக சாயச்சீலை தயாரிப்பதற்குரிய சாயம் இங்கேயே தயாரிக்கப்பட்டது என்பர். இதற்குரிய இடமாகப் பள்ளன்காடு காணப்பட்டது. இங்கு வாழ்ந்த மக்கள் அதற்குரிய வேர்களைக் கொத்திக் கொடுப்பதற்கு நியமிக்கப்பட்டனர்.

'கிரி' ஈற்று இடப்பெயர்

கிரி = மலை. பெரும் மலையோ அன்றிக் குன்றோ யாழ்ப்பாண மாவட்டத்தில் இல்லை. ஆயினும் சான்றோர் அப் பொருள்பட பல இடங்களுக்குப் பெயர் வழங்கியிருத்தல் (கீரி மலை, சுதுமலை, சுன்னாகம், நவக்கிரி) அவர்களின் கற்பனைத் தெளிவைக் காட்டுகிறது. கிரி எனப் பெயர்பெற்ற 'நவக்கிரி' (வலி.கி. 79.2) என்ற இடம் புத்தூரில் உள்ளது. இங்கு நிலாவரை என்ற இடத்தில் வியத்தகு இயற்கைக் கேணியுண்டு. இது 24 பாகம் ஆழமும் 165 அடி சுற்றளவும் உடையது. இதில் 24 பாகத்தில் 14 பாகம் நன்னீராகும். ஏனைய பகுதி உப்புநீராகும். கீரிமலை நீருற்றுடன் இதற்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது. "நிலாவரைக்கிணற்றில் போடப்படும் தேசிக்காய் கீரி மலை நீருற்றில் வெளிப்பட்டு மிதக்கும்" என்ற பழைய மரபு வழிச் செய்தியும் வழங்குகிறது. இதன் நீர்மட்டம் 24 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை 6 அங்குலத்திற்கு உயர்ந்து, பின்னர் அதேயளவு குறைவதாகக் கூறப்படுகின்றது.

'குடா' ஈற்று இடப்பெயர்

குடா என்ற சொல்= வளைவு, குடைவு, குடாக்கடல், குடாக்கை, வயற்புறத்து மூலை எனப்பொருள்படும் (த.லெ:2. 967). இப் பொருள்நிலையில் குடாரப்பு -(வடம.வ.கி.145.1),

குடாவட்டை (வடம.தெ.மெ.130.0), நாச்சிக்குடா (பூ.175 அ.4) என்ற மூன்று இடப்பெயர்கள் அமைந்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் புவியமைப்பில் பல குடாக்கள் காணப்படினும் அந்நிலையில் ஒரு பெயரைத் தவிர வேறு எப்பெயரும் வழங்கப் படாமை புதுமையாகவே இருக்கின்றது.

'குழி' ஈற்று இடப்பெயர்கள்

குழி என்பது = நீர்நிலை, பள்ளம், வயிறு, பாத்தி, 12 அடிச்சதுரக்குழி, 144 சதுரஅடி முதல் 576 சதுரஅடிவரை பற்பல இடங்களில் வெவ்வேறாய் வழங்கும் ஒரு நிலஅளவு என்ற பொருள் தரும் சொல்லாகும் (த.லெ.2:1032). குழிந்த பகுதியி லுள்ள குடியிருப்பு குழி என்று பெயர் பெற்றிருக்கலாம் என்கிறார் டாக்டர் கே.பகவதி (1984:284). இம் மாவடத்திலுள்ள குழி ஈற்றுப் பெயர்களும் பள்ளம் என்ற நிலத்தோற்ற அடிப்படை யிலேயே தோற்றம் பெற்றுள்ளன.

கற்குழி (தென்ம.107.3)

கல் + குழி = கற்குழி. (குழி = கிடங்கு). சாவகச்சேரியின் தென்பகுதியாக அமைந்துள்ள இவ்விடத்தின் நிலம் கற்பாறைகளைக் கொண்டதாகும். இங்கு மக்கள் நிலத்தைத் தோண்டிக், கல்லைக் குழி பறித்தெடுத்து விற்பனை செய்து வருகின்றனர். இதனாலேற்பட்ட கற்குழிகள் பலவற்றை இங்கு காணலாம்.

சுண்டிக்குழி (யாழ்.மா.ந.1.13)

சுண்டி + குழி = சுண்டிக்குழி. சுண்டி என்பதற்கு = தொட்டால்வாடி (தொட்டாற்சுருங்கி), சுச்சு, நீர்ச்சுண்டி, சுக்கு என்பன பொருளாகும் (தமிழ் அகராதி:196). சுண்டிக்குழி முன்னர் பள்ள நிலமாக இருந்தபோது நீர்தேங்கி நிற்க, அங்கு சுண்டிச் செடி செறிந்து காணப்பட்ட நிலையில் இப்பெயர் (சுண்டி + குழி) ஏற்பட்டிருக்கலாம்.

யாழ்மாநகர சபையின் ஒரு பகுதியாக சுண்டிக்குழி அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கல்லூரிகளின் வரிசையில் இடம்பெறும் பரியோவான் கல்லூரி (St.John's College), சுண்டிக்குழி மகளிர் கல்லூரி, செம்பத்திரிசியார் கல்லூரி (St. Patrick's College) என்பனவும், யாழ்ப்பாண மாவட்டத் திருமறைஆயர் பணிமனையும் இங்கேயே அமைந்துள்ளன. பிரித்தானியர் காலத்து அரசஅதிபருக்குரிய பூங்காவும், அரசஅதிபர் செயலகமும் மற்றும் பல அரச திணைக்களங்களும் அமைந்து சிறப்பான பகுதியாகச் சுண்டிக்குழி விளங்குகிறது. இங்கு 'முண்டுக்குளம்' என்ற குளமும் காணப்படுகின்றது. முண்டுக்குளம் > முண்டிக்குளம் > சுண்டிக்குழி என ஆயிற்றோ என ஊகிப்பவருமுளர். இவ்விடத்தின் பழைய பெயர் 'பாண்டியன் தாழ்வு' ஆகும். முன்னர் இடம்பெற்ற பாண்டியப் படை எடுப்புக்களுடன் இப்பெயர் தொடர்புடையதாக இருக்கலாம். இதற்கண்மையில் 'கொழும்புத்துறை' என்ற பழைய இறங்குதுறை அமைந்திருப்பதும் இக் கருத்துக்கு இயைபாக அமைகின்றது.

நாவற்குழி (தென்ம.91.3)

நாவல் + குழி = நாவற்குழி. இவ்விடம் கைதடிக்குத் தெற்கே அமைந்துள்ளது. இது மரப்பெயரடியாகப் பிறந்த பெயர் ஆகும். நாவல் மரத்திற் குழிநாவல் என்ற ஒருவகையுண்டு. அம் மரப் பெயரடியாகப் பிறந்த, குழிநாவல் என்ற பெயர், (குழி நாவல் > நாவல்குழி) முன்பின்னாகத் திரிந்து நாவற்குழியாக மாறிற்று என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விடத்திற்குச் 'சம்புகுண்டம்' என்ற இலக்கியப் பெயருமுண்டு. இது நாவற்குழி என்பதன் வடமொழியாக்கமாகும். நாவல் மரங்களும், பள்ளங்களும் நிறைந்த இடம் என்ற அடிப்படையில் நாவல் + குழி = நாவற்குழி எனப் பெயர் ஏற்பட்டதென்றும் கருதலாம். இதன் புவியமைப்பும் மரஞ் செடிகளின் வளமும் இக் கருத்தைச் சான்றுபடுத்துகின்றன.

நாவற்குழியின் ஒரு குறிச்சிப்பெயர் சாவாங்கொட்டை என்பதாகும். சாவகர்கோட்டை > சாவாங்கொட்டையாயிற்று. சாவகச்சேரியை அடுத்துள்ள இப் பகுதியில் சாவகர், கோட்டை அமைத்ததாகவும், அக்கோட்டை காலப்போக்கில் அழிந்து போனதாகவும் கூறுவர். இவ்விடம் இப்போது திடலாகக் காணப்படுகிறது. எனவே கோட்டை இருந்த பகுதி சாவகர்கோட்டை என முன்னர் அழைக்கப்பட்டிருக்கலாம்.

கைதடிநாவற்குழி (தென்ம.93.1-2)

தென்மராட்சியிற் கைதடி, நாவற்குழி என்ற இரு இடங்கள் உள்ளன. இப்பெயர்கள்கொண்ட இவ்விரு ஊர்களிலிருந்து குடிபெயர்ந்து அவற்றின் அயற்பதியான மறவன்புலவில் வாழ்ந்து வந்த மக்களின் குடியிருப்பு, காலப்போக்கில் இரு இடப்பெயர்களையும் சேர்த்து ஒன்றாகக் கைதடிநாவற்குழி என்ற பெயரைப் பெறுவதாயிற்று. இது மறவன்புலவு கிராமசேவகர் பிரிவின் கீழ் இடம்பெற்றுள்ளது.

'செம்பாடு' எனப் பெயர் பெற்ற இடங்கள்

சிவந்த வளமான மண்ணமைப்புக் கொண்ட நிலப்பகுதி 'செம்பாடு' எனப்படும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலே நல்லூர், வலிகாமம், வடமராட்சிப் பகுதிகள் செம்மண் நிலவியல்பு கொண்டவையாகும். செம்பாட்டு நிலவியல்பு கொண்ட பகுதிகள் 'செம்பாட்டுத்தரை' என்றழைக்கப்படும். இந் நிலவியல்பின் சிறப்பு நிலையில் மூன்று இடங்கள் பெயர் பெற்றுள்ளன. அவை தென்ம. 11.6, வடம.வ.கி.123.2, வலி. தெ.57அ என மூன்று பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

'தரை' ஈற்று இடப்பெயர்கள்

'தரை' என்ற விகுதிப்பெயர் திராவிடப் பண்பாட்டுக்கேயுரிய மிகப்பழைய பெயர் என்பதை "முகிஞ்சதரா" = (இறந்தோர் தரை) என்ற இடப்பெயரால் அறியலாம். தரை என்பது நிலம் என்ற பொருளில் வரினும் சிறப்பு நிலையில் சற்று மேடான நிலப்பகுதியைச் சுட்டுவதாகவும் வழங்குகின்றது.

குசுமன்தரை (வலி.தெ.மே.52.4)

குசுமம் = பூ; குசும்பம் = ஒரு வகைமரம். இம்மரங்கள் செறிந்து காணப்பட்ட நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். யாழ்ப்பாண வைபவமாலை (பக்.2-10) குறிப்பிடும் உசுமன் என்ற முக்குகர் தலைவன் பெயரும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. உசுமன்தரை > குசுமன்தரை என மருவியிருக்கலாமோ எனவும் கருதலாம்.

வாய்க்கால்தரவை (தென்ம.107.11)

தரை = தரவை. வாய்க்கால் ஊடறுத்துச் செல்லும் பகுதி என்ற பொருளில் இப்பெயர் தோன்றிற்று.

'திடல்' ஈற்று இடப்பெயர்கள்

மேட்டு நிலப்பகுதி என்பது திடல் (திடர்), திட்டி, பிட்டி, மேடு என்பவற்றைக் குறிப்பதாகும். திட்டு > திடல். திட்டு = மேடு, குண்டு, ஆற்றிடைக்குறை (த.லெ.3:1868). தமிழகத்திலும் 'திடல்' ஈற்று இடப்பெயர்கள் வழக்கிலுள்ளன. சான்றாக மாளிகைத்திடல், செட்டித்திடல் என்னும் இடங்களைக் குறிப்பிடலாம். திட்டி, திடல் என்பன ஒரு பொருட் சொற்களாகும். திட்டி என்பது வழக்கில் சிட்டி இட்டி எனவும் வழங்கிற்று. (பக்:216 பார்க்க)

அந்தணன்திடல் (வடம.தெ.மே.119அ.1)

இது கரணவாய்ப் பகுதியிற் பருத்தித்துறை + சாவகச்சேரி சாலையின் 8ஆம் மைற்கல் எல்லையில் உள்ளது. அதன் ஒரு பக்கம் பரவைக் கடலும், மறுபக்கம் வயல்வெளிகளும், நடுவே குடியிருப்பும் அமைந்துள்ளன. நிலத்தோற்றத்தின் அடிப்படையில் இப்பெயர் ஆக்கம் பெற்றுள்ளது இங்கு முன்பு அந்தணர்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. பண்டைய ஈழத்தில் விஜயன் காலந்தொட்டு அந்தணர் பெற்றிருந்த செல்வாக்கை மகாவம்சம் உரைக்கின்றது. கி.மு. 4ஆம் நூற்றாண்டில் பாண்டுக்காபய மன்னன் காலத்திற் அந்தணருக்குத் தனியாக இருந்த

வசிப்பிடம் பற்றி மகாவம்சம் குறிக்கின்றது (M.V.X: 102). இவ்விடங்கள் 'பிராமணாவட்டம்' என அழைக்கப்பட்டன. அது போன்றே தமிழரசர் காலத்தில் அந்தணர் வாழ்ந்த இடம் 'அந்தணன் திடல்' எனப் பெயர் பெற்றதெனலாம்.

எருதிடல் (தென்ம.88.1)

எரு + திடல் = எருத்திடல். காலப்போக்கில் எருதிடலாக வழங்கிற்று. (எரு = பசளை, உரம்) இது கைதடி என்ற இடத்திற்கு அடுத்துள்ள ஊராகும். இப் பகுதியில் ஆடு, மாடு என்பன பெரிதும் வளர்க்கப்பட்டன. அவற்றின் கழிவுப் பொருட்களைக் குவித்து வைத்த இடம் எருத்திடலாகக் காணப்பட்டமையால் இப்பெயர் வழங்கியிருக்கலாம். இப் பகுதி இப்போதும் திடலாகவே காணப்படுகிறது. தமிழகத்திலே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எருவாடி என்ற இடம் ஈண்டு ஒப்புநோக்கற்பாலது.

களவட்டித்திடல் (கர.168.1)

களவட்டி + திடல் = களவட்டித்திடல். இது கரச்சி - புலோப்பளைப் பகுதியிலுள்ள மருத நிலத்தூர். வயற்களத்தில் சூடு அடிக்கும்போது பயன்படுத்தப்படுமிடம் 'களவட்டி' எனப்படும். பொதுவாகத் திடலான இடத்திலே களவட்டி அமைக்கப்படுதல் வழக்கம் (இ.பாலசுந்தரம்: 1979:387). களவட்டித் திடலில் பலரது நெற்கதிர்ச் சூடுகளும் குவிக்கப்படுதல் இயல்பு. இந்நிலையிற் பெயர் பெற்றதே இவ்விடமாகும்.

'தீவு' ஈற்று இடப்பெயர்கள்

சுமேரியக் கண்டம் பற்றிய பல்வேறு கருத்துக்கள் அறிஞரிடையே நிலவுகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதி கடல் கோள்களால் அழிந்தமை பற்றியும் அறியப்படுகிறது. கடற் கோள்கள் நிகழ்ந்தபோது தரைப்பாகம் கடலுள் அமிழ்ந்தியது. திடராகத் தெரிந்த பாகங்கள் காலப்போக்கிலே தீவாக உருப்பெற்றன. கடலாற் சூழப்பட்ட நிலப்பரப்புக்கள் மட்டுமன்றி,

ஆற்றிடைக் குறையாக விளங்கும் பகுதிகளும் 'தீவு' என வழங் கப்படுகின்றன. இவ்வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல் வேறு தீவுகள் காணப்படுகின்றன.

அனலைதீவு, இரணைதீவு, எழுவைதீவு, காரைதீவு (காரைநகர்), நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, வேலணைத்தீவு ஆகியன ஒரே தொடராக யாழ்ப்பாணக் குடா நாட்டின் தென்மேற்கே அமைந்துள்ளன. இவற்றில் வேலணைத் தீவு (64ச.கி.மீ) மிகப்பெரியது; எழுவைதீவு (1.6ச.கி.மீ) மிகச் சிறியது. இவற்றைவிடக் கச்சைதீவு, பாலைத்தீவு, மான்தீவு என்பனவும் அமைந்துள்ளன. இத் தீவுகளின் மொத்தப் பரப்பளவு 203ச.கி. மீற்றர்களாகும். 1981இல் எடுக்கப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின்படி இப்பகுதிகளின் மொத்தச் சனத்தொகை 82110 ஆகும். காரைநகர், வேலணை, புங்குடுதீவு ஆகிய மூன்றும் குடிசனப் பெருக்கம் பெரிதும் கொண்டவை. இம்மூன்று தீவுகளும் பாலங்களின் மூலம் (causeways) யாழ்ப்பாணத்துடன் இணைக்கப் பட்டு போக்குவரத்து வசதிகளைப் பெற்றுள்ளன. ஏனைய தீவு களுக்கு இயந்திரப் படகுகள் மூலமான (ferry service) போக்கு வரத்துச் சேவை உள்ளது.

அனலதீவு, இரணைதீவு, காரைதீவு, வேலணை, மண்டை தீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு என்னும் எட்டும் மக்கட் குடியேற்றமுடையனவாகவும், எழுவைதீவு, காட்டுத்தீவு (பறவை தீவு), பாலைதீவு, கெச்சைதீவு (நெடுந்தீவுக்கு தென்மேற்கு), காக்கை தீவு என்னும் ஐந்தும் மக்கட் குடியேற்றம் அற்றன வாகவும் இருந்தன (க. வேலுப்பிள்ளை:1918:73).

வரலாற்றுக்காலம் முதலாக நடைபெற்றுவந்த இந்து சமுத்திர வணிக நடவடிக்கைகளில் இத் தீவுகள் சிறப்பிடம் வகித்து வந்தமையை இங்கு அகப்படும் பண்டைய நாணயங் களாலும், சீன, உரோம மட்பாண்டங்களாலும், மற்றும் வரலாற் றுத் தடயங்களாலும் அறியப்படுகின்றது. ஐரோப்பியர் இந்து சமுத்திரத்தில் மேலாட்சி செலுத்தியபோது இலங்கையைத் தம் பக்கம் வைத்திருந்த நாடுகள் இத்தீவுகளில் மிகக்கூடிய அக்கறை செலுத்தி வந்துள்ளன. ஒல்லாந்தர் தமது ஆட்சிக் காலத்தில் இத்தீவுகள் அனைத்தையும் தம் ஆட்சிக்குக்கீழ் வைத்திருந்த தோடு, ஆங்காங்கு கோட்டைகளையும் கட்டினர். இத்தீவுகள் ஒல்லாந்து நாட்டு நிலத்தேற்றத்துடன் ஒப்புடையனவாகக் காணப் பட்டமையால் தம் நாட்டுத் தீவுப் பெயர்களை இத்தீவுகளுக்கும்

பொருத்தம் நோக்கி வழங்கலாயினர். அவ்வாறு அவர்களிட்ட பெயர்களிற் சில வழக்கிழந்து போய்விட்டன. எனினும் கயிற்ஸ், டெல்வ்ற் ஆகிய இருபெயர்களே இன்றும் வழக்கில் உள்ளன. இத் தீவுகளுக்கு ஒல்லாந்தர் இட்ட பெயர்கள் வருமாறு:-

அம்ஸ்ரடாம்	(Amsterdam)	காரைதீவு
றொற்றர்டாம்	(Rotterdam)	அனலைதீவு
கயிற்ஸ்	(Kayts)	ஊர்காவல்துறை
டெல்வ்ற்	(Delft)	நெடுந்தீவு
உறார்லெம்	(Harlem)	நயினாதீவு
மிடில்பேக்	(ஆiddleburgh)	புங்குடுதீவு
ஹைமன்ஹில்	(Haimenhiel)	ஊர்காவல் துறைக் கடற் கோட்டை
லைடன்	(Leyden)	வேலணைத்தீவு
கியென்ஜ்	(Calienye)	காக்கைதீவு
துவிகெபிறிடெர்ஸ்	(Twee Gebreeders)	இரணைதீவு
கலுயி	(Galue)	பாலைதீவு

கந்தபுராணத்திலே (அண்டகோசப்படலம்:19-21) சப்த தீவுகள், சப்த கடல்கள் என்பன குறிப்பிடப்படுகின்றன. அவற்றை யாழ்ப்பாணக் குடா நாட்டின் தீவுகளுடனும் கடல்களுடனும் இனம் கண்டு எழுதியுள்ளமையும் படித்தறியத்தக்கதே. பாக்கு நீரணைக் கடல், ஏழுகடல் என வழங்கப்படுகிறது. ஆதலினால் அக் கடலாற் சூழப்பட்ட தீவுகளும் சப்ததீவுகள் எனப்பெயர் பெயர் பெறலாயின. கந்தபுராணத்திற் காணப்படும் தீவுப் பெயர் கள் இந்த ஏழு தீவுப் பெயர்களுடன் வருமாறு இனங் காணப் பட்டுள்ளன (டானியல் ஜோன்:1875-34-35).

சம்பு	=	நயினாதீவு
சாகம்	=	காரைதீவு
சூசை	=	ஊர்காவல்துறை
கிரவுஞ்சம்	=	புங்குடுதீவு
இலவு	=	எழுவைதீவு
கோமேதகம்	=	அனலைதீவு
புட்கரம்	=	நெடுந்தீவு

தொலமி இக் கடல்தீவுகளை மணிஆலத்தீவுகள் (Mani aloue Islands) எனக் குறிப்பிட்டுள்ளமையும் நோக்கத்தக்கதாகும் (Ptelo my Ancient India Crindle 1927:242) .

அனலைதீவு (தீவு.வ.2)

இது ஊர்காவல்துறைக்கு வடபால் ஏழு மைல் தூரத்தில் அமைந்துள்ளது. கடல் குமுறி எழும் நேரங்களில் தீவகம் அலைகளால் அழிவுறாவண்ணம் நாற்புறமும் இயற்கையாகவே கற்பாறைகள் அணை போன்றமைந்துள்ள காரணத்தால் இத் தீவிற்கு 'அணை தீவு' என்னும் பெயர் ஏற்பட்டது. அதுவே நாளடைவில் அணைலதீவு > அணலதீவு > அனலைதீவு என வழிமுறையாக மருவி வழங்கிற்று என்று ச.சதாசிவம் பெயர் விளக்கம் கூறுகிறார் (1979:பக்.70-76). அனல் + தீவு = அனல்தீவு > அனலைதீவு என மாற்றம் பெற்ற தெனவும் இப் பெயர்த் தோற்றத்திற்கு விளக்கம் கூறுவாருமுளர்.

பொருள் செறிந்த தமிழ்ச் சொற்களால் ஆக்கம் பெற்ற இத் தீவுப் பெயரை S.W. குமாரசுவாமி (1918:113) 'அக்நிதீவயன', 'அநலதீவயின' என வழங்கும் சிங்களப் பெயர்களே தமிழிலே அனலதீவாயிற்று எனப் பிழைபட விளக்கம் கூறினார். நீர்வளமும் நிலவளமும் பயிர்வளமும் மிக்க இத்தீவிற்கு அனல் + தீவு என்ற பெயர் விளக்கம் கூறவது எவ்வகையிலும் பொருந்தா தென்க. இங்கு பழைமை வாய்ந்த அரிஹரபுத்திரஐயனார் கோயில், முருகமூர்த்தி கோயில், ஞானவைரவர்கோயில், ஏழு மங்கை நாச்சியார் கோயில் முதலியனவும் அமைந்துள்ளன. இங்குள்ள நாகேஸ்வரர் கோயில் தான்தோன்றீஸ்வரமாக அமைந் துள்ளது. இத்தீவின் தெற்கே புளியந்தீவு என ஒரு சிறுதீவு உள்ளது. அனலைதீவின் வடக்கே அரைமைல் தொலைவில் பருத்தித்தீவு என்ற ஒரு சிறுதீவு காணப்படுகிறது. அனலைதீவின் குறிச்சிப் பெயர்களில் ஒன்றாக 'அரசன்புலம்' என்ற இடங் காணப்படுதல் இவ்விடம் பண்டை நாளில் அரச நடவடிக்கை களோடு தொடர்புபட்டிருந்தமையைக் குறிப்பிடுகின்றது. இங் குள்ள கற்பாறை ஒன்றில் இருபெரிய காலடிச் சுவடுகள் காணப் படுகின்றமையும் ஆய்வுக்குரியதாகும். 1719இல் ஒல்லாந்தர் இத்தீவின் கிழக்குக் கடற்கரையில் கோட்டை கட்டியிருந்தனர் என்றும், அதனை ஆங்கிலேயர் இடித்தழித்தனர் என்றும் அறியப் படுகிறது.

இரணைதீவு (பூ.8:176.1)

பூநகரிப் பகுதியிற் குமுளமுனைக்கு மேற்கே பெரியதீவு, சிறுத்தீவு என்ற இரு தீவுகள் அருகருகே காணப்படுகின்றன. அவ்விரு தீவுகளையும் ஒன்றாகக் குறிக்கும் பெயரே இரணைதீவு என்பதாகும். இங்கு மீன்பிடித்தொழிலே முதன்மை பெற்றுள்ளது. இவ்விடத்தில் வாழும் மக்களுக்கும் வலைப்பாடு என்ற ஊர் மக்களுக்கும் சமூக-சமய அடிப்படையில் மிக நெருங்கிய ஒரு மைப்பாடுகள் காணப்படுகின்றன. (இரணைமடு இடப்பெயர் விளக்கம் பார்க்க. பக்:84)

எழுவைதீவு (தீவு.வ.2)

ஈழ் > எழு > எழுவை + தீவு = எழுவைதீவு. ஈழ், எழு என்னும் சொற்கள் அழகு, எழில் என்னும் பொருள் குறிப் பன. எனவே எழுவைதீவு என்பது அழகிய தீவு எனப் பொருள் தருகிறது. எழுவைதீவு என்ற பெயர்க்காரணம் பற்றி மேலுஞ் சில விளக்கங்கள் காணப்படுகின்றன. எழு என்பது ஒருவகை முட்செடி. இதனைக் கணையமரம் என்கிறது தமிழகராதி (பக்.59). எழு மரங்கள் இங்கு செறிந்து காணப்பட்டமையால் எழு + தீவு > எழுவைதீவு எனப் பெயர் ஏற்படுவதாயிற்று என ஊகிப்பதும் தவறாகாது.

தீவுப்பகுதி வடக்கு உதவி அரசஅதிபர் பிரிவில் எழுவை தீவு அமைந்துள்ளது. போர்த்துக்கேயர் இத்தீவை Ilha Deserta (பாலைவனத்தீவு) எனப் பெயரிட்டு வழங்கினர் என்றும், இங்கே பாம்புகள் நிறைந்த காடுகள் செறிந்து காணப்பட்டனவென்றும், போர்த்துக்கேயர் தங்களுடைய கப்பலுக்குத் தேவையான விறகு களை இங்கேயே பெற்றனர் என்றும் பால்தேயஸ் (Baldaeus:1959: 229-230) தமது நூலிலே குறிப்பிட்டுள்ளார். மரப்பெயர் அடி யாகவே எழுவைதீவு என்ற பெயர் தோற்றம் பெற்றிருக்கிறது என்பதற்கு இச்செய்தியும் சான்றாகிறது. அனலைதீவு, எழுவை தீவு, நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, வேல ணைத்தீவு என்ற ஏழு தீவுகளும் 'சப்த தீவுகள்' என இலக்கிய காரரால் வழங்கப்பட்டன. இதனை மக்கள் 'ஏழுதீவுகள்' என்ற னர். அப் பெயர் வழக்கு எழு தீவு > ஏழுதீவு என மாறிற்று.

காலப்போக்கில் ஏழுதீவுகளையும் சுட்டிய பெயர் தனித்து ஒரு தீவைக்குறித்து அதன் பெயராக வழங்கிற்றென்றும் கருதப் படுகிறது (க. செல்வநாயகம்1955).

இவ்விடப்பெயர் தொடர்பாகச் சில கதைகளும் கூறப்படு கின்றன. பண்டைநாளில் தென்னிந்தியாவில் இருந்து ஈழக்கரைக் குச் சங்கு குளிக்க வந்தோர் முதலிற் கண்ணுற்றதீவு (முதலில் காட்சிக்கு எழுந்த தீவு) என்றபடியால் எழுவைதீவு எனப்பெயர் பெற்றதென்பர். அன்றியும் அவர்களுக்குச் சூரியன் எழும் திசை யில் இத் தீவு அமைந்திருந்தபடியால் எழுவான்தீவு என வழங்கி அது எழுவைதீவாயிற்று என்பர் சி.சிற்றம்பலம் (சப்ததீவுகள் 1979: 43). ஊர்காவல்துறையிலிருந்து பரந்து கிடக்கும் மற்றைய தீவுகளுக்குப் பயணம் செய்யும்போது முதலிலே தென்படும் தீவு இதுவே என்றும், அதனால் இது எழுவாய்தீவு (முதல்தீவு) என வழங்கிப் பின்னர் எழுவைதீவு எனப் பெயர் பெற்றது என்று கூறுவோரே பலர் (க. செல்வநாயகம்:1950). பண்டை நாளில் ஊர்காவல்துறை முதன்மையான பயணத்துறையாக விளங்கியமையால் மேற் குறிப்பிட்ட கருத்தும் ஏற்புடையதா கலாம். எழுவைதீவு ஒன்றரை மைல் நீளமும் அரை மைல் அகலமும் கொண்ட சிறு தீவாகும். தொலைப் பார்வையில் மிகவும் சிறிய தீவாகக் (எள்ளுப்போல்) காணப்பட்டமையினால் இப் பெயர் பெற்றதெனவும் சிலர் கருதுவர்.

S.W. குமாரசுவாமி (1918:114) இப்பெயர் 'எலுவா' என்னுஞ் சிங்களச் சொல்லினின்றும் வந்ததென்பர். எலுவா = ஆடுகள். ஆடுகள் நிறைந்த தீவு என்ற பொருளில் இப்பெயர் சிங்களத்தில் வழங்கிற்று என்கிறார். கடலாற் சூழப்பட்டு நெய்தல் நிலவளமும், மருத நிலவளமும், மேட்டில் பனந்தோப்பு அழகும் பொருந்தி, எழில் தீவாகக் காணப்பட்டமையால் இது எழில்தீவு என வழங்கிற்று. காலப்போக்கில் எழில்தீவு > எழுவைதீவு என மாறிற்று என்றும் கருதலாம். இத் தீவில் பருத்திச் செய்கை நன்கு நடைபெற்றமை பற்றி பசேற் (E.R.S.Baseset) என்பவர் தாம் எழுதிய Romantic Cey- lon என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளார். இத் தீவின் தென்பகுதியில் இறங்குதுறையும், அதன் வடக்கே முருகன் கோயில் அமைந்த முத்தன்காடு என்ற இடமும் உள் ளன.

கச்சதீவு (நெ.தீ.1-2)

இது நெடுந்தீவுக்குத் தென்மேற்கே 12 மைல் தொலை வில் அமைந்துள்ளது. இது கற்றரையாகவே காணப்படுவதால் மக்கட் குடியிருப்பு இங்கில்லை. ஆயினும் மிகப் புகழ்பெற்ற புனித அந்தோனியார் தேவாலயம் இங்கு அமைந்துள்ளது. பங்குனி, சித்திரை மாதங்களில் இத்தேவாலயத்தில் ஆண்டு தோறும் திருவிழா நடை பெறுகிறது. விழாக் காணச் செல்வோர் குடிநீர் உட்பட அனைத்துப் பொருட்களையும் தம்முடன் எடுத்துச் செல்வது வழக்கமாகும்.

கச்சதீவு என்ற பெயர் எவ்வாறு வந்ததென்பது புதிரா கவே இருக்கிறது. கச்சை + தீவு = கச்சதீவு. கச்சை என்பது = கயிறு, அரைக்கச்சு, யானைக்கழுத்திலிடுகயிறு, உடற்றழும்பு, வார், சட்டை எனப் பொருள் தரும் சொல்லாகும். கச்சைக் கொடியோன் கன்னன் ஆவான். பாரதக் கதையுடன் தொடர் புடையதாக மணிபல்லவம் (நயினாதீவு) அமைவதால் கச்ச தீவுக்கும் பாரதக்கதைக்கும் தொடர்புண்டா என்பதும் மேலாய்வுக் குரியதாகும். இராமாயணத்துடன் தொடர்புடையதாக, அனுமார் சஞ்சீமலையைத் தூக்கிக் கொண்டு வரும்போது சிதறிய ஒரு கற்பாகமே கச்சைதீவென நாட்டார் வழக்கிற் கூறப்படுகிறது. மேலும் வவுனியாவிலுள்ள கச்சுக்கொடி, யாழ்ப்பாணத்திலுள்ள கச்சாய் என்ற இடப்பெயர்களும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுக் கூட்டங்களின் இறுதியில் இத்தீவு அமைந்திருப்பதாலும் இது கச்சை >கச்ச தீவாயிற்று என்றும் கூறப்படுகின்றது.

கற்கடதீவு(நெ.தீ.3.2)

கல் + கடல் + தீவு > கற்கடதீவு. இது நெடுந்தீவுக்குத் தென்கிழக்கே 10 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இத் தீவு கற்றரையாகவே காணப்படுகிறது. இங்கு மக்கட் குடியிருப் பில்லை. மீனவர் இங்கு வந்து தங்கி மீன்பிடித்து மீள்வது வழக்கம்.

கறுக்காதீவு (பூ.171.3)

கறுக்காய் + தீவு = கறுக்காய்தீவு. இது பூநகரியிற் செட்டியாகுறிச்சிக் கிராமசேவகர் பிரிவில் அமைந்த ஓரிடமாகும். இவ்விடம் தீவு அன்று. தீவு என்ற வழக்கு கடலாற் சூழப்பட்ட இடத்தை மட்டுமன்றி, ஒரு குறிப்பிட்ட சுற்றாடற்பகுதியையுஞ் சுட்டுவதாக வழங்குகின்றது. கறுக்காய் மரங்கள் நிறைந்த பகுதி என்ற பொருளில் இப்பெயர் தோற்றம் பெற்றுள்ளது. இங்கு கமத்தொழிலும் மீன்பிடியும் நடைபெறுகின்றன.

காக்காதீவு (பூ.175.1)

இது பூநகரிப்பகுதியில் வலைப்பாடு என்ற இடத்திற்குத் தென்மேற்கே அமைந்த ஒரு சிறு தீவாகும். இங்கு மீன்பிடித் தொழில் நடைபெறுகிறது. இங்கு கூடும் காகக் கூட்டங்களின் காரணமாக இப்பெயர் வந்ததென்பர் (தகவல்: நீலகண்டர் கந்த சாமி, பொன்னாவெளி).

காரைதீவு (காரைநகர்) (தீவு.வ.3-5)

சப்த தீவுகளில் ஒன்றாகிய காரைதீவு, 12.09.1923 ஆம் திகதி முதலாக அரச ஒப்புதலுடன் 'காரைநகர்' என்ற பெயரால் வழங்குகின்றது. 1887இல் பதிப்பிக்கப்பட்ட தட்சிணகைலாச புராணத்திலும் 'காரைநகர்' என்ற வழக்கு இடம் பெற்றிருத்தல் கவனிக்கத்தக்கதாம். இத்தீவு தற்போது யாழ்ப்பாணக் குடா நாட்டுடன் 2 கி.மீ. நீளமுள்ள பாலத்தின் மூலம் இணைக்கப் பட்டுள்ளது. இலங்கையில் காரைதீவு என்ற பெயரில் மூன்று ஊர்கள் காணப்படுவதால், அவற்றிலிருந்து இதனைப் பிரித்துக் காட்டவும், பாலத்தின்மூலம் இத்தீவு இணைக்கப்பட்டதன் காரண மாகவும் இதற்குக் காரைநகர் எனப்பெயர் மாற்றம் செய்தனர். பண்டைநாளில் இங்கு காரைச் செடிகள் காணப்பட்டமையால் இத்தீவு காரைதீவு எனப்பெயர் பெறுவதாயிற்று. இத்தீவின் தெற்கே 1.5கி.மீ. தொலைவில் ஊர்காவல் துறையும், தென் மேற்கே எழுவைதீவும், 20கி.மீ தொலைவில் தென் இந்தியக் கரையும் அமைந்துள்ளன.

காரைநகர் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. காரைநகர் மேற்கில் ஆலடி, செம்பாடு, மணற்பிட்டி, தங்கோடை, வாரிவளவு, வேரப்பிட்டி, கள்ளுத்தெரு, ஆயிலி, முல்லைப்பிளவு, மெலிச்சோடை, கருங்காலி, வேரக் குளம், மாதடை, சின்னாலடி, வேம்படி, பத்தர்கேணி, அண்டவேல், நட்டுப்பாளி, புளியங்குளம் முதலிய குறிச்சிப் பெயர்கள் வழக்கிலுள்ளன.

காரைநகர் வடக்கில் கோவளம், மன்னாங்குபிட்டி, மணற் காடு, இடைப்பட்டி, விக்காவில், சிவன்கோவிலடி, மாப்பாணஊரி, பழையகண்டி, வலந்தலை முதலிய குறிச்சிப்பெயர்களுள. காரை நகர் கிழக்கிற் களபூமி, பொன்னாவளை, பாலாவோடை, எட்டுக் கட்டி, விளானை, ஆலடி முதலான இடப்பெயர்கள் காணப்படு கின்றன. காரைநகர் தெற்கில் ஊரிக்காடு, தோப்புக்காடு, பலிக் காடு, நீலங்காடு, இராசாந்தோட்டம், துறைமுகம் ஆகிய இடங் களும் அமைந்துள்ளன. பண்டைய அரச நடவடிக்கைகள் நிகழ்ந்த இடம் என்ற அடிப்படையில் இப்பெயர்களுக்கு விளக்கம் கூறக் கூடியதாக உள்ளது. போர் நடந்த இடம் களபூமி; நீலன் இருந்த இடம் நீலன்காடு; இராசர் இருந்த இடம் இராசாந் தோட்டம்; படை வீரர்கள் தங்கிய இடம் தங்கோடை எனவும் விளக்கம் கொடுக்கப்படுகிறது. கண்ணகி வழக்குரையில் தங் கோடை என்ற இடம் குறிப்பிடப்படுதல் அப் பெயரின் பழைமை யைக் காட்டுகிறது.

பண்டைநாளில் ஏலேலன் என்ற அரசனின் கோட்டை இங்கு இருந்ததென்றும், தமிழ்நாட்டார் படைநடாத்தி வந்து, இங்கு களம் குறித்துப் போர் செய்தார்களென்றும், அவ்வாறு களம் குறித்த இடமே 'களபூமி' என்ற பெயர் பெறுவதாயிற் றென்றும் கூறலாம். களபூமியில் நிகழ்ந்த போரில் வாகையாம் வெற்றி கிடைத்தமையால் அதனைக் கொண்டாடிய இடம் 'வலந் தலை' என்றும், போருக்காகக் களவேள்வி செய்த இடமே 'பலிக்காடு' என்றும் கொள்ளலாம். களவேள்வியின்போது, வீரர் பாடி வீடமைத்து ஆறியிருந்த இடம் 'தங்கோடை' என சொற் பொருள் நோக்கில் தொல்புரக்கிழார் நா. சிவபாதசுந்தரனார் விளக்கம் கூறுவது பொருத்தமாகவே உள்ளது. பாலக்காடு என்ற குறிச்சிப்பெயர் தென்னிந்தியத் தொடர்பைக் காட்டுவ தாகும். இங்கு கோவளம் என்ற இடமுண்டு. இது தனித் தமிழ்ச் சொல்லாகும். கடலுள் நீண்டிருக்கும் நிலப் பரப்பு கோவளம்-

என்று பெயர் பெறும். கேரள நாட்டிலே எழில்மிகு கடற்கரை வனப்புக் கொண்ட கோவளம் என்ற இடம் இருப்பதும் குறிப்பிடத் தக்கது. காரைதீவுக் கோவளத்தில் போர்த்துக்கீசர் காலத்தில் கட்டப்பட்ட வெளிச்சவீடு ஒன்றும் காணப்படுகின்றது.

நீலன் + காடு = நீலங்காடு. இப்பெயருடன் பண்டைத் தமிழர் வரலாற்றை இணைத்துப் பார்க்கக் கூடிதாகவுமுள்ளது. சேரன்செங்குட்டுவன் பெருங்கடற்படை வைத்திருந்தான் என்பது புறநானூறு 126ஆம் செய்யுளால் அறியப்படுஞ் செய்தி. அவனது தலைமைத்தூதன் சஞ்சயன் என்றும், அவனுக்கு அடுத்தவன் நீலன் என்றும் மு. இராகவையங்கார் (1929:127) குறிப்பிடுவர். எனவே நீலங்காடு என்ற இடப்பெயர் பண்டை நாளில் இந்து மாகடற்பரப்பு மீதில் சேர மன்னனது மேலாட்சி நடைபெற்றபோது இப்பெயர் ஏற்பட்டதா எனவும் ஆராய இடமுண்டு. இராமாயணத் துடனும் இவ்விடப்பெயர் தொடர்புடையதாகக் கூறுவர். பிற்காலத் தில் ஒல்லாந்தராற் கட்டப்பட்ட கோட்டை ஒன்று நீலங்காடு என்ற இடத்திலே அமைந்துள்ளது.

களபூமியில் பெருங்கற் பண்பாட்டுக் காலத்திற்குரியன வாகிய (கி.மு.1000 - கி.பி.300) கறுப்பு, சிவப்பு மட்பாண்ட பண்பாட்டுக் கருவிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை அவ்விடத் தின் திராவிடப் பண்பாட்டுப் பழைமையை நிரூபிக்கின்றது (பொ. இரகுபதி: 1983). சத்திராந்தை என்ற இடத்தில் வரலாற்றுதய காலத்திற்கு முன்பிருந்து மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் எனக் கூறத்தக்கதான தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புத்த ஜாதகக் கதைகளில் ஒன்றாகிய அபித்தஜாதகம் என்பதில் இத் தீவு பற்றிய ஒரு கதை வருமாறு கூறப்பட்டுள்ளது:

> 'அசித்தன் என்னும் பார்ப்பன முனிவன் வாரணாசியினின்றும் காவிரிப்பூம்பட்டினம் வந்து, அங்கிருந்து வான்வழியாகக் 'காரை தீபம்' என்ற தீவிற்கு வந்தான். ஆங்கு குடிலமைத்துத் தவஞ் செய்து காரை இலைகளை உறைப்பும் உப்புமின்றி அவித்து உண்டு வாழ்ந்தான். அவன் அவ்வாறு காரை இலைகளைப் புசித்து உயிர் வாழ்ந்ததினால் அவ்வூர் காரைதீவு எனப்பெயர் பெற்றதென்பர். (க.கணபதிப்பிள்ளை:1962:99).

ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் காரைநகர்ச் சிவன் கோயில், முத்துமாரியம்மன், பிள்ளையார், கருங்காலி ஐயனார்,

முருகமூர்த்தி, அம்பாள், நாச்சிமார் முதலான தெய்வங்களுக் குரிய கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயம் முதலியனவும் இங்கே அமைந்துள்ளன. உல்லாசப் பயணிகளைக் கவரத்தக்க சவுக்கு மரங்கள் நிறைந்த அழகிய கடற்கரையும் (Casurina Beach) இங் குள்ளது. இத்தீவுக்கு அழகைக் கொடுக்கின்றது.

குறிஞ்சாத்தீவு (கர.162.2)

இது ஆனைஇறவுக்கும் இயக்கச்சிக்கும் இடையேயுள்ள ஓரிடமாகும். இங்கு உப்பளம் அமைந்துள்ளது. குறிஞ்சாச் செடி கள் செறிந்து காணப்பட்ட நிலையில் இப் பகுதிக்குக் குறிஞ் சாத்தீவு எனப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

கேரதீவு

யாழ்நகரிலிருந்து சங்குப்பிட்டியூடாகப் பூநகரிக்குச் செல் லும் சாலை கேரதீவின் ஊடாகவே செல்கிறது. இத்தீவு மறவன் புலவுக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையே அமைந்துள்ளது. சேர நாடு, கேரளம் என மாறியது போன்று சேரதீவு, கேரதீவு ஆயிற்றோ என்பதும், இப் பகுதியில் சேரர் குடியேற்றம் இடம் பெற்றிருந்ததா என்பதும் ஆய்வுக்குரியனவாகும்.

சிறுத்தீவு (பூ.176.3)

இது இரணை தீவுகளில் ஒன்றான சிறிய தீவாகும். இப் பெயருடைய இன்னொரு சிறுத்தீவு யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதிக்கு மேற்கே அமைந்துள்ளது. இங்கு ஒரு சில குடும்பத் தினர் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வாழ்கின்றனர் (தகவல்: மாட்டின் மனுவேற்பிள்ளை, குருநகர்). மண்டைதீவுக்கு அருகில் இத்தீவு அமைந்திருப்பதாலும், அதனிலும் இது சிறிதான தன்மை யாலும் ஒப்பு நோக்கிலே சிறுத்தீவு எனப்பெயர் பெற்றுள்ளது.

செல்லையாதீவு (பூ.174.5)

பூநகரியின் கள்ளகுறிச்சிப் பகுதியில் இவ்விடம் அமைந் துள்ளது. இத் தீவுப்பெயர், நிலம் அல்லது நிலவளத்துடன் தொடர்புபட்டுத் திரிந்து வழங்குகிறது. இவ்விடத்தில் நிலத்தின் கீழ் சல்லி கிண்டி எடுக்கப்படுகின்றது. அதனாற் சல்லித்தீவு என்ற பெயர் முன்பு வழக்கிலிருந்தது என்பர். இங்கு ஒரு கண்ணகி அம்மன் கோயிலுமுண்டு. கண்ணகி அம்மனைச் 'செல்லி' எனவும் வழங்கு வதுண்டு. எனவே செல்லிகோயிலுள்ள தீவு, செல்லித்தீவு என்றும் வழங்கிற்று. பின்பு அக் கோயிற் பூசகராகிய செல்லையா என்பவரின் பெயரால் இத்தீவு செல்லை யாதீவு எனப்பெயர் பெற்றதெனக் கலைஞானி செல்வரத்தினம் கூறுவர். இவ்வாறாகச் சல்லித்தீவு, செல்லித்தீவு, செல்லையாதீவு என இத்தீவின் பெயர் வழங்கிவந்தமையை அறியக் கூடியதாக உள்ளது.

நயினாதீவு (தீவு.தெ.4 - 4அ)

இத்தீவு யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்கே சுமார் பதி னெட்டு மைல் தூரத்தே அமைந்துள்ளது. இதன் மறு பெயர்களாக நாகதீவு, நாகத்தீவு, நாகநயினார்தீவு, நயினார்தீவு, நாகதீபம், நாவல்தீவு, பூந்தோட்டம், சம்புத்தீவு, மணிபல்லவம், மணி பல்லவத்தீவு, மணிநாகதீவு, பிராமணர்தீவு, மணித்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம் எனத் தமிழிலும் 'நாகதிவயின' எனச் சிங்களத்திலும் 'ஹார்லெம்' என டச்சுமொழியிலும் வழங்கப் படுகின்றது. இப்பெயர்கள் வழங்கப்பட்டமைக்கு மரபு வழியாகக் கூறப்படும் பல்வேறு காரணங்களும் விளக்கங்களும் இங்கே ஆராயப்படுகின்றன.

I நாகதீவு: நாகர்களின் ஆதிக்குடியிருப்பாலும், நாக வழிபாட்டாலும், நாகங்கள் பெரிதும் வாழ்ந்தமையாலும் நாகதீவு எனப்பெயர் ஏற்பட்டிருத்தல் இயல்பே.

II நயினாதீவு: (நயினார்தீவு) என்ற பெயர் வழங்கக் காரண மாகப் பின்வரும் செய்தி அமைகின்றது:

'மதுரையில் மாநாயக்கன் என்னுமொரு வைசியர் இருந்தாரென வும், அவரே நயினாதீவு வடகீழ்திசையில் நாகபூஷணிக் கொரு சிறந்த ஆலயம் கட்டுவித்தாரெனவும், மதுரை வைசியர்களிட மிருந்து பெற்ற ஏடுகள் கூறுகின்றன. மாநாயக்கன் என்னும் வைசியரே நயினார்பட்டர் என்ற அந்தணரையும், கண்ணப்பன் என்ற வேளாளரையும் நயினாதீவுக்குக் கொண்டுவந்தார். அக் காலத்தில் இது நாகதீவு என்றே வழங்கப்பட்டது. நயினார் பட்டர் அறிவிற் சிறந்தவராகவும், அரசினர் தொடர்புடைய வராகவும் வாழ்ந்த படியால் தமது ஞாபகத்தைப் பிற்காலத்த வரும் நினைக்க விரும்பி இதனை நாகநயினார்தீவு என மாற்றினர். காலப் போக்கில் நயினார்பட்டரின் செல்வாக்கும், அவர் மரபினரின் செல்வாக்கும் வளர்ச்சியடைய 'நாக' என்ற பெயர் விடுபட்டு 'நயினார்தீவு' என அழைக்கப்படுவதாயிற்று. நயினார்பட்டரின் 20ஆம் தலைமுறையினரான இளையதம்பி உடையார் காலத்திற் பட்டர் மரபினர் நாகபூசணிக்குப் பூசை செய்வதை விடுத்து அரசபணியிற் சேர்ந்தனர். பிற்காலத்திற் பட்டர் மரபினர் செல்வாக்கொழிய நயினார்தீவு என்ற சொல் லில் "ர்" விகுதி விடப்பட்டு நயினாதீவு ஆயிற்று (ஐ. சரவண பவன்: 1972:19).

III. பூந்தோட்டம்: இத் தீவிற்குப் பண்டை நாளில் பூந்தோட் டம் என்ற பெயரும் வழங்கிற்று. தமிழகத்துச் சிதம்பரம் கோயிலுக்குத் தேவையான பூக்களைப் பெறுவதற்கு நயினாதீவுத் தில்லைவெளியில் ஒரு பெரிய பூந்தோட்டம் அமைக்கப்பட்டுப் பூக்கள் சிதம்பரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. தில்லைக் கோயிலுக்குரிய பூக்களை வழங்கிய பூங்கா, 'தில்லைப் பூந்தோட்டம்' என வழங்கப் படுவதாயிற்று. காலப் போக்கில் இப் பூந்தோட்டம் அழிந்து போய்விட்டது, அப் பூந்தோட்டத் தில்லைவெளி 200 பரப்பு அளவுடையதாக இன்றும் காணப்படுகிறது.

IV. மணிபல்லவம்: இலக்கியம் குறிப்பிடும் 'மணிபல்லவம்' என்ற பெயரும் நயினாதீவினையே குறிப்பதாகும். இது பற்றிக் கலைக்களஞ்சியம் (8:78) குறிப்பிடும் விளக்கம் வருமாறு:

'ஒரு சிறுதீவு காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து தெற்கே முப்பது யோசனைத் தொலைவில் உள்ளது. அங்கே தன்னைத் தரிசிப்பவர்களுக்குப் பழம்பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் புத்தபீடிகையும், கோமுகி எனும் பொய்கையும் அங்கே காணப்பட்டன. மணிமேகலை தன் பழம்பிறப்பை இப் புத்தபீடிகையால் உணர்ந்தாள். மணிமேகலை அமுதசுரபி என்னும் பாத்திரத்தை தீவ திலகையின் உதவியால் இக்கோமுகிப் பொய்கையிலே பெற்றாள் எனக் கூறப்பட்டுள்ளது.

எனவே இப்பெயர் கி.பி. 2ஆம் நூற்றாண்டளவில் வழங்கியிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

V. நாகேஸ்வரம்: முற்காலத்தில் நயினாதீவில் இறைவன் சந்நிதியும், இறைவி சந்நிதியும் ஒரே ஆலயத்தில் வெவ்வேறாக இருந்தன. அப்பனும், அம்மையும் கோயில் கொண்டருளிய ஆலயமே நாகேஸ்வரமென அழைக்கப்பட்டது. அவ்வாலயப் பெயரே ஊர்ப்பெயராக வழங்கி வந்திருக்கிறது (ஐ. சரவணபவன்:1972:21) என்ற விளக்கமும் கூறப்படுகிறது.

நயினாதீவும் பண்டைய நிகழ்வுகளும்

I. கி.மு. 523-483 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இடம்பெற்ற புத்தர்பெருமானின் வருகையின் போது, அவர் நாகதீவில் நாகவழிபாடு செய்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

II. பர்மா நாட்டைச் சேர்ந்த தர்மசோக என்ற அரசன் புத்திர சோகத்தால் வருந்தி, நாகதீவின் பெருமையறிந்து இங்கு வந்து, நாகவழிபாடியற்றி புத்திரப்பேறடைந்தார் என்ற செய்தியும் அறியப்படுகிறது.

III. பஞ்ச பாண்டவருள் ஒருத்தராகிய அருச்சுனன் மணிபுரத்திற்கு வந்து நாககன்னியை மணந்து பப்பிரவாகனைப் பெற்றான் என்பது நாட்டார் இலக்கியச் செய்தி. இம் மரபு வழிச் செய்தியைச் சான்றுப்படுத்துவதாக, நாக

பூசணி அம்மன் கோயில் இப்போது அமைந்திருக்கும் இடம் பப்பிர வாகன் சல்லி எனப் பெயர் பெற்றிருப்பதும் இக்கருத்துக்களுக்குச் சான்றாகின்றன.

IV. ஆபுத்திரன் அட்சயபாத்திரத்தைக் கோமுகிப் பொய்கையிலிட்டுச் சென்றான் என்பது இலக்கியச் செய்தி.

V. நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழமன்னன் மணிபல்லவத்திற்கு வந்து பீலிவளை என்பாளை மணந்து தொண்டைமான் இளந்திரையனைப் பெற்றான் என 'யாழ்ப்பாணத்துச் சரித்திரம்' கூறுகிறது.

VI. இங்கு கிரேக்க, உரோம, இந்திய, சீன நாட்டுப் பழைய நாணயங்கள் காலத்திற்குக் காலம் கிடைத்துள்ளன.

VII. கி. பி. 12 ஆம் நூற்றாண்டுக்குரிய சீனநாட்டுச் சாடிகள் இங்கு கிணறு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (C.S. Navaratnam: 1958: 74-75).

நாகரும் நயினாதீவும்

பண்டைக் காலத்தில் ஈழத்தில் நாகர் வாழ்ந்த காலத்திலிருந்தே நயினாதீவில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஏறக் குறைய 14,000 வருடங்களுக்கு முன்பே நயினாதீவில் குடியேற்றம் இருந்திருக்க வேண்டும். அவர்களால் நிறுவப்பட்ட நாகபூசணி அம்மன் கோயில் மூலஸ்தானத்திலுள்ள நாகம் 14,000 வருடங்களுக்கு மேற்பட்டதெனக் கட்டிடக்கலை, சிற்பக் கலை, பொறியியல் நிபுணரான திரு.எம். நரசிம்மன் கருதுகின்றார் (ஐ. சரவணபவன்: 1972:25).

கோயில்கள்

நயினாதீவில் உள்ள கோயில்களில் நயினைநாகபூஷணி அம்மன் ஆலயமே மிகப்பெரியதும், பழம்பெருமை மிக்கதுமாகும். இதனைவிட ஐயனார், ஸ்ரீவீரபத்திரர், வயிரவர், முருகன், வேள்வி

நாயகன், காளி, காட்டுக்கந்தசுவாமி, விநாயகர், பிடாரி, மீனாட்சி அம்மன், மலையில்ஐயனார் ஆகிய தெய்வங்களுக்கும் கோயில் கள் அமைந்துள்ளன. அத்துடன் பௌத்த, கிறிஸ்தவ, இஸ் லாமிய ஆலயங்களும் இடம்பெற்றுள்ளன. நயினாதீவு பண்டைக் காலத்திற் சிறந்த துறைமுகமாக விளங்கிற்று. தென்னிந்தியாவி லிருந்து பிற நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் கடற்பாதையில் நயினாதீவு அமைந்திருந்த தன்மையினாற், தமிழ்நாட்டுக் கப்பல் களும், பிறஎ நாட்டுக் கப்பல்களும் நயினாதீவுத் துறைமுகத்திலே தங்கியே சென்றிருத்தல் கூடும். இத்தீவின் மேற்குக்கரையில் படகுத்துறை என்ற பெயரால் ஓர் இடம் அழைக்கப்படுகிறது. இத்தீவின் மேற்குப் பகுதிக்கடல் ஆழமாகவும், பெரிய கப்பல்கள் போக்குவரத்துச் செய்யக்கூடியனவாகவும் அமைந்துள்ளன.

காவியங்களில் நயினாதீவு

நாகமணி பெறுவதற்காகச் சோழரது படை மணிபல்லவம் வந்த செய்தி காவியங்களில் கூறப்படுகின்றது.

"நசையாத நாகதீவில் நாகத்தின் மணிவாங்க
கசிவான மனதுடனே கடுகவுமை யழைத்தோங்கான்"

என 'கண்ணகி வழக்குரை' என்னும் நாட்டார் காவியத் தின் (Folk Epic) வழக்குரைத்தகாதை இது பற்றிக் கூறுகிறது. இத் தீவிலேயே மணிமேகலை தன் பழம்பிறப்புக் கதையையும் அறிந்தாள். மணிமேகலாதெய்வம் மணிமேகலையை மணிபல்ல வத்திற்குக் கொண்டுவந்தமையை,

"பூங்கொடி தன்னைப் பொருத்தித் தழீஇ
அந்தரம் ஆறா ஆறு அய்ந்து யோசனைத்
தென்திசை மருங்கில் சென்று – திரை உடுத்த
மணிபல்லவத்திடை மணிமேகலா தெய்வம்
அணி இழை தன்னை வைத்து அகன்றது."

என மணிமேகலை (6:210-214) கூறுகிறது. மணிமேகலை இத்தீவில் அம்பிகையின் அருட்பீடத்தைக் கண்டு தொழுது, முற்பிறப்பு பற்றி உணர்ந்தாள். இதனை மணிமேகலையில்,

"பொலங்கொடி நிலமிசைச் சேர்ந்தெனப்பொருந்தி
உன்திருவருளால் என்பிறப்பு உணர்ந்தேன்"
(மேகலை:10: 17: 18)

என்னும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. "உலக அறிவியின் ஒருதனிஏறி" (மேகலை:17:86) என்னும் வரியில் சுட்டும் 'உலகஅறிவி' இன்று 'உலகநிரை' எனத் திரிபடைந்து காணிப் பெயராக இங்கு வழங்குகின்றது. 'அமுதசுரபி' என்ற பெயரில் 1961இல் அன்னதானசபையொன்று செயற்பட்டு வருகின்றது. ஆபுத்திரன் இந்திரனின் சதியால் இத்தீவிற்கு வந்து அமுத சுரபியைக் கோமுகி என்ற பொய்கையிற் போட்ட பின்னர் இறந் தான் என்று கூறும் கதை ஒன்று நாட்டார்வழக்கில் உள்ளது.

தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னனது பிறப் புடன் நயினாதீவு தொடர்புகொண்டிருப்பது பற்றி வேலன் என் பவர் எழுதிய 'மணிபல்லவத்து மதலை' என்ற நூல் குறிப்பிடு கிறது. இங்கு காணப்படும் பரவக்கல் ('பரதவர்கல்') என்ற இடம் கண்ணகி வழங்குரையில் வெடியரசன்போர் என்ற காதை யில் வரும் வீர நாராயணனும், மீகாமனும், போரிட்ட இடம் எனக் கூறப்படுகிறது. கண்ணகியின் திருமணத்தின் பொருட்டு இரத்தினமணி பெறுவதற்காக இத் தீவிற்குப் படையுடன் வந்த மீமாகன் இத்தீவுக்குப் பொறுப்பாக இருந்த வீரநாராயணனுடன் போரிட்டு வெற்றியுடன் திரும்பியதாக நாட்டாரிலக்கியச் செய்தி கள் கூறுகின்றன. இத்தீவின் கடலிலே காணப்படும் 'கருடன்கல்' என்ற கல் பற்றியும் நாட்டார் வழக்கியல் சார்ந்த கதைகள் விளக்கம் கூறுவதும் நோக்கத்தக்கது. நயினாதீவிலுள்ள படகுத் துறை, உவான்துறை, துடரித்துறை, வாகையடித்துறை என்பன பண்டைய வணிகத்துறைகளாக வழங்கியிருக்கலாம். இவ்விடங் களிலும் அகழ்வாராய்ச்சிகள் நிகழ்த்தப்படுதல் இன்றியமையாத தாகும்.

போர்த்துக்கேயர் காலத்தில் (கி.பி.1620-1624) இங் கிருந்த பழம்பெரும் சிறப்பு வாய்ந்த அம்மன்கோயில் தரைமட்ட மாக்கப்பட்டது. போர்த்துக்கேயர் இக்கோயிலை இடித்து இதன் கற்களை ஏற்றிக் கொண்டு போய் ஊர்காவல்துறையில் கோட்டை கட்டப் பயன்படுத்தியுள்ளனர். போர்த்துக்கேயரது ஆட்சிப் பிரிவு களாகிய 32 கோயிற் பற்றுக்களில் (Parish) ஒரு பிரிவாக நயினா தீவும் அமைந்தது. இங்கு வாழ்ந்த குடியிருப்பாளர் 1635இல்

தோம்புளில் பதியப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. ஆங்கிலேயர் காலத்திலே தீவுப் பகுதி மணியகாரனின் நிர்வாகத்தில் நயினாதீவும் ஓர் ஊராக இடம்பெற்றது.

நெடுந்தீவு (நெ.தீ.1-3)

யாழ்ப்பாணக்குடாநாட்டின் தென்மேற்குத்திசையிலே அமைந்துள்ள நெடுந்தீவு, யாழ்ப்பாணத்தில் இருந்து ஏறக்குறைய இருபது மைல்களுக்கு அப்பாலும், இராமேஸ்வரத்திலிருந்து இருபது மைல் தொலைவிலும், பூநகரியிலிருந்து நேர்மேற்கே பதினாறு மைல் தூரத்திலும் அமைந்துளது. இத்தீவு கிழக்கு மேற்காக 5 மைல் நீளத்தையும், வடக்குத்தெற்காக 5 மைல் அகலத்தையும் கொண்டுள்ளது. இது, தலைத்தீவு, பசுத்தீவு, பால்தீவு, அபிஷேகத்தீவு, தயிர்த்தீவு, அவுசதலோகய, மருந்துமா மலைவனம் முதலான பெயர்களால் பண்டை நாள் முதலாக அழைக்கப்பட்டு வருகின்றது. இவை யாவும் காரணப் பெயர்களாகும். நெடுந்தீவு என்ற சொல்லின் வருமொழி முதலில் வரும் நெடும் என்பது இத்தீவின் நீளத்தைக் குறிப்பிடவில்லை. நெடுந்தீவானது, யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து நெடுந் தொலைவில் இருப்பதையே குறிப்பதாகும். தீவுக் கூட்டங்களுள் மிகவும் (நெடும்) நீளமான தீவு வேலணைத்தீவு என்பது குறிப்பிடத்தக்கது.

பசுத்தீவு என்னும் பெயர் இப் பகுதியின் தரைத் தன்மையையும், மக்களின் பொருண்மிய நடிவடிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு வழக்குப்பெற்றதாகும். இத்தீவின் கிழக்குப் பகுதியும், தென்பகுதியும் பரந்த புல் நிலங்களாக அமைந்தமையால், மந்தைகள் மேய்ப்பதற்குப் பெரிதும் பயன்பட்டமையால் இத்தீவுக்குப் பசுத்தீவு என்ற பெயர் ஏற்பட்டதெனலாம். இத்தீவிலிருந்து தமிழகத்து தனுஷ்கோடி, இராமேஸ்வரம் முதலான இடங்களிலுள்ள ஆலயங்களுக்குப் பால், தயிர் ஆகிய பொருட்கள் நாவாய் மூலம் அனுப்பப்பட்டு வந்தமையால் இத்தீவு பால்தீவு, தயிர்த்தீவு என்ற பெயர்களையும் பெற்றுக் கொண்டது. ஆலய அபிஷேகப் பொருட்களான தேங்காய், இளநீர், பழ வகைகள், பால், தயிர் முதலான பொருட்களும் அக்கோயில்களுக்கு இங்கிருந்து அனுப்பப்பட்டமையினால் இத்தீவு அபிஷேகத்தீவு என்ற பெயரைப் பெற்றதென்பர் (ச.சதாசிவம்:1979:16-19).

சிங்கள இலக்கியங்கள் இத் தீவினை 'அவுசதலோகய' ('சஞ்சீவி உலகம்') என்று குறிப்பிடுகின்றன. 'வைத்திய ராஜ சிங்கன்' என்ற விருதுப்பெயர் கொண்ட யாழ்ப்பாண மன்னன் செகராசசேகரன், நெடுந்தீவை 'மருத்துவமாமலைவனம்' என்று போற்றியுள்ளான். இத் தீவெங்கும் மருந்து மூலிகைகள் காணப்பட்டமையால் இப் பெயர்கள் தோற்றம் பெறலாயின. இப் பின்னணியில் புராணக் கதைகளும், நம்பிக்கைகளும் நெடுந் தீவுடன் தொடர்புடையனவாகத் தோற்றம் பெறலாயின.

இராம - இராவணப் பெரும்போரில் மயக்கமுற்று வீழ்ந்த இராமர், படைவீரர்களைக் காப்பாற்றும் பொருட்டு, மூலிகைள் நிறைந்த சஞ்சீவி மலையைக் கொண்டுவரும்படி அனுமனைப் பணிக்க, அனுமன் அக்கட்டளைப்படியே சஞ்சீவி மலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு, கடலைத் தாவி இலங்கைக்கு வரும் பொழுது, அம்மலையிலிருந்து சிதறி வீழ்ந்த ஒரு பகுதியே இத்தீவு என்றும் மரபுவழியாக நம்பப்படுகிறது. அத்துடன், இத் தீவில் மதிப்பிட முடியாத ஒரு மூலிகை மரமொன்று இருப்பதாகவும், அதனைச் சூழ்ந்து நாக பாம்புகள் காவல் புரிவதாகவும், அம்மரத்தை ஒருவரும் காணமுடியாதென்பதும் இத் தீவு மக்களின் நம்பிக்கை. இத்தீவில் மருந்து மூலிகைகள் பெரிதும் காணப்படுவதனாலேயே இத்தகைய நம்பிக்கைகள் மக்களிடம் இருந்து வருகின்றன.

கண்ணகி வழக்குரையிலே 'வெடியரசன்கதை' விரிவாகக் கூறப்பட்டுள்ளது (வி.சீ.கந்தையா:1967). வெடியரசன் தீவுப் பகுதிகளின் மன்னனாக இருந்தான். அவன் கோட்டை அமைத்து ஆட்சி புரிந்த இடமே நெடுந்தீவு எனக் கருதப்படுகிறது. வெடியரசன் நெடுந்தீவையும், அவன் தம்பி வீரநாராயணன் புங்குடு தீவையும், விளங்குதேவன் நயினாதீவையும், ஏரிளங் குரவன் வேலணைத்தீவையும் ஆட்சிபுரிந்தனர் என நாட்டார் இலக்கியச் செய்திகள் கூறுகின்றன. சோழ அரசனின் கடற்படைத் தளபதி மீகாமன் கடற்படையுடன் வந்து அம் மன்னர்களுடன் பெரும்போர் புரிந்து, இறுதியில் அவர்களிடமிருந்த விலை மதிப்பிடுதற்கரிய இரத்தினமணியைப் பெற்றுச் சென்ற கதையும், பல நூல்களால் அறியப்படுகின்றன (ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை: 1933:26, M.D.Rag havan: p.53). கண்ணகி வழக்குரை குறிப்பிடும் வெடியரசன், அவனது சகோதரர்கள் பற்றிய விரிவான செய்திகள் வெடியரசன் வரலாறு என்ற நூலிலும் அறிந்து கொள்ளலாம் (சிவப்பிரகாசம்:1987).

நெடுந்தீவில் அழிந்த நிலையிற் காணப்படும் 'மீகாமன் கோட்டை' பற்றிய செய்திகளும் மேலும் சான்றுகளைத் தரலாம். இக் கதை தொடர்பாக டானியல் ஜோன் கூறும் செய்தியும் ஈண்டு நோக்கத்தக்கதாம்:

> "வெடியரசன் நெடுந்தீவிற் கோட்டை கொத்தளங்களை நிறுவி, தீவுப்பற்றுக்களைத் தனதடிப்படுத்தி, அரசியலுக்குரிய படைக் கலங்களுடன் இராச்சியம் பண்ணினான். வெடியரசன் கோட்டை தற்காலம் அழிந்து கிடப்பதை அத்தீவின் மேற்குப் பகுதியிற் காணலாம். வீரநாராயணன் பொன்னாலை முனைப்புகத்து எலுமிச்சமலையில் தனக்கும், தன்பரிவாரத்தவர்க்கும் ஏற்ற கட்டிடங்களைக்கட்டி, தனதாணை செலுத்திக் கிருட்டினர் கோயிலை ஸ்தாபித்து பிரஸ்தாபமுற்றிருந்தான். அவ்விடத்தி லுள்ள சதுரங்க மணல், மாளிகையடைப்பு முதலாமிடங் களும் அவ்விடமிருந்த அட்டோலிக்கங்களைக் காட்டுகின்றன. விளங்குதேவன் சுழிபுரத்தின் வடபகுதியிலுள்ள திருவடிநிலை யிலும், போர்வீரகண்டன் கீரிமலையிலும் தத்தம் பரிவாரத் தோடு அவ்வப் பகுதிகளை ஆண்டிருந்தார்கள் என்பதற்குப் பூர்வசரித்திரமுண்டு" (டானியல் ஜோன்: 1878:6).

வெடியரசன் கோட்டையை அண்மித்த பகுதிகளில் மட் பாண்ட ஓடுகள், கூரையோடுகள், வட்டமான நாணயங்கள், சதுர நாணயங்கள் என்பனவும் கிடைத்துள்ளன. இக் காரணங் களால் இத்தீவும் தொல்லியற் பண்பாட்டுத்தலமாகக் கருதப் படுகின்றது.

ஒல்லாந்தர் கால ஆட்சியின் சின்னமாக இங்கு "குயிந்தா" என்ற இடத்தில் கலங்கரைவிளக்கம் அமைந்துள்ளது. Queen Tower என்பதன் திரிபே 'குயிந்தா' என்பதாகும். குதிரை வளர்ப்பதற்குச் சிறந்த இடமாக இத் தீவு காணப்பட்டது. ஆங்கி லேயர் ஆட்சிக் காலத்தில் அரேபியா, பேர்சியா முதலிய நாடுக ளிலிருந்து குதிரைகள் முகவர்களின் மூலம் வருவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டன. இவை குதிரைப் பந்தயத்துக்கு ஆங்கிலேயர் களால் பயன்படுத்தப்பட்டன. இங்கே குதிரைலாயங்களும், குதிரை குளிப்பாட்டுந் தொட்டிகளும் காணப்படுகின்றன. சாராப் பிட்டி என்ற இடத்தில் பல நன்னீர்க் கிணறுகள் உள்ளன. கருங்கற் பாங்கான இவ்விடத்தில் அமைந்துள்ள கிணறுகள் மனிதவலுவால் வெட்ட முடியாதவை. ஆதலினால் இவை பூதங் களால் வெட்டப்பட்டிருக்கலாம் என்ற மரபு வழி நம்பிக்கையும் நிலவுகிறது. ஆனால் இவற்றைப் போர்த்துக்கேயர் வெட்டினர் எனச் சிலர் கூறுவர் (P. Benadict: 71).

இங்கு வெட்டுக்கழி, வெல்லைக்கழி, பேக்கழி, இராம தோப்புக்கழி என்னும் நீரோடைகளும் காணப்படுகின்றன. பருவ கால மாற்றங்களுக்கு ஏற்ப நாடுவிட்டு நாடு பறந்து செல்லும் பறவைகள் இங்கு தங்கிச் செல்லும் இயற்கை வனப்பும் கொண் டது இத்தீவு. இலங்கையில் எங்குமே இல்லாதவாறு பெருங் கற்களை அடுக்கி மதில் அமைக்கும் முறையும் இங்கு காணப் படுகிறது. இம் மதிலைப் "பகீர்" என்றழைப்பர் (தகவல்: அ. நாகேந்திரம், நெடுந்தீவு). நெடுந்தீவில் பிற்காலத்திலேற்பட்ட சோழர்வழிக் குடியேற்றம் பற்றி யாழ்ப்பாண வைபவமாலை (பக்.29) கூறுகின்றது. குளக்கோட்டனால் வெட்டுக்குளம், பெரிய குளம், வெல்லைக்குளம், இராமன்குளம் என்பன இங்கே வெட் டப்பட்டன எனக் கூறப்படுகிறது. இங்குள்ள பெரியதுறை, மாவலித்துறை என்பனவற்றின் மூலம் பண்டை நாளில் கடல் வணிகம் நடைபெற்றிருக்க வேண்டும். இந்தியாவுக்கும், இலங் கைக்கும் இடையிலான கடற்பயணத்தின் நடு நிலையமாக இத்தீவு திகழ்ந்தமையாற் போர்த்துக்கேயர் இங்கு பெரியதொரு கோட்டையைக் கட்டியதோடு, கத்தோலிக்க மதம் பரப்பும் நட வடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

பாலைதீவு (பூ.176.2)

பாலை என்பது = பாலைநிலம், இருள்மரம், முள்மகிழ், காட்டிருப்பை, காட்டலரி (த.லெ.5:2631) எனப் பல்வேறு பொருள் தருஞ் சொல்லாகும். பயனற்ற நில அமைப்புக் கொண்டது என்ற பொருளில் இத் தீவுக்குப் பாலைதீவு எனப்பெயர் ஏற்படுவ தாயிற்று.

பூநகரிப் பகுதியின் மேற்குக் கடலிலுள்ள இரணை தீவுக்குப் பக்கத்திலுள்ள தீவுகளில் பாலைதீவும் ஒன்றாகும். இங்கு மக்கள் குடியிருப்பில்லை. மீன்பிடிப்போர் இங்கு வந்து தங்கியிருந்து மீன் பிடிப்பதுண்டு.

புங்குடுதீவு (தீவு-தெ.5-6)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தீவுகளின் நடுநிலை யாக விளங்குவது புங்குடுதீவு. யாழ்நகரிலிருந்து செல்லும் 18 மைல் நீளமுள்ள பெருஞ்சாலையின் மூலம் இத்தீவு யாழ் நகருடன் இணைக்கப்பட்டுள்ளது. குடாக்கள், முனைகள் என்பன அமையப் பெற்ற இத்தீவின் சுற்றளவு 21 மைல்களாகும். இது கிழக்கு மேற்காக 5.5 மைல் நீளமும், வடக்குத்தெற்காக 3 மைல் அகலமுங் கொண்டு தோற்றமளிக்கிறது. புங்குடுதீவு என்ற பெயர்த் தோற்றத்திற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படு கின்றன:

அ) தமிழகத்திலுள்ள 'பூங்குடி' என்னும் ஊர்ப்பெயரைப் புங்குடு தீவுடன் தொடர்புபடுத்தி பெயர் விளக்கம் கூறப்படுவதுமுண்டு. முஸ்லீம் படைஎடுப்பு தமிழகத்தில் ஏற்பட்ட போது, அங்குள்ள பூங்குடி ஊரினர் படையெடுப்பாளர்களது கொடுமைகளி லிருந்து தமது கன்னிப் பெண்களைப் பாதுகாக்க வேண்டிய அவல நிலையில் இங்கு தப்பி ஓடிவந்து குடியேறினர். அத னால் இத்தீவு 'பூங்கொடி', திருப்பூங்கொடி' எனும் பெயர் களைப் பெறுவதாயிற்று. இவ்வகையில் பூங்கொடித்தீவு என வழங்கி, அது காலப் போக்கிற் புங்குடுதீவு என மருவிற் றென்பர்.

ஆ) இங்கு செல்வம் செழித்திருந்தமையால் 'பொன்னகையூர்' என்ற பெயர் வழங்கிற்றென்றும் கூறுவர்.

இ) இங்கு 'புயங்கு' என்ற ஓரினமரங்கள், நிறைந்து காணப்பட்டமை யால் இது 'புகங்கதீவு' என வழங்கிப் பின்பு அது புங்குடுதீவு என மருவிற்று என்றுங் கருதுகின்றனர்.

ஈ) மஞ்சள் நிறமும், வாசனையுங்கொண்ட 'புயங்கு' என்ற ஒரு வகை மரம் இங்கு செறிந்திருந்தமையால் 'புயங்குதீவு எனப் பெற்று புங்குடுதீவாயிற்று என்றுங் கொள்வர்.

உ) இப் பெயருக்குச் சிங்கள விளக்கம் கூறும் S.W. குமாரசாமி, "இப்பெயர் 'புவங்குதீவயின' என்ற சிங்களச் சொல்லின் திரிபு எனக்கொண்டு, தமிழர் இச் சிங்களப் பெயரைப் 'புங்குடைய தீவு' என்று பெயர்த்து வழங்கினதுண்டேல், அது புங்குடு தீவென விகாரப்படுதல் எளிது" என்கிறார் (1917:113-114);.

ஊ) 'நம்பொத்த' என்ற சிங்கள நிகண்டில் இது 'பியங்குதீவம்' எனக் கூறப்பட்டுள்ளது. புங்குடுதீவு என்னுஞ் சொல்லே கால கதியிற் பியங்குதீவம் என மாறியிருக்கலாம் எனவும், இதனைப் புங்கு + உடு + தீவு எனப் பிரித்து புங்கமரம் நிறைந்த தீவு எனப் பொருள் கூறலாம் என்றும் புங்கமரம் நெய்தல் நிலத்துக் கருப்பொருள்களுள் ஒன்றாகும் எனவும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (1962:பக்.100) கூறுவதும் நோக்கற் பாலது.

எ) இத்தீவு ஏனைய தீவுகளுக்கு நடுநிலையாகக் காணப்பட்டமை யால் ஒல்லாந்தர் இதற்கு மிடில்போர்க் (Middle burgh) எனப் பெயரிட்டனர்.

புங்குடுதீவு கிழக்கு, மேற்கு, மத்தி என்ற மூன்று கிராம சேவகர் பிரிவுகளையும், பன்னிரண்டு வட்டாரங்களையும் கொண் டது. இங்கு வல்லன், குறிச்சிக்காடு, நடுக்குறிச்சி, ஆலடி, கிழக்கூர், வீராமலை, ஆஸ்பத்திரியடி, பெருங்காடு, நடுவுத் துரத்தி, குறிக்கட்டுவான், பெருக்கடி, வீரம்புளியடி, தொட்டத்து முனை, மடத்துவெளி, கோரியாவடி, சின்னஇறுப்பிட்டி, பெரிய இறுப்பிட்டி, கழுதைப்பிட்டி, புளியடித்துறை, சங்குமாலடி, கேர தீவு, ஊரதீவு, சந்தையடி, பரந்ததோட்டம் முதலிய குறிச்சி பெயர்கள் வழக்கிலுள்ளன.

இங்கு புளியடித்துறை, கழுதைப்பிட்டித்துறை குறிகாட்டு வான்துறை, மடத்துவெளித்துறை என்னும் நான்கு துறைகளுள் ளன. கோரியா என்ற இடத்தில் ஒல்லாந்தராற் கட்டப்பட்ட வெளிச்சவீடு அமைந்துள்ளது. குறிகாட்டுவானிற் படகுப் போக்கு வரத்துக்குரிய இறங்குதுறை அமைந்துள்ளது. அடிக்கடி கடல் பெருக்கெடுத்துத் தரையை அரிக்குமிடம் 'பெருக்கடி' எனப் பெயர் பெற்றது. பெருக்கு என்னும் மரங்கள் அங்கு செறிந்து காணப்பட்டமையினாற் பெருக்கடி என்ற பெயர் தோற்றம் பெற்ற தென்ற கருத்துமுண்டு. தோட்டம் செய்வதற்குரிய இடம் தோட்ட முனை என்றிருந்து, பின்னர், அது காலப்போக்கில் தொட்டத்து முனையாய்ச் சிதைந்து வழங்குகிறது. கடலிற் குளித்தெடுத்த சங்குளைக் கொண்டுவந்து, பதம்பிரித்து, ஏற்றுமதி செய்யப் பட்ட இடம் (சங்கு + மால் + அடி =) சங்குமாலடி எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

கந்தபுராணப் பின்னணியிலும் புங்குடுதீவு என்பதற்கு வருமாறு விளக்கம் கொடுக்கப்படுகின்றது. புங்கம் + உரு + தீவு = புங்குருதீவு > புங்குடுதீவு; புங்கம் = அம்பு; உரு > உருவுதல் = கணை, வேல் முதலியன புகுந்தோடல். "வேல் ஊடுருவிச் சென்ற இடம்" என்பது இதன் பொருளாம் எனக் 'கந்தபுராணமறைபொருள் விளக்கம்' (பக்:32) என்ற நூலில் டானியல் ஜோன் விளக்குகின்றார்.

மண்டைதீவு (தீவு.தெ.20)

மண்டை + தீவு = மண்டைதீவு. மண்டை = தலை. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தீவுகளுக்குத் தலையாய தீவாக இது விளங்குவதால் மண்டைதீவு எனப் பெயர் பெறுவதாயிற்று. இத்தீவு தலைத்தீவு என்றும் வழங்கப்படுகிறது. தமிழர் பண் பாட்டில் இடம்பெறும் பாணர்களின் வரிசையில் 'மண்டைப்பாணர்' என்போர் ஒரு வகையினராவார். மண்டைப் பாணருக்கும் இத் தீவுக்கும் தொடர்புண்டோ எனவும் ஆராய்தல் தகும். சிங்களத்தில் 'மண்ட' என்பது ஆமணக்கைக் குறிக்குமென்றும், அதனடியாகத் தோன்றிய 'மண்டை தீவயின' என்ற சிங்களப் பெயரே தமிழில் வழங்கிற்று என்றும் குமாரசுவாமி (1918:114) குறிப்பிட்டுள்ளமை ஆராயத்தக்கதாகும்.

நிருவாக அடிப்படையில் இத்தீவு கிழக்கு, தெற்கு, நடுப்பகுதி (குடியிருப்பு) என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மண்டைதீவின் கிழக்கில் கரியம்பன், கரியாவீட்டின் செம்பையன் வளவு, பூமாடி, குளப்பிட்டி முதலிய குறிச்சிப்பெயர்கள் வழங்கு கின்றன. மாட்டுப்பட்டிகள் சூழ குடியிருப்பு இருந்த இடம் சூழப் பட்டியாயிற்று. கரிய பனைகளும், அடம்பன்கொடிகளும் திரண்டி ருந்த இடம் 'கரியம்பன்' என்றாயிற்று. மண்டைதீவின் நடுப்பகுதி யில் உள்ள குறிச்சிகளாவன: ஈச்சந்தரவை, காட்டுப்புலம், தீப் புலம், மணியாறன்கிணற்றடி, கந்தசாமிகோவிலடி, பிள்ளையார் கோவிலடி, பறையதிட்டி, கொவ்வை குழி, ஆஸ்பத்திரியடி என் பன. மண்டைதீவில் மணியகாரனாக இருந்த ஒருவர் வெட்டுவித்த கிணறு ஒன்றுண்டு. இக்கிணறு உள்ள இடம் (மணியகாரன் > மணியாறன்) 'மணியாறன் கிணற்றடி' என வழங்குகின்றது. இத் தீவின் தென்பகுதியில் மணற்காடு, ஊரிக் காடு, செல்லஉடை யான்மூலை (முடங்கு) ஆகிய குறிச்சிப் பெயர்கள் வழக்கி லுள்ளமை காண்க.

இடப்பெயர் விளக்கம் கூறப்படும்போது இதிகாச, புராணக் கதைகளைத் தொடர்புபடுத்துதல் பொதுவழக்கமாகக் காணப்படுகிறது. இராம-இராவணப் பெரும் போரின்போது இராம பாணத்தினால் வெட்டுண்டு பறந்த இராவணன் தலை இத்தீவில் வீழ்ந்தமையால் இதற்கு மண்டைதீவெனக் காரணப்பெயர் ஏற் பட்டது என்றும் கூறுவர்.

வேலணை (தீவு.தெ.17-18)

யாழ்நகரிலிருந்து தீவுகளைத் தொடுத்துச் செல்லும் சாலையின் மூலம் வேலணைத்தீவு குடாநாட்டுடன் இணைக்கப் பட்டுள்ளது. இது 'லைடன் தீவு' எனவும் வழங்கப்படும். நான்கு மைல் நீளமும் மூன்று மைல் அகலமுங் கொண்ட இத் தீவின் உட்பகுதிகளாக அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, சரவணை, நாரந்தனை, கரம்பொன், சுருவில், ஊர்காவல்துறை ஆகியன அமைந்துள்ளன.

வேல் + அணை = வேலணை. வேல் அணைந்த இடம் என்பது இதன் பொருள். இதன் அயற்பதியாகிய சரவணை (சரவணன் + அணை = சரவணை) என்பதும், சரவணன் (முரு கன்) அணைந்த (எழுந்தருளிய) இடம் எனப்பொருள் தொனித் தலும் நோக்கத்தக்கன. மேலும் செருத்தனை, சிற்பனை முருக மூர்த்தி கோயில், சோழாவத்தை முருகமூர்த்தி கோயில், வங்களா வடி முருகன் கோயில் என்பனவும் இப் பகுதியில் முருகவழிபாடு (வேல் வழிபாடு) முதன்மை பெற்றிருத்தலையும், அதனால் முருக வழிபாட்டுடன் தொடர்புடையதாக இடப்பெயர்கள் ஆக்கம் பெற்று வழங்கி வந்திருத்தலையும் அறியக் கூடியதாகவுள்ளது. மேலும், பண்டை நாளில் வேலன் என்ற தலைவனின் பொறுப்பில் வேலணையூர் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு வேலனால் நிருவகிக்கப்பட்டு வந்தமையினால் வேலனை எனப் பெயர் பெற்றதென்ப.

வேலணை நிருவாக அடிப்படையில் மேற்கு, கிழக்கு, என இரு பிரிவாக உள்ளது. மேற்கேயுள்ள குறிச்சிகளாவன: பெரியபுலம், சிற்பனை, கேணிக்கரை, கொல்லுக்குடி, சாத்திரங் குண்டான், சீனன் கலடு, தலைகாட்டி, தும்பளைப்பிட்டி, குரக்கன் பிட்டி, நெல்லாவில், கொட்டப்பெட்டிமூலை, கெட்டில், முக்கியர் துறை, பள்ளம்புலம், ஈச்சம்புலம், அரங்கணக்கை, கற்குழிவயல்,

திமிலன்கலடு, முனியன் தோட்டம், செம்மன்காடு என்பனவாம். வேலணை கிழக்கிலுள்ள குறிச்சிகளாவன: ஆலம்புலம், கோவிலடி, வங்களாவடி, சோழாவத்தை என்பனவாகும். (தகவல்: அதிபர் க.வே.திருஞானசம்பந்தம்பிள்ளை). இவற்றுடன் பெருங்குளம், செட்டிப்புலம், கும்புறுப்பிட்டி, சாட்டி, வெள்ளக்கடற்கரை, தெங்கங்குளம், கேணிக்கா, சிலிந்தாக் குளம், வேனாக்குளம் முதலிய இடப்பெயர்களும் இங்கு வழக்கிலுள்ளன.

நெல்லாவில் (நெல் + ஆ + வில்) என்ற குறிச்சியில் நெல்வளமும் பசுக்களும் நிறைந்து காணப்பட்டன எனக் கூறப்படுகிறது. சாடி என்பதற்கு = உழுசால் என்பதும் பொருளாகும். சாடி > சாட்டி = வயல். எனவே 'சாட்டி' என்பது சிறந்த வயல் நிலப்பகுதி எனப்பொருள் தருகிறது. சோழர் தொடர்பைச் சோழாவத்தை குறிக்கிறது. வங்காளாவடி (Curcuit Banglow) அரச ஊழியர் தங்கியிருந்த கட்டிடங்கள் இருந்த இடம் என்பதை அறியத் தருகிறது.

வேலணை கமத்திற்கும் சிறப்பான இடமாக உள்ளது. "வேலணை சரவணை வேளாண்மை எப்படி? புழுவிழுந்து ஒரு பூழலுமில்லை" என்ற நாட்டார்மரபுத் தொடர்மொழி ஒன்றும் இங்கு வழங்குகின்றது. பெரியபுலம் குறிச்சி 'சைவத்திக்கு' எனவும் வழங்கப்படும். சீனன்கலடு என்ற குறிச்சி பண்டைய நாளிற் சீனர் மேற்கொண்ட வணிகத்தொடர்பைக் குறிக்கின்றது. இங்கு போர்த்துக்கேயரால் அல்லது ஒல்லாந்தராற் கட்டப்பட்ட ஒரு பெரிய கோபுரம் 1832 ஆண்டுவரை இருந்ததாகவும், பின்பு அது அழிந்து மணல் மேடாகக் காட்சி தருகின்றது எனவும் கூறபட்டுள்ளது (கதிரேசு: 1905:50).

'பள்ளம்' - ஈற்று இடப்பெயர்

தாழ்ந்த நிலப்பாங்கான பகுதியை பள்ளம், பள்ளக்கை எனக் கூறுதல் வழக்கு. இவ்வகையில் மிருசுவில் என்ற கிராம சேவகர் பிரிவில் வேலப்பள்ளம் என்ற ஓரிடம் அமைந்தள்ளது. வேலை + பள்ளம் = வேலைப்பள்ளம் > வேலப்பள்ளம் எனத் திரிபடைந்துள்ளது. வேலப்பள்ளம் என்பது வேலை நடைபெறும் பள்ள நிலம் எனப் பொருள் தந்து நிற்பதாகும்.

'பிட்டி' ஈற்று இடப்பெயர்கள்

பீடு > பிட்டி. பீடு = தரிசுநிலம் (த.லெ.5:2732). ஈழத்துப் பேச்சுவழக்கில் மேடு என்பது பிட்டி > புட்டி என வழங்குகிறது. பிட்டி என்பதை ஈறாகக் கொண்டு பல இடப்பெயர்கள் அமைந்துள்ளன. இச் சொல் சிங்கள இடப்பெயர் ஈறாகிய Hittiya அல்லது Siddi என்பதிலிருந்து பிறந்தது என சுவாமி ஞானப்பிரகாசர் (1917 :168), குமாரசுவாமி (1917:52) ஆகியோர் கூறுவர். ஆனால் ஜே.பி. லூயிஸ் இதனை மறுத்துள்ளமையும் நோக்கற்பாலது (1917:44).

அல்லைப்பிட்டி (தீவு.தெ.19)

அலை + பிட்டி = அலைப்பிட்டி > அல்லைப்பிட்டி எனப் பெயராக்கம் பெற்றதெனக் கூறப்படுகிறது. கடல் அலைகள் மோதுமிடம் என்பது இதன்பொருள். வேலணைத்தீவின் தென் பகுதியில் அல்லைப்பிட்டி அமைந்துள்ளது. இத் தீவின் எல்லையோரம் திடலாக அமைந்திருந்தமையால் 'எல்லைப்பிட்டி' எனப் பெயர் ஏற்பட்டு, பின்னர் அது அல்லைப்பிட்டி எனத் திரிபடைந்திருக்கலாம்.

அல்லைப்பிட்டியில் கப்பல் வணிகம் நடைபெற்றது என்பதை இங்கு கிடைக்கும் தொல்லியற் சான்றுகள் நிறுவுகின்றன. இலண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஜோன் காஸ்வெல் என்பவர் 1977இல் அல்லைப்பிட்டியில் நடாத்திய அகழ்வாராய்ச்சியின்போது சீனப் பீங்கான் பாத்திரங்கள் பல வெளிப்படுத்தப்பட்டன. இவை யாழ்ப்பாணக் குடாநாட்டினூடாக நடைபெற்ற சீன வணிக முயற்சிகள் பற்றிய சான்றுகளைத் தருகின்றன. மேலும் அல்லைப்பிட்டியில் மாளிகை, கோயில் என்பன இருந்தமைக்கான சான்றாக மரபுவழிக் கதைகள் பல வழங்குகின்றன. இங்கு 179 குஜராத்திப் பொற்காசுகள், பழைய விளக்குகள், கட்டிடப் பகுதிகள் ஆகியன காலத்துக்குக் காலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையை கா.இந்திரபாலா 20.11.1977 இல் வீரகேசரியில் எழுதிய கட்டுரை விபரிக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் அல்லியரசாணிக் கோட்டை இருந்தமைக்குரிய தடயங்கள் காணப்படுகின்றன. அந்த அல்லி

அரசியுடன் இவ்விடத்தைத் தொடர்புபடுத்தி அல்லி + பிட்டி = அல்லிபிட்டி என்ற பெயர் காலப்போக்கில் அல்லைப்பிட்டி என மருவிற்று எனவும் கருதப்படுகின்றது. அல்லை என்ற சொல்லுக்கு வயல் நிலம் என்றும் பொருள் கொள்ளலாம். அந்நிலையிலும் அல்லைப்பிட்டி என்ற பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம்.

உடுப்பிட்டி (வடம.தெ.மே.11/121.3)

உடு + பிட்டி = உடுப்பிட்டி. இவ்வூரின் தெற்கும் மேற்கும் வயல்வெளி, கிழக்கே கரணவாய், வடக்கே வல்வெட்டி ஆகியன அமைந்துள்ளன. உடுப்பிட்டியின் அமைவிடம் திடலாகவும் அதன் எல்லைப்புறம் உடுவடிவிற் (நட்சத்திரம்) காணப்பட்டமையாலும் இப்பெயர் வந்ததெனலாம்.

கூழாறுபிட்டி (தென்ம.91.2)

கூழா +அறு + பிட்டி = கூழாறுபிட்டி. கூழா மரங்கள் நிறைந்து காணப்பட்டுப் பின்னர் அவை அழிந்தநிலையில் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். முன்பு இது கூழாப்பிட்டி எனவும் வழங்கிற்று. கோயிலாகண்டி என்னுமிடத்திற்கு அயலில் இவ்வூர் அமைந்துள்ளது. இதனைக் கோளாறுபிட்டி எனவும் வழங்குவர்.

சங்குப்பிட்டி

சங்கு + பிட்டி = சங்குப்பிட்டி. இது பூநகரிப் பகுதியிலுள்ள ஓரிடமாகும். யாழ்ப்பாணம் பூநகரிப் பாதையில் இவ்விடம் அமைந்துள்ளது. இப்பகுதிக் கடலில் முன்னர் பெருமளவில் சங்கு பிடிக்குந் தொழில் நடைபெற்றிருக்க வாய்ப்புண்டு. அதன் காரணமாக இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

சிறுப்பிட்டி (வலி.கி.80.2)

சிறு + பிட்டி = சிறுப்பிட்டி. யாழ்ப்பாணத்துக்கு வடக்கே எட்டு மைல் தொலைவிற் புத்தூருக்கும் நீர்வேலிக்கும் இடையே இவ்வூர் அமைந்துள்ளது. முன்பு இவ்விடம் சிறிய பிட்டியாகக் காணப்பட்டது என்றும், காலப்போக்கிலே குடியிருப்புப் பகுதியாக இது மாறியுள்ளது எனவும் கூறுவர்.

மாகியப்பிட்டி (வலி.தெ.மே.43.1)

இவ்வூர் மாசியப்பிட்டி, மகியாப்பட்டி, மகியாப்பிட்டி எனவும் வழங்கப்படுகிறது. இவ்வூருக்குப் பரமாக்கைப்பதி, மாகையம்பதி என்ற பெயர்களும் வழங்கின. கந்தரோடைக்குத் தென் மேற்கே இவ்வூர் அமைந்துள்ளது.

கந்தரோடையில் தமிழ் அரசு நிலைபெற்றிருந்த கால கட்டத்தில், யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட் படை என்ற நாற்படைகளையும் கொண்டிருந்த தமிழ் அரசர்கள் தமது யானைகளையும், குதிரைகளையும், மாகியப்பிட்டியில் நிலை கொள்ளச் செய்தார்களென்பது முன்னோர் கருத்தாகும். இவ்விடம் தொடக்கத்தில் மாகஜப்பிட்டி என அழைக்கப்பட்ட தென்ற கருத்தும் நோக்கத்தக்கது. மா + கஜம் + பிட்டி என்பதில், மா என்பது குதிரை, கஜம் என்பது யானை, பிட்டி என்பது உயர்ந்த இடம் என்று பொருள்படும். இப் பொருளடிப் படையில் பெயராக்கம் பெற்ற மாகஜப்பிட்டி என்னும் பெயர், நாளடைவில் மாகயப்பிட்டி > மாகையப்பிட்டி > மாகியப்பிட்டி என மருவி வந்ததெனவும் கூறுவர். மாதகலுக்கு ஊடாக, இராச முருக்கடி மருங்காக, மாகையைப் பிட்டிக்கு அணித்தாய்க், கதிரமலை (கந்தரோடை)க்குப் போகும் பெரும்சாலை அமைந் திருந்ததென்று 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்னும் நூலில் கூறப் பட்டுள்ளது. அக்காலத்தில் மாகியப்பிட்டி குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பு வாய்ந்த இடமாக இருந்ததென்பது இதன் மூலம் தெளிவாகிறது. 'மாகியம்பதி' எனவும் இவ்வூர் அழைக்கப் படுகிறது. இங்கு மிகப் பழைமை வாய்ந்த மீனாட்சி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இக் கோயில் தொடர்பாகப் பின்வரும் கதையும் வழங்குகிறது.

> இங்கு பண்டொரு நாள் விவசாயி ஒருத்தர் முன்பாக மூன்று பெண்கள் தோன்றி மறைந்தனர் என்றும், பின்னர் கனவிலே தோன்றித் தாம் கண்ணகி, மாரி, மீனாட்சி எனக் கூறியதாகவும், அவ் விவசாயி மூவர்க்கும் கோயில்கள் அமைத்ததாகவும் மரபு வழிக் கதை வழங்குகிறது. இங்கு ஆண் பனை ஒன்று பெண் பனையாக மாறிய அற்புதமும் நிகழ்ந்திருக்கிறது. அதனாலேயே இப்பதி பரமாக்கைப்பதி என்ற பெயர் பெற்றது என்பர். (எஸ். கோபாலசாமிஐயர்:1961:5-7).

மாகையப்பிட்டி என்பதை மா + ஹெய + பிட்டிய எனப் பிரித்து, மா = பெரிய, ஹெயபிட்டிய = வயல் வெளி யிலுள்ளமேடு எனப் பொருள் கூறி, இதற்குச் சிங்கள மூலம் கற்பிக்கிறார் S. W. குமாரசுவாமி (1917:52).

'மணல்' முதனிலை இடப்பெயர்கள்

தரைத்தோற்ற அடிப்படையில் மணல் பெரிதுங் காணப் பட்ட இடங்களிலே 'மணல்' முதனிலைப்பெயராக வழங்கலா யிற்று. யாழ்ப்பாணத்தின் பழம் பெயர்களான மணற்றிடர், மணவை, மணற்றி முதலானவை மணல் முதல்நிலைப் பெயர் களாகும்.

மண்கும்பான்

மண் + கும்பம் + ஆன் > மண்கும்பான். இது வேல ணைத்தீவின் கிழக்கேயுள்ள ஒரு பகுதியாகும். இங்கு காலத் திற்குக் காலம் வீசப்படும் பெருங்காற்றாற் பெரியளவிலான மண் குவியல்கள் ஏற்படலாயின. அதன் காரணமாகவே இப்பெயர் அமைவதாயிற்று. இதன் தென்கரையில் துறைமுகம் இருந்ததாக வும், இங்குள்ள 'கப்பலடி' என்ற பெயர் துறைமுகத்தினை நினைவூட்டுவதாகவும் காணப்படுகிறது.

மிக வேகமாகக் காற்று வீசும் காலங்களிலே மண்கும் பான் கரையோரத்திலே மணல் அள்ளி வீசப்படும்போது பழம் பொருட்கள் சில கிடைப்பதாகக் கூறப்படுகிறது (வி. சிவசாமி: 1973:26). இங்கு கிடைத்த தொல்லியற் சான்றுகளுட் 'சேதுநாண யம்' குறிப்பிடத்தக்கதாகும். 'இந் நாணயம் சமய, தத்துவரீதியில் அமைவதோடு, இதன் பின்புறச் சின்னங்கள் பரமேஸ்வரனையும் பிரபஞ்சத்தையும் யாழ்ப்பாண அரசின்கீழ் அடங்கியிருந்த இரா மேஸ்வரத்தையும் குறிக்கிறது' என்கிறார் முதலியார் செ. இராசநாயகம் (1930:589-590).

மண்டான் (வடம.தெ.மே.119.3)

மண் + தான் = மண்டான். செம்மண்ணின் சிறப்பியலை விதந்து கூறும் நிலையில் இப்பெயர் தோன்றிற்று. இது கரண வாய் தெற்கிலுள்ள செம்மண் பகுதியாகும். புதுக்குடியிருப்புப் பகுதியாகவும் தோட்டப்பயிர்ச்செய்கை நிலங்களைக் கொண்ட தாகவும் இவ்விடம் காணப்படுகிறது.

மணவளை (தென்ம.மே.119.3)

மணல் + வளை = மணல்வளை > மணவளை ஆயிற்று, இது மட்டுவில் பகுதியிலுள்ள ஓரிடம். மணற்பகுதியின் சுற்றாடல் மணல்வளை என வழங்கிப், பின்னாளில் மணவளை எனச் சுருங்கிற்று எனலாம்.

மணற்காடு (வடம.வ.கி.142.2)

மணல் + காடு = மணற்காடு. காடு = குவியல், மிகுதி என்பனவற்றை வெளிபடுத்துஞ் சொல். இது வல்லிபுரத்திற்குத் தென்கிழக்கே கடற்கரையோரமாக அமைந்துள்ள இடம். மணல் வெளிகளும் சிறு பற்றைகளும் காணப்படுவதால் மணற்காடு என்ற பெயர் பெற்றுள்ளது. மணல் நிறைந்து பரந்து காணப்படும் நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இங்கு மீனவர்களின் சிறு குடில்களே காணப்படும். இவை மணல் மேடுகளால் மறைக் கப்பட்டுவிடுவதால், அடிக்கடி குடிசைகள் புதிது புதிதாக அமைக் கப்படும். இங்கே கத்தோலிக்க தேவாலயம் ஒன்று மணலால் புதையுண்டதாகக் கூறப்படுகிறது.

இத்தாலியின் வடக்கேயுள்ள 'போ' சமவெளிப் பிரதேசத் திலிருந்து காற்றினால் அள்ளுண்டு வரும் செம்மண் செங்கடலில் கொட்டப்படுவதனாலே அக்கடல் செங்கடல் எனப்பெயர் பெற் றது. அதுபோன்றே தென்னிந்தியக் கரையின் தனுஷ்கோடி, இராமேஸ்வரம் ஆகிய பகுதிகளிலிருந்து சுழல்காற்று உருவாகி மண்ணை அள்ளிவரும் காற்று வடஇலங்கையின் கரையிலுள்ள மணற்காடு, வல்லிபுரம், நாகர்கோயில், மண்கும்பான் முதலிய பகுதிகளில் வீசுவதனால் ஆங்கு மணல் மேடுகள் அதிகரிப்ப தாயின என்ற தகவலும் நோக்கத்தக்கது. (தகவல்: க.குகபாலன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்).

‘மலை’ ஈற்று இடப்பெயர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மலையே இல்லை. இருப்பினும் மலை ஈற்றுப் பெயர்களாகக் கம்பர்மலை, கீரிமலை, சுதுமலை என்ற மூன்று இடங்களுள்ளன. எனவே இப் பெயர்கள் கற்பனை அடிப்படையிலோ அல்லது வேறு சொற்களின் திரிபாகவோ தோன்றியிருக்கலாம் என்பது தெளிபு.

கம்பர்மலை (வடம.தெ.மே.11/121.2)

இது வல்வெட்டித்துறைப் பகுதியில் உடுப்பிட்டிக் கிராம சேவகர் பிரவில் இடம்பெறும் ஓரிடமாகும். இதன் பழைய பெயர் கம்பாமூலை என்பதாம். கடந்த 15 வருடங்களுக்கு முன்பே அப் பெயர் மாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. 150 வருடங்களுக்கு முந்திய வல்லை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் நிருவாக ஒழுங்குகளில் உபயமாகக் கட்டிடங்களைக் கட்டிக்கொடுத்தவர் பெயர் வரிசையில், வைரவக் கடவுளின் மண்டப அன்பளிப்பு என்பதில் ‘வேலுப்பிள்ளையும் பெண் மீனாட்சியும் கம்பாமூலை உபயம்’ என்றே எழுதப்பட்டுள்ளது (தகவல்: இ. தங்கவடிவேல், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், வரலாற்றுத்துறை மாணவர் ஆய்வேடு 1979).

இதற்கு வேறு விளக்கமும் கூறப்படுகிறது. வடகரைப் பகுதிகளில் காணப்பட்ட யானைகளைப் பிடித்து அவற்றின் மதத்தை அடக்கி, கட்டி வைத்த மேட்டுநிலம் கொம்பர்மூலை எனப்பட்டது. (கொம்பர் = யானை) இக் கொம்பர்மூலையே பின்பு கம்பர்மலையாக மாற்றம் பெற்றுள்ளது எனவும் அறியப்படுகிறது

கீரிமலை (வலி.வ.64அ.1)

காங்கேசன்துறையிலிருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவிற் கடற்கரையோரமாகப் புனித நீரூற்றுத்தலமாகக் கீரிமலை அமைந்துள்ளது. இங்கு முன்னர் காடு இருந்ததென்றும், கீரிகள் அதிகம் காணப்பட்டன என்றும், அதனால் இவ் விடத்திற்குக் கீரிமலை என்ற பெயரேற்பட்டதென்றும் கூறப்

படுகிறது. ஆடி அமாவாசை நாளன்று பல நூற்றுக்கணக்கானோர் இந் நீரூற்றில் தீர்த்தமாட வந்து சேர்வது வழக்கம். இந் நீரூற்றுப் பற்றிய பாடல் ஒன்று வருமாறு:

> “மண்ணின் சுகமெல்லாம் வாயுமே வானவர்சேர்
> விண்ணின் சுகமும் விளையுமால் - தண்ணூறல்
> சிற்றூற்றுங் கீழே சிறந்தோட மேற்படுக்கப்
> பெற்றோர்க் கென்றென் றென்றும் பேசு.”
> (க.சு. நவநீதகிருஷ்ணபாரதியார் 1955:18)

நாகுலம் என்னும் இதன் பழைய பெயர் நகுலம் என மருவிப் பின்னர் தமிழிற் கீரிமலை என்றாயிற்று என்கிறார் இராசநாயகம் (1926:3). ஆனால், S. W. குமாரசுவாமி (1918:131) கிரி என்னும் வடசொல்லும் அதன்பொருள் தரும் மலை என்னும் தமிழ்ச் சொல்லும் சேர்ந்து கீரிமலை ஆயிற்று என்றார். இவ்விடப் பெயருடன் இலக்கியச் செய்திகளும், மரபுக் கதைகளும் தொடர்புடையனவாக வழங்கிவருகின்றன:

I. இராமர் இராவணனுடன் பெருஞ்சமர் முடித்து, இவ்விடம் வந்து, தீர்த்தமாடிப் போனார் என்பது பழங்கதை.

II. முசுகுந்தச் சக்கரவர்த்தியும் இவ்விடத்தில் வந்து தீர்த்த மாடிச் செல்ல, அச் சக்கரவர்த்தியுடன் வந்த நகுலமுனிவர் அம் மலைக் குகையில் வசித்து, அவ்வருவியில் ஸ்நானஞ் செய்து வர, கீரிமுகரோகம் மாறப்பெற்றார் என்றும், அதனால் அம் மலைக்குக் (நகுலம் = கீரி) கீரிமலை என்னும் பெயர் வந்ததென்றும் கூறப்படுகிறது.

III. புகழ்பெற்ற நிடதநாட்டரசனான நளச்சக்கரவர்த்தியும், பஞ்சபாண்டவருள் நடுப்பிறந்தோனாகிய அர்ச்சுனனும் இவ்விடம் வந்து தீர்த்தமாடிச் சென்றனர் என்பதும் தட்ஷிணகைலாச புராணம் கூறும் செய்திகளாகும்.

இவ்வூரில் பல கோயில்கள் கட்டப்பட்டுத் திகழ்ந்தமையால் இதற்குக் ‘கோயிற்கடவை’ என்ற பெயரும் ஏற்படுவதாயிற்று.

சுதுமலை (வலி.தெ.மே.39.5)

சுது + மலை = சுதுமலை. மலை என்று கூறுவதற்குரிய பின்னணியாக மலையோ, மண்மேடுகளோ, மணற்றிடலோ இவ்வூரிற் காணப்படவில்லை. சுது என்பது சிங்களத்தில் வெள்ளை எனப்பொருள்படும். சுவாமி ஞானப்பிரகாசர், சுல் என்பதற்கு = வெள்ளி; சுள் > சுள்ளு > சுது > சுடு = எரி என்ற பொருள்கள் கூறுகின்றார். சுள் > சுள்ளு > சுது என்பதற்கு = ஒளி செய்தல் என்ற பொருளுங் காணப்படுகின்றது. எனவே இவ்விடத்துடன் தொடர்புடைய தொழில் அடிப்படையில் இவ்விடப் பெயரின் பொருளறிய வேண்டியுள்ளது. சங்கு + அளை > சங்களை என்ற வயற் பகுதிப் பெயரும் கோயிலை அடுத்துக் காணப்படுகின்றது. சங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த இடங்கள் வெள்ளைக் குவியல்களாகக் காணப்பட்டபோது, சுது (வெள்ளி) மலை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். இது வலிகாமம் தென் மேற்கிலுள்ள ஒரு பெரியதோர் ஊராகும். வயலும் தோட்டமும், குளமும் அமைந்த வளமான குடியிருப்புப் பகுதி. பழைய அம்மன் கோயில் ஒன்றும் உள்ளது. இங்குள்ள குறிச்சிப் பெயர்களாக எச்சாட்டி, ஈஞ்சடி, குரங்கிலிப்பான், புளியிட்டி, காவற்கட்டு, விளாப்பிடை, கெல்லாவில், குண்டடி, மாவத்தை, பந்தியடி என்பன உள்ளன (தகவல்: சுதுமலை ஐ.சாந்தன்).

'முனை' ஈற்று இடப்பெயர்கள்

முனை = போர், போர்க்களம், பகைப்புலம், பகை, துணிபு, திரள், முன், முகம், நுனி, கடலுட்செல்லும் நீண்ட கூரிய தரைப்பாகம் (த.லெ.VI:3310). கடலுட் செல்லும் நீண்ட கூரிய தரைப்பாகம் என்ற பொருளில் முனை ஈற்றுப் பெயர்பெற்ற நான்கு இடங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. அத்துடன் சிறு சிறு இடங்களுக்கும் குறிச்சிகளுக்கும் முனை ஈற்றுப் பெயர்கள் வழங்கி வந்தமையையும் அறியக்கூடியதாக உள்ளது.

கல்முனை (பூ.172.1)

கல் + முனை = கல்முனை. இது பூநகரிக் குடாவில் வட முனையிலுள்ள ஓரிடமாகும். இவ்விடம் சிறிய கூர்முனையாக இருந்தும் கடலரிப்பினால் அரித்துவிட முடியாதவாறு கற்றன்மை கொண்ட இடமாகக் காணப்படுகிறது. தொலமி (Ptolemy:A.D.150) இவ்விடத்தை Talacory என்று குறிப்பிட்டுள்ளார். Talacory என்பதே கல்முனை என மருவிற்று என முதலியார் இராசநாயகம் எழுதியுள்ளார் (1926: 113). இவ்விடத்தில் பழைய அழிபாடுகளும் உரோம நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புவி வரை பட ஆசிரியரான கிரேக்க நாட்டைச் சேர்ந்த தொலமியின் கருத்தை ஈர்த்த இடமாக கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் இவ்விடம் புகழ் பெற்று விளங்கியிருக்க வேண்டும். அதன் காரணமாகவே தொலமி இவ்விடத்தைத் தனது வரை படத்தில் குறித்துள்ளார் எனலாம். கல்முனை என்ற நகர் கிழக்கிலங்கையிலும் இடம் பெற்றுள்ளமையைக் காண்க.

குமுளமுனை (பூ.175அ.2)

பூநகரிப் பகுதியில் பல்லவராயன்கட்டு ஆறு பாயும் இடத்திற்குத் தெற்கே கடற்கரையோரமாகக் குமுளமுனை அமைந்துள்ளது. இவ்விடத்தின் புவியமைப்பு முனையாகவும் ஆங்கு குமிழ மரச் செடிகள் (Gelin asiatica) செறிந்து காணப்பட்டமையாலும் குமிழ் + முனை என்ற இரு சொற்கள் இணைந்து குமிழ முனை எனப் பெயர் ஏற்படுவதாயிற்று. முல்லைத்தீவு மாவட்டத்திலும் குமுள முனை என்ற ஓரிடம் அமைந்துள்ளது.

கௌதாரிமுனை (பூ.172.2)

பூநகரியிலுள்ள கல்முனைக்குத் தென்கிழக்கே இவ்விடம் அமைந்துள்ளது. புவியமைப்பில் முனை அமைப்பாக உள்ள இவ்விடத்தில் கௌதாரிப் பறவைகள் காணப்பட்ட நிலையில் இப் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

மாமுனை (பச்.147.30)

பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள செம்பியன்பற்றுக்கு வடக்கே மாமுனை என்ற இடம் அமைந்துள்ளது. பெரிய முனையாக இவ்விடம் அமைந்துள்ளமையால், இப் பெயர் தோற்றம் பெற்ற தெனலாம். இங்கு பண்டைக்கால கட்டிட அழிபாடுகளும், ஓட்டுத் துண்டுகளும் கிடைத்துள்ளன. இங்கு நாகதம்பிரான் கோயில் ஒன்று அமைந்துள்ளது. குடியிருப்புக் குறைந்து காணப் படும் இவ்விடத்தில் பனையும் பற்றைக் காடுகளும் நிறைந்து நிற்கின்றன.

'மூலை' ஈற்று இடப்பெயர்கள்

ஒதுக்குப் புறமாக அல்லது எல்லைப் புறமாக அமைந்த இடங்கள் 'மூலை' ஈறுகொண்ட பெயர்களைப் பெறுதல் வழக்கம். இவ்வகையில் தேங்காய்மூலை (நல்.38.6) என்ற இடம் கொக்கு வில் பதியின் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ளது. கொக்கு விலைச் சேர்ந்த இ. கந்தையாவின் கருத்துப்படி, இங்கு தென்னை மரங்கள் செறிந்து காணப்பட்டமையினால் இப்பெயர் ஏற்பட்டதென்பர். இது போன்றே பருத்தித்துறையில் புலோலியின் எல்லையில் உள்ள ஒரு பகுதி வியாபாரிமூலை (வடம.வ.கி. 139.4) என்ற பெயரில் வழங்குகின்றது. வியாபாரம் சிறந்து விளங்கிய இடம் என்ற நிலையில் இப்பெயர் ஏற்பட்டதாகலாம்.

'வளை' ஈற்று இடப்பெயர்கள்

வள் =வளம்; வள் + ஐ = வளை = வளம் செறிந்த இடம்; வள் > வளைவு = வளைந்த அல்லது ஆழ்ந்த இடம் என்ற பொருள்களின் நிலையில், 'வளை' என்பது இடத்தைச் சுட்டும் பின்னொட்டு இடப்பெயராக வழங்குகின்றது. அவ்வகையில் அமைந்த இடப்பெயர்களாக ஆழியவளை, கண்டாவளை, கும்பாவளை, கோணாவளை, தனிவளை, மணவளை என்பன இடம்பெற்றுள்ளன.

ஆழியவளை (பச்.148.1)

ஆழி + வளை = ஆழியவளை. ஆழி = கடல். கடலருகே அமைந்த இடம் என்ற பொருளில் இவ்விடப் பெயர் தோற்றம் பெற்றுள்ளது. பண்டைக் காலத்தில் வல்லிபுரநகர் அரசியல் முதன்மை பெற்று விளங்கியபோது இவ்விடம் அரச நடவடிக்கைகளோடு தொடர்புபட்டிருந்தது என்று அறியப்படுகிறது. பருத்தித் துறையிலிருந்து ஆழியவளை வரையும் 25 மைல் நீளமான தெரு அமைந்துள்ளது.

இங்கு பண்டை நாளில் ஒரு துறைமுகம் அமைந்திருந்த தென்றும், பின்னர் அது ஆங்கிலேயர் காலத்தில் அழிந்துபோக, அவ்விடத்தில் 'வெளிச்சக்கட்டை' (Light Post) ஒன்று நடப்பட்ட தாகவும் அறியப்படுகிறது. தொண்டைமானாற்றின் நீர்ப் பரப்பு ஆழியவளையில் முற்றுப் பெறுகிறது. ஆழியவளையின் அருகேயுள்ள உப்பாறு 'வீரக்கழி' என்ற பெயரில் வழங்குவதும் ஆராயப் பட வேண்டியதாகும்.

கோணாவளை (நல்.37.4; வலி.வ.71.1; வலி.தெ.மே.52.3)

கோணா + வளை = கோணாவளை. குன்றாத பயன் தரும் நிலப்பகுதி என்ற பொருளில் இப் பெயர் ஏற்பட்டுள்ளது. நல்லூர்ப் பகுதியிலும் வலிகாமம் பகுதியிலும் இப் பெயர்கள் அமைந்த மூன்று இடங்கள் அமைந்துள்ளன.

தனிவளை (தென்ம.112.4)

தனிமை + வளை = தனிவளை. தனிமையான குடியிருப் பிடம் என்ற பொருளில் இப் பெயர் ஏற்பட்டதென்று கூறப்படு கிறது. இது கொடிகாமம் என்ற ஊரின் வடபால் அமைந்த ஓரிடம்.

இயல் ஐந்து

நிலப் பயன்பாடும் இடப்பெயர்களும்

பண்டைக்கால மக்கள் நிலையான ஓரிடத்திற் குடியிருக்க முற்பட்ட போது காடழித்து, மனையமைத்து, தம் சூழலில் வளம் பெருக்கி வாழத் தொடங்கினர். வளமான சுற்றாடல்களிலேயே நிலையாக வாழவும் தலைப்பட்டனர். உணவு உற்பத்தியின் பயனாகக் கழனிகளும் தோட்டங்களும் தோன்றலாயின. அவற்றிற்குப் புதுப்புதுப் பெயர்களும் சூட்டப்பட்டன. நிலப் பயன்பாட்டு நோக்கில் வயல்களும் தோட்ட நிலங்களும் முதன்மை பெற்றன. அவற்றின் பயனாகத் தமிழ் மொழியிற் புதுப்புதுச் சொற்களும் பெருகலாயின.

ஈழத்திற் பொதுவாக கமம், வயல், வட்டை, வெளி என்ற பெயர்ச்சொற்கள் வயல் நிலத்தைச் சுட்டுவனவாக அமைந்துள்ளன. இவற்றில் கமம் என்பது காமம் என நீண்டொலி பெற்று வழங்குகிறது. 'கண்டி' என்பதும் வயற் பெயரைச்சுட்டும் பெயர்க் கூறாகவே வழங்கப்படுகின்றது. கொல்லை, தோட்டம், தோப்பு என்பன பயிர்த் தோட்டங்களுடன் தொடர்புடைய பெயர்ச் சொற்களாகும். இவற்றை விட 'வத்தை' என்ற சொல்லும் தோட்டம், குடியிருப்பிடம் என்ற பொருளில் வழக்குப் பெற்றுள்ளமை நூலில் விளக்கப்படுகிறது. இவற்றை விட, 'வெட்டி' என்ற சொல்லும் நிலப் பயன்பாட்டடிப்படையில் இடப்பெயர்க் கூறாக அமைந்துள்ளமையைக் காணலாம். இப்பெயர்க் கூறுகள் அனைத்தையும் தமிழகத்து இடப்பெயர்க் கூறுகளுடன் ஒப்பிட்டு ஆராயும்போது ஈழத்திற்குரிய சிறப்பான பெயர்க் கூறுகள் எவை என்பதை அறிய வாய்ப்பு ஏற்படுகிறது.

இவ்வியலில் நிலப் பயன்பாட்டு நோக்கில் ஆக்கம் பெற்ற இடப்பெயர்கள் பற்றி ஆராய்வதற்குத் துணையாகக் கண்டி, காமம், கொல்லை, தோட்டம், தோப்பு, வட்டை வத்தை, வெட்டி, வெளி என்ற ஈறுகளின் அடிப்படையில் இடப்பெயர்கள் விளக்கப்படுகின்றன.

'கண்டி' - ஈற்று இடப்பெயர்கள்

கண்டி = என்பது 75 ஏக்கர் நிலப்பரப்பு, எருமைக்கடா, மந்தை, மீன்பிடிக்கும் கருவிவகை, கழுத்தணி வகை, உருத்திராக்கமாலை, ஒரு முகத்தல் அளவு, சிறுகீரை, கண்டிகை (ஒரு வகைப் பறை), கண்டியூர் (அட்டவீரட்டானங்களுள் ஒன்று) எனப் பொருள் தரும் சொல்லாகும் (த.லெ.2:689). இவற்றுடன் 28 துலாக் கொண்ட நிறை, 20 பறை கொண்ட அளவு என்றும் கண்டி என்பது பொருள் தருகின்றது.

சிங்களத்தில் 'கண்டிய' என்பது ஆற்றங்கரை, வாய்க்காற் கரையிலுள்ள மேட்டுப்பூமி என்ற பொருள் தருவதாகும். இந் நிலையில் S. W. குமாரசுவாமி கண்டி ஈற்றுப்பெயர்கள் யாவும் சிங்களச் சொல்லின் திரிபு என்கிறார் (1918:59). அவர் கருத்தை மறுத்துரைக்கத்தக்க சான்றுகள் பெரிதுமுள்ளன. 'கண்டி' என்பது மலையாள மொழியில் வேலி இடைவெளி, மதில் வெடிப்பு, வயலில் நீர் வடிந்தோடத் திறக்கப்படும் வழி, மேட்டு நிலம், கணவாய், துண்டம், 500 இறாத்தல் நிறை, 4யார் நீளமுடைய தடி, ஒரு வகை மரம், கிழங்கு என்னும் பொருள்களில் வழங்குகிறது (H.Gundert, A Mala yalam and English Dictionary, 1872:P.199.). தமிழகத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் சோகண்டி என்ற பெயரில் இரண்டு இடப்பெயர்கள் காணப்படுகின்றன. இவ்வூர்ப் பெயர்கள் எளிதில் பொருள் புரியாதவாறு புதிராகவே அமைந்துள்ளன. கண்டி என்பது பிரிந்துள்ள பகுதி எனப்படும் என்கிறார் டாக்டர் நாகராஜன் (1985:184). தஞ்சாவூர் மாவட்டத்திலும் கண்டியூர் என்ற பாடல் பெற்ற தலமொன்றுமுளது. அப்பெயர் பற்றி ஆராய்ந்த டாக்டர் கே. பகவதி (1984:79):

> 'இவ்வூர்ப் பெயர்க்காரணம் விளங்கவில்லை. எனினும் கண்டி என்பதற்கு மந்தை என்றும், 75 ஏக்கருள்ள ஒரு நிலஅளவை என்றும், தமிழ் லெக்ஸிகன் (2:689) குறிப்பிடுவதைக் காண மந்தைவெளியாக இருந்திருக்கலாமோ எனத்தோன்றுகிறது' என்றார்.

திருவள்ளுவர் பற்றிய மரபுவழிக் கதையில் வள்ளுவருக்கு ஆடைதோய்த்துக் கொடுத்த வண்ணாத்திப் பெண்மீது பாடப்பெற்ற தனிப்பாடல் ஒன்றில் கண்டியூர் பற்றிய செய்தி வருதலும் நோக்கத்தக்கது.

"தூசு தூசாக்குவார் பாவை சுடர்த் தொடிக்கை
ஆசிலாக் கண்டியூரா ரணங்கு - வாசமலர்க்
கண்ணங்கை கொங்கை முகங்காலுங் கடிக்கமலம்
கண்ணங்கை கொங்கை முகம்"

மேலும், புறநானூற்றில் (148-150) கூறப்படும் வள்ளல் களில் ஒருவரான கண்டீரக்கோப்பெருநள்ளியை வன்பரணர் பாடுகின்றார். கண்டீரநாடு குறிஞ்சி வளமுடையநாடு என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றை நோக்கும்போது பழந்தமிழகத்திலும் பழந்தமிழ் இலக்கியத்திலும் 'கண்டி' என்ற சொல் பயின்று வந்துள்ளமை தெளிவாகின்றது. எனவே 'கண்டி' என்பது தமிழ்ச் சொல் என்பது உறுதியாகிறது. யாழ்ப்பாண மாவட்டத்துக் கண்டி ஈற்றுப் பெயர்கள் எவ்வாறு ஆக்கம் பெற்றுள்ளன என்பது இங்கே ஆராயப்படுகின்றது.

இலங்கையில் கண்டி (Kandy) மலையகப் பகுதியின் முதன்மையான நகராகும். ஈழத்தின் வடக்குக் கிழக்கு மாகாணங் களின் சில ஊர்ப்பெயர்கள் 'கண்டி' என்ற ஈறு பெற்றமைந் துள்ளன. சங்க மாங்கண்டி என்ற இடம் இலங்கையின் கிழக்குக் கரையில் கதிர்காமத்துக்குப் போகும் வழியில், அதற்கு அண்மை யிலுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கோயிலாக்கண்டி, பொலி கண்டி, முறிகண்டி என்ற ஊர்ப்பெயர்கள் 'கண்டி' ஈற்றுப்பெயராக அமைந்துள்ளன. தென்மராட்சிப் பகுதியில் வரணி வடக்கில் ஐயன்கண்டி, ஔவைகண்டி என்ற தோட்டப் பெயர்களும், வல் வெட்டித்துறையில் வலிகண்டி என்ற குறிச்சியும், வல்லிபுரக் கோயிலின் தெற்கே வலிக்கண்டி என்றோர் ஊரும் காணப்படு கின்றன.

இவற்றைவிட வேறு பொருளிலும் 'கண்டி' என்ற சொல் இணைந்து வருகின்றது. 'கண்டி கட்டுதல்' என்ற வழக்காறு மீனவரிடம் உண்டு. இறால், சிறுநண்டு, திரளி, சள்ளை முதலிய மீன் வகைகளைப் பிடிக்கும்போது பறிகட்டிப் பிடித்தல் மரபு. அதனையே 'கண்டிகட்டுதல்' என்ற தொடர் குறிக்கின்றது. கண்டி > கண்டித்தல் = துண்டித்தல். கண்டி என்பது இடப்பெயராக வரும் போது தனித்துத் துண்டிக்கப்பட்ட நிலப்பகுதி கண்டி எனப்பட்டது. இவ்விளக்கம் மலையகத்துக் கண்டி நகருக்கும் மிகப் பொருந்துவதாகும். யாழ்ப்பாணத்திலுள்ள இடப்பெயர் களுக்குச் சிங்கள விளக்கம் கொடுக்க முயன்ற ஹோர்ஸ்பேர்க்

(Hersburgh: 1916: 56) என்பவர் எதுவித காரணமோ விளக்கமோ குறிப்பிடாது பொலிகண்டி, கோயிலாகண்டி என்பன சிங்களப் பெயர் என்றதன் நோக்கம் புரியுமாறில்லை.

ஈழத்தில் தமிழர் வாழும் பகுதிகளில் கண்டி என்ற சொல் இடப்பெயராகவும், அன்றாட வாழ்க்கையிற் பயன்படும் பொருள்களைச் சுட்டுஞ் சொல்லாகவும் அமைவதால் அஃது தமிழ்ச்சொல் என்பதில் ஐயமேயில்லை. மேலும் வயற்பரப்பும் நீர் நிலைகளும் சார்ந்த இடத்தை 'கண்டிகை' என்ற சொல் குறிப்பதால், கண்டிகை என்பதன் ஈற்றசை இன்றி வழங்கிய 'கண்டி' என்பதே இடப்பெயர் ஈறாயிற்று.

கோயிலாக்கண்டி (தென்ம.91.1)

தென்மராட்சியில் நாவற்குழியை அடுத்துள்ள பகுதி கோயிலாக்கண்டியாகும். இதனைக் கோ + இலாக்கண்டி எனவும்: கோயில் + ஆர் + கண்டி எனவும் பிரித்துப் பொருள் கூறப் படுகின்றது. கோ + இலாக்கண்டி என்பதற்கு அரசனில்லா ஊர் என்றும், அரசாட்சி நாட்டில் நடைபெற்ற போதிலும் இங்கு அரசர் ஆட்சி நடக்கவில்லை என்றும் கூறுவர். இங்கு கோயிலும் பசுக்களும் நிறைந்து காணப்பட்டமையால் (கோயில் + ஆ + கண்டி) கோயிலாக்கண்டி என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கருதப்படுகின்றது. இங்கு அம்மன்கோயில், காளிகோயில், கந்த சுவாமி கோயில், நாகதம்பிரான் கோயில், கிருஷ்ணன்கோயில், அண்ணமார்கோயில், பிள்ளையார்கோயில், நாச்சிமார்கோயில், வைரவர்கோயில், ஐயனார்கோயில் எனப் பல கோயில்கள் காணப்படுதல் மேற்காட்டிய ஊர்ப்பெயர் விளக்கத்திற்குச் சான்றா கின்றது. தென்மராட்சிப்பகுதியில் 'கண்டி' என்ற ஈற்றுப்பெயர்கள் பெரிதும் காணப்படுகின்றன. இங்கு பல கோயில்கள் உள்ளமை யால் கோயில் வழிபாட்டிலும் கோயில் தொண்டிலும் ஈடுபாடுடை யோர் அதிகமாக வாழுமிடம் என்ற பொருளில் இப்பெயர் ஏற் பட்டிருக்கலாம்.

பொலிகண்டி (வடம.வ.கி.126.1)

பொலி + கண்டி = பொலிகண்டி. இவ்வூரின் எல்லை களாக பாக்குநீர்த் தொடுகடல், கிழக்கே திக்கம், அல்வாய், மேற்கே வல்வெட்டித்துறை, வல்வெட்டி, தெற்கே கரணவாய்

வடக்கு என்ற இடங்கள் அமைந்துள்ளன. பொலிகண்டியின் ஒரு பகுதி வல்வெட்டித்துறை பட்டினசபையுடன் இணைக்கப் பட்டுள்ளது. பொலிகண்டி என்பது ஒரு தூய தமிழ்ப் பெயராகும். எப்பெயருக்கும் சிங்கள மூலம் கூறும் S. W. குமாரசுவாமி அவர்கள் இப்பெயரைத் திராவிடப் பெயர் எனக் குறிப்பிட்டமை வியப்பாகின்றது. அவர் கூற்று வருமாறு (1918:பக்.59-60):

> "பொலி என்பதற்குச் சிங்களத்திலே பொருள்படாமையால் அதனைத் திராவிடச் சொல்லெனல் தவறாகாது. களத்திலுள்ள மணியைப் பொலியென்பது தமிழர்க்கும் மலையாளிகளுக்கும் வழக்கமாதலின் பொலியினாற் சிறந்த பூமியைப் பொலிகண்டி யெனல் பொருத்தமான பேச்சாம். அஃதே பொலிகண்டியின் உண்மையான பொருளெனின், முறிகண்டிக்கும், நென்முறியாற் சிறந்த பூமியென்று பொருளுணர்த்தல் கூடும்"

பொலி என்ற சொல்லுக்குச் சிங்களத்தில் மூலவேர் காண முடியாத - இயலாத் தன்மையாலே இவ்வாறு இதனைத் திராவிடச் சொல் என்றமை, அன்னாரது ஆய்வுப்போக்கு எத்திசை நோக்கிற்று என்பது வெள்ளிடைமலையாகிறது.

நாட்டார் வழக்கில் இப்பெயர் தொடர்பான வேறு விளக் கங்களும் தரப்படுகின்றன. இங்கு வேளாண்மைத் தொழிலும், மீன்பிடித்தொழிலும் முதன்மை பெற்றுக் காணப்பட்டமையால் இரு வகைத் தொழிலாளர் வழக்கிலுள்ள இருசொற்களும் இணைந்து: பொலி =(நெல்) + கண்டி =(மீன்பிடி கருவி) = பொலிகண்டி ஆயிற்றென்ப. முருகன்கோயில் உள்ள இடங்களிற் சில, கண்டி ஈற்றுப் பெயர் பெற்றிருத்தலைக் கொண்டு, பொலி = அழகு, பொலிவு என்ற பொருளில் முருகன் எழுந்தருளும் எழிலான இடம் என்பதே பொலிகண்டி என்பதன் பொருள் என வும் கொள்ளலாம். இங்குள்ள குறிச்சிப்பெயர்களாக ஆழக்கிணற் றடி, பொன்னாதறை, சங்கத் தோட்டம், கோட்டுவளவு, ராத்தலடி, கொத்தர்மலை, ஆலடி, ஏழுபுளியடி, கன்றுப்புளியடி, மாவடைப்பு, அணிஞ்சில்காடு, அணிஞ்சாம்புலம், மாவத்தை, உந்துவத்தை, கெல்லாவத்தை, மானாங்கானை, பாலாவியடி, திகதை, ஆட்டுப் பட்டியடி, பத்தானை, சின்னாவளை, தெணி, ஒதியாவளவு என்பன வழக்கிலுள்ளன.

குறிச்சிப்பெயர்களில் ஆழக்கிணற்றடி என்பதை நோக் கும் போது, ஆழ்வான் என்ற தனிமனிதன் ஒருவன், கிணறு வெட்டி, அதிலிருந்து நீர் இறைத்துத் தோட்டம் செய்து வந்த தாகவும், அக் கிணறு "ஆழ்வான் கிணறு" எனப்பெயர் பெற்ற தென்றும், காலப்போக்கில் ஆழ்வான் கிணற்றடி > ஆழக்கிணற்றடி என மருவிற்றென்றும் கூறப்படுகிறது. பொன்னி+ தறை = பொன்னாதறை. பொன்னியின் நிலம் என்ற பொருளில் இப்பெயர் வழங்குகிறது. சங்கரன் + தோட்டம் > சங்கதோட்டமாகத் திரிந்தது எனக் கூறப்படுகிறது. கோடு + வளவு = கோட்டுவளவு பண்டை நாளில் ஊர்ப் பஞ்சாயம் போன்று, ஊர்ப் பெரியார்கள் கூடிச் சிறுசிறு வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பர். பிணக்குகளை விசாரித்துத் தீர்க்குமிடம் நீதிமன்றம் (Court). இதனை அவ்வாறே தமிழில் கோடு எனக் கூறுதல் வழக்காகிவிட்டது. ஆதலால் கோடும், வளவும் சேர்ந்த நிலையில் கோடு + வளவு > கோட்டுவளவு ஆயிற்றென்ப.

இவ்வூரின் கடற்கரையோரமாக றாத்தலடி என்ற ஓரிட முண்டு. மீனவர் தாம் பிடித்துவந்த மீனை றாத்தல் கணக்கில் நிறுத்து விற்றுவந்த இடம் என்ற நிலையில் இப்பெயர் வழங்கிற் றென்ப. முன்னாட்களில் மீனவர் தாம் பிடித்த மீனை நிறுத்துக் கொடுக்காமல், பார்வை அளவில் விலை பேசிக்கொடுக்கும் வழக்கம் இருந்தது. அம்மரபுக்கு மாறாக, இவ்விடத்து மீனவர் நிறுத்துக் கொடுத்தமையால் அவர்கள் வாழ்ந்த இடத்திற்கு றாத்தலடி எனப் பெயர் ஏற்படுவதாயிற்று. மரபு மீறுதல் என்பதன் நினைவாக இப் பெயர் வந்திருத்தல் நோக்கற்பாலது.

கொத்துமூலை > கொத்தர்மலை என்றாயிற்று. பண்டை நாளில் இவ்விடத்தில் வாழ்ந்த செல்வந்தர் தம் பணத்தைக் கொத்துக் கொத்தாக அளந்து தானமானக் கொடுத்தார் என்றும், அதனாலேயே இவ்விடம் கொத்துமூலை என வழங்கிற்றென்றும், பிற்காலத்தில் மூலை என்பது மலை என மாறிக் கொத்தர்மலை என வழங்கிற்று என்றும் அறியப்படுகின்றது (தகவல்: த. புவனேந் திரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன்- 1982).

முறிகண்டி (கர:164அ.10)

முறி + கண்டி = முறிகண்டி. கண்டி என்பதற்கு நீர் நிலத்தி லிருந்து பீறிட்டு மேலே பாய்தல் என்ற பொருளுமுண்டு. முறிகண்டி = என்பதற்கு நிலம் பிளந்து மேலே நீர் பீறிட்டுப்

பாய்ந்த இடம் எனவும் பொருள் கூறப்படுகிறது. கிளிநொச்சிக்குச் சிறிது தூரத்தே யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ்சாலையின் 151ஆம் மைல் கல்லுக்கு அருகில் தெருப்பிள்ளையார் கோயில் கொண்ட இடமாக இது அமைந்துள்ளது. இத் தெருவால் செல லும் அனைவரும் இக்கோயிலடியில் தரித்து நின்று வழிபாடியற்றி அப்பாற் செல்வது வழக்கம். இக்கோயிலிலிருந்து உள்நோக்கி 8 மைல் தூரத்தில் 'பழையமுறி கண்டி' என்ற ஓரிடமுண்டு. அங்கு இப்பெயரால் குளமும் ஒரு கோயிலுமுள்ளன. இப்பகுதி பண்டை நாளில் யானைகள் நடமாட்டமுடைய காடாகவே திகழ்ந் தது.

'காமம்' - ஈற்று இடப்பெயர்கள்

காமம் = நகரம் அல்லது கிராமம் என்கிறார் வின்ஸ்லோ. வடமொழி "க்ராம" என்ற சொல்லிருந்தே காமம் என்ற சொல் தோன்றியுள்ளது. சிங்களமொழியில் "கம", "கமுவ" என்ற ஈறு பெறும் இடப்பெயர்களுள. அப்பெயர்களும் வடமொழிக் க்ராம என்பதிலிருந்தே ஆக்கம்பெற்றுள்ளன. எனவே தமிழில் வரும் காமம், சிங்களத்தில் வரும் கம, கமுவ ஆகிய மூன்று சொற் களும் ஒரே வடமொழிச்சொல்லிலிருந்து தோற்றம் பெற்றவை என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். இலங்கை யின் பல பகுதிகளிலும் காமம் ஈற்று இடப்பெயர்கள் காணப்படு கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திற் கொடிகாமம், தம்பகாமம், வலிகாமம், வீமன்காமம் என்பனவும், முல்லைத்தீவிற் பனங்காமம், கிழக்கு மாகாணத்தில் இறக்காமம், இலங்கையின் தென்கோடி யில் கதிர்காமம் முதலிய இடங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஹேர்ஸ்பேர்க் (Hersburgh 1916:54), 'காமம்', 'கம', 'கமுவ' என்ற சொற்கள் ஒரே மூலத்திலிருந்து தோற்றம் பெற்ற சொற்கள் என்பதை ஏற்றுக்கொண்ட பின்னர், அதே கட்டுரையின் (பக்-55) மறு பக்கத்தில் 'காமம்' என்பது சிங்களக் 'கம' என் பதன் தமிழ் வடிவம் என்கிறார். ஆசிரியரே முன்பின் முரணாகக் கூறுவதிலிருந்து அவரே தம்மொடுதாம் முரண்படுதலைக் காண்க:

> " Gramam is from the Sanskrit grama, from which the Sinha lese word gama is derived. So that both Kaamam and Gama came from antrerir common stock I am however , of opinion

> that where Kaamam is found in place name of the Jaffna pen insula, it is a Tamilized form of Gama, because the Tamil word kaamam is not used by the Tamils of the peninsula." (Hersburgh 1916: 54-55.)

சுவாமி ஞானப்பிரகாசர் (1917:167-169), S. W. குமார சுவாமி (1917:26) முதலியோர் இம் மாவட்டத்திலுள்ள கொடி காமம், தம்பகாமம், வலிகாமம், வீமன்காமம் என்பவற்றுடன், குறிச்சிப் பெயர்களாம் இளகாமம், தேகாமம் என்பனவும் சிங்களப் பெயர்களே என்றனர். ஆயினும் இவர்களது ஒருபக்க வாதங்கள் ஆழ்ந்த ஆய்வுக்குரியனவாகும்.

கொடிகாமம் (தென்க.106.3)

தென்மராட்சிப்பகுதியிற் சாவகச்சேரிக்குக் கிழக்கே 6 மைல் தொலைவில் கொடிகாமம் அமைந்துளது. இதனூடாக யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ்சாலையும், கச்சாய் + பருத்தித் துறைத் தெருவும் செல்கின்றன. தென்னந்தோப்புக்களும், மாஞ் சோலைகளும், பனந்தோட்டங்களும் நிறைந்த மணற்பூமியாக இவ்வூர் காணப்படுகிறது. இதன் எல்லைப்புறங்களில் வயல் வெளிகள் உள்ளன. திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்கள் கூடும் பெரிய சந்தையும், பேருந்து தரிப்பு நிலையம், புகையிரத நிலையம், அஞ்சல் அலுவலகம் முதலான பல வசதிகளும் அமைந்துள்ளன.

இப் பகுதியிலே முன்பு பெருந்தொகையாக்க் கமம் செய்யப்பட்டமையினால் எண்ணிக்கையடிப்படையில் கோடிகமம் என்ற பெயர் ஏற்பட்டு, காலப்போக்கில் கோடிகமம் > கொடிகாமம் ஆயிற்று என்பாருமுளர். கூட்டமாகச் சேர்ந்து (கோஷ்டியாக) கமஞ் செய்த இடம் கோஷ்டி + கமம் > கோடிகமம் > கொடி காமம் ஆயிற்று என்றும் விளக்கம் கூறப்படுகின்றது. கொடி காமத்தின் எல்லைப் புறங்களில் பெரும் பனஞ்சோலைகளும், அவற்றைத் தாவிவளர்ந்த பெரும் கொடிப்பற்றைகளும் இன்றும் காணப்படுகின்றன. அந்நிலையில் கொடிகள் நிறைந்த இடம் (காமம் = இடம்) கொடிகாமம் என்ற பெயரைப் பெற்றிருக்கலாம். தென்மராட்சிப் பகுதியில் மாரி காலத்திற் பெரிதும் வெள்ளந் தேங்கி நிற்குமிடம் இதுவாதலானும், இங்கு கமம் செய்வதற்கு

ஏற்ற வாய்ப்பு இருப்பதாலும், கமத்தை அடிப்படையாகக் கொண்ட கோடிகமம் > கொடிகாமம் ஆயிற்று எனப் பொருள் கொள்வார் வாதம் வலுப்பெற்றுக் காணப்படுகிறது. தமிழகத்திற் பேராவூரணியிலுள்ள கொடிவயல் என்ற இடப்பெயரும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலது. எனவே கமம் > காமம் ஆயிற்று எனலாம்.

கோடு = வரம்பு; கோடு > கொடி. எனவே வரம்புகளாற் சூழப்பட்ட நிலங்கள் உள்ள இடம் என்ற நிலையிலும் கொடி காமம் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறலாம். கொடிகள் நாட்டப்பட்ட இடம் கொடிகாமம் என்ற கருத்தும் கூறப்படுகிறது. முதலாம் சங்கிலி மன்னன் தெற்கே படை எடுத்துச் சென்று வெற்றியுடன் மீண்டு வரும் போது, அவனது படைவீரர்கள் சிற் சில இடங்களிலே தமது வெற்றிக்கொடிகளை நாட்டிவந்தனர் என்றும், அவற்றில் பல கொடிகள் நாட்டப்பட்ட இடம் கொடிகாமம் என்றபெயரைப் பெறுவதாயிற்று எனவும் கூறப்படுகிறது. பண்டை நாளிற் கொடிகாமத்தின் அயற் பகுதிகளிற் கல்வியிற் சிறந்த பலர் வாழ்ந்தனர் என்றும், அவர்களது கோஷ்டி விரும்பி வந்து இவ்வூரிற் கூடிக் கலந்துரையாடுவர் என்றும், அதனாலேயே இப்பெயரேற்பட்டது என்றும் கூறுவர். (தகவல்: பண்டிதர் க. கந்தையனார் - ஓய்வுபெற்ற அதிபர்: கொடிகாமம்.) அவ்வகையில் கோஷ்டி > கொடி என மாறிற்று: காமம்- விரும்பி வந்து கூடு மிடம் எனப் பொருள் தருதல் நோக்கற்பாலது. கொடிகாமம் கிராமசேவகர் பிரிவின்கீழ் ஆர்த்தியடி, செட்டியாவெளி, சாண்டான் போக்கட்டி, தவசிகுளம், வேலில்காடு என்ற பகுதிகள் அமைந் துள்ளன.

தம்பகாமம் (பச்.156.2)

தம்பம் = நிலம்; தம்பல் = சேறு. எனவே தம்பல் + காமம் > தம்பகாமம் = சேற்றுப்பாங்கான வயல்நிலம் என்பதும் பொருளாம். இவ்விடத்தின் புவியமைப்பும் இவ் விளக்கத்தைச் சான்றுபடுத்துகின்றது.

பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள இத்தாவில் பதியின் ஒரு பகுதி தம்பகாமம் ஆகும். இங்கு நெல்வயல்கள் நிறைந் துள்ளன. தம்பர் + கமம் = தம்பர்கமம் > தம்பகமம் > தம்ப காமம் என ஆயிற்று. தம்பர் என்பவருக்கு இங்கு நிறைந்த கமம் (வயற்காணிகள்) இருந்தபடியால் அவர் பெயரால் இப்

பெயர் தோன்றிற்று என்பது அவ்வூர் மக்கள் தரும் விளக்கமாகும். (தகவல் :பொ.கா. பி.மஞ்சுளாதேவி: பட்டதாரி மாணவி, யாழ். பல்கலைக்கழகம்.1981). பெருநிலக்கிழாராகிய தம்பர் என்பவரின் கமத்திலே வேலை செய்த பலரும் வேற்றூர்களிலிருந்து இக் கமத்திற்கு வரும் போது "தம்பர் கமத்திற்குப் போவதாகவும்", அங்கிருந்து போகும்போது "தம்பர் காமத்திலிருந்து வருவ தாகவும்" கூறியமையால் காலப்போக்கில் தம்பர் கமம் இருந்த இடமும், தம்பர் + கமம் > தம்பகாமமாயிற்று. இதன் குறிச்சிகள் நல்லையாகுளம், பெரிய தம்பகாமம், களுதாவளை, நவுண்டான் தோட்டம் என்பனவாகும்.

வலிகாமம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்குப் பகுதியில் 111 ச.மைல் பரப்புடைய பரந்த பகுதி வலிகாமம் எனப்பெயர் பெறும். இதன் வடக்கு, மேற்குப் பகுதிகளிற் பாக்குநீர்த் தொடு கடலும், தெற்கே யாழ்ப்பாணக்கடனீரேரியும், கிழக்கே தொண்டை மானாற்றுக் கடனீரேரியும் எல்லைகளாக அமைந்துள்ளன. கட லேரிகளாலும் பாக்கு நீரணையாலும் சூழப்பட்ட வலிகாமம் பகுதி நிருவாக அடிப்படையில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு, யாழ்ப்பாணம் என ஐந்து உதவி அரச அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள் ளது.

வல் > வலிமை + கமம் > வலிகாமம் எனப் புணர்ந் துள்ளது. இந் நிலப்பகுதி முழுவதும் செம்மண்கொண்ட செம் பாட்டு நிலப்பகுதியாகவும், செம்மண்ணும் செங்களியுங்கொண்ட ஒரு திட்டிப் பிரதேசமாகவும் அமைந்துள்ளது. எனவே பெரும் பாடுபட்டு உழைத்துக் கமம் செய்யவேண்டிய நிலையில் அமைந்த வலியகமம் > வலிகாமம் ஆயிற்று. "வலிகாமம் என் பது ஐயத்திற்கிடமின்றி அது சிங்களப் பெயரென்றும், Weligama (= Sandy village) என்பதன் திரிபென்றும், அதனை வலி, வழி, வளி எனத் தமிழில் பொருள் காணல் பொருளற்றது" என்றும் ஹோர்ஸ்பேர்க் (Hersburgh:1916:P55) கூறினார். இக் கருத்தே S. W. குமாரசுவாமியிடமும் (1918:26) காணப்படுகிறது.

வலிகமம் என்பதற்கு அதன் நில அமைப்பே முதற் காரணியாகிறது. வலி = மணல் என்ற சிங்களப்பொருள் கொளின், இப் பகுதியில் பெரும்பாலும் செம்பாட்டுத்தரையே காணப்படு கிறது. மணல் தரையை செம்பாட்டுத்தரையாக்க முடியாது; செம்பாட்டுத் தரை மணல் தரையாகவும் மாறாது. அன்றியும் மணல்தரையின் அடியில் முருகைக்கற்களே அமையும். ஆனால் செம்மண்தரையில் அடியில் சுண்ணக்கல் (வெள்ளைக்கல்) பாறையே அமைந்திருக்கும். வலிகாமப்பகுதியின் பெரும்பாகம் சுண்ணக் கற்பாறைகளையே கொண்டுள்ளது. எனவே வலிகாமம் என்பது வலிகமத்தின் திரிபாகிய தமிழ்ப்பெயரே என்பது தேற்றம். வல் > வலி = சேனை, வெற்றி என்ற பொருள்களும் கூறப்படு கிறது (தாவீது :1970:85). மேலும் தமிழகத்திலும் வலி தாயம், வலிவலம், வல்லம், வல்லன்சேரி, வல்லப்பாக்கம், வலம்புரம் முதலான இடப்பெயர்கள் வழக்கில் உள்ளமையும், அவை வல் > வலிமை என்ற அடிச்சொல்லிலிருந்து தோற்றம் பெற்றிருத் தலும் எம் கருத்தை மேலும் வலிதாக்குகின்றது.

யாழ்ப்பாணத்திற்கு மணற்றி, மணற்றிடர் என்ற தூய தமிழ்ப் பெயர்கள் முன்னர் வழங்கியமை யாழ்ப்பாண வைபவ மாலை, வையாபாடல் முதலிய நூல்களால் அறியப்படுகிறது. மதுரை மன்னன் வரகுணபாண்டியன் இந்த 'மணற்றியை' வென்ற செய்தி கூறுவதாய் அமைந்த 'மன்னேரழிய மணற்றி வென்றான்' எனத் தொடங்கும் பாடல் ஒன்று இறையனார் அகப்பொருளுரை யில் மேற் கோளாகத் தரப்பட்டுள்ளது. எனவே மணற்றி = மணற்றிடர் = வலிகாமம் என்பன ஒரு பொருள் சுட்டும் தமிழ்ப் பெயர்கள் என்பது புலனாகின்றது.

வீமன்காமம் (வலி.வ.69.4)

வீமன் + கமம் = வீமன்கமம் > வீமன்காமம் ஆயிற்று. இப் பெயர் வீமன் என்பவருக்குரிய கமநிலப் பகுதியைச் சுட்டி, பின்பு அவ்வூர் முழுவதையும் குறிப்பதாயிற்று. பாரதத்தில் வரும் வீமனை இங்கு தொடர்புபடுத்திக் கூறும் வழக்கமுமுண்டு. இது சிங்களப் பெயர் எனக்கூறும் குமாரசுவாமி வருமாறு விளக்கம் கொடுத்துள்ளார் (1918:26-27): "சிங்களருடைய நம்பொத்த என் னும் நூலிலே நுவலப்பட்ட 'பீவன் கமுவிகாரய' என்பது வீமன் காமத்திலே உள்ளதென்பதற்கு அக் குறிச்சியிலேயுள்ள 'புத்தர்

கோயில்' எனப் பெயரிய காணியும், அக்காணியின் கண்ணே காணப்படும் அழிந்துபோன ஒரு கட்டிடத்தின் அத்திபாரக் குறி களுமே சிறந்த அத்தாட்சியாம் "மீவன்கமு நம்மவர் நாவிலே வீமன்காமமெனச் சிதைவுற்றது வினோத மன்று," என்று கூறும் இவரது கூற்றும் வினோதமாகவே இருக்கிறது.

ஈழத்தில் தமிழர் வாழும் பாரம்பரியமான பெரும் பகுதி களில் பாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசந் தழுவிய நாட்டுக் கூத்துகள் பெரிதும் இடம் பெற்றுவந்துள்ளன. அக் கூத்துக்களிற் சிறந்தோருக்குக் கதைமாந்தர் பெயர்களும் வழங்கலாயின. சான் றாகத் 'தருமர் மார்க்கண்டு', 'அருச்சுனன் குமாரன்','வீமன் அருணாசலம்', 'நீலன்மணியன்', 'சீதைவேலர்' என்ற தொடக்கத் தனவாகிய பழைய பெயர்கள் இன்றும் மட்டக்களப்பு ஊர்களில் வழக்கிலுள்ளன. எனவே 'வீமன்' என்ற கூத்துக்கலைஞன் ஒரு வன் வாழ்ந்த இடமே 'வீமன்காமம்' எனக் கூறுவதில் எந்தத் தப்பும் இல்லை; எந்த விநோதமுமில்லை. ஈண்டு டாக்டர் கரு நாகராசன் கூறும் கருத்தும் (1985:104) நோக்கற்பாலது:

> "கூத்துக்கலைகளில் வல்ல கூத்தர்களுக்குப் பரிசாகச் சில ஊர்களை மன்னர்கள் வழங்கியிருத்தல் வேண்டும். அப்படிப் பட்ட ஊர்கள் 'கூத்தவாக்கம்' என்று குறிப்பிடப்படுகின்றது."

பஞ்சபாண்டவர்களின் பாரதப்போரை நினைவுபடுத்தும் வகையில் இலங்கையில் பல பெயர்கள் வழக்கிலுள்ளன. சான் றாகப் பாண்டிருப்பு, மணிபல்லவம், வீமன்காமம், நகுலேஸ்வரம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். ஹோர்ஸ்பேர்க் (Hersburgh; 1916:P:55) வீமன்காமம் தனிச் சிங்களப் பெயர் என்றார். அவரே வவுனியா மாவட்டத்தின் மாமடு என்ற ஊரின் அயற்பதியாகிய 'வீமன்கல்லு' என்ற இடத்தைக் குறிப்பிடடு, அதுவும் சிங்களப் பெயரென்றார். S.W. குமாரசுவாமியும் வீமன்காமம் சிங்களப் பெய ரென்பதில் திருப்தி காண்கிறார்:

> "This name is spelt Minivangama in a different editions of the Name Potta, but, judging from the name வீமன்காமம் which is clearly a Sinhalese term in Tamil grab, I think Mivangamu is the more correct of the Sinhalese name. Mivan easily turns into Viman according to a law of phonotic change known to

the Tamil grammarians as metatheses (போலி) (சிவிறி -> விசிறி). It is also noteworthy that the form வீமன் is meaningful in Tamil. As signifying the legendany here வீமன், hence the preference given to the form வீமன்காமம் (S.W.Coomara suvamy: 1918:P:160).

இவர்களின் நோக்கம் தமிழ்ப் பெயர்களுக்குச் சிங்கள மூலம் கற்பிப்பதேயாகும். இவ்வூரின் குறிச்சிப் பெயர்களாக அம்பட்டியவத்தை, றப்பியகடவை, சிறியவத்தை, சின்னம்பத்தை, முள்ளாத்தனை, பரியாரிகடவை, மாந்தப்பாய், தலப்பாய், மல மண்டலப்பாய் முதலியன காணப்படுகின்றன. றபாயல் (Rafael) என்ற கிறிஸ்தவர் வாழ்ந்த இடத்தின் காரணமாக Rafael > றப்பி றப்பியகடவை என்ற பெயர் வழக்குப் பெறுவதாயிற்று. இங்கு கேணியடி வைரவர் கோயிலும் மாரியம்மன்கோயிலும் உள்ளன. பண்டைநாள் முதலாக மருத்துவர் (பரியாரி) மரபினர் வாழ்ந்த இடம் பரியாரி கடவை என்ற காரணப்பெயர் பெறுவ தாயிற்று.

வீமன் என்ற தலைமகன் ஒருவன் விரும்பிவந்து தங்கி வாழ்ந்த இடம் என்ற அடிப்படையிலும் (வீமன்+காமம்) வீமன் காமம் என்ற பெயர் தோன்றியிருக்கலாம் என்று கருதுவர் தெல்லி யூர் நடராசா. இதன் அயலேயுள்ள மயிலப்பையில் "கூத்திவளவு" என்ற குறிச்சிப்பெயர் வழக்கில் இருப்பதும், பண்டைநாளில் பாரதக் கதையோடு தொடர்புடைய கூத்துக்கள் ஆடப்பட்டமை யும் வீமன்நாடகம் அல்லது வீமன் என்ற கதாபாத்திரம் முதன்மை பெற்ற நிலையும் வீமன்காமம் என்ற பெயர் ஏற்படக்காரணமாக இருந்திருக்கலாம்.

'கொல்லை'/ 'சோலை' - முதன்மை இடப்பெயர்கள்

ஒல்லை > கொல்லை. ஒல்லையூர் நாடு பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களிற் கூறப்படுகின்றன. "ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த வல்வேற் சாத்தானமாய்ந்த பின்றை முல்லையும் பூர்த்தியோ ஒல்லையூர் நாட்டே" (புறம்:242:).

ஒல்லை > ஓலை எனத் திரிந்து இடப்பெயராக வழங்கு கிறது. அளவெட்டி ஊரின் அளவோலை, கள்ளியோலை முத

லான குறிச்சிப் பெயர்கள் இவ்வகையினவாகும். சோலை > ஓலை > தோலை என மாறியுள்ளமையையும் காணலாம். அம் மன் சோலை என்பது அம்மன்தோலை (நல்.37.2) எனப் பெயர் பெற்றுள்ளது.

அழகொல்லை (வலி.வ.62.1)

அழகு + கொல்லை > அழகொல்லையாயிற்று. இது அளவெட்டிக் கிராமசேவகர் பிரிவிலிடம் பெறும் ஓரிடம். கொல்லை = தோட்டம். அழகிய தோட்டத்தையுடைய இடம் என்பது இதன் பொருளாம். கொல்லை என்பதற்கு முல்லை நிலம், புன் செய் நிலம், தரிசு, புழக்கடை, தோட்டம் என்பதும் பொருளாம் (த.லெ.2 1157). கொல்லை என்பது ஈழத்து வழக்கில் சோலை என்பதையும் சுட்டும். கொல்லைப்புறம் எனும்போது, வீட்டின் பின்பக்கச் சோலை என்ற பொருளில் வருவதாகும். தமிழகத்திலும் கொல்லையீற்றுப் பெயர்கள் காணப்படுகின்றன. கொல்லை - (கொல்லை = சோலை). ('மீனேறுங் கொடிமுல்லை விடுகொல்லைக் கடி முல்லை......' மதுரைக்கலம்பகம் - 5.) "கொல்லை இரும்புனம்" (அகம்: 89:17) கொல்லையினையுடைய பெரிய காடுகள் என்பது இதன் பொருளாகும். ஞானப்பிரகாசர் அழகொல்லை என்பதைச் சிங்களச் சொல்லென்பார் (1917).

செட்டிச்சோலை (வலி.வ.62.3)

அழகொல்லைக்கு அயலிலே அமைந்துள்ள இன்னோரி டம் செட்டிச்சோலை. இவ்விரு இடங்களும் அருகருகே அமைந்து கந்தரோடைக்கு அண்மையிற் காணப்படுவதாற், பண்டைநாளிற் கந்தரோடை அரசு நிலவிய போது, இப்பகுதி அரசபூங்காவாக இருந்திருக்குமோ என்ற ஐயந் தோன்றுகிறது.

'தோட்டம்' - ஈற்று இடப்பெயர்கள்

பயிர்ச் செய்கையுடன் தொடர்புடையதாக இப்பெயர் வழங்குதல் இயல்பு. தேயிலைத் தோட்டம், கரும்புத்தோட்டம், மாந்தோட்டம், தென்னந்தோட்டம் என்ற தொடக்கத்தன பெரும் பயிர்ச்செய்கையுடன் தொடர்புடையன. காய்கறிவகை பயிரிடப்

படும் இடங்களையும் தோட்டம் என்பது யாழ்ப்பாணத்துப் பெரு வழக்கு. புகையிலைத் தோட்டம், வாழைத்தோட்டம், கத்தரித் தோட்டம், மிளகாய்த்தோட்டம், மரவள்ளித்தோட்டம் என்ற தொடக் கத்தன அவை. இத்தோட்டங்களுக்கு உரிமையுடையோர் 'தோட்டக்காரர்' என அழைக்கப்படுவர். தோட்டப் பயிர்ச்செய்கை யற்ற, மக்கட் குடியிருப்புடைய இடங்கள் சில 'தோட்டம்' என்ற ஈற்றுப் பெயருடையனவாகவுள்ளன. அவை பண்டு தோட்டக்காணிகளாக இருந்து, பின்பு மக்கட் குடியிருப்புக்களாக மாறிய இடங்கள் என்பது இத்தால் அறியப்படுகின்றது. அத் தகைய குடியிருப்பிடங்களாகவுள்ள 'தோட்டம்' ஈற்றுப் பெயர்கள் வருமாறு:

கிழவிதோட்டம்	(வடம. தெ. மே.129.3)
கொய்யாத்தோட்டம்	(யாழ்.மா.ந.1-6)
கோவில்தோட்டம்	(நல்.38.3)
சந்தாதோட்டம்	(வடம.வ.கி .137.3)
புதுத்தோட்டம்	(வலி.வ. 65.7)
மாவிலங்கைத்தோட்டம்	(பச்.152.4)
வெள்ளிமனைத்தோட்டம்	(பச்.157.2)

'தோப்பு' ஈற்று இடப்பெயர்கள்

தோப்பு என்பது தொகுப்பு என்பதிலிருந்து திரிந்ததன் வடிவம் என்கிறார் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை (1972:.75). தோப்பு என்பது சோலை, தோட்டம் என்ற பொருளிலும் வழங்கும் பொதுச் சொல்லாகும். சங்கிலியன்தோப்பு என்ற இடமும், தோப்பு என்ற பெயர் கொண்ட மூன்று இடங்களும் (தென்ம. 109.6: வலி.கி. 76.4), (வலி.தெ.59.9), தச்சன்தோப்பு என்ற ஓரிடமும் (தென்ம.91.4) யாழ் மாவட்டத்திற் காணப்படுகின்றன.

'வட்டை' ஈற்று இடப்பெயர்கள்

வட்டை = வழி, சில்லின் மேல்வளைமரம், தேர், புலி யினுடல் வரி, வட்டகை, மலைவட்டை, (த.லெ. 6:3471). மேலும் வட்டை என்பது பெருங்காடு, திக்கு என்ற பொருள் தரும் சொல்லாகும் (த:லெ.சப்ளிமென்ட்:405). தமிழகத்திலுள்ள வட்டம்

ஈற்றுப் பெயர்களும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கன. வயல் என்பது மட்டக்களப்புப் பேச்சுத் தமிழில் வட்டை என வழங்கக் கேட்க லாம். மட்டக்களப்பு வழக்கில் வட்டம்> வட்டை, வட்டை ஆயிற்றா அல்லது வயல் > வட்டை ஆயிற்றா என்பதும், வெளி என்பது வெட்டை > வட்டை ஆயிற்றோ என்பதும் மேலாய்வுக்குரியன.

சுவாமி ஞானப்பிரகாசர் 'வத்தை' பற்றிக் குறிப்பிடும் போது இதன் பொதுவான உச்சரிப்பு 'வத்தை' அல்லது 'வெட்டை' என்று வருமாறு கூறினார். "As to Nichchiya vattai the common pronounciation, I believe is with the affix Veddai, and not Vattei- 1917:47.

இம்மாவட்டத்திலுள்ள 'வட்டை' ஈற்றுப் பெயர்கள்:

குடாவட்டை	(வடம.தெ.மே.130.3)
கேழ்வட்டை	(வலி.வ.62அ.4)
சிறியவட்டை	(வலி.வ.68.3)
சோராவட்டை	(வலி.தெ.59.7)
தம்புவட்டை	(வலி.தெ.62அ.7)
நக்கனாவட்டை	(வலி.வ.71.4)

'வத்தை' ஈற்று இடப்பெயர்கள்

ஈழத்தின் பல பகுதிகளிலும் 'வத்தை' ஈற்றுப்பெயர்கள் மிகவும் பரவலாகக் காணப்படுகின்றன. சிங்களத்தில் இதனை 'வத்த' என எழுதுவர். சொல்லின் புறவடிவத்தையும் அதன் ஒலியமைப்பையும் கருத்திற் கொண்டு வத்தை என்ற தமிழ்ச் சொல்லை சிங்கள மூலச்சொல் எனப் பலர் வாதிடுவர். ஈழத்தில் இற்றைவரை இடப்பெயர் ஆய்வில் ஈடுபட்ட அனைவரும் சிங் களப் பெயர் என்றே இதனை எழுதினர். குறிப்பாக ஹோர்ஸ்போர்க் (1916), S. W. குமாரசுவாமி (1917:1918), சுவாமி ஞானப்பிரகாசர் (1919) முதலியோரை இவ்வரிசையிற் குறிப்பிடலாம். சுவாமி ஞானப்பிரகாசர் இதனைச் சிங்களச் சொல் எனக் கூறியது மட்டுமன்றி, vatta என்பது போர்த்துக்கீசச் சொல் எனவும் அதன் பொருள் வள்ளம் (Bale, boat) என்றும் கூறியமை (1919:75) காண்க.

இவர்கள் காலத்தில் பண்டைத்தமிழர் தம் நாகரீக வரலாறும் அவர்தம் மொழிவளமும் இன்றுள்ள அளவுக்கு ஆய்வாளரின் கருத்தில் எடுபடவில்லை. 'வத்தை' என்பது தூய தமிழ்ப் பெயர் என்பதில் ஐயமே இல்லை. இதனை, சொற் பிறப்பியல், சொற் பொருள், மக்கட் பண்பாடு, வாழ்வியல் அடிப்படை ஆகிய பல வழிகளின் மூலம் நிறுவலாம். வத்தை என்பதற்குத் தமிழில் நீரிற் செல்லும் கட்டுமரம், மக்கட் குடியிருப்பிடம் என்ற பொருட்கள் உள. இதன் அடிச்சொல், சொல்லாக்கநிலை, பொருள்நிலை என்பன பற்றி ஈண்டு விளக்குதல் இன்றியமையாததாகிறது.

I. வறு > வற்று > வத்து > வத்தை. ஈரலிப்புத்தன்மை காய்ந்து வற்றிய மரத்துண்டுகள், நீர்ப்பரப்பைக் கடக்கும் கருவியாகப் பயன்பட்ட போது, அம்மரத்துண்டுகள் (வற்றல்கள்) வத்தை என வழங்கப்பட்டன.

II. வறு > வற்று > வற்றல் > வத்தல் + ஐ = வத்தை. பண்டை நாளில் நிலையான மக்கட் குடியிருப்புகள் நீர் நிலைகளை அண்மித்த ஈரலிப்பான பகுதிகளுக்கு அருகிலேயே அமையலாயின. ஈரலிப்பான பகுதியில் அவர்கள் விவசாயத்தை மேற்கொண்டனர். குடியிருப்புக்குரிய குடிசை, வீடு முதலியவற்றைத் தண்ணீர் பரவாததும், என்றும் காய்ந்ததாக, வற்றலாக இருக்கக் கூடியதுமான மேட்டுப்பகுதிகளில் அமைத்துக் கொண்டனர். எனவே அவர்தம் குடியிருப்புப் பகுதி பெருவெள்ளம் ஏற்பட்ட போதும் விரைவில் வற்றும் பகுதியாக இருந்த படியால் அது காலப்போக்கில் 'வற்றை' என வழங்கி, 'வத்தை' எனத் திரிபடைந்தமை வியப்பில்லை.

III. நீர்ப்பரப்பைக் கடக்கப் பயன்பட்ட வத்தைகள் மலிந்து காணப்பட்ட நிலப்பரப்புப் பகுதி, இருமடி ஆகுபெயராய் வத்தை என்று சுட்டி வழக்குப் பெற்றதென்றும் கொள்வதே மிகப் பொருத்தமானதாகும்.

வத்தை என்ற இப் பழந்தமிழ்ச் சொல் நாகர் மூலம் சிங்கள மொழியில் இடம் பெறலாயிற்று. இக் கருத்தை மொழி

யியலாளர் ஆயின் மேலும் உண்மைகள் பிறக்கவழி ஏற்படலாம். 'வத்தை' என்ற ஈறு தனித்து ஊர்ப்பெயர்களுக்கு மட்டுமன்றி, ஊரின் சிற்றிடங்களிலமைந்த குறிச்சிகளுக்கும் தோட்டங்களுக்கும் பெயராக வழங்குவதாயிற்று.

வயல் > வட்டை > வெட்டை > வத்தை

யாழ்ப்பாணத்து ஊர்ப் பெயர்களில் 'வத்தை' என்ற ஈற்றுப் பெயராக பத்து ஊர்கள் உள. தமிழில் ஊர்ப்பெயர்களின் ஈறாக வயல், வெளி, புலம், கமம் முதலியன கமத்துடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. தமிழகத்து ஊர்ப் பெயர்ப்பட்டியல் முழுவதும் கிடைக்குமாயின் இத்தகைய பெயர்களுடன் ஒப்பிட்டு ஆராயும் போது பயனுள்ள கருத்துக்கள் வெளிவரலாம். மட்டக்களப்புத் தமிழில் வயற் பெயர்களாக 'கோமாரி வட்டை', 'கரைவாகு வட்டை', 'சாளம்பை வட்டை' முதலான பெயர்கள் வழக்கிலுள்ளன. வட்டை > வெட்டை எனத் திரிந்து ஒலிப்பதுமுண்டு.

வட்டை என்பதை ஆங்கிலத்தில் Vattai என்றெழுதினர். இதனைச் சிங்களத்தில் வத்த (Watta) என உச்சரித்தனர். சிங்களத்தில் வத்த = தோட்டம் என்பதைக் குறிப்பதாகும். எனவே தமிழிலுள்ள 'வத்தை' ஈற்று ஊர்ப்பெயர்கள் பண்டைக் காலங்களில் 'வட்டை' என்ற ஈற்றுப் பெயராகவே அமைந்திருந்து, அவை பின்பு 'வத்தை' என மாறிற்று எனக் கூறின் பொருந்துமோ என்பதை அறிஞர்பால் விடுவாம். மேலும் 'வட்டை' என்பது வயலை மட்டுமன்றி, குடியிருப்புக்களையும் மட்டக்களப்பு மாநிலத்தில் சுட்டி நிற்கின்றது என்பதையும் குறிப்பிடுதல் ஈண்டுப் பொருத்தமாகும்.

வட்டம் > வத்தை

பண்டைக் காலங்களில் மக்கட் குடியிருப்புக்கள் வட்டமாக அமைந்திருந்தன. குடிசைகளும் வட்டமாகவே காணப்பட்டன. அவர்கள் வாழ்ந்த இடமும் வட்டம் எனப்பட்டது. காலப்போக்கில் வட்டம் > வத்தை எனவும் மாற்றம் பெற்றிருக்கலாம். இக் கருத்தைச் சான்றுபடுத்தும் வகையில் சுவாமி ஞானப்பிரகாசர் கூற்றுப் பொருத்தமாக அமைவதால் ஈண்டுத்தரப்படுகிறது:

“நம் இலங்கையில் இருந்த பழந் தமிழர்களே சிங்களத்தை ஆக்கிக் கொண்டு தாங்களும் சிங்களர் ஆனார்கள். முந்திய தமிழ்ச் சிங்களர் வைத்த ஊர்ப் பெயர், காணிப்பெயர் களையே நாம் இன்றைக்கும் வழங்கிக் கொண்டு அவற்றைச் சிங்களப் பெயர்கள் என்கிறோம். ஒரு உதாரணம் மாத்திரம்: எத்தனையோ காணிப் பெயர்களின் ஈற்றில் “வத்தை” என வருகிறதன்றோ? வத்தை எனும் சொல், இன்றைக்கும் தஞ் சாவூர் முதலிய சில இடங்களில் வழங்குகின்ற வட்டம் என் பதே. வட்டம் = தோட்டம். இக்காலத்து வளவு (வளைவு அடைப்பு) என்பதும் வட்டமும் பெயரளவில் ஒன்றுதான். வத்தையின் வேலியைச் சிங்களர் வய்ற்ற என்றார்கள். வட்டம், வட்ட, வய்ற்ற, வத்த, வத்தை எனச் சொல் திரிந்து வந்த தைக் காண்க. இவ்வாறே பழந்தமிழ் வட்டம் தமிழ்ச் சிங்களத் தில் வத்தையாகி வந்தது”. (1973:34)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே பெருமளவு வத்தை ஈற்றுப் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றில் கிராமசேவகர் பிரிவின் பகுதிகளாகக் குறிப்பிடப்பட்ட பெயர்கள் வருமாறு:

கலியாவத்தை	(வலி.மே.ப.31.1)
கொற்றாவத்தை	(வடமே.தெ.மே.127.2)
சித்தவத்தை	(வலி.தெ.ப.32.7)
நலியாவத்தை	(வலி.மே.ப.31.3)
பத்தாவத்தை	(வலி.வ.63.2)
மாவத்தை	(வலி.வ.65.6)
வட்டாவத்தை	(வடம.வ.கி.140.6)
வட்டுவத்தை	(வடம.தெ.மே.ப.33.4)
வாதரவத்தை	(பலி.கி.78.2)

‘வயல்’ ஈற்று இடப்பெயர்கள்

வயல் என்பது = கழனி, மருதநிலம், வெளி, வயற்காடு வயற்கரை என்பனவற்றைக் குறிக்கும் சொல்லாகும் (த.லெ:6-3496). வயல் சூழ்ந்த இடங்கள் வயற்பெயரால் வழங்கப்படுவ தாயின. அவ்வகையில் இம் மாவட்டத்தில் கல்வயல் (தென்ம.ப. 21.6), கோவில் வயல் (பச்.152.3), சங்கத்தார் வயல் (பச் 152.5) என்ற மூன்றிடங்களுள. பின்னிரு இடங்களும் வரலாற்றுப்

பின்னணி கொண்டவை. செம்பியன்பற்று, சோரன்பற்றுப் பகுதி களுக்குத் தெற்கே அமைந்துள்ள இவ் வயற் பகுதிகள் சோழர் நிருவாகத்தினால் மானியமாக வழங்கப்பட்ட இடங்கள் போல் தோன்றுகின்றன. கோயிலுக்கும், தமிழ்ப் புலவருக்கும் அளிக்கப் பட்ட மானிய வயற் காணிகளுள்ள இடங்கள் இவையாகலாம்.

கோயில்வயல் மருதநிலத்தூராகும். இதற்கு அண்மை யிலுள்ள இயக்கச்சியில் விஷ்ணுகோயில் உள்ளது. இக் கோயிலுக்கும் வல்லிபுரத்து விஷ்ணுகோயிலுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவ்விரு கோயில்களுக்கும் பண்டைநாளில் இப் பகுதியில் வயல்கள் கொடையாக வழங்கப் பட்டிருக்கலாம். இவ்விடத்தில் கோயிலுக்குரிய வயற்காணிகள் காணப்பட்டமையால், கோயில் வயல் என்பது குடியிருப்பையுஞ் சுட்டுவதாயிற்று.

‘வெட்டி’ ஈற்று இடப்பெயர்கள்

தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் ‘வெட்டிக்குடி’ பற்றிய செய்திகள் வருகின்றன. கோயிலுக்கு நெய் வழங்கும் நிலத்துக் காரர் என அவர்கள் குறிப்பிடப்படுகின்றனர் (S.I.I. Vol.V P.151). ‘வெட்டி’ என்பது கோயில் வரிகளில் ஒன்றாகும் (S.I.I .Vol. Vi11 P.217). சோழப் பெருமன்னர் கால அதிகாரிகள் ‘முகவெட்டி’ என்ற பெயரில் இருந்திருக்கிறார்கள். புதுக்கோட்டை இரகுநாத ராயத் தொண்டைமானின் ஆறு மனைவிமாரில் ஒருத்தி ‘காடு வெட்டியாரின் மகள் வீரத்தா ஆயி’ என்பவளாகும் (சிரஞ்சீவி :1980:47). இங்கு வரும் ‘வெட்டி’ என்ற சொல் ஆராயப்பட வேண்டியதாகும்.

கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் (கி.பி.1249) இருந்த கோயிற் கணக்குகளைக் கவனிக்கும் தணிக்கை அதிகாரிகள் உடையபெருமாள் என்றும், காடுவெட்டிகள் என்றும் பெயர் பெற்றிருந்தனர் (நா. வெங்கடேசன், வரலாற்றில் வில்லியனூர், சென்னை, 1979). இவர்களது பெயரீறாகவுள்ள ‘வெட்டி’ என்ற சொல் கரவெட்டி, அளவெட்டி என்ற ஊர்ப் பெயர்களுடன் காணப்படுவதும் சோழர் கால நிருவாகத்துடனான தொடர்பைக் காட்டுவதாகவுள்ளது.

அளவெட்டி (வலி.வ.62.2)

அள + வெட்டி = அளவெட்டி. அள் = செறிவு, கூர்மை. அள் > அள்ளல் = சேற்றின் குழம்பு. அளறு = நீர், சேறு, மனச்சாந்து (பாட்டுந் தொகையும்:1958:34; சூடாமணி நிகண்டு :105). அளறு + வெளி > அளவெட்டி. வெடி > வெளி (சொற் பொருள் விளக்கம் எனும் அகராதி:1960:283). வெடி > வெட்டி. வெடி என்பதில் இடைநிலை மெய் இரட்டித்து வெட்டியாயிற்று. வெளிநாடு என அழைக்கப்பட்ட பகுதியின் அரசன் வெளிஅரசன் > வெடி அரசன் எனப் பெயர் பெற்றிருத்தலும் ஈண்டு நோக்கற் பாலது. அளவெட்டி வழுக்கையாற்றைச் சார்ந்து பசுமையான ஈரலிப்புப் பகுதியாகக் காணப்படுவதால் இது அளறு + வெடி அல்லது அளறு + வெளியாக இருந்து அளவெட்டியாயிற்று எனக் கொள்வது பொருத்தமாகும்.

கந்தரோடைக்கு வடக்கே அளவெட்டி அமைந்துள்ளது. இதன் குறிச்சிப்பெயர்களாக கிணற்றை அடியாகக் கொண்டு உடையா கிணற்றடி, தென்னா கிணற்றடி, பெரிய கிணற்றடி என்பனவும், தொழிலடிப்படையில் கொல்லர் தோட்டம், தச்சம் புரம், வண்ணாவளவு, தட்டாகடவை, அம்பட்டா வத்தை என்பன வும் அமைந்துள்ளன. மேலும் மாவிளிதிட்டி, இராசமுதலியார் வளவு, விஷபிட்டி, தம்மளை, சீனன் கலட்டி, சாத்தா கலட்டி, கூத்தைச் சீமா, வாரிசீமா (சீமா = எல்லை; சீமா = சீர்மையான நிலம்), அதிரன்புலம், மா புலம், இறால்மடம், தில்லையிட்டி, மாரீட்டி, தேரீட்டி, முல்லைக்கட்டை, நாவல்கட்டை, வெள்ளியம் பத்தை, (வெள்ளி < விளா), சந்திப்புமால் என்பனவும் குறிச்சிப் பெயர்களாக வழங்குகின்றன. ஒல்லாந்தர் காலத்தில் பகலில் ஊர்காவல் செய்யும் படையினர் இரவிற் சந்தித்த இடமே சந்திப் புமால் எனவும் கூறப்படுகிறது.

கரவெட்டி (வடம.தெ.மே.128அ)

இது யாழ்ப்பாணம் + பருத்தித்துறை நெடுஞ்சாலையில் 17 ஆம் மைல்கல்லுக்கு அண்மையில் அமைந்துள்ள பெரிய ஊராகும். 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவர் இங்கு வாழ்ந்த மாப்பாணமுதலியார் மகன் வேலாயுதம்பிள்ளை என்பவர் மீது 'கரவை வேலன் கோவை' என்ற நூலைப் பாடி

யுள்ளார். கரவெட்டியின் தென் எல்லையில் உப்பாறு அமைந் துள்ளது. இவ்வூர் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, நடு என 5 கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதன் உட்பிரிவு களாகக் கரம்பொன், கிழவிதோட்டம், பெரியதோட்டம், செட்டிய தெரு, யார்க்கரு, கட்டைவேலி, கலட்டி, மாத்தனை தெடுத்தனை என்பன அமைந்துள்ளன.

கரவெட்டியின் தெற்கிலும் கிழக்கிலும் நெற்கழனிகள் பல உள்ளன. களனிகளும் குடியிருப்புகளும் வெள்ளப் பெருக் கால் பாதிக்கப்படாதிருக்க, அதன் கரையிலிருந்த பெரிய மணற் குன்றை வெட்டி ஊரைக் காத்தமையால் கரைவெட்டி > கர வெட்டி எனக் காரணப்பெயர் இவ்வூருக்கு ஏற்படுவதாயிற்று (மு.கந்தப்பு ஆசிரியர். தினகரன். 22.6.1959). கரவெட்டியின் எல்லைப்புற வயல் வெளிகளை அடுத்துள்ள பகுதிகளில் இப் போதும் வெட்டிக் கட்டப்பட்ட மண் வரம்புகள் பெரிதாகக் காணப்படுகின்றன (தகவல்: சி.சி.ஆனந்தம், கரவெட்டி). திரு நெல்வேலி மாவட்டத்தில் காடுவெட்டி, பள்ளக் கரவெட்டி என்ற இரு ஊர்ப் பெயர்கள் உள்ளமையும் ஈண்டு நோக்கற்பாலது.

வல்வெட்டி (வடம.தெ.மே.124.2)

இது வல்வெட்டித்துறைக்குத் தெற்கெல்லையில் அமைந் துள்ள இடமாகும். வல் + வெட்டி = வல்வெட்டி. இவ்விடப் பெயர் தொடர்பாகப் பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன:

I வல் + ஈட்டி: தையீட்டி, போரீட்டி என்பன போன்று வல்ஈட்டி நாட்டப்பட்டுக் காவல் புரிந்த இடம் வல்ஈட்டி என அழைக்கப் பட்டது. அது வழக்கில் வல்லூட்டி என்றாகிப், பின்னர் திரிந்து வல்வெட்டி ஆயிற்று. சிலர் இதனை வல்லூட்டி என வழங்கக் கேட்கலாம்.

II வல்லித்தேவன் (வல்வெட்டித்துறை பெயர் விளக்கம் பார்க்க. பக்.82) என்ற தலைவனின் ஆடு, மாடுகள் பட்டிகளாக (கூட்ட மாக) மேய்ந்த இடம் (வல்லி பட்டி) 'வல்லிபட்டி' என வழங் கிற்று. பின்பு வல்லிபட்டி > வல்வெட்டி ஆயிற்றென்றும் கூறுப.

III இப்பகுதி முன்பு வலிய காடாக இருந்தமையால் வலிமை கொண்டு வெட்டிக் காடழித்துக் களனிகள், குடிமனைகள் முதலியவற்றை ஆக்கினர். அதனால் (வலிமை வெட்டி) தொழில் அடிப்படையில் இவ்விடம் வல்வெட்டி எனப் பெயர் பெறுவதாயிற்று.

இதன் குறிச்சிப் பெயர்களாகவும் காணிப் பெயர் களாகவும் வரும் பெயர்கள் சில வருமாறு: மாடந்தை, பரியாரி வளவு, சீனன் தோட்டம், சீனட்டி, வேவில், சேகண்டி, செம்பியாடு, செம்பாடு, பற்றிய வத்தை, பழவத்தை, ஒல்லை நெய்யம்பலம், கொத்தன் கலட்டி, கட்டியந்துறை, தெல்லுழுவை, மாவத்தை, முதலியனவாம் (தகவல்: சி. செல்லத்துரை. வல்வெட்டி). வேவில் என்ற பகுதியில் பிள்ளையார் கோயிலும் குளமும் உள்ளன. மாடந்தைப் பிள்ளையார் கோயில், கட்டியந்துறை வன்னிச் சியம்மன் கோயில், கடுக்காய் வயிரவர் கோயில் முதலிய கோயில்களும் இங்கு அமைந்துள்ளன. 1871ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டு அறிக்கையில் இவ்வூர் 'வல்லுவெட்டி' என்றே குறிப்பிடப்பட்டுள்ளமை காண்க.

'வெளி' ஈற்று இடப்பெயர்கள்

வெளி = புறம், மைதானம், ஆகாயம்; வெளிக்கால் = நீர் வெளியேறிச் செல்லும் வாய்க்கால் (த.லெ.6:3806). இங்கு வெளி என்பது பரந்த இடம், வயல் சூழ்ந்த இடம் என்ற பொருள்களில் வந்துளது. சங்க காலத்திலும் 'வெளி' ஈற்றுப் பெயர்களாக எருமைவெளி, வீரைவெளி என்ற ஊர்ப் பெயர்கள் இருந்திருக்கின்றன. மட்டக்களப்புப் பேச்சு வழக்கில் வெளி என்பது வயல் நிலத்தையுஞ் சுட்டுஞ் சொல்லாகும். வெளியீற்றுப் பெயர்களாக இம் மாவட்டத்தில் 5 இடங்களுள. அவை வயலும் வயல்சார்ந்த இடங்களுமாகக் காணப்படுகின்றன.

கச்சர்வெளி (பச்.159.1)

சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் பச்சிலைப்பள்ளி பகுதியில் கச்சூர் வேளாளர் வந்து குடியேறியதாகக் கூறப்படு கின்றது (க.வேலுப்பிள்ளை:1918: 14). பச்சிலைப்பள்ளி உதவி

அரச அதிபர் பிரிவிலேயே கச்சர்வெளி என்ற ஊர் அமைந் துள்ளது. எனவே கச்சூர் மக்கள் இங்கு வந்து குடியேறிய இடம் கச்சர் வெளியாக இருக்குமோ என மேலாய்தல் பொருந் தும்.

கும்பாவெளி (தென்ம.118.2)

இது மந்துவில் பகுதியில் அமைந்துள்ள ஓரிடமாகும். இங்கு வயல்வெளிகள் பரந்து காணப்படும் நிலையில் (கும்பல் = நிறைவு, வெளி = வயல்நிலம்) கும்பல் + வெளி > கும்பா வெளி எனப் பெயர் பெறுவதாயிற்று.

சம்பாவெளி (தென்ம.107.8)

இது தென்மராட்சியிலுள்ள உசன் பகுதியிலுள்ள மருத நிலத்தூராகும். சம்பா = ஒரு வகை நெல். சம்பாநெல் விளையும் வயல் சூழ்ந்த பகுதி சம்பாவெளி எனப்பெயர் பெறுதல் இயல்பே.

செட்டியாவெளி (தென்ம.106.2)

செட்டியார் + வெளி > செட்டியாவெளி. இது கொடிகாமம் பகுதியிலுள்ள வயலூர். இது செட்டியாருக்கு உரிமையாக இருந்த போது செட்டியாவெளி எனப்பெயர் பெற்றது.

பொன்னாவெளி (பூ:175.4)

பொன் + ஆ + வெளி > பொன்னாவெளி. பசுமந்தைகள் மேயும் புல்வெளிகள் நிறைந்த இடம் என விளக்கம் கூறப்படு கிறது. பல்லவராயன்கட்டு என்ற இடத்திலிருந்து வடமேற்கே செல்லும் தெருவின் இறுதியிலுள்ள ஊர் பொன்னாவெளியாகும். இதன் வடக்கே பாலாவி என்ற ஊர் அமைந்துள்ளது. இப் பகுதியின் பூர்வீகக் குடியிருப்பிடம் பொன்னவெளி எனவும், இவ்விடத்திலிருந்தவர்களே இதன் சுற்றாடற் பகுதியின் 'மணிய காரர்', 'விதானைமார்' ஆகவும் கடமையாற்றி இருக்கிறார்கள் எனவும் அறியப்படுகிறது. (தகவல்: நீலகண்டர் கந்தசாமி, பொன் னாவெளி.)

வளமான வயற் காணிகள் உள்ள இடம் என்பதால் பொன் + வெளி > என்றிருந்து பொன்னாவெளியாகவும் பெயர் மருவியிருக்கலாம். பொன்னாவெளிப் பகுதியிற் கிராஞ்குடா, ஈச்சினாவெளி, வேரவில் முதலான இடப்பெயர்களும் காணப் படுகின்றன. இங்கு பறையகாடு என்ற வயற்பகுதியுமுள்ளது. இங்கு பழைய கண்ணகி கோயில், சித்திவிநாயகர்கோயில், சிவன்கோயில், ஐயனார்கோயில் என்பனவும் உள்ளன. கந்த புராணத்திலே 'சுவர்ணாதரை' என வருந் தொடர் பொன்னாவெளி என்பதுடன் தொடர்புடையதா என்பது மேலாய்வுக்குரியதாம். தமிழர் தம் சைவப் பழம்பதியாகப் பொன்னாவெளி திகழ்கிறது.

இயல் ஆறு

குடியிருப்பு நிலை இடப்பெயர்கள்

மக்கட் குடியிருப்புக்களையும், அவர்கள் நடமாடும் ஏனைய பகுதிகளையும் சுட்டும் இடப்பெயர்கள் தனிச்சிறப்பும், பொரு ளாழமும் கொண்டவை. மக்கள் குடிமனை அமைத்து வாழும் பகுதிகள் மொழி, பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டனவாய், வரலாற்றுப் பின்னணியுள்ள பெயர்களைப் பெற் றுள்ளன. இப் பெயர்கள் அவர் தம் பண்டைச் சிறப்பை, வர லாற்று நிகழ்வுகளை, சமய நடவடிக்கைகளை எடுத்தியம்புவன வாகக் காணப்படுகின்றன.

தென்னிந்தியாவிலே தமிழர் வாழும் குடியிருப்புப் பகுதி களிலேயுள்ள இடப்பெயர் ஈறுகளுக்கும் இங்குள்ள இடப்பெயர் களின் ஈறுகளுக்குமிடையே சில ஒற்றுமைகள் காணப்படினும், மொழிக் கூறுகளின் அடிப்படையில் வேறுபாடுகள் இருப்பதை இப் பெயர்கள் காட்டுகின்றன. இது ஓரிடத்து மக்களது மொழி, சூழல், பண்பாட்டுநிலை ஆகியவற்றின் சிறப்பியல்புகளைக் குறிப் பிடுவதாக அமைகிறது. இவ்வகையில் ஒப்பீட்டு ஆய்வு மேற் கொள்ளப்படுமிடத்து மொழி, பண்பாட்டுக் கூறுகள் பற்றிய பல்வேறு உண்மைகளை அறிந்துகொள்ள வாய்ப்புண்டு. யாழ்ப் பாண மாவட்டத்தில் குடியிருப்புநிலையில் ஆக்கம் பெற்ற இடப் பெயர்க் கூறுகளை வருமாறு வரிசைப்படுத்தலாம்:

அகம்	கூடல்	பாய்
ஆலை	சேரி	புலம்
இட்டி	பண்ணை	பை
ஊர்	பள்ளி	மடம்
குடியிருப்பு	பளை	வாய்
குறிச்சி		

இப் பெயர் ஈறுகளைத் தன்னகத்தே கொண்டனவாக எவ்வாறு இடப்பெயர்கள் ஆக்கம் பெற்றுள்ளன. அவற்றிலிருந்து அறியப்படும் சமூக, வரலாற்று, பண்பாட்டு விடயங்கள் எவை என்பன பற்றி இவ்வியலில் ஆராயப்படுகின்றது.

'அகம்' ஈற்று இடப்பெயர்கள்

அகம் என்பது பழந்தமிழ்ச் சொல்லாகும். அகம் = இடம், வீடு, உள்ளிடம், மனம், மார்பு, மலை, ஆசௌசம், பாவம், மாசு, தானியம், நாள், பூமி, விலாசம், ஆகாயம், ஆழம், ஒரு வகை மரம், பாம்பு, ஏழாம் வேற்றுமையுருபு (தமிழகராதி:2). இத்தகு பொருள் விளக்கம் கொண்ட 'அகம்' என்ற சொல்லைப் பெயர் ஈறாகக் கொண்டு தமிழகத்தில் ஏடகம், கல்லகம், வையகம், திருஏரகம், மருதகம் முதலிய ஊர்ப் பெயர்கள் வழக்கிலுள்ளன. அவ்வாறே யாழ்ப்பாண மாவட்டத் திலும் கரம்பகம், கல்லாகம், சுன்னாகம், பண்ணாகம், மல்லாகம் முதலிய இடப்பெயர்கள் ஆக்கம் பெற்று வழங்கி வருகின்றன.

அகம் என்ற சொல் முதலில் வீட்டிற்கு அமைந்து, அப் பால் வீடுகளையுடைய நகரைக் குறித்தது போலும் என்கிறார் ரா.பி சேதுப்பிள்ளை (1976:57). இவ்வாறு மொழி, பண்பாடு அடிப்படையில் தமிழ் விளக்கங்களைக் கொண்டுள்ள 'அகம்' ஈற்று இடப்பெயர்கள் யாவும் சிங்களப் பெயர்களின் திரிபு எனக் குமாரசுவாமி (1917: 27, 1928:158), ஹோர்ஸ்பேர்க் (Hers burgh:1916:55) முதலியோர் விளக்கமின்றி எழுதலாயினர். அவர் களது கருத்துக்கள் இவ்விடப் பெயர்களின் சொற்பிறப்பு, சொற் பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் பொருத்தமற்றவை என் பது இவ்வியலில் நிறுவப்பட்டுள்ளமை காண்க.

கரம்பகம் (தென்ம.107.2)

கரம்பு + அகம் = கரம்பகம். இது தென்மராட்சி - உசன் பகுதியிலுள்ள ஓரிடம். கரம்பு என்பது சாகுபடி செய்யாத நிலத்தைக் குறிக்கும் சொல். கரம்பை என்பது வண்டல் பரந்த பூமி, வரண்ட களிமண் நிலம் எனப் பொருள்படும். இதனை 'இரு நிலக்கரம்பைப் படுநீறாடி' எனவரும் பெரும்பாணாற்றுப் படை (93ஆம் வரி) பாடல் வரியும் சான்றுபடுத்தும். தரிசுநிலம் என்ற பொருளில் 'விடுநிலக் கரம்பை விடரளை நிறைய' என வரும் பதிற்றுப்பத்து 28ம் பாடல் சான்றாகின்றது. எனவே கரம்பை என்பது இலக்கிய வழக்குடைய பழந்தமிழ்ச் சொல லென்பதும், கரம்பை + அகம் > கரம்பகம் என இடப்பெயரா யிற்று என்பதும் தெளிவாகின்றன. மேலும் கரம்பு = வாற் கோதுமைக் கூழ் என்றும், அது திராவிடச்சொல் என்றும் தாவீது அடிகள் கூறுவர் (1970:12).

இவ்வாறு பொருள் செறிந்ததாக இப்பெயர் அமைய 'கரம்பகம்' என்பதற்குப் பொருளே இல்லையென்று ஹோர்ஸ்பேர்க் (Hersburgh-1916:55) கூறிய கருத்தும், இது, சிங்களப்பெயர் எனக் கூறிய குமாரசுவாமியின் (1917:27) கூற்றும் மறுதலிக்கப் பட்டு, இது தமிழ்ப் பெயரே என்பது தெளிவாயிற்று.

சின்னக்கரம்பகம் (தென்ம.107.9)

சின்ன + கரம்பகம் = சின்னக்கரம்பகம். இவ்விடம் கரம் பகத்துக்கு அண்மையில் அமைந்திருப்பதால் இதனைக் கரம்பகம் என்ற இடப்பெயரிலிருந்து பிரித்துக்காட்டச் சின்னக்கரம்பகம் என்றனர்.

சுன்னாகம் (வலி.தெ.ப.32)

சுல் + நாகம் = சுன்னாகம். சுல் + நாகம் என்பதில், சுல் > சுல்லு = வெள்ளி, வெள்ளை எனவும்; நாகம் = மலை, கற்பாறை எனவும் சொற்பொருள் தருதல் நோக்கற்பாலது. சுன்னாகம் பகுதியில் வெள்ளைக் கற்பாறை செறிந்து காணப் பட்டமையால் நிலவியல்பு குறித்துப் பண்டைத் தமிழர் இவ் விடத்துக்குச் சுன்னாகம் எனப் பெயர் வழங்கியிருத்தல் இயல் பானதே. இப் பெயரைச் சுண்ணாகம் என எழுதுவதுமுண்டு. அவ்வாறாயின் சுன்னம் > சுண்ணம் + அகம் = சுண்ணாகம் எனப் பெயர்த் தோற்றம் அமைந்திருக்கலாம். சுண்ணக் கற் களுள்ள இடம் என்பது இதன் பொருளாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து 6 மைல் தொலைவில் வடபால் சுன்னாகம் அமைந்துள்ளது. இது பட்டினசபை ஆட்சிமன்றம், நவீன சந்தை, பேருந்துநிலையம், தொடர்வண்டி நிலையம் முதலான பல வசதிகளும் அமைந்துள்ள ஒரு நகரமாகும். யாழ்ப்பாணம் + காங்கேசன்துறை, சுன்னாகம் + அளவெட்டி ஆகிய பெருந்தெருக்கள் ஒன்றிணையும் ஒரு நடு நிலையமாகச் சுன்னாகம் விளங்குகிறது. கந்தரோடை என்னும் பழம்பதிக்கு அண்மையில் சுன்னாகம் அமைந்திருப்பதும், இங்கு பழைமை மிக்க கதிரைமலைச் சிவன்கோயில் (கதிரைமலை = கந்த ரோடை) இருப்பதும் இப் பகுதியின் வரலாற்றுப் பழைமையைக்

குறிக்கின்றன. இக் கோயில் ஊரின் நடுவே அமைய, அதைச் சூழக் குடியிருப்புக்களும் அவற்றின் எல்லைகளில் காவல் தெய் வங்களின் கோயில்களும் காணப்படுதல் பண்டைக் குடியிருப்பிட அமைப்பு முறையை நினைவூட்டுகின்றன.

இதன் குறிச்சிப் பெயர்களாகச் சூழானை, மயிலணி, கோட்டைக்காடு, அம்பனை, கொத்தியாவத்தை, பருத்திக்கலட்டி, குறிஞ்சாத்தீவு, கல்லாக்கட்டுவன் என்பனவுள்ளன. செங்கற் சூளைகள் அல்லது சுண்ணாம்புக் கற்கள் நிறைந்திருந்த இடம் என்ற பொருளில் சூழானை என்ற பெயரேற்பட்டிருக்கலாம். மாவிட்டபுரத்துக் கந்தசுவாமி கோவிலுக்குரிய மயில்கள் வளர்க் கப்பட்ட இடம் மயிலணி எனப்பட்டது என்கிறார் சுன்னாகம் தி. சரவணபவசதாசிவம். இவ்விடத்தில் முருகன் கோயிலும், சிவன் கோயிலும் அருகருகே காணப்படுகின்றன. கந்தரோடைக் காலத்து அரசர்களின் அரண்மனை அல்லது ஒல்லாந்தரின் கோட்டை இருந்து அழிந்த இடம் கோட்டைக்காடு எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

நாட்டார் நம்பிக்கையின் அடிப்படையில் கழிப்புச் சடங்கு கொத்திப்பேயின் பெயரில் நடத்தப்படுதல் வழக்கம். கொத்திப் பேய்க்குக் கழிப்புச்செய்யும் இடம் கொத்தியாமூலை எனப்படும். அது நாளடைவில் கொத்தியாவத்தை எனப் பெயர்பெற்றது என்கிறார் கே.ஆறுமுகம் (K.Arumugam:239). வாரிக்கலட்டி என் னும் இடத்தில் பெரியஐயனார் கோயில் அமைந்துள்ளது. இது நெல் வயலும் தோட்டங்களும் செறிந்த பகுதியாகக் காணப்படு கின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் சுன்னாகத்தில் மிகச் சிறந்த குடிநீர் பெறப்படுகிறது. சுன்னாகத்தின் கிழக்கெல்லையில் 'பொக் கணை' என்னும் ஆழக் கிணறும் (Tidal Well) அமைந்துள்ளது.

ஒல்லாந்தர் காலத்திலே சுன்னாகம் பெருஞ்சந்தையாக விளங்கியிருக்க வேண்டும் என்பதை நாட்டார் பாடற் செய்தி ஒன்று அறியத் தருகின்றது.

சுன்னாகச் சந்தையிலே - பறங்கி
சுங்கானைப் போட்டுவிட்டான்
பார்த்தெடுத்தவர்க்குப் - பறங்கி
பாதிச்சுங்கான் கொடுப்பான்

ஒல்லாந்தர் காலத்துப் பழங்கதை களும் நிகழ்வுகளும் மக்கள் மனதை விட்டகலாக் காட்சியாக நிலவியமையைப் பின் வரும் நாட்டார்பாடல் உணர்த்துதல் காண்க.

மாட்டிறச்சியாம் - பறங்கிக்கு
மாடுமிறங்காதாம்
சுட்டகருவாடாம் - பறங்கிக்குச்
சோறுமிறங்காதாம்.

பண்ணாகம் (வலி.மே.50அ.4)

பண்ணர் + அகம் > பண்ணாகம். கோயில்களில் பண்ணிசை பாடுவோர் பண்டாரம் எனப்படுவர். மேலும், கோயி லில் இசைக் கருவிகளை முழக்குதல், திருவெம்பாவைக் காலங் களில் ஊர் வீதி வழியே பாடிச்செல்லுதல் முதலியன அவர்கள் கடமையாக இருந்தன. எனவே தொழிலை அடிப்படையாகக் கொண்டு பண்பாடுவோர் வாழுமிடம் பண்ணாகம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

"பண்புடையார் பட்டுண்டு உலகு" என்பதற்கமைய இங்கு வாழ்ந்தோர் பண்புடையோராய்க் காணப்பட்டமையால் இப்பதி பண்ணாகம் ஆயிற்று என்பாரும் உளர். பண்டு முதல் இவ்வூர் ஆலங்காடு என அழைக்கப்பட்டதென்றும், பின்பே இது பண்ணாகம் எனப் பெயர் பெறுவதாயிற்று என்பதும் கள ஆய்வில் அறியப்பட்டன. இங்கு விசுவத்தனை, மின்னியத்தனை, தேரியத்தனை, வடகம்பரை என்ற குறிச்சிப் பெயர்களுள்ளன. விசுவத்தனையில் முருகமூர்த்தி கோயில் உள்ளது. இக் கோயில் மீது பாடப்பட்ட 'முருகன் பிள்ளைத் தமிழ்' பாடல் ஒன்றில் கற் பனை அடிப்படையில் இவ்விடப் பெயர்த் தோற்றம் வருமாறு கூறப்படுதல் காண்க:

"பலவாம் உலகும் நொடிப்போழ்தில் படைத்த பிரமன் சிந்தித்துப்
பன்னாள் முயன்று பன்னியதால் பண்ணாகம் பேர்பெறுபதி"
(தகவல்: பண்டிதர், இ. ஆறுமுகம், பண்ணாகம்)

இதன் எல்லையில் பனிப்புலம் என்ற இடம் அமைந் துள்ளது. அப்பால் காட்டுப்புலம் உள்ளது. இந்நிலையில் இவ் வூரில் பாம்புகளின் நடமாட்டம் பெரிதும் காணப்பட்ட நிலையில்

இப் பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம். பன்னகம் = பாம்பு (தமிழகராதி: 211). எனவே இதனைக் காரணமாகக் கொண்டு, பன்னகம் > பன்னாகம் > பண்ணாகம் எனத் திரிபடைந்தும் இப்பெயர் வழங்கியிருக்கலாம். மேலும், பன்னம் = ஓலை முடைகை; பன்னவேலை = ஓலை முடைதல் தொழில்; பன்னா கம் = தென்னந்தட்டி (பன்னாங்கு). இப் பின்னணியிலும் பன்னா கம் என்ற பெயர் தோன்றியிருக்கக்கூடிய வாய்ப்பும் உண்டு.

மல்லாகம் (வலி.வ.61.4)

மல்லர் + அகம் = மல்லாகம். யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் சுன்னாகத்துக்கு வடக்காக இவ்விடம் அமைந் துள்ளது. மல்லர்கள் குடியிருந்த இடம் என்பது இப் பெயர்ப் பொருளாகும். தோட்டக்காணிகள் செறிந்த செம்பாட்டு நிலப்பகுதி யாக மல்லாகம் விளங்குகிறது. இங்கு ஆங்கிலேயர் காலம் முதலாக மாவட்ட நீதிமன்றமும் இயங்கிவருகிறது. இங்குள்ள சோழியங்கட்டை என்ற குறிச்சிப் பெயர் சோழர் காலத் தொடர் பைக் காட்டுகின்றது.

'ஆலை' ஈற்று இடப்பெயர்கள்

'ஆலை' என்பது = சாலை, நீர்இறைக்கும் பொறி, நீர் வழிந்தோடும் சிறுவாய்க்கால், மழைநீர் வழிந்தோடும் பள்ளநிலம், ஆலயம், சோலை என்ற பல்வேறு பொருள் நிலையில் இடப் பெயர் ஈறாக அமைந்த 12 இடங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளன. அவை முறையே அரியாலை, இளவாலை, ஏழாலை, சரசாலை, சில்லாலை, தம்பாலை, தாவளை இயற்றாலை, துன்னாலை, பன்னாலை, பேராலை, பொன்னாலை, மீசாலை என்பனவாம். இவற்றைவிட மன்னார் மாவட்டத்தில் பேசாலை, வங்காலை முதலான இடப்பெயர்களும், தென்னிலங்கையில் கேகாலை, தங்காலை என்ற இடப்பெயர்களும் வழக்கிலுள்ளன.

சுவாமி ஞானப்பிரகாசர் (1917) 'ஆல' என்பது குளங்களி லிருந்து நீர் கொண்டு செல்லும் பண்டைய வாய்க்கால்களைச் சுட்டும் சொல் என்கிறார். இவர் கருத்தை ஏற்ற வெ.சு. நடராசா

"சுடர்"(ஆவணி 197 6:15) என்னும் இதழில் எழுதிய கட்டுரை யொன்றிற் கால்வாய்கள் பொருந்திய நிலையில் ஊர்ப் பெயர்கள் ஆக்கம் பெற்றன என்பது பொருந்தும் எனக் கூறினார். ஆனால் மேற்குறிப்பிட்ட ஊர்களில் பெருங்கால்வாய்கள் இருந்தன என்ப தற்கு எவ்வித தடையங்களும் இல்லை. எனவே 'ஆலை' என்பது எந்த அடிப்படையில் பெயரீறு பெற்றதென்பது ஆய்வுக்குரியதா கிறது.

ஆலயங்கள் இருந்த இடம் என்ற நிலையில் 'ஆலை' ஈற்று இடப்பெயர்கள் ஏற்பட்டன என்று பொதுமக்கள் கருதுவர். இக் கருத்து ஏழு ஆலையங்கள் அமைந்துள்ள ஏழாலைக்கும், பொன் மயமான விஷ்ணு ஆலயம் அமைந்திருந்த பொன்னா லைக்கும் பொருந்தலாம். ஆனால் ஏனைய 'ஆலை' ஈற்று ஊர்ப்பெயர்கள் இவ் விளக்கத்திற்குப் புறம்பாகவே அமைகின் றன. 'ஆலை' ஈற்று இடப்பெயர்கள் பற்றி எழுதிய சுவாமி ஞானப்பிரகாசர் (1917:168) "இவ்வீற்றுப் பெயரின சிங்களப் பெயர்களேயாம்" என்றார். அவரது கருத்தை மறுத்து லூயிஸ் (J.P Lewis: 1917:170) இவை தமிழ்ப் பெயர்கள் என்பதில் ஐய மில்லை என எழுதினார். குமாரசுவாமி (1918:52) 'ஆல' என்பது சிங்களச் சொல் என்றும், அது சிற்றாறு, ஆறு, குளத்திலிருந்து வயலுக்குத் தண்ணீர் கொண்டு போகும் வாய்க்கால் எனப் பொருள்தரும் எனவும் குறிப்பிட்டார். ஆயினும் 'ஆலை' என்பது தூய தமிழ்ச் சொல் எனக் கொள்வதில் ஏதும் தடையிருப்பதாக எமக்குத் தோன்றவில்லை.

தென்னிந்தியாவிலே துளு நாட்டிலும் 'ஆல' என்ற ஈற்றுப் இடப்பெயர்கள் வழக்கிலுள்ளன. இது பற்றி ஆராய்ந்த இரகுபதி கெம்தூர், துளு நாட்டு இடப்பெயர்களிலும் 'ஆல' என்பது தண்ணீர் என்ற நிலையிற் பெயர்த் தோற்றம் பெற்றதெனக்கூறுவர்:

> "Aala": This must not be taken as a most common hydronym i.e., aal (water,river etc.) prevailing in all the main Dravidian languages". (Raghupati Kemtur:1980:50).

மேலும், கர்நாடக மாவட்டத்தில் வழக்கிலுள்ள இடப்பெயர்களில் இடம்பெறும் 'ஆல' (Haala, Vaala, Aala) என்ற ஈற்றுப் பெயருக்குத் தரிசுநிலம் (fallow land) என்ற பொருளும் உண்டு என்கிறார் இரகுபதி கெம்தூர் (மேலது:1980 :65). எனவே ஆல > ஆலை

என்பது திராவிடச் சொல் என்பது உறுதியாகின்றது. தமிழகத்தில் தென்னார்க்காட்டு மாவட்டத்தில் 'பூராலை' எனவும், மதுரை மாவட்டத்தில் 'சித்தாலை' எனவும் இத்தகு இடப்பெயர்கள் வழக்கில் இருத்தலும் காண்க.

மேலும், 'ஆலை' என்பது ஆலமரம் எனவும் பொருள் தருகின்றது. ஆலம் = என்பது தமிழில் விசாலம், அகலம், ஆலமரம் என்பதாகும். கன்னடத்திலும் 'ஆல' என்பது ஆலமரம் (Banyan tree) என்ற பொருளில் வழங்குகிறது. மலையாளத்திலும் 'ஆலம்' என்பது இதே பொருளில் வழங்குகிறது. கன்னடம், குடகு, கோண்டு மொழிகளில் வரும் 'ஆலெ', 'ஆலி', 'ஆலீ' என்பவற்றை ஆராய்ந்து நோக்கினால் தமிழ்த் தொடர்ச்சொற் களில் வரும் 'ஆலை' ஆலமரத்தையே குறிக்குமெனக் கொள்ளப் போதிய சான்றுகளுண்டு. இக் கருத்தை உறுதிப்படுத்தும் வகை யில் தாவீது அடிகள் வருமாறு விளக்குகின்றார்:

> 'இவ்வூர்ப் பெயர்களை மாந்தர் எங்ஙனம் உச்சரிக்கின்றனர் எனக் கவனியுமின்: புன்னாலெ, சரசாலெ, வங்காலெ" என்றல் லவா உச்சரிக்கின்றனர். இந்த "ஆல" என்பதற்கும் ஆலமரத் தைக் குறிக்கும் கன்னட "ஆலெ" என்பதற்கும் எவ்வித வேறு பாடுமின்று. ஆனதினாலே தமிழினம் இச் சொல் இக் கருத்தில் மாந்தரின் சாமான்ய வழக்கில் வழங்கப்பட்டதெனக் கொள்வதே சால்புடைத்தெனக் கொள்மின். (தாவீது அடிகள் 1971:56-57)

எனவே ஆல, ஆலை என்பன திராவிடச் சொற்கள் என்பது நிறுவப்படுவதாயிற்று. மேற்காட்டிய சான்றுகளால் சுவாமி ஞானப்பிரகாசர், குமாரசுவாமி முதலியோர் கூறியவாறு இது சிங்களச் சொல் அல்ல என்பதும், இஃது தூய திராவிடத் தமிழ்ச்சொல் என்பதும் நிறுவப்படுகிறது. துன்னாலை, ஏழாலை முதலிய இடங்களில் ஆலமரங்கள் முன்னர் செறிந்திருந்ததாகக் கூறப்படுகின்றமையும் நோக்கத்தக்கதே.

'ஆலை' என்பதற்குப் பொறிகள் பொருத்தப்பட்ட சாலை என்ற பொருள்நிலையில் இடப்பெயர்கள் தோற்றம் பெற்றுள்ள னவா என ஆராய்தல் பொருத்தமாகும். இவ்வகையில் மரவேலை செய்யப்பட்ட இடம் அரியாலை எனவும்; பொன்னகை செய்யப் பட்ட இடங்கள் பொன்னாலை, புன்னாலைக்கட்டுவான், பன் னாலை எனவும்; துன்னர் ஆலைகள் இருந்த இடம் அல்லது

நுண்ணிய தொழில் மேற்கொள்ளப்பட்ட இடம் துன்னாலை (நுண் ணாலை) என்றும், தனி நபருக்குரிய ஆலைகள் ஆட்பெயர் பெற்றுச் சரசாலை, தம்பாலை எனவும், ஆலைகளின் இயல்பு நோக்கி இளவாலை, ஏழாலை, சில்லாலை எனவும் பெயர் பெற்றன எனவும் கூறலாம். ஆயினும் இப்பெயர்கள் பற்றித் தனித்தனியாக ஆராயும்போது வெவ்வேறு மூலங்களும் காரணங் களும் இவற்றுக்கு அடிப்படையாக அமையும் தன்மையினையும் கண்டு கொள்ளலாம்.

அரியாலை (நல்: **23.3**)

அரி + ஆலை = அரியாலை. நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில், யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஒரு பிரிவாக அரியாலை அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ் சாலை இதனூடாகச் செல்கிறது. அரி > அரிதல். இங்கு முன்பு மரமரிவோர் பெரிதும் வாழ்ந்திருக்கலாம். அதன் தொடர்ச்சியாக இன்றும் மரம் அரியும் ஆலைகள் சில அரியாலையிற் காணப்படு கின்றன. எனவே தொழிலை அடிப்படையாகக் கொண்ட ஆலை ஈற்றுப் பெயராக இவ்வூர் ஆக்கம் பெற்றுள்ளமை பெறப்படுகிறது.

அரியாலை என்ற பெயர் எப்படி வந்தது? என்பது பற்றி இன்னும் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமைகள் இருக்கவே செய்கின்றன. அரி + ஆலயம் > அரியாலை என வழங்கிற்று என்று கூறுவர். தொடக்கத்தில் இங்கு விஷ்ணு ஆலயம் இருந் திருக்குமா என ஆராய்தல் பயன்தருவதாகும். அரியாலை முனை யிலுள்ள கோயிலிலிருந்தே இந்த ஊர்ப்பெயர் பிறந்தது என்ப தைப் பலர் ஏற்றுக் கொள்கின்றனர். கொழும்புத்துறைக் கடலும் அரியாலைக் கடலும் இணையும் அரியாலை முனைக்கருகாமை யில் பழைமை மிக்க பிள்ளையார் கோயிலொன்றுண்டு. அக் கோயிற் கருவறையில் இப்பொழுது விக்னேஸ்வரனின் கற்சிலை யும், வடமேற்கு முனையிலுள்ள சிறுகோயிலில் விஷ்ணு சிலை யும் இருக்கின்றன. ஆனால் சில காலத்திற்கு முன்பு கருவறை யில் விஷ்ணுவின் உருவச்சிலையே இருந்தது. வைஷ்ணவம் அருகி சைவந் தலையெடுத்ததால் இவ்வித மாற்றம் ஏற்பட்டது என்ற செய்தி தினகரனில் (22.06.1959) வெளியிடப்பட்டிருந்தமை ஈண்டு நோக்கத்தக்கதாகும். விஷ்ணுவிற்கு ஹரி > அரி என்ற பெயருமுண்டு. இங்கு விஷ்ணு ஆலயம் இருந்தமையால் அவ்

விடம் அரிஆலயம் என்று முதலில் வழங்கியிருக்கலாம். புணர்ச்சி இலக்கண விதிப்படி அரி + ஆலயம் > அரியாலயம் ஆக வழங்கி, காலப்போக்கில் அரியாலையம் எனத் திரிபடைந்து, பின்பு பேச்சு வழக்கில் சொல்லின் இறுதியிலுள்ள "அம்" மறைந்து அரியாலை என்றாயிற்று எனக் கூறினும் பொருந்தும்.

அரியாலை கிழக்கில் ஐயனார் கோயிலமைந்துள்ளது. அப் பகுதியில் பூம்புகார் என்ற பெயருடைய குடியிருப்புத் திட்டம் 1977 இல் இடம்பெற்ற தமிழ் சிங்கள இனக் கலவரத்தையடுத்து அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் பழைமையைக் குறிக்கும் மட்பாண்ட ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம் மண்ஓடுகள் கிறிஸ்துவின் தொடக்க கால நூற்றாண்டைக் குறிக்குமென இரகுபதி (1983:105) கருதுவர். அரியாலையில் நாணயங்கள், மட்பாண்ட ஓடுகள், தூண்கள், நடக்க கூடிய துவாரமிடப்பட்ட கற்பாறைகள் முதலிய புதைபொருட் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரியாலையின் பண்டைய பண்பாட்டு நிலையை ஆய்ந்தறிய உதவுகின்றன.

இளவாலை (வலி.தெ.மே.53.1)

இளவாலை என்ற பெயர்க்காரணி ஏனைய 'ஆலை' ஈற்றுப் இடப்பெயர்களைவிட, முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகிறது. இவ்வூர் மிகவும் வளமான இடமாகவும், வாழைத் தோட்டங்கள் நிறைந்த பகுதியாகவும் அமைந்துள்ளது. வாழையினங்களில் "இலை வாழை" என்ற ஓரினமுண்டு. இந்த இடத்தில் 'இலைவாழை" நன்கு செழித்தோங்கியமையாற் பொருளாகு பெயராய் 'இலைவாழை' என்ற பெயர் இவ்விடத்திற்கு ஏற்பட்டு, காலப்போக்கில் அது இலைவாழை > இளவாலை என லகரம் > ளகரமாகவும், ழகரம் > லகரமாகவும் மாற்றங்களுக்குட்பட்டு இளவாலை என்ற இடப்பெயராக வழங்குகின்றது. இளவாலை + பன்னாலைத் தெருவில் 'ஆனைவிழுந்தான்' என்ற இடம் உள்ளது. கீரிமலை, சேந்தான்குளம் ஆகியன இதற்கு அயல் ஊர்களாக உள்ளன. இப் பகுதியில் மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயில் பற்றியும், மாருதப்பிரவீகவல்லி கதை பற்றியும் பெரிதும் பேசப்படுவதாற், சோழ அரசியான மாருதப் பிரவீகவல்லியின் யானை விழுந்து இறந்த இடமே ஆனைவிழுந்தான் எனக் கருதப்படுகிறது. இங்கு பழம் பெருமைமிக்க புனித அன்னம்மாள் (St. Annes) தேவாலயம் சிறந்து விளங்குகிறது.

ஏழாலை (வலி.தெ.59.1)

ஏழு +ஆலை= ஏழாலை. தோட்டக் காணிகள் நிறைந்த வளமான இடம் ஏழாலை. இங்கே பெருங்கிணறுகள் தோண்டப்பட்டு அவற்றிலிருந்தே தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. ஏழாலையில் மிகச்சிறந்த நன்னீர்க் கிணறுகள் உள்ளன. ஒரே நேரத்தில் நீர் இறைக்கும் ஏழு இயந்திரங்கள் (மனித வலுவால் அல்லது எருத்துமாடுகளால் இயக்கப்படுவது) பூட்டப்பட்ட பெருங் கிணறுகள் அவ்வூரில் இருந்திருக்கலாம். அந்நிலையில் (ஏழு + ஆலை) ஏழாலை என்ற பெயர் இவ்வூருக்குச் சூட்டப்பட்டிருக்கலாம். ஆயினும் இப்பெயர்க் காரணம் மேலும் ஆய்வுக்குரியதாகும்.

கோயில்களை அடிப்படையாகக் கொண்டு இப்பெயர் வழங்கிற்றென்றே இவ்வூர் மக்கள் கூறுவர். இங்கு புங்கடி அம்மன்கோயில், அம்பலவாணேசுவரர்கோயில், அத்தியடிப் பிள்ளையார்கோயில், அத்தியடி முருகமூர்த்திகோயில், பெரிய தம்பிரான்கோயில், வீரபத்திரர் கோயில், வயிரவர்கோயில் என ஏழு கோயில்கள் அமைந்துள்ளன. இந்த ஏழு ஆலயங்களும் ஒரே சூழலில் இருந்தமையால் 'ஏழாலையம்' என்ற பெயர் வழங்கி வந்து, காலப்போக்கில் அப் பெயரிலுள்ள (ஏழ் + ஆலையம்) ஈற்று 'அம்' அசை கெட்டு, ஏழாலை என மருவி வழங்கிவரலாயிற்று என்கிறார் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் (1977:2). ஏழாலை என்ற பெயர்க் காரணம் பற்றிச் 'சுடர்' (ஆவணி 1976.ப.15) என்ற இதழில் கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்று, ஏழு ஆலயங்களின் அடிப்படையிற் பெயர்க்காரணம் கூறப்பட்டது. ஆனால் வெ.சு. நடராசா, ஏழு ஆலயங்கள் உள்ளதால் தான் இப்பெயர் ஏற்பட்டதென்பதை எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்றும், ஏனெனில் ஏழு ஆலயம் அல்ல எழுபது ஆலயங்கள் உள்ள ஊர்களுமுண்டு. அந்த இடங்களின் பெயர்கள் எல்லாம் ஆலை என்று முடியவில்லை என்றும் மறுத்து எழுதியமை ஈண்டுப் பொருத்தமாகிறது.

ஏழாலை என்பதை ஏர் + ஆலை எனப் பிரித்துப் பொருள் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. ஏர் > ஏழ் ஆகும். ஏழ் = எழுச்சி; ஆலை = உழவுகால். ஏர் = மண்ணைக் கீழ் மேலாக எழுச்சியுறச் செய்யும் கருவி. ஏரால் உழுது பண்

படுத்தப்பட்டு வளம் பெருக்கிக் குடியிருப்புக்குரிய நிறை நில மாகத் திகழ்ந்தமையால் ஏர் + ஆலை > ஏழ்ஆலையாகி > ஏழாலை ஆயிற்று. ஏழாலை பயிர்வளம் செறிந்த, நிலவளங் கொண்ட நிலமாகத் திகழ்வதால் இவ்வாறும் எண்ண இடமுண்டு. மேலும் ஏழாலை என்பதை = ஏர் + ஏழ் + ஆல் + ஐ எனப் பிரித்தும் நோக்கலாம். ஆல் = தொழிற் பெயர் விகுதி. ஐ = அசைநிலை. எனவே ஏழாலை என்பது உழுதல் நிகழும் இடம் என்ற பொருள் அடியாகப் பிறந்த இடப்பெயர் எனவும் கொள்ள லாம்.

ஏழாலையில் பின்வரும் குறிச்சிப் பெயர்கள் காணப்படு கின்றன: கயட்டை, மாதிரை, மடத்துவாசல், வள்ளுவர்சேரி, குறும்பன் வளவு, வடுகம்பத்தனை, குயத்திஓடை, ஆலமடை, கச்சனாவட்டி, சவரோடை, மாலோடை, மஞ்சவடிக்கரை, கோட் டார்வளவு, குருக்கள் வளவு, எட்டுத்திட்டி, தலைப்பை, தேராப் புலம் முதலியன. இக் குறிச்சிகள் ஒவ்வொன்றிலும் குறைந் தது வைரவர் அல்லது காளி அல்லது அண்ணன்மார் கோவில் ஒன்று இருக்கவே செய்கிறது. வைகாசி, ஆனி மாதங்களில் இக் கோயில்களிற் பொங்கல் இடம் பெறுவது வழக்கம். இவ்வூர் சுமார் 15 சதுர மைல் பரப்புடையது. இதன் ஊர்ச்சபை 19 வட்டாரங்களைக் கொண்டது. சி.வை தாமோதரம்பிள்ளை, புது மைப் பொருளில் 'கனகி புராணம்' பாடிய நட்டுவ சுப்பையனார் முதலியோரும் இவ்வூரினராவார்.

சரசாலை (தென்ம.101)

சரசு + ஆலை = சரசாலை. இவ்வூர் சாவகச்சேரியி லிருந்து வடகிழக்கே மூன்று மைல் தொலைவிலுள்ளது. இராமா யணத்துடன் தொடர்புபடுத்தி இவ்விடப்பெயருக்கு விளக்கம் கூறுவர். இராம, இராவணப் பெரும்போரின்போது இராமனுடைய படைகள் சரங்களைச் சேகரித்து வைத்த சாலையாக இவ்விடம் விளங்கியமையாற் சரசாலை எனப் பெயர் ஏற்பட்டதென்பர். மேலும், இங்கு மரங்கள் செறிந்து சருகுகள் பெருகிக் காணப் பட்டதால் "சரசர" என்ற ஒலி நிலையில் இப்பெயர் ஏற்பட்ட தாகவும் கூறுவர்.

பருத்தித்துறை, சுன்னாகம், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய ஐந்து இடங்களிலுமிருந்து வரும் பெருஞ்

சாலைகள் சரசாலை - கனகம்புளியடிச் சந்தியில் ஒன்று சேர்கின் றன. சரசாலையில் விநாயகர், ஐயனார், காளி முதலிய கடவு ளிரின் கோயில்களும் அமைந்துள்ளன. இங்கே குறிச்சிப் பெயர் களாக பாலைநகர், கனகம்புளியடிச்சந்தி, கள்ளியந்துரவு, நடுக் கிணறு, ஊரிக்காடு, தில்லங்குழி, அம்மன்வீதி நாவலடி, சங்கக் கிணறு, அருமத்துரவு, பறங்கி வாய்க்கால், கட்டைக்காடு, இல் லாரை, மாத்தளாய், நுணுவில் என்பன வழக்கிலுள்ளன. தில்லை மரங்கள் நிறைந்து காணப்பட்ட இடம் தில்லங்குழி என வழங் கிற்று. கிராமச் சங்கத்தால் கட்டப்பட்ட கிணறு அமைந்த இடம் சங்கக்கிணறு எனவும், அருமந்தவர் என்பவரால் வெட்டப்பட்ட துரவு அருமந்தவர் துரவு > அருமத்துரவு எனவும் வழங்கலாயின. இவ்வூரிலுள்ள பறங்கி வாய்க்கால், மாத்தளாய் என்ற சிறு குளத்திலிருந்து செல்கிறது. இவ் வாய்க்கால் போர்த்துக்கேயரால் வெட்டப்பட்டதெனக் கூறப்படுகிறது.

சில்லாலை: (வலி.தெ.மே.36.1)

சில் +ஆலை = சில்லாலை. யாழ்ப்பாணத்திலிருந்து வடமேற்கே பத்து மைல் தொலைவில் சில்லாலை அமைந் துள்ளது. இப் பெயர்த்தோற்றத்திற்குப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆலை என்பதற்குக் கரும்பு நெரிக்கும் சாலை என்பதும் ஒரு பொருள் உண்டு (பாட்டும் தொகை யும்:38). இங்கு டச்சுக்காரர் காலத்தில் கருப்பஞ்சீனி செய்யும் சிறு ஆலைகள் இருந்ததாகவும் அதனால் இவ்விடம் சில்லாலை எனப் பெயர் பெற்றதெனவும் கூறுவர்.

சில் + ஆலை என்பதில் சில்லுக்கு முதன்மையளித்து வேறு விளக்கமும் கொடுக்கலாம். கரும்புத் தோட்டம் மற்றும் பயிர்த் தோட்டம் முதலியவற்றிற்குக் கிணற்றிலிருந்து சில் பூட்டிய சுழல் சக்கரம் மூலம் நீர் இறைக்கும் கருவிகள் இங்கே காணப் பட்டன. கிணற்றுடன் சில் பொருத்தப்பட்டு அத்துடன் நீர் அள்ளும் வாளிகளும் தொடுக்கப்பட்டிருக்கும். சக்கரத்தைச் சுற்றும் போது வெற்று வாளிகள் கிணற்றுட் சென்று நீருடன் மேலே வரும் அமைப்புடையதாக இருக்கும். இத்தகைய சில்லுகள் பூட்டப்பட்ட நீர் ஆலைகள் அமைந்த இடம் என்ற அடிப்படையில் (சில் + ஆலை) சில்லாலை எனப் பெயர் ஆக்கம் பெற்றிருக்கலாம். இவ்வூரிற் பிறந்த மொழியியல் அறிஞரான தாவீது அடிகள் (1970:56) சில்லாலை பற்றிக் கூறும் கருத்து ஈண்டு நோக்கற் பாலது:

"கில் + ஆலை. கில் = சின்ன, சில (கோதம்); கெல, சில (கன்னடம்); கெலவு (துளு) தனிமொழியின்கண் தனிப்பதமாகத் தொல்திராவிடக் 'கில்' என்பது கிளை மொழிகளின் வழக்கிற் 'சில்' என மாறிய போதிலும், தொடர்மொழி அன்றேல் தொடர்ச் சொற்களில் சில் + ஆலை = சில்லாலை என்றே நிலை பெறும் என மொழி வல்லுநர் கூறுவர்".

தாவீதுஅடிகளின் கருத்துப்படி 'சில்லாலை' என்பது சிறிய ஆலைகள் அமைந்த இடம் என்ற பொருள் பொதிந்ததாகக் காணப்படுகிறது. குமாரசுவாமி (1917:15) இதனைச் 'சிஹில் + ஆல' என்ற சிங்களப் பெயரின் திரிபென்றார். சில்லாலையின் வடக்கே சம்பில்துறையும் கடலும் அமைந்துள்ளன. இவற்றை முதனிலையாகக் கொண்டு சில்லாலைப் பெயர் தோன்றிய தென்றும் கருதப்படுகிறது. 'செல்லலை' = என்பதற்குத் துறை என்ற பொருளுமுண்டு. செல்லலைக்கு (சம்பில்துறைக்கு) அருகில் தோன்றிய மக்கட் குடியிருப்புக்கும் செல்லாலை என்ற பெயரேற்பட்டு, பின்னர் செல்லாலை > செல்லலை > சில்லாலை என ஆயிற்று என்றும் விளக்கம் தருகிறார் வண.பிதா.ம. பாவிலுப் பிள்ளை. ஆயினும் இவ்விளக்கம் வலிந்துரைப்பதாகவே அமைகிறது.

சில்லாலைக் குறிச்சிப் பெயர்களான மன்னன் கலட்டி, பூமணத்தான், முருகன்கேணி முதலியவற்றை நோக்கும்போது, தொல்புரக் காலத்துடன் இணைந்ததாக இங்கும் பழைய அரசியற் தொடர்புகள் இருந்தமை தெரியவருகிறது. இங்கு பழங்காலச் சிதைவுற்ற ஓட்டுத்துண்டுகள், அழிந்த கட்டிடங்களின் அடித் துண்டுகள், மண்ணில் அரைகுறையாய் மூடுண்டு கிடக்கும் பொய்கைகள், அழியுண்ட கோயில்கள், உடைந்த கண்ணாடி வளையல்கள், பாத்திர ஓடுகள் என்பனவும் காணப்படுகின்றன.

"சில்லாலைதான் சோழ மன்னனின் எல்லைநகர்" என்ற மக்கள் வழக்கும் இங்குள்ளது. பண்டை நாளில் இங்கு அதிகாரிகள் வாழ்ந்த இடம் 'அதிகாரிகலட்டி' எனப்படுகிறது. இதற்கு அடுத்துள்ள 'கட்டுக்குழி' என்னுமிடத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளைத் தூக்கிலிடும் தூக்குமேடை இருந்ததாகவும் கூறுவர். முருகன்கோயில் அமைந்திருந்த பகுதி 'முருகன்கேணி' என அழைக்கப்படுகிறது. 'கூழங்கைச் சக்கர

வர்த்தி' இங்கிருந்து அரசாண்டான் என்று கூறுவர். அவனது மாளிகையின் அழிநிலப் பகுதி, திருமஞ்சனக் கிணற்றின் நிலையம், அதற்கருகில் அமைந்திருந்த சிவாலய வழிபாட்டிடம், நீராவியடி என்னும் 'ஏழு கிணற்றுக் கேணி' அமைவிடம் ஆகியனவும் இவ்வூரின் பழைமைக்குச் சான்றாகின்றன (தகவல்: எ.எம்.யோசவ்வாஸ், சில்லாலை). பழங் காலத்தில் அரசகுமாரிகள் நீராடுவதற்காக அமைக்கப்பட்டதே இந்நீர்த் தடாகம். இங்கு பொற் குவியல்கள் குடங்களில் நிலத்துட் புதைத்து வைக்கப்பட்டுள்ளன எனவும், பொன்னாலான அம்மியும் குழவியம் உண்டெனவும், இப்பெரும் புதையல் யாவற்றையும் ஒரு காவல் தெய்வம் காத்து வருகின்றதெனவும் வாய்மொழிக் கதைகளுள்ளன. பனை செறிந்த காட்டுப் பகுதியாகவே இது இப்போது காட்சியளிக்கிறது. இத் தகவல்கள் அகழ்வாராய்ச்சியாளரின் கவனத்தை ஈர்க்கும்போது மேலும் பல உண்மைகள் பெறப்பட வாய்ப்புக்களுள்ளன.

யாழ்ப்பாணத்திலே சித்த வைத்திய மரபினர் மிக நீண்ட காலமாக சில்லாலையிலே வாழ்ந்து தொண்டாற்றி வருகின்றனர். அதனாற் போலும் 'எல்லோரும் கைவிட்டாற் சில்லாலை வைத்தியம்' என்ற ஆன்றோர் வாக்கும் வழக்கிலிருந்து வருகிறது. 1687இல் வண. யோசவ்வாஸ் முனிவர் இங்கு வந்தார். அவர் நினைவாக அவரது சிலுவை ஒன்றும் இங்கு போற்றப்பட்டு வருகிறது. இங்குள்ள கதிரைமாதா தேவாலயம் மிகவும் அருளும் புகழும் வாய்ந்ததென்பர். இவ்வூருக்குச் 'சின்னரோமை' என்ற பெயருமுண்டு.

தம்பாலை (வலி.கி 75.4)

இது தொண்டைமானாற்றுக்குத் தெற்கேயுள்ள ஓரிடம். தம்பாலையை = தம்பர் + ஆலை எனப் பிரித்துப் பொருள் கூறுவர். தென்னிந்தியாவிலுள்ள பாலையூரிலிருந்து இங்கு வந்து குடியேறியோர் வைத்த பெயர் இதுவெனவுங் கூறப்படுகிறது. இங்கு தம்பிராசா முதலியார் என்பவர் வாழ்ந்தார் என்றும், அவர் பெயராலேயே தம்பர் + ஆலை = தம்பாலை என்ற ஊர்ப் பெயரேற்பட்டது என்ற விளக்கமும் தரப்படுகின்றது.

இங்கு தம்பகடவை என்ற குறிச்சிப் பெயருமுள்ளது. கி.பி.1606 இல் நிறுவப்பட்ட 'பொன்னம்பலவாண சித்திவிநாயகர்

ஆலயம்' பழைமையுடன் திகழ்கிறது. இது குடாக்காடு வெல்லன் பிள்ளையார்கோயில் எனவும் பெயர் பெறும். நல்லூரிலிருந்து தொண்டைமானாற்றுக்குச் செல்லும் தமிழரசர் காலத்து 'இராச வீதி' என்ற பெருந்தெரு தம்பாலையூடாகச் செல்கிறது. இதனூ டாக 1618இல் சங்கிலி மன்னன் இறுதியாகச் சென்றார் எனக் கள ஆய்வில் அறியப்பட்டது. இங்கு கட்டுவை, ஈச்சந்தரவை, கொத்தவளவு, பெருமாவளவு, சாந்தை, பாணெழு, பெருங்காடு, மாவெள்ளக்கடவை முதலிய குறிச்சிப் பெயர்கள் வழக்கிலுள்ளன (தகவல்: புவிராசசிங்கம், தம்பாலை; க. சின்னத்தம்பி, விரிவுரை யாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்).

தாவளைஇயற்றாலை (தென்.116.1)

இப் பெயரைத் தாவளம் + இயற்று + ஆலை எனப் பிரித்துப் பொருள் காணலாம். இவ்விடம் வரணியூரின் மேற்குப் பக்கமாக அமைந்திருக்கிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இங்கு மிகப் பெரிய அளவில் கரும்புச் செய்கை நடைபெற்ற தாகவும் கரும்பு ஆலைகள் சில அமைக்கப்பட்டு சருக்கரை தயாரிக்கப்பட்டதாகவும் கூறுவர். இதற்காக இந்தியாவிலிருந்து பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வருவிக்கப்பட்டு அவர்களிடம் இருந்து இவ்வூர் மக்கள் இத் தொழிலைக் கற்றுக் கொண்டதாக வும் அறியப்படுகின்றது. இப்பின்னணியில் இப்பெயரை நோக்கும் போது தாவளம் = என்பது நகரம், இருப்பிடம், மருத நிலத்தூர் என்ற பொருளும், இயற்றாலை = என்பதற்கு கட்டப்பட்ட ஆலை என்ற பொருளும் வெளிப்படுவதால், மருத நிலத்தூரிலே அமைக் கப்பட்ட தொழிற்சாலையையுடைய நகர் என்பது பெறப்படுகிறது. இதனைச் சான்றுபடுத்தம் வகையில் பி.எம். யோசேப் என்பவரின் கூற்று அமைதல் காண்க:

> "Taavalam lodging place. Place of rest. Some scholars hold the view that taavalam is a dravidian word. In this case the possible etymology is (Drv = taavu = to spread + (Drv) aalam = place: taavalam place where a pecies spread" (P.M. Joseph;1985.1:4:5:p.2)

தாவளைஇயத்தாலை என்பதைத் தாவளம் + இயத்து+ ஆலை எனப் பிரித்து நோக்கும்போது இப்பெயர் தெளிவான பொருள் விளக்கம் பெறுகிறது. தாவளம் =

மருத நிலத்தூர்; இயத்து = சட்டி, பானை முதலியன. ஆலை = தொழிற்சாலை. களிமண்பொருந்திய நிலப்பாங்குடையதும், மட்பாண்டத் தொழில் நடைபெறும் ஆலைகள் உடையதுமாகிய இடம் என்ற காரணத்தின் அடிப்படையில் இப்பெயர் ஏற்பட் டிருப்பது புலப்படுகின்றது. வரணிப் பகுதியில் மாவடி இயற் றாலை, வரணிஇயற்றாலை என்ற குறிச்சிப் பெயர்களும் வழக்கி லுள்ளன. இப் பெயர்களும் ஆங்காங்கு காணப்பட்ட மட்பாண்ட தொழிற்சாலைகளின் அடிப்படையில் தோற்றம் பெற்றமை தெளி வாகின்றது. தாவளை இயற்றாலையிற் கொட்டிக் கிழங்கு என் பதன் அடியாகப் பிறந்த கொட்டிக்கான் என்ற குறிச்சிப் பெயரும், போக்கன், தல்வளை முதலான குறிச்சிப் பெயர்களும் உள. போக்கற்றவர்கள் வந்து குடியேறிய இடம் போக்கன் எனவும், தல்லம் + வளை = தல்வளை = குழியான இடம், பதிவான இடம் என்ற பொருளில் தல்வளை என்ற குறிச்சிப் பெயரும் வழங்குகின்றன.

தாவளம் = மருதநிலத்தூர் எனச் சூடாமணி நிகண்டு (107) கூறுகிறது. தாழ் + வளை = தாவளை + அம் > தாவளம் என்றாயிற்று. தாழ்வான இடம் என்ற பொருள் நிலையில் இப் பெயர் பெற்றுள்ளது. இதன் நிலத்தோற்றமும் இப்பெயருக்குப் பொருந்துவதாக உள்ளது. தாவளையின் அயற்புறத்தே 'கோட்டைத்திடல்' என்ற ஓரிடமுள்ளது. சுவாமி ஞானப்பிரகாசர் இவ்விடத்தில் பல அழிபாட்டுச் சின்னங்களை 1921 ஆம் ஆண் டில் பார்வையிட்டதோடு, இவ்விடம் பற்றிய நாட்டார் கதை மரபில் வழங்கும் ஒரு செய்தியையும் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> 'இங்கு ஏழு அரசிகள் வாழ்ந்தனர். அவர்களின் பெயர்கள் முறையே அங்கநாச்சி, கோநாச்சி, மன்னிநாச்சி, குங்குனிநாச்சி ஏனையோர் பெயர்கள் தெரியவில்லை. அவர்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்குகளின் காரணமாக அவர்களின் வாழிடங்கள் அழிக்கப்பட்டு, அவ்விடத்தை விட்டகன்றனர். அவர்கள் சென்ற பின்பு அவர்களின் வீட்டு வேலைக்காரன் ஒருவன் அவர்களின் மீது கொண்ட பக்தி காரணமாக அவர்களைச் சப்தகன்னியர் எனப் போற்றி, கோயிலமைத்து அங்கு வணங்கிவரலானான். தற்போதும் அவர் மரபில் வந்த பூசாரி ஒருவரே அக் கோயிலை நடாத்தி வருகிறார். அக் கோயிலில் ஐயனார், நாகதம்பிரான், ஏழுநாச்சிமார், வைரவர், அண்ணன்மார் ஆகியோரின் உருவங் கள் காணப்படுகின்றன. அவை நாச்சிமார் கோயிலின் நடுவே இடம்பெற்றுள்ளன' (சுவாமி ஞானப்பிரகாசர்:1921:120).

துன்னாலை (வடம.வ.கி.130)

துன்னர் + ஆலை = துன்னாலை. துன்னர் என்போர் துணி முதலானவை தைப்போர் என அபிதான சிந்தாமணி (:884) விளக்கம் கூறுகிறது. பருத்தித்துறைக்குத் தெற்கே மூன்று மைல் தொலைவில் பரந்த நிலப்பரப்புடைய பகுதியாகத் துன்னாலை அமைந்துள்ளது. டச்சுக்காரர் காலத்தில் பருத்தித் துறையை நடுவணாகக் கொண்ட பகுதிகளில் பருத்தி உற்பத்தி, புடைவை நெய்தல், சாயமுட்டுதல் முதலிய தொழில்கள் முதன்மை பெற்றிருந்தன. இந்நிலையில் துன்னாலைப் பகுதி யிலே துன்னர் எனப்படும் தையற்காரர் பெரிதும் வாழ்ந்து, தையற்றொழில் சம்பந்தமான ஓரிரு ஆலைகளை நடாத்தியுள்ள னர். அவர்களது ஆலைகள், துன்னர் ஆலைகள் என வழங்கப் பட்டு, காலப்போக்கில் அவ்வாலைகள் அமைந்திருந்த இடம் துன்னாலை என இடத்தையும் குறிப்பதாயிற்று. ஆனால் இன்று இவ்வூரில் துன்னர்களோ அவர்களது ஆலைகளோ இல்லை. முன்னர் இவ்வூர் துன்னை, துன்னையூர் என்றும் பெயர் பெற்றி ருந்தது.

இங்கு பல்வேறு பெயர்களைக் கொண்ட குறிச்சிகளாகப் போதரமடம் (பொக்கர் மடம்), கொடிக்காடு ஆயம், புளியங்கி யான், வல்லியானந்தம், வட்டியவளை, கைப்பற்றை, அத்தியடி, தேவாதனம், இலுப்பைநின்றபாதி, கலிகை, மானின்றகாடு, தாமரைக் குளத்தடி, கிராவளை, கோவிற்கடவை, கொள்வெளி, இசவுபிட்டி, வல்வத்தை, இந்திரம்மன்கோயிலடி (மித்திரம்மன் கோயில்), மாய்க்கிரான்குளம், வண்ணான்குளம், வத்தை, கிளானை, மணியந்தோட்டம், கொள்வெளி, இனவொல்லை (இன வெல்லை), மருதடி, முந்திரியங்காடு, பாவோடை, கப்பல்துறை முதலியன வழங்குகின்றன (தகவல்: சுபதினி செல்வராசா, விரி வுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்). போதரவு = ஆதரவு. போதரவு + மடம்> போதரமடமாயிற்று. பண்டை நாளில் மடம் கட்டிப் பயணிகளைப் பேணிய இடம் இதுவெனப்படுகிறது. புளியாங்கி = மூலிகைக்குப் பயன்படும் ஒரு கீரைவகை. அச் செடிகள் நிறைந்து காணப்பட்ட பகுதி புளியாங்கி எனப்பெயர் பெறுவதாயிற்று. இப்போது இதனைப் புளியாரை என்றே உச்சரிக் கின்றனர். தேவதானம் > தேவாதனம் என மருவிற்று என்றும்;

கொள்ளலாம். இப்பகுதியிலுள்ள பல காணிகள் கோயிலுக்கு உரிமையாக இருப்பது இக்கருத்துக்குச் சான்றாகின்றது. இந்திரம் மன் என்பது கடவுட்பெயரால் அமைந்த இடமாகும். துன் = சிங்களத்தில் ஒரு மரப்பெயரைச் சுட்டும் சொல். இதனை அடிப்படையாகக் கொண்டு குமாரசுவாமி (1918:52) துன்னாலை சிங்களப் பெயரென்று கூறியுள்ளமை பொருத்தமன்று.

பன்னாலை (வலி.வ.64.40)

பன்னல் + ஆலை = பன்னாலை. பன்னல் = பருத்திச் செடி, பருத்திப்பஞ்சு, நெருக்கம், கொல்லுதல், பஞ்செஃகுதல் (தமிழகராதி :221). எனவே இங்கு பஞ்செஃகும் (பஞ்சு பறித்தல்) ஆலைகள் இருந்தமையால் காரணப்பெயராய் பன்னாலை என்ற பெயர் தோன்றுவதாயிற்று. இது தெல்லிப்பளைப் பகுதியில் அமைந்த ஓரிடம்.

சொற்பிறப்பியல் அடிப்படையில் நோக்கும் போது பண் ணாலை என்பதே பன்னாலை என வழங்கிற்றெனலாம். இதன் அயற்பதி அம்பனை (அம்பண்ணை > அம்பணை > அம்பனை). பண்ணை = என்பது மருதநிலம், நீர்நிலை, தோட்டம் முதலிய வற்றைச் சுட்டும்சொல். (பண்ணை +ஆல் + ஐ) பண்ணாலை என்பது வயல் அல்லது தோட்டத்திற்குப் பக்கமாய் அமைந்த குடியிருப்பிடத்தைச் சுட்டும் பெயராகும். எனவே பண்ணாலை > பன்னாலை ஆயிற்றா என்பதும் ஆய்வுக்குரியதாகும்.

பேராலை (பச்.159.2)

பேர் + ஆலை = பேராலை. இது புலோப்பளை கிராம சேவகர் பிரிவிலுள்ள ஓரிடம். இங்கு பெரியதோர் ஆலமரம் நின்றதன் காரணமாக அம் மரப் பெயரடியாக இப்பெயர் தோன் றிற்றெனலாம். தெலுங்கு நாட்டிற் கொண்டவீடு என்ற பகுதியிற் 'பேரால' என்னும் ஓரிடங் காணப்படுதல் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலது (Gege.h. Rohair:1982:172).

பொன்னாலை (வலி. மே.48.2)

பொன் + ஆலயம் = பொன்னாலயம் > பொன்னாலை. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்கு மூலையின் கரையோர மாக அமைந்த பழைமை சான்ற பதியே பொன்னாலை. கி.பி 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'ஹோகில சந்தேஸ' என்ற சிங்களத் தூது இலக்கியத்தில் வட இலங்கையிற் பொன்னாலை யிலும் வல்லிபுரத்திலும் பழைமை மிக்க விஷ்ணு கோயில்கள் இருந்தமை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில் பற்றிய புராணச் செய்திகள் ஸ்கந்தபுராணத்து - தட்ஷிண கைலாச மான்மியத்திலும், கூர்ம புராணத்திலும் இடம்பெற்றுள்ளன. கந்தபுராணத்திற் குறிப்பிடப் படும் பொன்னகர், பொன்னின்நாடு என்பன இப் பொன்னாலை யையே குறிக்குமென்பாரும் உளர். இவ்விடத்திலுள்ள சதுரங்க மணல், மாளிகையடைப்பு முதலான இடங்களும், பழைய கட்டி டக் குறிகளும், கண்டெடுக்கப்படும் பழைய பொன்நாணயங் களும், அவ்விடமிருந்த அட்டோலிக்கங்களைக் காட்டுகின்றன என்கிறார் டானியல் ஜோன் (1978:6). பொன்னாலையைப் பற்றிப் புராணத்தோடு தொடர்புபடுத்தி எஸ். ஆறுமுகம் கூறும் விளக்க மும் கருத்திற் கொள்ளத்தக்கதாக உள்ளது:

> "துருவாச முனிவரின் சாபத்தால் வலைஞனாகப் பிறந்த இந் திரன் கடலிலே திருமாலாகிய ஆமையைத் தீண்டி சாபவிமோச னம் பெற்றதாகவும், அவ்வாறு சாபவிமோசனம் பெற்றவேளை யில் ஆகாயத்திற் பொன்விமானம் ஒன்று காணப்பட்டதாகவும் தட்ஷிண கைலாச புராணம் கூறுகின்றது. இத்தலத்தின் மீது இவ்வாறு பொன் விமானம் காணப்பட்டமையால் இவ்விடத் திற்குப் பொன்னாலயம் என்ற பெயர் வந்த தென்பர்" (S. Arumugam:1980:57).

பண்டை நாளில் ஏழு மதில்களுடனும் பொன்னால் வேயப் பெற்ற கூரையுடனும் வரதராஜப்பெருமாள்கோயில் காட்சி தந்தது எனக் 'ஹோகில சந்தேஸ' என்ற தூது இலக்கியம் விபரிக்கின்றது. இத்தகு சிறப்போடு திகழ்ந்த இக்கோயில் போர்த் துக்கேயராற் சூறையாடப்பட்டு இடித்தழிக்கப்பட்டது. இக்கோயிற் கட்டிடங்களின் அடித்தள அகழ்வாய்வின் மூலம் பல உண்மைகள் வெளிவர வாய்ப்புக்களுள்ளன. தொல்புரம் என்ற பண்டைய

நகரம் கோட்டை கொத்தளங்களுடன் விளங்கிய காலத்திற் பொன்னாலைக் கோயில் கட்டப்பட்டிருக்கலாம் என்று துணியலாம்.

பன்னாலை என்பதைப் பொன் + ஆலயம் எனப் பிரித்து, பொன் = இலக்குமி எனப் பொருள் கொண்டு, பொன்மகள் திருமாலை வழிபட்ட ஆலயம் பொன்னாலயமாயிற்று எனவும் விளக்கம் கூறுவர். ஆலயப் பெயர் பின்னர் அவ்விடத்தையும் குறிப்பதாயிற்று. பொன் + ஆலை எனப் பிரித்து, பொற்கொல்லர் பலர் வாழ்ந்து, ஆபரணச்சாலைகள் அமைத்து தொழிற்பட்ட இடமாக இருக்கும் என்றும் சிலர் பின்னாளில் கருத்துரைப்பினும் அதற்குரிய சான்றுகளின்மையால் அக்கருத்துப் பொருந்தா தென்க.

மீசாலை

மீ + ஆலை = மீயாலை > மீசாலை. சாவகச்சேரிக்குக் கிழக்கே மீசாலை அமைந்துள்ளது. மீசு + ஆலை= மீசாலை. உயர்ந்த மரச்சோலைகள் உள்ள இடம் என்றும், (மீசாலை, மாசாலை) மாசாலை = மாமரச் சோலைகள் நிறைந்து காணப் படும் இடமென்றும் விளக்கம் கூறப்படுகின்றது. இக் கருத்துக் களைச் சான்றுபடுத்தும் வகையில் தென்மராட்சிப் பகுதியிலே மா, பலா, தென்னை முதலிய மரங்கள் இன்றும் சோலையாக வளர்ந்து காட்சி தரும் இடமாக மீசாலை விளங்குவதைக் குறிப்பிடலாம். இங்கு மாவடிப்பிள்ளையார் கோயில் ஒன்று முள்ளது. இங்கு ஒவ்வொரு காணியிலும் மாமரம் நிற்கக் காண லாம். மாம்பழமும் அதிகம் பெறப்படுகிறது. வெள்ளை மாவடி, கரும்பு மாவடி, பாண்டிக்கேணி (பாண்டி = ஒரு வகை மாமரம்) ஆகிய குறிச்சிப் பெயர்கள் மா மரத்தை முதனிலையாகக் கொண்டு பெயர் பெற்றிருத்தலும் நோக்கற்பாலது.

மீ + ஆலை = மீயாலை, மீ = இலுப்பை. மீசாலையில் இன்றும் இலுப்பை மரங்கள் செறிந்து காணப்படுகின்றன. பண்டை நாளில் இங்கு இலுப்பை எண்ணெய் தயாரிக்கும் ஆலைகள் இருந்த படியால் மீசாலை என்ற இடப்பெயர் ஏற் பட்டதோ எனவும் கருதலாம். சோழர் காலத்துக் கல்வெட்டுக் களில் இடம்பெறும் மீசாலை, மீயாட்சி முதலான சொற்றொடர்கள்

இவ்விடப் பெயருடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கன. இவ்வூர்த் தலைவனாக மீகாமன் என்போன் இருந்தான் என 'வெடியரசன் பாடல்' கூறுகிறது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் மீசலூர் என்ற ஊர்ப் பெயரும் வழக்கிலுள்ளது. மீசாலை வடக்கில் தெருவாரம் என்ற குறிச்சி காணப்படுகின்றது. டச்சுக்காரர் காலத்தில் சாவகச்சேரியிலிருந்து மந்துவில் ஊடாக ஒரு பெரிய தெரு அமைக்கப்பட்டபோது, அதன் அருகில் வாழ்ந்த பகுதியினரைத் தெருவோரத்தினர் என்றனர். அப்பகுதி தெருவோரமாக இருந்து பிற்காலத்தில் தெருவாரமாக மாறியுள்ளது.

மீசாலை வடக்கில் சோனகன்புலம் என்ற குறிச்சியும், சோனகன்புலவு என்ற பெயரில் சுடலையும் உள்ளன. இப்பகுதியில் முன்பு சாவகர் தொடர்பால் வந்த முஸ்லீங்கள் வாழ்ந்தனர். ஆனால் தற்போது இப்பகுதி தோட்ட நிலங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. மீசாலை வடக்கின் இன்னொருபுறத்தில் மருதடி என்ற குறிச்சியுள்ளது. இங்கு மருதமரம் பெரிதும் காணப்பட்டமையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இங்குள்ள மருதடிப்பிள்ளையார் கோயில் முன்பு கிழக்கு நோக்கியிருத்ததென்றும், பின்பு மேற்கு நோக்கித் திரும்பியது என்றும் கூறப்படுகின்றது. மீசாலையின் வடக்கே 'கட்டைப்பறித்தான்' என்ற குறிச்சியுள்ளது. மாரிகாலத்தில் இங்குள்ள குளக்கட்டு நிரம்பி கட்டை உடைத்துப் பாயும் நிலை ஏற்படுவதால் 'கட்டுப்பறித் தான்' என்ற காரணப் பெயர் ஏற்பட்டு, அது காலப்போக்கில் கட்டைப்பறித்தான் என வழங்கிற்று. அதற்கு அப்பால் புத்தூர்ச் சந்தி என்ற இடம் காணப்படுகின்றது. 'கண்டைச் சாடி' என்ற குறிச்சிப் பெயர் கண்டைச்செடியை அதிகமாகக் கொண்ட இடத் தைக் குறித்து வழங்குகின்றது. வேம்புகள் சோலையாகக் காணப்பட்ட ஓரிடம் வேம்பிராய் என அழைக்கப்படுவதாயிற்று. வேம்பு + பராய் > வேம்பிராய். இவ்விரு மரங்களும் இணைந்து காணப்பட்ட நிலையில் இக்குறிச்சிப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். மேலும் நீராவரங்கேணி, பாலையடி முதலான குறிச்சிப் பெயர் களும் இங்கு வழங்குகின்றன. மேய்ச்சல் நிலப் பகுதி வெள்ளை யன் வாரி, வேலைக்காடு எனப் பெயர்பெறும் (தகவல்:சி. வடி வேல், மீசாலை).

'இட்டி', 'சிட்டி' ஈற்று இடப்பெயர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்துச் சில இடப்பெயர்கள் 'இட்டி', 'சிட்டி' என்னும் விகுதிகள் பெற்றமைந்துள்ளன. இவற்றுள் இடு > இட்டி ஆயிற்று. இடு = தங்குதல் தங்கி வாழுமிடம் என்ற பொருளில் வந்தது. இவ் விகுதிப் பெயர்கள் யாவும் சிங்கள மூலம் பெற்றவை என்று வருமாறு குமாரசுவாமி விளக்கம் கூறுகின்றார்:

மயிலிசிட்டி , Mayilahitiya: தம்பசிட்டி, (Dambasitiya): பேரசிட்டி > Bositya: களைசிட்டி > Kalasitiya: அளவெட்டி > Alawetiya or Elawetiya: இலந்தைவெட்டி > Illandawetiya கரவெட்டி > Karawetiya: மாகையப்பிட்டி > Maheyapitiya: உடுப்பிட்டி > Udupitiya: கட்டுப்பிட்டி > Katupitiya

மேலே ஆங்கிலத்திற் குறிப்பிட்ட சிங்களப் பெயர்கள், மாற்றம் பெற்று அல்லது உருத்திரிந்து தமிழுக்கு வந்தன என்கிறார் குமாரசாமி (1918:158). ஆனால் "இடு" (தங்கியிரு) என்ற வினையடித் திரிபின் பின்னொட்டுத் தமிழ்ப் பெயர்களே இவை என்பதைப் பின்வரும் இடப்பெயர் விளக்கங்களிற் காண்க.

இன்பருட்டி (வடம.வ.கி.135:2)

இம்பர் + இட்டி = இன்பரிட்டி > இன்பருட்டி. பருத்தித்துறைக் கடற்கரையோரமாக இன்பருட்டி அமைந்துள்ளது. பேச்சு வழக்கில் இவ்வூர் 'இம்பிலிட்டி' எனவும் அழைக்கப்படுகின்றது. இன்பில் + இட்டி அல்லது இம்பர் + இட்டி என்றே இதனைப் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டும். 'இம்பில்' அல்லது 'இன்பர்' தங்கிய பகுதி என ஊகிக்கலாம். இதன் வடக்கே காங்கேசன் துறை + பருத்தித் துறைசாலையும், அதற்கப்பால் 100யார் தொலைவில் வங்காள விரிகுடாக் கடலும் தெற்கே வயல் நிலங்களும் அமைந்துள்ளன.

குரும்பசிட்டி. (வலி,வ.70.2)

குறும்பர் + இட்டி = குறும்பரிட்டி > குரும்பரிட்டி > குரும்பசிட்டி என மருவி வந்துள்ளது. குறும்பர்கள் வந்து பாளையம் அமைத்து வாழ்ந்த இடம் என்பது இதன் பொருள். தோம்புகளிலும் பழைய உறுதிகளிலும் குரும்பசிட்டி என்றே இப்பெயர் எழுதப்பட்டுள்ளது. சான்றாக இவ்வூரைச் சேர்ந்த எஸ்.ஆர் முத்துக்குமாரு என்பவரின் காணி உறுதியை நோக்கியபோது (LR.NO: H.114/170:15. 02.1927) அக் காணிப் பெயரும் குரும்பசிட்டி என்றே குறிக்கப்பட்டுள்ளது (தகவல்: கலைஞானி செல்வரத்தினம்). குரும்பசிட்டி என்ற ஒரு குறிப்பிட்ட காணிப்பெயரே காலப்போக்கில் ஊர்ப் பெயராகவும் வழங்குவதாயிற்று என்ற கருத்துமுண்டு (தகவல்: ஏ.ரி. பொன்னுத்துரை, குரும்பசிட்டி).

தமிழகத்தில் செட்டிநாட்டில் 13.5.1909இல் சோழவந்தானூர் மகாவித்துவான் அரசஞ் சண்முகனார் தலைமையில் ஒரு சன்மார்க்க சபை தொடங்கப்பட்டது. அதேபோன்று குரும்பசிட்டியிலும் சன்மார்க்கசபை 1934இல் தொடங்கப்பட்டு மிகவும் சிறப்பாக இயங்கி வருதல் விதந்தோதத்தக்கது.

தம்பசிட்டி (வடம.ந.ச.22.1)

தம்பர் + இட்டி = தம்பரிட்டி > தம்பசிட்டி. பருத்தித்துறை நகர சபையின் முதலாம் வட்டாரமாகவும், புலோலி ஊர்ச்சபையின் ஒரு பிரிவாகவும் தம்பசிட்டி அமைந்துள்ளது. தம்பர் என்ற பெயருடைய செட்டி ஒருவர் அப் பகுதியில் முன்பு வாழ்ந்தார் என்றும், அதனால் அப்பகுதி தம்பர்செட்டி என வழங்கிக் காலப்போக்கில் தம்பசெட்டி > தம்பசிட்டி என மருவிற்றென்றும் கூறப்படுகின்றது.

தையிட்டி (வலி.வ.72.4)

தை + ஈட்டி = தையீட்டி > தையிட்டி. இது காங்கேசன்துறைப் பகுதியில் மயிலிட்டிக் கிராமசேவகர் பிரிவிலிடம் பெறும் ஓரிடம். இதனைத் தையிட்டியூர் என்றும் கூறுவர். தையிட்டி, பொயிட்டி, மயிலிட்டி ஆகிய இம் மூன்று பெயர்களும் ஒரே

தன்மைத்தனவாக இருப்பதோடு மட்டுமன்றி, ஒரே பகுதியில் ஒரே எல்லைக் கோட்டிடங்களிலும் அமைந்துள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு இப்பெயர்களை முறையே தை + ஈட்டி , போர் + ஈட்டி, மயில் + ஈட்டி எனப் பிரித்துப் பொருள் கூறுவாருமுளர். பண்டைநாளில் பல்வேறு வகைப்பட்ட ஈட்டிகளைப் போர்க்கருவிகளாகத் தரித்து காவற்படையினர் தங்கியிருந்த இடங்களே இவ்வாறு பெயர் பெற்றன எனக்கொள்ளலாம். அவ்வகையில் தைக்கும் ஈட்டி > தையீட்டி > தையிட்டி என வழக்குப் பெற்றது. தய்யான் + இட்டி > தையிட்டி. சோழர் காலத்துக் கோயிற் பணியாளர்களில் ஒருவன் ‘தைய்யான்’ என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. எனவே தைய்யான் தங்கியிருந்த இடம் தையிட்டி எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

யாழ்ப்பாண வைபவகௌமுதியில் இவ்விடப் பெயருக்கு வருமாறு சிங்களமொழி சார்ந்த விளக்கம் வலிந்து கூறப்படுவதும் நோக்கத்தக்கதாம்:

> “மிகபண்டைக் காலந்தொடங்கி இவ்விடம் எழுந்தருளியிருக்கும் கணேஜ தெய்வத்திற்கு விழாக் கொண்டாடி வந்தமை காரணம் பற்றித் தெய்வ + இட்டி + ஊர் > தையிட்டியூர் என மருவி வழங்கப் பெற்று வருகின்றது. அன்றியும் சிங்களப் பெயர்கள் யாழ்ப்பாணத்திற் சில இடங்களுக்கு அமையப் பெற்றிருக்கின்றமையால் இப் பெயரும் அப்படியாகுமோவென்று சொல்லினும் தெய்யோ ஹிற்றிய > தையிட்டி எனக் ‘கணேஜ’ தெய்வமிருக்குமிடமெனப் பொருள்படத் தமிழில் மருவி வழங்கிற்றெனக் கொள்ளினும் அமையும்.” (க.வேலுப்பிள்ளை 1918:205)

இவ்வாறு பொருந்தாக் கற்பனைகளைக் கூறி, தூய்மையான தமிழிடப் பெயர்களுக்குச் சிங்கள மூலம் கற்பித்தனர் முந்திய எழுத்தறிவாளர்கள்.

பொயிட்டி (வலி.தெ.மே.53.6)

இது பெரியவிளான் கிராமசேவகர் பிரிவிலுள்ள ஓரிடமாகும். போர் + ஈட்டி = போரீட்டி > பொயிட்டி என இப்பெயர் ஏற்பட்டதெனக் கருதப்படுகிறது. கீரிமலை + மாவிட்டபுரம் சாலை

யில் சீமெந்துத் தொழிற்சாலையின் மேற்பாலில் போயிட்டி என்ற குறிச்சிப் பெயரும், வலிகாமம் வடக்கிலே அச்செழுப் பகுதியில் போயிட்டி என அழைக்கப்படும் ஓரிடப் பெயரும் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மயிலிட்டி (வலி.வ.33.6)

மயில் + இட்டி > மயிலிட்டி. காங்கேசன்துறைக்குக் கிழக்கே கடற்கரை ஓரமாக மயிலிட்டி ஊர் அமைந்துள்ளது. இவ்விடப் பெயரை மயில் + ஈட்டி எனப்பிரித்துப் பொருள் கூறுவாருமுளர். மயில் வடிவான அடையாளம் பொறிக்கப்பட்ட ஈட்டிப்படையினர் தங்கியிருந்த இடம், பின்னாளில் மயிலீட்டி எனப் பெயர் பெற்றதென்பர். ஆனால் மயிலாப்பூர் (மயிலை) வாசிகள் வந்து தங்கியிருந்த இடம் என்ற பொருளில் மயிலை + இட்டி > மயிலிட்டி ஆயிற்று எனக் கொள்வதே பொருந்தும். இவ்வூர் 'மயிலையம்பதி' எனத் தண்டிகைக் கனகராயன்பள்ளிலே வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> "மயிலையம் புயம்பொருந்து வயலூந் தண்பணைக் காமர்
> மயிலையம்பதி வாழக் கூவாய் குயிலே" (65)

ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் மயிலாப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட அரசிறை அலுவலரான நரசிங்கதேவர் தங்கியிருந்த இடம் (மயிலை + இட்டி) மயிலிட்டி என வழங்கிற்று என்கிறார் வ. குமாரசுவாமி (1932:26). மயிலிட்டியில் வீரமாணிக்க தேவன்துறை, பெரியநாட்டுத்தேவன்துறை, நரசிங்கதேவன்துறை முதலிய பெயர் கொண்ட இடங்களுமுள்ளன. இங்கு பழைமை வாய்ந்த கண்ணகி அம்மன் கோயிலுள்ளது. கோயில் அமைந்த விடம் 'தேவியா கொல்லை' எனப்படும். கோயிலின் முன் அமைந்துள்ள குளம் 'தேவகுளம்' என்று பெயர் பெறும். ஒல்லாந்தரின் தோம்புகளிலும் இப்பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இங்குள்ளோர் இதனைத் 'தொண்டைமான் குளம்' என்றே வழங்குகின்றனர். தொண்டை நாட்டிலிருந்து குடிபெயர்ந்தோர் மயிலிட்டியிற் குடியேறினர் என இராசநாயகம் (1926: 239-246) கூறுவர். ஒல்லாந்தர் காலத்தில் மயிலிட்டியிற் பெரிய தேவாலயம் இருந்தமை பற்றிய செய்திகள் பிலிப்ஸ் பால்தேயஸ் (Phillipus Baldaius

-1672) குறிப்புக்களால் அறியப்படுகின்றன. அத் தேவாலயம் அழிந்து மண்மேடாகக் காணப்படுகின்றது. அதன் அருகே புதிய தேவாலயம் இப்போது அமைந்துள்ளது. இவ்வூர் பற்றி வ. குமாரசுவாமி (1932:29) குறிப்பிடும் இரு கருத்துக்கள் வருமாறு:

(1) மயிலிட்டியார்களது குல தெய்வம் பூதராயர் என்ப. இப் பெயரின் உற்பத்தியை ஆராயுமிடத்து, இது 'போத்தரையர்' என்பதன் திரிபாகக் காணப்படுகிறது. போத்தரையர் என்பது பல்லவ மன்னரின் ஆட்சிப் பெயராகும். இந்தியாவில் பல்லவரின் கீழ் அரசபணி செய்தவர்களின் மரபினர் அவ்வரசரைத் தெய்வமாக்கிக் கோயில் அமைத்து வணங்குவராயினர் என்னும் கொள்கை வழுவாகாது.

(2) மயிலிட்டியில் 'பள்ளந்தரை' என்ற ஓரிடம் உண்டு. இது பழைய உறுதிகள், தோம்புப் பதிவு, காணிப்பதிவுப் புத்தகங்களில் 'பள்ளந்திரை' எனக் காணப்படுகிறது. இது பல்லவ திரையர் ஒருவர்க்கு உறைவிடம் ஆயினமையின் 'பல்லந்திரை' என்றழைக்கப்பட்டு, அது 'பள்ளந்திரை' ஆகிப் பின் 'பள்ளந்தரை' ஆக மாறிற்று எனலாம்.

இப் பள்ளந்தரையில் முன்னாளில் மண்டலாதிபதிகள், பிரபுக்கள் முதலியோர் வாழ்ந்தனர் என்றும், அவர்கள் மரபினோர் இருபாலை, கோப்பாய், தெல்லிப்பளை, மாவிட்டபுரம், கந்தரோடை ஆகிய பகுதிகளிற் சிறந்து விளங்கினர் என்றும் அறியப்படுகிறது. மயிலிட்டியின் வடபாலுள்ள சங்குவத்தை, மயிலியோடை, தோரணப் புலம் முதலிய குறிச்சிப் பெயர்களும் நோக்கத்தக்கன.

விழிசிட்டி (வலி.வ. 68.4)

விழி + தீட்டி = விழிதீட்டி > விழிசிட்டி. இது தெல்லிப்பளை தென்மேற்கில் அமைந்துள்ளது. இப்பெயர் முன்பு விழிதீட்டி என வழங்கி, பின்னர் விழிசிட்டி என மாறிற்று என்ப. இது தொடர்பாக நாட்டார் வழக்கிற் பின்வரும் கதை ஒன்றும் வழங்குகின்றது:

முன்னொரு காலத்திலே இவ்விடத்தில் வாழ்ந்த ஒரு பெரியாருக்குக் கண்பார்வை குறைந்து போயிற்று. அவர் சில காலமாக வைரவப்பெருமானை மெய்யன்போடு வணங்கி வந்தார். திருவருளால் அவருக்குக் கண்பார்வை மீண்டும் கிடைப்பதாயிற்று. அதனால் அவர் வழிபட்ட வைரவப் பெருமானுக்கு 'விழிதீட்டி ஞான வைரவர்' என்ற பெயரும் சூட்டப்பட்டது (தகவல்: எஸ். முருகையா, பன்னாலை.)

விழிதீட்டி என்பதே பழைய பெயர் என்பதற்கு இலக்கியச் சான்றும் காட்டலாம். விழிசிட்டி ஞானவைரவசுவாமி பேரில் எழுந்த ஊஞ்சற் பாடலில் இவ்வூர் விழிதீட்டி என்றே குறிக்கப் பட்டுள்ளமை காண்க:

"வையமகிழ் விழிதீட்டிப் பதியில் வாழும்
வளர்ஞான வயிரவரே ஆடீர் ஊஞ்சல்.."

(தகவல்: விழிசிட்டி க. உமாமகேஸ்வரன்)

'ஊர்' ஈற்று இடப்பெயர்கள்

ஊர் + தல் = நகர்தல், பரவுதல், வடிதல், அடர்தல், ஊர்தல், ஏறுதல், ஊர்கை; ஊர் = வசிக்கும் ஊர் (த.லெ.1: 498). ஊர் என்ற சொல் மிகமிகப் பழைமை வாய்ந்ததாகும். பண்டைத் திராவிடர் (Pro-Dravidians) தாம் குடியேறிய இடங் களில் 'ஊர்' என்ற பெயரை இட்டு வழங்கியிருக்கிறார்கள். சுவாமி விபுலாநந்தர் தாம் எழுதிய 'மேற்றிசைச் செல்வம்' என்னும் கட்டுரையில் சுமேரியத் தலைநகர் நிப்பூர், பாபிலோனி யாவில் தைகிராஸ் நதிக்கரையிலிருந்த ஆரூர் முதலிய ஊர் களைக் குறிப்பிட்டு, திராவிடரின் பரவல் பற்றி எழுதியுள்ளார் (அருள் செல்வநாயகம், 1964:34-38). ஊர் என்ற பெயர் கொண்ட ஏழு இடப்பெயர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற் காணப்படு கின்றன. உலகப் பழைய நாகரீககாலத்து அனைத்து இடங்களி லும் 'ஊர்' என்ற இடப்பெயர் காணப்பட்டு வந்துள்ளமையை தாவீது அடிகளின் கூற்றும் சான்றுபடுத்துகிறது:

".. Nearly all the words for cities are Sumero - Dravidian in origin, (a) whether it be "Uur" which entered from present-

day Iraq, where the ancient Sumerian had a populous city called "Uur" the ruins of which were excavated by the archaelogists and from which came the patriarch Abraham to Poles times.. .." (Daaviidu:19702:50)

ஊர் என்னும் சொல் திராவிட இன மொழிகளுக்குப் பொதுவான ஒரு பழைய சொல். துளு நாட்டிலும் ஊர் என்னும் பெயருள்ள பல ஊர்களுள (மயிலை சீனிவேங்கடசாமி 1966:76). சங்கத் தமிழ் இலக்கியங்களிலும் "ஊர்", "ஊர" என்ற சொற்கள் பயின்று வந்துள்ளன. பல்லவர் காலம் முதலான இலக்கியங் களில் ஊர்ப் பெயர்கள் பரவலாக இடம்பெறலாயின. தமிழகத்தில் ஊர் என்ற ஈற்றுப் பெயருடைய பல் நூற்றுக்கணக்கான இடப் பெயர்கள் கொண்ட ஊர்கள் காணப்படுகின்றன. "ஊர்" ஈற்று இடப்பெயர்களாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் 120 இடங் களும், தஞ்சை மாவட்டத்தில் 518 இடங்களும், செங்கற்பட்டு மாவட்டத்தில் 462 இடங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 86 இடப்பெயர்களும் இடம்பெற்றுள்ளதாகக் கணித்துள்ளார் மெய். சந்திரசேகரன் (1983).

அண்மைக் காலங்களில் மக்கள் காடு திருத்தி, மனை அமைத்துக் குடியேறுகின்ற இடம் புது + ஊர் = புத்தூராகின்றது. அது போன்றே பண்டைநாளில் மக்கள் புதிதாகத் தாம் அமைத்த குடியிருப்பினை "ஊர்" என்றனர். ஊர்தல் = ஏறுதல் என்ற பொருள் தருவதால் குடிகள் வந்து நிலையாக ஊர்ந்த (ஏறிய, பரவிய) இடமே ஊராயிற்று எனலாம் (S.V. Subramaniam:20.04.84). இவ்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்திலே 'ஊர்' ஈற்றுப் பெயரின வாகக் குடத்தனைக்கரையூர், கொற்றையூர், செட்டியாஊர், நல் லூர் (இரு இடங்கள்) பாசையூர், புத்தூர் என்ற ஏழு இடங்களுள. இவற்றோடு 'ஊர்' என்ற சொல் முன்னொட்டாக அமைந்த 'ஊரணி' என்ற இடப்பெயரும் இவ் வரிசையிற் குறிப்பிடத்தக்கது.

குடத்தனைக்கரையூர் (வடம.வ.கி.142.1)

இவ்வூர் வல்லிபுரத்துக்குத் தென்கிழக்கே மணற்காடு, வலிக் கண்டி, பங்குனிப்பிட்டி, கருமணல்கும்பி, இந்துமாக் கடல் ஆகிய பகுதிகளுக்கு நடுவே அமைந்துள்ளது. யாழ்ப் பாணக் குடாநாட்டின் கிழக்குப் பக்கமாகவுள்ள கடற்கரையூர்

களில் இதுவும் ஒன்றாகும். குடமியன், குடத்தனை என்னும் ஊர்ப்பெயர் விளக்கங்களையும் ஈண்டு நோக்குதல் பொருத்த மாகும். இங்கு நோயுற்றோருக்கு மந்திரத்தால் சிகிச்சை செய்து நோயகற்றும் நல்ல மருத்துவர்கள் வாழ்கின்றார்கள் என்றும், இவர்கள் 'மலையாளத்து மாந்திரீக' மரபினர் என்றும் கூறப்படு கிறது.

கொற்றையூர் (வடம.தெ.மே.127.3)

கொற்றம் + ஊர் > கொற்றையூர் ஆயிற்று. இஃது தமிழகத்திலுள்ள கொற்றையூர்ப் பெயருடன் ஒத்துள்ளது. எனவே இங்கு வாழ் மக்கள் அவ்வூர்ப் பழங்குடிகளின் மரபினராக இருக்கலாம். இவ்வூர் கரணவாய் வடக்கில் அமைந்துள்ளது.

செட்டியாஊர் (வடம.வ.கி.123.3)

இவ்விடம் கெருடாவிற் கிராமசேவகர்பிரிவில் அமைந் துள்ளது. இங்கு செட்டிமாரது குடியேற்றமும் வணிக நடவடிக்கை களும் இடம்பெற்றபோது இப்பெயர் ஏற்பட்டிருத்தல் இயல்பே.

நல்லூர் (நல்.33.1)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள முருக வழிபாட்டிடங் களுள் பழையனவாகவும் பெருமை மிக்கனவாகவும் திகழ்வன நல்லூர், மாவிட்டபுரம், சந்நிதி ஆகியனவாகும். நல்லூர்க் கந்த சுவாமி கோயிலை நடுவணாகக் கொண்ட இடமே நல்லூர். இதன் வடக்கே சட்டநாதர் கோயிலும், கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும், மேற்கே வீரமாகாளிஅம்மன் கோயிலும், தெற்கே கைலாசநாதர் கோயிலும் எல்லைக் காவல்நிலைக் கோயில்களாக அமைந்துள்ளன.

இது யாழ்ப்பாண அரசின் தலைநகராக விளங்கியமை யாலும், இங்கே புகழ் வாய்ந்த முருகன்கோயில் காணப்படுவ தாலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகச் சிறந்த ஓரிடமாக நல் லூர் திகழ்கிறது. நல்லூரின் பெயரால் உதவி அரசஅதிபர் பிரிவும் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித் துறைக்குச் செல்லும் பெருந்தெருவின் இரண்டு மைல் தொலை

வில் நல்லூர்க் கோயில் இடம்பெறுகிறது. நல்லூரின் வடக்கே திருநெல்வேலி, கள்ளியங்காடு, கிழக்கே நாவற்குழி, தெற்கே அரியாலை, மேற்கே யாழ்ப்பாணம் ஆகியன எல்லைகளாக அமைந்துள்ளன. நல்லூர்க் கோயிலிலிருந்து கிழக்கே 440 யார் தொலையில் சங்கிலியன் தோப்பும், பழைய நல்லூர்க் கோயில் அமைந்திருந்த இடமும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத் தமிழ் அரசர்கள் நல்லூரில் அரசிருக்கை அமைத்து, கோட்டை கொத்தளங்களுடன் ஆட்சி நடத்தினர். நல்லூர் நகர் எப்போது தொடக்கம் யாழ்ப்பாணத்தரசரின் அரசிருக்கையாக விளங்கியதென்பதும், சிங்கைநகரும் நல்லூரும் ஒன்றோ என்பதும் ஆய்வுக்குரியனவாகவே உள்ளமை முதலா வது இயலிலே ஆராயப்பட்டுள்ளமை ஈண்டும் நோக்கத்தக்கது. யாழ்ப்பாண அரசர் காலத்து நல்லூர் நகரின் அமைப்புப் பற்றி யாழ்ப்பாண வைபவமாலை (பக்:26) வருமாறு கூறுகிறது:

> "நாலு மதிலும் எழுப்பிய வாசலும் ஒழுங்காய் விடுவித்து, மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் பூங்காவும், பூங்கா வன நடுவிலே ஸ்நானமண்டபமும், முப்புடைக் கூபமும் உண் டாக்கி, அக் கூபத்தில் யமுனா நதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்து விட்டு, நீதிமண்டபமும், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனாவீரரிருப்பிடம் முதலிய அனைத்தும் கட்டுவித்து........ கீழ்த் திசைக்குப் பாதுகாப்பாக வெயிலுவந்த பிள்ளையார் கோவிலையும், மேற்றிசைக்கு வீரமாகாளி அம்மன் கோவிலை யும், வட திசைக்குச் சட்டநாதேஸ்வரர் கோவில், தையல்நாயகி அம்மன் கோயில், சாலை விநாயகர் கோவில் ஆகியன வற்றையுங் கட்டுவித்து........... வாழ்ந்திருந்தான்."

தமிழ் அரசர்களின் அரசிருக்கை நல்லூரில் அமைந் திருந்த காலத்தில் கொழும்புத்துறை, பண்ணைத்துறை, காங் கேசன்துறை, பருத்தித்துறை என்பன சிறந்த துறைகளாகத் திகழ்ந்தன. பரராசசேகரனின் மகன் கனகசூரியன், அவரது மகன் சிங்கைப் பரராசசேகரன் (கி.பி.1478) என்போர் நல்லூரைக் காவல் மிக்க அரசிருக்கையாகக் கொண்டு சிறந்த முறையில் ஆட்சி புரிந்தனர். சிங்கைப் பரராசசேகரனே யமுனாரி (யமுனை ஏரி) யைக் கட்டுவித்தான். அதன் அருகிலேயே அரச மாளிகை இருந்திருக்கிறது. இப்பகுதி இன்று 'சங்கிலியன் தோப்பு' என அழைக்கப்படுகிறது. இங்கு இடிந்த மதில்களும், கற்களும்

சிதறிக் கிடக்கின்றன. நல்லூரின் இறுதி அரசன் சங்கிலியாவான். கி.பி.1620இல் நல்லூர் அரசிருக்கை போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டபோது, அரசமாளிகை முற்றாக இடிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டது. ஆதிக்க வெறிபிடித்த போர்த்துக்கேயர் கையாண்ட போர் முறைகளில் இதுவும் ஒன்றாகும்.

சங்கிலி மன்னன் இறந்ததும் அவனது தோப்பு 'சங்கிலி யன் தோப்பு' என்ற பெயரைப் பெறுவதாயிற்று. இங்கு கோபுரத் தோடு கூடிய தலைவாசல் இன்றும் காணப்படுகிறது. சங்கிலியன் தோப்புக்கு எதிர்ப்புறமாக வரலாற்றுத் தொடர்புடைய 'மந்திரி மனை' என்றழைக்கப்படும் மாளிகை காட்சி அளிக்கிறது. இது யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர் காலத்தில் கட்டப்பட்டு, மந்திரியின் வசிப்பிடமாகப் பயன்பட்டிருக்கிறது. இதன் அருகே ஒரு நிலவறை கோபுரமுடையதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இது சட்டநாதர் கோயி லுடன் இணைந்துள்ளது. அதனை அடுத்து பழைய 'யமுனா ஏரி' அமைந்துள்ளது. யமுனா நதியிலிருந்து நீர் கொண்டுவரப் பட்டு, இதில் கலக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றதென்பர். இதில் வற்றாத நீரூற்று இருந்துள்ளது. தற்போது நீரூற்றுக்கள் அடை பட்டுக் காணப்படுகின்றன. இதனுள் பண்டைநாளில் அகழிகளும் இயந்திரப் பொறிகளும் இருந்தன எனவும் கூறப்படுகிறது. நல் லூர்க் கந்தசுவாமி கோயிலின் எதிரே சிறிது தொலைவில் 'முத்திரைச்சந்தி' என்ற ஓரிடமுண்டு. அச் சந்தியில் வீரம்மிகு எழிற்கோலத்துடன் குதிரையில் அமர்ந்து வாள் ஓங்கிய நிலையில் சங்கிலியன்சிலை காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

முத்திரைச்சந்திக்கு அருகிலேயே பழைய நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இருந்ததென்றும், போர்த்துக்கேயர் அதனை இடித்தழித்து அவ்விடத்தில் தற்போதுள்ள தேவாலயத்தைக் கட்டினர் என்றும் கூறப்படுகிறது. பிலிப்தே ஒலிவேரா என்ற போர்த்துக்கேயத் தளபதியே கி.பி.1620இல் கோயிலை இடிப் பித்து அதன் கற்களைக் கொண்டு, தேவாலயத்தையும் தமக் குரிய வீடுகளையும் கட்டுவித்தான் என்பது வரலாற்றுச் செய்தி யாகும் (டி.ரி. செல்வநாயகம்: 1950:4-9).

யாழ்ப்பாண அரசர்கள், இளவரசர்கள் ஆகியோரிற் சிலர் தங்கள் பெயருடன் 'பண்டாரம்' என்ற பெயரையும் சேர்த்துக் கொண்டார்கள். பண்டாரக்குளம் என்றால் அரசனுடைய குளம் என்பது பொருள். இது அரசவீதி, பூதவராயர் கோயில் இவற்றிற்கு அண்மையில் இருக்கிறது. நல்லூர் அரசர்களின் நினைவாக

இக்குளம் அமைந்துள்ளது. நல்லூர்க்கந்தசுவாமி கோயிலின் தென்கிழக்கேயுள்ள, கோயில் தென்னந்தோட்டத்தில் 'பண்டார மாளிகை' என்ற கற்றூண் காணப்படுகிறது. இது யாழ்ப்பாணத் தரசர்களுள் ஒருவரான புவிராசபண்டாரம் (பரராசசேகரன் 1582-1592) என்ற மன்னனை நினைவூட்டுகிறது. இங்கே யாழ்ப் பாணத்து அரசர்களுடைய மாளிகை இருந்திருக்க வேண்டும். இதன் வடபாகமாகப் பண்டாரக்குளமும், அதன் அருகே கட்டிடச் சிதைவுகளும் காணப்படுகின்றன. இதற்கு மேற்கேயுள்ள 'அரச வெளி', யாழ்ப்பாண அரசர் காலத்து முற்றவெளியாக இருந்திருக் கலாம் என்கிறார் குலசபாநாதன் (1971: 16-18).

யாழ்ப்பாண அரசருடைய போர்த்தெய்வமாக வீரமாகாளி போற்றப்பட்டாள். தமிழரசர் கட்டுவித்த வீரமாகாளி அம்மன் கோயில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டுவிட, இப்போது புதிய ஆலயம் அவ்விடத்தில் அமைந்துள்ளது. சட்டநாதர் கோயி லின் பழைய அழிபாடுகளுடன், புதுக்கோயிலும் பழைய வர லாற்றை நினைவுபடுத்துகின்றன. நல்லூர்க்கந்தசுவாமி கோயில் மீண்டும் கி.பி.1793இல் அரச கட்டளையின் பேரிற் கட்டப்பட்டது. இலங்கையிலேயே மிகப் புகழ்பெற்ற அழகுக் கோபுரம் இக் கோயிலில் இன்று காட்சி தருகின்றது. பக்கத்தில் நீராடுதுறையும், கோயிலின் அருகே நல்லை நகர் ஆறுமுகநாவலர் நினைவு மண்டபமும் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டை ஆண்ட அரசர் பலர் தம் பெயர் விளங்கு மாறு நல்லூர்களை உருவாக்கினார்கள். பாண்டிநாட்டின் வீரபாண் டியநல்லூர், அரசகேசரிநல்லூர், மானாபரணநல்லூர், செயதுங்க நல்லூர் முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தைச் சார்ந்த மன்னர் பெயரை நினைவுபடுத்தி நிற்கின்றன (ரா.பி.சேதுப்பிள்ளை: 1976: பக்.30). அதுபோன்றே யாழ்ப்பாணத்துத் தமிழரசர் தம்பெயர் நிறுவ, நல்லூரை உருவாக்கி அதனைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரியலாயினர்.

ஈழத்திலே நல்லூர் எனப்பெயர் கொண்ட ஊர்கள் ஐந் துள. இவை யாழ்ப்பாணத்து நல்லூர், பூநகரியிலுள்ள நல்லூர், மற்றவை குருநாகல், களுத்துறைப் பகுதிகளில் உள்ளன. 'சிங் கள நாட்டிலுள்ள நல்லூர் என்ற இடப்பெயர், ஆங்குப் பண்டை நாளிற் குடியேறிய திராவிடரால் இடப்பட்டுப், பின்னர் சிங்களவர் களால் வழங்கப்பட்டு வருகின்றமையினால் சிங்கள மொழியியல் புக்கு அமைய நல்லூர், நல்லூருவ எனச் சற்றே விகாரப்பட்டி ருக்கின்றது' என்கிறார் குமாரசுவாமி (1918:2).

நல்லூர் (பூ.170.2)

இது பூநகரியிலிருந்து கிழக்குப் பக்கமாகப் பரந்தனுக்குச் செல்லும் சாலையின் 5ஆம் மைல் கல்லுக்கு அண்மையில் அமைந்துள்ளது. இந் நல்லூர் வளமான மருதநிலத்தூராகக் காணப்படுகின்றது. பண்டைத் தமிழரின் குடியேற்றப் பகுதிகளில் ஒன்றாக பூநகரிப் பகுதி விளங்கிற்றென்பதற்கு இங்கு அகழ் வாராய்ச்சி மூலம் கிடைத்துவரும் புதைபொருட்கள் சான்றா கின்றன. இந் நல்லூர்ப் பதி பூநகரிப் பகுதியில் உள்ளதால் இதுவும் பண்டைய குடியிருப்பு இடம் என்பது தெளிவாகின்றது. இதுதொடர்பாகக் க. குணராசா (1994:65) கூறுவது மேலும் ஆராயத்தக்கதாகும்:

> "கி.பி 10ஆம் நூற்றாண்டளவில் பூநகரிப் பிரதேசம் சோழரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதற்கு ஆதாரங்களுள்ளன. அவ் வேளையில் அப்பிரதேசத்தின் சோழப்பிரதிநிதியாக இருந்த புவனேகபாகு, பூநகரியில் இன்று விளங்குகின்ற நல்லூர் என்ற பகுதியில் தனது மாளிகையை அமைத்திருக்க வேண்டும். உண்மையில் இன்று கிடைக்கின்ற ஆதாரங்களி லிருந்து பூநகரியில் இன்று இருக்கின்ற நல்லூர் என்ற பிர தேசமே தமிழர் அரசின் புராதன நல்லூர் ஆகும் எனக் கொள்வதில் தவறில்லை. தென்னிந்தியாவில் பல ஊர்களுக்கு நல்லூர் எனப் பெயருள்ளது. ஆகவே, அத்தகைய ஒரு பெயர் பூநகரியிலுள்ள இந்தப் பிரதேசத்திற்கும் சோழரால் இடப்பட்டிருந்தது எனக் கொள்ளலாம்".

பாசையூர் (யாழ்.மா.ந.1.7)

பாசி + ஊர் = பாசியூர் > பாசையூர். யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லையின் தென்கிழக்கே யாழ்ப்பாணக் கடலோரி ஓரமாக பாசையூர் அமைந்துள்ளது. இவ்வூரின் எல்லையில் பரவைக்கடல் அமைந்திருப்பதால் ஆங்காங்கே கடற்கரை ஓரங் களிற் பாசிகள் படர்ந்திருத்தல் இயல்பே. அந்நிலையில் பாசி + ஊர் = பாசியூர் > பாசையூர் என்று வழங்கியிருக்கலாம்.

பாசை + ஊர் > பாசையூர் என்ற அடிப்படையிலும் விளக்கம் கூறப்படுகிறது. Passo (Passo= sense of cases or a quay or village) என்ற போர்த்துக்கேயச் சொல்லிலிருந்தே 'பாசை யூர்' என்ற பெயர் தோன்றிற்று என்கிறார் சுவாமி ஞானப்பிரகாசர் (1919:75-77). இங்கு கத்தோலிக்கரே பெரும்பான்மையோராக வாழ்கின்றமை அவரது கருத்தைப் பொருளுடையதாக்குகின்றது.

புத்தூர் (வலி.கி.78.1)

புதுமை + ஊர் = புத்தூர். புத்தூரின் கிழக்கே வெள்ளைப் பரவைக்கடல், கப்புது என்பனவும், வடக்கே ஆவரங்கால், மேற்கே நவக்கிரி, அச்செழு என்பனவும், தெற்கே நீர்வேலி முதலிய ஊர்களும் இதன் எல்லைகளாக உள்ளன. இவ்வூர் வடக்குத்தெற்காக நான்கு மைல் நீளமும், கிழக்கு மேற்காக இரண்டரை மைல் அகலத்தையும் கொண்டது. இதனூடாக யாழ்ப்பாணம் + பருத்தித்துறை பெருஞ்சாலையும், சாவகச்சேரி + சுன்னாகம் தெருவும் செல்கின்றன.

புதிதாகக் காடு திருத்தி, களனி அமைத்துக் குடியமர்ந்த இடத்தையே புத்தூர் என்பது வழக்கம். ஆனால் இவ்வூர் புதிய தன்று, ஏனெனில் அவ்வூரில் நவக்கிரி என்ற இடத்திலேயுள்ள 'நிலாவரை' என்னும் வற்றாத நீர்நிலையூற்று இக்கருத்தை மறு தலித்து, இவ்வூர் மிகப் பழைமையானது என்பதைச் சான்று படுத்துகின்றது. இவ்விடப் பெயர் பற்றிய பின்வரும் கருத்துக்கள் அறியப்பட்டுள்ளன:

1. மானிப்பாய், உடுவில், உடுப்பிட்டி முதலிய இடங்களி லிருந்து குடிபெயர்ந்துவந்த மக்கள் இவ்விடத்தில் புதி தாகக் குடியேறியதால் இப் புதிய இடம் காலப்போக்கில் புத்தூராயிற்றென்ப.
2. "யாழ்ப்பாணத்து அரசன் தனக்கு அமைச்சராக இருந்த சேதிராயருக்குப் புத்தூரென்று பின்னர் வழங்கப்பட்ட இடத்தைத் திருத்தி அவ்வூரை அவனுக்குக் கொடுத் தான். எனவே அது புதிதாக ஆக்கப்பட்ட பெயராதலின் புத்தூரெனப்பட்டது என்பர் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை (1933:12).
3. ஆரியச்சக்கரவத்தி காலத்தில் படைவீரர்களுக்கு இவ் வூரும், அயலிலுள்ள ஏழூர் வருமானமும் கொடுக்கப் பட்டன. புத்தூர் வேளாளரை ஏனைய மக்கட்குழுவினரும் அயலூரினரும் 'ஏழூர்க்கமக்காரர்' என்று அழைப்பதும் நோக்கத்தக்கதாகும்.

4. இங்கு புதுமையான 'நிலாவரை நீரூற்று' இருந்தமையால் (புதுமை + ஊர் =) புத்தூர் என்ற வழக்கும் ஏற்பட்டிருக் கலாம். இப் பின்னணியிற் புத்தூர் சில இலக்கியங்களில் 'நவசீலம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. தமது ஊர்களிலிருந்து வந்து புதிய பிற இடங்களில் குடியேறிய மக்கள் தம் ஊர்ப்பெயர்களையே அங்கும் இட்டு வழங்கினர் என்பது பேருண்மை. தென் இந்திய மக்களுடன் தொடர்புடைய ஈழத்து அனைத்துக் குடியிருப் பிடங்களுக்கும் இந்திய ஊர்ப்பெயர்களையே பெரிதும் இங்கு இட்டு வழங்கி வந்திருக்கிறார்கள் என்பது ஈழத்து இடப்பெயர்களால் அறியப்படுகிறது. அவ்வகையில் வட ஆர்க்காடு, தமிழகம் ஆகிய பகுதிகளிலுள்ள புத்தூரி னரே இங்கும் இப்பெயரை இட்டு வழங்கிவந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இங்கு புத்தர்கலட்டி என்ற ஒரு குறிச்சிப்பெயர் வழங்கு கின்றது. புற்று நிறைந்த கலட்டி நிலம் என்ற நிலையில் புத்துக் கலட்டி என்பது காலப்போக்கில் புத்தர் கலட்டியாயிற்று என்பர். ஆயினும் இங்கு பழைய புத்தர் சிலை ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. முன்பு தமிழிரிடையே புத்தமதம் நிலைபெற்றிருந்த போது, புத்தர்சிலையின் அல்லது புத்த மதத்தின் பின்னணியில் 'புத்தர்கலட்டி' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதுவதும் தவறாகாது. வரலாற்றுப் பழைமை மிக்க இவ்வூரில் 1916இல் விஷ்ணு சிலையொன்றும் 1954இல் புத்தர்சிலை ஒன்றும் அகழ்ந் தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

புத்தூரில் வயலும், தோட்டங்களும் நிறைந்து காணப் படுகின்றன. இந்தனை, நுனிவிற்குளம், நறுவிலிக்குளம், விரலானி, அம்பலவேலந்திடல், வேப்பங்குளம், கிராளி, ஆண்டித்தாழ்வு, அம்பலத்தாழை ஆகிய பகுதிகளில் நெற்செய்கை நடைபெறு கிறது. கொத்தடைப்பு, அம்பவுடை (அம்போடை), கருவம்பாதி, சொக்கத்திடல், அந்தராணை, குருக்கள்வளவு, பறங்கிவளவு, பள்ளிக்கூடவளவு, மந்திரியான்தாழ்வு, பூதவை, மல்வத்தை, கட்டியவத்தை, கொங்கவத்தை முதலிய குறிச்சிப்பெயர்களும் இங்கு வழக்கிலுள்ளன.

தமிழ் மன்னர் காலத்தில் காலாட்படையினரில் அம்புக் கருவி தாங்கியோர் வாழ்ந்த இடம் என்ற நிலையில் (அம்பு உடையோர்) அம்பவுடை(அம்போடை) என்ற பெயரேற்பட்டதென்

பார். கறிவேப்பிலை > கருவேப்பிரை > கருவம் எனத் திரிந்து > கருவம்பாதி என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதிக்கு மந்திரியாக நியமிக் கப்பட்ட 'அந்திராசி' என்பவருக்கு வழங்கப்பட்ட நிலம் அந்திராசி பூமி என்றிருந்து, காலப்போக்கில் அந்தரானையாக மாறிற்றென் பார். மேற்குறிப்பிட்ட 'அந்திராசி' காலத்தில் பூதத்தம்பி (கி.பி. - 1658) என்ற தமிழ் மந்திரியும் வாழ்ந்திருக்கிறார் என்பது இங்கு வழங்கும் பூதத் தம்பி நாடகத்தால் அறியப்படுகிறது. அந் நாடகச் செய்தியின்படி பூதத்தம்பி புத்தூரிற் பிறந்து, பூகையூரில் வாழ்ந்தார் என்ற செய்தி அறியப்படுகிறது. புத்தூரிலே யுள்ள 'மந்திரியான் தாழ்வு' என்ற குறிச்சிப்பெயர் இப்பூதத்தம்பி மந்திரியின் பெயரின் காரணமாகவே தோன்றியிருக்க வேண்டு மென இவ்வூர் மக்கள் கருதுவர் (தகவல்: ப. புஸ்பரத்தினம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்).

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வியப்புக்குரிய நீரூற்றுக் கிணறுகளில் மிகப் பெரியதான 'நிலாவரைக்கிணறு' இங்கு அமைந்துள்ளது. நிலாவரை என்பது நிலத்தின் ஆழ எல்லை காணமுடியாதது என்ற பொருளுடையது என விளக்கம் கொடுக் கப்படுகிறது. ஆனால் 1896இல் அரசு நடாத்திய ஆய்வின் பயனாக இதன் கிழக்குப்பகுதி 136அடி ஆழமும், வடக்குப்பகுதி 145அடி ஆழமும், மேற்கும் தெற்கும் முறையே 121அடி, 120அடி ஆழமும், இதன் நடுப்பகுதி 130அடி ஆழமும் கொண்டதாக அளவிடப்பட்டுள்ளது. இக்கிணறு 50 அடிச் சுற்றளவு உடைய தாகும். 'நிலாவரை' என்ற பெயர்த் தோற்றக் காரணங்கள் பின்வருமாறு கூறப்படுகின்றன:

1. இராமபிரான் தன் படைகளுக்கு நீர் பெறும் பொருட்டு அம்பால் நிலத்தில் ஊன்றியபோது இக்கிணறு தோன்றி யது எனப் பழமரபுக் கதை வழங்குகிறது.
2. முன்பு இவ்விடத்தில் சிறு குகை காணப்பட்டதென்றும், பின்பு இக் குகை இடிந்து கிணறாயிற்றென்றும் கூறுவர்.
3. இடிமுழக்கத்தினால் இக்கிணறு தோன்றியதென்றும் கூறப் படுகின்றது.
4. இப்பகுதி சுண்ணக்கல் படிந்த நிலமாதலால், இதன் மேற்படை புவியியல் மாற்றங்களால் இடிந்து கீழே படிய, ஆங்கே ஒரு பெரிய நீரூற்றுத் தோன்றிற்று எனப் புவியியல் ஆய்வாளர் கூறுவர்.

இந் நீரூற்றுக் கிணற்றுக்கும் வடக்கேயுள்ள கீரிமலை நீரூற்றுக்கும் தரைக்கீழ் நீர்த் தொடர்பு காணப்படுகிறது. இதனால் இந் நீர் உப்புத்தன்மை உடையதாகவுள்ளது. இது போன்ற நீரூற்றுக்கள் சுண்ணக்கல் பாறையமைப்புக் கொண்ட பின்லாந்து, பிரான்சு, பெல்ஜியம் முதலான நாடுகளிலும் காணப்படுகின்றன.

'குடியிருப்பு' ஈற்று இடப்பெயர்கள்

குடி = குலம், கோத்திரம், குடிமக்கள், ஊர், மருத நிலத்தூர், குடிசை, புரவம் (தமிழகராதி: 93). உறவு முறையுடைய பல குடும்பத்தினர் சேர்ந்து வாழுமிடம் குடியிருப்பாகும் என்கிறார் ரா.பி. சேதுப்பிள்ளை (1976:60). தமிழகத்திலும் குடியிருப்பு என்ற பெயரில் பல நூற்றுக்கணக்கான இடப்பெயர்கள் வழங்குகின்றன. இவை முன்னொட்டு நிலையில் ஆட்பெயர், சூழல், பழைமை, புதுமை என்ற அடிப்படையிற் பெயர் ஆக்கம் பெற்றுள்ளன. இவ் வகையில் இரு பெயர்களே யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ளன.

குடியிருப்பு (தென்ம.118)

இது மந்துவில் ஊரின் ஒரு பகுதியாகும். மந்துவில் பண்டை நாளிற் காட்டுப் பகுதியாக விளங்கியதென்றும், பின்பு மக்கட் குடியிருப்பு ஏற்பட்டபோது இவ்விடம் குடியிருப்பெனக் காரணப்பெயர் பெற்றதென்றும் கூறப்படுகிறது.

கோயில்குடியிருப்பு (தென்ம.ந.21.8)

சாவகச்சேரி நகரசபைப் பகுதிகளில் கோயில் குடியிருப்பும் ஒன்றாகும். சாவகச்சேரிச் சிவன் கோயிலுக்கு உரித்தான காணிகளே இங்கு பெரிதும் உள்ளன. இக் கோயிலுக்குப் பணிபுரிந்த மக்களே பண்டைநாளில் இங்கு குடியிருந்தமையாற் காரணப்பெயராய் கோவில்குடியிருப்பு எனப் பெயர் பெறுவதாயிற்று. கோயிலுக்கு உரிமையான குடியிருப்புப் பகுதி என்பது இதன் பொருளாம்.

'குறிச்சி' ஈற்று இடப்பெயர்கள்

குறிச்சி, குறிஞ்சி, குறிஞ்சிநிலத்தூர் என்ற வழக்காறுகள் பழங்காலத்தின் இலக்கிய வழக்குப் பெற்றவை. குறி என்ற சொல் = அடையாளம், இலக்கு, குறியிடம், நோக்கம், குறிப்பு; குறித்தல், கோடுவரைதல், சுட்டுதல், பற்றுதல் எனப் பொருள் படும் (த.லெ. 2:1047-1048). தொடக்க காலத்திற் குறிச்சி என்பது குறவர் குடியிருப்பைக் குறித்ததாயினும் பிற்காலத்தில் மற்றைய குலத்தார் வாழும் சிற்றூர்களும் அப்பெயர் பெற்றன என்ப ரா.பி. சேதுப்பிள்ளை (1976. 6). குறிச்சி என்ற பெயருடைய இடப்பெயர்கள் குறிஞ்சி நாடாகிய சேர நாட்டிலேயே பெரிதும் வழக்கிலுள்ளன. எனவே குறிச்சியீறு அமையும் இடப்பெயர்கள் தொடக்க காலத்திற் சேர நாட்டிலே தோற்றம் பெற்றுப், பின்பு தமிழர் வாழும் ஏனைய பகுதிகளிலும் இடம் பெறுவதாயிற்று எனக் கொள்வது பொருந்தும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பூநகரி, தென்மராட்சி ஆகிய இரு பகுதிகளில் மட்டும் 'குறிச்சி' என்ற தனி ஊர்ப்பெயர்கள் அமைவதைக் கொண்டு, இப்பகுதியிற் சேரர் தொடர்பு பெரிதும் இருந்திருக்குமோ என்ற முடிபுக்கு வரக்கூடியதாக இருக்கிறது. ஏனைய பகுதிகளில் சிறு பகுதியைச் சுட்டும் நிலையிலேயே 'குறிச்சி' என்ற சொல் பயன்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

இடைக்குறிச்சி (தென்ம.115.1)

வரணி, தாவளைஇயற்றாலை ஆகிய ஊர்களுக்கு இடையேயுள்ள குடியிருப்புப் பகுதியாக இவ்விடம் அமைந்தமையால் இது இடைக்குறிச்சி எனப் பெயர் பெறுவதாயிற்று. இது போன்றே 'இடைக்காடு' என்ற ஊரும் பெயர் பெற்றதெனலாம். இவ்வூரின் வடபகுதி 'வடக்குக்குறிச்சி' எனப் பெயர் பெறும். இங்கு 'சுட்டிபுரம்' என்ற குறிச்சியில் பழைமை வாய்ந்த 'சுட்டிபுரம் கண்ணகி அம்மன்' கோயில், சோலையும் இயற்கை வனப்பும் கொண்ட சூழலில் அமைந்துள்ளது.

கரம்பைக்குறிச்சி (தென்ம.115.2)

கரம்பை + குறிச்சி > கரம்பைக்குறிச்சி. இது இடைக் குறிச்சிக்கு அருகிலுள்ள இடம். இங்கு கரம்பைச் செடிகள் (Carissa sprinarum) பெரிதும் காணப்பட்டமையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

கொல்லர்குறிச்சி (ப.174)

கொல்லர் + குறிச்சி = கொல்லர்குறிச்சி. இவ்விடத்திற்கு அயல் இடங்கள் யாவும் (அரியம் பொந்து, செம்பன்குண்டு, மறவ குறிச்சி, செல்லையாதீவு முதலியன) தொழில் நிலையப் பெயராலும் ஆட்பெயராலும் அமைந்திருப்பதால் கொல்லர் குறிச்சியும் தொழிலாற் பெற்ற பெயர் எனலாம்.

சித்தன்குறிச்சி (ப.174.4)

சித்தன் + குறிச்சி = சித்தன்குறிச்சி. சித்தன் என்ற தலைமகன் ஒருவன் பெயரால் இப்பெயர் ஆக்கம் பெற்றுள்ளது.

செட்டியாகுறிச்சி (ப.171; தென்ம.100.1)

இப்பெயரில் ஈரிடங்கள் பூநகரியிலும், மட்டுவில் பகுதியிலும் அமைந்துள்ளன. பண்டைநாளிற் செட்டி நாட்டார் அல்லது செட்டிகள் வந்து குடியேறிய இடங்களாக இவை இருக்கலாம். மட்டுவில் செட்டியாகுறிச்சியில் இன்றும் செட்டிமார் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மறவகுறிச்சி (ப.174.3)

மறவர் + குறிச்சி > மறவகுறிச்சி. சாவகச்சேரிப் பகுதியிலுள்ள மறவன்புலவு என்ற இடத்தைப்போன்று, இங்கும் மறவர் வாழ்ந்ததன் காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருத்தல் இயல்பே.

மன்னன்குறிச்சி (தென்ம.111.2)

மன்னன் + குறிச்சி = மன்னன் குறிச்சி. இது தென்மராட்சியில் மிருசுவில் என்ற ஊரின் ஒரு பகுதியாகும். இவ்விடத்தில் முன்பு அரச மாளிகை இருந்து, பின்னர் அழிந்து விட்டதாகக் கூறுவர். ஆனால் இதற்குரிய சான்றுகள் இதுவரை அகப்படவில்லை. அகழ்வாராய்ச்சியின் மூலமே இதன் உண்மைத் தன்மையை அறியலாம்.

'கூடல்' ஈற்று இடப்பெயர்கள்

கூடல் என்பது மதுரைமாநகரைக் குறித்துவருவது என்பதைச் சங்க இலக்கியங்கள், பாண்டியச் செப்பேடுகள், வேள்விக்குடிசாசனங்கள் முதலியன அறியத்தருகின்றன (Epigraphica Indica:Vol.17: p.291). இறையனார் அகப்பொருளுரையிற் பாண்டியர் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த செய்தி விரிவாகக் கூறப்படுகின்றது. சங்கம் = கூடல். கூடல் பழந்தமிழ்ச் சொலாகும். மேலும் இரு ஆறுகள் சேருமிடம் கூடல் என்றும், மூன்று ஆறுகள் சேருமிடம் முக் கூடல் என்றும் பெயர் பெறும் (சேதுப்பிள்ளை:1976:43). கூடல் ஈறுபெற்ற மூன்று இடப்பெயர்கள் இங்கே வழக்கிலுள்ளன.

புளியங்கூடல் (தீவு.வ.16.7)

இது சுருவில் கிராம சேவகர் பிரிவிலுள்ள ஓரிடமாகும். புளியமரங்கள் சேர்ந்து சோலையாகக் காணப்பட்ட இடம் என்ற நிலையில் இப்பெயரேற்பட்டது.

மயிலன்கூடல் (வலி.வ.64.3)

மயில் + அம் + கூடல் > மயிலன்கூடல். இது தெல்லிப்பளைப் பகுதியில் அமைந்துள்ளது. இதற்கு மூன்றரை மைல் தொலைவில் மாரீசங்கூடல் என்ற இடம் காணப்படுகிறது. இராமாயணத்தில் இடம் பெறும் மயிலரக்கன்கதை, மாரீசன்கதை இரண்டையும் இவ்விடப்பெயர்களுடன் தொடர்புபடுத்திக் கூறும் நாட்டார் வழக்குக் கதைகளும் இங்கு வழக்கிலுள்ளன. மயில்

+ தங்கு + கூடல் > மயிலன்கூடல் எனப் புணர்ந்தது என்று கூறுகின்றார் மயிலன் கூடலூர் பி. நடராசன். மாவிட்டபுரத்துக் கோயில் மயில்கள் தங்குமிடம் இது என்றும், பண்டைய நாளில் காடுகள் செறிந்து காணப்பட்ட நிலையில் மயிற் கூட்டங்கள் இங்கு காணப்பட்டனவென்றும் கதைகள் வழங்குகின்றன. இந் நூலின் பை ஈற்றுப் பெயர்கள் என்ற பகுதியில் வரும் மயிலப்பை என்ற பெயர் விளக்கத்தை ஈண்டு ஒப்பிட்டு நோக்குக.

மாரீசன்கூடல் (வலி தெ.மே.133.3)

மாரீசன் + கூடல் = மாரீசன்கூடல். இது மாதகலுக்கு அண்மையில் உள்ளது. மாரீசன் + கூடல் என்ற நிலையில் இராமாயணத் தொடர்பு காட்டப்படுகிறது. மாரி = காடு, காவல் தெய்வம், மழைத் தெய்வம். மாரிகோயிலுள்ள இடம் மாரிசம் எனப்படும். இங்கு பனங்கூடல் (பனஞ்சோலைகள்) செறிந்து காணப்படுகின்றன. தோட்டப் பயிர்ச்செய்கை நடைபெறுகிறது. இங்குள்ள கந்தசுவாமி கோயில் மிகப் பழையதும் பெயர் பெற்றதுமாகும். காவடி ஆட்டம் இங்கு சிறப்பாகப் போற்றப்படுகிறது. பழைமையான குடியேற்றம் இங்கு இடம்பெற்று, இங்கிருந்து ஏனைய இடங்களுக்குக் குடிகள் பரவின எனவும் கருதப்படுகிறது. மாதகல், சேந்தான்குளம் என்பன இதன் அயலிடங்களாகும். இங்கு போர்த்துக்கேயர் காலத்துக்குரிய "கைத்தார் கோயில்" என்ற பெயரில் தேவாலயம் ஒன்றுமுள்ளது. இங்கு திருவிழாக் காலத்திற் "பாஸ்" நாடகம், பொம்மைக் கூத்துக்கள் காலம்காலமாக நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன.

'சேரி' ஈற்று இடப்பெயர்கள்

சேர் > சேரி = ஊர். சேரி என்பதற்கு முல்லை நிலத்துார் என்ற குறிப்பும் உண்டு (த.லெ.3:1637). மக்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் சேரி என வழங்கியிருக்கலாம். சேரி பற்றிப் புலவர் சிவபாதசுந்தரனார் (1972:160-161) கூறும் கருத்துப் பொருத்தம் நோக்கி ஈண்டுத் தரப்படுகிறது:

> 'முல்லையுலகிற் பாடி என்பதைவிடச் "சேரி" என்ற ஊர்ப் பகுதியுமுண்டு. இந்த ஊர் குழுக்குடும்பத் தலைவன் தொழில் நெருக்கடியால் தன் சொத்தையும் குடும்பத்தையும் பிரிந்து விட்டபோது, அவர்கள் தம் வாழ்வு வளம் நோக்கி வந்து சேர்ந்த இடமாகும். பிரிந்து சேர்ந்தவிடம் சேரி எனப்படும். இங்கு இல்லம் சேர்ந்திருந்தாலும் குடும்பம் தனித்தே இருந்தது. எனவே சேரி தனிக் குடும்பத்தின் உறைவிடமாயிற்று. பாடி என்பது குழுக்குடும்ப நிலையையும், சேரி என்பது தனிக்குடும்பநிலையையுங் கொண்டவை எனத் தெளிக".

சாவகச்சேரி (தென்ம.ந.ச.21)

சாவகர் + சேரி > சாவகச்சேரி. சாவகம் > சாவகர். சாவகம் என்பது யாவா, சுமாத்திரா ஆகிய இடங்களைக் குறிக்கும் வரலாற்றுச் சொல்லாட்சியாகும். பண்டைய வரலாறு பற்றி எழுதிய தொலமி (Ptolemy கி.பி.150), யாவாவைச் சிறிய சாவகம் என்றும், சுமாத்திராவைப் பெரிய சாவகம் என்றும் குறிப்பிட்டுள்ளார். மலாயாக் குடாநாட்டுத் தீபகற்பங்கள் அனைத்தும் பண்டு "சாவகம்" என அழைக்கப்பட்டன. சாவகநாட்டிலே பண்டைத் தமிழர் பண்பாடு நன்கு நிலையூன்றியிருந்தமையை அங்குள்ள மொழி, சமயம், கட்டிடம் முதலிய கூறுகள் வெளிப்படுத்துகின்றன. அரசியல் - வணிகம் என்பவற்றினால் இத்தகைய தொடர்புகள் ஏற்பட்டிருக்கலாம் (O.W. Wolters,1967). முற்காலத்தில் சாவகர் வந்து குடியேறிச் சேரியாக வாழ்ந்த இடம் சாவகச்சேரி ஆயிற்று. சாவகர் பற்றி யாழ்ப்பாண வைபவ கௌமுதி வருமாறு குறிப்பிடுகிறது:

> தமிழகத்தோடு வணிகஞ் செய்த சாவகர் இரத்தின துவீபமென விளங்கிய ஈழத் தேயத்தையும் நன்கறிந்தவராய் ஆங்கும் பண்டைக் காலத்தே பண்டமாற்றஞ் செய்து வந்திருத்தல் சாத்தியமாமே. அம் மக்களது குணா குணங்களைச் செவ்வனே யறிந்த தமிழ் வேந்தரும் சிங்கள வேந்தரும் அவரைத் தம் படை வீரராய் அமைத்துக் கொண்டனர். யாழ்ப்பாணத்தை யாண்ட தமிழ் அரசராலே சாவகர் தென்மராட்சியிலே குடியேற்றப்பட்டிருத்தலுங் கூடும். தற்காலத் தமிழ் வழக்கிலே யாவகர் எனப்படுவோர் இச் சாவகரேயாம்" (குமாரசுவாமி 1918:12).

இங்கே ஏற்பட்டிருந்த சாவகர் குடியிருப்புப் பற்றி ஆ. முத்துத்தம்பப்பிள்ளை குறிப்பிடும்போது, குலோத்துங்க சிங்கை

யாரியன் (கி.பி.1256-1279) யாப்பகூவாவை அழித்த பொழுது சிறையாகப் பிடிபட்ட யாவகர்களே இங்கு வாழ்ந்தார்கள் என் கிறார் (யாழ்ப்பாணச் சரித்திரம்:86). சங்கிலிமன்னன் (கி.பி.1519-1564) சாவாங்கோட்டை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளிலிருந்து சாவகர்களைத் துரத்தினான் என யாழ்ப்பாண வைபவமாலை (பக்.60) குறிப்பிடுதல் நோக்குக. சாவகரை யாழ்ப்பாணப் பகுதிக் குப் போர் வீரர்களாகக் கொண்டு வந்தவன் விஜயபாகு என்ற மன்னன் (கி.பி. 1271) எனக் கூறப்படுகிறது. சாவகர் போர்வீரர் களாக இருந்தமையால் அவர்கள் அரசவெறுப்புக்கு ஆளாகி, அவர்களது தொகையும் அருகி வந்தது. எஞ்சியோர் சாவகச்சேரி, சாவாங்கோடு ஆகிய இடங்களிற் குடியமர்ந்தனர் என வரலாறு கூறுகிறது. 13ஆம் நூற்றாண்டில் சாவக மன்னன் சந்திரபானுவின் ஆட்சி வடஇலங்கையில் இருந்ததன் தொடர்பாகச் சாவகச்சேரி, சாவகன்சீமா, சாவாங்கோட்டை என்ற இடப்பெயர்கள் அமைய லாயின (கா. இந்திரபாலா 1972:44-46). போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் வட மாகாணத்திற் கத்தோலிக்கக் கோயில்கள் பல அமைக்கப்பட்டன. அவற்றில் சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட தேவாலயம் மிகப் பெரியதாகக் காணப்பட்டது என்கிறார் பால் தேயஸ். இந்துக் கோயில் ஒன்று அழிக்கப்பட்ட இடத்திலேயே இக்கோயில் கட்டப்பட்டதாக சுவாமி ஞானப்பிரகாசர் (1921:118) குறிப்பிட்டுள்ளார். டச்சுக்காரர் ஆட்சியை நினைவூட்டுவதாக இங்கு 'டச்சு வீதி' அமைந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் முதன்மையான நகரங்களி லொன்றாக விளங்கும் சாவகச்சேரியானது, பூநகரி, பருத்தித் துறை, ஆனையிறவு, யாழ்ப்பாணம் ஆகிய நாலா பக்கங்களி லிருந்தும் வரும் முதன்மையான பெருஞ்சாலைகள் சேரும் நடு நிலையமாகத் திகழ்கிறது. யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ் சாலையும் இதனூடாகவே செல்கிறது. அரசினர் மருத்துவமனை, தொடர்வண்டி நிலையம், பேருந்துநிலையம், பெரியசந்தை, நகரசாலைகள், அஞ்சல் நிலையம், கல்லூரிகள் முதலான பல வசதிகளும் பொருந்திய ஒரு நகராக இது திகழ்கிறது. இதன் வடக்குப் பகுதியில் கல்வயல், குசவன்மடம், கிராம்புவில், கெருடாவில், மண்டுவில், பெருங்குளம் சந்தி, சங்கத்தானை, பெரிய அரசடி, இல்லாரை, முதலியாவெளி, மருதடி முதலியன அமைந்துள்ளன. இப் பகுதிகளை உள்ளடக்கிய பெருநகராக சாவகச்சேரி திகழ்கிறது. இதன் தென்பகுதியில் கற்குழி, கண்டு

வில், கோயிற் குடியிருப்பு, மகிழங்கேணி, பெரியமாவடி, சப்பச்சி மாவடி, சிவன்கோயிலடி முதலிய இடங்களும் அடங்குகின்றன.

இதன் குறிச்சிப் பெயர்களில் மண்டுவில் என்பதை நோக்கும்போது மண்டு என்பது ஒருவகை மரத்தைச் சுட்டி, அது குளப் பெயராகி (மண்டு + வில்), பின்பு குளப்பெயர் இடத்தையும் குறிப்பதாயிற்று. அதுபோன்றே மந்துவில் என்பது இடப்பெயரும் செடிப் பெயரும் குளப் பெயரும் இணைந்த நிலையில் காணப்படுகின்றது. மந்து = காவிளாச்செடி. பெருங் குளம் சந்தி என்ற இடத்தில் அப் பெயருடைய குளமும் நாற்சந்தி யும் அமைந்துள்ளன. இதன் அயற் பகுதிகளாகிய கிராம்புவில், இல்லாரை என்ற இடங்களிலுள்ள குளங்களைவிட இக்குளம் பெரிதாகக் காணப்பட்டமையால் பெரியகுளம் எனக் காரணப் பெயர் பெறுவதாயிற்று.

'கண்டுவில்' என்பது குளப்பெயரால் அமைந்த குறிச்சிப் பெயராகும். கண்டு + வில் < கன்று + வில். இது தோட்டப்பயிர் செய்யும் பகுதியாகும். நாற்று நடுகைக்குரிய பயிர்க் கன்றுகளை உண்டாக்கி விற்பனை செய்த இடம் என்ற பொருளிலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். குளத்தைச் சூழ மகிழ மரங்கள் காணப்பட்ட பகுதி மகிழங்கேணி என்ற பெயர் பெற்றுள்ளது. 'மண்டுவில்' என்ற ஓர் இடப்பெயரும் இங்குள்ளது. மண்ணெடுத்த பள்ளம் நீர் நிறைந்து குளமாகவுள்ளது. இக்குளத்தைச் 'சின்ன மண்டுவில்' என்றழைப்பர்.

சாகவச்சேரியில் இரு சிவன் கோயில்களுள்ளன. இவற் றில் மிகத் தொன்மையானது வாரிவனநாதசிவன் கோயிலாகும். போர்த்துக்கேயர் இதனை அழித்தனர். பின்னாளில் வயல் உழும் போது சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டு கோயில் அமைக்கப் பட்டது. அரசடிப் பகுதியிலுள்ள சப்பச்சிமாவடி என்ற இடத்தில் 'சப்பச்சி மாவடி விநாயகர் ஆலயம்' அமைந்துள்ளது. கந்த புராணப் புகழ் பெற்ற தமிழ்நாட்டு காஞ்சிமாவடி என்ற தலத்து மாவிதை கொண்டு வரப்பட்டு இங்கு நாட்டப்பட்ட மரத்தடி யிலேயே கோயில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இம் மாவின் கனி விதையின்றி இருப்பதால் 'சப்பாச்சி' எனப்பெயர் பெற்றதென்பர். மேலும் 'பெரியமாவடி' என்ற வட்டாரமும் இங்குள் ளது. இங்குள்ள பெரிய மாவடிக் கந்தசுவாமி கோயில் மரப் பெயரால் வழக்குப் பெற்றுள்ளது. இங்கு இன்றும் ஒரு பெரிய மாமரம் காணப்படுகிறது. இதன் தென்கிழக்கே கடலும், அதனை யடுத்த பகுதியிற் தென்னந்தோப்புக்களும் அமைந்துள்ளன.

'பண்ணை' ஈற்று இடப்பெயர்கள்

பண்ணை = வயல். ("எழினலம் பயக்கும் மன்றலம் பணை சூழ் மருத வேலி...." பண்டார மும்மணிக்கோவை:29:24-255). பணை = பெருமை, மரக்கொம்பு, மூங்கில், மருதநிலம், வயல், நீர்நிலை, குதிரை, யானைகள் தங்குமிடம், விலங்கு துயிலிடம், முரசு (த.லெ. 4:2460). பண்ணை என்பது ஆடவர் கூட்டம், மகளிர் கூட்டம், மகளிர் விளையாட்டு, மருதநிலம், வயல், இடம், நீர்நிலை, தோட்டம், விலங்கின் படுக்கை எனப் பொருள் தருஞ் சொல்லாகும். இம் மாவட்டத்தில் பண்ணை ஈற்றுப் பெயர் கொண்ட ஓரிடம் இம் மாவட்டத்துள்ளமை நோக்கத் தக்கது.

வண்ணார்பண்ணை (யா:மா.ந.1.22)

வண்ணம் + ஆர் + பண்ணை எனவும்; வண்ணார் + பண்ணை எனவும் இவ்விடப் பெயரைப் பிரித்து நோக்கலாம். வண்ணார் என்பதற்கு வண்ணந்தீட்டுவோர் (Painters), சலவைத் தொழிலர் எனப் பொருள் காணலாம்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் சாயம் போடுவோர் நல்நிலையில் வாழ்ந்திருக்கிறார்களென்பதை அக்கால வருமானத்துறையை நோக்கின் புலனாகும். தமிழ் அரசர் காலத்தில் அரச பணியின் பொருட்டுப் பல்வேறு தொழிலடிப்படையிலான தொழில்சார் மக்கள் நல்லூர் அரசிருக்கையின் அயலிடங்களில் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களுக்குக் குடிமனைகளும் கோயில்களும் தனித்தனியாக இருந்திருக்கின்றன. இப் பின்னணியில் அரச பணியாளர்களாகிய வண்ணக்காரர் (வண்ணந் தீட்டுவோர்) வாழ்ந்த இடமே வண்ணார்பண்ணை என்க. இவ்விடம் யாழ்நகரின் ஒரு பகுதியாதலால் செட்டிமார்களின் குடியிருப்புக் களும் பெரிதும் அமையலாயின. அவர்களுக்கு உரிமையானதே வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலாகும். இதனைச் 'செட்டியார் சிவன் கோயில்' என்றும் கூறுவர். டச்சுக்காரரது ஒப்புதலோடு 1791ஆம் ஆண்டில் இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் (1658-1796) சமயப் பொறுமை பின்பற்றப் பட்டமைக்கு இதனைச் சான்றாகக் காட்டுவர். யாழ்ப்பாணத்துச் செட்டிமார்களது வரலாறும் மரபுகளும் மேலும் ஆராயப்பட வேண்டியவையாகும்.

வண்ணார்பண்ணைக்கு மேற்கே பண்ணைத்துறை அமைந்துள்ளது. பண்டை நாளிலே தமிழக மக்கள் திருப் பெண்ணையாறு மூலமாக வந்து இத்துறையில் இறங்கியபோது, தமது நாட்டுப் பண்ணைத்துறை என்ற பெயரை இட்டு வழங்கிய தாகவும் அறியப்படுகிறது. இங்கு பழைமை வாய்ந்த பெருமாள் கோயில், ஐயனார் கோயில், சிவயோகமுனியப்பர் கோயில், காளிகோயில் முதலியனவும் காணப்படுகின்றன.

அம்பனை (வலி.வ.65.1)

அம் + பண்ணை = அம்பண்ணை > அம்பனை.

அம்பண்ணை என்பதே இடைக்குறையாய் அம்பனையாயிற்று. இது அளவெட்டியின் வடபாலமைந்த வயற் பகுதியாகும். படைப்பை நிலம் பண்படுத்தப்பட்டபோது பண்ணை எனப்பெயர் பெற்றது. அப் பண்ணை நிலம் பண்படுத்தப்பட்டதால் அழகு பொருந்தப்பெற்று (அம் = அழகு) அம்பனை என வழங்குவ தாயிற்று.

'பள்ளி' ஈற்று இடப்பெயர்

பள் + இ > பள்ளி; பள் + ஐ = பளை. இவ்விரு சொற்களும் தமிழ்மொழியின் ஓரே அடிச் சொல்லினின்றும் பிறந்தவையாகும். சங்க இலக்கியத்தில் அகத்தியன்பள்ளி, காட்டுப்பள்ளி, நண்பள்ளி முதலாம் தமிழ்ப்பெயர்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் பள்ளி என்பது = இடம், சிற்றூர், இடைச் சேரி, நகரம், முனிவராச்சிரமம், சைன, புத்த மதக் கோயில், அரசர்க்குரிய கோயில், வேலைக்களம், மக்கட்படுக்கை, தூக்கம் முதலியவற்றைக் குறித்து வழங்குகின்றது (த.லெ:2552). தமிழகத் திற் 'பள்ளி' ஈற்று இடப்பெயர்கள் பெரிதும் காணப்பட்ட போதி லும், ஈழத்தில் இவ்வகைப் பெயர்கள் மிக அரிதாகவே இடம் பெற்றுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஓரிடம் மட்டுமே பள்ளி ஈற்றுப்பெயர் பெற்றுள்ளது.

பச்சிலைப்பள்ளி (பச் 7)

பசுமை + இலை + பள்ளி > பச்சிலைப்பள்ளி. யாழ்ப் பாண மாவட்டத்திலுள்ள 16 உதவி அரசஅதிபர் பிரிவுகளில் பச்சிலைப் பள்ளி என்பதும் ஒன்றாகும். இதன் 73 வீதமான பகுதி நெல், தென்னை, வீட்டுப்பயிர், பனை, காடுகள், புல்வெளி முதலியனவற்றால் நிறைந்து காணப்படுகின்றது (ச.ஆறுமுகம்: 1979:46-47). இவ்வாறான பசுமை நிறைந்த தோற்றம் இப் பகுதியில் பெரிதும் காணப்பட்டமையால் இது பச்சிலைப்பள்ளி எனப் பெயர் பெறுவதாயிற்று. மேலும் (பசுமை + இலை + பள்ளி =) பச்சிலைப்பள்ளி என்பதற்குப் பசுமையான இலை களாலமைந்த இருக்கை (பாசறை) எனவும் பொருள் கொள்ள லாம். எனவே பாசறை என்பதற்குக் கொடுக்கப்படும் விளக்கம் ஈண்டுப் பொருத்தம் நோக்கித் தரப்படுகிறது:

> "பசுமை + அறை = பாசறை எனப்படும். அறை = எல்லைப் படுத்திய வீட்டின் சிறிய பகுதியிடமாம். பசுமையாகச் செய்யப் பட்டு, அந்தப் பகுதி வீடு பசுமையாக விளங்குதலின் பாசறையாகும். பகைவர் எல்லைக்குட் புகுந்து, அவர் நிலப்பகுதியை வளைத்துப் பல் வகையான படைகள் தங்கு வதற்கு இடம் செய்யுங்கால் அரசன் அமர்வதற்கென்று சிறிய இடத்தை மிகப் பசுமையுறும் படியாகச்செய்து எல்லைக் காவல் செய்யப்பட்ட இடமே பாசறையாகும். (நா.சிவபாத சுந்தரனார்:1972: 206.)

பச்சிலைப்பள்ளி பண்டைய குடியிருப்புப் பகுதியாக இருந்திருக்கிறது என்பது தொல்லியற் சான்றுகளால் அறியப் படுகிறது. பச்சிலைப்பள்ளியின் ஊடாகக் கிழக்கிலங்கைக்கான கரையோரப் பெருந்தெருவும் முன்னாளில் இருந்திருக்கிறது. மேலும் மண்டலாய், தட்டால்கோடு, நித்தியவெட்டை, குயவன் பிட்டி முதலான இடங்களும் பச்சிலைப்பள்ளிப் பகுதியிற் காணப் படுகின்றன.

இப் பகுதிகளில் இடைக்கால, டச்சுக்கால நாணயங் களும், டச்சுக்கோட்டையின் அழிபாடுகளும், மற்றும் மட்பாண்ட ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. துறையும், கோயில்களும், பழைய கட்டிட அழிபாடுகளும் இப் பகுதியில் பொருந்திக் காணப்படுவதை உற்று நோக்கிய கலாநிதி பொ. இரகுபதி

இங்கு பெருங்குடியிருப்பு பண்டைநாளில் இருந்திருக்க வேண்டு மென அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார் (P.Ragupathy:1983:287). பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள அனைத்து இடப்பெயர்களும் பழந்தமிழ்ப் பெயர்களேயாகும்.

பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள நாகதம்பிரான்கோயில் (நாகர்கோயில்), அம்மன்கோயில் (குடத்தனை), துவில் அம்மன் கோயில் (மாமுனை), திரியாய்அம்மன்கோயில் (மருதங்கேணி), விஷ்ணுகோயில் (கோயில்வயல்) ஆகியனவும் அவற்றோடு தொடர்புடைய வழிபாட்டு முறைகளும் இப்பகுதிகளின் பண் பாட்டுப் பழைமையைப் புலப்படுத்துகின்றன. இயற்கையோ டிணைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர் குளந்தொட்டு வளம் பெருக்கி வாழ்ந்தனர் என்பதற்கமைய, இப் பகுதியிலே சிறியன வும் பெரியனவுமாகப் பல குளங்களும் வயல் நிலங்களும் காணப்படுகின்றன. எனவே இயற்கைச் சூழலும், அச்சூழலுக்கு வழங்கிய பெயர்களும், மற்றும் அழிபாடுகளும் பச்சிலைப்பள்ளிப் பகுதியும் தமிழர் தம் 'மரபுவழித் தாயகம்' என்பதைச் சான்று படுத்துகின்றன.

'பளை' ஈற்று இடப்பெயர்கள்

பளை என்பது = குடியிருப்பு, மக்கள் வாழும் பகுதி, மாவட்டம், மாகாணம் எனப் பொருள் தரும்சொல்லாகும் (Daviidu: 1972:563). பள்ளி, பளை ஆகிய இரு சொற்களும் ஒரு பொருட்கிளவிகளாகும். பள்ளி என்பதற்கு = நகரம், இடம், இடைச்சேரி, சிற்றூர், நித்திலை, தேவர் கோயில், மக்கட்படுக்கை, முனிவர் வாசம், விலங்கின் படுக்கையிடம், வீடு, சாலை எனத் தமிழகராதி (பக்.210) விளக்கம் கூறுகிறது. யாழ்ப்பாண மாவட்டத் தில் 'பளை' ஈறு கொண்டனவாகத் தெல்லிப்பளை, பளை, புலோப்பளை, பெரியபளை, வரத்துப்பளை, விடத்தற்பளை ஆகிய இடங்கள் அமைந்துள்ளன.

பள் + ஐ = பளை + அம் > பாளையம். தென்னிந் தியாவிற் பாளையம் என்ற ஈறுபெற்ற இடப்பெயர்கள் பரவலாகக் காணப்படுகின்றன. அதுபோன்றே பள்ளம் என்ற ஈறுபெற்ற பெயர்கள் இரு நாடுகளிலும் வழக்கிலுள்ளன. இச் சொற்கள் 'பள்' என்ற அடிச்சொல்லிலிருந்து தோன்றியனவாகும். வற்றாப் பளை, பட்டிப் பளை முதலான பளை ஈற்றுப்பெயர்கள் இலங்கை யின் பல பாகங்களிலுங் காணப்படுகின்றன.

இவ்விடப் பெயர்கள் S.W. குமாரசுவாமி (1918:46) குறிப்பிடும் போது 'பூமி எனப் பொருள்படும் 'பொல' என்ற சிங்களச் சொல்லை எம்மவர் 'பளை' எனச் சிதைத்தே பெரிதும் வழங்குவர்' என எழுதியுள்ளமை அவரது தமிழறிவின் குறைபாட்டை அல்லது தமிழ் மீதுள்ள காழ்ப்புணர்வைக் கோடிட்டுக் காட்டுவதாகும். சுவாமி ஞானப்பிரகாசர் (1917:167) ஹோர்ஸ்பேர்க் (1917: 172) முதலியோரும் 'பளை' என்பதைச் சிங்களம் என்றே எழுதினர். ஆனால் அவர்களின் காலத்தவராகிய எஸ். சபாரத்தின முதலியார் (1917:170) பாளி என்ற சொல்லை பளையுடன் தொடர்புபடுத்தி இரண்டும் தூய தமிழ்ச்சொல் என நிறுவியமையைக் குறிப்பிடுதல் சாலும்.

தெல்லிப்பளை (வலி.வ.65.9)

தெல்லி + பளை = தெல்லிப்பளை. இதன் அயலிடத்திற் பளை எனப் பெயர்கொண்ட ஓரிடமுண்டு. எனவே இந்த இரண்டு இடப்பெயர்களையும் வேறுபடுத்தும் பொருட்டு இங்கே இடம் பெற்ற, நீங்கா நினைவில் நிற்கும் நிகழ்வைக் குறிக்கும் சொல்லை அடை மொழியாக்கி ஓரிடத்தைத் தெல்லிப்பளை என அழைப்பதாயினர். தெல்லி என்ற தலைவன் ஒருவனின் ஆணைக்குட்பட்ட பளைப் பகுதி தெல்லிப்பளை எனச் சிறப்புப் பெயர் பெறுவதாயிற்று. தெல்லிப்பளையிலே தெல்லிவளவு, தெல்லியம்பறை என்ற காணிப் பெயர்களும் வழக்கிலுள்ளன. மன்னார் மாவட்டத்திலே தெல்லியன் குடியிருப்பு என்ற ஓரிடம் உள்ளமையும் நோக்கத்தக்கது.

தெல்லி என்பது டில்லி (Delhi) என்ற பெயரிலிருந்து மருவியிருக்க முடியுமா என ஐயம் கொள்கிறார் ஜே.பி.லூாயிஸ் (J.P.Lewis: 1917:171). ஆனால் அவர் அவ்வாறு ஐயப்படுவதற்குச் சான்றுகளெதுவுங் காணப்படவில்லை. இப்பெயரைச் சிலர் தெல்லிப்பள்ளி, தல்லிப்பள்ளி என்றும் குறிப்பிட்டு அவற்றுக்குக் கதையும் புனைந்தனர். மாவிட்டபுரத்தின் அயற்பதியே தெல்லிப்பளை. மாருதப்பிரவீகவல்லி தனது குதிரை முகம் நீங்கி இளமையும் வனப்பும் பொருந்தப் பெற்று இவ்விடத்திலேயே தங்கியிருந்தாள் என்பதும், அதன் காரணமாகவே இவ்வூருக்குத் தல்லிப்பளை எனப் பெயர் ஏற்பட்டது என்பதும் பழமரபுக் கதைகளாகும். அதனால் இப் பழம்பதியைத் தெல்லியம்பதி,

தெல்லிநகர் என்றும் வழங்குவாராயினர் என்பர். தாயைத் 'தல்லி' என வழங்குதல் வடுக நாட்டு வழக்கு என உவின்ஸ்லோ அகராதி கூறுகிறது. இப்பகுதியில் இரு இடங்கள் 'பளை' எனப் படுவதால் இதனை தாய்ப்பளை (பெரியபளை) எனக் குறிப்பதற்காகத் 'தெல்லிப்பளை' என்றனர் எனவும் விளக்கம் கொடுக்கப்படுகிறது. தெல்லிப்பளையில் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பேதுருப் புலவர், தாம் கிளாலி கத்தோலிக்கத் தேவாயலயத்தின் மீது பாடிய 'சந்தியோகுமையோர் அம்மானை' (கி.பி.1647) என்ற நூலிலே தெல்லிப்பளை பற்றி வருமாறு பாடுகிறார்:

> "இலங்கா புரியிருக்கும் யாழ்ப்பாண ராச்சியத்தில்
> துலங்கு மெண்ணால் பதிக்கும் துண்கமுடிபோலுயர்ந்த
> வல்லிக் கிராமத்தில் வளர்ந்த திருநகராம்
> தெல்லிக் கிராமமெனும் சீர் சிறந்தபேரூரில்......"

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாவை சின்னக் குட்டிப் புலவர், பாடிய 'தண்டிகைக் கனகராயன்பள்ளின் 51ஆம் செய்யுளில்,

> 'பங்கமான சங்கதோங்கிய வாவி மேவிடு தெல்லிப்பழை
> நாளும் வாழவென்று கூவாய் குயிலே..'

என்ற பாடல் வரியில் தெல்லிப்பழை (ளை > ழை) என எழுத்துத் திரிபுபட்டிருத்தல் காண்க. சைமன்காசிச் செட்டி (1834: 211) இதனைத் தில்லிப்பள்ளி (Tillipally) எனக் குறிப்பிட்டுள்ளார். அ. சதாசிவம்பிள்ளை தமது பாவலர் சரித்திரதீபகத்திலே, இவ்வூரிலே பிறந்து திருச்செல்வர் காவியம் இயற்றிய அருளப்ப நாவலரைத் "தெல்லிநகர் அருளப்பர்" என்றே குறிப்பிட்டார். பண்டை நாளிலே தொண்டை மண்டலத்துக் காரைக்காட்டு வேளாளர் பலர் இங்கு வந்து குடியேறி வாழ்ந்துள்ளனர் என அறியப்படுகிறது (வ. குமாரசுவாமி:1932:10-44). 'நம் பொத்த' என்ற சிங்கள நூலிலே தெல்லிப்பளை என்பது 'தெலிபொல' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தெலி + பொல - என்பதிலுள்ள 'தெலி' என்பதற்குச் சிங்களத்திற் பொருளில்லை. 'பொல' என்ற சொல் தமிழ்ப் புலம் என்பதிலிருந்து சிங்களம் கடன் பெற்ற சொல் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பளை (வலி.வ.66.6)

பளை என்ற பெயர் கொண்ட இரண்டு இடங்கள் கொடி காமத்திற்கு தெற்கே 10மைல் தொலைவிலும், மாவிட்டபுரப் பகுதியிலும் அமைந்துள்ளன. தொல்லியற்றளமாகக் கணிக்கப் படும் பூநகரிக்கு அண்மித்த பகுதியிலேயே பளை என்ற பெரிய ஊர் இடம்பெறுகிறது. இங்கே பெருந்தென்னந் தோட்டங்கள் பார்க்குமிடமெல்லாம் காட்சியளிக்கின்றன. மணற்பாங்கான இப் பகுதி பண்டைய குடியிருப்பிடமாக அமைந்திருக்க வாய்ப்புண்டு. கொடிகாமத்திற்கும் ஆனையிறவுக்கும் இடையில் பளை அமைந் துள்ளது. இதனை யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ்சாலை ஊடறுத்துச் செல்கிறது. பண்டைய வரலாற்றுத் தளமாகப் பளை அடையாளம் காணப்பட்டுள்ளது. இங்கு அரசிருக்கை அமைந் திருந்து, பின்பு அழிந்து போன இடமாகவும் கூறப்படுகிறது. இச்செய்தி தொடர்பாகச் சி.வி. சின்னத்தம்பி என்பவரால் 'ஸ்ரீலங்கா' என்ற இதழில் (ஓகஸ்ற்-1959:26) எழுதப்பட்ட கட்டு ரையின் ஒரு பகுதி பொருத்தம் நோக்கி ஈண்டுத் தரப்படுகிறது:

> "இவ்விடத்தின் வரலாற்றை இன்றுவரை எவரும் ஆராய வில்லை. இடங்கள் ஒவ்வொன்றும் புலவர், புரவலர், அறிஞர் ஆகியோரின் நாமங்களைக் காரணத்தின் காரியப் பெயராகக் கொண்டுள்ளன. அவற்றுள் பாவலனாகிய 'பழமாறன்' என்ப வனுக்குப் பரிசாகக் கொடுத்து 'பழம்பாணர்பதி' யென்று ஒரு காலத்தில் வழங்கியது. பின் 'பழம்பதி' என்றும், காலமும் கருத்தும் வேறுபாடுகளும் அரவணைக்கப் 'பளை' யென்றும் மாறியது. கோட்டைவளவு, கோபுர வளவு என்னும் நிலப் பெயர்கள் வரலாற்றுத் தொடர்பைத் தொட்டு நிற்கின்றன..... 8ஆம் நூற்றாண்டில் இராசதானியாக இப்பழம்பதி விளங்கிற்று. எனவேதான் அரசர் அவைக்குத் தேவையாதற்கமைய சங்கத் தமிழ் வளர - 'சங்கத்தார்வயல்' என்றும், கோயில் கட்டும் சிற்பிகளுள்ள இடத்தைக் 'கோயில்வயல்' என்றும், வைதீகங் கள், புராணங்கள் ஓதுபவர்கள் - (மா ஆசார்) 'மாசார்' என்றும்.. .. .. இவ்வாறு முப்பது காதவழி தூரமான இடப் பரப்பில் அமைந்திருக்கும் மேற்காட்டிய இடங்கள் இராச தானியின் எல்லைக் கோடாக அமைந்துள்ளன என்பதும் அறியப்படுகின்றன. இங்கு இறங்குதுறையாக 'அறத்தி ' என்ற இடம் காணப்படுகிறது. இவ்வாறான இராசதானி காடாகவும், தென்னந்தோப்பு நிறைந்த இடமாகவும் காணப்படுகிறது."

விடத்தற்பளை (தென்ம.107.13)

விடத்தல் + பளை = விடத்தற்பளை. விடத்தல் = ஒரு வகை மரம். விடத்தல் மரங்கள் செறிந்து காணப்பட்ட இடம் என்ற பொருளில் மரப்பெயரடியாக இப்பெயர் தோற்றம் பெற் றுள்ளது. மன்னாரில் விடத்தல்தீவு என்ற ஓரிடமுள்ளமையும் காண்க.

'பாய்' ஈற்று இடப்பெயர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்களையும் குறிச்சிகளை யும் குறிக்கும் நிலையில் 'பாய்' ஈற்று இடப்பெயர்கள் பல காணப்படுகின்றன. இவற்றில் தனித்தனி ஊர்களின் பெயர்களாக அங்கலப்பாய், கதிரிப்பாய், கோப்பாய், சண்டிலிப்பாய், மானிப்பாய் என்பன அமைந்துள்ளன. இயக்கடப்பாய், கச்சப்பாய், கச்சிப்பாய், கிணாப்பாய், சவங்கடப்பாய், சாளம்பாய், தலக்கடப் பாய், தலப்பாய், தண்டலப்பாய், தொங்களப்பாய், தோலப்பாய், பத்தினிப்பாய், மலமண்டலப்பாய் முதலிய குறிச்சிப்பெயர்களும் வழக்கிலுள்ளன. 'பாய்' ஈறு கொண்ட இடப்பெயர்கள் ஈழத்துக்கே தனிச்சிறப்பு டையவையாகும்.

பாய் என்ற சொல் பின்வரும் பொருள்களில் வருகின்றது: பாய் = பரவு வகை, கோரை முதலியவற்றால் முடைந்த விரிப்பு வகை; பாய் = வேலைக்காரன்; பாய் + தல் = பாய்தல். இது தாவுதல், மேனின்று குதித்தல், நீருள் மூழ்குதல், எதிர் செல்லுதல், பரவுதல், விரைந்துபடிதல், விரைந்தோடுதல், தாக்குதல், துரிதப்படுதல், கூத்தாடுதல், ஓடிப்போதல் என்னும் பொருள்களில் வழங்குகிறது (த.லெ.5:2613). பாய் என்ற சொல் லுக்குப் பரப்பு என்ற பொருளும் ((முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்:414), பாய், பாயல் என்பதற்குப் படுக்கை என்ற கருத்து முள்ளது. இதனை "வெஞ்சூட்டு நெட்டுடல் விரிக்கும் படப்பாயல் மீமிசை.........." என வரும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் செய்யுள் (7) சான்றுபடுத்துகிறது.

தென் தமிழீழத்தில் 'பாய்' (Mat) பண்பாட்டுச் சிறப்பு வாய்ந்த ஒரு பொருளாகக் கருதப்படுகிறது (இ.பாலசுந்தரம்: 1979:299). வந்தாரை வரவேற்று இருப்பதற்கு கொடுக்கப்படும் விரிப்பாகவும், படுப்பதற்குரிய விரிப்பாகவும் பாய் பெரிதும்

பண்டைக் கால குடியிருப்புக்களையும் அரசிருக்கையை யும் குறிப்பிடும் தடயங்கள் கொண்ட பளை என்னும் ஊர் ஈழத்தமிழரின் மரபுவழித் தாயகக் கோட்பாட்டுக்குரிய ஆள்புலம்' என்பது தெளிவாகின்றது.

புலோப்பளை (பச்:159)

புலவர் + பளை > புலோப்பளை. இது பச்சிலைப்பள்ளிப் பகுதியில் அமைந்துள்ளது. புல்லு = சேருதல்; புல்லுதல் = பொருந்துதல், கட்டுதல் (பாட்டுந்தொகையும்:122). புல்லு + பளை = புலோப்பளை. பலர் ஒன்றாய்ச் சேர்ந்து தங்கியிருந்த இடம் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். புலவர் + பளை > புலோப்பளை = புலவர் சேர்ந்திருந்த இடம் எனவும் கருதலாம். புலோலி என்ற இடப்பெயர் விளக்கத்தை ஈண்டு ஒப்பிட்டு நோக்குக. (பக்.:392)

பெரியபளை (பச்.159.3)

இது புலோப்பளைக்கு அயலிலுள்ள ஓரிடம். இவ்விடம் புலோப்பளையிலும் பார்க்கப் பெரிய இடம் என்ற வகையிலும், அவ்விடத்திலிருந்து இதனைப் பிரித்துக் காட்டவும் பெரியபளை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். இதனூடாக யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ்சாலை செல்கிறது. பண்டைக் காலத்தில் புலோப் பளை, பெரியபளை ஆகிய பகுதிகள் மக்கட் குடியிருப்புக்கு ஏற்ற வளமுள்ள நிலப்பகுதிகளாக அமைந்திருந்தன என்பதை இங்குள்ள மருதநிலத்து ஊர்களும் குளங்களும் சான்றுபடுத்து கின்றன.

வரத்துப்பளை (வடம. வ.கி.140.3)

வரத்து + பளை = வரத்துப்பளை. இது பருத்தித்துறைப் பகுதியிலுள்ளது. வரத்தாறு = கிளையாறு; வரத்துவாரி = குளக்கால் (த.லெ.vi:3508). எனவே வரத்துப்பளை என்பது மக்கள் வந்து தங்கிய இடம் என்ற பொருள் தரும் பெயராகும்.

பயன்படுகிறது. பந்திப்பாய், சபைப்பாய், தோட்டுப்பாய், பூசனிப் பாய், கல்யாணப்பாய் எனப் பலதிறத்தில் வகை வகையாகப் பாய் முடையப்படுகின்றது. கிரான்பன், வேடப்பன், புற்பன், கற்பன், சாப்பைப்பன் முதலியனவற்றால் பாய் இழைக்கப்படும். பாய் இழைத்தல் குடிசைக் கைத்தொழிலாகப் பண்டைநாள் முதலாக அங்கு நடைபெற்று வந்தமையை நாட்டார் பாடல்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

> "பன்புடுங்கிப் பாயிழைத்து பச்சரிசி நான் குத்தி
> சோறு கொடுப்பேன் - உன்ர செல்ல வண்டைத் தந்தாயெண்டா."

> "சாப்பைப்பன் அறுத்து சந்தையிலே கொண்டுவிற்று
> சம்பாஅரிசி வாங்கிவந்த சங்கதியைச் சொல்மதினி."

இருத்தல், துயில்தல் முதலியனவற்றுக்கு விரிப்பாகப் பாய் பயன்படுகிறது. பாய் என்ற சொல்லை முதன்மையாகக் கொண்டு 'பாய்' ஈற்று இடப் பெயர்கள் ஆக்கம் பெற்றுள்ளன எனக் கோடலே பொருத்தமானது. தமிழகத்தில் உள்ள 'இருக்கை', 'இருப்பு', 'பாடி', 'வாடி', 'மடம்', 'விடுதி' என்ற ஈறுகள் கொண்ட இடப்பெயர்களை நோக்கும்போது அவை இருத்தல் அல்லது தங்கியிருத்தல் என்ற பொருள் நிலையிலேயே இடப்பெயர் விகுதிகளாக அமைந்துள்ளன. அவ்வாறே இருப் பதற்குப் பயன்படும் பாய், மக்கள் நிரந்தரமாகத் தங்கியிருந்த இடத்தைச் சுட்டவும் வழங்கப்படுவதாயிற்று. அந் நிலையில் 'பாய்' என்பது பல்வேறு இடங்களைக் குறிக்கச் சிறப்புக் கூறு களை முன்னொட்டாகக்கொண்டு இடப்பெயர்களாகத் தோற்றம் பெற்றுள்ளன. எனவே பாய் என்பது வினையடியாகவும் பெயரடி யாகவும் இடப்பெயராக்கம் பெற்றுள்ளது. இவ்வுண்மையைப் 'பாய்' ஈற்று இடப்பெயர் விளக்கங்கள் மேலும் சான்றுபடுத்து கின்றன.

'பாய்' ஈற்று இடப்பெயர் விளக்கம் மேற்காட்டியவாறு தமிழ் அடிச்சொல் அடிப்படையில் தெளிவாக அமைந்திருந்தும், இதற்கு முரண்பட்ட வகையில் முன்னோரிடம் மாறுபட்ட கருத்துக் கள் நிலவியுள்ளன. குமாரசுவாமி (1918:157) 'பாய்' ஈற்று இடப் பெயர்கள் பற்றி எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்த முரண்பட்ட கருத்தை முற்றிலும் மறுத்து, சரியான விளக்கம்

கொடுக்கவேண்டி இருத்தலால், அவர் கருத்தை முதலில் ஈண்டுக் குறிப்பிடுதல் தவிர்க்க முடியாததாகும்:

> "Place-names ending in 'Pay' (gha;) > which are obviously of Sinhalese origin, 'Pay' being quite unknown in the Tamil language as a word signifying a station or a place. The only substantive meaning that 'pay' admits of in Tamil, or an any other Dravidian language, is a mat or a sail. As a verb, it means to jump, to leap, to spring, to gush or to flow. Nor does the vocable pay occar in the Sinhalese language, but there is a word there that closely resembles it both in form and in function. I mean the word Paya met with in such Sinhalese names as wijayot - pa'ya, Gal - Pa'ya, Lintoto- pa'ya, Mana - pa'ya, Mora - pa'ya, Nala - pa'ya, Niyangam - pa'ya, Tala - pa'ya, and Walagam - paya. The fact that Pa'ya occurs in place- names all over the Sinhalese districts, and finds a place in recognised Sinhalese Dictionaries, makes it clear that it is not a word coined after the Pa'ya as found in Jaffna. The term pa'ya means not only a place in general, but also a temple, a palace, or a mansion."

சிங்களமொழியின் இடப்பெயர் ஈறு 'பாய' என்பதிலிருந்தே 'பாய்' என்ற இடப்பெயர் ஈற்றினைத் தமிழ்மொழி பெற்றுள்ளது என்பது அவரது கருத்தாம். அன்றியும் 'பாய்' ஈற்றுத் தமிழ் இடப்பெயர்களையும் சிங்களப் பெயர்களின் திரிபு எனத் திரித்துக் கூறுவதிலும் அவர் பெரு மகிழ்ச்சி கொண்டார். சுவாமி ஞானப்பிரகாசர் (1917:168) குமாரசுவாமியின் கருத்தை ஏற்றதோடு மட்டும் அமையாது, இன்னுமொருபடி மேற்சென்று 'பாய' என்ற சிங்களச் சொல்லிலிருந்தே தமிழிடப்பெயர் ஈறாக வரும் "பை" என்பதும் தோன்றிற்று என்றார். இக் கருத்துக்கள் அனைத்தும் மீளாய்வுக்குரியன மட்டுமன்றி, இவற்றை மொழியறிவாளர் ஏற்கமாட்டார்கள் என்பதும் உறுதி.

அங்கலப்பாய் (வலி.கி.75.2)

அங்கலா + பாய் = அங்கலப்பாய். இணுவிற் பதியின் எல்லைப் புறத்தில் அமைந்த இடமே அங்கலப்பாய். அங்கலா

தேவிக்குரிய கோயில் அமைந்தவிடம் அல்லது அத்தேவியை வழிபடுவோர் பரந்திருந்த இடம் என்ற பொருள்களில் இப்பெயர் வழங்கியிருக்கலாமோ எனவும் ஆராய்தல் தகும். தெலுங்கு நாட்டிலே அங்கலாதேவி, அங்கல பரமேஸ்வரி, அங்கலசக்தி என்ற தெய்வப் பெயர்களும் கோயில்களும் காணப்படுகின்றன. இக் கோயில்கள் பொதுவாக ஊர் எல்லைகளிலேயே அமைந்துள்ளன (Gege H. Roghair :1982:379). இதுபோன்றே கன்னடமொழியிலும் அங்கள, அங்களு, அங்குள, அங்குளி, அங்குளே என்ற சொல்லாட்சிகளும் காணப்படுகிறன. இச்சொற்கள் மேல் வாய்முடி (Palate) என்ற பொருளில் வழங்குகின்றன (T.Burrow & Emaneau:1961:4). எனவே தெலுங்குச் சொல்லடியாகப் பிறந்ததே அங்கலப்பாய் என்ற இடப்பெயர் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

மேலும் இவ்விடப் பெயரை அங்களப்பாய் எனக் கொண்டு, அம் + களம் + பாய் எனப் பிரித்தும் பொருள் கூறலாம். அழகிய களப்பாய் > அங்களப்பாய் ஆயிற்று. இணுவில் வயல் வளம் செறிந்த இடமாகும். இங்கு நெற்களத்திற்குப் பாய் பெரிதும் பயன்பட்டிருக்க வேண்டும். இதன்பொருட்டு இவ்விடத்தில் அழகிய களப் பாய்கள் பின்னப்பட்டிருக்கலாம். அக் காரணம் கொண்டும் இவ்விடம் 'அங்களப்பாய்' எனப் பெயர் பெற்று அங்கலப்பாய் எனத் திரிபடைந்திருக்கலாம்.

கதிரிப்பாய் (வலி.கி.75.2)

கதிர் + பாய் = கதிர்ப்பாய் > கதிரிப்பாய் என மருவியுள்ளது. இது வலிகாமம் கிழக்குப் பகுதியிலுள்ள ஓரிடம். தினை, சாமை முதலிய தானியக் கதிர்களை அறுவடை செய்து வெயிலிற் காயப்போடவும், பின்பு அவற்றை அடித்துத் தானியங்களை துப்பரவு செய்து எடுக்கவும் பயன்படும் பாய் 'கதிர்ப்பாய்' என வழங்கப்படும். இப் பெயரிலிருந்தே கதிரிப்பாய் என்ற இடப்பெயர் தோற்றம் பெற்றதெனலாம். யாழ்ப்பாணத்தில் பனை ஓலையைப் பதப்படுத்திக் கதிர்ப்பாய் முடைவர். அக் கதிர்ப் பாய்கள் பெரிதும் விற்பனை செய்யப்பட்ட இடம் அல்லது அதனைப் பெரிதும் பயன்படுத்திய இடம் என்ற நிலையில் இவ்விடப்பெயர் வழங்குதல் இயல்பே. மேலும் கதிரம் + பாய்

> கதிரிப்பாய் எனவும் புணர்ந்திருக்கலாம். கதிரம் = அம்பு (மதுரைத் தமிழ்ப் பேரகராதி:498). இதனைச் சிங்களப் பெயரெனக்கொண்டு, 'கதுறுப்பாய' என்னுஞ் சிங்களப்பெயர் சிதைந்து தமிழில் கதிரிப்பாய் என ஆயினது போலும்' எனக் கூறும் குமாரசுவாமி (1917:26) அவர்களின் கருத்து ஏற்புடைத்தன்று.

கோப்பாய் (வலி.கி.86)

கோ + பாய் = கோப்பாய். கோ = அரசன்; பாய் = இருக்கை, அரசிருக்கை, இருப்பிடம். எனவே கோப்பாய் என்பது 'அரசர்களின் இருப்பிடம்' என்ற பொருளில் தோற்றம் பெற்ற இடப்பெயராகும். யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் பெருஞ்சாலையின் சுமார் ஆறு மைல் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. நல்லூரிலிருந்து கோப்பாயினூடாக 'இராசவீதி' செல்கின்றது. படைகளும், அரச சுற்றத்தினரும் புடைசூழ மன்னன் உலாவரும் சாலை 'இராசவீதி' எனவழங்கிற்று. யாழ்ப்பாணத்துத் தமிழ்மன்னன் முதலாம் சங்கிலி (கி.பி. 1519-1564) கோப்பாயில் தற்பாதுகாப்புக்காகச் சிறிய கோட்டை ஒன்றை அமைத்திருந்தான் என்பது வரலாற்றுச் செய்தி. அங்கு அரசனது கோட்டை அமைந்திருந்தமையால், (கோ + பாய்) அரசிருக்கை என்ற பொருளில் கோப்பாய் என்ற பெயர் வழங்கிற்று.

கி. பி. 1560இல் போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்ரன்ரைன் டீ பிரகன்ஸா படைஎடுத்து வந்து, நல்லூர் அரசிருக்கையை முற்றுகையிட்டபோது சங்கிலி மன்னன் அங்கிருந்து கோப்பாய்க் கோட்டைக்கு ஓடித் தப்பினான் என டி. குவைறோஸ் (De Queyroz:361,363), சுவாமி ஞானப்பிரகாசர் (Ceylon Antiquary: 2:3:p .194) ஆகியோர் குறிப்பிடுவர். இக் கோட்டை அமைந்திருந்த இடம் 'கோட்டை வாய்க்கால்' எனவும், 'அரசர் கோட்டை' எனவும் வழங்குகிறது. போர்த்துக்கேயரின் அழிவுக் கரங்களுக்கு அகப்படாது தப்பிய இக் கோட்டை, காலப்போக்கில் அழிந்துபோய் இன்று உயர்ந்த மண்மேடாகக் காணப்படுகிறது. இக் கோட்டையின் சுற்றாடலிற் பிராமணர்கள் குடியேறலானார்கள். கோட்டை அமைந்திருந்த நிலங்களிற் பொதுமக்கள் காலப் போக்கில் குடிமனைகளை அமைத்துக் கொண்டனர். கோட்டை அமைந்திருந்த நான்கு பக்கங்களிலும் வைரவர் கோயில்கள் இருக்கின்றன. இவற்றைச் சங்கிலிமன்னன் கட்டுவித்தான் என்பது

மக்கள் நம்பிக்கை. இவ்வூரிலுள்ள ஆனைவிழுந்தான், கோன் எழுவு முதலிய குறிச்சிப் பெயர்களும் அரச தொடர்பைக் குறித்துக் காட்டுகின்றன.

கோப்பாயில் சங்கிலியன் அரண்மனை அமைந்திருந்த செய்தியும், அக்கோட்டை அழிக்கப்பட்ட இடத்திலே Lady of Guadalupe என்னும் தேவாலயம் கட்டப்பட்டது என்ற தகவலும் குவைறோஸ் (1930:363) அவர்களின் நூலால் அறியப்படுகின்றன. இவ்வூர் மக்கள் தேவாலயம் அமைந்துள்ள இடத்தைப் "பழைய கோட்டை" என்றே அழைத்து வருகின்றனர். இவ்விடத்தில் காணப்படும் பனை மரங்கள் "கோட்டைப்பனை" என வழங்கப்படுகின்றன. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் மூலம் கிடைத்துள்ள பழங்கால மட்கலங்களின் ஓடுகள், முத்திரைகள், நாணயங்கள் முதலியன இப்பகுதி பண்டைய பண்பாட்டுத் தளமாக விளங்கிற்று என்பதைச் சான்றுபடுத்துகின்றன.

இங்குள்ள குறிச்சிப் பெயர்களாக பிராம்பற்றை, கோனெழுவு, கோட்டை வாய்க்கால், ஆனைவிழுந்தான், நிந்தகட்டி, பூதர்மடம், பிராமணவுடை, நாவல்கட்டை, குப்பிளாவத்தை, கலம்பரை, இராதம்பு, இலகடி, அரசடி, கட்டுப்பலானை, மைலியோடை, மார்க்கம்பரை, யார்வத்தை, கொத்தம்மை, நொந்தாளி, குடும்பத்தை, அம்பியோடை, தம்பசெட்டி, மாங்கசிட்டி, அப்பிளானை, அல்லியவத்தை, பலானை, சானிலவத்தை, கணபதியான்புலம், தாடான் கலட்டி, வலத்தை, பாறான்கலட்டி, ஆவரம்பிட்டி, உந்துபற்றை முதலியன காணப்படுகின்றன (தகவல்: சதீஸ்வரி சின்னத்தம்பி, கோப்பாய்). கோப்பாய் என்ற பெயரைக் 'கோவை' என்றும் வழங்குவர். கோப்பாய் வடக்கு = வடகோவை எனவும், கோப்பாய் தெற்கு = தென்கோவை எனவும் வழங்கப்படுகின்றன. தமிழகத்துக் கோவை மாவட்டத்திலிருந்து (கோயம்புத்தூர்) இங்கு குடியேறியோர் 'கோவை' என்ற சொல்லுடன் இடப்பெயர் விகுதியாக வழங்கிய 'பாய்' என்பதையும் சேர்த்து (கோவை + பாய்) கோப்பாய் என வழங்கினரோ எனவும் சிலர் கருதுவர்.

இஃதிவ்வாறிருக்க, குமாரசுவாமி (1917:26) கோப்பாய் என்ற இடப்பெயர் 'கொய்ப்பாய' என்ற சிங்களச் சொல்லின் திரிபு என்றார். கொய்ய அல்லது கொவிய என்பது வேளாளரைக் குறிக்கும் சொல்லாகும். எனவே கோப்பாய் என்பது வேளாளர் குடி இருப்பு என சாதி அடிப்படையில் அவர் கூறும் கருத்து பொருந்தாதென்க.

சண்டிலிப்பாய் (வலி.தெ.மே.43.2)

சண்டி + இலுப்பை + பாய் = சண்டிலிப்பாய். சண்டி, இலுப்பை என்ற இரு வகை மரங்களின் பெயர்கள் இணைந்து இடப்பெயர் ஆக்கம் பெற்றிருக்கலாம். வயலும் வயல்சார்ந்த இடமும் கொண்டது இவ்வூர். இங்கு சண்டி மரங்களும் இலுப்பை மரங்களும் பெரிதும் காணப்படுகின்றன. பண்டைநாளிற் பெரு நகராகத் திகழ்ந்த கந்தரோடையை நோக்கிச் சென்ற நெடுஞ் சாலையிற் சண்டியும் இலுப்பையும் இணைந்து நின்று நிழல் கொடுத்த இடம் என்ற பொருளில் இவ்விடப்பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம்.

இப் பெயர் பற்றிக் கருத்துத் தெரிவித்த எஸ். சபாரத்தின முதலியார் (1917:170), போர்த்துக்கேயச் சொற்களின் சிதை வாகவும் சில பெயர்களுளவெனக் கூறி, எடுத்துக் காட்டாக San Louis pai > சண்டிலுப்பாய் என மாறிற்றென்றார். இப் பெயர் சிங்களப் பெயராகிய 'சந்துப்பாய' என்பதன் சிதைந்த வழக்கு என்று குமாரசுவாமி (1918:பக்.159) எழுதியுள்ளார். இங்கு 'கொம் பனித்துண்டு' என்ற குறிச்சிப் பெயர் காணப்படுகிறது. இது டச்சுக்காரரின் காலத்தில் வழக்குப் பெற்ற பெயராகலாம். இதனைத் தொடர்புபடுத்தி இவ்வூரில் டச்சுக்காரரின் மெய்க் காப்பாளர்கள், தளபதிகள் (சண்டித்தனம் புரியும் வீரமுடையோர்) முதலியோர் தங்கிருந்த இடமாதலால், இது சண்டியர் > சண்டி + இருப்பு > சண்டியிருப்பு + பாய் > சண்டிலிப்பாய் என மருவி வந்திருக்கலாம் என்றும் அவ்வூர் ம.பொ. செல்வரெத்தினம் கருதுவர். இங்கு கல்வளை என்ற குறிச்சியும் கல்வளைப்பிள்ளை யார் கோயிலுமுள்ளன. 18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவர் இக் கோயில்மீது 'கல்வளை யந்தாதி' பாடியுள்ளார். சண்டிலிப்பாயில் 'சீனன்வயல்' என்ற இடமிருத்தலும் நோக்கற்பாலது.

சங்கரப்பாய்

இப் பெயர் சங்கம் + பாய்; சங்கரன் + பாய்; சங்கத்தார் + பாய் என்ற சொற்களின் இணைவால் ஆக்கம் பெற்றிருத்தல் கூடும். சங்கரப்பாய் என்பது தொல்புரம் பகுதிலுள்ள ஒரு சிற்றூராகும். பண்டைநாளிற் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்

தமிழர். சங்கம் என்ற சொல்லாட்சியும் பழைமை மிக்கது. அவ்வாறிருக்க 'சங்கம்' எனத்தொடங்கும் யாழ்ப்பாண ஊர்ப் பெயர் அனைத்தும் பௌத்த சங்கத்துடனும், பௌத்தத் துறவி யுடனும் தொடர்புடையது என்கிறார் S. W. குமாரசுவாமி (1918: 160). அவ்வகையில் அவர் குறிப்பிடும் இடப்பெயர்களாவன: சங்கரப்பாய், சங்கரத்தை, சங்கத்தார்வயல், சங்கத்தார்புலம், சங்கம்புலவு, சங்கவத்தை, சங்கலாவத்தை ஆகியனவாம். மேலும் தம் நூலில் (1918: 26-27) 'ஹிங்காப்பிட்டிய என்பதும் சங்கர என்பதும் ஒரு சொல்லேயாம் என்றார். புத்த மதகுருமார் கூட்டத்தினருக்குச் சங்கம், சங்கரத்தினம், சங்கராவ, சங்கருவன், சங்கர முதலிய பெயர்களுமுண்டு எனக்கூறித், தம் மதம் நிறுவ முற்பட்டுள்ளமையும் ஆய்வுக்குரியதாகும்.

சாளம்பாய்

சாளம்பை என்பது ஒருவகைப் புல்லாகும். சாளம்பை > சாளம்பாய் எனவும் வழங்கும் என்கிறார் ஞானப்பிரகாசர் (1917:168). தென்தமிழீழத்தில் அம்பாறை மாவட்டத்தில் சாளம் பைப்புல் நிறைந்து காணப்படும் வயல்நிலப் பகுதிக்குச் "சாளம்பை வட்டை" எனப்பெயர் வழங்குகின்றமை ஈண்டு நோக்கத்தக்கது. சாளம்பாய் (சாளம்பை) என்ற இடப்பெயர் சங்கானை, அளவெட்டி, பலாலி, பருத்தித்துறை முதலிய ஊர் களிலும் வழங்குகின்றது. இப்பெயர், Holambapa'ya - என்ற சிங்களப் பெயரின் திரிபென்று குமாரசுவாமி (1918:;160) குறிப் பிடுதல் ஒலி ஒற்றுமையே அன்றிப், பொருள் அடிப்படையில் பொருந்துவதன்று.

பத்தினிப்பாய்

இது பூநகரிப் பகுதியில் உள்ள ஒரு சிற்றூராகும். இங்கு பழைமையான கண்ணகை அம்மன் கோயில் அமைந் துள்ளது. இந்த ஊர்ப்பெயர் சிங்களத்திலுள்ள பத்தினிபாய (Pattinipa'ya) என்ற பெயரினின்றும் மருவி இருக்கலாம் என ஐயப்படுகிறார் S. W குமாரசுவாமி (1918:158). ஆனால் பத்தினி அமர்ந்த இடம் என்ற பொருளில் பத்தினிப்பாய் என்ற ஊர்ப்பெயர் தமிழில் தோன்றி வழங்கிற்று என்பதே பொருத்தமாகும்.

மானிப்பாய்(வலி.தெ.மே.15.ப.36)

மானி + பாய் = மானிப்பாய். மாணி என்பதன் திரிபே மானி ஆகும். மானி = மானமுள்ளவர், மாமன், மானியம் என்ற பொருள் குறிக்கும் சொல்லாகும். 'மானியம் என்பது இறையிலி நிலம். மானியக்காரன் = கிராமத்தில் இனாம் நிலம் முதலியவற்றின் பரம்பரைப் பாத்தியத்திற்குரியவன் (த.லெ.5: 3191) என்ற அடிப்படையிலும் இப்பெயர் ஆக்கம் பெற்றிருக் கலாம். மானிப்பாயில் பண்டை நாளிற் பிராமணக் குடியிருப்பு பெரிதாக இருந்ததாகக் கூறப்படுகிறது. மானி என்பது பிரா மணரையும் பிரமச்சாரியையும் குறிக்கும் சொல்லாக வழங்கி யுள்ளது. இப் பின்னணியில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, 'மானி' என்ற சொல்லுக்குப் பிராமணர் எனக் கூறும் விளக்கம் வருமாறு:

> "The word *Maani* stands for a Brahmin. In Kannada language, the word *maani* stand for a waiter............ The word *maani* was derived from Sanskrit *maanava* 'a youth, a student'. Rajaraja the Great annexed South Canara to the Cola Empire. It may be that Brahmins from that area borought usage of the word *maani,* 'a Brahmin' to Ceylon" (A. Veluppillai: 1972:54-55).

மேலும் தென்னிந்தியக் கல்வெட்டுக்களின் சான்றுகளை நோக்கும்போது "மானி" என்பது கோயில்களுடன் தொடர்புபட்டி ருந்த பிரமச்சாரிகளைக் குறிப்பிடுவதையும், இப் பிரமச்சாரிகள் கோயில் தொண்டுகளை மேற்கொண்டு வந்தனர் என்பதையும் அறியக்கூடியதாக இருக்கிறது (South Indian Inscriptions Vol:3p. 227). தஞ்சைப் பெருவுடையார்கோயிற் கல்வெட்டைச் சான்று காட்டி, மானி என்பது பிராமணர், பிரமச்சாரி, கோயிற்றொண்டர் என்ற பொருள் தந்து நிற்கின்றது என்கிறார் பேராசிரியர் நாகசாமி. அந் நிலையில் அத்தகையோர் (மாணி > மானி) இருந்த இடம் (மானி + பாய்) மானிப்பாய் எனப் பெயர் பெற்றதெனல் பொருத்தமாகும்.

கோயில் அல்லது அரண்மனைச் சமையற்காரர் என்ற நிலையில் மானி என்போர் மடப்பளியார் எனவும் அழைக்கப்

பட்டனர். மடப்பளி, மடப்பளியார் என்பவற்றுக்கு நூலோர் தரும் பின்வரும் விளக்கங்களை அறிந்து கொள்ளுதல் சமூகநிலை நோக்கிய பயனுறு செயலாம்:

(அ) "ஐந்தாறு கிராமங்களுக்குத் தலைமை பெற்றது மடப்பம்; அளித்தல் = காப்பாற்றுதல், மடப்பத்தை அளிப்பதால் மடப்பளி என்பதாம்" (யாழ்ப்பாண வைபவமாலை:64).

(ஆ) "கலிங்கதேசத்து மடப்பளியூரினின்று வந்த அரச குடும் பத்தவர்களே மடப்பளியார் என்றழைக்கப்பட்டனர். (யாழ்ப் பாணவைபவ கௌமுதி:148-149).

(இ) "சில சரித்திர ஆசிரியர்கள் மடப்பளி எனும் மொழியை மடைப்பள்ளியாக்கி அரச குடும்பங்களுக்குச் சமையல் செய்தவர்களின் சந்ததியார் எனக் கூறுவாருமுளர் என் கிறார் குலசபாநாதன் (யாழ்ப்பாண வைபவமாலை:64).

(ஈ) "மடப்பளியார் தமிழரசர் காலத்திற் பிராமணரின் சமையற் கூட உதவியாட்களாக இருந்தனர். பின்பு அரச குடும்பத் தினருக்குச் சமையல் செய்தனர்" (யாழ்ப்பாணச் சரித் திரம்:61).

(உ) இவர்கள் கலிங்க நாட்டு நந்தவாடிப் பிரிவிலுள்ள மடப் பளி எனும் ஊரிலிருந்து வந்தவர்கள் எனக் கூறுகின்றார் சுவாமி ஞானப்பிரகாசர் (யாழ்ப்பாண வைபவ விமரி சனம்:148).

மானி, பாய் என்னும் இரு திராவிடச் சொற்களின் இணை வால் அமைந்த இவ்விடப்பெயரை குமாரசுவாமி (1918:160), மானப்பாய, அல்லது மானிப்பாய (M'anayi or Mani .... a plant justicis) என்ற சிங்களப் பெயரின் திரிபு என்று பொருத்தமற்ற வகையில் எழுதியுள்ளார். இவற்றோடு, வீமன்காமத்தில் மாந்தப் பாய், தனப்பாய், மல மண்டலப்பாய் (மலை+மண்டலப்பாய்) ஆகிய குறிச்சிப் பெயர்களும் வழக்கிலுள்ளன. தையிட்டியில் தண்டலப்பாய், சவங்கடப்பாய், தொங்களப்பாய் என்பனவும், உரும்பிராயில் தோலப்பாய், சுதுமலையில் கச்சப்பாய், சுழிபுரத்

தில் இயக்கடப்பாய், மானிப்பாயில் கிணாப்பாய், தொல்புரத்தில் தலக்கடப்பாய் என்பனவும் குறிச்சிப் பெயர்களாக வழங்கு கின்றன. இப் பெயர்கள் அனைத்துக்கும் சிங்கள விளக்கம் கொடுக்கிறார் குமாரசுவாமி (1918:160-161). ஆயினும், குமார சுவாமி அவர்களின் கருத்துக்கள் மறுத்துரைக்கப்பட்டு, பாய் ஈற்று இடப் பெயர்கள் அனைத்தும் தமிழ்மொழியில் மூலமும் பொருளும் கொண்டவை என்பதற்குத் தக்க விளக்கங்கள் மேலே தரப்பட்டுள்ளமை காண்க.

'புலம்' ஈற்று இடப்பெயர்கள்

புலம் என்பது திராவிட மொழிச் சொல்லாகும். இச் சொல் தமிழில் புல்+ அம் = புலம் எனவும், திராவிட மொழிகளில் ஒன்றாகிய கொலமியில் 'பொலமி' எனவும், கன்னடத்தில் 'பொல' எனவும் வழக்குப் பெறுகிறது (தாவீதுஅடிகள்:1970:69). தொல் காப்பியம் - பொருள் - 641 ஆம் சூத்திரம் புல் >புலம் பற்றிக் குறிப்பிடுகிறது. புல்+ இலை +வைப்பு = புல்லிலை வைப்பு. இதன் பொருள் குடிபோய்ப் பாழ்ந்த ஊர் எனவும், இலைகளால் வேயப்பட்ட குடிசைகளையுடைய ஊர் எனவும் பொருள் தரு கிறது. அகநானூற்றில் புலம் என்ற சொல், நிலம் என்ற பொருளில் 29 முறை இடம்பெற்றுள்ளது. மேலும் வயல், இடம், திக்கு, மேட்டு நிலம் என்ற பொருள்களிலும் இச் சொல் வழங்கி யுள்ளது (த.லெ. 5:2784). புலம் > புலம்பு. புலம்பு என்பது நெய்தல் நிலத்தையும், புலம்பன் என்பது நெய்தல் நிலத் தலைவனையும் குறித்து வரும் (ஐங்குகுறுநூறு:133) வழக் காறுகளும் நோக்கத்தக்கன.

புல் > புலம் > புலம்பு = நெய்தல் நிலத்தைச் சுட்டிற்று. புலம்பு = தனிமை என்ற பொருளில் (அகம், தொல்) நூற்சான்று காட்டி, பெயராக = தனிமை எனவும், வினையாக = தனிமையுறு எனவும் பொருள் தருகின்றார் தாவீது அடிகள் (1970:70). காலப் போக்கிற் புலம்பு என்பது வருந்து, வருத்தம் என்ற பொருள் களையும் குறிப்பதாயிற்று. அகநானூற்றிலே நிலத்தைச் சுட்டி வரும் புலம் என்ற சொல்லிலிருந்தே புலவி = (ஊடல்) என்ற சொல்லும் தோன்றிற்றென்ப. புல் + அர் = புலர் = விடிதல், விடியல். புலரி = விடியல். விடியற் காலத்தில் உழவன் செல் லிடம் புலம் ஆதலால், அது காரணப் பெயராகவும் அமையலாம்.

மேலும் "வெள்ளம் உவரோடு உவரிக் கடற்புலவு மாற்றும்......" (முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் - செய் - 3) என்ற பாடல் வரியாலும், புலவு (> புலம்) என்பது உவர் நிலம் சார்ந்த நிலப்பகுதி என்ற பொருளுந் தொனித்தது. மேலும் முல்லை நிலம் இருவகைப்படுமெனவும், அவை முறையே மரம் நிறை நிலம், புல் நிறைநிலம் எனப் பெயர்பெறுமெனவும், முன்னது புறவு எனவும், பின்னது புதவு எனவும் அழைக்கப்படும் என்றார் சிவபாதசுந்தரனார் (1972:147-150). இப் புதவே புலம் என இடப்பெயராக்கத்தில் இணைந்த சொல்லாகும். எனவே புலம் ஈற்று இடப்பெயர்கள் அனைத்தும் தமிழ்ப் பெயர்களே என்பது தெளிவாகின்றது.

உயரப்புலம் (வலி.தெ.மே.408)

இது ஆனைக்கோட்டைப் பகுதியில் அமைந்த ஓரிட மாகும். தரைத்தோற்ற அடிப்படையில் இவ்விடம் சற்று உயர மாகக் காணப்படுகின்றது. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் மத மாற்றம் நடைபெற்ற போது, மதம் மாறாத மக்கள் தனித்து வாழ்ந்த இடம் உயரப்புலம் எனக் காரணப் பெயர் பெறுவ தாயிற்று (தகவல்: ஆனைக்கோட்டை - நடராசா செல்வராஜா).

ஒட்டகப்புலம் (வலி.வ.71.3)

ஒட்டன் + புலம் > ஒட்டகப்புலம். குளம் வெட்டி வாழ்ந்தார் ஒட்டன் எனப்பட்டனர். அவர்களது தொடர்பால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

கனகாம்பிகைபுலம் (கர.164அ-12)

கரச்சிப் பகுதியில் யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலை யின் 154ஆம் மைல் கல்லுக்குக் கிழக்கே கனகாம்பிகைபுலம் அமைந்துள்ளது. இது கோயிற்பெயரால் வழங்கும் இடப்பெயராம்.

காட்டுப்புலம் (வலி.மே.49அ.2)

இது வலிகாமம் பகுதியில் அமைந்துள்ளது. காடுகள் நிறைந்த நிலப்பகுதி என்ற அடிப்படையில் இப்பெயர் பெற்ற தென்க.

குட்டியப்புலம் (வலி.வ.71.2)

இது வயாவிளான் பகுதியில் அமைந்துள்ள ஓரிடம். "குட்டி" என்ற ஆட்பெயர் அடியாக இப்பெயர் வழங்கிற்று.

கொற்புலவு (தென்ம.105.5)

கொல்லர் + புலம் > கொற்புலவு. இது கச்சாய்ப் பகுதி யில் அமைந்த ஓரிடம். கொல்லர்கள் நெருங்கி வாழ்ந்த இட மாதலாற் கொல்லர்புலம் என்ற பெயரேற்பட்டு, காலப்போக்கில் கொற்புலவு என மருவிற்று என்பர்.

தல்லையபுலம் (வடம.தெ.மே.130.4)

துன்னாலை தெற்கில் தல்லையபுலம் அமைந்துள்ளது. இங்கு இப்பெயர் கொண்ட பெரிய குளமும், 'குமரன்குளம்' என்ற சிறிய குளமும் அமைந்துள்ளன. வயலும் தோட்டமுங் கொண்ட மருத நிலத்தூராக இவ்வூர் திகழ்கிறது. இதன் குறிச்சிப் பெயர்களாகச் சேகண்டி, சிற்றடைப்பு, ஆவலயப்புலம், இன் பந்தூ, வண்ணான்துறை, வண்ணான்கிராஞ்சி என்பனவும் காணப் படுகின்றன. இவற்றுடன் ஒட்டன்பள்ளம் என்ற வயல்நிலப் பெயரும், மழைநீர் வடிந்து செல்லும் 'மொண்டன்' என வழங்கும் வாய்க்கால் பெயரும் இங்கு வழக்கிலுள்ளன (தகவல்: சி.சி. ஆனந்தம்-தல்லையபுலம்).

திடற்புலம் (வலி.தெ.60.5)

இது புன்னாலைக்கட்டுவன் பகுதியில் அமைந்துள்ள திடற் பகுதியினைக் குறித்து வழங்குகிறது.

தையிட்டிபுலம் (வலி.வ.64.5)

இது தையிட்டியூரின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இவ்விடம் காங்கேசன்துறைப் பகுதியின் கிராமசேவகர் பிரிவில் இடம்பெறுகிறது. இப்பெயருடைய ஓரிடம் விழிசிட்டி, கொல்லன் கலட்டி ஆகிய ஊர்களின் எல்லையிலும் அமைந்துள்ளது.

பனிப்புலம் (வலி.மே.40அ.2)

பனி + புலம் = பனிப்புலம். இவ்வூரின் எல்லைகளாக வடக்கே பண்ணாகம், சுளிபுரம், கிழக்கே சில்லாலை, தெற்கே மாதகல், மேற்கே வயல்வெளிகள் என்பன அமைந்துள்ளன. இப் பகுதி புல்செறிந்த இருவாட்டி நிலமாக இருந்தமையாலும், புல் நுனியிற் பனித்துளிகள் நிறையக் காணப்பட்டமையாலும் பனிப்புலம் என இயற்பெயர் பெற்றது. இப்பெயருடைய குறிச்சி கள் வேறு இடங்களிலும் காணப்படுகின்றன. பணிப்புலம் > பனிப்புலம் என்று வழங்கிற்று எனவும் விளக்கம் கொடுக்கலாம். பனிப்புலம் சுளிபுரத்திற்கு (சோழியபுரம்) அண்மையில் இருப்ப தால் இவ்விடத்திற்குச் சோழ நிருவாக அடிப்படையிலான தொடர்பு இருந்ததாகவும் ஊகிக்க இடமுண்டு. ஈழம் முழுவதும் சோழப் பேரரசின் கீழிருந்தபோது அதனை நிருவகித்த சோழ நாட்டு அரச நிருவாகிகள் சிலர் இங்கே தங்கலாயினர் (S. Pathmanathan 1978:40-41). அவ்வகையில் 'பணி மகன்' என்ற நிருவாக அலுவலர் தங்கியிருந்த இடம் பணிப்புலம் என வழங்கி, பின்னாளில் பனிப்புலம் என மருவியிருக்கலாம்.

இங்கு கோயிற் பணிபுரியும் தொழிலாளர் பலர் வாழ்வ தாலும் இவர்கள் திருக்கேதீஸ்வரம், கதிர்காமம் ஆகிய இடங் களில் மடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து பணி புரிந்தவர் கள் என்ற காரணத்தாலும் இப்பதி பணிப்புலம் என்றிருந்து காலப் போக்கில் பனிப்புலமாயிற்றென்று அவ்வூரைச் சேர்ந்த ஆசிரியர் மு.விருத்தாசலம் கருதுகிறார். இதன் குறிச்சிப் பெயர் களாகச் செருக்கல்புலம், செட்டியாகுறிச்சி, வடிஒல்லை, காலை யடி, கலட்டி, பறங்கிசாந்தை, வேட்டையாடுசாந்தை என்பன வழக்கிலுள்ளன.

மறவன்புலவு (தென்ம.93)

மறவன் + புலம் = மறவன்புலம். இது, யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாற்றோடு தொடர்புடைய ஓரிடமாகும். சாவகச் சேரிக்குத் தென்மேற்கே மறவன்புலவு அமைந்துள்ளது. மறவன் புலம் என்பது மறவன்புலோ என்ற உச்சரிப்புங் கொண்டுள்ளது. 'யாழ்ப்பாண வைபவகௌமதி' என்னும் நூலிலே மறவன்புலத் தார் பற்றிய செய்தி வருமாறு கூறப்பட்டுள்ளது:

> "வரோதயசிங்கையாரியன் காலத்தில் (கி.பி. 1458 வரை) மதுரையில் ஆட்சி புரிந்த சந்திரசேகர பாண்டியனுக்கு உதவி யாகத் தமிழகத்திற்குப் படையுடன் சென்று, பாண்டியனை அரசனாக்கினான். பாண்டியன் இந்த உபகாரத்திற்குப் பதிலாகப் பெருந் திரவியத்துடன் மல்யுத்தத்தில் வல்ல சில கன்னடரையும் மறவரையும், வில்வித்தையிற் சிறந்த சில வீரரையும், சில வேடரையும் ஆரியச்சக்கரவர்த்திக்கு அளித் தான். ஆரியச்சக்கரவர்த்தி அம் மறவரை மறவன்புலத்திலும் வேடுவரை வேடுவன்கண்டியிலும், கன்னடரை மாவிட்டபுரத் திலும் குடியமர்த்தினான்". (க. வேலுப்பிள்ளை:1918: 22).

இச் செய்தி, தென்னிந்தியத் திராவிடமொழிப் பெயர்கள் இப் பகுதிகளில் இடம்பெற்றமைக்கான பின்னணியைச் சுட்டிக் காட்டுகின்றது. யாழ்ப்பாண வைபவமாலையில் (பக்.61-62) மறவன்புலவு பற்றிய சில தகவல்கள் சங்கிலியன் மன்னனுடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளன. அவ்வகையிலும் மறவர் குடியிருந்த புலம் மறவன்புலம் எனப் பெயர் பெற்றதெனலாம். இங்கு கலையாணன்கோட்டைப் பாதி என்ற காணிப்பெயரும், வன்னியனார் தோப்பு என்ற குறிச்சிப் பெயரும் இடம்பெற்று வரலாற்றுத் தொடர்பைக் காட்டுகின்றன.

'பை' ஈற்று இடப்பெயர்கள்

பை என்பது கொள்கலம், சிற்றிடம் என்ற பொருள்கள் தரும் சொல்லாகும். எனவே 'பை' ஈற்றுப் பெயர்கள் பொது வாகக் 'கொள்ளிடம்' என்ற பொருளிலேயே வழங்கியுள்ளன. இறலிப்பை என்பது (இறலி + பை) பட்டுப் பூச்சிக் கூடு என்ற

பொருள் தருவதும் நோக்குக (த.லெ.இணைப்பு:136). தமிழ்ப் பெயர்களுக்கு வலிந்து சிங்கள மூலம் கற்பிக்கும் குமாரசுவாமி (1918:158) இதற்குச் சிங்கள மூலம் வருமாறு குறிப்பிடுகிறார். 'pe' என்ற சிங்கள ஈற்று இடப்பெயர்கள் > 'pay' = பாய் என மருவி, அது பின்னர் பை எனத் திரிந்தது என்கிறார். இதற்குச் சான்றாக மாதம்பை (Madampe), மயிலப்பை (Mayillape), பலுப்பை (Palupe), அற்பை (Halpe) என்னும் இடப்பெயர்களைக் காட்டியுள்ளார். சுவாமி ஞானப்பிரகாசரும் அவ்வாறே இவற்றைச் சிங்களம் என விளக்கம் கொடுத்துள்ளார் (12917: 168). எவ்வாறா யினும் பை என்பது தமிழ்ச்சொல் என்பதும், அது சிற்றிடத்தைக் குறித்து வழங்கும் சொல் என்பதும் இங்கே தெளிவுபடுத்தப் படுகின்றன.

மயிலப்பை (வலி.வ.68.1)

மாவிட்டபுரத்திலிருந்து கிழக்கே ஒரு மைல்தொலைவில் உள்ள ஒரு சிறிய இடமே மயிலப்பை. தமிழகத்து மயிலாப்பூரின் சிதைவே மயிலப்பை எனக் கருதப்படுகிறது. இங்கு பழை மையான கண்ணகி அம்மன்கோயில் ஒன்றிருந்து, 1877இல் அழிக்கப்பட்டு, மீண்டும் 1970இல் புதிதாக அமைக்கப்பட்டது என்பர். இவ்வூரினர் தாம் மயிலாப்பூர் வாசிகளின் மரபினர் எனக் கருதுவர். இவ்வூருக்கு அயலிலுள்ள மாவிட்டபுரத்துக் கந்தசுவாமி கோயிலுக்குரிய மயில்கள் இங்கே வந்து தங்குவ தால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பாருமுளர்.

மலைப்பை (வலி.தெ.ப.32.1)

இது சுன்னாகம் பட்டினசபைப் பிரிவிலுள்ள ஓரிடமாகும். கேரளத்திலுள்ள அலைப்பை என்ற இடப்பெயரே மலைப்பை என மாறிற்று என்பர் முத்துக்குமாரசாமிப்பிள்ளை (1982:12). இதன் அயலிற் கதிரைமலைச் சிவன்கோயில் உள்ளது. இக் கோயில் அமைந்துள்ள இடம் உயரமான பகுதியாகவே காணப் படுகிறது. இதற்கு அண்மையிலுள்ள இக் குடியிருப்பும் உயர மான இடத்தில் இருப்பதால் மலைப்பை எனக் காரணப் பெயர் பெற்றிருக்கலாம். தென்கன்னட மாவட்டத்தில் உள்ள மல்பே (Malampu > Malpe) என்ற இடப்பெயருடன் மலப்பை என்ற

பெயரை ஒப்பிடக் கூடியதாகவும் உள்ளது (Raghupathi Kemtur: 1980:52). இவ்வாறு ஒப்பிடுவதற்குரிய சமூக வரலாற்றுப் பின்னணிகள் யாழ்ப்பாண வரலாற்றுடன் இணைந்திருத்தலும் இதற்குச் சான்றுபகர்கிறது.

'மடம்' ஈற்று இடப்பெயர்கள்

நெடுந்தொலை செல்லும் பயணிகள் தரித்து நின்று களைப்பாறிச் செல்லத்தக்க வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள மண்டபங்கள் 'மடம்' எனப்படும். ஆங்கு நீர் வசதி, படுக்கை வசதி என்பன அமைந்திருக்கும். இத்தகைய மடங்கள் அமைந்திருந்த இடங்கள் அம் மடங்களின் பெயரால் வழங்கலாயின. இலங்கையின் பல பகுதிகளிலும் மடம் ஈற்றுப் பெயர்கள் காணப்படுகின்றன.

ஆடியமடம் (நல்.37.1, 38.1)

ஆடியபாதன்+மடம் > ஆடியமடம். இது கொக்குவில் ஊரின் ஒரு பகுதியாகும். இங்கு ஆடியபாதன் என்பவரால் நிறுவப்பட்ட மடமே ஆடியமடம் ஆகும். அப்பெயர் இவ்விடத்தையும் குறிப்பதாயிற்று. இங்கு முருகன் கோயில் கட்டப்பட்டு, இவ்விடம் புதுக் கோவிலடி என இப்போது வழங்கப்படுகிறது. இவ்விடத்திலிருந்து கிழக்கு நோக்கி 'ஆடியபாதம் வீதி' செல்கிறது.

உப்புமடத்தடி (நல்.36.4)

இது கொக்குவில் ஊரின் ஒரு பகுதியாகும். முன்னர் இங்கு உப்பு வணிகம் நடைபெற்றதெனக் கூறுவர். இதன் பொருட்டு இங்கு உப்புமால்களும், மடங்களும் கட்டப்பட்டிருத்தல் இயல்பானதே. அவற்றின் காரணமாக இப்பெயரேற்பட்டிருக்கலாம்.

கந்தர்மடம் (நல்.மா.ச.1.16)

யாழ்ப்பாண மாநகர சபையின் ஒரு பகுதியாக கந்தர் மடம் அமைந்துள்ளது. இங்கு பல்லாண்டுகளுக்கு முன்பாக கந்தபுராண மடம் அமைந்திருந்ததென அறியப்படுகிறது. அம் மடத்திற்குரிய காணிகள் இங்கே உள்ளன. இங்கே 'கந்தபுராண வீதி' இடம்பெற்றுள்ளது. கந்தர்மடத்திலேயுள்ள 'சைவப்பிரகாச வித்தியாசாலை' முன்னர் கந்தபுராண மடத்துப் பள்ளியாகவே செயற்பட்டது. தென்னிந்தியாவிலே கந்தபுராண அரங்கேற்றம் இடம்பெற்ற அதே காலத்தில் இங்கும் கந்தபுராணப்படனம் நடைபெற்றிருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தில் தொடங்கப்பட்ட இம் மடம் பின்னர் ஆறுமுகநாவலர் காலத்தில் கந்தர் மடத்துப்பிரபு என்பவரால் பேணப்பட்டதாகக் கூறுவர். இம் மடத்தின் பெயராலேயே கந்தர்மடம் என்ற இடப்பெயர் ஏற்பட்டதாக அவ்வூர் கா.சி. குலரத்தினம் அவர்கள் கூறுவர். இவற்றைவிட இங்கு பழைய மடங்களாகச் 'சிவகுருநாத குருபீடம் என்னும் தேவாந்தமடம்', 'செல்லப்பிள்ளையார்மடம்', 'சன்னியாசி மடம்' என்பன இருந்தன எனவும் கூறப்படுகிறது. இங்கு அரசவெளி என்ற ஓரிடம் இருப்பதும் நோக்கத்தக்கது.

சுப்பர்மடம் (வடம.வ.கி.131அ.10)

இது பருத்தித்துறையிலுள்ள ஒரு பகுதி. சுப்பர் என்ற ஆட்பெயர்கொண்ட மடத்தின் பெயரால் இவ்விடம் வழங்கிற்று.

செட்டியாமடம் (வலி.மே.45அ.3)

செட்டியார் + மடம் = செட்டியாமடம். இது அராலி வடக்கில் அமைந்துள்ள ஓரிடம். இங்கு முன்னர் செட்டிமார் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களாற் கட்டப்பட்ட மடம் ஒன்று இருந்ததாகவும் கூறுவர். இவ்வூருடன் இணைந்த பகுதியாக 'நாகேந்திர மடம்' என்ற இடமும் காணப்படுகிறது.

ஞானி மடம் (பூ171.22)

இது பூநகரிக்கு அருகேயுள்ள ஓரிடம். இங்கு ஞானி என்பவரது பெயரில் ஒரு மடம் இருந்ததென்றும், அம் மடத்தின் பெயரால் இவ்விடமும் பெயர்பெற்றதென்றும் கூறுவர்.

திமிலமடம் (கர.162)

இது கரச்சிப் பகுதியில் அமைந்துள்ளது. திமிலர் என்ற இனக்குழு மக்கள் வாழ்ந்த இடம் என்ற பொருளில் இவ்விடப் பெயர் தோற்றம் பெற்றதெனலாம். மட்டக்களப்பில் திமிலதீவு என்ற ஓரிடமுள்ளமை நோக்கத்தக்கது.

புதுமடம் (வலி.தெ.56.4)

இது உடுவில் ஊரின் ஒரு பிரிவாகும். இங்கு புதிய மடம் கட்டப்பட்டபோது அம் மடத்தின் இயல்பினால் புதுமடம் என இடமும் பெயர் பெறுவதாயிற்று.

மருதனாமடம் (வலி.தெ.56.3)

இது ஒரு பழம் பதியாகும். இங்கு மருதயினார் என்னும் அறப்பணியாளர் ஒருவரால் வழிப்போக்கர்கள் தங்கிச் செல்ல மடமும், கிணறும், சுமைதாங்கியும் அமைக்கப்பட்டிருந்தன என்றும், அவரது பெயரால் அம் மடம் வழங்கிற்றென்றும், பின்னர் அம் மடத்தின் பெயரால் இவ்விடமும் பெயர் பெற்றதென்றும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணம் + காங்கேசன்துறை பெருஞ்சாலை இவ்வூரினூடாச் செல்கிறது. இங்கே சேர்.பொன். இராமநாதன் அவர்களால் மகளிர்க்கெனத் தனியாக ‘இராமநாதன் கல்லூரி’ அமைக்கப்பட்டுள்ளது. இக் கல்லூரியின் ஒரு பகுதியில் யாழ்ப் பாணப் பல்கலைகக்கழகத்தின் ‘இராமநாதன் நுண்கலைக் கல் லூரி’ (Ramanathan Academy of Fine Arts) அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

‘வாய்’ ஈற்று இடப்பெயர்கள்

வாய் என்பது இடம் என்ற பொருளில் இடப்பெயர் ஈறாக வழங்கிற்று. தமிழகத்தில் வாய் ஈற்றுப் பெயருடையனவாக அலைவாய், ஆலவாய், ஏரிவாய், கல்வாய், நாவாய், நெல்வாய் எனப் பல இடங்கள் உள்ளமை ஈண்டு கருதத்தக்கது.

அல்வாய் (வடம.தெ.மே.133.1)

அல் + வாய் = அல்வாய். அல் > அலை = கடலலை; வாய் = இடம். அலை + வாய் > அல்வாய். கேரளத்திலுள்ள ஆல்வாய் என்ற இடப்பெயரின் திரிபாக இங்கு அல்வாய் என்ற பெயர் அமைந்திருக்கலாம் என்பது ஆய்வுக்குரியதாகும். இவ் விடம் முன்னர் கடற்கரை வரையும் பரந்திருந்ததோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. அவ்வகையில் அலைமோதும் இடம் என்ற பொருளில் இவ்விடப் பெயர் ஏற்பட்டிருத்தல் கூடும். மட்டக்களப்புப் பேச்சு வழக்கில் கடற்கரையோரத்தை ‘அலவாய் கடற்கரை’ என வழங்குவதும் நோக்குக. அல்வாயிலுள்ள குறிச்சி களாக மாயக்கை, இங்கிலியோ வத்தை, பட்டியோடை, கலட்டி, வட்டுவத்தை, காந்தியூர், தெருமுடி மடம், இலகடிதாமன்தோட்டம், சாத்தியோவத்தை, பொதுரானை, மோட்டன்சீமா, மன்னன்மூலை, மாலுசந்தி, ஓடை, பஞ்சி தோட்டம், கொட்டன்தீவு, பெரியார்பகுதி என்பன அமைந்துள்ளன. மாயக்கை என்ற இடம் பண்டை நாளில் பெரிதும் இருள் சூழ்ந்த குகையாக இருந்தமையால் அப்பகுதி, (அல் + வாய் =) இருள்வாய் என்ற நிலையில் அல்வாய் என்ற இடப்பெயர் ஏற்பட்டிருத்தல் இயல்பே.

மாயக்கை (வடம.தெ.மே.133.3)

மாயக்கை என்ற குறிச்சிப் பெயரும் அதனோடு தொடர் புடையதாகக் காணப்படும் செய்திகளும் ஆய்வுக்குரியன. இங்கு குறுணிக் கற்காலத்திற்குரிய (Microlithic period) கருவிகள் நிலத் திற் கடியில் ஒரு குகையில் கண்டுபிடிக்கப்பட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் செ. கிருஷ்ணராசா, பொ. இரகுபதி ஆகியோரால் (1984) ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இச்சான்றுகள் இப்பகுதியின் தொன்மைக் காலப் பண்பாட்டை அறிந்து கொள்ளத் துணையாகின்றன.

கந்தபுராணத்தில் இடம்பெற்றுள்ள மகேந்திரம் என்ற இடம் கடல் கொள்ளப்பட்ட தென்னிந்தியப் பகுதியில் அமைந் திருந்த தென்பர். புராண வரலாற்றில் இடம்பெற்றுள்ள திருச் செந்தூர், திருப்பரங்குன்றம் என்பன இன்றும் உள்ளன. முருகன் வள்ளி திருமணம் கதிர்காமத்தில் நடைபெற்றதென்றும், தென்னிந் தியாவின் கிழக்குப் பகுதியும், கடல்கொள்ளப்பட்ட தென்னிந்தி யாவின் ஒரு பகுதியும் இலங்கையும் சேர்ந்த பகுதியே கந்த புராண நிகழ்வுகள் இடம்பெற்ற பகுதி என்றும் கூறுவாரும் உளர் (ஆ.சின்னத்தம்பி:1994:93-94). யாழ்ப்பாணத்தின் வடக்கே வடமராட்சிப் பகுதியில் உள்ள ஊர்ப் பெயர்கள் சில இதற்குச் சான்றாகின்றன.

'மாயக்கையில் நெல் விளைந்தால் நாடெல்லாம் பஞ்சம்' என்ற பழமொழி இங்கு வழக்கிலுள்ளது. மாயக்கை என்றுமே நீர் வற்றாத பள்ள நிலமாகும். நெற்செய்கை மேற்கொள்ள முடியாதவாறு என்றுமே இங்கு நீர் நிறைந்திருக்கும். நாட்டில் கடும் வரட்சி நீடித்தால் மாயக்கை நீர் வற்றிவிடும். அப்போது அங்கே பயிர் செய்யலாம். அதேவேளையில் ஏனைய இடங்களில் வரட்சியால் பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்பது இப் பழமொழியால் அறியப்படுகிறது. மாயக்கையில் ஒரு குகை தூர்ந்த நிலையி லுள்ளது. மாயக்கை என்ற இடத்திற்கு மேற்குப் புறமாக மன்னன் மூலை என்ற இடம் அமைந்துள்ளமை, இப்பகுதி பண்டைய அரசரின் மறைவிடப் பகுதியாக இருந்திருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது. (தகவல்: செ. கிருஷ்ணராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கரணவாய் (வடம.தெ.மே.127.119)

பருத்தித்தறை → நெல்லியடி → சாவகச்சேரி சாலையின் 5 ஆம் மைல்கல்லின் வடக்கும் தெற்குமாக அமைந் துள்ள பெரிய ஊர் கரணவாய். இங்கே வயல்வெளிகள் பெரிதும் காணப்படுகின்றன. தெற்கு எல்லையில் பரவைக் கடலுள்ளது. இங்கு உப்பு விளைவிக்கப்படுமிடம் 'உப்புக்கழி' எனப் பெயர் பெறும். "எள்ளன் குளம்" என்ற பெயர்கொண்ட குளம் ஒன்றும் இங்குள்ளது. இங்கே சோழகங்கன், இளகாமம், மணல்பாதி என்ற பெயர் கொண்ட இடங்களும் அமைந்துள்ளன. சோழகங் கன் என்ற குறிச்சிப் பெயர் சோழர் ஆட்சித் தொடர்பினைக்

காட்டுவதாகும். திருகோணமலையில் ஆட்சி செய்த குளக் கோட்டன், சோழகங்கன் என்ற பெயரைப் பெற்றிருந்தான் எனத் தட்சிணகைலாச புராணம் கூறுகிறது. இச் சோழகங்கன் பத்தாம் நூற்றாண்டின் பின்னரே வாழ்ந்திருத்தல் வேண்டும். சோழப் பேரரசு எழுச்சி பெற்ற பின்பே சோழகங்கன் என்ற பெயர் வழக்கில் வந்தது என்கிறார் சி. பத்மநாதன் (1970:40).

கரணவாய் என்பது கருணைவாய் என்பதன் சிதைவாக லாம். கருணை என்பது (ஒருவகைக் கிழங்குச்செடி) பேச்சு வழக்கில் கரணை, கறணை என வழங்குதலுமுண்டு. இவ் வூரைக் கருணையம் பதி, கருணையூர் என்றும் அழைப்பர். கரணவாய் என்ற பெயர் கருணீகர் என்ற பெயரிலிருந்தும் தோன்றியிருக்கலாம். கருணீகம் = ஊர்க் கணக்கு வேலை. கருணீகன் = ஊர்க் கணக்கன், கணக்கு வேலை பார்க்கும் ஒரு சாதி (த.லெ.2:756). "தமிழகத்திலுள்ள 'கருணீகர்வாயில்' என்பது மருவி, கரணவாய் என வழங்கிற்று என்கிறார் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1933:62). யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி வளமாக இருந்தபோது பாண்டி நாடு முதலிய நாடுகளிலே பெரும் பஞ்சம் நிகழ்ந்தமையால் பல குடிகள் அங்கிருந்து குடிபெயர்ந்து யாழ்ப்பாண அரசில் குடி யேறினர். இவ்வேளையில் தொண்டை நாட்டிலிருந்த 12 கருணீகர் தங்கள் குடும்பங்களுடன் வந்து கரணவாயில் வசித்தனர். இவர் கள் உடுப்பிட்டியைச் சேர்ந்த 12 குறிச்சிகளுக்கும் கணக்கராய் அரசனால் நியமிக்கப்பட்டனரென்றும், தமிழரசு முடிந்த பின் அவரும் அவர் மரபினரும் சைவ குருமாராய் விளங்கி வரு கின்றனரென்றும் கூறுவர்" என க. வேலுப்பிள்ளை:(1918:35) கருதுவது பொருந்தும். மேற்கூறிய சான்றுகளிலிருந்து இப் பகுதிகளில் சோழர் ஆட்சி நிலை பெற்றிருந்தமையால் தமிழக ஊர் பெயர்கள் இங்கும் தோன்றுவதாயின என்பது தெளிவாகிறது.

இயல் ஏழு

ஊராட்சி நிலை இடப்பெயர்கள்

மக்கள் குறிப்பிட்ட பகுதிகளிலே குடியேறி, குடிமனை அமைத்து, வளமாக வாழ்ந்து, தமக்கென ஆட்சி ஒழுங்குகளை மேற்கொண்டு வாழும்போது, ஊர்கள் நகரங்களாகி, நகரங்கள் மாநகரங்களாகி, நாகரிகங்களும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. அவற்றின் வளர்ச்சிப்போக்கில் ஆட்சிமுறைகளும் ஒழுங்கு நியதிகளும் வளர்ச்சி பெறலாயின. பண்பாட்டு வளர்ச்சியிற் குடியிருப்பிடங்களும் அவற்றின் தாக்கத்தாற் புதுப்புதுப் பெயர்களைப் பெறுவதாயின. ஆட்சியாளரின் பெயர்கள், அவர்களது குடியிருப்பு, நிருவாகக் கடமைகள், படைஅதிகாரிகள், படைகளின் தரிப்பிடம் முதலானவற்றின் அடிப்படையில் இடப்பெயர்களும் ஆக்கம் பெறலாயின. அவ்வகையில் ஊராட்சி நிலையைச் சுட்டும் இடப்பெயர்கள் தோன்றலாயின. இவ்வகை இடப்பெயர்க் கூறுகளாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ளனவற்றை வருமாறு வகைப் படுத்தலாம்:

ஆட்சி	திசை	பற்று
கடவை	நகர்	புரம்
கோட்டை	நாடு	வேலி
தரிப்பு		

'ஆட்சி' - ஈற்று இடப்பெயர்கள்

ஆள் + சி = ஆட்சி. இது ஆட்சி செய்தல் என்ற பொருளில் வரும் தொழிற்பெயர் குறிக்கும் சொல்லாகும். இடப் பெயராக்கத்தில் 'ஆட்சி' என்ற பெயர்ஈறு பின்னொட்டு நிலையில் அமைந்துள்ளது. மறவர் குலத்தினர் யாழ்ப்பாணத்தின் வடபாலும் தென்பகுதியிலும் குடியேறித் தமது ஆட்சியை நிலைநிறுத்திய போது வடமராட்சி, தென்மராட்சி என்ற இடப்பெயர்கள் வழக்குப் பெறுவதாயின.

காலத்திற்குக் காலம் பல்லவர், பாண்டியர், சோழர் மேற்கொண்ட ஈழப் படையெடுப்புக்களின்போது வந்த மறவர்கள் போர் வினை முடித்தபின்னர், இப் பகுதிகளிலேயே நிலையாகத் தங்கினர் என்பதை இம் மாவட்டத்திலுள்ள பல்வேறு இடப் பெயர்கள் சான்றுபடுத்துகின்றன. அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் நடைபெற்ற மாலிக்கபூரின் படையெடுப்பின்போது தெலுங்கு நாட்டினர் ஈழத்திற் குடியேறியதாகவும் கூறப்படுகிறது. அவ்வகையில் மறவர் குடியிருப்பு இப்பகுதிகளில் இடம்பெற்று, மறவர்தம் ஆட்சி நடைபெற்ற இடம் 'மறவராட்சி' என வழங்குவதாயிற்று. அப்பெயர் வழங்கிய வடபகுதியையும் தென்பகுதியையும் சுட்டிய நிலையில் வடமராட்சி, தென்மராட்சி என்ற இடப்பெயர்கள் தோற்றம் பெறலாயின. சந்நிதி சிவானந்தன் என்பவர் எழுதிய 'யாழ்ப்பாண வரலாறு' என்ற நூலில் வடமராட்சியிலும் தென் மராட்சியிலும் குடியேறிய தலைவர்கள், அவர்களது பெயர்களால் வழங்கும் குறிச்சிகள், இத் தலைவர்களுக்கும், தமிழ்நாட்டுக்குமுள்ள தொடர்பு என்பன விரிவாகக் கூறப்பட்டுள்ளமை மேலாய்வு செய்வதற்குரியனவாகும்.

சொற்பொருள் அடிப்படையில், வட + மறவர் + ஆட்சி = வடமராட்சி எனவும், தென் + மறவர் + ஆட்சி = தென் மராட்சி எனவும் புணர்ந்தது எனக்கூறும் மரபும் உண்டு. கலிங்க மாகோன் கேரளத்திலிருந்து மறவர்படைகளோடு படையெடுத்து வந்து இம்மறவர்களை இராஜரட்டையிற் குடியமர்த்தினான் எனச் சூளவம்சம் செப்புகின்றது (சி.பத்மநாதன்:1970:44). வடமராட்சி, தென்மராட்சி என வரும் பெயர்கள் வரலாற்றுப் பின்னணி கொண்டவையாகும். மறவர் = போர்வீரர். மறவர் ஆட்சி நிலைபெற்ற இடம் (மறவர் + ஆட்சி) மறவராட்சி > மராட்சி என மருவி வழங்கிற்று.

வடமராட்சி, தென்மராட்சி என்பவற்றிலுள்ள பெயர் ஈற்றை 'ஆராட்சி' எனப்பிரித்து விளக்கம் கூறப்படுதலும் உண்டு. கல் வெட்டுக்களில் 'ஆராட்சி' என்ற சொல் வழக்கு காணப்படுகிறது. 'ஆராட்சி' என்பது மேற்பார்வை, கணக்குப் பரிசோதனை செய்யும் அதிகாரி, அதற்காக இறுக்கும் வரி என்ற பொருள்கொண்ட சாசன வழக்குச் சொல் என நா. சுப்பிரமணியம் (நா. சுப்பிரமணியம்: 19 57:111,2:1398) கூறும் கருத்தும் நோக்கத்தக்கதே.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வடமராட்சி, தென்மராட்சி என்ற இருபெரும் பிரிவுகளும் 'ஆராட்சி' என்ற ஈறு பெற்றுள்ளன என ஆ. முத்துத்தம்பி வருமாறு குறிப்பிடுகிறார்:

> 'தொண்டைமானின் கருமமாக வந்த சனங்கள் பெரும்பாலும் தொண்டைநாட்டின் வடபாகத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் குடி கொண்ட பகுதி வடமராட்சி எனப்பட்டது. இவர்கள் 'வடமர்' எனவும், வடுகர் எனவும் பெயர்பெறுவர்' (ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை 1933:13).

வடமர் + ஆராட்சி = வடமராட்சி எனப் புணர்ந்தது என்று முத்துத்தம்பிப்பிள்ளை கூறும் விளக்கம் பொருத்தமற்ற தாகும். சோழ நாட்டின் வடபகுதியிலிருந்து வந்த மறக்குடிகள் முதலில் குடியேறி நிலைத்த இடம் வடமராட்சி என்றும், வடமறவர் + ஆட்சி = வட மறாட்சி எனவாயிற்று எனக் கூறும் விளக்கம் (ந. நகுலசிகாமணி: 1997:19) குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

'கடவை' ஈற்று இடப்பெயர்கள்

கட > கடவு > கடவை > கடப்பு; கட > கடத்தல்; கடவை = கடந்து செல்லுமிடம். இதன் அடிப்படையில் கடவை யீற்று இடப்பெயர்களுக்கு விளக்கம் காணவேண்டும். மக்கள் தாம் எந்த முக்கிய இடத்தைக் கடந்து சென்றார்களோ அந்த இடத்திற்குக் 'கடவை' என்று பெயர் வைத்தனர். அனைத்து வழிகளும் பொதுவாகப் பல இடங்களையும் கடந்து செல்லுதல் இயல்பே. ஆயினும் குறிப்பிட்ட ஓரிடத்தைக் கடக்கும்போது முகம் கொடுக்கும் சில முக்கிய விடயங்களான வரியறவிடல், கோயில் வழிபாடு, அச்சந் தீர்தல், ஆறுதலடைதல் முதலிய நிகழ்வின் போது அந்த நிகழ்ச்சிகளையும் சேர்த்தமைத்துக் கடவை என்ற பெயர் அவ்விடத்திற்கு ஏற்படுதல் வழக்கமாயிற்று. கடவை ஈற்று இடப்பெயர்கள் ஈழத்தின் பல பாகங்களிலுங் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள "கடவை" ஈற்று இடப்பெயர்கள் குறித்து இங்கே ஆராயப்படுகின்றது.

அங்கணாமைக்கடவை

அங்கண் + அம்மை +கடவை >அங்கணாமைக்கடவை. கந்தரோடைக்கு மேற்குப்புறத்தே கோயிலும், சுனையும் அமைந்த மருதநிலத்தூர் அங்கணாமைக் கடவையாகும். அங்கண் அம்மை என்பது கண்ணகியைக் குறிக்கும் தொடராகும். இங்கேயுள்ள கண்ணகி கோயில் கி.பி 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர். இதனருகே இராசேஸ்வரி அம்மன் கோயிலும் அமைக்கப்பட்டுள் ளது. பண்டைய தெருக்களின் அமைப்பில், மாதகல் துறையி லிருந்து வருவோர் அல்லது கந்தரோடையிலிருந்து செல்வோர் அங்கணாமைக்கோயிலைக் கடந்து செல்ல வேண்டியிருந்ததால் இப்பெயர் ஏற்பட்டதெனலாம். இதனைக் குமாரசுவாமி (1917:87) அங்கணா + கடவெல எனவும், அங்குண + கடவெல எனவும் பிரித்து விளக்கிச் சிங்களப் பெயர் எனக்குறிப்பிட்டுள்ளார். மேலும் அங்கணாமைக் கடவை, அங்கணாள் கடவு என்பன தமிழ்ப்பெயர்கள் என்று கூற விரும்பாத குமாரசுவாமி, தெரிவிக் கும் பின்வரும் கருத்து அவரது காழ்ப்புணர்வைக் காட்டுகின்றது:

> 'அங்கணாள் கடவு' என்பது, 'அழகிய கண்ணையுடையாள் வழி' எனப் பொருள் படுதலான், அஃது ஒரு வரைவில்லாத வழியைக் குறிப்பதேயன்றி, கண்ணகி கோயில் கொண்ட ஒரு பகுதியைக் குறிக்குமாற்றல் அற்பமுமில்லாத சொற் றொடரேயாம். அங்கணாள் என்பது கண்ணகியின் பேயராயும், கடவு என்பது ஒரு கிராம ஸ்தானத்தை உணர்த்துஞ் சொல் லாயுந், தமிழ் இலக்கியங்களிலே வழங்கப்பட்டிராமையும், 'அங்கணாள் கடவு' என்பது அங்கணாக் கடவையின் நாமமாய், ஏட்டுவழக்கிலேனும், நாட்டு வழக்கிலேனும் இல்லாமையும் உற்றுநோக்கத்தக்கனவேயாம்".

அங்கணாள் என்ற சொல்லாட்சி கண்ணகியைக் குறிக் கும் நாட்டார் இலக்கிய வழக்கு என்பதை ஈழத்துக் கண்ணகி இலக்கியங்களிற் காணலாம். மேலும் மீனாட்சிபுரம், கன்னியா குமரி என்ற இடப்பெயர்கள் தெய்வம் சுட்டியனவாயிருத்தலை இவ்வாசிரியர் நோக்கிற்றிலர் போலும். அத்துடன் இலக்கிய வழக்கிலே எல்லா இடப்பெயருக்கும் மூலம் காணமுற்படுதல் இயல்புக்கு முரணானது.

அம்பன்கடவை (வடம.வ.கி.144.1)

இது பருத்தித்துறை + நாகர்கோயில் தெருவழியில் அமைந்துள்ள ஓரிடமாகும். பழைய வல்லிபுர நகரப்பகுதியைத் தாண்டி வெளியே செல்லுமிடத்தின் எல்லைப்புற இடமாகவும், அம்பன் என்ற ஊரின் பகுதியாகவும் இருப்பதால் இவ்விடம் அம்பன் கடவை எனப் பெயர் பெறுவதாயிற்று.

இலுப்பைக்கடவை

பச்சிலைப்பள்ளிப் பகுதியின் தெற்கே இவ்வூர் அமைந்துள்ளது. முன்பு இங்கு இலுப்பை மரங்கள் செறிந்திருந்த தெருவைக் கடந்து செல்லுமிடம் என்ற நிலையில் இலுப்பைக் கடவை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். இங்கு பெருங்காடும், யானைகளின் நடமாட்டமும் காணப்பட்டதாகக் சைமன் காசிச் செட்டி (1834:101) குறிப்பிட்டுள்ளார். கடற்கரையிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. முன்பு இங்கு அரச வாடிவீடு இருந்ததாகக் கூறப்படுகிறது. இலுப்பைக்கடவை என்ற பெயரில் மன்னார் மாவட்டத்திலும் ஓரிடமுள்ளமையும் கருத்திற் கொள்ளத்தக்கதாம்.

கந்தவனக்கடவை

வடமராட்சிப் பகுதியில் பொலிகண்டியூரில் கந்தவனப்பதி என்ற முருகன்கோயில் அமைந்துள்ளது. கோயிலுக்கு மேற்கேயுள்ள தெரு முன்னர், கடவைக் காவல் எல்லையாக இருந்திருக்க வேண்டும். அக்கோயிற் பெயரால் ஆக்கம் பெற்ற ‘கந்தவனக்கடவை’ என்ற பெயரும் ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

காயான்கடவை (தென்ம.107.4)

காயான் = ஒருவகைச்செடி. காயான் செடிகள் நிறைந்த ஓரிடத்தை ஊடறுத்து பழையதெரு ஒன்று அமைந்தபோது, அவ்விடத்தைக் குறிக்கக் ‘காயான்கடவை’ என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் இயல்பே. இது உசன் பகுதியிலுள்ள ஓரிடமாகும்.

கோவிற்கடவை (தென்ம.107.6;வடம.தெ.மே.30-2)

இப்பெயருடைய இரு இடங்கள் வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் உள்ளன. பண்டை நாளில் மாவிட்டபுரத்திற்கும் கோவிற்கடவை என்ற பெயர் வழக்கில் இருந்திருக்கிறது. ஆனால் இன்று மாவிட்டபுரத்தின் ஒரு குறிச்சியை மட்டுமே சுட்டும் பெயராகக் ‘கோயிற்கடவை’ காணப்படுகிறது. அடுத்ததாகத் துன்னாலையில் கோவிற்கடவைப் பிள்ளையார்கோவில் அமைந்துள்ள மருதநிலத்தூர் ‘கோவிற்கடவை’ எனப்படுகிறது. இப்பகுதியினூடாகச் சாவகச்சேரி - பருத்தித்துறை பெருந் தெரு செல்கின்றது. வடமராட்சிக்குக் காவல் நிலையமாக இருந்த இடம் இதுவாதலானும், இங்கே கோயில் காணப்பட்டமையாலும் இது ‘கோவிற்கடவை’ எனப்பெயர் பெறுவதாயிற்று.

சாண்டாகடவை (வலி.தெ.மே.40.7)

சாண்டார் + கடவை = சாண்டாகடவை என மருவி வழங்குகிறது. இது தொழில்நிலை இடப்பெயராகும். இவ்விடம் ஆனைக்கோட்டையின் தென்பகுதியிலுள்ளது. இங்கு மூத்த நயினார் கோயிலுள்ளது. இவ்விடத்திற்குக் ‘கும்பத்தடி’ என்ற பழைய பெயருமுண்டு. மணற்கும்பல்கள் மலிந்து காணப்பட்டமை இப்பெயர்த் தோற்றத்திற்குக் காரணமாயிற்று. இது போன்றே இப்பகுதியில் அமைந்துள்ள தயிலங்கடவை (வலி.தெ. 70அ.4) என்பது ஆட்பெயராற் பெற்ற பெயராகலாம். வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் புத்தூரில் இடம்பெற்றுள்ள பறையர் கடவை என்ற இடம் தொழில் நிலைப்பெயராக வழக்குப்பெற்றதெனலாம்.

பட்டிக்கடவை (வலி.வ.66.5)

பட்டி + கடவை = பட்டிக்கடவை. பட்டி = பசுக்கூட்டம். பசுக்கூட்டங்கள் இங்கே நிறைந்து காணப்பட்டமையால் இவ்விடத்திற்குப் பட்டிக்கடவை எனக் காரணப் பெயரேற்படுவதாயிற்று. மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயிலுக்குத் தேவையான பால், தயிர் முதலானவற்றைக் கொடுத்து வந்த பட்டிகள் இங்கே

வளர்க்கப்பட்டமையினால் இவ்விடம் பட்டிக்கடவையாயிற்று என்பர் (தகவல்: கமலாசினி கந்தசாமி, மாவிட்டபுரம்). மாவிட்ட புரத்தின் ஒரு பகுதியாக இவ்விடம் அமைந்துள்ளது. இங்கு குடிசனமற்ற வெளிகளே பெரிதும் காணப்படுகின்றன.

பெருமாள்கடவை (வலி.வ.62அ.9)

பெருமாள் = விஷ்ணு. பண்டைநாளில் இங்கு பெருமாள் கோயில் இருந்திருக்கவேண்டும். கந்தரோடைக்கு அண்மித்த பகுதியில் அளவெட்டியில் பெருமாள் கடவையுள்ளது. வடக்கு நோக்கிய கந்தரோடைப் பெருந்தெருவானது, பெருமாள்கோயில் இருந்த இடத்தைக் கடந்தபோது, இவ்விடம் கோயிற் பெயரால் பெருமாள் கடவை எனப்பெயர் பெற்றது.

கந்தரோடையில் 1958இல் கண்டெடுக்கப்பட்ட சிவப்பு நிறக் கர்னேலியன் முத்திரையில் (seal) 'விஷ்ணுபூஸ்திய' (விஷ்ணுவினுடைய) என்ற வாசகம் காணப்படுகிறது. இது ஆந்திரா எனும் பெரும் நிலப்பிலுள்ள நாகார்ஜீனகொண்டாவில் கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டளவில் வளர்ச்சியுற்றுக் காணப்பட்ட தென்பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்த முத்திரையும் இங்கு பெருமாள்வழிபாடு இருந்ததற்குச் சான்றாகலாம். கந்த ரோடை அரசின் வடக்குக் காவலூராகப் பெருமாள்கடவை அமைந்திருந்தது எனின் மிகையாகாது.

பொறிக்கடவை (கர.165.5)

பொறி + கடவை = பொறிக்கடவை. விலங்குகளைப் பிடிப்பதற்காகக் காடுகளில் பொறி (கண்ணி) கட்டி வைத்தல் வழக்கம். பண்டைத் தமிழர் தம் காட்டரண்களிலும் நீர்க்காவல் அரண்களிலும் பல்வேறு பொறிகளை மறைத்துப் பொறித்து வைத்திருந்த செய்திகள் சங்கப் புறத்திணை இலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் கூறப்பட்டுள்ளன. எனவே பண்டைய ஊராட்சி நிலையிலோ அல்லது பிற்காலக் காட்டுத்தொழில் காரணமாகவோ இப்பெயர் தோற்றம் பெற்றிருக்க வாய்ப்புண்டு. இவ்வூர் காட்டுப் பகுதியை அண்மித்துக் காணப்படுவதால் வேட்டைத்தொழில் காரணமாக இப்பெயர் தோன்றிற்று எனக் கொள்ளுதல் பொருத்தமாகும். இப்பெயருடைய ஓரிடம் வன்னிப் பகுதியிலும் இடம்பெறுதல் காண்க.

வேர்க்குத்திக்கடவை (வலி.தெ.மே.53.11)

வேர்+குத்தி+கடவை = வேர்குத்திக்கடவை. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இப்பெயர் தோன்றியிருக்கலாம். ஒல்லாந்தர் புடைவைகளுக்குச் சாயமூட்டுந் தொழிலை யாழ்ப்பாணத்தில் பெரிய அளவில் நடத்தியிருக்கிறார்கள். சாயம் காய்ச்சுவதற்குப் பயன்படும் ஒருவகைச் சாயச்செடிகளை வளர்த்து, அவற்றின் வேர்களைப் பிடுங்கிக் கொடுப்போர் 'வேர்கொத்தியார்' எனப் படுவர். அந்த வேர்களைப்பதப்படுத்திச் சாயங் காய்ச்சுவோர் 'சேணியர்' (சாயக்காரர்) எனப்பெயர் பெறுவர். சாயவேர்களைத் தேர்ந்து பிடுங்கிக் கொடுப்பதே வேர்கொத்தியாரின் கடமை யாகும். எனவே தொழில் அடிப்படையில் (வேர் கொத்துதல்) வேர்க்குத்திகடவை என்ற பெயர் வழங்கிற்று. ஒல்லாந்தர் காலத் தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் சீலைகளுக்குச் சாயமூட்டுந் தொழில் மக்களுக்குப் பெரிதும் வருவாயைத் தரும் தொழிலாக வளர்ந்திருந்தது. சாயமூட்டப்பட்ட புடைவைகள் ஒல்லாந்தர் காலத்தில் இங்கிருந்து பெரிதளவில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள தாகவும் அறியப்படுகிறது (P.E.Peiris, 1920:16.).

'கோட்டை' ஈற்று இடப்பெயர்கள்

கோடு+ஐ = கோட்டை. கோடு என்பது மேட்டு நிலத்தையுஞ் சுட்டும்சொல்லாகும் (மதுரைக் காஞ்சி 289). கோட்டை ஈற்றுப் பெயர்கள் கோட்டை, செறிவு என்ற பொருளிற் பெயராக்கம் பெற்றுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்திற் கோட்டை ஈற்றுப் பெயர்களாக ஆனைக்கோட்டை, வட்டுக்கோட்டை, சக்கோட்டை முதலியன உள்ளன. தென்தமிழீழத்தில் கோட்டைக் கல்லாறு என்ற பெயருடைய ஓரூருண்டு. அதன் பழைய பெயர் சின்னக் கல்லாறு என்பதாம். அங்கு ஒல்லாந்தர் கோட்டை கட்ட முயன்று அது கைகூடவில்லை. ஆயினும் அந்நிகழ்ச்சி காரணமாக அவ்விடம் கோட்டைக்கல்லாறு என அழைக்கப்படு வதாயிற்று.

ஆனைக்கோட்டை (வலி.தெ.மே.40.1)

பேச்சு வழக்கில் யானை > ஆனை என வழங்குவதுண்டு. ஆனை + கோட்டை = ஆனைக்கோட்டை. வணிகநோக்கமாக யானைகள் கொண்டுவரப்பட்ட அல்லது யானைப் படைகள் தங்கியிருந்த இடம் என்ற பொருளிலேயே இப்பெயர் வழங்கியிருக்கின்றது. ஆனைக்கோட்டை என்பதற்கு யானைகளின் கூட்டம், தொகுதி, நெருக்கம் எனப் பொருள்கொள்ளலாம். கிறித்துக்கு முற்பட்ட காலங்களில் இலங்கையிலிருந்து பெருந் தொகையான யானைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளமை பற்றி, கி.மு.4ஆம் நூற்றாண்டில் வட இந்தியத் தலைநகரான பாடலி புரத்தில் கிரேக்கத் தூதனாகத் தங்கியிருந்த மெகஸ்தினிஸ் என்பவர் இந்திகா (Indica) என்ற தனது நூலிற் குறிப்பிட்டுள்ளார் (J.W.Erindle:1887.p.170). யானை ஏற்றுமதியில் வடஇலங்கைத் துறைமுகங்கள் முதன்மை பெற்றிருந்தன. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோர் இலங்கையில் ஆட்சி புரிந்த காலத்திலும் யானை ஏற்றுமதி பெரிதும் இடம்பெற்றுள்ளது (P. Queyroz:11,p .661). ஒல்லாந்தர் தம் ஆட்சிக்காலத்தில் வன்னிப் பகுதியிலிருந்து ஆண்டு தோறும் 30 யானைகளைத் திறையாகப் பெற்று அவற்றை ஏற்றுமதி செய்திருக்கின்றனர் (S.Arasaratnam: 1966:9, 21:p 103). இந்த யானைகள் ஆனைக்கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம். ஆனைக்கோட்டையின் எல்லையிற் காக்கை தீவு என்ற துறையுள்ளமையும் கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் 1980இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது பல்வேறுபட்ட தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. அவையாவன:

1. கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள், உரோம ரவுலெற்றெற் மட்கலன்கள்.
2. மிருக எலும்புகள், மீன் எலும்புகள், செப்பனிடப்பட்டனவும், செப்பனிடப்படாதவையும் ஆகிய ஊசிகள், மணிகள், சீப்புகள், கொம்புகள்.
3. கல்லாலாகிய கருவிகள், எலும்பாலாகிய கருவிகள்.
4. செம்பு, இரும்பு ஆகியவற்றாலான சங்குகள், மணிகள்.

5. கிண்ணங்கள், வட்டில்கள் முதலிய பாவனைப் பொருட்கள்.
6. இலட்சுமி நாணயங்கள், உரோம நாணயங்கள்.
7. சித்திர எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மண் ஓடுகள்.
8. மனித எலும்புக்கூடுகள்.
9. சித்திர எழுத்து, பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட வெண்கல முத்திரை முதலியன கிடைத்துள்ளன. இவ் வெண்கலமுத்திரையை ஆராய்ந்த பொ.இரகுபதி அதனை ‘கோவேந்த’, ‘கோவேத’, ‘கோவேதம்’ என அடையாளங்கண்டுள்ளார் (பொ.இரகுபதி:1983:பக்.379-388,601-614).

ஆனைப்பந்தி

இது யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஒரு பகுதியாகும். இப்பெயருடைய ஓரிடம் மட்டக்களப்பு மாநகரசபையின் ஒரு பகுதியாக உள்ளமை இவற்றின் அமைவிட ஒற்றுமை நோக்கத் தக்கதாகும். யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டைக்கு அண்மித்த தொலைவில் ஆனைப்பந்தி அமைந்திருப்பதும் இவற்றிடையே உள்ள தொடர்பினைக் காட்டுகிறது. வணிகத்தின் பொருட்டு யானைகள் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம். அல்லது போர்க் காலங்களில் கொண்டு வரப்பட்ட யானைப்படைகளைப் பந்தி பந்தியாகக் கட்டி வைத்த இடம் என்ற அடிப்படையிலும் ஆனைப்பந்தி என்ற இடப்பெயர் தோற்றம் பெற்றிருக்க வாய்ப்புண்டு.

கோட்டை (யாழ்.மா.ந.1)

யாழ்ப்பாணம் மாநகரசபையில் ஒரு பிரிவாகக் கோட்டை என்ற பகுதி உள்ளது. இவ்விடத்திலே போர்த்துக்கேயர் கி.பி. 1632இல் ஒரு கோட்டையைக் கட்டினர். யாழ்ப்பாணம் ஒல்லாந்தராற் கைப்பற்றப்பட்டபோது (கி.பி.1658) அக்கோட்டை முற்றாக அழிக்கப்பட்டது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் இந்நகரில் பெரியகோட்டை ஒன்றைக் கட்டினர். அங்கிருந்தே துணைத்தளபதி நிருவாகஞ் செலுத்தினான். அத்துடன் மேலும் கச்சாய், பூநகரி, ஆனையிறவு, பருத்தித்துறை முதலான இடங்களிலும் சிறு கோட்டைகள் கட்டப்பட்டன. இக் கோட்டைகள்

யாவும் பிற இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் பெருஞ்சாலைகளுடன் இணைக்கப்பட்டிருந்தன. இக்கோட்டை வழிகளைக் கடப்பதாயின் அரசஅலுவலர்களின் நுழைவுச்சீட்டுப் பெற வேண்டியிருந்தது. ஊர்காவல்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களிலிருந்து கப்பல் வழியாகப் பயணஞ் செய்வோருக்கு ஆங்காங்குள்ள கோட்டை அதிகாரிகளால் நுழைவுச் சீட்டுகள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாண நகரிலிருந்த கோட்டை ஒல்லாந் தரின் தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்ட மிகச் சிறந்த கோட்டை எனக் கணிக்கப்படுகின்றது. இந்துமாக் கடற் பகுதி களில் அமைந்த கோட்டைகளில் யாழ்ப்பாணக் கோட்டை மிகவும் முக்கியமானதாகவும், பிரித்தானியாவிலுள்ள ஜோர்ஜ் கோட் டையுடன் (Fort George) ஒப்பிடத்தக்கதெனவும் கூறப்படுகின்றது. கோட்டையின் உட்புறமும் வெளிப்புறமும் ஐங்கோண வடிவில் அமைக்கப்பட்டு, இந்த ஐங்கோண இடங்களும் Zeoland, Holland, Golderland, Utreoht, Friesland என்ற டச்சு மொழிப் பெயர் களால் வழங்கப்பட்டிருந்தன (W.A.Nelson:1984:82-83.).

இக் கோட்டை மதிலின் வெளிப்புறத்தில் 200அடி ஆழ மான அகழியும், கோட்டையின் உட்புறத்தில் டச்சுத்தேவாலயமும் அமைக்கப்பட்டிருந்தன. கோட்டையின் உட்புறம் 14 ஏக்கர் பரப்பும், ஒரு மைல் வெளிப்புறச் சுற்றளவும் கொண்டிருந்தன. இக் கோட்டை கட்டும் வேலைகள் 1792இல் முற்றுப்பெற்றன என அறியப்படுகிறது. டச்சுக்காரரிடமிருந்து இக்கோட்டை 28.09. 1795இல் ஆங்கிலேயராற் கைப்பற்றப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இது வட இலங்கையின் தலைமை இடமாக மாறியது. சிறைக்கூடமும் இங்கே இயங்கியது. இதனுள் அமைக் கப்பட்டிருந்த மாதாகோயில் 'புதுமை மாதா கோயில்' எனவும் அழைக்கப்பட்டது. இக்கோட்டையின் வெளிப் புறமுள்ள வெளி யில் கோபுரத்துடன் கூடிய 'முனியப்பர்கோயில்' அமைந்திருந் தமையும் குறிப்பிடத்தக்கது.

சக்கோட்டை (வடம.வ.சி.134.2)

கற்கோட்டை > சக்கோட்டை எனத்திரிந்தது என்பர். பருத்தித்துறை - காங்கேசன்துறை சாலையில் திக்கம் சந்திக்கும் இன்பருட்டிக்கும் இடையிலுள்ள சிற்றூர் சக்கோட்டை எனப்படும். இங்கு போர்த்துக்கேயர் காலத்துப் புனித சவேரியார் ஆலயம்

அமைந்துள்ளது. இதற்குத் தெற்கே பழம்வேதக் கோயிலடி என்ற ஒரு குறிச்சி காணப்படுகிறது. பண்டைநாளில் இப்பகுதியின் கிழக்குக் கரை 'கோளாங்கல்லுமனை' எனவும், மேற்குக்கரை 'பனை முனை' எனவும் வழங்கப்பட்டதாகக் கூறுவர். ஐரோப்பியர் ஆட்சிக் காலத்திலே இங்கு கற்கோட்டை கட்டப்பட்டு, பின் அழிந்திருக்க வேண்டும் என்பதையே இவ்விடப்பெயர் விளக்கு கின்றது.

வட்டுக்கோட்டை (வலி.மே.44.3)

வட்டு + கோட்டை = வட்டுக்கோட்டை. வட்டு = என்பது சூதாடுகருவி, திரட்சி, திரண்டபொருள், நீரெறி கருவி வகை, விளையாட்டுக்கருவி, கண்டசருக்கரை, முள்ளி, சிறுதுளி முதலியவற்றைக் குறிக்கும் சொல்லாகும் (த.லெ:6:3471). தொல் புரம் பகுதியிற் பண்டைநாளிற் கோட்டையும் அரண்களும் அமைந்திருந்தனவெனக் கருதப்படுவதால், வட்டுக்கோட்டையும் புறநகர் அமைப்புப் பெற்றிருந்த ஓரிடம் எனக்கருதலாம். வட்டுடைவீரர் சூழ்ந்திருந்த இடம் வட்டுக்கோட்டை ஆயிற்று.

இப் பெயருக்கு வேறு வகையிலும் பொருள் விளக்கம் கூற வாய்ப்புண்டு. கோட்டை = என்பது நெற்குவியல், நெற் பட்டறை என்ற பொருளிற் கிழக்கிலங்கையிலும் இவ்வூரிலும் இச்சொல் வழங்குகின்றது. இவ்வூர்ப் பகுதிகள் நெல்வளம் செறிந்தவை. அவ் வகையிலும் இதற்குப் பெயர் விளக்கம் காணலாம். இங்கு நெல் மூடைகளை அழகுறக் கோட்டைபோல் அடுக்கி வைப்பது வழக்கம். அவ்வாறு கோட்டை போன்று அடுக்கிவைத்த நெல்மூடை அடுக்குகளை 'வட்டுக்கோட்டை' என்றழைப்பது வழக்கமாகும். இவ்வூரில் பெரும்பாலான வீடு களில் 'வட்டுக்கோட்டை' (நெல்மூடை அடுக்குகள்) காணப் பட்டமையால் இவ்வூர் முழுவதற்குமே வட்டுக்கோட்டை என்ற காரணப்பெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகின்றது. பறாளைப் பள்ளு, சிந்துப்பள்ளு முதலிய இலக்கியங்களிலும் இதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன.

வட்டுக்கோட்டை என்பதற்குத் தமிழகத்தடன் தொடர்பு படுத்தி விளக்கம் கூறினும் பொருந்தும். தமிழகத்திலுள்ள பட்டுக் கோட்டை > வட்டுக்கோட்டை என மாறிற்றோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. தமிழ் மன்னர் காலத்தில் தென்னிந்தியத்

தமிழ்க் குடிகள் இங்கு குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்கள் தென்னிந்தியாவினின்றும் புலம்பெயர்ந்தபோது தாம் உறைந்த பட்டுக்கோட்டை என்னும் பதியின் பெயரைத் தாம் வந்து குடியேறிய இடத்திற்கு இட்டு வழங்கலாயினர். பின்னாளில் "ப" > "வ" ஆக மாறி வட்டுக்கோட்டை ஆயிற்றென்று கூறுவாருமுளர்.

இங்கு 1823இல் அமைக்கப்பட்ட வட்டுக்கோட்டை செமினறி, அமெரிக்க மிசனறியால் தாபிக்கப்பட்ட 'யாழ்ப்பாணக் கல்லூரி', டச்சுக்காரர் நினைவாக டச்சுவீதி என்பன காணப்படுகின்றன. வட்டுக்கோட்டையில் தாவளை, கலைநகர், குளிப்பன் முதலிய குறிச்சிப் பெயர்கள் வழங்குகின்றன. சிற்பவேலை, ஓவிய வேலை, நாட்டுக் கூத்து, கலைநிகழ்ச்சிகள் முதலிய வற்றில் ஈடுபாடுள்ளோர் பலர் வாழும் குறிச்சி கலைநகர் என்ற பெயருடன் வழங்குகிறது. இக் குறிச்சி முன்னர் "சிவன்கோவிலடி" என வழங்கிற்று. இங்கு பல்வகைக் கலைஞர்கள் வாழ்ந்தமையால் 1958இல் இவ்விடத்திற்கு 'கலைநகர்' என்ற பெயர் வைக்கப்படுவதாயிற்று (நா.க. தங்கரத்தினம்:1962:15). இவ்விடத்தில் 'றாத்தல்' என்ற பெயர் கொண்ட சந்தையும் அமைந்துள்ளது. இவ்வூரில் பழைமைமிக்க கண்ணகி கோயிலும் உள்ளது. போர்த்துக்கேயரது அழிவினின்றும் இக் கோயிலைக் காப்பாற்ற அதற்கு 'மாதாகோயில்' எனப்பெயரிட்டு அழைத்து வந்துள்ளனர். இங்கு, வீரபத்திரசிவன்கோவில், இலுப்பையடி முத்துமாரியம்மன் கோயில், சின்னக்கதிர்காமம், கம்பம் புலோக ஆதிவைரவ கோயில், சின்னம்மன்கோயில், முனியப்பர் கோயில், ஞான வைரவர் கோயில், பத்திரகாளி கோயில், வீரபத்திரர் கோயில், வைரவர் கோயில், பூதவிராய கோயில், வாலையம்மன் கோயில், முருகையா கோயில், முத்துமாரியம்மன்கோயில், பிள்ளையார் கோயில், சர்வங்கசுவாமி கோயில் என 25க்கும் மேற்பட்ட கோயில்களுமுள்ளன.

இவ்விடப்பெயருக்குப் பலர் வலிந்து பலவாறு சிங்கள மொழிவழிப் பொருள் கூறுவர். வட்ட + கொட்டுவ = வட்டுக் கோட்டை. சிங்களத்தில் கொட்டுவ என்பது அடைப்பு, அரண், கோட்டை, காவல் என்னும் பொருள் தரும் சொல்லாகும். அதன் வழியே இச்சொல்லுக்குப் பொருள் காண்கிறார் குமார சுவாமி (1917: 107). வேறுசிலர் அவர் வழிச்சென்று மேலும் சிங்களமொழி நிலையிற் கருத்துக்கூறுவர். வடுவ + கோட்டை = வட்டுக்கோட்டை. வடுவ என்பது சிங்களத்தில் மரத்தச்சரைக்

குறிக்கும். எனவே தச்சர் கூட்டம் (வடுவர்கோட்டை) இவ்வூரில் வாழ்ந்தமையால் வட்டுக்கோட்டை என மருவி வந்திருக்கலாம் எனச் சிங்களப்பெயர் விளக்கம் கொடுப்பர். ஆயினும் இஃது தூய தமிழ்ப்பெயராதலால் இவர்கள் கருத்துப் பொருந்தாதென்க.

கோட்டைக்காடு > கொட்டைக்காடு (வலி.தெ.59.5)

அராலி தெற்குப் பகுதியை அவ்வூர் மக்கள் கோட்டைக் காடு அல்லது கொட்டைக்காடு என வழங்குவர். இதுபற்றி யாழ்ப்பாண வைபவகௌமுதி வருமாறு கூறுவது எண்ணத் தக்கது:-

> "செங்கற்பட்டிலே உள்ள கோட்டைக்காடு என்னும் தானப் பெயர் நம்மூரவர் நாவிலே கொட்டைக்காடு எனக் குறுக்கல் விகாரம் பெற்றது போலும். கொட்டைக்காடே முன்னோரிட்ட பெயரெனின் அது கொட்டைப் பாக்கேனும், பனங்கொட்டையேனும் பொலிவுற்ற காடெனப் பொருள்படும்." (க.வேலுப்பிள்ளை:1918).

தொல்புரத்தில் முன்னர் காணப்பட்ட கோட்டை அரசின் காட்டரணாக இப்பகுதி அமைந்திருக்கலாம். அவ்வகையில் இது கோட்டைக்காடு எனக் காரணப்பெயர் பெறுதல் இயல்பே.

'தரிப்பு' - ஈற்று இடப்பெயர்

தரிப்பு = தரித்திருக்குமிடம். படைகள், அரசபணியாளர், அலுவலர், பயணிகள் முதலானோர் தங்குதற்குரிய இடங்கள் தனித்தனிப் பெயர்களைப் பெற்றிருந்தன. அவ்வகையிலே 'தரிப்பு' என்பதும் ஒன்றாகும்.

பண்டத்தரிப்பு (வலி.தெ.மே.ப.38)

பண்டம் + தரிப்பு = பண்டத்தரிப்பு. பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டு வணிகம் நடைபெற்ற இடம் என்பது இதன் பொருள். பண்டத்தரிப்பு என்ற இடத்தைச் சுற்றிவரப் பயிர்ச்

செய்கைக்குரிய தோட்ட நிலத்து ஊர்கள் பெரிதும் காணப்படு கின்றன. மாதகல், சில்லாலை, சங்கானை, சண்டிலிப்பாய், சேர்ந்தான்குளம் என்ற ஊர்களைத்தொடுத்து நிற்பது பண்டத் தரிப்பு ஆகும். இங்கு பண்டங்கள் வந்து குவிந்து சந்தைப் படுத்தல் நிலைமை ஏற்பட்டிருத்தல் இயல்பே. ஆதலின் பண்டத் தரிப்பு என்பது காரணச் சிறப்புப்பெயராயிற்று. சுவாமி ஞானப் பிரகாசர் Panda- Teruppo எனப் பிரித்து, Banda என்ற சிங்கள ஆட்பெயருடன் சேர்த்துப் பொருள் தடுமாற்றம் அடைகிறார் (1917:47). ஜே.பி. லூயிஸ் என்பவரின் குறிப்பின்படி, பண்டத் தரிப்பில் குழிவெட்டும் போது மட்பாண்டத்தில் செப்பு நாணயங் கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அச்செப்பு நாணயம் கண்டெடுக் கப்பட்ட இடம் இராணி மாளிகையின் அழிபாட்டிடம் என மக்க ளால் மரபு வழியாகக் கருதப்பட்டு வருகின்றது. அவ்விடம் 'இராச முருங்கையடி' என அழைக்கப்படுகின்றது (எஸ். கதிரேசு 1905:பக்.51).

'திசை' நிலை இடப்பெயர்கள்

கிழக்குத் திக்கு (வலி.தெ.ப.32.8)
குடத்தனை (வடம.வ.கி.144.3)
குடத்தனைக்கரையூர் (வடம.வ.கி.142.1)
குடமியன் (தென்ம.112.1)
திக்கம் (வடம.வ.கி.134.3)
தென்மராட்சி (தென்ம.)
வடமராட்சி (வடம)
வலிகாமம் கிழக்கு (வலி.கி)
வலிகாமம் தென் மேற்கு (வலி.தெ.மே.)
வலிகாமம் மேற்கு (வலி.மே.)
வலிகாமம் வடக்கு (வலி.வ)

குடத்தனை, குடத்தனைக்கரையூர், குடமியன்

ஈழத்து அரசியல் வரலாற்றில் பழைமை வாய்ந்த நகர் களின் வரிசையில் நாகர்கோவில், சிங்கைநகர் என்பன மிகவும் முதன்மை பெறுகின்றன. அவை அக்கால அரசியல், வணிக

நடவடிக்கைகளின் மைய இடங்களாகவும், மக்கட் குடியிருப்புப் பெருகிய பகுதிகளாகவும் இருந்தன. அந்நிலையில் அயற்பதி கள் திசைப் பெயர்களால் வழங்கப்படலாயின. சிங்கைநகருக்கு மேற்கே இருந்தோர் குடபுலத்தார் என்றும், மேற்குப் பகுதி குடமியன் (குடபுலம்) என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். குடம் = மேற்குத்திசை. இவ்வூர்கள் நாகர்கோயிலுக்குத் தெற்கே கிழக்குக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளன. பண்டை நாளிற் கிழக்கே வெகுதொலைவிற் கடல் இருந்திருக்க வேண்டும். அப்போது அப்பகுதியில் மக்கட் குடியிருப்பும் நிலைபெற்றிருந் திருக்கலாம். அவர்களுக்கு இவ்விடம் குடதிசைப் பக்கமாக இருந்த போது, அவர்களாலிடப்பட்ட பெயரே குடதிசைப் பெயர் களாம். பண்டை நாளிற் கடற்கரையோரத்தே வல்லிபுரம் அமைந் திருந்தது. ஆனால் நாளடைவிற் கடல் பின்வாங்கிச் சென்று சுமார் இருமைல் தொலைவில் காணப்படுவதை நோக்கும்போது, இயற்கை மாறுபாடுகள் நிகழக் கூடியவை என்பதை நம்பக் கூடியதாக இருக்கிறது. இந்நிலையில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் நிலத்தோற்ற அமைப்பினை நோக்கும்போது நாகர் கோவிலுக்குத் தென்மேற்குப் புறமாகக் குடத்தனை, குடத்தனை யூர், குடமியன் ஆகிய மூன்று ஊர்களும் அமைந்து காணப்படு வதால், இவை திசை குறித்து வழங்கிய காரணப்பெயர்கள் என்பது புலனாகின்றது.

இரண்டாவதாக, வேறு பொருள்நிலையிலும் இவ்விடப் பெயர்களுக்கு விளக்கம் கூறக் கூடியதாகவுள்ளது. 'குடம்' என் பது நீர்நிறைத்து வைக்கும் மட்கலனையும் குறிக்கும் சொல் லாகும். மட்கலன் பற்றிய கருத்தோடும் இவ்விடப் பெயர்களை நோக்க வேண்டியுள்ளது. இலங்கையின் கிழக்குக் கரையில் வாழ்ந்த தமிழர், தோட்டப் பயிர்களுக்கு நீர்மொண்டு ஊற்று வதற்குக் குடத்தையே பயன்படுத்தி வந்துள்ளனர். அவ்வகையில் இம்மூன்று குறிப்பிட்ட ஊர்களிலும் தோட்டப் பயிர்ச் செய் கைக்குக் குடம் பயன்படுத்தப்பட்டமையால் குடம் என்ற பொருளை முதன்மையாகக் கொண்டு இவ்விடப் பெயர்கள் வழங்கியிருக்கலாம். யாழ்ப்பாண மாவட்டத்திலே இம்மூன்று ஊர்களைச் சேர்ந்தவர்களைத் தவிர்ந்த ஏனைய கமக்காரர்கள் தோட்டங்களுக்கு நீர் இறைப்பதற்குப் பனையோலையாற் செய்யப்பட்ட 'பட்டை' என்ற கருவியைப் பயன்படுத்துவது பொது வழக்கம். இப்பொதுவழக்கத்திற்கு மாறாக இவ்வூரினர் குடங்

களைப் பயன்படுத்தியமையால் 'குடம்' என்பதை முதனிலையாகக் கொண்டு இவ்வூர்களுக்குப் பெயர் சூட்டப்பட்டதோ என்ற கருத்தும் வெளிப்படுகிறது. இம் மூன்று ஊர்களும் மணற் பகுதிகளாகும். இங்கு வெற்றிலைப் பயிர்ச்செய்கை சிறப்பாக நடைபெறுகிறது. குடத்தனையூர் எல்லையில் 'வெற்றிலைக்கேணி' என்ற குறிச்சி அமைந்துள்ளது. இம்மூன்று இடங்களிலும் 'நித்திய வட்டப் புகையிலை' என்னும் சிறப்பினப் புகையிலைப் பயிர்ச் செய்கை நடைபெறுகிறது. எனவே வெற்றிலைத் தோட்டங்களிலும், புகையிலைத் தோட்டங்களிலும் 'குடம்' பயன்படுத்தப் பட்டமையால் குடத்தை முதன்மையாகக் கொண்டு ஊர்ப் பெயர்கள் ஏற்படலாயின போலும்.

மூன்றாவதாகக், குடம் என்ற தொடக்கத்தினையுடைய இடப்பெயர்களுடன் 'குடவர்' என்ற சாசன வழக்குச் சொல்லைத் தொடர்புபடுத்தல் பொருந்துமோ எனவும் நோக்கலாம். குடவர் எனப்படுவோர் விஷ்ணுகோயிற் பணியாளர்களில் ஒரு பிரிவினராவர். இவர்கள் கிருஷ்ணன் வழிபாட்டினராகவும் இருத்தல் கூடும் எனத் 'தென்னிந்திய கோயிற்சாசனம்' (:3,2:1957:1418) என்ற நூலால் அறியப்படுகிறது. 'குடம்' என்ற தொடக்கத்தினையுடைய இம் மூன்றூர்களுக்கு அண்மையில் வல்லிபுர விஷ்ணு கோயில் அமைந்திருப்பதும் இக் கருத்தை மேலும் வலுப்படுத்துகின்றது. சொற்பிறப்பியல் அடிப்படையில் குடம் என்ற சொல்லுக்கு சுவாமி ஞானப்பிரகாசர் கூறும் கருத்தும் ஈண்டு நோக்கத் தக்கதாகும். குடம் என்னும் சொல் மாட்டையே (எருது, பசு) ஓர் காலம் குறித்தது என்கிறார் சுவாமி ஞானப்பிரகாசர்.

> சுமேரிய மொழியில் எருது 'குட்' எனப்படும். குடம் என்னும் சொல் வளைவு என்னும் குறிப்பால் கொம்பை விளக்கி, அப்பால் கொம்பையுடைய மாட்யும், அவ்வினத்துள் சிறப்பு முறையாகப் பசுவைக் குறித்துநின்ற நாட்கள் போய், பசுவின் பால் கறக்கும் கலமும் குடம் என அறியப்பட வந்த காலத்தில், குடச்சொல் தமிழில் பசுவுக்குக் குறியீடாக நிற்கும் வழக்கு ஒழிந்தது' (சுவாமி ஞானப்பிரகாசர் 1973:79-80)

திக்கம் (வட.ம.வ.கி.**134.3**)

பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிய சாலையின் 2.5மைல் தொலைவில் திக்கம் அமைந்துள்ளது. திக்கம் என்பது பக்கம், பகுதி எனப் பொருள் தருவதாகும். இவ்விடம் தனித்த குடியிருப்புப் பகுதியாகக் காணப்பட்டமையினால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். இங்கு, மணிவீரவாகு தேவன் குறிச்சி, வாரியாலுடை முதலான குறிச்சிப் பெயர்கள் வழங்குகின்றன. மடத்துவாசல் பிள்ளையார்கோயில், நீர்வளைப் பிள்ளையார் கோயில், தேவரையாழி அம்மன்கோயில் முதலிய வழிபாட்டிடங்களும் உள்ளன (தகவல்:சி.சிவராசா, திக்கம்). மணிவீரவாகுதேவன் குறிச்சி இங்கு இடம்பெற்ற சோழர் குடியேற்றத்தை நினைவுபடுத்தும் இடமாக அமைந்திருத்தல் நோக்கத் தக்கது. இங்கு ஜேர்மன் நாட்டினர் நடாத்திய சீனித் தொழிற் சாலை இருந்ததாகவும், அது இரண்டாம் உலகப் போரில் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

'நகர்' ஈற்று இடப்பெயர்கள்

நகர் என்ற சொல் தமிழிலும் வடமொழியிலும் காணப் படினும், பறோ, இமானோவ் ஆகிய இரு மொழியியலாளர்களும் இது திராவிட மூலச்சொல் எனக் கருதுவர் (Burrow + Emeneau :270. 271). தமிழில் நகர் என்ற சொல்லுக்கு பேரூர், வீடு, மாளிகை, கோயில், அரசர்மனை, சடங்கு செய்யுமிடம், மனைவி என்ற பொருள்களைக் காட்டுகிறார் க. நாச்சிமுத்து (1975:270). சங்ககால ஊர்ப் பெயர்களில் நகர், நகரம் என்ற இடப்பெயர் விகுதி காணப்படவில்லை. பல்லவர் காலப் பக்தி இலக்கியங் களிலேயே முதன்முதலாக 'நகர்' ஈற்று இடப்பெயர்கள் பயின்று வருகின்றன (கே. பகவதி:1984). நாயக்கர் காலத்திலே புதிதாகத் தோன்றிய ஊர்ப் பெயர்களில் நகர், நகரம் என்ற ஊர்ப்பெயர் விகுதிகள் பரவலாகக் கையாளப்பட்டுள்ளன. தற்காலத்தில் தோன்றும் புதிய ஊர்களும் குடியிருப்புப் பகுதிகளும் நகர் என்ற விகுதியையே பெரிதும் பெறுகின்றன என்பது கருத்திற் கொள்ளத்தக்கதாம்.

கல்மடுநகர் (கர.167.1)

கரைச்சிப் பகுதியல் கல்மடு என்ற குளம் ஒன்றுள்ளது. அக் குளத்தைச் சூழ்ந்த பகுதிகளில் கற்கள் காணப்பட்டமையால் இது கல்மடு எனக் காரணப்பெயர் பெற்றிருக்கலாம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குதிரை வண்டிப்பாதை கல்மடு ஊடாக அமைந்திருந்தமைக்கு இங்கு வழங்கும் 'கண்டி வீதி' சான்றாக உள்ளது என்பர். கிளிநொச்சிக்கு மேற்கே முறிப்புக்குளம், அதன் கீழ்க்கரையில் "ஊற்றுமோட்டை" என்ற காட்டுப்பகுதி என்பன அமைந்துள்ளன. இங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ள வழிபாட்டிட கற்றூண்கள் இப் பகுதியற் பண்டைநாளில் மன்னராட்சியும் மக்கட் குடியிருப்பும் நிலைபெற்றிருந்தன என்பதற்குச் சான்றாகும்.

குருநகர் (யாழ்.1.2-3)

யாழ்ப்பாண மாநகரசபையின் தெற்குப் பகுதியில் 1.5 மைல் தொலைவில் அமைந்துள்ள கடலோரப் பகுதியே குருநகர். கரையூர் என்பதே இதன் பழைய பெயர். அப்பெயர் இன்றும் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தின் அமைவிடம் நோக்கி இது 'கரையூர்' எனப்பட்டது. இப்பெயர் மாற்றப்பட்டு "குருநகர்' எனப் புதுப்பெயர் வைக்கப்பட்டுள்ளது. இங்கு வாழும் மக்கள் 'குருகுலத்தார்' என்ற வகுப்பைச் சேர்ந்தவர்களாதலாற் 'குருநகர்' என்ற காரணகாரியத் தொடர்பு கருதி இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இது தொடர்பாகப் பின்வரும் கருத்தும் நிலவுகிறது:

> "திருச்சி மாவட்டத்திலே கொடுமுடிக் கிராமத்தின் பகுதியிலுள்ள கரையூர் வாழ் மக்களுக்கும் இவ்வூர் மக்களுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதால் அங்கிருந்து வந்த மக்களே இங்கு குடியேறினரோ என்ற ஐயந் தோன்றுகிறது" (தகவல்: கலைஞானி செல்வரத்தினம், யாழ்ப்பாணம்)

குருநகரில் றெக்ளமேஷன் (Reclamation), புதுக்குடியிருப்பு என்ற இரு புதிய குடியிருப்புப்பகுதிகள் அமைந்துள்ளன. குருநகரின் தென்கிழக்கே ஓர் இறங்குதுறை இருக்கிறது. இதன்

அருகேயுள்ள பரந்த வெளிக்கு 'உப்புமால் கந்தோர்' என்பது பெயர். இந்த இறங்குதுறையூடாக உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், தோணியில் உப்பு ஏற்றப்படுவதற்கு முன்பாக, 'மால்' எனப்படும் பாதுகாப்பு அறையில் உப்புக் குவித்து வைக்கப்பட்டிருக்கும். அந்த உப்புமால் பொறுப்பாளர்களுக்கு அலுவலகங்கள் அங்கு கட்டப்பட்டிருந்ததாக முதியோர் கூறுப. அதனாலேயே இவ்விடம் 'உப்புமால் கந்தோர்' என வழங்கப்படுகிறது. இப்போது இந்த இடத்தில் ஐந்து மாடிக்குடியிருப்புத் திட்டம் அமைந்துள்ளது.

குருநகரில் வாழ்வோரில் 99 வீதமானோர் கத்தோலிக்கராவர். இங்கு செபஸ்தியார் கோவில், சந்தியோகுமையோர் கோவில், புதுமைமாதா கோவில், புனிதபேதுறுவானவர் கோவில் முதலிய கோயில்களும் உள்ளன. இங்குள்ள இடங்களும் தெருக்களும் மேற்குறிப்பிட்ட கோயிற் பெயர்களாலேயே வழங்கப்படுகின்றன. இங்கு வழங்கும் 'ஐஸ்வாடியடி', ஆமைக்கொட்டிலடி, கருவாட்டுக் கொட்டிலடி, சின்னக்கடை, அலுப்பாந்தியடி முதலிய சிற்றிடப்பெயர்களும் நினைவிற் கொள்ளத்தக்கனவாகும்.

சிவநகர் (கர.165.5)

கரச்சிப்பகுதியில் உருத்திரபுரம் குடியேற்றப் பிரிவிலுள்ள சிவன்கோயிலுக்கு அண்மையில் சிவநகர் என்ற இடம் அமைந்துள்ளது. இப்பெயர் கோயிலுறை கடவுட் பெயரை முதன்மையாகக் கொண்டு அண்மைக் காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

திருநகர் (கர.135அ.8)

கிளிநொச்சிப் பகுதியில் அமைந்துள்ள ஓரிடம் திருநகர். இங்கு 1967ஆம் ஆண்டில் காடுகளை வெட்டிக் களனிகளாக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஒரு புற்றின் அடியில் 10அடி ஆழத்திற் கருங்கற்சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. சுமார் ஒன்றரை அடி உயரமும் ஒரு அடி அகலமும் கொண்ட இச்சிலை ஐந்து தலை நாகத்தின் கீழ் திருமால் பிறந்தமேனியுடன் இடதுகாற் பெருவிரலைத் தனது வாயிலே வைத்தபடி அழகாகச் செதுக்கப்பட்டிருந்தது' என்ற செய்தி

வீரகேசரி வாரமலரில் (21.07. 1985) எழுதப்பட்டிருந்தது. இச் சிலையின் மூலம் பண்டை நாளில் இப் பகுதியில் திருமால் வழிபாட்டினர் வாழ்ந்திருக்கின்றனர் என்ற செய்தி புலனாகின்றது. எனவே திருமால் வழிபாடு காரணமாகவே இப்பெயர் ஏற்பட்டுள் ளது எனலாம்.

பூநகரி (பூ.8)

பூ + நகர் + இ = பூநகரி. பூ > பூத்தல். பூத்தல் என் பதற்கு = மலர்தல், தோன்றுதல், பொலிவு பெறுதல், பயனின்றிப் போதல், படைத்தல் என்னும் பொருள்களுமுள்ளன. பூநாகம் > பூநகரி. பூநாகம் என்ற பெயரிலிருந்து இவ்விடப் பெயர் தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. பூநாகம் என் பதற்குப் பூவிலுள்ள சிறு பாம்புவகை, நாகப்பூச்சி, பூநச்சிப்புல் என வரும் கருத்துக்களும் ஈண்டு நினைவுகொளற்பாலன. பூநகரி என்ற பெயரைத் தமிழகத்திலுள்ள திருநகரி என்ற இடப்பெய ருடன் ஒப்பிட்டு நோக்கலாம். இவ்விடப்பெயரைக் குலசபாநாதன் (1955:33) தமிழகத்திலுள்ள பொன்னேரி என்ற இடப்பெயருடன் ஒப்பிட்டுப் பொன்னேரி > பூனேரி > பூனெரி > பூனரி என மருவி வழங்கிற்று என்றும், பூனரி என்பதே இதன் பழைய பெயர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பூநகரி தனிமையான ஓர் உதவி அரசஅதிபர் பிரிவாக இயங்குகிறது. இதில் பின்வரும் எட்டு கிராமசேவகர் பிரிவுகள் அமைந்துள்ளன. அவை முறையே கௌதாரிமுனை, செட்டியா குறிச்சி, மட்டுவில்நாடு, கொல்லக்குறிச்சி, பொன்னாவெளி, இரணை தீவு, நல்லூர், பல்லவராயன்கட்டு என்பனவாம். இப் பகுதி 500.6ச.கி.மீ. பரப்புடையது. யாழ்ப்பாணத்தில் போர்த்துக் கேயர், ஒல்லாந்தர் ஆட்சி நடைபெற்றபோது பூநகரி, கரச்சிப் பகுதிகளில் வன்னியர் ஆட்சி நடைபெற்றது. இங்கு தொடர்ச்சி யாகத் தமிழ் மன்னர் ஆட்சி நிலைபெற்றிருந்தமையை 'வன்னியர்' என்ற நூல் விளக்கிக் கூறுகின்றது (சி.பத்மநாதன்:1970). மேலும் யாழ்ப்பாண அரசின் ஆட்சிப் பிரிவுகளில் 'வெளிநாடு' என்றழைக் கப்பட்ட பகுதிகளாகப் பூநகரி, பல்லவராயன்கட்டு, பொன்னா வெளி ஆகிய மூன்று இடங்களும் கருதப்பட்டன (ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை:1933:20). இப்பகுதியில் பாழடைந்து கிடக்கும் நீர்ப்பாசனக் குளங்களும், நெல் வயல்களும், அழிபாடுகளும்

இப்பகுதியின் வரலாற்றுதய காலக் குடியிருப்புக்களைச் சான்று படுத்துவனவாக உள்ளன. பூநகரிப் பகுதியிற் கிடைத்துள்ள தொல்பொருட் சான்றுகளாகப் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள், உரோம நாணயங்கள் முதலியன இப் பரந்த பகுதியை பண்டைய ஈழத்தின் தொன்மையான நாகரிகத் தளமாகக் காட்டுகின்றன. இங்கு கிடைத்த மட்பாண்ட ஓடுகளில் ஈழ, ஈலா எனப் பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது (ப. புஸ்பரத்தினம்:1993). இப் பகுதி பண்டைய தமிழ் அரசின் அமைவிடமாக இருந்திருக்க வேண்டும் என்பதைத் தொல்பொருட் சான்றுகளாலும், பாழடைந்து காணப்படும் நிலவள அமைப்பினா லும் நிறுவக் கூடியதாக இருத்தல் பூநகரியின் வரலாற்றுச் சிறப்பைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

பூநகரிப் பகுதியில் சோழர் காலத்து நாணயங்களும் அகப்பட்டுள்ளன. ஈழத்தில் சோழராட்சி நிலைபெற்றிருந்த 10ஆம் 11ஆம் நூற்றாண்டுகளில் பூநகரிப் பகுதியில் சோழரது குடியேற்ற மும், அவர்களது செயற்பாடுகளும் மிகுந்து காணப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு இப்பகுதியிற் காணப்படும் மண்ணியாறு, குடமுருட்டியாறு, நல்லூர், தியாகம், சோழமண்டலம், பல்ல வராயன், பல்லவராயன்ஆறு, பல்லவராயன்கட்டு, ஆலங்கேணி, செட்டிகுறிச்சி, மட்டுவில்நாடு, சோழியகுளம், அம்பலப்பெருமாள், நீராவி, வெள்ளாங்குளம், கோணாவில் முதலிய இடப்பெயர்களே சான்றாகின்றன. (க.சி.சிற்றம்பலம் 1993:308).

பெரிப்புலுஸ் (Periplus) தனது குறிப்பிற் பூநகரியை Poudouke எனக் குறித்துள்ளார். பூதூக்கி என்பதே Poudouke ஆயிற்று எனக் குறிப்பிட்டு, அதற்கு மகாவம்சவழி விளக்கம் காண்கிறார் இராசநாயகம் (1926-114). ஜம்புகோளத்துறையி லிருந்து அநுராதபுரம் நோக்கிச் செல்லும் வழியிற் பூநகரி அமைந்துள்ளது. சங்கமித்தை வெள்ளரசுக்கிளையுடன் இவ்வழி யால் அநுராதபுரம் நோக்கிச் செல்லும்போது, பூநகரி பூம் பந்தரால் அலங்கரிக்கப்பட்டிருந்ததென மகாவம்சம் கூறுகிறது. இதனையே பெரிப்புலுஸ் 'பூதூக்கி' எனக் குறிப்பிட்டார். இந்த இடமே பின்னாளிற் பூநகரி என மருவிற்று என்பதை முதலியார் செ. இராசநாயகம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

' It is also clear that Pouduke or Punakari which was a port

ing the time of PTOLEMY, and TALACORY or THELKEIR, identified as Kalmunai, had come into prominence. Incidently, it may be said, that this is a further circumstance in support of the view that Periplus was anteroior in date to Ptolemy. Ptolemy who had, however, heard of the name 'Pouduke' assigned to it a place in the interior of the Island and another further north than Madras." (S. Rasanayagam: 1926: 115)

மேலும், பூநகரி என்பதற்கு வரலாற்றுப் புவியியல் அடிப் படையிலும் விளக்கம் கூறக்கூடியதாக உள்ளது. பூநகரியை பூ + நகர் + இ எனப் பிரித்து, பூ = நிலம்; நகர் > நகர்தல்; இ = விகுதி எனப் பொருள் கொண்டு, யாழ்ப்பாண நிலத் தொடரில் இருந்து கடலாற் பிரிக்கப்பட்டு நகர்ந்த நிலப்பகுதியே பூநகரி எனப்பெயர் பெற்றது எனினும் அமையும். பூநகரி காடு களையுடைய வளர்ச்சியடையாத ஒரு பகுதியாகவே விளங்கியது. பூநகரியின் உட்பகுதிகளிற் குளங்களை அடிப்படையாகக் கொண்டு தொடக்கத்தில் உருவாகிய குடியிருப்புகள் போர், நோய், மிருகங்கள், வறட்சி, வெள்ளம் என்பன காரணமாகக் கைவிட நேர்ந்ததும், மக்கள் கரையோரங்களை நாடிக் குடியேற லாயினர் (க. குணராசா:1983:61). இதனால் பூநகரிப் பகுதியின் கரையோர இடப்பெயர்கள் பிற்பட்ட காலத்தன் என்ற ஊகம் பெறப்படுகின்றது. பூநகரி, கரச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளிலுள்ள இடப்பெயர்களிற் பெரும்பாலானவை பழந் தமிழ்ப் பெயர்களாகவே காணப்படுகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1796-1948) பூநகரி உடையார்பிரிவு, பல்லவராயன்கட்டு என இரண்டாக பிரிக்கப்பட்டு பூநகரிப்பகுதி நிருவகிக்கப்பட்டது (Census of Ceylon, 1871-1881). பூநகரியில் போர்த்துக்கேயரால் கோட்டை ஒன்று கட்டப்பட்டதென்றும், அக்கோட்டை ஒல்லாந்தரால் 1782 வரையும் பேணப்பட்டுப், பின்னர் அது அழிந்து போயிற்றென்றும் கூறப்படுகிறது. 1805இல் ஆங்கிலேயர் இக்கட்டிடத்தைப் புனர மைத்து வாடிவீடாகப் பயன்படுத்தினர் என்றும், அதன்பின்பு முற்றாக அக்கட்டிடம் அழிந்துவிட்டது என்றும் அறியப்படுகிறது (W.A.Nelson: 1984:10).

'நாடு' ஈற்று இடப்பெயர்

நாடு என்பது 'இறைமை' கொண்ட ஒரு பரந்த பகுதி யைக் குறிக்கும் சொல்லாகும். இச்சொல் பழந்தமிழ் இலக்கியங் களில் வழக்குப் பெற்றுக் காணப்படுகிறது. பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் 'நாடு' என்பது நிருவாக ஆட்சிச் சொல் லாகப் பயன்பட்டுள்ளது. சோழர் காலத்திலே உள்ளூராட்சிமுறை மிகவும் நுட்பமான முறையில் வளர்ச்சியடைந்திருந்தமையை வரலாற்று ஆவணங்கள் விளக்குகின்றன. ஊர், நாடு, வளநாடு, மண்டலம் என்ற நான்கு நிலைகளில் உள்ளூராட்சி நிருவாக சபைகள் சோழர் கால நிருவாகத்தில் இயங்கின. சோழப் பேரரசு தனது மேலாட்சி விரிவாக்கத்தின்போது ஈழத்தையும் கைப்பற்றித் தமது நிருவாக முறையை இங்கும் செயற்படுத்தி யுள்ளமைக்கான பல்வேறு வரலாற்று ஆவணங்கள் கிடைத் துள்ளன. மாந்தை உள்ளிட்ட பூநகரிப் பகுதிகளைச் சோழர் கைப்பற்றியதோடு தமது இராணுவ, வணிக நடவடிக்கைகளுக்கு இவ்விடங்களைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளமையை இடப் பெயர்களே சான்றுபடுத்துகின்றன.

மட்டுவில்நாடு (பூ.173:1-2)

இது பூநகரிக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையேயுள்ள மருத நிலத்தூராகும். மட்டுவில் என்பதற்குக் கொடுக்கப்பட்ட பெயர் விளக்கம் ஈண்டும் நோக்கற்பாலது (நூலின்.110.பக்கம் பார்க்க). சோழர் ஆட்சி ஈழத்தில் நிலவியபோது 'நாடு' எனப்படும் உள்ளூராட்சி நிருவாகப் பிரிவின்கீழ் 'நாடு' என்ற சபை இவ் விடத்தில் இயங்கியதால் 'மட்டுவில்நாடு' என்ற ஆட்சிப் பெயரால் இவ்விடப்பெயர் வழங்கியிருக்கலாம். எனவே மட்டுவில்நாடு என்ற இடப்பெயர் சோழர் ஆட்சித் தொடர்பையும், அப்போது ஏற்பட்ட சோழக் குடியேற்றங்களையும் ஆழ்ந்து நோக்க வழி செய்கின்றது.

'பற்று' ஈற்று இடப்பெயர்கள்

பற்று என்பது ஓரிடத்தைக் கைப்பற்றி, எல்லை வகுக்கப் பட்ட இடம் என்ற பொருளில் வழங்கும் பெயர் விகுதியாகும்.

பல் > பல்லு > பற்று என இச்சொல் ஆக்கம் பெற்றுள்ளது. பற்று என்பது = பிடித்தல் எனப் பொருள் தரும் சொல். "யாதும் கொடாஅர் எனினும் உடையாரைப் பற்று விடாஅர் உலகத்தவர்... " (நாலடி: 337:2-4) என்ற பாடல் வரியிலும் பற்று என்பது பிடித்தல் என்ற பொருளில் வருதல் காண்க. பற்று என்ற சொல்லுக்குப் பின்வரும் 9 வகையான பொருள் விளக்கம் (தாவீது:1970:62) கூறப்பட்டுள்ளது:

1. ஒட்டு, பற்றாசு, பசை, சோற்றுப்பருக்கை,
2. உரிமையிடம், தங்குமிடம், நாட்டுப்பகுதி,
3. பற்றுக்கோடு, தூண்,
4. ஏற்றுக்கொள்கை, சம்பந்தம்,
5. கட்டு,
6. இல்வாழ்க்கை அன்றேல் வீட்டுநெறி,
7. அகப்பற்று, புறப்பற்றுக்களாய நம்பிக்கைகள்,
8. அன்பு, நட்பு,
9. செல்வம்

சுமேரியமொழியில் Bal என்ற சொல் (திராவிடத்தில் "பல்") பிரி, கிழித்திடு என்று வினையாயிற்று (தாவீது- 1970:66). எனவே பலம் கொண்டு பிரித்து எடுத்த பகுதியே 'பற்று' ஆயிற்று. "பத்து ஊர்கிளவி" எனத்தொடங்கும் தொல்காப்பியச் சூத்திரத்தில் (எழுத்து: 475.1) 'பத்து', 'பற்று' என்ற பழைய சொல் வழக்குப் பயின்று வருதலும் நோக்கற்பாலது. பற்று என்பது நன்செய் நிலத்தைச் சுட்டும் சொல்லாகவும் வழங்கிற்று. அச்சொல் தமிழ் நாட்டின் தென் பகுதியில் பத்து எனவும், வடபகுதியில் பட்டு எனவும் திரிந்து வழங்குகிறது. திருக்கோவிலுக்கு நிவந்தமாக விடப்பட்ட நிலங்களையுடைய ஊர், கோவிற்பற்று என்று பெயர் பெறும். பெருங்கருணைப் பற்று, (செங்கழுநீர்ப்பற்று >) செங்கழு நீர்பட்டு, (தெள்ளாற்றுப்பற்று >) தெள்ளாரப்பட்டு, (பூத்தலைப் பற்று >), பூதலப்பட்டு (ரா.பி. சேதுப்பிள்ளை,1976:27) என்பன வும் நோக்கத்தக்கன. சோழர் ஆட்சிக் காலத்தில் ஈழத்திலிருந்த அரசஅலுவலர்கள் நிருவாகத்தின் பொருட்டுப் பற்று என்னும் பிரிவுகளை வகுத்திருந்தனர் (சி. பத்மநாதன்: 1970:38).

பள்ள நிலங்களைப் பற்று எனக்கூறும் மரபும் உண்டு. தென்தமிழீழத்திலுள்ள கரைவாகுப்பற்று, அக்கரைப்பற்று, கோளா

வில்பற்று முதலிய பள்ளமான இடங்களை நோக்கின் இவ் வுண்மை புலப்படும். யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்கள் தொண்டை மண்டலத்து அரசியல் முறைமைகளைப் பின்பற்றிச் செய்த ஒழுங்குகளுள் நிலவரி முறைகள் குறிப்பிடத்தக்கன. இந்த ஒழுங்குகளைத் தமிழரசர் காலத்தில் ஏடுகளில் எழுதிவைக்க, இவற்றைப் பின்னர் வந்த ஒல்லாந்தர் புத்தகங்களிற் படியெடுத்து வைத்தனர். அவை 'தோம்பு' எனப் பெயர்பெற்றன. காணிப் பதிவின்போது 'இறை', 'கோவிற்பற்று' என்று இடம்பெறும் வாசகங் கள் தமிழரசர் காலத்தனவே. இக் காணிக்கு இன்ன ஊரில் அலுவலருக்கு இவ்வளவு பணம் இறை கொடுத்தல் வேண்டு மென இறைஏட்டில் எழுதப்படுதலின் 'இறை' எனவும், கோட்டம் அல்லது கோவிற்பற்றின் அதிகாரி அக் கோவிற் பற்றுக்குரிய அரசிறையைப் பற்றிக்கொண்டு பற்றுச்சீட்டு முடித்துப் பற்றேட்டில் பற்றெழுதுவதால் 'கோவிற்பற்று' எனவும் தமிழரசர் காலந்தொட்டு இறை, கோவிற்பற்று என்பன வழங்கலாயின என்கிறார் வ. குமாரசாமி (1932:43).

போர்த்துக்கேயர் தமது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த பகுதிகளை 32 கோவிற் பற்றுக்களாகப் (Parish) பிரித்து, ஒவ்வொரு கோயிற்பற்றிலும் தேவாலயங்கள் அமைத்து, அத்தேவாலயங்களின் மூலம் அவ்வப் பகுதிகளை நிருவகித்தனர் என அறியப்படுகிறது. இவ்வாறு வரலாற்றுப் பின்னணி கொண்ட 'பற்று' என்ற பெயரீறு பொருந்திய இம் மாவட்டத்து இடப்பெயர் கள் பற்றி இங்கு ஆராயப்படுகின்றது.

ஊர்வணிகன்பற்று (பச்.15334)

ஊர் + வணிகன் + பற்று = ஊர்வணிகன்பற்று. 'ஊர் வணிகன்' என்ற சொற்றொடர் குறிக்கும் செய்திகளைச் சோழ நிருவாகத்துடன் தொடர்புபடுத்தி நோக்க வேண்டும். சோழர் காலத்து உள்ளூராட்சிச் சபைகளில் 'ஊர்' என்பது கிராமசபை யைக் குறிப்பதாகும். வணிகர்களுக்கு உரியது 'நகரம்' அல்லது 'கோட்டம்' எனப்படும் சபையாகும். எனவே வழக்கத்திற்கு மாறாக ஊர்ச் சபையின் உறுப்பினராக இடம்பெற்ற வணிகன் ஒருவன் 'ஊர்வணிகன்' என மக்களால் அழைக்கப்பட்டு, அவ்வணிகன் வாழ்ந்த இடம் 'ஊர்வணிகன்பற்று' எனப் பெயர்பெற்றது எனக்

கொள்ளுதல் தவறாகாது. பச்சிலைப்பள்ளிப் பெரும்பகுதியில் ஆனையிறவு, கோயில் வயல், சோரன்பற்று சூழலில் அமைந்த ஓரிடமே ஊர்வணிகன் பற்று. 'நகரத்தார்' என்பது வணிகரைச் சுட்டும் சாசன வழக்குச் சொல். நகரங்களிற் சென்று வணிகஞ் செய்தலால் அவர்களுக்கு அது காரணப் பெயராயிற்று. உள்ளூர் களில் வணிகம் செய்தோரை நகரத்தாரிலிருந்து பிரித்தறிய 'ஊர்வணிகர்' என்ற வழக்கு ஏற்பட்டிருக்கலாம்.

செம்பியன்பற்று (பச்.147.1-2)

இது பச்சிலைப்பள்ளிப் பகுதியில் வங்காள விரிகுடாக் கடற்கரை ஓரமாக அமைந்த ஓரிடம். செம்பியன் என்பது சோழ மன்னர்களின் சிறப்புப்பெயர்களில் ஒன்றென்பதை அவர் தம் கல்வெட்டுக்களால் அறியலாம். இப்பெயரின் தொடர்சின்னமாக செம்பியம், செம்பியநல்லூர், செம்பகுடி முதலிய ஊர்கள் தமிழ் நாட்டிற் காணப்படுகின்றன. இராசேந்திரசோழன் காலத்தில் வாழ்ந்த மலையகுல மன்னர்களில் (மலையமான்கள்) 'செம்பியன் மிலாருடையார்' என்பவரும் ஒருவராவர் என்ற குறிப்பும் காண்க (சு.குப்புசாமி: 1978:69). இந்த அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியிலுள்ள செம்பியன்பற்று என்ற இடம் ஆராயப் பட வேண்டியதாகும். சோழர் ஆட்சிக் காலத்தில் இது துறை முகமாகவும், சோழப் படை வந்து தங்கிய இடமாகவும் பயன் பட்டிருக்கலாம். அதனால் சோழருக்குரியதான இவ்விடம் செம் பியன்பற்று எனப் பெயர் பெற்றதெனலாம். சோழர் ஆட்சிக் காலத்திலே வட இலங்கையிலிருந்து பொலனறுவைக்குச் செல் லும் பெருந்தெரு இவ்வூருக்கு அணித்தாய் அமைந்திருந்த காரணத்தாற் பொலனறுவைக்குச் செல்லும் படைகள் இத்துறை யில் வந்து இறங்கியிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது (க. கணபதிப்பிள்ளை:19 62:104).

சோழர் காலத்து நிருவாகப் பிரிவுகளின்கீழ் செம்பிநாடு, செவ்விருக்கை செம்பிநாடு என்பன கடற்கரை ஊர்ப்பகுதிகளாக விளங்கின என சி. பத்மநாதன் (1974:174) குறிப்பிடுகிறார். கடற்கரையோரச் சோழர் நிருவாக மாவட்டத்துடன் செம்பியன் பற்றும் இணைந்ததாக அமைந்திருக்கலாம்.

சோரன்பற்று (பச்.160.2)

சோழன்பற்று > சோரன்பற்று என மருவியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. சோரன்பற்றுக் கிராமசேவகர் பிரிவில் 'மாசர்' என்ற இடமுள்ளது. சோழர் காலத்து தஞ்சைப் பெரு வுடையார் கோயிற் கல்வெட்டுக்களிலே 'மாசர்' என்ற ஊர்ப்பெயர் இடம்பெறுகிறது. எனவே சோரன்பற்றுக்கு அருகில் மாசர் என்ற இடம் காணப்படுவதால் இது சோழப் பேரரசு காலத்தில் வழங்கப்பட்ட பெயர் என்பதும், அது சோழன் பற்றே என்பதும் தெளிவாகின்றன.

நிற்க, இப்பெயர் சேரன்பற்றோ எனவும் ஐயுற வேண்டி யுள்ளது. வரணியிற் 'சேரன்கலட்டி', நவிண்டிலிற் 'சேரன்எழு' என்ற குறிச்சிப் பெயர்கள் காணப்படுவதால் இது சேரன்பற்று எனவும் அமையலாம். வரலாற்றாய்வே இதற்குத் தீர்வு காண லாம்.

பிரான்பற்று (வலி.தெ.மே.ப.38.7)

பண்டத்தரிப்புப் பட்டினசபையின் ஒரு பகுதியாக பிரான் பற்று அமைந்துள்ளது. சேர நாட்டிலுள்ள பிரான்குடி என்ற இடப்பெயரையும் இப்பெயரையும் ஒப்புநோக்கும்போது இஃது சேர நாட்டு பிரான்குடியிலிருந்து குடிப்பெயர்ச்சி காரணமாக இங்கு வந்தோர் வழங்கிய பெயர் எனவுங் கொள்ளலாம்.

'புரம்' ஈற்று இடப்பெயர்கள்

புரம் என்பது நகரைக் குறிப்பிடினும் கோயில் சார்ந்த ஊரையும் அது குறித்து வழங்குகிறது. புரம் என்பதற்கு ஊர், நகரம், இராசதானி, கோயில், மேன்மாடம், வீடு, சரீரம், தோல் என்ற பொருள்களுமுள (த. லெ.5:2770). புரம் என்பதற்குக் கோட்டை என்ற பொருளுமுண்டு. புரம் என்ற சொல் ஊர் > பூர் > புரம் என மாற்றம் பெற்று வந்தது எனத் தாவீது கூறும் கருத்தும் நோக்கத்தக்கது:

'The Tamilzh fortification to the Sanskritic "Pura" or fort is just a short semantic step: now we know the origin of the

Sanskrit "Pura" < "pur" (Fort), which English transform into "pore" as in 'Singapore'; civilization is associated rightly with city life; and nearly all the words for cities are Sumero - Dravidian in origin" (Daaviidu : 1972: 50).

புரம் என்பது வடசொல் என்பதும், அது மிகப் பழங் காலத்திலே தமிழிற் கலந்துவிட்டது என்பதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதே. புரம் என்ற ஈற்றுப் பெயருடைய நகரங்களும், ஊர்களும் தமிழகத்திலே தொன்மைக் காலம் முதலாக இருந்துள்ளன. இது பற்றிய டாக்டர். கரு. நாகராசனின் கருத்து (1985:95) ஈண்டு நோக்கத்தக்கது:

> "புரம் என்பது இடத்தைக் குறிக்கும் சொல்லாக நெடுநாள் வழக்கிலுள்ளது. அந்தப்புரம், சந்தைப்புரம் போன்ற வழக்கு களையும் காணமுடிகிறது. கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் இருந்ததாகவும், அது கடலுள் மறைந்து விட்டதாகவும் அறிஞர் கூறுவர். அவ்வூர்ப் பெயரை நோக்கினால் புரம் என்ற பொதுக் கூற்றினது தொன்மையும், அப்பெயரில் பல ஊர்கள் முன்னர் தமிழ்நாட்டில் இருந்திருக்க வேண்டும் என்ற உண்மையும் புலப்படுகின்றன".

சிறந்த ஊர்கள், நகரம் என்னும் பெயரால் வழங்கும் என்றும், அது போன்றே 'புரம்' என்னும் சொல்லும் சிறந்த ஊர்களைக் குறிப்பதாகும் என்றும் ரா. பி. சேதுப்பிள்ளை (1976:49) குறிப்பிட்டுள்ளார். 'புரம் என்பதற்குச் சமனான 'புரி' என்பது தமிழ்நாட்டில் பல இடப்பெயர்களின் ஈறாக அமைந் துள்ளது. அவ்வகையில் ஈழத்தில் இரத்தினபுரி என்ற பெயரைத் தவிர 'புரி' ஈற்று இடப்பெயர்கள் வழக்குப்பெறாமை குறிப்பிடத் தக்கது. புரம் = புரி = நகரம் என்பன ஒரே பொருள் தரினும் நகரம் சற்று வேறுபட்டு வழங்குவதையும் நோக்கலாம். திவாகர நிகண்டில் புரம் என்பதற்கு இராசதானி என்ற பொருள் கூறப் பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. யாழ்ப்பாண மாவடத்தில் 'புரம்' என்ற ஈறுபெற்ற பதினைந்து இடப்பெயர்கள் அமைந் துள்ளன. இப்பெயர்களை வருமாறு வகைப்படுத்தலாம்:

வரலாறு சார்ந்தவை: வல்லிபுரம், சுழிபுரம், தொல் புரம், மாவிட்டபுரம்.

கோயில் சார்ந்தவை: உமையாள்புரம், உருத்திர புரம், கணேசபுரம், கனகபுரம், கனகாம்பிகைபுரம், காஞ்சி புரம், குமரபுரம், தர்மபுரம்.

தனிமனிதப்பெயர் பெற்றவை: இராமநாதபுரம், ஸ்கந்தபுரம்.

இவற்றில் வல்லிபுரம், மாவிட்டபுரம், தொல்புரம், சுழிபுரம் என்பன வரலாற்றுத் தொடர்புடையனவாகும். ஏனைய 'புரம்' ஈற்றுப் இடப்பெயர்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்ட புதுக்குடியிருப் புக்களைச் சுட்டும் புதுப் பெயர்களாகவே உள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்திலே, பச்சிலைப்பள்ளி, கரச்சி, பூநகரி ஆகிய பகுதி களிலேயே பெரிய அளவில் குடியேற்றத் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு, அவற்றின் பெயர்களும் 'புரம்' என்ற ஈற்றினைக் கொண்டமைந்தன. இப்பகுதிகளின் நிலப்பயன்பாடு பற்றி ஆராய்ந்த க. குணராசா (1983:1957) 58 இடப்பெயர்களைத் தந்து அவை பண்டைய குடியிருப்புக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் எப்பெயராவது 'புரம்' என்ற ஈறு பெற்ற இடப்பெயர் இல்லை என்பதும் கருதத்தக்கது.

சனத்தொகைப் பெருக்கம், சேரி ஒழிப்பு, புதிய குடி யேற்றத் திட்டங்கள், தனிநபர் சார்ந்த அரசியல் புகழாரம், சான்றோரைப் பாராட்டுதல் என்ற அடிப்படையிற் புதிய இடங் களுக்குப் பெயர் சூட்டும்போது 'புரம்', 'நகர்' என்னும் ஈற்று இடப்பெயர்களே பெரிதும் கையாளப்படுகின்றன. எனவே புரம் என்ற ஈற்றுப் பெயர்களிற், பழைமை சுட்டும் எண்ணிக்கை யிலும்விட, புதுமையைக் குறிப்பிடுவனவே பெருந்தொகையின என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகத்து இடப்பெயர்கள் சான்று பகர்கின்றன.

இராமநாதபுரம் (கர.167)

இரணைமடுக் குளத்தைச் சீரமைத்து, 1955ஆம் ஆண் டில் கரைச்சிப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களில்

இராமநாதபுரமும் ஒன்றாகும். சேர். பொன். இராமநாதன் தமக்குச் சொந்தமான 1000ஏக்கர் காணியை இக்குடியேற்றத் திட்டத்திற் காக அன்பளிப்புச் செய்திருந்தார் எனக் கூறப்படுகிறது. அத னாலே இக் குடியேற்றத் திட்டத்திற்கு இராமநாதபுரம் எனப்பெயர் ஏற்படுவதாயிற்று. இப்பகுதி முன்பு வட்டக்கச்சி என்ற பகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தது.

உமையாள்புரம் (கர.162.7)

கரச்சிப் பகுதியிலே தட்டுவங்கொட்டி என்ற ஊருக்கு அண்மையில் 1959இல் தொடங்கப்பட்ட குடியேற்றத்திட்டமே உமையாள்புரம். குமரபுரத்திற்கு மேற்கே குடியேறிய மக்களின் குல தெய்வமான உமையம்மையின் பெயரால் இவ்விடம் உமை யாள்புரம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

உருத்திரபுரம் (கர.165)

கிளிநொச்சிப் பகுதியில் இரணைமடுக் குளத்தின் இடது கரை வாய்க்காலை நடுநிலையாகக் கொண்டு 1950இல் தொடங் கப்பட்ட இரண்டாவது பெரிய குடியேற்றத்திட்டம் உருத்திர புரத்தில் அமைக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வன்னிநாடு பெருங்காடாகவே காணப்பட்டது. வடமாகாண ஆட்சிப் பொறுப்பாளராக இருந்த வில்லியம் துவைனம்துரை (Sir William Twynam) 1882 ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் மாட்டு வண்டியில் அக்கராயன், பரந்தன், அடம்பன், உருத்திரபுரம் முதலிய இடங்களைப் பார்வையிட்டார். செப்டம்பர் 2ஆம் திகதி உருத்திரபுரத்திற்குச் சென்றார். அவர் தமது நாட் குறிப்பில் உருத்திரபுரத்துப் பெருங்குளம், அங்கே அழிவுற்றுக் கிடந்த சிவாலயம், அக்கோயிலுக்குரிய பழைய ஆறு கற்றூண் கள் என்பனவற்றைத் தாம் கண்டது பற்றியும், அங்கு ஒரு காலத்தில் நகரம் ஒன்று இருந்திருக்கவேண்டும் என்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளார் (ஈழநாடு வாரமலர் 16.06.1985:4). இற்றைக்குச் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு இப்பகுதியிலுள்ள காடுகள் வெட்டப்பட்டபோது ஒரு பழைய சிவன் சிலை கண்டெடுக்கப் பட்டுள்ளது. உருத்திரன் சிலை (உருத்திரன் = சிவன்) இங்கே அகப்பட்ட காரணத்தினால் உருத்திரபுரம் என்ற பெயர் இச்சிலை யுடன் தொடர்வுடையதாகலாம்.

போர்த்துக்கேயர் ஆட்சிக்கு முன்பு வன்னிப் பகுதியுடன் உருத்திரபுரம் இணைக்கப்பட்டிருந்தது. பண்டைநாளில் இங்கு சைவமும், சைவப் பண்பாடும் உயர்நிலையில் இருந்தன என் பதற்கு இங்குள்ள பழைய சிவன்கோயில் சான்றாகின்றது. இச் சிவன்கோயிலின் 'ஆவுடையார்' நீள்சதுர வடிவமானது. இவ் வமைப்பு சோழர் காலத்துக்குரிய கட்டிட நுட்பத்தைக் குறிக்கிறது. மேலும், இங்கே சோழர் காலத்துத் தொல்லியற் சான்றுகளாக மட்கலங்களின் ஓடுகள், செங்கற்கள், கற்றூண்கள், அகலமான சுவர்களின் சிதைவுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே சோழர் காலத்தில் உருத்திரபுரத்திலும் சோழர் ஆட்சியும், சோழர் பண்பாடும் நிலைபெற்றிருந்தன என்பது புலனாகிறது.

கணேசபுரம் (கர.பு.35.4)

கரச்சி அரசஅதிபர் பிரிவில் 1937இல் இரணைமடுக் குளத்தை நடுநிலையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட முதற் குடியேற்றத் திட்டம் கணேசபுரம் ஆகும். இங்கு காடுகளை அழித்து வீடுகள் கட்டப்பட்டு, மக்கள் குடியேற்றப்பட்டனர். காட்டுப்புறத்தில் தனித்துக் குடியேறிய மக்கள், காட்டுவழிக்குத் துணையாகும் கரிமுகனுக்குக் கோயில் கட்டி வழிபட்டனர். அவ் வாறு கணேசபெருமான் துணையுடன் குடியேறி வாழ்ந்த மக்கள் இவ்விடத்திற்கு அத்தெய்வத்தின் பெயரையே இட்டு வழங்கினர்.

கனகபுரம் (கர.பு.35.1)

கரச்சிப் பகுதியில் 1958இல் படித்த வாலிபர்களுக்கெனத் தொடங்கப்பட்ட முதலாவது மாதிரிக் குடியேற்றத் திட்டம் இது வாகும். இங்கிருந்த கனகாம்பிகை அம்மன்கோயிலுக்கு வலது புறமாக அமைந்திருந்தது. இக்கோயிற் பெயரின் அடிப்படையில் இவ்விடப் பெயர் தோற்றம் பெற்றுள்ளது. இப்பகுதியில் அம்பாள் குளம், சந்தன்குளம், புதுக்குளம் முதலிய குளங்களும் உள்ளன.

கனகாம்பிகைபுரம் (கர.164அ.12)

இரணைமடுக்குளம் கிளிநொச்சிப் பகுதிப் பொருண்மியத் தின் உயிர்நாடியாக விளங்குகின்றது. இக்குளத்திற்கு அண்மை யில் 'கனகாம்பிகை' அம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்

கோயிலுக்கு அருகாமையில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டம் 'கனகாம்பிகை புரம்' எனக் கோயிலுறை தெய்வப்பெயராக அமைவதாயிற்று.

குமரபுரம் (கர.164.1)

பரந்தன் சந்திக்கு மேற்கே அமைந்துள்ள குடியேற்றத் திட்டப்பகுதி குமரபுரமாகும். குமரன் = முருகன். இதுவும் தெய்வப் பெயரால் அமைந்த இடப்பெயர் எனலாம்.

சுளிபுரம் (வலி.மே.49)

சோழர்புரம் என்பது > சோழிபுரம் > சுளிபுரம் என மருவிற்றென்பர். இப் பெயரைச் சிலர் சுழிபுரம் எனவும் எழுதுவர். இங்கு முன்பு சோழர் வழிவந்தோர் வாழ்ந்தனர் என்றும், அத னால் இவ்வூர் சோழிபுரம் என வழங்கிற்றென்றும், காலப்போக்கில் அப் பெயர் சிதைந்து சுளிபுரமாயிற்று என்பதும் இவ்வூர் மக்களது மரபு வழிக் கருத்து. மிகப் பரந்த இடத்தையுடைய இவ்வூர், சுளிபுரம் கிழக்கு, சுளிபுரம் மேற்கு என இரு கிராமசேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. காட்டுப்புலம், பனிப்புலம், பண்ணாகம், கல்லை வேம்படி, காளுவன், பெரியபுலவு, றாத் தலடி, வறுத்தோலை என்னும் இடங்கள் சுளிபுரத்தின் உட் பிரிவுகளாக உள்ளன.

சுளிபுரத்தின் குறிச்சிப் பெயர்களாகப் பாணாவெட்டி, நெல்லியான், திருவடிநிலை, மளுவை, கல்லைவேம்படி, பறாளாய், தொட்டியடி, கிளுவனை, காலாவிகாடு, செட்டிகுறிச்சி முதலியன அமைந்துள்ளன. இவ்வூரிலே கண்ணகி அம்மன் கோயிலும் காளி கோயில்களும் இடம்பெற்றுள்ளன. காளி = சூலி. எனவே சூலி கோயில் கொண்ட இடம் (சூலி + புரம்) சூலிபுரம் என வழங்கி, காலப் போக்கில் சுளிபுரம் எனச் சிதைந்திருக்கலாம். தமிழகத்தில் இராமநாதபுர மாவட்டம், திரு நெல்வேலி மாவட்டம் என்பனவற்றில் சோளபுரம் என்ற இடப் பெயர் காணப்படுகிறது. மேலும் சுழியல், திருச்சுளி என்ற இடங்களுமுள்ளன. இவ்விடப் பெயர்களில் 'சுழி' முதன்மை பெறுகிறது. அதுபோன்றே சுளிபுரத்திலும் சுழியே முதன்மை

பெற்றுள்ளது. இப்பெயருக்குச் சிங்கள விளக்கம் கூற முற்பட்ட குமாரசுவாமி (1917:4) சிங்களர் சோழ தேசத்தைச் சோளிதேச மெனவும், சோழனைச் சோளி எனவும் சொல்வர். எனவே சோளி புரம் > சுளிபுரமாயிற்று எனக் காரணம் கற்பித்தார்.

யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் பறாளை என்ற இடத்தில் பறாளை ஈசுவர விநாயகர் கோயில் ஒன்று கட்டப்பட்டிருந்தது. கோயில்களை அழிப்பதில் ஈடுபட்டிருந்த போர்த்துக்கீசர் இக் கோயிலையும் இடிக்கச் சென்றிருந்தனர். அப்போது காகக்கூட்டங் கள் அவர்களைத் தடுத்ததோடு, அக்குழுத் தலைவனது கண் களையும் கொத்திக் கெடுத்தன. இதனாலேயே 'கண்கொத்திக் காக்கைப் பிள்ளையார்' என்ற பெயரும் இக்கோயிலோடு தொடர் புடையதாக வழங்குகிறது. பறாளம் என்ற வடமொழிச் சொல்லின் பொருள் களைப்பாறுமிடமாகும். இராவணனைக் கொன்று, இராமன் பாரதம் திரும்பும் வழியில் களைப்பாறும் பொருட்டுத் தங்கிய இடமே பறாளம் என்பர். இராமனின் திருப்பாதம் பதிந்த இடமே இதன் அண்மையிலுள்ள திருவடிநிலை எனக் கூறப்படு கிறது. இக் கோயிலின் விசேட தீர்த்தம் திருவடி நிலைக் கடற் கரையிலேயே அமைகிறது. இக்கதை நிகழ்வின் நினைவாகவே இதன் அண்மையிலுள்ள பொன்னாலையில் விஷ்ணு கோயிலும் அமைக்கப்படுவதாயிற்று. பாரதம் தீர்த்த யாத்திரைச் சுருக்கத் திலே தனஞ்சயன் தென்னிந்தியத் தலங்களைத் தரிசித்து விட்டு ஈழத்திலே திருவடிநிலை, கீரிமலை, திருகோணமலை என்னும் மூன்று விசேட தலங்களையும் தரிசித்தான் என்ற செய்தி தா. வயித்திலிங்கம் என்பவர், பறாளை சுப்பிரமணியசுவாமி பேரில் பாடப்பெற்ற கந்தரணிமாலை (1980) என்ற நூலின் முன்னுரையிற் காணப்படுகிறது.

பறாளைவிநாயகர் கோயில் தீர்த்தக்குளத்தின் அருகே மிகப் பழங்காலத்ததான வெள்ளரசமரமொன்றுங் காணப்படு கின்றது. அசோகப் பேரரசன் மகள் சங்கமித்தை இலங்கைக்கு வரும்போது கொணர்ந்த வெள்ளரசுக் கிளைகளில் ஒன்றை இப் பதியிலும் மற்றையதை அனுராதபுரத்திலும் நாட்டினள் என்பர். திருவடிநிலைக் கடற்கரைக்கு அண்மையில் மருவை என்ற இடமுண்டு. சிங்களத்தில் 'மருவை' என்பது மாளிகை யைக் குறிப்பதாகும். சங்கமித்தை அங்கு ஒரு புத்த கோயிலைக் கட்டுவித்தாள் என்றும் கூறப்படுகிறது. இவ் வரலாற்றுச் செய்திக்

அழிபாடுகள் சான்றாகின்றன. திருவடி நிலையில் இராமபிரானது திருவடிச் சுவடுகளைக் காண வந்த சோழ அரசகுமாரிகள் எழுவர் மருவையில் பெரியதொரு மாளிகையைக் கட்டுவித்தனர் என்றுங் கூறப்படுகின்றது. எனவே சுளிபுரம் என்ற இடப்பெயருடன் பறாளாய், திருவடிநிலை, பொன்னாலை மூன்றும் தொடர்புடைய னவாக விளங்குகின்றன.

18ஆம் நூற்றாண்டில் நல்லூரில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவர், இத்தலத்தின் மீது 'பாறளை விநாயகர் பள்ளு' என்ற இலக்கியம் பாடியுள்ளார். சுளிபுரம் கிழக்கு எல்லையிலுள்ள ஆறுமுக வித்தியாசாலைக்கு அண்மையிலுள்ள சாலையில் "சோழிபுரம் அழைக்கிறது" என்ற கோபுரவளைவு ஒன்றும் அமைக் கப்பட்டுள்ளது (தகவல்: நாச்சியார் செல்வநாயகம், சுளிபுரம்) யாழ்ப்பாண மாவட்டத்தில் சோழராட்சி ஏற்படுத்திய தாக்கத்தின் தன்மையினை அறிந்துகொள்ள உதவும் சான்றுகளுடன், சுளி புரமும் சேர்த்துக்கொள்ளத்தக்கது. சுளிபுரம் என்பது சோழ புரத்தின் சிதைவா என்பது பற்றிய விரிவான விளக்கங்களும் ஆராயப்பட வேண்டியனவாகும்.

தருமபுரம் (கர.5.168அ)

கரச்சிப்பகுதியிற் புளியம்பொக்கணைக்கு அண்மையில் 1958இல் தொடங்கப்பட்ட ஒரு குடியேற்றத் திட்டமே தருமபுரம். 1958இல் இலங்கையில் ஏற்பட்ட சிங்கள-தமிழ் இனக் கலவரத் தினாற் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்குக் காணி வழங்கும் நோக்குடன் புளியம்பொக்கணைப் பகுதியிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு, நிலம் திருத்தப்பட்டது. இங்கு குடியேற்றங்களை நிறுவுவதற்குப் பல்வேறுபட்ட நிறுவனங்கள் தர்ம அடிப்படையில் முன்னின்று உதவின. தருமச் செயற்பாட்டின் பயனாக இக் குடியேற்றத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையால் இதற்குத் தருமபுரம் என்ற காரணப் பெயர் ஏற்படுவதாயிற்று எனக் கூறப் படுகிறது.

தொல்புரம் (வலி.மே.48.3)

புரம் > புரத்தல் = அரண்செய்தல், ஆளுதல், காத்தல் ஆகிய சொற்பொருள்களும் ஈண்டு நோக்கத்தக்கன. தொன்மை

+ புரம் = தொல்புரம். யாழ்ப்பாணக்குடாநாட்டின் வடமேற்குக் கரையோரமாக அமைந்த ஒரு பழம் பதியே தொல்புரம். பண்டை நாளிலே தொல்புரம் என்பது சுளிபுரம், மாதகல் திருவடிநிலை, பொன்னாலை, சங்கானை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சங்கரத்தை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பெரும் பகுதியாக இருந்தது என்பர் தொல்புரக்கிழார் நா. சிவபாத சுந்தரனார். பண்டைக் காலத்தில் இப்பகுதியிற் கோட்டை கொத் தளங்கள் அமைந்திருந்தமையாற் பின்னாளில் இவ்விடம் தொல் புரம் என அழைக்கப்படலாயிற்று. இதன் சுற்றாடலிலுள்ள இடப் பெயர்களை நோக்கும் போது அவை கோட்டை அரசின் எல்லைப்புற இயல்புகளைப் பெற்றிருத்தலைக் காணலாம். அரச நடவடிக்கைகள், போர், வெற்றி முதலான செய்திகள் இப் பெயர்களிற் புதைந்து கிடக்கின்றன. யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் கூபக நாட்டு வேளாளர் தலைவனும் அவனது சுற்றத்தினரும் தொல்புரத்திற் குடியமர்த்தப்பட்டனர். இத் தலை வன் மேழிக்கொடியும் குவளை மாலையும் உடையவனாவான் (ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. 1933:19). இதற்கு வடக்கே சித்திர மேழி என்ற இடம் அமைந்திருத்தல் இப் பகுதியில் சோழர் ஆட்சித் தொடர்பைச் சான்றுபடுத்துகின்றது.

சுளிபுரத்திற் 'கொட்டைத்திக்கு' என்ற குறிச்சியுள்ளது. கோட்டைத்திக்கு என்பதே > கொட்டைத்திக்கு என மருவிற்று. பண்டை நாளிற் சுளிபுரத்து மக்கள் தம் ஊருக்குத் தெற்கே கோட்டை அமைந்திருந்தமையை அடிப்படையாகக் கொண்டு தமது ஊர்ப் பகுதிக்கு கோட்டைத்திக்கு எனப் பெயர் வழங்கி யுள்ளனர். தொல்புரத்தின் வடபாலுள்ள சுளிபுரத்தின் வடக்கு எல்லையிலமைந்த 'காட்டுப்புலம்' என்ற பகுதி, தொல்புரத்தின் புறநகர்க் காட்டரணாக அமைந்திருக்கலாம். கோட்டைக் காடும் இத்தகைய காட்டரண் பகுதியேயாகும். சங்க இலக்கியம் கூறும், ஊழிஞைத்திணையில் வரும் புறஅரண் அமைப்பை இங்கும் காணலாம். தொல்புரத்திற்கும் வட்டுக்கோட்டைக்கும் புற அரணாக அமைந்திருந்த காட்டுப் பகுதியே (கோட்டைக்காடு) கொட்டைக்காடு எனலாம். இதன் அயற் பதியாகிய செட்டியா மடம் பண்டை நாளில் சங்கு வணிகர்களின் குடியிருப்பாகலாம். அதுபோன்றே எல்லைக் காவலில் ஈடுபடுத்தப்பட்ட யானைப் படை அமைந்த இடம் சங்கானை ஆகலாம். சங்கு மணி கட்டிய யானை சங்கானை என வழங்கிற்று.

தொல்புரத்தின் குறிச்சிப் பெயர்களாக வீராவத்தை, வழக்கம்பரை, சத்தியக்காடு, காளாவிகாடு, பத்தானைக்கேணி, இந்திராயன் வயல், மன்னன்தோட்டம், நாகதோட்டம், சித்திராயன் குடியிருப்பு என்பன அமைந்துள்ளன. இக் குறிச்சிப் பெயர்களை ஆராயும்போது, இப்பகுதியில் நிலையான அரசும், நல்லாட்சியும் நிலவியமை தெரியவருகிறது.

போர்வீரர்கள் வாழ்ந்த இடம் வீராவத்தையாயிற்று. வழக்கு + அம் + பரை = வழக்கம்பரை. வழக்காடிய மன்று இருந்தவிடம் வழக்கம்பரை எனப்பெயர் பெற்றது. விசாரணை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டு, சத்தியம் கேட்கப்பட்ட இடம் சத்தியக்காடு எனவும், காவற்படையினர் வாழ்ந்த பகுதி (காலாற் படை +காடு) காலாவிகாடு எனவும் கொள்வது தவறாகாது. இங்கு பாணவெட்டிக்குளம் (பாணன் + வெட்டு + குளம்), பத்தானைக்கேணி (பத்து + யானை + கேணி) என்பனவும் இப் பகுதிக்கு, வரலாற்றுப்பழைமை கற்பிக்கின்றன. யாழ்பாடி முதன் முதலாக வெட்டுவித்த குளமே 'பாணன் குளம்' என்கிறார் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1933:11). தொல்புரத்தை நடுநிலை யாகக் கொண்டு அதனைச் சூழவுள்ள இடப்பெயர்களை நோக் கும்போது பண்டைநாளிலே தொல்புரத்திலே கோட்டையுடன் கூடிய அரசும், அரண்களும், அகநகர், புறநகர்களும் அமைந் திருந்தன என்ற உண்மை புலனாவதோடு, பண்டைய ஈழவர லாற்றைக் கட்டி எழுப்பவும் இச்சான்றுகள் துணையாகின்றன.

மாவிட்டபுரம் (வலி.வ.66.4)

காங்கேசன்துறைக்கு அண்மையில் மாவிட்டபுரம் அமைந் துள்ளது. மாவிட்டபுரம் என்பதற்குக் குதிரைமுகம் விடுபட்டநகர் எனப் பொருள் கூறுவர். மாருதப்பிரவீகவல்லி என்னும் சோழ அரசகுமாரியின் கதையோடு இவ்விடப்பெயர் இணைந்துள்ளது. இக் கதை, மரபுவழிக் கதையாக வழங்கி, வையாபாடல், கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை முதலிய வரலாற் றிலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளது. இவ்விடப்பெயரை விளங் கிக் கொள்ளும் வகையில் அமைந்த கதை ஒன்றின் சுருக்கம் தரப்படுகிறது:

"சோழ மண்டலாதிபானகிய திசையுக்கிரசிங்க சோழனின் புத்திரியாகிய மாருதப்பபுரவீகவல்லி தனக்குற்ற குன்ம நோயால் மிக வருந்தி, வைத்தியரின் ஔடதப் பிரயோகத்தா தில் ஆரோக்கியமடையாமை கண்டு, கீரிமலைச் சாரலில் ஓடும் நன்னீரருவியின் விசேடத்தைக் கேள்வியுள்றுத் தன் பரிவாரத்துடன் ஆங்கு சென்று பாளயமிட்டுப், பல நாட்களாய் வாசம் பண்ணி, அக்கீரிமலையில் வசித்த நகுலமுனிவரின் ஆசிபெற்று, அவ்விட மகிமைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு அச்சிற்றாற்றில் ஸ்நானஞ் செய்து வந்தனள். சில காலத்தால் அவளுடைய குன்மவலி நீங்கிக் குதிரை முகமும் மாறிற்று என்றும், அக் காரணத்தால் அக் குறிச்சிக்கு மாவிட்டபுரம் எனப்பெயர் வந்ததென்றும் பழங்கதையாய்ச் சொல்கின்றனர்."
(க. வேலுப்பிள்ளை:1918:8).

மாவிட்டபுரத்துக் கந்தசுவாமிகோயிலை இவ்வரசியே கட்டுவித்தாள் என்பது அக் கோயிற்பட்டயம் கூறுஞ் செய்தி யாகும். மேலும் இவ்வரசி, செவிலித்தாய், பணிப்பெண்கள், போர்வீரர் முதலியோருடன் வந்து தங்கியிருந்த இடம் 'குமாரத்திப் பள்ளம்' என வழங்குகிறது. 'வல்லிக்கிணற்றடி' என்ற ஓரிடமும் இங்குண்டு. இது முன்பு 'மாருதப்பிரவல்லிக் கிணற்றடி' என இருந்து, பின்பு மருவி 'வல்லிக்கிணற்றடி' ஆயிற்று என்கிறார் அவ்வூர் த. சண்முகசுந்தரம். கி.பி. 9ஆம் நூற்றாண்டினன் எனக் கருதப்படும் உக்கிரசிங்கன் என்னும் ஈழத்தமிழ் மன்னன் அழகிய தோற்றத்துடன் கூடியவளான மாருதப்பிரவல்லியை மாவிட்டபுரத் திற் கண்டு காதலுற்றுத் திருமணஞ் செய்துகொண்டான் என்பது மரபு (க. கணபதிப்பிள்ளை: சங்கிலி நாடகம் - முன்னுரை). இந்த உக்கிரசிங்கனே, தொண்டைமான் உப்பு வணிகம் செய்வதற்கு வாய்ப்பாகக் கால்வாய் வெட்டத் துணைநின்றவன் என யாழ்ப்பாண வைபவமாலை (பக்.21) செப்புகிறது. இவ்விடம் முன்பு 'கோயிற் கடவை' என வழங்கிற்று. மாருதப் பிரவல்லியே தனக்குக் குதிரை முகம் நீங்கின இடம் என்ற காரணத்தால் 'கோயிற்கடவை' என்னும் இடத்திற்கு மாவிட்டபுரம் எனப்பெயர் சூட்டினாள் (யாழ்ப்பாண வைபவமாலை பக்.19) என்ற செய்தியும் அறியப்படுகிறது. மகாவிட்டன்புரம் என்பதே > மாவிட்டபுரம் என வழங்கிற்று என்ற கருத்துமுண்டு. மகாவிட்டன் என்ற தளபதி மாருதப்பிரவல்லியோடு வந்து பின்னர்

மாவிட்டபுரத்திலேயே வசித்தான் எனக் கூறப்படுகிறது (ஆ. முத்துத்தம்பி:1933:5). ஆயினும், இப் பெயரை 'மஹாவிட்டபுர' என்ற சிங்களச் சொல் லின் திரிபென்று குமாரசுவாமி (1918.132) கூறுவது பொருந்து வதன்று.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு மேற்கே சிறிது தொலைவில் 'வளவர்கோன் பள்ளம்' என்ற ஓரிடமிருக்கிறது. கி.பி. 10ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்திலிருந்து மகிந்தன் ஆட்சி செய்த போது, 2ஆம் பராந்தகசோழன் இலங்கைமீது படையெடுத்து வர, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருபடைகளும் மோதின. அப்போது சோழனுடைய படைத்தளபதி இறந்தனன். அவன் இறந்த இடமே 'வளவர்கோன் பள்ளம்' எனப்படுகிறது. இவ்வாறாக மாவிட்டபுரத்துடன் சோழர் தொடர்பு கற்பிப்பதாக மாருதப்பிரவல்லி கதை, மகாவிட்டன்கதை, 2ஆம் பராந்தகன் படை எடுப்பு என்பன அமைதல் நோக்கத்தக்கது. மேலும், இவ்விடத்திற்கும், கர்நாடகத்திற்கும் தொடர்பு இருப்பதாக அறியப்படுகிறது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அண் மையில் 'கண்ணடியதெரு' என்னும் ஓரிடமுண்டு. கர்நாடக தேசத் தார் இங்கு வந்து குடியேறியபடியால் எழுந்த பெயரே ஈற்றில் 'கண்ணடியார்தெரு' என மருவி வழங்கலாயிற்று என்பர் (க. வேலுப்பிள்ளை 1918. 22).

மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயிலின் தெற்கே தச்ச கடவை, மேற்கே 'தச்சன்காடு', சூளாவத்தை (சோழவத்தை) முதலிய குறிச்சிப் பெயர்களும் வழங்குகின்றன. வீணியவரை என்ற குறிச்சிப் பெயரினையுடையதாக ஓர் அம்மன் கோயிலு முண்டு. இங்கு 'மத்தேசு பங்கு', இயவாத்தைவளவு' எனச் சில காணிப்பெயர்களும் வழக்கிலுள்ளன. இவை பிற்காலத்தில் கத்தோலிக்க மதம் பரவியபோது அதன் செல்வாக்கால் ஏற்பட்ட பெயர்களாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இப்பதி 'மாவல்லி புரம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டிருக்கிறது. கி.பி. 1824இல் ஆங்கிலேயர் நடாத்திய குடிசனத் தொகை மதிப்பீட்டின் படி மாவல்லிபுரத்தில் 767 மக்கள் வாழ்ந்ததாகத் தெரிவிக்கப் படும் குறிப்பும் நோக்கத்தக்கது.

வசந்தபுரம் (வலி.வ.63.7)

இவ்விடம் கீரிமலைப்பகுதியில் அமைந்துள்ளது. மாவிட்டபுரத்தில் குதிரை முகம் நீங்கப்பெற்ற மாருதப்பிரவீக வல்லி, நோயகன்று, புதுப்பொலிவுடன் கீரிமலைப் பகுதியில் இறைவழிபாடியற்றி வாழ்ந்து வரும்போது, கதிரைமலையிலிருந்து அரசாண்ட உக்கிரசிங்கன் என்ற தமிழ்மன்னன் அவளைத் திரு மணஞ் செய்த இடம் என்ற நிலையில் இவ்விடத்திற்கு வசந்தபுரம் என்ற காரணப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்ற ஊகத்திற்கு யாழ்ப்பாண வைபவமாலையிற் (பக்.21-22) கூறப்பட்டுள்ள செய்திகள் துணையாகின்றன.

வல்லிபுரம் (வடம.வ.கி.131.2)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகிழக்குக் கரையில் பருத் தித்துறை + ஆழியவளை சாலையில், பருத்தித்துறையிலிருந்து 3 1/2மைல் தொலையில் வல்லிபுரம் என்னும் பதி அமைந் துள்ளது. இங்கு பழைமைச் சிறப்புடைய விஷ்ணுகோயில் உள்ளது. இக் கோயில், முன்பு கடலோரமாகவே இருந்த தென்றும், பின்னர் கடல் பின்வாங்கி சுமார் 3மைல் தொலைவில் பின் சென்றுள்ளது என்றும் கூறப்படுகிறது. வல்லிபுரத்தின் தெற்கே வலிக்கண்டியும், தென் கிழக்கே அம்பன், குடத்தனை, குடாரப்பு, நாகர்கோயில், செம்பியன்பற்று முதலிய கிராமங் களும், வடகிழக்கே வராத்துப்பளையும், வடக்கு, மேற்குப் பக்கங் களில் புலோலி தெற்கும் எல்லைகளாக அமைந்துள்ளன. பருத் தித்துறையில் இருந்து சுமார் மூன்று கல் தொலைவில் கொடி காமம் சாலைக்கு மேற்காக வங்காள விரிகுடாக் கடல்வரை பரந்துபட்டு, நெய்தலும் மருதமும் பொருந்திய இயற்கை வளம் கொண்டதாக இவ்வூர் காட்சி தருகின்றது. வல்லிபுரக்குறிச்சி என்றும் இதற்குப் பெயருண்டு.

இலங்கையின் பண்டைய பண்பாட்டு, நாகரிக நிலை களைக் காட்டும் தொல்லியற் சான்றுகளைக் கொண்டுள்ள இடங்களில் வல்லிபுரமும் ஒன்றாகும். இதுவரை இங்கு அறியப் பட்டுள்ள தொல்பொருட் சான்றுகளில் பண்டைக்கால, மத்திய கால மட்கல ஓடுகள், செங்கட்டித் துண்டுகள், கூரைஓட்டுத் துண்டுகள், ஈமத்தாழி, விநாயகர்சிலை, பொற்சாசனம், பல்வேறு

காலங்களைச் சேர்ந்த நாணயங்கள், கட்டிட அழிபாடுகள் முதலியனவற்றைக் குறிப்பிடலாம். கி.மு. பத்தாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவிலே நிலவிய திராவிட நாகரிகத் தடயங்களிலே ஈமத்தாழியும் ஒன்றா கும். பண்டைய திராவிடர் இறந்தவர்களின் வெற்றுடல் அல்லது அதனை எரித்தபின் எஞ்சும் சாம்பல், எலும்புகள், அணிகலன்கள், இறந்தோர் பயன்படுத்திய கருவிகள் மற்றும் நெல் முதலான தானியங்கள் என்பவற்றைச் சேர்த்துப் பெரிய தாழிகளிலே அடக்கம் செய்தனர். வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட தாழி சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன், வல்லிபுரத்திலே திராவிட மக்கள் வாழ்ந்தமையைச் சான்றுபடுத்துகின்றது. ஆகவே திராவிட மக்களில் ஒரு பிரிவினரான தமிழர் பண்டைக் காலத்தில் இங்கு வாழ்ந்து வந்தனர் என்பதற்கு மேற்காட்டியவை சான்றுகளாகும்.

வல்லியதேவன் எனப்படும் தமிழ் அரசஅலுவலர் ஒருவர் ஆட்சி செய்த இடமாகையால் அவர் பெயரால் இவ்விடம் 'வல்லியன் புரம்' எனப் பெயர்பெற்றது என்பர் ஒரு சாரார். வலி + புர = வலிபுர (வலி = மணல் + புர = நகர்) என்ற சிங்களப் பெயரின் வழி வந்ததே வல்லிபுரம் என்பது சிலர் கருத்தாகும் (சுவாமி ஞானப்பிரகாசர்:1917 + 1918; Hursburough: 1916:191; J.P.Lewis: 1916+ 1917). வல்லி என்பது பூமிதேவி எனவும், பூமிதேவி இவ்விடத்தில் திருமாலைப் பூசித்தமையால் இப்பெயர் ஏற்பட்டது எனவும் கூறப்படுகிறது (ஈழமண்டலசதகம்:செய்.60). மேலும் வல்லிபுரம் என்பது இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற விஷ்ணு தலத்தின் பெயரென்பதால் அவ்வூரிலிருந்து இவ்விடத்திற்கு வந்த வைஷ்ணவர் தம் தாயக ஊர்ப்பெயரை இப்பதிக்கும் இட்டு வழங்கினர் என்பதே பொருத்தமானது.

வல்லிபுரம் என்ற தூய தமிழ்ப் பெயரைச் சிலர் சிங்களச் சொல் என மனங்கூசாமல் கூறியும் எழுதியும் வந்துள்ளனர். அவர்கள் அனைவரது கருத்தையும் மறுத்துரைத்து, அது தனித் தமிழ்ப் பெயர்ச்சொல் என்பதைத் தக்க சான்றுகளுடன் ஈண்டு நிறுவ வேண்டுதல் இன்றியமையாததாகின்றது. வல்லி + புரம் = வல்லிபுரம். வல் = அழகு, தூய்மை; வல் > வல்லி = இளம் பெண் (த.லெ.3529). வல் > வலிமை; வல் > வல்லு > வல்லுத்தரை (அகம். 377:8). வல் > வல்லியர் = மனவலி எய்தியோர் (அகம் 223:1). வல் > வல்லியோர் = வன்மையுடையோர் (அகம்: 316:12, 398:15). "வள்ளி என்னும்

கொடிப்பெயரிலிருந்து வல்லி என்ற சொல் உற்பத்தியாகி வட மொழியிற் புகுந்தது. வடமொழியில் கி.மு. 600ஆம் ஆண்டு தொடங்கி "ல் - ள்" என்னும் எழுத்துக்களின் நடுவண் யாதொரு வேறுபாடு தோன்றாமையினாலும், இரண்டையும் 'ல்' என எழுதி வடமொழியால் உச்சரித்ததினாலும் தமிழ் 'வள்ளி' வடமொழியில் 'வல்லி' ஆக மாறியதிற் சற்றேனும் வியப்பில்லை" என்கிறார் தாவீது அடிகள் (1970:9). 'வள்ளி' என்பது பழந்தமிழ்ச் சொல் என்பதைப் பின்வரும் இலக்கிய வழக்குகள் சான்றுபடுத்துகின்றன:

> 'வாடாவள்ளி' (குறுந்.- 216); 'முதிர்காய் வள்ளியங்காடு' (முல்லை:101); வள்ளி (தொல். பொருள்:88.1); "வண்டே இழையே வள்ளிப் பூவே'(தொல்.பொருள்:95.1);"வாடாவள்ளி வயவர் ஏத்த" (வள்ளிக்கூத்து) (தொல்.பொருள்:60.6); "வலந்த வள்ளி மான் ஓங்கு சாரல்" (அகம் 52:1); "வள்ளி நுண்ணிடை" (அகம் 286:2).

எனவே வல்லிபுரம் என்பது தமிழ்ச் சொல் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல் என்பது இலக்கிய, இலக்கண வழக்குகளால் நிறுவப்படுவதாயிற்று. மேலும் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஆனந்தவல்லிபுரம், கனகவல்லிபுரம், மருதவல்லிபுரம், வல்லிபுரம் என்று நான்கு இடங்களும் மற்றும் கோமளவல்லிபுரம், இராசவல்லிபுரம் முதலான இடப்பெயர்களும் இன்றும் வழக்கில் இருக்கின்றமை யாழ்ப்பாணத்து வல்லிபுரம் என்ற இடப்பெயர் தமிழ்நாட்டுத் தொடர்புடையது என்பதையும், இது தமிழ்ப்பெயர் என்பதையும் நிறுவப் போதுமான சான்றுகளாகும். இப் பெயர்களைக் கேள்விப்படாது தூயதமிழ்ச் சொல்லை 'வலிபுர' எனச் சிங்கள விளக்கம் கூறியோர் கருத்து வெற்றுரை எனத் தள்ளி வைப்போம்.

முன்னொருபோது வடமராட்சியிற் குடியேறிய வென்றி பாகு தேவன், சேற்கொடிதேவன், வல்லிபாகுதேவன் முதலிய குறுநில மன்னர் பரம்பரையைச் சேர்ந்த வல்லியதேவன் குடியேறிய பகுதியின் முதன்மையான இடமாய் இருந்த நிலம் இது. அவன் தன் பெயரை இவ்விடத்திற்கு இட்டனன் எனவும் கூறுவர். இது தொடர்பாக முத்துத் தம்பிப்பிள்ளை கூறும் கருத்தை நோக்குக:-

"The site has several historical references. That among those who were brought to settle in Jaffna were some from the north of Thondainadu. The place they settled down assumed the name of Vadamarachchi , meaning occufied by the Northern ers. That region, where Valliathevan was the Chief settler, be came known as vallipuram. They were Telugu people and were Vaishnavaties. So a temple for the worship of Sri vishnu got built at Vallipuram".

(A. Moothoothambypillai - Jaffna History :P. 3)

புரம் என்றால் கோவில் ஊர் எனப் பொருள்படும். வல்லியென்பதற்குக் கலைவாணி, பெண், பூமாதேவி என்றெல் லாம் பொருள் கொள்கிறது அகராதி. எனவே பூமாதேவி விஷ்ணுவை வழிபட்டு அருட்காட்சி பெற்ற இடம் (வல்லி + புரம்) வல்லிபுரம் ஆகும். வல்லிக்குப் பூமிதேவி எனப் பொருள் கூறி அத்தேவி மகாவிஷ்ணுவின் திருக்கோலத்தைக் கண்டு வழிபட்ட இடம் வல்லிபுரம் எனக் கூறுவர் ஈழமண்டலக் கதாசிரியர் குல சபாநாதன் (1956:16). இதைத் திருக்கேதீஸ்வர புராணமும் வருமாறு பாடுகிறது:

"முல்லையம் புறவ மாயோன் முன்பொரு மடந்தை வேண்டச்
சொல்லமர் குழவியென்னத் தோன்றியே யமர்ந்தாங் கன்பர்
எல்லவர் தமக்கும் வேண்டும் இன்பெலா மளிக்குந் தானம்
வல்லி பூசனைகொள் வல்லி புரமென வழங்கு மீண்டே."

'வல்லியம்' என்றது புலியைக் குறிக்கும் சொல். பழந் தமிழர் வரலாற்றில் புலியை அடையாளமாக வெற்றிக் கொடியில் அமைத்தவர்கள் சோழர்களாவர். ஈழத்தில் சோழப் பெருமன்னர் ஆட்சி நிலவியபோது வல்லியம்புரம் (புலிநகர்) என வழங்கிப் பின்னாளில் வல்லிபுரம் என மருவியிருக்கலாம். இவ்வூரின் தெற்கேயுள்ள செம்பியன்பற்று முதலான பல இடங்கள் சோழர் தொடர்பைச் சான்றுபடுத்துவனவாக விளங்குவதும் நோக்கத் தக்கது.

மேலும், வல்லியம் என்பது ஆயர்பாடியைக் குறிக்கும் என பிங்கலந்தை நிகண்டு கூறுகின்றது. வல்லி என்ற சொல் லுக்கு ஆயர்பாடி (கோகுலம்) என்ற கருத்து ஆனந்தவிகடன் அகராதியில் காணப்படுகிறது. புரம் என்பது ஒருசொல் பல

பொருள் என்ற வகையில் இதற்குக் கோயிலென்ற பொருளு முண்டு. எனவே 'வல்லிபுரக் கோயில்' என்பது ஆயர்பாடிக் கோயிலென்றும் பொருள்படும். இது தொடர்பாகப் பின்வரும் சூடாமணிப்பாடல் நோக்கற்பாலது:

அல்லிவெள் ளாம்பல் காயா வகவித மாகமுப்பேர்
அல்லிரா விருளே யென்ப வாகமார் புடலுமாமே
வில்லியே வட்டங் கீரை தேருருள் சின்வீடென்ப
வல்லி யாய்ப் பாடிவள்ளி வரைவோடு நிகளமாமே".

இப்பாடலிலே வரும் வல்லி என்னும் சொல் இடைச்சேரி, படர் கொடி, அளவு, காலவிலங்கு என்னும் பலபொருள் கூறும் ஒரு சொல்லாக வழங்குதல் காண்க. எனவே வல்லிபுரம் 'ஆயர் பாடிக் கோயில்', 'கோகுலம்' என்ற பொருளிலமைந்த ஊர் என்னும் கூற்று மிகப் பொருத்தமாகின்றது. வல்லிபுரத்தில் ஆயர் கள் மாயோனுக்குக் கோயில் அமைத்தனர் எனக் கொள்வதே ஏற்புடையதாகும். புன்னாலையில் கிடைத்துள்ள வரலாற்று உதய காலத்துக்குரிய கறுப்பு, சிவப்பு நிற மட்கலன்கள் மிகப்பழைய காலத்தில் வழிபாட்டுக்குரிய இடங்களாக புன்னாலை, வல்லிபுரம் ஆகிய இடங்கள் விளங்கின என்பதை எடுத்துக் காட்டுகின்றன. பிற்காலத்தில் தூது இலக்கியங்கள் இவ்வாலயங்களின் பெரு மையை எடுத்துக் கூறினாலும், இங்கு காணப்படும் தொல்லியற் சான்றுகள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திற்கு முன்பே இவ் விடங்கள் விஷ்ணு வழிபாட்டிலே நிலைத்திருந்ததை எடுத்தியம் புகின்றன. இவ்விடப் பெயர் மிகப் பழைமை வாய்ந்தது என் பதைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் (1985:237-238) கருத்தும் வருமாறு சான்றுபடுத்துகின்றது:-

"வல்லிபுரப் பகுதியிற் பல இடங்களிற் குவிந்து கிடக்கின்ற பூர்வகாலக் கல்லோடுகள் கீச்சுக் கிட்டம் ஆகியனவும், அங்கிருந்து கரை மார்க்கமாகப் போனபெரும் வீதியின் அடையாளங்களும் அவ்வூர் ஒரு காலத்திற் பெருநகராக விளங்கியிருக்க வேண்டும் என்பதைக் காட்டும். ஆரியச் சக்கரவர்த்திகள் பெருங்கடற்படையுடையோராய் பிரசித்தி பெற் றிருந்தமையினால் மரக்கலத்தில் ஆழியிற் சென்று சுலபமாய்த் திரும்பக்கூடிய துறைமுகமும் இருந்திருக்க வேண்டும். வல்லி புரத்துறை இன்று கப்பல்துறை என்றே வழங்குகின்றது."

மேலும், 'லவல்லி' என்னும் மங்கை நாகசாபம் நீங்கும் பொருட்டுப் பிறந்த இடம் வல்லிபுரம் எனத் தட்சிணகைலாய மான்மியம் குறிப்பிடுகிறது. எனவே லவல்லியின் பெயராலே வல்லிபுரம் என்ற வழக்காறு வந்ததென்னும் கூற்றும் ஆராயத்தக்க தாம். இதனை விளக்குவதாகப் பின்வரும் கதை வழங்குகிறது:

> 'ஸ்கந்தபுராணத்தின் ஒரு சிறு பகுதியாகிய தட்சிண கைலாச மகாத்மியம் என்னும் வடமொழி நூலிலே வல்லிபுரச் சிறப்புப் பற்றி ஒரு அத்தியாயம் உள்ளது அதன்படி முன்னொரு காலத்தில் விஷ்ணு மீன் வடிவம் கொண்டு கடலில் திரிந்தார். வலைஞர் அம்மீனைப் பிடிக்க முயன்றனர். அப்போது அம்மீன் குதித்து கரையில் இருந்த லவல்லி என்ற கன்னிகையின் மடிமீது விழுந்தது. அப்போது திருமால் மீன் வடிவம் நீங்கிக் குழந்தை வடிவமானார். நாகசாபம் பெற்றிருந்த லவல்லி இதனால் சாபதோசம் நீங்கப் பெற்று, புத்திரப்பேறு பெற்றாள். லவல்லி என்பவள் வாழ்ந்த இடமே பிற்காலத்தில் வல்லி புரமாயிற்று என்பர். (ஶ்ரீவல்லிபுர ஆழ்வார்சுவாமி ஆலய திருக்குட முழுக்கு மலர்:1977:3).

வல்லிபுரத்தில் விஷ்ணு கோயில் எழுந்த பின்பே இக் கதை ஆக்கம் பெற்றிருக்க வேண்டும். இப் புராணம் இடைக் காலத்தைச் சேர்ந்தது. ஆனால் ஈழத்தின் காவல் தெய்வமான திருமால் ஆலயம் மிகப் பழமை வாய்ந்ததாகும் (வி.சிவ சாமி:1975). முதலியார் செ. இராசநாயகம் (1926:54) மகாவம் சத்தைச் சான்று காட்டி விஜயனும், தோழர்களும் வந்து இறங்கிய இடங்களில் எருமைமுல்லைத்தீவு ஒன்றெனவும், வல்லிபுரத்திற்கு மணலூர், எருமைமுல்லைத்தீவு என்ற பெயர்கள் முன்பு வழங்கிற் றெனவுங் காட்டி, விஜயனது இரண்டாவது குழுவினர் இங்கு 'சிங்கபுர' என்ற ஒரு நகரையும் நிறுவினர் எனவும், அதுவே பிற்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய யாழ்ப்பாண அரசின் தலை நகரான சிங்கைநகர் ஆக விளங்கிற்று எனவும் கூறுவர். இக் கருத்தை நிறுவுதற்கு கி.பி.14ஆம் நூற்றாண்டில் ஆரியச் சர்க்கர வர்த்திகளில் ஒருவன் கேகாலை மாவட்டத்திலுள்ள கோட்டேகம என்னுமிடத்தில் பொறித்த போர் வாகைசுட்டும் கல்வெட்டுச் செய்யுளைக் காட்டுவர். அக் கல்வெட்டில் வரும் 'பொங்கொலி நீர்ச் சிங்கைநகர்' என்ற தொடரினைச் சான்றாகக் கொண்டு, சிங்கைநகரே வல்லிபுரம் என்றும், அதுவே யாழ்ப்பாணத் தமிழ் அரசின் முதல் தலைநகர் என்றும் இராசநாயகம் குறிப்பிட்டுள் ளார்.

வரலாற்றுப் பழைமை மிக்க வல்லிபுரத்தில் இன்னும் முழுமையாக அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படாதநிலையில், அங்கு மேற்பரப்பிற் காணப்பட்ட அழிபாடுகள் பற்றி ஜே.பி. லூயிஸ் என்பவர் முதன் முதலாகப் பின்வரும் கருத்தை வெளி யிட்டிருந்தார்:

> 'மரபுகளின்படி வல்லிபுரம் ஒரு நகர அமைப்பினைக் கொண்டி ருந்தது. இப்பொழுது அவை மணற் குன்றுகளினால் மறைக்கப் பட்டுவிட்டன. நிச்சயமாக வல்லிபுரத்தில் சில பகுதிகளில் நிலத்தின் மேற்பரப்புத் தோற்றப்பாடுகள் கட்டிடங்கள் இருந் தன என்பதற்குச் சான்றாகின்றன' (J.P.Lewis:1916:94-96).

இங்கு, 1936இல் வரலாற்றுப் பெறுமதி மிக்க பொற்றகடு ஒன்று கிடைத்துள்ளது. கி.பி.2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி எழுத்தில் எழுதப்பட்ட இப்பொற்றகடு ஆதிச்சிங்களத் திலுள்ளது என்றும், இது கி.பி.130-170இல் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த வசபன் காலத்தைச் சேர்ந்தது என்றும், அவ்வரசன் காலத்தில் பியகுக திஸ்ஸ என்பவன் 'படகர அதன' என்ற இடத்தில் ஒரு விகாரையைக் கட்டினான் என்பதும் இப் பொற்ற கடு கூறும் செய்திகள் என்பர் பேராசிரியர் எஸ். பரணவிதான (1940:229-237). இப் பொன்னேட்டின் வாசகம் வருமாறு:

> "ஸித்த மஹாரஜ வஹயஹ ரஜெஹி அமெதெ
> இஸிகிரய நகதிவ புஜமெநி
> படகர அத நெ பியகுகதிஸ
> விஹர கரிதெ."

இப் பொன்னேட்டில் வரும் 'படகரஅதன' என்பதே பண்டை நாளில் வல்லிபுரத்தைக் குறிக்கும் இடப்பெயராக இருந்திருக்க வேண்டும் என்ற பரணவிதானாவின் கருத்தை செ. குணசிங்கம் (1977) தக்க காரணங்காட்டி மறுத்துள்ளார். பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை (1981:61) 'படகர' என எழுதப் பட்டுள்ள பொன்னேட்டு வாசகம், 'வடகரை' என்பதையே குறிக் கும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.

வல்லிபுர ஆலயத்தின் நேர்வடக்கே 50யார் தொலைவில் ஒரு புத்தர்சிலை அகழ்ந்தெடுக்கப்பட்டது. அச்சிலை சிறிது காலத்தின் பின்பு 1906இல் ஆளுநர் சேர்.ஹென்றி பிளாக்கினால்

தாய்லாந்து மன்னருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. அண்மை யில் இடைக்காலத்தைச் சேர்ந்த சுண்ணக் கல்லினாலான விநாய கர் சிற்பம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1972இல் யாழ்ப் பாணத் தொல்லியற் கழகம் இங்கு நடாத்திய ஆய்வில் தாழி ஒன்றை வெளிப்படுத்தியுள்ளது. இப் பகுதியில் முழுமையாக அகழ்வாராய்ச்சி நடாத்தப்படும்போது பண்டைச் சிங்கைநகர் அரசு பற்றிய மேலும் பல வரலாற்றுண்மைகளை அறியக் கூடிய வாய்ப்புகள் ஏற்படலாம்.

வல்லிபுரமும் கதைமரபும்

(அ) ஸ்கந்தபுராண தட்சிணகைலாசமான்மியத்து வல்லிபுர அத்தியாயம் பின்வருமாறு கதை கூறுகின்றது:

> 'இரணியன் தேவர்களை வதைத்து அவர்களது கங்கணங் களைக் கடலில் எறிய, விஷ்ணு மீனுருவாகிக் கடலில் சென்று, அவற்றை மீட்டார். பின்பு அந்த மீன் வல்லிபுரத்து மீனவரின் வலையிலகப்பட்டு, கரைக்குக்கொண்டுவரப்பட்டபோது, அக் கடற்கரையில் தவம் செய்து கொண்டிருந்த வல்லி என்ப வளுடைய மடியில் அது துள்ளிவிழ, துளசி மாலை அணிந்த குழந்தையாக அது மாறிற்று. அக் குழந்தையை அங்கு கூடிய யாவரும் பக்திப் பரவசத்துடன் வணங்கினர். பின்பு அக் குழந்தை மீனுருப்பெற்று மீண்டும் கடலிற் பாய்ந்தது. மக்களது பக்திப்பரவச வேண்டு கோட்கிணங்கி திருமால் மீண்டும் கிழப்பிராமண வடிவத்துடன், கையில் சக்கரந் தரித்து வந்து, அங்கு கூடியிருந்தோரிடம் கொடுத்து "இச்சக்கரா யுதத்தை வைத்துப் பூசியுங்கள்" என்று கூறி மறைந்தார். இச் சக்கராயுதத்தை வைத்துப் பிரதிட்டை செய்யப்பட்ட இடமே வல்லிபுர ஆலயமாகும்'
>
> (ஸ்ரீலங்கா:ஜனவரி,1956:29).

(ஆ) நாட்டார்கதை:

> 'வங்காள விரிகுடாக்கடலில் பரதவர் மீன்பிடிக்கும்போது, அங்கே குழந்தை ஒன்று நடுக்கடலில் திருவிளையாடல் புரியக் கண்டனர். அவர்களால் அக் குழந்தையைப் பிடிக்க முடிய வில்லை. பரதவர் தலைவனின் கனவில் ஒருவர் வந்து, 'வல்லி நாச்சன்' எனப்படும் வயது முதிர்ந்த மானுடசிரோன்மணியைக் கடற்கரைக்கு அழைத்து வரும்படி திருவாய் மலர்ந்தார். அவ் வாறே அப் பெண்ணைக் கடற்கரைக்கு அழைத்தேகினர். "கன்று கட்டிப் பால் கறந்தேனேயன்றி வேறொன்றையும் அறி யேன். கடலிற் பள்ளிகொள்ளும் பரந்தாமனே வருக" என்று கூறித்தம் முன்தானையை நீட்ட குழந்தை தவழ்ந்து வந்தது. யாவரும் ஆனந்த பரவசத்தால் ஆடிப்பாடினர். பின்பு குழந்தை யையும் வல்லிநாச்சனையும் பல்லக்கில் அவள் வீட்டுக்கு மணல் வழியால் தூக்கிவரும்போது, களைப்புற்று, கொன்றை மரத்தடி ஒன்றில் மணற்பரப்பில் இறக்கிக் களைபோக்கிய பின் மீண்டும் தூக்கமுற்பட்ட போது, முடியாமை கண்டு, அவ்விடத்திலே கோயில் கட்டி வழிபடலாயினர். அந்த வல்லிநாச்சனின் வழித்தோன்றல்களே இன்றும் அவ் ஆலய முகாமையை நடாத்திவருகின்றனர்
>
> (ஸ்ரீலங்கா. ஜனவரி 1956 பக்:29).

வல்லிபுரம் தொடர்பான நாட்டார் பாடல்கள் சில வழக் கிற் காணப்படுவதால் அவற்றுட் சில இங்கே தரப்படுகின்றன:

வல்லிபுரம் கண்டாயோ வாரணம் கொண்டாயோ
வல்லிபுரம் சென்றாயோ வாசிகள் பெற்றாயோ.

வல்லிபுர ஆழ்வாரே வனசமுறைபுண்ணியரே
கல்வளையில் ஆழ்வாரே கடலில் உறைபுண்ணியரே.
மல்விலில் ஆழ்வாரே மலரில் உறைபுண்ணியரே
புன்னாலை ஆழ்வாரே பூவிலுறை புண்ணியரே.
(சிங்கைஆழியான்:1983:74)

இடப்பெயர் ஆய்வாளர் கரு. நாகராசன் 'வல்லிபுரம்' என்ற இடப்பெயர் பற்றிக் கூறும் போது, கடலையடுத்தவொரு இடத்திற் குடியேறி ஆங்கு தாம் வழிபடும் கடவுட்கு ஓர் ஆலயம் அமைத்து வாழும் வைஷ்ணவ மாந்தர் அவ்விடத்திற்கு வல்லி புரமென்னும் திருநாமத்தை இட்டு வழங்குதலும் கூடும். செங்கற் பட்டிலே கடலோரத்திலிருந்து 20மைல் தூரத்திலுள்ள விஷ்ணு தலம் வல்லிபுரம் என்ற பெயரிலுள்ளமையும் ஈண்டு நோக்கத் தக்கது என்கிறார். கரிகாற் பெருவளவனால் அருவாநாடு 24 தோட்டங்களாகவும், 79 நாடுகளாகவும் வகுக்கப்பட்டபோது, வல்லிபுரம் என்பது அந்நாடுகளில் ஒன்றிற்குரிய பெயரா

யிருந்ததும் இங்கு நோக்கத்தக்கது. இத்தகைய கோயிற் பெயர் கள் பற்றி கரு. நாகராசன் (1985:98) கூறும் கருத்து ஈண்டுப் பொருத்தமாதல் காண்க:

> “இறைவன் பெயர்களிலுங்கூட பெரும்பாலான வைணவ சமயத்து இறைவன், இறைவியர் பெயர்களாகவே அமைந் துள்ளமையும் உணர முடிகிறது. தெலுங்குமொழி பேசும் இனத்தவர்கள் பெரும்பாலும் வைணவ சமயத்தினராகவே உள்ளனர். அம்மொழி பேசும் மக்கள் இம் மாவட்டத்திற் பெற்றிருந்த செல்வாக்கினையே வைணவ சமயக் கடவுளரின் பெயர்கள் உணர்த்துகின்றன.”

எனவே வல்லிபுரத்திலும் வைஷ்ணவ வழிபாட்டினரின் செல்வாக்கே மேலோங்கியிருந்தது என்பது புலனாகிறது. வல்லி புரத்தில் ஆழ்வார்சுவாமிகோயில், குருக்கட்டுச்சித்தி விநாயகர் கோயில், தான் தோன்றீஸ்பரன்கோயில் முதலான பல கோயில் கள் அமைந்துள்ளன. இங்கு கொல்லனத்தாய், குசவனத்தாய், செம்பாட்டன்புலம், பள்ளன் பரவை, எழுவாக்கை, குமாராங் கியான் முதலான காணிப்பெயர்களும் வழக்கிலுள்ளன. தமிழரசர் காலத்துச் சிங்கைநகர் வல்லிபுரமா என்பது ஆய்வுக்குரியதாகவே இருக்கிறது. இவை தொடர்பான குறிப்புக்களை நூலின் 46-50 ஆம் பக்கங்களிற் காண்க.

ஸ்கந்தபுரம் (கர:161.3)

இவ்விடப்பெயர் மிகவும் பழைமை வாய்ந்தது எனவும், பழைய காலத்திலே இப்பகுதியை ஸ்கந்தவர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான் எனவும், அவன் பெயராலேயே இவ்விடம் ஸ்கந்த புரம் எனப் பெயர் பெற்றதெனவும் இவ்வூர் மக்களிற் பெரும்பாலானோர் நம்புகின்றனர் (தகவல்: கே. சிவநேசராசா). கரச்சிப் பகுதியிலுள்ள கொக்காவில்காடு அழிக்கப்பட்டு காணி வளர்ச்சித் திட்டம் 1960இல் தொடங்கப்பட்டது. கிளிநொச்சிப் பகுதியிற் சமூகத் தொண்டராக அப்போது விளங்கிய ஸ்ரீகாந்தா என்பவரின் பெருமுயற்சியின் பேறாக இக் குடியேற்றத் திட்டம் முழுமை பெற்றது. அன்னாரது பணியை நினைவுகூறும் வகையில் அவரது பெயரால் இத்திட்டம் ஸ்கந்தபுரம் எனப் பெயர் பெறுவ தாயிற்று என விளக்கமும் கூறப்படுகிறது.

‘வேலி’ ஈற்று இடப்பெயர்கள்

வேலி என்பது = முள், கழி முதலியவற்றாலான அரண், மதில், காவல், நிலம், வயல், ஒருநிலஅளவு (6.74 ஏக்கர்), பசுக் கொட்டில், காற்று எனப்பொருள்படும். வேலி பழந்தமிழ்ச் சொல் என்பதும், நிலங்களுக்கு எல்லையாக வேலி அமைக்கும் மரபு பண்டைநாள் முதலாக இருந்துள்ளது என்பதும் (“வேரல வேலி வேர்க்கோட்பலவு” குறுந்தொகை:8) தமிழர் பண்பாட்டில் அறியப்படும் செய்திகளாகும். முன்னர் எல்லையைச் சுட்டிய வேலி என்ற சொல், சோழர் காலத்தில் நில அளவைப் பெய ராகப் பொருள் வளர்ச்சி பெற்றுள்ளது. வேலி என்பது சோழர் காலத்து நில அளவுப் பெயர்களில் ஒன்று என்பதைப் பின்வரும் கல்வெட்டுச் சான்றுபடுத்துகின்றது.

> “உடையார் ஸ்ரீ ராஜராஜச்சுரம்
> உடையார்க்கு நிவந்தக் காரராக
> நிவந்தமாய் பங்குசெய்தபடி பங்குவழி
> ஒன்றினால் நிலன்வேலி யினால். “
> (நாகசாமி (பதிப்பு) தஞ்சைப்பெருவுடையார்
> கோயில் கல்வெட்டு:1:54-55)

ஊராட்சி முறையில் ஊர்களுக்கு எல்லை வகுக்கும் போது இயற்கை, செயற்கை நிலைகளில் “வேலி” எனப் பெயர் வைக்கப்பட்டது. அத்துடன், “நிவந்தம்” அல்லது “இறையிலி” நிலம் அரசனால் வழங்கப்பட்ட போது, ‘வேலி’ என்ற அடிப் படையிலும் நிலம் அளந்து கொடுக்கப்பட்டமையும் நோக்கற் பாலது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ‘வேலி’ ஈற்றுப்பெயர்களைக் கொண்டனவாக அச்சுவேலி, கட்டை வேலி, சங்குவேலி, திரு நெல்வேலி, நீர்வேலி முதலிய ஏழிடங்களுள.

அச்சுவேலி (வலி.கி.76.1-2)

அச்சி என்பது = தேயம், அகத்திமரம், அச்சித்தினை எனவும்; அச்சு என்பது = அடையாளம், தேரச்சு, முத்திரை எனவும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி பொருள் கூறுகின்றது. மேலும் அச்சுக் கட்டு என்பதற்கு நெல் பயிரிடத்தக்க நிலம்

என்ற பொருளும் கூறப்பட்டுள்ளமை காண்க. Achchu என்ற போர்த்துக்கேயச் சொல் Eixo-axle-tree என்ற மரப்பெயரைக் குறிப்பதாகும். அச்சு என்பது வடமொழி Aksha என்ற சொல்லின் திரிபென்று கதிரவேற்பிள்ளையின் தமிழ் அகராதி கூறுகிறது. சேரநாட்டிலுள்ள அச்சன்குளம், அச்சன் துறை, அச்சன் பேட்டை முதலிய இடப்பெயர்களுடன் அச்சுவேலியை ஒப்பிடும் போது அச்சன் என்பதே அச்சு எனத் திரிந்து வந்துள்ளமையை அறிந்து கொள்ளலாம். அப்பன் > அப்பு என மருவி வழங்குதல் வழக்கு. அதுபோன்றே (அச்சன் > அச்சு என மருவி,) அச்சன் வேலி > அச்சுவேலி ஆயிற்று எனலாம். அச்சுவேலி என்ற பெயர் சேரநாட்டுத் தொடர்பைக் காட்டுவதாக அமைகிறது.

அச்சுவேலி வடக்கு, தெற்கு என இரு பகுதிகளாகவும், பத்தமேனி, இடைக்காடு, வளலாய் என்ற அயற் பகுதிகளையும் கொண்டமைந்துள்ளது. இங்கு பிள்ளையாரடி, தச்சன்தோட்டம், மடத்தடி, நாவற்காடு, தோப்பு, பயித்தோலை, கலட்டி, தென்மூலை, கொட்டடி முதலிய குறிச்சிப் பெயர்களும், கந்தசாமிகோயில், காளி கோயில், பிள்ளையார்கோயில், முத்துமாரிகோயில், சிவசக்தி கோயில், மீனாட்சியம்மன்கோயில் என்பனவும் பெரியகோயில், அந்தோனியார்தேவாலயம் என்பவும் அமைந்துள்ளன.

கட்டைவேலி (வலி.தெ.மே.132.1)

இது மருத நிலத்தூராகும். இங்கு கட்டைவேலி ஊராட்சி மன்றம் அமைந்துள்ளது. இங்கேயிருந்த பழைமை வாய்ந்த வேத வன நாதர்கோயில் அழிந்து, அதன் அடித்தளம் மட்டும் காணப்படுகிறது. இது பற்றிய ஆய்வுகள் வெளிவரும்போது இவ்விடத்தின் வரலாற்றுச் செய்திகள் விளக்கம் பெறலாம். நெடுஞ்சாலைகளின் அளவைக் குறிக்கும் மைல்கற்களைக் ‘கட்டை’ என்பது மரபு. அன்றியும் காடழிக்கப்பட்ட இடங்களி லுள்ள அடிமரத்தையும் ‘கட்டை’ என்ப. இவ்விரு பின்னணியிலும் இவ்விடப் பெயரின் தோற்றம் பற்றி நோக்கலாம். பிரித்தானியரது ஆட்சிக்காலத்தில் இவ்வூரில் 10584 குடிகள் இருந்ததாகவும் மேல்மாடிக் கட்டிடமுடைய தேவாலயமும், 450 மாணவர் பயிலத் தக்க பாடசாலையும் அமைந்திருத்திருந்ததாகவும் கூறப்படுகிறது (சைமன் காசிச்செட்டி 1834:138).

சங்குவேலி (வலி.தெ.56.5)

இதனைச் சங்கு + வேலி எனவும், சங்கம் + வேலி எனவும், சங்கத்தார் + வேலி எனவும் பிரித்துப் பொருள் கூறப் படுகிறது. இது உடுவில் பகுதியில் அமைந்துள்ள ஓர் ஊர் ஆகும். சிங்கை நகர் அரசின் சிங்கைஆரியச்சக்கரவர்த்தி மரபிலே தோன்றிய 5ஆவது மன்னன் வரோதய சிங்கையாரியன் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இவன் காலத்தில (கி.பி.1302-1325) நல்லூரிலே தமிழ்ச் சங்கம் அமைக்கபட்டது. 3ஆம் செகராசசேகரன் என்ற பட்டப்பெயருடன் ஆட்சி மேற் கொண்ட இம்மன்னன் “தமிழை வளர்க்கும் பெருவிருப்புடை யோனாய், தன் நாட்டிலிருந்தும் தென்னியந்தியாவிலிருந்தும் தமிழ்ப் புலவர்களையும் பண்டிதர்களையும் வரவழைத்துக் கழக மொன்றமைத்து, அவர்களாற் புதிய நூல்களை ஆக்குவித்தான். அவன் அமைத்த கழகம் பின்வந்த அரசர்களாலும் பேணப்பட்டு வந்தது. இவ்வரசன் ஓர் ஊரையே புலவர்களுக்கு அன்பளிப்புச் செய்தான். அதுவே இப்போது சங்குவேலி (சங்கம் + வேலி = சங்கத்தாருக்குரிய நிலம்) என வழங்கப்படுகிறது (இராச நாயகம்:1926:62). இது குறித்துப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறும் கருத்தும் ஈண்டு நோக்கத்தக்கது:

> “யாழ்ப்பாண வைபவமாலை இச் சங்கம் பற்றியோ பிற் பற்றியோ கூறாது விடினும் பின் வந்த வரலாற்றாசிரியர் செகராசசேகரம், செகராசசேகரமாலை, கைலாயமாலை போன்ற நூல்களில் வரும் செய்திகளை மனங்கொண்டு புனைந்துரையாகவோ, அல்லது வாய்மொழி மரபை மனதிற் கொண்டோ இக்கருத்தினை உருவாக்கியிருக்க வேண்டும். யாழ்ப்பாண வரலாற்றை ஆராய்ந்த ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, முதலியார் செ. இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகி யோரது நூல்களின் பின்னணியிலே இரு தமிழ்சங்கங்கள் பற்றிய செய்திகள் வருகின்றன”. (“யாழ்ப்பாணத்து அரசர் காலத்துத் தமிழ்ப்பணிகளும் தமிழ்ச் சங்கமும்”. 5ஆம் உலகத் தமிழ் மாநாடு - கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரை: 1981: 354)

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்துத் தமிழ் இடப் பெயர் களுக்குச் சிங்கள மூலம் கற்பிக்கும் வ. குமாரசுவாமி (1917:3) சங்குவேலி பற்றிக் கூறும்போது,

"முன்னூற் கண்ணே காணப்படாத இச் சங்க வரலாறும், சங்கத்துக்கு மானியமாக வழங்கப்பட்ட வேலி விளை நிலங்களின் வரலாறும் மனோராச்சியவாயிலான் எய்தியவெனவே எண்ணத்தகும். சங்கு என்பதைச் 'சங்கம்' என்பதன் திரிபென்னாது வழக்குச் சொல்லெனின் வரும் இழக்கு என்ன"

என முரண்பட்ட கருத்துக் கூறுவதும் காண்க. செகராச சேகரின் அரசசபைப் புலவர்களில் மருத்துவ, சோதிட வல்லுநர்கள், தமிழ்ச் சான்றோர்கள் முதலியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றனர். அன்னாரது திறங்கண்டு அரசன் பல்வகையிற் பரிசளித்திருக்கின்றான் என்பதை "மன்னர் மன்னு செகராச சேகரன் மணவை" என வரும் செகராசசேகரமாலைப் பாடல் சான்றுபடுத்துகிறது. எனவே வரலாற்றுச் சான்றுகளின் சர்ச்சைக் குரிய சில பகுதிகள், இடப்பெயர் ஆய்வின் மூலம் தெளிவடையக் கூடிய நிலையினை இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

சங்குவேலியைப் போன்றே 'சங்கத்தார்வயல்' என்ற இடமும் சங்கம், புலவர், பரிசு – மானியம் என்ற அடிப்படையிற் பெயர் பெற்றதாக அமைதலும் காண்க. சங்குவேலி, சங்கானை, சங்கரத்தை, சங்குப்பிட்டி ஆகிய இடப்பெயர்களில் சங்கு முதன்மை பெற்றிருத்தலும் நோக்கற்பாலது. இங்கு 'செக்காலை' (செக்கு + ஆலை) என்ற குறிச்சிப் பெயரும் வழக்கிலுள்ளது.

திருநெல்வேலி (நல் - 34)

யாழ்ப்பாண நகருக்குக் கிழக்கே இருமைல் தொலைவில் திருநெல்வேலி அமைந்துள்ளது. இதன் அயற் பதிகளாக கொக்குவில், கோண்டாவில், நல்லூர் ஆகியன காணப்படுகின்றன. நல்லூர் உதவிஅரசஅதிபர் பிரிவில் இவ்வூர் இடம் பெற்றுள்ளது. திரு+ நெல் +வேலி = திருநெல்வேலி. தமிழகத்திலுள்ள திருநெல்வேலி என்ற இடத்திலிருந்து வந்த மக்கள் இங்கு குடியேறியபோது இப்பெயரை இட்டு வழங்கினர் என்பது மரபு. திருநெல்வேலியின் கிழக்கே குளமும் வயலும் காணப்படுகின்றன. தமிழகத்துத் திருநெல்வேலிச் சூழல் போன்றே இங்கும் புவி அமைப்பும், வளம் செறிந்த காணிகளும் காணப்படுதலால் ஒப்புமை நோக்கியும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். கலாசாலை வீதி, ஆடியபாதம்வீதி, பலாலி வீதி என்பன இங்குள்ள முதன்மையான தெருப் பெயர்களாகும்.

சேர்.பொன். இராமநாதன் அவர்களால் இங்கு தொடங்கி நடாத்தப்பட்ட பரமேஸ்வராக்கல்லூரி அரசினால் 1974இல் பொறுப்பேற்கப்பட்டு, 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்' ஆக மாற்றப்பட்டுள்ளது. வட இலங்கையில் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் அமைந்திருத்தல் இவ்வூருக்குத் தனிப்பெருமையாகும். மட்டுவில் பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் இவ்வூரில் வாழ்ந்து இலக்கியத் தொண்டு புரிந்தவராவார். திருநெல்வேலி கல்விச்சாலைகளும் கல்வி மான்களும் செறிந்த இடமாகும். நாளங்காடி எனக் கூறத்தக்க பெருஞ் சந்தையும் இங்குள்ளது. ஊரின் வடபால் அரச பாற்பண்ணை, விவசாயப் பயிற்சி நிலையம் என்பனவும் அமைந்துள்ளன. கிழக்குப் பகுதியில் மரக்கறித்தோட்டங்களும், பனந்தோப்புக்களும் காணப்படுகின்றன. இங்கு பல கோயில்கள் உள்ளன. அவற்றில் சிவன் கோயிலும், அம்மன்கோயிலும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. இவ்விரு கோயில்களும் முறையே "வயல்வெளிச் சிவன்கோயில்", "வயல்வெளி அம்மன்கோயில்" என்று அழைக்கப்படுதல் திருநெல்வேலியிற் பண்டைநாளில் இங்கு வயல்வெளிகள் செறிந்து காணப்பட்டமையை விளக்குகின்றது.

திருநெல்வேலியில் வாழ்ந்த ஞானப்பிரகாசமுனிவர், போர்த்துக்கேயர் மேற்கொண்ட பசுவதை நடவடிக்கைகளை எதிர்த்தவர். இதனால் அவர் சிதம்பரம் சென்று வாழநேரிட்டது. அங்கு ஞானாசிரியனாகத் திகழ்ந்து வடமொழியிலும் தமிழிலும் ஒன்பது நூல்கள் இயற்றினார். அவரியற்றிய 129 வடமொழிச் சுலோகங்கள் "Sivayoga Ratna Denana Prakasa" என்ற தலைப்பில் பிரஞ்சு மொழியில் 1976இல் வெளிவந்துள்ளன. முனிவர் அவர்களின் பெயரால் சிதம்பரத்தில் 'ஞானப்பிரகாசர் குளம்', 'ஞானப்பிரகாசர் மடம்' என்பன இடம் பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கது.

நீர்வேலி (வலி.சி.82.1)

இவ்வூரின் கிழக்கெல்லையிலே தொண்டைமானாற்றையும் செம்மணியையும் இணைக்கும் ஆற்றுப்படுக்கை காணப்படுவது நீர்வேலி என்ற பெயர் ஏற்படக் காரணமாயிற்று. இங்கு

'வாய்க்கால்தரவை' என்ற இடமும் 'வாய்க்கால்தரவை ஆலயமும்' அமைந்துள்ளமை பண்டை நாளில் நீர்நிலையால் இவ்விடம் பெயர் பெற்றுள்ளது என்பதை மேலுஞ் சான்றுபடுத்துகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கே பருத்தித்துறைக்குச் செல்லும் சாலையில் 6மைல் தொலைவில் இவ்வூர் அமைந் துள்ளது. இங்குள்ள அரசகேசரிப்பிள்ளையார் கோயில் சிறப் பாகக் குறிப்பிடத்தக்கது. வடமொழியிலிருந்து இரகுவம்சத்தைத் தமிழில் யாத்த சிங்கைப்பரராசசேகரனின் (கி.பி.1478-1519) உறவினரான அரசகேசரி என்பவரின் நினைவாக இக்கோயில் கட்டப்பட்டுள்ளது.

இயல் எட்டு

தெய்வம், மானுடம், விலங்கு, பறவை, மரம், செடிகள் சார்ந்த இடப்பெயர்கள்

தமிழர் தமது குழந்தைகளுக்கோ அல்லது தாம் வாழும் இல்லத் திற்கோ அன்றி ஓர் இடத்திற்கோ பெயர் சூட்டும்போது தெய் வத்தை மறக்காத எண்ணமுடையோராக வாழ்ந்து வந்துள்ளனர். இன்றைய நவீன நாகரிகப்போக்கு அத்தகு நம்பிக்கையையும் நடைமுறைகளையும் தளர்த்தியுள்ளது என்றே கூற வேண்டும். ஈழத்தில் பண்டைப் பெயர்களான நாகர்கோயில், நாகதீபம், வல்லிபுரம், பொன்னாலை, கந்தரோடை, கதிரமலை, மாவிட்ட புரம், மாமாங்கம், திருக்கோவில் முதலியன வழிபாட்டுடன் தொடர்புடையனவாக இருத்தல் நோக்கத்தக்கது. சங்க இலக்கி யங்களில் இடப்பெயர் வரிசையில் இத்தகு பெயர்கள் குறை வாகவே காணப்படினும் பிற்பட்ட காலங்களில் தெய்வப் பெயர் சுட்டும் இடப்பெயர்கள் வழக்கில் இருந்து வந்துள்ளன. இவ்வகை யில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கோயிற் பெயராகவும், கோயி லுறை தெய்வப்பெயராகவும், மதவழிபாட்டுடன் தொடர்புடைய விலங்குகள், பறவைகள், மரம், செடி, கொடி வகைகளின் பெயர்களாகவும் இடப்பெயர்கள் அமைந்துள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

அடுத்ததாக மானுடம் சுட்டும் இடப்பெயர்களை நோக் கும் போது அவை வரலாற்றிலிடம் பெற்ற அரசர்கள், ஆட்சி யாளர்கள், அதிகாரிகள், வீரர்கள், சமூகப் பெரியார்கள் என் போரது பெயர்களைக் குறிப்பனவாக அமைந்திருத்தலைக் காண லாம். மானுடம் சார்ந்த இடப்பெயர்களில் சாதீயம், தொழில்நிலை என்ற அடிப்படையிலும் சில பெயர்கள் வழக்கில் இருந்து வந் துள்ளன. ஆயினும் இத்தகைய பெயர்கள் மாற்றப்பட்டு, அவ் விடங்களுக்குப் புதிய எண்ணக்கருவில் தோன்றும் பெயர்கள் இடப்பட்டு வருகின்றமை இடப்பெயர் வரலாற்றுப் பண்பு சார்ந்த செயலாகும். இது போன்றே இயற்கைநிலையில் விலங்குகள், பறவைகள், மரம், செடிகள் முதலானவற்றின் அடிப்படையிலும் இடப்பெயராக்கம் இடம் பெற்று வந்தமையும் இங்கு விளக்கப் படுகிறது.

ஆயினும் சாதியடிப்படையில் அமைந்த இடப்பெயர்கள் பகுத்தறிவு இயக்கம் அல்லது தற்கால சோஸலிச - பொதுவுடமை எண்ணப் போக்குக் காரணமாக மாற்றப்பட்டு, பதிலாகப் புதுப் பெயர்கள் சூட்டப்பெறுகின்றன. இத்தகு முயற்சிகள் வரவேற்கத்தக்கனவே ஆகும்.

தெய்வஞ் சுட்டிய பெயர்கள்

தெய்வப் பெயர்களை மனிதர் சூடுதல் சமய ஒழுகலாற்று நம்பிக்கைகளுடன் தொடர்புடையதொரு மரபாகும். அது போன்றே மக்கள் தாம் வாழுமிடங்களுக்கும் தெய்வப் பெயர்களைச் சூட்டி வந்துள்ளனர். இப்பெயர்கள் பொதுவாக ஆங்காங்குள்ள கோயிலுறை தெய்வங்களைச் சுட்டியனவாகவே அமைந்துள்ளன. ஊர்ப் பெயர்களைக் கொண்டே அவ்வவ்விடங்களில் எத்தகு கோயில்களுள்ளன என உணர்தல் எளிதாகின்றது. இவ்வகையில் அமைந்த தெய்வம் சுட்டிய இடப்பெயர்களின் பட்டியலை இங்கு நோக்கலாம்:-

அம்பன்	(வடம.கி.144.1)
அம்பன்தோலை	(நல்.37.2)
இயக்கச்சி	(பச்.152.1)
உமையாள்புரம்	(கர.162.7)
உருத்திரபுரம்	(கர.165)
கணேசபுரம்	(கர.ப.35.4)
கணேஸ்வரம்	(வலி.வ.65.3)
கந்தர்மடம்	(யாழ்.மா.ந.16)
கந்தரோடை	(வலி.தெ.பு.32.5)
கந்தன்குளம்	(கர.164.அ.12)
காங்கேசன்துறை	(வலி.வ.ப.33)
கனகாம்பிகைபுரம்	(கர.164.அ.12)
குமரகோட்டம்	(நல்.36.ஆ.5)
சிவநகர்	(கர.165.6)
திருநகர்	(கர.164.ஆ.8)
பெருமாள் கடவை	(வலி.வ.62.ஆ.9)
வல்லிபுரம்	(வடம.வ.கி.131.2)

‘கோயில்’ சுட்டிய பெயர்கள்

“கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்” என்ற முதுமொழிக்கு அமையத் தமிழர் தாம் வாழ்ந்த இடங்களிற் பெரியதும் சிறியதும் ஆகிய கோயில்களை அமைத்து வழிபட்டு வந்ததோடு, தாம் வாழ்ந்த இடங்களுக்குக் கோயிற் பெயரைச் சூட்டியும் வாழ்ந்தனர். தாம் வாழும் இடங்களுக்கு அங்குள்ள கோயிற் கடவுளர் பெயரை வழங்குவதன் மூலம் தமக்குக் கடவுள் பாதுகாப்பு உண்டென்ற நம்பிக்கை மக்களிடமுண்டு. குழந்தைகளுக்குக் கடவுட் பெயரிட்டு வழங்குவதன் மூலமும், குழந்தையைத் தாலாட்டும்போது கடவுளராகக் கற்பனை செய்வதன் மூலமும் தம் குழந்தைக்குக் கடவுள் அருளும் நீண்ட வாழ்வும் கிடைக்கும் என்ற நம்பிக்கை நாட்டார் மரபில் இருந்து வருவதை இடப்பெயர் வழக்காறுகளுடன் ஈண்டு ஒப்பிட்டுப் பார்த்தல் தகும் (இ. பாலசுந்தரம் 1979:118).

கோயில் என்ற சொல்லமைந்த இடப்பெயர்கள்

ஆத்திகோயில்	(வடம.வ.கி.ந.23)
குருக்கள்கோயிலடி	(வலி.தெ.மே.41.2)
கோயில்கடவை	(தெ.ம.17.6;வடம.தெ.மே.130.2)
கோயில்வயல்	(பச்.152.3)
கோயிலாமனை	(தென்ம.102.1)
நாகர்கோயில்	(வடம.வ.கி.145)
பிள்ளையார்கோயில்	(வடம.தெ.மே.பு.37.2)
வெள்ளையம்பதி	(வலி.வ.62.8)
வேளக்கைப்பிள்ளையார்கோயில்	(வலி.தெ.மே.ப.36.6)
வைரவர்கோயில்	(வலி.தெ.மே.ப.36.4)

கோயில்வயல் (பச்.152.3)

வெற்றிலைக்கேணி, தாழையடி என்னும் ஊர்களுக்குத் தென்மேற்காகவும், இயக்கச்சிக்குக் கிழக்காகவும் கோயில்வயல் அமைந்துள்ளது. இப்பகுதி நீர்வளமும் நிலவளமும் கொண்ட நெற் செய்கைக்கு ஏற்ற பகுதியாக விளங்குகிறது. இங்கு

டச்சுக்காரரின் பழங்கோட்டையும் அமைந்துள்ளது. போர்த் துக்கேய, ஒல்லாந்தர் காலங்களில் அவர்கள் தம் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளை 'கோயில் பற்று' (Parish) நிருவாகம் என்ற அடிப்படையில் நிருவகித்து வந்தனர். அதன் காரணமாகக் 'கோயில்வயல்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கூறப் படுகிறது. (த. சண்முகசுந்தரம்:1981) ஈழத்தில் வன்னியர் குடி யேற்றம் ஏற்பட்டபோது வடமராட்சியிலிருந்து தெற்கு நோக்கி வந்தோர் வலிகண்டி, நாகர்கோயில், தாழையடி, வெற்றிலைக் கேணி, கோவில்வயல், ஆனையிறவூடாக வன்னிப் பகுதியை அடைந்தமை பற்றிய செய்தி "வன்னி நாச்சிமார் மான்மியம்" என்ற நூலிற் கூறப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது.

நாகர்கோயில் (வடம.வ.கி.145)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகிழக்குக் கரையிற் பருத் தித்துறையிலிருந்து தெற்கே 10மைல் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இதன் தெற்கே புன்செய் நிலமும், வடக்கே நெய்தல் நிலமும் காணப்படுகின்றன. கடற்கரைப் பிரதேசம் இரண்டு மைல் தொலைவரையும் பரந்து மணற் பரப்பாக உள்ளது. இவ்வூர் மக்கள் நெற்செய்கை, மீன்பிடித்தல் முதலிய தொழில்களை மேற்கொள்வோராவர். இங்கு புகழ் பெற்ற நாக தம்பிரான் கோயில் உள்ளது. இக் கோயிலுடன் தொடர் புடையதாகப் பல அற்புதக் கதைகள் வழங்குகின்றன. போர்த்துக் கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து கப்பலில் ஏற்றிக் கோவைக்குக் (Goa) கொண்டு செல்ல முற்பட்ட போது, அம் முயற்சியை நாகதம்பிரான் தடுத்துக் காத்தது என்பது பற்றிய கதையும் வழங்கிவருகிறது (க. கணபதிப்பிள்ளை:1955:23).

வடஇலங்கையில் வலிமை வாய்ந்த தொடர்ச்சியான நாகர் அரசு ஒன்று பண்டை நாளில் கி.மு. ஆறாம் நூற்றாண்டி லிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை இருந்திருக்கிறது. அன்றியும் கி.பி. 2ஆம் நூற்றாண்டளவில் ஈழம் முழுதையும் ஆளக்கூடிய வல்லமையும் நாகர்கள் பெற்றிருந்திருந்தார்கள். வட இலங்கையிலே தனிச் சிறப்புடைய நாகரிகத்துடன் நாகர் வாழ்ந்தனர் என்பதைப் பண்டைக் கிரேக்க எழுத்தாளர்களும் குறிப்பிட்டுள்ளனர் (இராசநாயகம்: 1926:31-32, 129).

இவ்வூர் வரலாற்றுப் பழைமை மிக்கது. ஈழத்துப் பழங் குடிகளாகிய நாகர்களது முதற்றலைநகர் நாகர்கோயில் ஆகும். நாக அரசின் நினைவாக பழைய சான்றுகள் கிடைத்து வரு கின்றன. நாகர் + தம்பிரான் = நாகதம்பிரான் = நாகர் என்னும் சாதியாரின் அரசன். வடஇலங்கை பழைய காலத்தில் நாக இனத்தவரின் குடியிருப்பாக இருந்தபோது, 'நாகர்கோயில்' என அழைக்கப்பட்ட இவ்வூர், நாகர் தம் அரசர் வதியும் நகராகவும் இருந்திருக்கலாம். நாகர்கோயிலின் கோட்டையும் அங்கே இருந் திருக்கலாம். அங்கிருந்தே நாகர் தலைவன் அப்பகுதியை அர சாண்டான். தமிழகத்து நாகபட்டினம், நாகர்கோயில் என்பவற்றின் மூலம் மிகப் பழங் காலத்தில் நாகர் இந்திய துணைக்கண்டத்தின் தென்கோடியில் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. தென்னிந்திய நாகவழிபாடும் இதனையே உணர்த்துகிறது. எனவே யாழ்ப் பாணத்து நாகர்கோயில் பண்டைய ஈழத்து வரலாற்றின் சின்ன மாக விளங்குகிறது. நாகர் கோயிலின் அயற் பதிகளாகிய வல்லிபுரம், செம்பியன்பற்று முதலான இடங்கள் வரலாற்றுப் பழைமையும் - தொடர்ச்சியாகத் தமிழர்களின் தொடர்பும் இப் பகுதியில் இருந்தன என்பதைக் காட்டுகின்றன.

இவ்வரலாற்றுச் செய்திகளைச் சான்றுபடுத்துவதாக நாகர் கோயில் இடப்பெயர் அமைகின்றது. வல்லிபுரம் + நாகர் கோயில் தெருவின் இருமருங்குகளிலும் அமைந்துள்ள வலி கண்டி, பங்குனிப்பிட்டி, கருகுமணல்கும்பி முதலான இடங்களிலே தொல்லியற் சான்றுகள் காணப்படுகின்றன.

நாகர் கோயிலிற் கிடைத்த தொல்லியற் சான்றுகளிற் பல்வகை மணிகள், சேது நாணயம், ஒல்லாந்த - ஆங்கிலேய நாணயங்கள் என்பன முக்கியமானவை. இத்தகைய தொல்லியற் சான்றுகள் கருகுமணல்கும்பி என்ற இடத்திலேயே பெரிதும் கிடைத்துள்ளன. முன்பு குடியிருப்புகள், கோயில்கள் என்பன இருந்து எரியுண்ட இடம் என்ற நிலையில் கருகுமணல்கும்பி என்ற பெயர் வந்திருக்கலாம். நாகர்கோயிற் கடற்கரையில் கோரியடி என்ற இடமுண்டு. இங்கே பழைய வெளிச்ச வீடும் காணப்படுகிறது. கோரிமுனை என்பது இதன் பழைய பெயர் எனக் குறிப்பிடுகிறார் முதலியார் செ.இராசநாயகம் (1926:113). இவ்விடம் பெரும் முனையாக இருந்திருக்க வேண்டுமென உண ரப்படுகிறது.

யாழ்ப்பாண அரசன் சங்கிலி மன்னனுடைய அரச கட்டிடங்கள் பல இங்கு இருந்ததாகவும், இங்கு அவனுடைய ஒரு சிற்றரசு இருந்ததாகவும் கூறப்படுகிறது. பழைய கட்டிடங்களின் அழிபாடுகளும், மதிலும், பழங்கிணறும் இன்றுங் காணப்படுகின்றன. இந்த அழிபாடுகள் மக்களால் "மீகாரி" என வழங்கப்படுகின்றன. இவை போத்துக்கேயரால் அழிக்கப்பட்டு, இங்கு 100 அடி உயர முள்ள கோபுரம் ஒன்றைக்கட்டினர். அவர்களாற் கட்டப்பட்ட கோபுரமே, இன்று மீனவர்களுக்கு வழிகாட்டும் வெளிச்ச வீடாகப் பயன்படுகிறது. இங்கு நிலவிய சிற்றரசரின் ஆட்சியின் போது குற்றவியல் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் விசாரிக்கப்பட்டு, குற்றவாளியாகக் காணப்பட்டவர்கள் கோவில் வயல்தெரு என்ற இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு, தண்டனை நிறைவேற்றப்பட்டனர் எனக் கதைகள் கூறப்படுகின்றன. கோரியடியில் தண்டனை வழங்கப்படும் தூக்கு மரமுங் காணப்படுகிறது (தகவல்: ஆழியவளை எஸ். கணேசலிங்கம், ஈழமுரசு:1.9.1985). இவ்விடத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டியதன் இன்றியமையாமை உணரப்படுகிறது.

மக்கட் பெயர் சுட்டிய இடப்பெயர்கள்

ஆட்சித் தலைவர்கள், அதிகாரிகள், படைத்தளதிகள், பெருநிலக்கிழார், சமூகப் பெரியார் முதலியோர்களது பெயர்களால் இடப்பெயர்கள் வழங்கி வருதலும் உலகப் பொது வழக்கமாகும். இந்த அடிப்படையில் இம் மாவட்டத்தில் ஆட்பெயர் சுட்டிய இடப்பெயர்களாக அக்கராயன்குளம், கந்தர் மடம், தம்பபாமம்,அந்திரான், இமையாணன், உசன், கங்கை கொண்டான், சமரபாகு, நெல்லியான், செம்பியன்பற்று, தொண்டைமானாறு, பல்லவராயன்கட்டு, பரந்தன், வத்திராயன், வதிரி, வீரப்பிராயன் முதலிய பல இடங்கள் காணப்படுகின்றன. இவ்விடப் பெயர்கள் சுட்டும் தலைவர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகள் விரிவாக ஆராயப்படும்போது, இம் மாவட்டத்தின் வரலாறு மேலும் விளக்கம் பெற வாய்ப்புண்டு.

இப் பகுதியிற் பண்டை நாட்களில் அதிகாரிகளாகவும் குறுநிலத் தலைவர்களாகவும் விளங்கியவர்களின் பெயர்கள் அவ்வப் பகுதிக்குரிய இடப்பெயர்களாக வழங்கி வந்துள்ளன.

பெருநிலக்கிழார் என்ற வகையிலும் சில இடப்பெயர்கள் வழக்கிலுள்ளன. இப் பெயர்கள் பற்றி விரிவாக ஆட்சிநிலைப் பெயர்கள் என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. அப் பிரிவில் வகைப்படுத்த முடியாதனவும், அரசியல் வரலாற்றில் இடம்பெறாதனவுமாகிய குறிப்பிட்ட சில ஆட்பெயர்களின் அடியாகப் பிறந்த இடப்பெயர்கள் சமூக முதன்மை பெற்றனவாக அமைந்திருக்கலாம். இவ்வாறான ஆட்பெயர்களால் ஆக்கம் பெற்ற இடப்பெயர்கள் பற்றி இங்கே நோக்கலாம்.

இமையாணன் (வடம.தெ.மே.127.அ)

இமையாணன் எனப் பெயருடைய இரு இடங்கள் உடுப்பிட்டியிலும் கரவெட்டியிலும் அமைந்துள்ளன. ஆட்சியதிகாரி அல்லது படைத்தளபதி ஒருவரது பெயரால் இவ்விடப் பெயர் தோற்றம் பெற்றிருக்கிறது. ஆனால் இந்த இமையாணன் யார் என்பது ஆராயப்பட வேண்டியதாகும். யாழ்ப்பாண வைபவ மாலையில் (பக்.30) இடம்பெறும் "இமையாணமாதாக்கன்" என்ற பெயருக்கும் இவ்விடத்திற்கும் தொடர்பிருக்கலாம். இவ்விடத்தில் 19.5.1989இல் கட்டிட அமைப்பு வேலைகளுக்காக நிலத்தைத் தோண்டியபோது 300 நாணயங்கள் கொண்ட ஒரு செப்புக் குடம் கிடைத்துள்ளது. இந்த நாணயங்களுக்கும் இந்த இடத்திற்குமுள்ள தொடர்புகள் ஆராயப்படும்போது இவ்விடப் பெயர் பற்றி மேலும் பல தகவல்களைப் பெற வாய்ப்புண்டு. நாணயங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை இறுதியாக ஆண்ட சங்கிலி மன்னனின் காலத்திற் பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம் என ஓர் ஊகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இமையாணன் என்ற இடம் சங்கிலி மன்னனால் அவனது படைத்தளபதியான இமையாணன் என்பவனுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டதாகச் சரித்திரம் கூறுகின்றது" என யாழ்ப்பாணத்து உதயன் பத்திரிகையில் (28.05.1989) வெளியிட்டிருந்த செய்தியும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கதாகும்.

கங்கைகொண்டான் (வடம.தெ.மே.127)

கரணவாய் வடக்கே கொற்றாவத்தைப் பகுதியில் கங்கைகொண்டான் என்ற இடம் அமைந்துள்ளது. இதன் அயலிடங்கள் பாலாவி, பொலிகண்டி என்பனவாகும். பழைய காணி யாழ்ப்பாண

உறுதிகளிலும் கங்கைகொண்டான் என்ற பெயர் காணப்படுகிறது. பேச்சு வழக்கில் இவ்விடப் பெயர் " கங்குண்டான்" என வழங்கு கிறது. இங்கே சோழர் காலத்து நாணயங்களும் கிடைத்துள்ளன (செ. கிருஷ்ணராசா: "கங்கைகொண்டான் கிராமம்" வீரகேசரி 28.12.1986). முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய விருதுப் பெயர்களில் "கங்கைகொண்டான்" என்பதும் ஒன்றாகும். இப் பெயரால் இவ்விடம் வழங்கப்படுவதால் அவனது ஆட்சிக் காலத்தில் இங்கும் சோழர் ஆட்சி நிலவியிருக்க வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

சமரபாகு

பொலிகண்டி, பாலாவிப் பகுதிகளை அடுத்துச் சமரபாகு என்ற இடம் கொற்றாவத்தையில் அமைந்துள்ளது. யாழ்ப்பாண வைபவமாலையிற் குறிப்பிடப்படும் சமரபாகுதேவன் என்ற ஆட்சி அதிகாரியின் பெயராலேயே இவ்விடப் பெயர் ஆக்கம் பெற் றுள்ளது.

நெல்லியன்

இவ்வூரின் அயல் இடங்களாகச் செம்பியன்பற்று, மாமுனை ஆகிய இடங்கள் அமைந்துள்ளன. இம் மூன்று பெயர் களும் சோழர் ஆட்சியை நினைவுபடுத்துகின்றன. 'நெல்லியாயன்" என்ற படைத்தளபதி ஆட்சி செய்த இடமே அவன் பெயரால் வழக்குப்பெற்று, பின்பு மருவி நெல்லியன் எனப் பெயர் பெற்ற தென நம்பப்படுகிறது (தகவல்: எஸ். கணேஸலிங்கம், ஆழிய வளை).

வத்திராயன்

வடமராட்சி கிழக்கில் உடுத்துறை, மருதங்கேணி ஆகிய இடங்களுக்கு அருகே இவ்விடம் அமைந்துள்ளது. வத்தி + ராயன் = வத்திராயன். "ராயர்" என்பது தெலுங்குத் தொடர்புடைய பெயராகும். ஈங்கு ஆட்சியதிகாரியாக இருந்த வதிரிபாகு தேவ னின் இடம் என்ற அடிப்படையில் வதிரி என்ற சொற்கூறும் ராயன் என்ற பெயர்க் கூறும் (வதிரி + ராயன்) இணைந்து வதிரிராயன் எனத் தோற்றம்பெற்று, மக்கள் வழக்கில் வத்திராயன் என வழங்கியிருக்கலாம்.

வதிரி

பருத்தித்துறைப் பகுதியில் அமைந்துள்ள வதிரி என்ற இடம் தமிழ்நாட்டுத் தொடர்புடையது. செங்கற்பட்டு மாவட்டத்தில் வதியூர் என்ற இடம் உள்ளது. வதியூர் > வதரி ஆயிற்றா எனவும் அல்லது வழுதி > வதிரி ஆயிற்றா எனவும் எண்ண இடமுண்டு. தஞ்சை மாவட்டத்திலுள்ள பதிரிநியமம் என்ற இடப்பெயர் குறுகி, பரிதி > வதிரி எனத் திரிபடைந்ததிருக்கலாம் எனக்கொண்டால் வதிரி சோழர் ஆட்சிக் காலத்தில் அவர்களின் குடியிருப்பிடமாக இருந்திருக்கலாம். தமிழ் நாட்டிலிருந்து குடி யேறிய வதிரிபாகுதேவன் என்ற ஆட்சித் தலைவனின் பெயரா லேயே இவ்விடம் வதிரி என வழங்கிற்று என ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை (1933:3) கூறுவதும் மேற்கூறிய கருத்துக்குப் பொருத்த மாகவே உள்ளது.

இங்கு சுடுமண்ணாற் செய்யப்பட்ட நீர்க்குழாய்கள் நிலத் துக்கு அடியிலிருந்து கண்டு எடுக்கப்பட்டுள்ளன (Jaffna Campus News, No.Feb.1977). அவை சோழர் காலத்தன எனவும் நிறுவப்பட்டுள்ளன (வீரகேசரி வாரமலர்: 11.08.1977). மேலும் வீராணன்கல், புலிக்குட்டிச்சீமா, புலவராவோடை (புலவர் ஓடை) முதலான இடப்பெயர்களும் வதிரியிலுள்ளன. தமிழகத்திலே சோழரால் தோண்டப்பட்ட வீராணம் என்ற பெயருடைய ஏரியின் பெயர் வதிரியிலுள்ள வீராணன்கல் என்ற இடத்தை நினைவு படுத்துகின்றது. இத்தகைய சான்றுகளை நோக்கும்போது இப் பகுதியில் சோழர் ஆட்சியின் தாக்கம் பெரிதும் இடம்பெற்றிருந் தமை புலனாகின்றது.

வீரப்பிராயன்

வடமராட்சிப் பகுதியில் ஆட்சி அலுவலர்களின் பெயரால் ஆக்கம் பெற்ற இடப் பெயர்களில் இதுவும் ஒன்றாகும். தொண் டைமானின் ஆட்சி அலுவலர்களில் ஒருவன் வீரப்பிராயன் என ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1933:13) குறிப்பிடுதல் காண்க.

வரலாறு சார்ந்த ஆட்பெயர் சுட்டும் இடப்பெயர்கள்

அக்கராயன் குளம்	(கர.161)
அந்திரான்	(வடம.தெ.மே.119.1, வலி.தெ.56.1)
கோத்தாண்டர்குளம்	(பச்.152.5)
சங்கத்தார் வயல்	(பச்.152.5)
சமரபாகு	(வடம.தெ.மே.124.1)
செம்பியன்பற்று	(பச்.147)
சேந்தான்குளம்	(வலி.வ.63.4)
சோரன்பற்று	(பச்.160.2)
தலையாளி	(நல;.37.6)
தொண்டைமானாறு	(வடம.வ.கி.ந.23.1)
நாகர் கோயில்	(வடம.வ.கி.14)
பல்லவராயன்கட்டு	(ப.175அ.5)
பலிங்காதேவன் முறிப்பு	(கர.163.9)
பிரான்பற்று	(வலி.தெ.மே.ப.38.7)
மன்னன்குறிச்சி	(தென்ம.111.2)
வதிரி	(வடம.தெ.மே.ப.37.1)
வீரப்பிராயன்	(வடம.தெ.மே.119.6)

தொழில்நிலை ஆட்பெயர் குறித்த இடப்பெயர்கள்

அந்தணன்திடல்	(வடம.119.ஆ.1)
ஊர்வணிகன்பற்று	(பச்.153.4)
ஓட்டகப்புலம்	(வலி.வ.71.3)
குருக்கள்கோவிலடி	(வலி.தெ.மே.41.2)
குருக்கள் மாவடி	(தெம.111.1)
கொல்லன்கலட்டி	(ப.174)
சாண்டாகடவை	(வலி.தெ.மே.40.7)
சாண்டாபோக்கட்டி	(தெம.106.4)
செட்டிக்கேணி	(தெம.107.1)
செட்டிச்சோலை	(வலி.வ.62.3)
செட்டியார்ஊர்	(வடம.வ.கி.123.3)
செட்டியாகுறிச்சி	(பூ.171.1; தென்ம.100.1)
செட்டியாமடம்	(வலி.மே.45அ.3)
செட்டியாவெளி	(தென்ம.106.2)

தச்சன்தோப்பு	(தென்ம.106.2)
திமிலமடம்	(கர.162.6)
பறையகடவை	(வலி.தெ.மே.40.6)
பறையன்காடு	(வலி.தெ.ப.33.6)
மறவன்புலோலி	(தென்ம.93)
வண்ணான்காடு	(வலி.தெ.57அ.5)
வண்ணாங்கேணி	(பச்.156.3)
வியாபாரிமூலை	(வடம.வ.கி.135.3)
வெள்ளாம்போக்கட்டி	(தென்ம.105.7)

மனிதப் பெயர் சுட்டிய இடப்பெயர்கள்

ஆடியமடம்	(நல்.37.1)
இராமநாதபுரம்	(கர.167)
உசன்	(தென்ம.107)
கச்சர்வெளி	(பச்.159.1)
கம்பர்மலை	(வடம.தெ.மே.121.2)
சித்தவத்தை	(வலி.தெ.ப.32.7)
சித்தன்குறிச்சி	(பூ.171.4)
சித்தன்கேணி	(வலி.மே.50அ.4)
சுப்பர்மடம்	(வடம.வ.கி.131.ஆ1)
செல்லையாதீவு	(பூ.174.5)
ஞானிமடம்	(பூ.171.2)
தம்பகாமம்	(பச்.156.2)
தம்பசிட்டி	(வடம.வ.கி.ந.22.1)
தம்பாலை	(வலி.கி.75.4)
தம்புவட்டை	(வலி.தெ.59.8)
தவசிகுளம்	(தென்ம.106.5)
மத்திபுலம்	(யாழ்.மா.ந.1.5)
மருதனாமடம்	(வலி.தெ.56.3)
மனையான்கட்டு	(நல்.38.4)
மாங்காயன்குறிப்பு	(கர.163.3)
ராக்கா	(வடம.வ.கி.23.3)
வதிரியான்	(பச்.148.3)
விசுவமடு	(கர.168.5)

காவிய மாந்தர் குறித்த இடப்பெயர்கள்

மாரீசன்கூடல்	(வலி.தெ.மே.53.3)
ராமாவில்	(தென்ம.102.3)
வீமன்காமம்	(வலி.வ.68.4)

தாவரப்பெயர் சுட்டிய இடப்பெயர்கள்

இயற்கைநிலைப் பெயர்களே காலத்தால் முற்பட்ட இடப் பெயர்கள் என்பதும், அப் பெயர்களுள்ளும் பொதுக்கூறு, சிறப் புக் கூறு இணையாத ஒரே சொல்லாக அமைந்த பெயர்களே முதலில் தோற்றம் பெற்றிருக்கவேண்டும் என்பதும் இடப்பெயர் ஆய்வாளர்களாற் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன (கே. பகவதி: 1984: 289). இதற்குச் சான்றாக கிராஞ்சி, வரணி, கிழாலி, குப்பிழான், சளம்பன், முள்ளி முதலான இடப்பெயர்களைக் குறிப்பிடலாம். இப்பின்னணியில் பல்வகை இயற்கைப் பெயர் களிலும் தாவரப்பெயர் சுட்டும் இடப்பெயர்களே காலத்தால் முற்பட்டவை என்பதைப் பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியம் நிறுவியுள்ளார் (1984).

பண்டைக்கால மக்கள் நிலத்தோற்றம், நீர்நிலைகள் என்பனவற்றின் அடிப்படையில் இடப்பெயர்களைச் சுட்டிய நிலை யினின்றும் வளர்ச்சி அடைந்தபோது அச்சூழலில் நிலையாகக் காணப்பட்ட தாவரங்களையும் அடையாளமாகக் கொண்டு இடப் பெயர்களைக் குறிக்கும் மரபை ஏற்படுத்திக் கொண்டனர். அவ் வகையில் மரங்கள், செடிகள், கொடிகள், புல், பூண்டுகள் என்பனவற்றின் பெயர்களை இனங்கண்டு, இடங்களைச் சுட்டப் பயன்படுத்தலாயினர். தாவரங்களின் புறத்தோற்றம், அவற்றின் பயன்பாடு, அவை வளருமிடம், அவற்றின் தொகுதி, அவற்றில் வாழும் பறவைகள், விலங்குகள் முதலியன இடப்பெயர் ஆக்கத் தின்போது பெயரடைகளாக அமையலாயின.

தாவரப்பெயர்கள் சுட்டும் இடப்பெயர்கள் அவை குறிப் பிடுமிடங்களின் இயற்கைநிலை, பயிர்வளம், மக்கள் வாழ்க்கை நெறி என்பனவற்றைப் புலப்படுத்துவனவாகவுள்ளன. யாழ்ப் பாண மாவட்டத்திலே தாவரப்பெயர்களாக அமைந்த இடப்பெயர் களை மரம், செடி, கொடி, புல் என்பனவற்றினடியாக வருமாறு வகைப்படுத்தலாம்:

மரப்பெயர் அடியாகப் பிறந்த இடப்பெயர்கள்

மரப்பெயர்	இடப்பெயர்	
ஆத்தி:	ஆத்திக்காடு	(நல்.23.1)
	ஆத்தியடி	(வடம.தெ.மே.136.1; தென்ம.106.1)
ஆல்:	ஆலங்கேணி	(பூ.170.1)
	புத்தாலை	(வடம.தெ.மே.139.3)
	புறாப்பொறுக்கிஆலடி	(வடம.தெ.மே.119.4)
	பேராலை	(பச்.159.2)
இலுப்பை:	சண்டிலுப்பாய்	(வலி.தெ.மே.43.2)
	நெட்டிலுப்பை	(நல்.36.ஆ.6)
கண்டல்:	உடப்பற்றுக்கண்டல்	(கர.163.11)
	கண்டாவளை	(கர.166)
	வெளிக்கண்டல்	(கர.163.14)
கருவேரம்:	வேரவில்	(பூ.175.7)
காஞ்சி:	காஞ்சிபுரம்	(வலி.தெ.மே.52.1)
குமிழ்:	குமிழமுனை	(பூ.175அ.2)
கொய்யா:	கொய்யாத்தோட்டம்	(யாழ்.மா.ந.1.6)
தாழை:	கைதடி	(தென்ம.89)
	தாழையடி	(பச்.148.3)
நாவல்:	நாவலடி	(நல். 23.5)
	நாவற்காடு	(தென்ம. 112.2)
	நாவற்குழி	(தென்ம. 91.3)

நெல்லி:	திருநெல்வேலி	(நல். 34)
	நெல்லண்டை	(வடம.வ.கி.140.1)
	நெல்லியான்	(வடம.தெ.மே.ப.37)
நொச்சி:	கிளிநொச்சி	(கர.ப.35)
	நச்சிக்குடா	(பச்.175அ)
பராய்:	உரும்பிராய்	(வலி.கி.ப.39)
	தம்பிராய்	(பூ.176.6)
	வம்பிராய்	(தென்ம.91.5)
	வேம்பிராய்	(தென்ம.102.4)
	வேலம்பிராய்	(தென்ம.91.5)
பனை:	அம்பனை	(வலி.வ.65.1)
	பத்துப்பனையடி	(வலி.வ.62அ.8)
	பனங்காடு	(தென்ம.107.7)
	வடலிஅடைப்பு	(வலி.தெ.மே.88.6)
பாலை:	இருபாலை	(வலி.வ.65.1)
	தம்பாலை	(வலி.வ.64.1)
	பாலைதீவு	(பூ.176.2)
புங்கை:	புங்கன்குளம்	(யாழ்.மா.ந.10)
	புங்குடுதீவு	(தீவு.5னி6)
புளி:	சிதியம்புளியடி	(வலி.வ.65.6)
	புளியங்கூடல்	(தீவு.வு.16.1)
	புளியம்பொக்கணை	(கர.168)
புன்னை:	புன்னைநீராவி	(கர.168.4)
	புன்னைவேலி	(தென்ம.112.3)
மருது:	மருதடி	(வடம.வ.கி.22)

மா:	குருக்கள்மாவடி	(தென்ம.111.1)
	கோதஞ்சிமா	(வலி.வ.62.4)
	சப்பாச்சிமாவடி	(தென்ம.ந.21.11)
வரணி:	வரணி	(தென்ம.114.10)
விடத்தல்:	விடத்தற்பளை	(தென்ம.107.13)
வேம்பு:	கள்ளவேம்படி	(வலி.மே.49.3)
	வேம்படி	(வடம.வ.கி.ப.23.4)
வேல்+பராய்:	வேலம்பராய்	(தென்ம.91.5)
	வேம்பிராய்	(தென்ம.102.4)

செடி, கொடி, புல் - வகை சார்ந்த இடப்பெயர்கள்

எள்ளுக்காடு	(கர.165.2)
கரந்தன்	(வலி.கி.ப.39.21)
கரம்பகம்	(தென்ம.107.2)
கரம்பைக்குறிச்சி	(தென்ம.115.2)
கள்ளியங்காடு	(நல்.33.1)
காயான்கடவை	(தென்ம.107.4)
கிராஞ்சி	(பூ.175.2)
கிழாலி	(பச்.158)
கிளான்	(வடம.தெ.மே.130.1)
கிளானை	(வலி.வ.66.2)
குப்பிழான்	(வலி.தெ.70அ.2)
குரக்கன்காடு	(கர.163.1)
குறிஞ்சாத்தீவு	(பச்.153.1.கர.162.3)
கூழாவடி	(வலி.தெ.மே.40.3)
கேழ்வட்டை	(வலி.வ.62அ.4)
சண்டில்	(வடம.தெ.மே.அ.2)
சம்பாவெளி	(தென்ம.107.8)
சளம்பன்	(கர.165.1)

சிறுவிளான்	(வலி.தெ.மே.53.8)
சின்னக்கரம்பகம்	(தென்ம.107.9)
சிந்திப்பந்தல்	(வலி.வ.63.3)
சுண்டிக்குழி	(யாழ்.மா.ந.1.13)
சுண்டிக்குளம்	(பச்.151)
பச்சிலைப்பள்ளி	(பச்.7)
பத்தமேனி	(வலி.கி.75.3)
பன்கிலிட்டி	(வலி.தெ.70அ.3)
பெரியபச்சிலைப்பள்ளி	(பச்.149.2)
பெரியவிளான்	(வலி.தெ.மே.53.8)
பொற்பத்தை	(வடம.வ.கி.142.2)
முள்ளானை	(வலி.தெ.மே.53.4)
முள்ளி	(வலி.தெ.மே.40.4)
முள்ளியான்	(பச்.149.7)
வட்டுவத்தை	(வடம.வ.கி.140.6)
வட்டுவினி	(வலி.தெ.67.6)
வருத்தலைவிளான்	(வலி.வ.69.2)

மேலே வகைப்படுத்தித் தரப்பட்டவற்றில் சில இடப்பெயர்கள் சிறப்பியல்பான விளக்கங்கள் கொண்டிருப்பதால் அவை பற்றிய விளக்கங்கள் தொடர்ந்து தரப்படுகின்றன.

கைதடி (தென்ம:89)

தென்மராட்சிப் பகுதியில் கைதடி மிகவும் பரந்த பெரிய ஊராகும். இதன் வடக்கே புத்தூர், கிழக்கே நுணாவில், தெற்கே நாவற்குழி, மேற்கே புத்தூர், கோப்பாய் என்பன எல்லைகளாக அமைந்துள்ளன. இந்நான்கு திசைகளிலும் இவ்வூரின் எல்லைகள் கடலாற் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கடற்கரையோரங்களிலே செறிந்து காணப்படும் தாழைமரங்களின் காரணமாகவே இயற்கைநிலையில் இவ்விடப் பெயர் தோற்றம் பெற்றுள்ளது. தாழையின் பெயர்களாகச் சூடாமணி நிகண்டில் (349) கைதை, முண்டகம், முடங்கல், முசலி, மடி, கண்டல், கேதகை ஆகிய பெயர்கள் தரப்பட்டுள்ளன. இவற்றிற் கைதை என்ற சொல் கைதகி என மருவி, நாளடைவிற் கைதடியாயிற்று. இவ்வூரின் எல்லைகள் கைதையாற் சூழப்பட்டிருந்தமையால் அம்மரப் பெயரே (கைதை) இடப்பெயராகி காலப்போக்கில் அது கைதை > கைதடி ஆயிற்று.

தாழை = கைதை. இது நெய்தல் நிலத்துச் செடியாகும். சங்க இலக்கியங்களிலே தாழை என்பது தென்னைமரத்தைச் சுட்டிற்று. பிற்காலத்தில் அது தாழையைச் சுட்டுவதாக மருவிற்று. ஆயினும் துளு மொழியில் இன்றும் தாழை என்பது தென்னையையே குறிப்பிடுகின்றது என்பர்.

இவ்விடப் பெயருக்கு வேறு பல விளக்கங்களும் கூறப்படுகின்றன:

(அ) கைதடி என்பதை இவ்வூரினர் கரம்தண்டம் என்றும் கூறுப. அது கரம் + தண்டம் = கை + தடி எனப் பொருள்படும்.

(ஆ) ஒற்றை மருப்புடைய விநாயகரது கை இவ்விடத்தில் தறிக்கப்பட்ட இடமாதலால் இவ்விடம் கைதறி என வழங்கிப் பின்னாளில் கைதடி என மருவிற்றென்பர். (தகவல்: ஆர். நாகேஸ்வரி லோகநாதன், கைதடி).

இது தொடர்பாகப் பின்வரும் நாட்டார் கதை வழங்குவதாயிற்று:

> 'போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தின்போது அவர்கள் மேற்கொண்ட மத எதிர்ப்பு நடவடிக்கைகளால் நூற்றுக்கணக்கான சைவக் கோயில்கள் அழிக்கப்பட்டன. அப்போது கோயில் அந்தணர்கள் கோயிற் சிலைகளைக் கிணற்றுள் இட்டும் நிலத்துள் புதைத்தும் பாதுகாப்புச் செய்தனர். பின்னாளில் இங்கு வயல் வேலையின் பொருட்டு மண்வெட்டியபோது மண்ணுட் புதைக்கப்பட்டிருந்த பிள்ளையார் கையொன்று தறிக்கப்படுவதாயிற்று. அதனால் இவ்விடம் கைத்தறி என வழங்கி காலப் போக்கில் கைதடி ஆயிற்று.'

இக் கதையின் தொடர்பாகப் பெயர் பெற்றதே 'கைத்தறி விநாயகர்கோயில்' ஆகும். மேலும் வைரவர்கோயில், அண்ணைமார் கோயில், மற்றும் பல சிறுசிறு கோயில்களும் இங்கே அமைந்துள்ளன. 'சைவ அனாதைச் சிறுவர் இல்லம்', 'கைதடி முதியோர் இல்லம்', நவீல்ட் நிறுவனத்தால் நடாத்தப்படும் கட்புலன், செவிப்புலன் இழந்தோருக்கான பாடசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் என்பன இங்கே சிறப்பாக இயங்குகின்றன. இங்கு அரசினர் பொது மருத்துவமனை, அரசினர் ஆயுள்வேத மருத்துவமனை என்பனவும் அமைந்துள்ளன.

இங்கே ஆயத்தடி, குமாரத்திபட்டி, உவரி முதலான பல குறிச்சிப் பெயர்கள் வழக்கிலுள்ளன. ஆயம் வசூலிக்கப்பட்ட இடம் ஆயத்தடியாகும். சோழர் காலத்திலே மத்திய அரசுக்கும் ஊர் சபைகளுக்கும் மக்கள் பல் வகை வரிகளைச் செலுத்தினர் என்பது கல்வெட்டுச் செய்தி. இவ்வரிகள் நெல்லாகவும் பண மாகவும் ஊழியமாகவும் செலுத்தப்பட்டன. அவ்வரிகளில் ஆயம் என்பதும் ஒன்றாகும்.

ஐம்பெருங்குழு என்பேராயம் என்போர் சங்ககாலத்து அரசியல் இயக்குநர்களாக நிர்வாகத்திலிடம் பெற்ற செய்திகள் அறியப்படுகின்றன.

"பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நாஅல் வேதம் நெறிதி ரியினும்
திரியாச் சுற்றம்......" (புறநானூறு - 2)

என்ற பாடல் வரிகளால் அவர்களது திறன் அறியப்படுகிறது. இத் திரியாச் சுற்றத்தின் ஒரு பகுதியினரே ஆயம் ஆகும். இவை பற்றிய விளக்கம் வருமாறு அமைகின்றது:

> இத் திரியாச் சுற்றம் குழு எனவும் ஆயம் எனவும், இரண்டாக வகுக்கப்பட்டு, குழு மேற்சபையாகவும், ஆயம் கீழ்ச் சபையாக வும் இயங்கின. இரண்டு சபைகளும் நகர அரசின் அதிகாரச் சுற்றமேயாகும். "குழு" சட்ட அமைப்பு நோக்கிலும் "ஆயம்" சட்டக் கருமம் ஆற்றும் அமைப்பிலும் ஆக்கப்பட்டன எனலாம். குழுவில் அமைச்சர், அந்தணர், படைத்தலைவர், தூதர், ஒற்றர் என்ற ஐந்து மக்களும், ஆயத்தில் கரணத்தலைவர், கருமவிதிகர், கருமச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைமறவர், இவுளி மறவர் என்ற எட்டு மக்களும் பொருந்துவர்
>
> (நா. சிவபாதசுந்தரனார்.1972:340)

நெல், நெல்லி - முதனிலை இடப்பெயர்கள்

நெற்பயிர், நெல்லிமரம் என்பன முதன்மை பெற்றிருந்த இடங்களுக்கு அவற்றை அடிப்படையாகக் கொண்டு இடப்பெயர் சூட்டப்படலாயின.

நெல்லண்டை (வடம.வ.கி.)

நெல்லி + அண்டை = நெல்லியண்டை > நெல்லண்டை. அண்டை = அயல். இவ்விடத்திற்கு நெல்லியண்டை என்ற பெயர் தொடக்கத்தில் வழங்கிவந்து, அது பின்னர் நெல்லண்டை எனத் திரிந்துள்ளது. இங்கு நெல்லிமரங்கள் நிறைந்திருந்தமை யால் அம் மரங்களின் பெயர் வழிநடைப் பாதையோடு இணைந்து (நெல்லியண்டைவீதி) நெல்லண்டை என்ற இடப் பெயர் தோன்றிற்று. நெல்லண்டை அவற்றின் பெயரால் தெரு வும், கோயிலும், இடமும் பெயர் பெறலாயின. நெல்லிக் காய்கள் நீர்வேட்கை போக்கும் இயல்புடையவை. வழிநடையாகப் பயணம் செல்வோருக்கு நீர் வழங்குவதைத் தமிழர் சிறந்த அறமெனக் கொண்டு வாழ்ந்தனர். அதனால் தெருவோரங்களில் நெல்லி மரங்களை நட்டு வளர்த்திருந்தனர். நெல்லண்டைவீதியில் இன்றும் நெல்லி மரங்கள் உள்ளன (தகவல்: மனோன்மணி சண்முகதாஸ், நெல்லண்டை). இதனைச் சங்க காலத்திலும் காணக்கூடியதாக இருந்தது என்பதை "அறந் தலைப்பட்ட நெல் லியம் பசுங்காய்.. .." எனக் குறுந்தொகை (செய்:209:1) பாடிற்று. இங்கே நெல்லண்டைத்தெருவும் அத்தெருவின் அருகே நெல் லண்டை அம்மன் கோயிலும் அமைந்துள்ளன.

நெல்லியடி (வடம.தெ.மே.ப.37)

நெல்லி + அடி = நெல்லியடி. நெல்லி மரத்தை முதனி லையாகக் கொண்டு இப்பெயர் தோற்றம் பெற்றுள்ளது. இது பருத்தித்துறைக்குத் தெற்கே அமைந்துள்ள ஒரு பரந்த பகுதி யாகும். இங்கே பட்டினசபை ஆட்சிமன்றம் அமைந்துள்ளது. இதன் வட்டாரங்களாக வதிரி, முருகையன் கோவில், மருதடி, நுணுவில், கலட்டி என்பன அமைந்துள்ளன. நெல்லி மரத்தை முதனிலையாகக் கொண்டே இப்பெயர் தோற்றம் பெற்றதென லாம்.

நெல்லியான் (வலி.மே.48.1)

நெல் + இயம் = நெல்லியம் > நெல்லியன் > நெல்லி யான். இயம் என்பதற்கு = ஒலி, புகழ் என்ற பொருள்களுள.

நெல் விளைச்சலால் பெயர் பெற்ற இடம் என்ற பொருளும் நெல்லியான் என்பதில் புலப்படுகிறது. தொல்புரத்தின் மேற்குப் பகுதியில் நெல்லியான் என்ற இடம் அமைந்துள்ளது. பண்டைய தொல்புரக் கோட்டை வாசிகளின் வயற் பகுதியாக நெல்லியான் விளங்கியிருக்கலாம். இங்கு வயலும் வயல் சூழ்ந்த குளமும், அவற்றுக்குத் தெற்கே பொன்னாலைக் கோயிலும் அமைந்துள் ளன. இங்கு விளைந்த நெல்லின் சிறப்பு நோக்கி நெல்லியான் எனப் பெயர் வழங்கிற்று. தொல்புரக் கோட்டைப் பகுதி மக்கள் நல்ல நெல்லினங்களைப் பயிரிட்டமையால் இவ்விடம் நெல்லி யான் எனப் பெயர் பெற்றது என்றும் பொருள் கூறலாம்.

நெல்லியன் என்ற தலைமகனது பெயராலும் இவ்விடப் பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம். நெல்லியான் வயற் பகுதியின் நடுவே பெரியதம்பிரான்கோயில் அமைந்துள்ளது. இங்கு பழை மையின் சின்னமாக நாகவழிபாடும் சிறந்து காணப்படுகிறது. இப் பெயர் தொடர்பாகச் சங்க காலத்து இடப்பெயர் பற்றிய குறிப்பொன்றை ஈண்டு நோக்குதல் தகும்:

> 'தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழி யன்மேல் பாடப்பட்ட மதுரைக்காஞ்சியிலே (வரி 75 - 83) ஒரு துறைமுகப் பட்டினம் கூறப்படுகிறது. மாங்குடிமருதனார் அந்தப் பட்டினத்தின் பெயரை நேராகக் கூறாமற் குறிப்பாகக் காட்டுகிறார். 'நெல்லின்ஊர்' என்று அதைக் குறிப்பிடுகிறார். இதற்கு உரை எழுதிய மிகப் பிற்காலத்தவரான நச்சினார்க் கினியர் நெல்லியான் பெயரைக் கொண்ட 'சாலியூர்' என்று எழுதுகிறார். மேலும் அதனை அசையாக்கி நெல்லூர் என்பரு முளர் என்றும் கூறுகிறார். எனவே சாலியூர் அல்லது நெல்லூர் என்னும் துறை முகப்பட்டினம் பாண்டி நாட்டில் இருந்தது என்பது தெரிகிறது.'
>
> (மயிலை சீனி.வேங்கடசாமி 1968:5)

இக் கூற்றிலிருந்து நெல்லியான் என்ற இடப்பெயர் சங்க காலத்திலே தமிழகத்திலும் வழக்கிலிருந்தமை அறியப்படு கிறது.

கிளிநொச்சி (கர.ப.35.164அ)

கிளிநொச்சி யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கே 42 மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். 1984ஆம் ஆண்டு

வரை இது யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்திருந்தது. தற்போது கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி என்னும் மூன்று உதவி அரசஅதிபர் பிரிவுகளையுடைய தனி மாவட்டமாகக் கிளிநொச்சி விளங்குகிறது என்பது ஈண்டு வலியுறுத்தப்படுகிறது. இந் நூலுக்குரிய தரவுகள் 1983ஆம் ஆண்டுக்கு முன்னரே சேகரிக்கப்பட்டு, அப்போதய கிராமசேவகர்களுக்குரிய எண்கள் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டமையால் கிளிநொச்சியும் யாழ்ப் பாண மாவட்டத்துடன் இணைந்திருந்த காலத்து நிருவாகக் குறிப்புக்களே இந்நூலிலே தரப்பட்டுள்ளன.

கிளிநொச்சியினூடாக யாழ்ப்பாணம் + கண்டிப் பெருஞ் சாலையும், தொடர்வண்டிப் பாதையும் செல்கின்றன. கிளி நொச்சி பாரிய பல நீர்த்தேக்கங்களைக் கொண்டு கமத்தொழில் வளம் மிக்க பகுதியாகத் திகழும் அதேவேளையில், கைத்தொழி லும் வளர்ந்துவரும் நகராகவும் காட்சிதருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடம், அரிசி ஆலைகள், தொழிற்சாலை கள், அரசப் பண்ணைகள், விவசாய ஆராய்ச்சி நிலையம் என் பனவும் இங்கு அமைந்துள்ளன. பேருந்து நிலையம், கல்லூரி கள், மருத்துவமனை, அங்காடிகள் என்பன நகரைச் சிறப்பிக் கின்றன. முருகன் கோயில், விநாயகர்கோயில், புனித மாதா கோயில், ஜும்மாப்பள்ளி வாசல் முதலான வழிபாட்டுத் தலங் களும் இங்கே அமைந்துள்ளன. மேலும் காந்திசேவா சங்கம், குருகுலக்கல்வி நிலையம், குருகுலம் சர்வோதயம் கருணா நிலையம், தென்னிந்தியத் திருச்சபை, மற்றும் பல்வேறு சமய சமூக பல்வகைத் தொண்டர் நிறுவனங்களும் இங்கு செயற்படு கின்றன.

கிளிநொச்சிப் பகுதியில் பெரிய எட்டு நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ளன. அவை முறையே இரணைமடுக்குளம், அக்க ராயன்குளம், கல்மடுக்குளம், கனகராயன்குளம், முறிகண்டிக் குளம், சேமமனார்குளம், விசுவமடுக்குளம், உடையார்கட்டுக் குளம் என்பனவாகும். இக்குளங்களிலிருந்து சுமார் 25000 ஏக்கர் காணிகளுக்கு நீர்ப்பாய்ச்சக்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள் ளன. இவற்றைவிட சுமார் 10 சிறிய குளங்கள் புனரமைக்கப் பட்டும், மேலும் சுமார் 60 குளங்கள் புனரமைக்கப்படாமலும் உள்ளன என அறியப்படுகிறது (க. குணராசா - 1983). கரச்சிப் பகுதியில் ஏற்பட்ட குடியேற்றத் திட்டங்களுக்குக் கிளிநொச்சி, வட்டக்கச்சி, இராமநாதபுரம், ஸ்கந்தபுரம் என்பன கிளிநொச்சி

யுடன் போக்குவரத்துப் பாதையினால் இணைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி வணிக மையமாகவும் நிருவாக மையமாகவும் வளர்ச்சிபெற்று வருகிறது.

நொச்சி மரத்தை அடிப்படையாகக் கொண்ட இடப்பெயர் கள் இலங்கையின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. மட்டக் களப்பில் நொச்சிமுனை, வவுனியாவில் நொச்சிக்குளம், அனுராத புரப் பகுதியில் 'நொச்சியாகம' முதலிய பல இடங்கள் நொச்சி மரப் பெயர்களால் வழங்குகின்றன. இப்பெயர் பண்டைத் தமிழ ரின் திணைநிலை வாழ்க்கையுடன் இணைந்ததாகும். மருத நிலத்திடையே காணப்படும் ஊர் மனைகள் நொச்சி எனப்படும். அவ்வகையிற் கிளிநொச்சிப் பகுதி குளமும் வயலுஞ் செறிந்து வளம்மிக்க மருதத்திணையாக விளங்கியிருக்கிறது. அதனி டையே காணப்பட்ட குடியிருப்பை நொச்சி என்றழைத்தனர். இங்கு சோலைகள் அயலாகக் காணப்பட்ட நிலையிற், கிளிகள் கூடுதல் இயல்பே. அதனால் கிளிகள் சேர்ந்து காணப்பட்ட நொச்சியைக் கிளிநொச்சி எனல், இயற்கை நிலைப்பட்டு வாழ்ந்த மக்களின் இயல்பாயிற்று. பண்டை நாளில் கிளிநொச்சிப் பகுதி யின் இயல்பு எவ்வாறிருந்திருக்கும் என்ற காட்சியைப் பட்டினப் பாலை வரிகளால் வருமாறு ஊகித் துணரலாம்:

> "காடுகொன்று நாடாக்கிக்
> குளந்தொட்டு வளம் பெருக்கிப்
> பிறங்கு நிலைமாடத்து உறந்தை போக்கிக்
> கோயிலொடு குடி நிறீஇப்
> பொருவேம் எனப் பெயர் கொடுத்து
> ஒருவோம் எனப் புறக்கொடாது
> திருநிலைஇய பெருமன்எயில்......."
>
> (பட்டினப்பாலை:283-291)

தொல்காப்பியர் கூறும் நொச்சித்திணை தரும் விளக்கத் தின் அடிப்படையில் இவ்விடப்பெயர் விளக்கம் பெறுதலை மேலும் ஒரு சான்று காட்டி விளக்கலாம்:

> "கோட்டை கட்டி அதைச்சுற்றி மதிலெடுத்த மன்னன், அகத் திருந்து புறத்திருக்கும் பகைவனோடு பொருது அம் மதிலைக் காத்தலே நொச்சித்திணையாம். கோட்டைக்குரிய காவற்காட்டு

> மரங்களில் நொச்சியும் ஒன்றாகும். இக் கருப்பொருளால் அரண் பெற்ற ஊரும் நொச்சி எனப்பட்ட தென்க."
>
> (நா. சிவபாதசுந்தரனார்....1972)

கிளிநொச்சியின் தென்புறத்தே பண்டை நாளில் அமைக் கப்பட்டிருந்த பெருங் குளங்களும் அதன் தெற்கே காணப்பட்ட காட்டரண்களும், வடக்கே அமைந்த கடலரண்களும், இங்கு பழம்பெரும் நொச்சிநகர் இருந்தமையைக் குறித்துக்காட்டுகின் றன. இப்பகுதியிலே தொல்பொருளியலாய்வுகள் பரந்த முறை யில் மேற்கொள்ளப்படும்போது இவ்வுண்மைகள் நிருபிக்கப் படலாம்.

'பராய்' ஈற்று இடப்பெயர்கள்

பராய் = என்பது ஒருவகை மரம். தாவீது அடிகள் இச் சொல்லுக்கு வருமாறு மூலம் காண்கிறார். பர = (சுமேரியம்) பரவுதல், விரித்தல்; பர் = (அக்காதியச் சொல்) விசித்தல், பரவுதல், பரவு (தமிழ்) = பரவுதல் (தாவீது :1970:30). பராய் என்பது Paper Tree என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் என்கிறார் ரா.பி. சேதுப்பிள்ளை (1976). தமிழகத்தில் திருப்பராய்த்துறை என்ற இடம் உள்ளமையும் நோக்கத்தக்கது.

உரும்பராய் (வலி.கி.ப.39)

உரும் + பராய் > உரும்பராய். முற்காலத்தில் இங்கு பராய் மரங்கள் நிறைந்து நின்றமை குறித்து இப்பெயரேற்படுவ தாயிற்று என்பர். பராய் மரங்கள் தெருவின் ஓரத்தே தூரத்தைக் குறிக்கும் மைல்கல் மரங்களாகவும் நாட்டப்படும் வழக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வகையில் உரும் என்பது 25ஆம் பராய் மரம் எனத் தமிழ் எண்ணைச் சுட்டிய நிலையில் அம்மரப் பெயர் ஊரையும் குறிப்பதாயிற்று. உரும் + பராய் - என்பதில் உரும் - அச்சம் என்ற நிலையில் அச்சத்தைத் தரத் தக்க பெரிய அல்லது செறிந்த என்ற பொருளில் வந்தது என வும் கொள்ளலாம்.

இவ்வூரில் பல குறிச்சிப் பெயர்கள் காணப்படுகின்றன. மக்கிக்கற்கள் நிறைந்த பகுதி 'கிடங்கு' என்றும், நொச்சி மரங்கள்

நிறைந்திரந்த பகுதி 'நொச்சி ஓலை' என்றும், தோட்டக் காணிகளுள்ள இடம் 'கறுவன்' எனவும், வேப்ப மரங்கள் செறிந்துள்ள இடம் 'வேப்பன்' எனவும் வழங்குகின்றன. மற்றும் கோயிற் பெயர்களால் அமைந்த குறிச்சியாக வைரவர் கோவிலடி, அம்மன் கோவிலடி, கற்பகப் பிள்ளையார் கோவிலடி, காளி கோவிலடி என்ற குறிச்சிப் பெயர்களும் உள்ளன. மேலும் 'கிரமாந்தை', 'கொடுவாப்பாலம்' என்ற குறிச்சிப் பெயர்களும் வழக்கிலுள்ளன.

சுவாமி ஞானப்பிரகாசர் யாழ்ப்பாண வைபவ விமரிசனம் என்ற நூலிலே 'சிங்கள இடப்பெயர்கள் காட்டும் பழஞ் செய்திகள்' என்ற பகுதியில் 'உரும்பராய்' என்பது சிங்களப் பெயரடியாக வந்திருக்கலாம் எனக் கூறியுள்ளார். 'பராப' என்பது அம்மொழியில் நீர் தங்கி நில்லாது ஓடுமிடம் எனப் பெருள்தருவதாகும். 'பராப' என்பது தமிழில் 'பிராய்' என மருவிற்றென்று மிக வலிந்து கூறியிருத்தலை அறிஞர் ஏற்கார் என்க.

இவ்வூரிலுள்ள கருணாகரப்பிள்ளையார் கோவில் வரலாறு கருணாகரத் தொண்டைமானுடன் இணைத்துக் கூறப்படுவது மரபாகி விட்டது. இக் கோயிலிற் சிதைந்த நிலையிற் காணப்பட்ட கல்வெட்டை வாசித்து இது கி.பி.1567இல் பொறிக்கப்பட்டதாகக் கூறுகிறார் பேராசிரியர் கா. இந்திரபாலா (1927:98). இவ்விடத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளின் இன்னுஞ் சில கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தப்படலாம் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளது (செ.கிருஷ்ணராசா:1979:49).

இக் கோயில் பரத்தைப்புலம் என்ற குறிச்சியில் அமைந்திருப்பதால் இதற்கு 'உரும்பராய் பரத்தைப்புலக் கருணாகரப் பிள்ளையார்' என்றும் பெயருண்டு. இக்கோயில் சிங்கைநகர் மன்னன் விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி என்பவராற் கட்டப்பட்டதென்றும் பின்பு ஒல்லாந்தரால் இடித்து அழிக்கப்பட்டதென்றும், அப்போது புதையுண்ட இலிங்கம் கண்டெடுக்கப்பட்ட இடத்திலே மீண்டும் புதிதாகக் கோயில் கட்டப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

வேம்பிராய் (தென்ம.102.4)

இது மீசாலை வடக்கிலுள்ள ஓரிடம். இங்கு வேம்பு மரங்களும் பராய் மரங்களும் பண்டைநாள் முதலாக நிறைந்து காணப்படுகின்றன என்றும் அம்மரங்களின் காரணமாகவே வேம்பு

+ பராய் > வேப்பம் பராய் > வேம்பராய் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது. இவ்விரு மரங்களும் புனிதத் தன்மை கொண்டவை. வேப்பிலை நோய் தீர்க்கும் தன்மை வாய்ந்தது என்பது இந்துக்கள் நம்பிக்கை - அறிவியலும் அதனை ஏற்றுக் கொள்கிறது. அத்துடன் பராய் மர இலைகளைக் கண்ணூறு கழிக்கும்போது பயன்படுத்தும் நம்பிக்கையையும் இங்கு காணக்கூடியதாக இருக்கிறது. இப்பகுதி கல் நிலமாதலால் 'கற்காடு' எனவும் இவ்வூர் வழங்கப்படுகிறது.

வேலம்பிராய் (தென்ம.91.5)

இது கோயிலா கண்டிப்பகுதியில் அமைந்துள்ளது. வேல் + அம் + பராய் > வேலம்பராய் > வேலம்பிராய் எனப் பெயராக்கம் பெற்றுள்ளது. வேலமரமும் பராய்மரமும் சேர்ந்த நிலையில் இவ்விடப் பெயர் அமைவதாயிற்று. இங்குள்ள வேலம்பிராய்க் கண்ணகி அம்மன் கோயில் மிகப்பழைமை வாய்ந்ததாகும். வேல் முருகனுக்குரிய சின்னம். பராய் அம்மனுக் குரிய மரம். இவ்விரு கோயில்களும் இங்குள்ளன.

'பனை' தொடர்புடைய இடப்பெயர்கள்

யாழ்ப்பாண மாவட்டம் கற்பகதரு எனப் போற்றப்படும் பனைவளம் செறிந்த பகுதியாகும். இப் பிரதேச மக்களது வாழ்வியலும் பனைவளத்துடன் இரண்டறக் கலந்துள்ளது. இதனால் சில இடப்பெயர்களும் பனைமரத்துடன் இணைந்ததாக ஆக்கம் பெற்றுள்ளன.

கருகம்பானை (வலி.வ.64.1)

இணுவிலின் தென்மேற்குப் பகுதியில் கருகம்பானை என்ற இடம் அமைந்துள்ளது. கருமை + அம் + பனை = கருமைப்பனை > கருகம்பனை > கருகம்பானை என இப்பெயர் மருவி வந்துள்ளது. இவ்விடத்தில் வளர்ந்த சில பனைமரங்களின் குருத்தும் ஓலைகளும் கருமை நிறமாக இருந்தபடியால் இப்பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது. இங்கு பனைகள் செறிந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கருகம்பானை என்பதைக் கரு + கம்பு + ஆனை எனப் பிரித்து, முன்பு இங்கு கம்புப் பயிர்ச்செய்கை நடைபெற்றமை நோக்கி அப்பெயர் பெற்றது என்றும், 'அனை' என்பதன் மருஉ 'ஆனை' என்றும், அது இருப்பிடத்தைச் சுட்டும் விகுதி என்றும் விளக்கம் கூறுவாரும் உளர்.

சொர்ணவடலி (நல்.38.5)

இது கொக்குவில் கிராமத்தின் ஒரு பகுதியாகும். இங்கு 'சொர்ண சித்தி விநாயகர் கோயில்' அமைந்துள்ளது. வடலி = பனைக் கன்று. வடலிகள் வளர்ந்து செறிந்து காணப்பட்ட பகுதியாக இவ்விடம் விளங்கியமையால் கோயிற்பெயரையும் சேர்த்து சொர்ணவடலி என வழங்கப்படுவதாயிற்று. இங்கு சொர்ண வடலி என்ற ஒழுங்கைப் பெயரும் உள்ளது.

வடலியடைப்பு (வலி.தெ.மே.ப.38.6)

இது பண்டத்தரிப்பு நகர சபையின் ஒரு பகுதியாகும். இதனைப் புத்தடி என்றும் வழங்குவர். பண்டை நாளில் வடலிப் பனைகள் இங்கு செறிந்து காணப்பட்ட நிலையில் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். வயல்வெளிகளும் தோட்டக் காணிகளும் பனந் தோட்டங்களும் பரந்தகுடியிருப்புப் பகுதிகளும் இங்கு காணப்படுகின்றன. இங்கு ஐயனார்கோயில், வைரவர்கோயில், பிள்ளையார்கோயில் முதலிய பல கோயில்கள் அமைந்துள்ளன. (தகவல்: சோ. தேவராசா, சட்டத்தரணி, வடலியடைப்பு)

மரம், செடி, கொடி தொடர்புடைய இடப்பெயர்கள்

இருபாலை (வலி.கி.86அ)

இரு + பாலை = இருபாலை. இரண்டு பாலை மரங்கள் அல்லது பெரிய பாலை மரம் என்பதைப் பொருளாகக் கொண்டு இப்பெயர் தோற்றம் பெற்றிருக்க வாய்ப்புண்டு. வலிகாமம் கிழக்கில் கோப்பாய்க்குத் தென்பக்கமாக இருபாலை ஊர்

அமைந்துள்ளது. இருபாலையின் கிழக்கே உப்பாறும், வடமேற்கே கோப்பாயும், தெற்கே செம்மணியும் எல்லைகளாக அமைந்துள்ளன. இங்கு பல சிறு குளங்கள் காணப்படுகின்றன. கிழக்கேயமைந்துள்ள உப்பாறு இவ்வூரினருக்குப் பொருட்களை ஏற்றிச்செல்ல உதவியாக இருந்து வந்துள்ளது. உப்பாற்றினை அடுத்த பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இருபாலை கோப்பாயின் தென்பகுதியாக அமைவதால் இதனைத் தென்கோவை என்றும் கூறுப. இங்கு நல்லைநாதமுதலியார், அவர் மகன் சேனாதிராயமுதலியார் முதலான பல புலவர்கள் தோன்றியிருக்கிறார்கள். சேனாதிராயமுதலியார் பாடிய நல்லைக் குறவஞ்சியில் ஒரு பாடல் வருமாறு:

> 'திருவாரு நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானார்
> இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ரம்மானை
> இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ராமாயின்
> தருவாரோ சட்டிகுடம் சாறுவைக்க வம்மானை
> தருவார்காண் சட்டிகுடம் சாறுவைக்க வம்மானை'
> (சி. கணேசையர்:ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்:1939:33)

இப் பாடலில் இருபாலை என்பது இருவாலை என வருதல் நோக்கற்பாலது. இரு + ஆலை = இருவாலை என்ற நிலையில் இங்கு பண்டைநாளில் மிகப் பெரிய இரண்டு கற்சூளைகள் (காளவாய்கள்) இருந்த நிலையில் அப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது.

தமிழகத்திலுள்ள பாலையூர் என்ற பெயருடன் இருபாலை என்ற இடப்பெயர் தொடர்புபட்டது என்ற கருத்துமுண்டு. இது தொடர்பாக வ. குமாரசுவாமி (1932:34) குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கது.

> தொண்டை மண்டலத்து 24 கோட்டங்களுள் ஒன்றாகிய ஊற்றுக் காட்டுக் கோட்டத்திலே பாலையூர் என்னும் ஓரிடமுண்டு. மண்ணாடு கொண்ட முதலி இருபாலையிற் குடியேறியதாகக் கைலாயமாலை கூறுகிறது. பண்ணாடு கொண்ட முதலி பாலையூரிலிருந்து வந்தவரென்றும் யாழ்ப்பாணத்திலே தாம் குடியேறிய இடத்திற்குத் தமது சன்ம தேசத்தின் பெயருடன் பெரிய என்று பொருள்படும் இரு என்னும் அடை புணத்தி இருபாலையூர் எனப்பெயர் புனைந்து வழங்கினா

ரென்றும் அனுமானித்தல் இழுக்காகாது". இக்குறிப்பின் மூலம், இருபாலை தமிழகத்து இடப்பெயர் என்பது தெளிவாகிறது.

முள்ளானை (வலி.தெ.மே.40.4)

முள் > முள்ளி + ஆனை > முள்ளானை. இதில் ஆனை என்பது விகுதிச் சொல். முள் என்பது எரிதல், முளிதல், காய்தல், உலர்தல், உலர்ந்த இடம் எனப் பொருள்படும். முட்களைக் காய விட்டு எரித்து, நிலத்தை வளமாக்கிக் குடியிருப்பாக்கிய இடமே முள்ளானை எனப் பெயர் பெற்றது. டச்சுக்காரர் காலத்தில் இங்கு மஞ்சள் உற்பத்தி பெரிதும் இடம் பெற்றிருக்கிறது. அதன் தொடர்பைக் காட்டும் வகையில் இங்கு, டச்சு வீதி அமைந்துள்ளது. சித்திரமேழி மக்களுக்கும் முள்ளானை மக்களுக்கும் இடையே சமூக உறவுகள் காணப்படுகின்றன.

முள்ளி (வலி.தெ.மே.)

இது ஆனைக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள உவர் மணற் பகுதியாகும். 50 - 75அடி உயரங்களிலான மணற் குவியல் களை இங்கு காணலாம். இங்கு வாழ் மக்கள் இம் மணற் குவியல்களை வெட்டி எடுத்து ஒதுக்குப் புறமாகக் குவித்து வயல் நிலமாகச் செம்மைப்படுத்தினர். இங்கு மக்கள் குடியேறு வதற்கு முன்பு காட்டில் ஏற்பட்ட கொள்ளை நோயால் அழிந்த மக்களைப் புதைப்பதற்குப் பயன்பட்ட தற்காலிக இடு காடாக இவ்விடம் பயன்பட்டது என்றும் கூறுவர். முள்ளி நிறைந்த காடாக இருந்த இடம் தற்போது மக்கட் குடியேற்றத்துடன் முள்ளி ஊராக மாறிக் காட்சி தருகின்றது. பண்டை நாளில் ஆனைக்கோட்டைக்கு வருவிக்கப்பட்ட யானைகள் மேய விடப் பட்ட இடம் அல்லது கட்டப்பட்ட இடம் இது எனவும் கூறப் படுகின்றது.

முள்ளியன் (பச்.149.1)

இது பச்சிலைப்பள்ளிப் பகுதியில் அமைந்துள்ள வெறும் மணற் பாங்கான பகுதியாகும். முன்னர் இங்கு காடுகள் மலிந்து, யானை நடமாட்டம் இருந்ததாகக் கூறப்படுகின்றது (சைமன்காசிச்

செட்டி 1839:167). ஆங்கிலேயர் காலத்தில் இங்கு தேவாலயம் ஒன்றிருந்ததென்றும், அது Mulli – Pattoo என வழங்கப்பட்டது எனவும் அறியப்படுகிறது.

விளான் - முதன்மை பெற்ற பெயர்கள்

விளா = வெண்மை, இளமை, கொப்பு; விளவு = விளா மரம். (தமிழகராதி - 281). விழல் = விழற்புல்; விளா = ஒரு வகைச் செடி. இது சிறுவிளா, பெருவிளா என இரு வகைப்படும்.

இப் பின்னணியில் விளா > விளான் என்ற சொல் முதன்மை பெற்று குப்பிழான், சிறுவிளான் (வலி.தெ.53.8), பெரு விளான் (வலி.தெ.மே.53.5), வயாவிளான் (வலி.வ..71.5) என்ற நான்கு இடங்கள் உள்ளன.

பெரியவிளானில் பழைமை வாய்ந்த வடசேரியம்பதி விக்கினேஸ்வரர்கோயில் அமைந்துள்ளது. இதன் வெளித்தெரு முக்கோண அமைப்பு உடையதாகும். அதனால் முக்கோணப் பிள்ளையார் என்ற பெயரும் இதற்கு வழங்குகின்றது. இப் பகுதியில் வாழும் விவசாயிகள் எலித் தொல்லைகளைப் போக்க நேர்த்தி வைத்து வழிபட்டுப் பலன் பெறுவது வழக்கம். அதனால் எலிப் பிள்ளையார் என்ற சிறப்புப் பெயரும் இக்கோயிற் பிள்ளை யாருக்கு உரியதாயிற்று. (தகவல்: ஸி.ரி. செல்வராசா, பெரிய விளான்)

இங்கு புனித ஜுவானியர் கோயில், அந்தோனியார் கோயில் என்பனவும் உள்ளன. பெரியவிளானின் அயலில் சிறு விளான் உள்ளது. சிறுவிளான், பெரியவிளான் ஆகிய பகுதிகளில் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் மஞ்சள், இஞ்சிப் பயிர்ச் செய்கை பெரிதும் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. அதனால் 'மஞ்சள் தோட்ட விளான்' என்ற பழைய பெயரும் வழங்கி வந்திருக்கின்றது. பெரியவிளானில் குறிச்சிப் பெயர் களாகக் கொட்டைக்களம், சோபனை, அம்பன், பிலாவை, வட சேரி என்பன வழக்கில் உள்ளன.

குப்பிழான் (வலி.தெ.70அ.2)

குப்ப(ம்)+இள<இழ் +ஆன் = குப்பிழான். குப்பிழாய் என்பது ஒரு செடிப்பெயர். பண்டை நாளில் இச்செடி இங்கே மிகச் செறிவாக வளர்ந்து காடாகத் தோற்றம் அளித்தமையால், இச்செடிப்பெயரால் இப்பகுதி குப்பிழான் எனப் பெயர் பெறுவ தாயிற்று. குப்பிழாய் என்பது கால்நடைக்கு உணவாகும் இலை களை உடைய கொடிவகை எனத் தமிழ் லெக்சிக்கன் கூறு கின்றது (2:997). இந்துக்கள் தனித்து வாழும் இவ்வூரில் கமத் தொழிலே முதன்மை பெற்றுள்ளது. சைவக் குருக்களும், அந் தணர்களும் வாழையடி வாழையாக இங்கு வாழ்ந்து வந்தனர் என்பதற்கு இங்குள்ள குருக்கள் வளவு, குருக்கள்கேணி, ஐயர் கிணற்றடி என்பன சான்றாகின்றன. இங்குள்ள 'பள்ளிமால்' என்ற இடம் திண்ணைப்பள்ளி செல்வாக்குப் பெற்றிருந்தமை யைக் காட்டுகின்றது. இங்கே பிள்ளையார் கோயில்கள், வைரவர் கோயில்கள், அம்மன் கோயில்கள், வீரபத்திரர் கோயில், முருகன் கோயில் ஆகியன இடம்பெற்றுள்ளன.

இவ்வூர் அற்பை, விளுவளை, ஆனந்தக் குப்பிழான் எனவும் பெயர் பெறும் (தகவல்: மு.சி. இராசா சோதிடர், குப் பிழான்). காசிவாசி செந்திநாதஐயர் போன்ற தமிழ்ப் பெருமக்க ளும் இசைக் கலைஞர்களும், சட்ட வல்லுநர்களும் இவ்வூருக்குப் புகழ் ஈட்டிக் கொடுத்துள்ளனர். கற்கரை, பத்தகல், கோட்டார் வளவு, பள்ளிமால், குப்பிழான், தேராப்புலம், கழிமலை, வீர மனை, தைலங்கடவை, குயாம்புலம், குருக்கள் வளவு, எட்டுத் திட்டி முதலிய குறிச்சிப் பெயர்களும் இங்கு வழக்கிலுள்ளன. குப்பிழான் என்ற குறிச்சிப் பெயரே ஊர்ப்பெயராகவும் வழங்கு கிறது. குப்ப(ம்) + இள > இழ் + ஆன் = குப்பிழான். குப்பு > கும்பு > குப்பம் = ஊர், குவியல், திடல், காடு. எனவே குவியல் நெறியான திடர் நிலப்பகுதி என்ற பொருளிலும் இப்பெயர்ப் பொருள் விளக்கம் அமைகின்றது.

வயாவிழான் (வலி.வ.71.5)

வயா = அவா, வேட்கைப்பெருக்கம், கருப்ப காலத்து மயக்கை நோய், நோய், வயாப்பண்டம் (= கருக்கொண்ட மகளிர் விரும்பும் தின்பண்டம்); "வயாமது சீந்தில்" = படர்

கொடிவகை (Tinospora.. Cordifclia), வயான் = காரிப்புள்; வயானம் = பறவை, சுடுகாடு (த.லெ.6: 3497). வயாவிழான் என்ற ஊர்ப்பெயரை வசாவிளான், வசவை என்றும் அழைப்பர். வயா + விழான் என்ற இரு செடிகளின் கூட்டுநிலைப் பெய ராகவே இவ்விடப்பெயர் அமைந்துள்ளது.

'வரதவேளான்' என்னும் குறுநிலமன்னன் ஒருவன் தமிழ கத்திலிருந்து வந்து இவ்வூரில் தங்கி, தனது ஆட்சியை நிலை நாட்டினான் என்றும், அவனது பெயரே வரதவேளான் > வயா விளான் என மருவிற்றென்றும் கூறப்படுகிறது. வயம் + விழான் = வயவிழான். வயம் என்பதற்கு = வெற்றி, விழா என்ற பொருளும் உண்டு. விழா + அன் = விழான். வெற்றி விழாக் கொண்டாடிய இடம் எனவும் பொருள் கொள்ளல் தகும். இங் குள்ள களகாலை என்ற குறிச்சிப் பெயர் ஆராயத்தக்கது. களம் + கால் + ஐ = களகாலை. போர் நடைபெறுமிடம் களம், களபூமி என வழங்கப்பட்டமையும் நோக்கத்தக்கது.

செம்மண் நிறைந்த வளமான நிலப்பாங்குடையதாக, தோட்டப் பயிர்ச்செய்கைக்கு வாய்ப்பாக இவ்விடம் காணப்படு கிறது. சில இடங்களில் வெள்ளைக் கற்பார் நிலங்களும் காணப் படுகின்றன. இங்குவாழ்வோரில் 95 வீதமானோர் விவசாயிகளா வர். இவ்வூரில் ஒரு பெரிய கல்லூரியும் விவசாயப்பண்ணையும் அமைந்துள்ளன. இங்கு கண்ணகைஅம்மன், பிள்ளையார், முருகன், பத்திரகாளி, பாதாளவைரவர் முதலிய தெய்வங்களுக் குரிய கோயில்களும் உள்ளன. இவ்வூர் மக்களின் காவல் தெய்வமாகக் கண்ணகை போற்றப்படுகிறாள். கண்ணகி வழிபாடு இங்கு பெரிதும் நிலைத்துள்ளமையும், 'மலையாளிகள்' என்ற வழக்கு இங்கு இன்னும் நிலவுகின்றமையும் கேரளத் தொடர்பைப் பெரிதும் தொடுத்துக் காட்டுகின்றன.

இங்கேயுள்ள மானம்பிராய் என்ற இடத்தில் ஏழு கோயில் கள் ஒரே காணியில் அமைந்துள்ள அருட் சிறப்பும் பேசப்படு கிறது. இந்த ஏழு கோயில்கள் பற்றி மரபுவழிக் கதை யொன்றும் வழங்கி வருகிறது:

> மாருதப்புரவீகவல்லி கீரிமலைக்கு வந்து புனித தீர்த்தமாடி குதிரைமுகம் நீங்கி மனிதமுகம் பெற்றபோது மாவிட்டபுரத் திலே முருகனுக்குக் கோயில் அமைத்தாள் என்றும், அதனைச் சுற்றிவர உள்ள ஒவ்வோர் ஊரிலும் 7 கோயில்களை ஏற்படுத்

தினாள் என்றும், அவ்வாறு ஏற்பட்டனவே வயாவிழான் சப்த ஆலயங்கள் என்றும் கூறப்படுகிறது.

(தகவல்: எஸ். கலாநாயகி - வியாவிழான்)

இவ்வூரில் 40 வீதமானோர் றோமன் கத்தோலிக்கவராவர். புனித யாகப்பர், உத்தரிய மாதா முதலிய நான்கு கத்தோலிக்கத் தேவாலயங்களும், கத்தோலிக்கத் துறவிகளால் நடாத்தப்படும் விவசாயப் பண்ணை, (தோலகட்டிப் பண்ணை), திருக்கன்னியர் மடம் என்பனவும் இங்கமைந்துள்ளன.

வயாவிழான் பல வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு மயிலிட்டிக் கிராமசபையுடன் இணைக்கப்பட்டள்ளது. இங்கு களகாலை வேலடி, கரம்பக்கடவை, பயிலிக்கலட்டி, தோலகட்டி, மானம்பிராய், வசவண்டி, கலட்டி, திடற்புலம், குட்டியப்புலம், ஒட்டகப்புலம் என்ற குறிச்சிப் பெயர்களும் வழக்கிலுள்ளன. மருத்துவத்துறையில் புகழ் பெற்ற மரபில் வந்த சித்த மருத்துவர்களும், மனநோய் மருத்துவர்களும் தோன்றிப் பணிபுரிந்த ஊர் இதுவாகும். இவர்களில் 'பரியாரி இராசா' பரம்பரையினர் தொடர்ந்தும் இம் மருத்துவப் பணியை மேற்கொண்டு வருகின்றனர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் இடம்பெறுபவரும், யாழ்ப்பாண வைபவகௌமுதி என்ற நூலின் ஆசிரியருமான கல்லடி - வேலுப்பிள்ளை (கல்லடி வேலன்) இவ்வூரினர் ஆவார்.

விலங்கு - பறவைப் பெயர்கள் சுட்டிய இடங்கள்

இடப்பெயர்களின் தோற்ற வரலாறு முதலிலே நிலம், நீர் என்ற அடிப்படையில் தொடங்கி, பின்பு அவ்விடங்களிற் காணப்படும் தாவரங்களின் பெயர்களைப்பெற்று, அதன் பின்னர் அவ்விடங்களில் வாழும் உயிரினங்களின் பெயர்களை உணர்த்துமாறு வளர்ச்சிபெற்று வந்துள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது (கரு.நாகராசன்:1985 :17). தமிழகத்திலும் ஈழத்திலும் கிடைத்துள்ள இடப்பெயர்ப் பட்டியல்களை ஒப்பீட்டு அடிப்படையில் நோக்கும்போது விலங்குப் பெயர்கள் சுட்டும் இடப்பெயர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இதற்குரிய காரணங்களை ஆராயும்போது, பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியம் (1984) கூறும் கருத்து ஈண்டு மிகப் பொருத்தமாதல் காண்க:

'ஊர்ப் பெயர்கள் ஒரு இடத்தைக் குறியீட்டு நிலையில் உணர்த்தி அமைவன. எனவே அவ்விடத்திற்கு அடையாளமாக அங்குள்ள மரங்கள் அமைய, விலங்குகள் போன்றன வழங்கும் இடத்தின் பக்கத்தில் மக்கள் நெருங்கவும், மக்களைக் கண்டு அஞ்சி ஓடும் விலங்குகளை அடையாளங்களாகக் கொள்ள இயலாமையின் காரணமாக விலங்குகள் ஊர்ப்பெயர்களில் மிகுதியாக அமையவில்லை.'

யாழ்ப்பாண மாவட்டத்தின் இயற்கை அமைப்புக்கமைய இங்கு வாழ்ந்த சில விலங்குகள், பறவைகள் என்பனவற்றின் பெயர்கள் இடப்பெயராக அமைந்துள்ளன. இவ்வாறு ஆக்கம் பெற்ற இடப்பெயர்களில் பொருந்தியுள்ள விலங்குகளும் பறவைகளும் நிலத்திலும், நீரிலும் வாழும் தன்மையினைக் கொண்டு, முன்னொட்டு பின்னொட்டு என்ற நிலைகளில் அடைகளைப் பெற்று இடப்பெயர்கள் தோற்றம் பெறக் காரணமாய் அமைந்துள்ளன. இவ்வாறு ஆக்கம் பெற்ற இடப்பெயர்கள் இங்கே வரிசைப்படுத்தித் தரப்படுகின்றன:

விலங்குப் பெயர்கள் இணைந்த இடங்கள்:

அராலி	(வலி.மே.45அ.46)
ஆனைக்கோட்டை	(வலி.தெ.மே.40.1)
ஆனையிறவு	(கர.162..1)
கரடிபோக்கு	(கர.35.5)
கீரிமலை	(வலி.வ.64அ.1)
குரங்கிலிப்பன்	(வலி.தெ.மே.39.2)
சங்கத்தானை	(தென்ம.ந.21.10)
சங்கானை	(வலி.மெ.ப.31)
சாரையடி	(வடம.தெ.மே.139.4)
நுணாவில்	(தென்ம.99.1)
பண்டிசுட்டான்	(கர.166.3)
பண்டிமோட்டை	(கர.163.8)
புலிவளைந்தாள்	(கர.163.8)
முலவை	(வலி.வ.72.2)

பறவைப் பெயர்கள் இணைந்த இடங்கள்

ஆர்த்திமயிலிட்டி	(வலி.வ.72.1)
காக்காதீவு	(பு.175.1)
கிளிநொச்சி	(கர.ப.32)
கெருடாவில்	(தென்ம.ந.21.3:வடம.வ.கி.123.1)
கொக்குவில்	(நல்.36அ)
கௌதாரிமுனை	(பு.172.2)
சாவற்காடு	(வலி.தெ.மே.40.2)
பறவைபாஞ்சான்	(கர.ப.35.3)
புறாபொறுக்கிஆலடி	(வடம.தெ.மே.40.20)
மயிலங்காடு	(வலி.தெ.59.6)
மயிலப்பபை	(வலி.வ.64.3)
மயிலன்கூடல்	(வலி.வ.64.3)
மயிலிட்டி	(வலி.வ.ப.33.6)

யானையுடன் தொடர்புடைய இடப்பெயர்கள்

இலங்கையின் பெருங்காடுகளில் யானைகள் கூட்டமாக வாழ்கின்றன. யானைகளைப் பிடித்துப் பல்வேறு தேவைகளுக் குப் பயிற்றுவிப்போர் 'தனக்காரர்' எனப் பெயர் பெறுவர். யானை யுடன் தொடர்புடைய இடப்பெயர்கள் இலங்கையின் பல பாகங் களிலுங் காணப்படுகின்றன. அப்பெயர்கள் இலங்கை வரலாற்றி லிடம் பெற்ற போர்கள், வணிக நடவடிக்கைகள் முதலியவற்றை நினைவுபடுத்துவனவாகவுள்ளன.

கிரேக்க வரலாற்றாசிரியரான மெகஸ்தனிஸ் இலங்கை யிலிருந்து (தப்ரபானே) இந்தியாவுக்கு (தலைநிலம்) ஏற்றுமதி செய்யப்பட்ட யானைகள் பற்றி வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> 'பெருங்கடலில் இருப்பதும் தப்ரபானே என்று சொல்லப்படுவது மான - அந்தத்தீவில் ஏராளமான தென்னந்தோப்புகள் இருக் கின்றன. அந்தத் தீவில் யானைகள் கூட்டங் கூட்டமாக இருக் கின்றன. அந்த யானைகள் தலைநிலத்தில் இருக்கும் யானை களைக் காட்டிலும் உருவத்தில் பெரியவை. வலிவு மிக்கவை. எல்லா வகையிலும் நுண்ணறிவு மிகுந்தவை. தீவில் வாழும் மக்கள் அந்த யானைகளைப் பிடித்து எதிரிலுள்ள தலை

> நிலத்திற்கு ஏற்றமதி செய்கிறார்கள். அந்த வேலைக்காகவே அவர்கள் தனிப் படகுகளைக் கட்டுகிறார்கள். படகுகளுக்கு வேண்டிய மரம் தீவிலுள்ள காடுகளிற் கிடைக்கிறது. யானை கள் கலிங்க நாட்டு மன்னனுக்கு விற்கப்படுகின்றன.'
>
> (கே. ஏ. நீலகண்டசாஸ்திரி:1976:70 - 91)

ஒல்லாந்தர் காலத்தில் யானை வியாபாரம் சிறந்து விளங்கிற்று. காலி, மாத்தறை, வன்னிக்காடு, மாதோட்டம், முசலி, பெருங்களி, பூநகரி முதலிய பகுதிகளில் யானைகள் பிடிக்கப்பட்டு, ஆனையிறவு ஊடாக ஆனைக்கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டு அவை காரைதீவினூடாக (காரைநகர்) வடதேசத்துக்கு (கோல்கொண்டா. தஞ்சாவூர், வங்காளம்) அனுப்பப்பட்டன (க.வேலுப்பிள்ளை 1918: 125). இந்த யானை வணிகத்தைச் சான்றுபடுத்துவதாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆனைக்கோட்டை, ஆனையிறவு, சங்கத்தானை, சங்கானை என்னும் ஊர்ப்பெயர்களும், ஆனைப்பந்தி, ஆனைவிழுந்தான் முதலிய குறிச்சிப் பெயர்களும் யானையுடன் தொடர்புடையன வாகக் காணப்படுகின்றன.

ஆனைக்கோட்டை (வலி.தெ.மே.40.1)

யாழ்ப்பாணத்திலிருந்து வடமேற்கே 3மைல் தொலைவில் ஆனைக்கோட்டை அமைந்துள்ளது. மிகப் பெரியதான அவ்வூரின் உட்பிரிவுகளாக சாவற்காடு, முள்ளி, கூழாவடி, பள்ளங்காடு, பறையன்கடவை, சாண்டாகடவை, உயரப்புலம் ஆகிய இடங்கள் அமைந்துள்ளன. ஆனைக்கோட்டையின் பழைய பெயர் மணற் றிடல் எனக் கூறுவாருமுளர். இது தொடர்பாக ஒரு மரபுவழிக் கதையும் வழக்கிலுள்ளது:

> தமிழரசர் காலத்திலே அரச குடும்பத்து ஆடைகளைச் சலவை செய்வதற்குரிய நல்ல நீருள்ள இடந்தேடி வரும்படி சேவகர் களை அரசன் யானைமீது ஏற்றி அனுப்பினான். நன்னீருள்ள பகுதி மணற் பாங்கானதாக இருக்கும். அம் மணல் காலில் ஒட்டிக் கொள்ளாது. யானை மீதேறிச் சென்ற சேவகர்கள் ஆனைக்கோட்டையின் ஊடாகச் செல்லும்போது, யானையின் கால்களில் ஒட்டிக்கொள்ளாத மணல் செறிந்த ஓரிடத்தைக் கண்டு, அந்த இடத்தையே சலவைக்கு ஏற்ற இடமாகத்

தேர்ந்து கொண்டனர். இவ்விடத்து மணல் யானையின் காலில் ஒட்டிக் கொள்ளாத தன்மை காரணமாக இவ்விடம் 'ஆனை ஒட்டாத் திடல்' என்பதே பின்பு ஆனைக்கோட்டையாக மாறிற் றென்றும் கூறுவர்.

(தகவல்: சிவராசா விரிவுரையாளர், யாழ்-பல்கலைக்கழகம்)

ஆனை ஒட்டாத்திடல் என்பதற்கு யானைகள் தங்கி நிற்காத இடம் எனப் பொருள் கோடலும் பொருந்தும். ஏற்றுமதி யின் பொருட்டு யானைகளைக் கொண்டுவந்து இவ்விடத்திற் கட்டி வைத்துச் சில நாட்களில் அவற்றை ஏற்றுமதி செய்தல் வழக்கமாக இருந்தது. அதனைக் கண்ணுற்ற மக்கள் 'ஆனை ஒட்டாத் திடல்' என இவ்விடத்தைக் குறிப்பிட்டிருக்கலாம். எவ்வாறு பொருள் கொள்ளினும் இவ்விடம் யானையுடன் தொடர்புடையது என்பது தேற்றமாகிறது.

ஆனையிறவு (கர.162.1)

யாழ்ப்பாணக் குடாநாடும் ஈழத்தின் பெருநிலப்பரப்பும் கடலிலிருந்து பிரிபடாவண்ணம் தொடுத்து நிற்கும் பகுதி ஆனை யிறவாகும். இது யாழ்ப்பாணத்திலிருந்து 32மைல் தொலைவில் யாழ்ப்பாணம் + கண்டிப் பெருஞ்சாலையில் அமைந்துள்ளது. யானை > ஆனை + இறவு > ஆனையிறவு. இறவு என்பதற்கு = எல்லை, வீட்டிறப்பு என்ற கருத்தும் உள்ளது. ஆனையிறவுக் குத் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வணிக நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்ட யானைகளுக்கு இறை (வரி) அறவிடப்பட்ட இடமே (யானை + இறை) = யானையிறை > ஆனையிறவு எனப் பெயர் பெற்றதெனினும் அமையும். போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும் இவ்விடத்திலிருந்தே இந்தியச் சந்தைக்கு யானை களை ஏற்றுமதி செய்து பெரும் பணம் திரட்டினர் என ஹென்றி கேவ் கூறுவர் (Hentry.W.Cave:1908:602).

கோடை காலங்களில் ஆனையிறவுக் கடல் வற்றிப் போவது வழக்கம். அவ்வேளைகளிற் பண்டை நாட்களில் பூநகரிக் காட்டுப் பகுதிகளில் உள்ள யானைகள் கடும் வரட்சி காரணமாக யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள காடடர்ந்த பகுதிகளுக்கு மேய்ச் சலுக்காக வருதல் வழக்கமாகும். அவ்வாறு வடக்குநோக்கி வருவதற்கு முதலில் இறங்கிய இடமே ஆனையிறவு எனப்படு

வதாயிற்று என்றும் விளக்கம் கூறுவர். காட்டு விலங்குகள் நீர் வேட்கையினால் நீர் நிலை தேடிச் செல்லும் வழிகள் "இறக்கம்" எனப் பெயர்பெறும். அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம் (இறக்கம் + காமம்) என்ற ஓரிடமுண்டு. இந்த இடத்திலும் காட்டு யானைகள் பெருங் கூட்டமாக வந்து அங்குள்ள குளத்தில் நீர் அருந்திச் செல்வது வழக்கம். எனவே யானைகள் கூட்டமாக நீர்நிலையைத் தேடிவந்து இறங்கிய இடம் என்ற நிலையில் "ஆனையிறவு" என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் பொருந்தும்.

பண்டைநாட்களில் வன்னியிலிருந்து பெருந்தொகையான யானைகள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. வணிக நோக்கத்திற்காக வன்னியிலிருந்து கொண்டுவரப்பட்ட யானைகள் முதலில் இந்த இடத்தில் இறக்கப்பட்டமையினால் இவ்விடம் யானை யிறவு > ஆனையிறவு எனக் காரணப் பெயர் பெறுவதாயிற்று. இவ்விடத்திற்கு முன்பு 'உவர்நீர்த்தொட்டி' என்ற பெயர் வழங்கியதாகக் கூறுவர். வன்னியர் மரபில் வந்த 'பெத்த நாச்சன் வன்னிச்சி' ஆளும் காலத்தில் 'உவர்நீர்த்தொட்டி' என்ற இடம் 'ஆனையிறவு' எனப் புதுப்பெயர் பெறுவதாயிற்று. இதற் கொரு காரணமும் வருமாறு கூறப்படுகிறது:

> "அரசியின் காலத்தில் விவசாயிகளுக்கு வழக்கம்போல யானைத் தொல்லை இருந்தது. அவற்றை அரசி போக்கினாள். ஆனால் மதம் பிடித்த யானை ஒன்றின் அழிவினைத் தடுக்க எவராலும் முடியவில்லை. மதயானையை அடக்குவோருக்கு 1000 வராகன் பரிசு தருவதாக பறையறைவித்தும் பயன்தர வில்லை. அமைச்சர் அவை கூடியது. மந்திரி சொக்கநாத பிள்ளையிடம் யானையை அடக்கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. அப்போது மெய்க்காப்பதிகாரி ஒருவன் 'சொக்கநா தரல்ல அவரது மனைவியாலும் ஏலாது அந்த யானையைப் பிடிக்கும் வேலை' என்று ஒரு சொல் பாய்ச்சி விட்டான். வீடு திரும்பிய மந்திரி கவலையோடு இருப்பதைக் கண்ட அவர் மனைவி நடந்ததை அறிந்தாள். வீரத்தாய் மரபில் வந்த கற்புடைய பெண்டு அவர் மனைவி, அவருக்கு ஆறுதல் கூறினாள். மறுநாட் காலையில் வார்க்கயிறு என்பவற்றுடன் காடு நோக்கிப் புறப்பட்டாள். மதம் பிடித்த யானையைக் கண்டாள். தனது கற்பின் வலிமையால் வார்க் கயிற்றின் வடத்தை வீசி யானையை அகப்படுத்தினாள். அகப்படுத்திய யானை பின் தொடர அவள் முன்னே சென்றாள். 'உவர்

நீர்த் தொட்டி' என்னுமிடத்தில் யானையைக் கட்டிவிட்டு, கணவ னிடம் சென்றாள். இதையறிந்த மெய்க்காப்பதிகாரி தனது மானம் போய்விடும். அரசியின் தண்டனைக்கு ஆளாக வேண் டுமே எனப் பயந்து, சதியால் அவளைக் கொன்றுவிட்டான். மதம் பிடித்த களிறு கட்டுண்ட இடத்திற் பல நாட்கிடந்து பட்டினியால் இறந்தது. அதனாலேயே அந்த இடம் 'ஆனை இறவு' என அழைக்கப்படுகிறது."

(சி.வி. சின்னத்தம்பி:1958:15-20)

ஆனையிறவுப் பகுதியில் பெரும் உப்பளம் அமைந் துள்ளது. இங்கு டச்சுக்காரர் இரு சிறிய கோட்டைகள் கட்டினர். அவை அழிந்து போயின. வன்னியிரின் கட்டுப்பாட்டிலே ஆனை யிறவுப் பகுதி முன்னர் இருந்திருக்க வேண்டும். வன்னியரின் படை எடுப்பை அடிக்கடி ஒல்லாந்தர் எதிர்நோக்கியதால் தமது பாதுகாப்பிற்காக 1760இல் இங்கு ஒல்லாந்தர் கோட்டை கட்டினர். அக்கோட்டையைப் பின்னர் ஆங்கிலேயரும் பயன்படுத்தியுள் ளனர். 1803இல் பண்டார வன்னியன் ஆனையிறவுக் கோட்டை யையும் இயக்கச்சியில் அமைந்திருந்த கோட்டையையும் தாக் கினான் என்ற வரலாற்றுச் செய்தியும் அறியப்படுகிறது. ஒல்லாந்தர் இங்கு 1760இல் கோட்டை அமைத்தனர். பின்பு வந்த ஆங்கிலேயர் அக்கோட்டையை 1833 முதலாகப் பயன் படுத்தி வரலாயினர். 1948க்குப் பின்பு சிறிலங்கா அரசின் வனத் திணைக்களமும் சுங்க இலாகாவும் ஆனையிறவுத் தளத்தைத் தமது அலுவலகமாகப் பயன்படுத்தின. 1958இல் முதன்முதலாக இங்கு சிறிலங்கா அரசின் இராணுவ முகாம் அமைக்கப்பட்ட தைத் தொடர்ந்து இது அவர்களின் பெருந்தளமாக விரிவடைந் தது. தமிழீழத் தாயகத்தில் முதலில் அமைக்கப்பட்ட பெரிய இராணுவத் தளம் இதுவாகும்.

சங்கத்தானை (தென்ம.ந.21-10)

சங்கம் + அத்து + ஆனை = சங்கத்தானை. இது சாவகச்சேரி நகரின் கிழக்கே அமைந்துள்ள பகுதியாகும். இவ் விடம் பண்டை நாளிற் பெருங்காடாக இருந்தது என்றும், யானை கள் (சங்கம் = கூட்டம்) கூட்டமாக இங்கு வந்து மேய்ந்தன என்றும், அதனாலேயே இப்பெயர் வழங்கிற்றென்றும் கூறப்படு

கிறது. பூநகரிக் காட்டுப்பகுதி யானைகள் யானையிறவுக் கடல் வற்றுங் காலங்களில், அதனைக் கடந்து வந்து சங்கத்தானையில் மேய்ந்தன எனவும் கதைகள் கூறப்படுகின்றன. ஆனையிறவு ஊடாக வணிக நோக்கோடும் அல்லது அரச படைக்காகவும் யானைகளை நடாத்தி வந்து, பெரிய சோலையாகத் திகழ்ந்த இந்த இடத்திற் சேர்த்துக் கட்டி வைத்திருந்தனர் எனவும், கூட்டமாக யானைகள் தரித்து நின்ற இடம் என்ற நிலையிற் சங்கத்தானை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கருதப் படுகிறது. பின்னர் இங்கிருந்து ஆனைக்கோட்டை, ஆனைப்பந்தி முதலிய இடங்களுக்கு யானைகளை நடாத்திச் சென்றுள்ளனர்.

சங்கானை

சங்கு + ஆனை = சங்கானை. இவ்வூரின் பெயர் மலையாளத்திலே உள்ள சங்கானாச்சேரி என்பதன் சிதைவு எனவும் கருதலாம். "சங்கானாச்சேரி என்பது சங்கனையாகிக் காலாந்தரத்தில் சங்கானையாதல் அசாத்தியமன்று" என்கிறார் குலசபாநாதன் (1955 பக்.30). பண்டைய நகராம் தொல்புரத்திற்கு அண்மையில் சங்கானை அமைந்திருப்பதால், தொல்புரக் கோட் டைக்குரிய யானைப்படை இங்கே தரித்திருந்திருக்கலாம். சங்கத் தானைக்கும் சங்கானைக்கும் பெயரளவில் நடுக்குறை காரண மாகப் பெயர் ஒற்றுமை இருக்குமோ எனவும் நோக்க இடமுண்டு.

சங்கு என்பதை முதன்மையாகக் கொண்டு இவ்விடப் பெயருக்கு விளக்கம் கூறினும் அமையும். சங்கானை, சங்க ரத்தை என்ற இடங்கள் அருகருகே அமைந்துள்ளன. எனவே சங்கானை (சங்கு + ஆனை) என்பதில் சங்கு முதன்மை பெறுதல் நோக்கத்தக்கதாம். கடலிலிருந்து சங்குகள் கொண்டு வரப்பட்டு பெரிய குவியலாகக் குவிக்கப்பட்டிருந்த காட்சி யானை யை நினைவுபடுத்தியமையால் யானைபோல் உயரமான சங்குக் குவியல்கள் காணப்பட்ட இடம் சங்கானை ஆயிற்று என்றுங் கொள்ளலாம்.

இயல் ஒன்பது

சிறப்புநிலை இடப்பெயர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்து இடப்பெயர்கள் இயற்கை நிலை, செயற்கை நிலைப் பெயர்க் கூறுகளின் அடியாகத் தோற்றம் பெற்றுள்ளமை பற்றி முன்னருள்ள இயல்களில் விளக்கப்பட்டது. ஆயினும் அவ்வகையில் வகைப்படுத்தவியலாத சில இடப்பெயர் களும் காணப்படுகின்றன. அவ்விடப் பெயர்களைச் சிறப்புநிலை இடப்பெயர்கள், எண் ஈற்று இடப்பெயர்கள், சிறப்புவிகுதி இடப் பெயர்கள் என வகுத்து, அவைபற்றி இவ்வியலில் ஆராயப்படு கின்றது.

சிறப்புநிலை இடப்பெயர்கள்

அத்துளு (வடம.தெ.மே.119அ.1)

அ + துளு > அத்துளு. இதனைத் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சொல்லாகக் கருதலாம். இப்பெயரில் பின்னொட்டாக அமைந்துள்ள துளு என்பது திராவிட மொழிகளில் ஒன்றாகும். அக்காதியமொழியில் அத்தலூ என்ற ஒரு சொல் லுண்டு. அச்சொல்லின் பொருள் வானம் இருளடைதல் என்று தாவீதுஅடிகள் கூறுவர் (1990:30). இவ்விடப் பெயர் சுட்டும் அத்துளு என்பது காடுகளின் உள்ளே இருள் சூழ்ந்த இடத்தில் கோயில் அமைந்திருந்த இடம் என்ற அடிப்படையில் இப்பெயர் ஆக்கம் பெற்றுள்ளது.

கரவெட்டியின் கிழக்குப் பக்கமாக அத்துளு என்ற இடம் அமைந்துள்ளது. இவ்விடத்தில் பழைமை மிக்க கண்ணகி ஆலயம் காணப்படுகிறது. நெல் வயல்கள் சூழ, தாமரைக் குளமும் பொருந்த, அயற்புறங்களில் குமிழ், மகிழ், கடம்பு, வேம்பு ஆகிய பல்வகை மரங்கள் மலிய, இம்மரங்களில் ஒட்டி, சிங்கிலி, குறிஞ்சா, சூரை, தவிட்டை முதலிய கொடிகள் படர்ந்து மூடி மறைக்கின்ற சோலையின் நடுவே, இயற்கை அரணை உருவாக்கி, அத்துளு அம்மன் கோயில் அமைந்திருக்கின்றது.

எனவே இருள்சூழ்ந்த இடம் என்ற பொருளில் அத்துலூ என்ற பெயர் வழங்கி, பின்னாளில் அத்துளு எனத் திரிபுபட்டதோ எனவும் நோக்கலாம். இற்றைக்கு இரு நூறாண்டுகளுக்கு மேலாக இங்கு அம்மன் வழிபாடு இருந்து வருவதாகக் கூறப் படுகிறது.

சிங்களத்தில் 'அத்துளு' என்பது உள்ளே, உட்புறம் எனப் பொருள்படும். இதனைச் ஒலி ஒற்றுமை கருதி 'அத்துளு' என்ற சிங்களச் சொல்லுடன் ஒப்பிட்டு, இதற்குச் சிங்களமொழி விளக்கம் கூறுவாருமுளர். இவ்விடத்தில் அக்காதியமொழி பேசிய திராவிடர் பண்டை நாளில் வாழ்ந்தமைக்குரிய வேறு சான்று களைத் தேடிப் பெறும்போது, உண்மைகள் வெளிப்படலாம்.

இயக்கச்சி (பச்.7.152.1)

இயம் + கச்சி = இயக்கச்சி. இயக்கி என்பது ஒரு கிராமியத் தெய்வப் பெயர் ஆகும். இயம் = ஒலி; இயம் = இயைவு = வழி. இயக்கம் = நடை; இயக்கு = போக்கு, அலைவு. இலக்கிய வழக்கில் கச்சி என்பது கட்சி என வழங்கி யுள்ளமையைக் காணலாம். "கட்சியுட் காரி கடிய குரலிசைத்துக் காட்டும்.. .. " எனச் சிலப்பதிகாரத்திலும் (12:12:3), ''கட்சியுட் காரிகழலும்.. .. '' எனப் புறப்பொருள் வெண்பாமாலையிலும் (வெட்சி-1) கட்சி < கச்சி என்ற சொல் பயின்று வந்துள்ளது. இத்தகைய சொற்பொருள் விளக்கங்களின் அடிப்படையில் நோக் கும்போது இயக்கச்சி என்பது பண்டைத் தமிழ் மன்னர் காலத்துப் 'படை இயங்கு அரவம்' எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் போர்ப்படை அணிவகுத்துச் சென்ற இடமாக இருக்குமோவென ஆராய்தல் பயனுடையதாகும். இயம் + கச்சி = மக்கள் நடமாடிய காட்டுவழிப் பகுதி என்ற பொருளும் இப்பெயரிற் பொதிந்து காணப்படுகிறது. இது தென்மராட்சியின் தென்பகுதியில் அமைந் துள்ள வளமான பகுதியாகும்.

உசன் (தென்ம.9.107.10)

தென்மராட்சிப் பகுதியிலுள்ள செழிப்பான ஊர்களில் உசன் என்ற இடமும் ஒன்றாகும். மிருசுவில் தொடர்வண்டி நிலையத்திற்குத் தெற்காக உசன்பதி பரந்து காணப்படுகிறது.

இவ்வூரின் கிழக்கு எல்லையில் கரம்பகம், மேற்கில் தவசிகுளம், வடக்கில் எழுதுமட்டுவாள், மிருசுவில், தெற்கே கெற்பேலி, விடத்தற்பளை ஆகிய இடங்கள் எல்லை ஊர்களாக அமைந் துள்ளன. இவ்வூரில் பழைமை வாய்ந்த உசன்கந்தசுவாமி கோயில், கஜகேணிப்பிள்ளையார்கோயில்,வீரபத்திரர்கோயில், சித்தர் சடைவரதர் கோயில் என்பன அமைந்துள்ளன. நெற்களனி கள், குளங்கள், தென்னஞ்சோலைகள் என்பன இவ்வூருக்கு வனப்பைக் கொடுக்கின்றன. உசன் என்ற பெயர்க் காரணம் ஐயத்திற்குரியதாகவே உள்ளது. இவ்வூரில் வாழும் மருத்துவர் கந்தையா மாணிக்கம் போன்ற பெரியோர்களை அணுகி உசன். என்பதன் பெயர் விளக்கம் பற்றி உசாவினோம். இப்பெயர் விளக்கம் இன்னும் புதிராகவே உள்ளது. எனினும் சாவகச்சேரிப் பகுதியில் இவ்வூர் அமைந்திருப்பதாலும், சாவகர் தொடர்பு இப் பகுதியில் முன்னர் இருந்தமையாலும் ‘ஹுசைன்’ என்ற முஸ்லிம் ஆட்பெயருடன் தொடர்புடையதாக (“ஹுசைன்’ > உசன்) இப்பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம் எனக் கருதப் படுகிறது.

இவ்வூர்க் காணிகள் பற்றிய பழைய தோம்புகளில் முஸ்லீம் பெயர்களிற் காணிப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. உசன் பற்றி ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1933:86) குறிப்பிடும் போது,

> “இக் காலத்திற் காயற்ட்டினத்திலிருந்து சில சோனகர் வந்து மிருசுவில் என்னுமிடத்திற் குடியேறினார்கள். அவர் கள் குடிகொண்ட இடம் “உசன்” என வழங்குகின்றது. ஆச் சோனகர்கள் அங்கு நின்றும் அகன்று சோனகன் புலவில் (மீசாலை) சிறிது காலம் தங்கினர்”.

சாவகச்சேரியில் யாவகர் தொடர்பு ஏற்பட்ட காலத்தில் இங்கும் முஸ்லீம்கள் வணிகத்தொடர்பு கொண்டிருக்கலாம் என்ற கருத்தை அவ்வூரைச் சேர்ந்த பெ. செல்லத்துரை ஆசிரியர், சமாதான நீதவான் கே. நடராசா, டாக்டர் தா.க. மாணிக்கம் ஆகியோர் ஒப்புக்கொள்வர்.

எழுதுமட்டுவாள் (தென்ம.110.1-2)

தென்மராட்சிப் பகுதியில் கொடிகாமத்திற்குக் கிழக்கே கண்டி வீதியில் இவ்வூர் அமைந்துள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் இப்பகுதி தேவாலயங்களால் (parishes) நிருவகிக்கப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் தென்மராட்சி யின் கோயில்பற்று தேவாலயம் இங்கு இருந்தது. டச்சு வணிகக் குழு வன்னிப்பகுதியில் கொள்வனவு செய்த யானைகளைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன்பு இவ்வூரிலேயே கட்டிவைத்திருந்தனர் என்கிறார் சைமன்காசிச்செட்டி (1834:88). யானைகள் ஏற்றுமதி செய்யமுன் அவை பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்யும்வரை அந்த யானைகள் ஈழமண்ணுக்குரியன. அதன்பின்பு ஏற்றுமதிப் பொருள்களாகிவிடும். இந்நிலையில் யானையைக் குறித்து எழுதுமட்டும்வாழ், எழுதுமட்டுவாள் என்ற பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கூறுவர். இவ்வூரை ஒல்லாந் தர் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றியதும் தமது ஏற்றுமதிப் பொருட்களை இங்கு சேமித்து வைத்திருந்தனர். எனவே ஏற்றும் மட்டும்வாழ் > எழுதுமட்டுவாழ் > எழுதுமட்டுவாள் என்ற இடப்பெயர்கள் திரிந்து இன்றைய எழுதுமட்டுவாள் என்ற பெயர் ஏற்படுதல் இயல்பாயிற்று. எழுதுமட்டுவாள் என்ற பெயரின் அடிப்படையில் பல நகைச்சுவையான நாட்டார்கதைகள் வழங்கு வதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வூரில் ஆயத்தடி, கொற்பிட்டி ஏற்றம், ஒட்டுவெளி, சிலாவில், ஆசைப்பிள்ளை ஏற்றம் முதலிய குறிச்சிப்பெயர்கள் வழக்கிலுள்ளன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களுக்கு இங்கு வரி அறவிடப்பட்ட தன் காரணமாக (ஆயம் = வரி) ஆயத்தடி என்ற பெயர் ஏற் பட்டிருக்கலாம். கொல்லர் + பிட்டி + ஏற்றம் > கொற்பிட்டிஏற்றம் என வழங்கிற்று. இவ்விடம் சற்று ஏற்றமாக இருத்தலும் குறிப் பிடத்தக்கது. வயல்வெளி உள்ள இடம் காரணப்பெயரால் ஒட்டு வெளி என்றாயிற்று. நெற்கதிர்களை அறுவடை செய்த பின்னர் எஞ்சி நிற்கும் நெற்பயிரின் அடிக்கட்டை ஒட்டு, ஒட்டுத் தாள் எனப் பெயர் பெறும். சிலாதர் + வில் > சிலாவில் என்றா யிற்று. சிலாதர் என்பதற்கு மருதநில மக்கள் எனப் பொருள் கூறுகிறது தமிழ்அகராதி. இப்பகுதி மருதநிலப் பகுதியாக

அமைந்திருத்தல் சிலாதர்வில் என்ற இடப்பெயர் ஆக்கத்திற்குக் காரணமாயிற்று. இங்கு சிவன்கோயில், பெரியகேணிப் பிள்ளை யார்கோயில், அம்மன்கோயில், முருகன்கோயில் என்பனவும் அமைந்துள்ளன.

கப்புதூ (வடம்.தெ.மே.119.அ.2)

வடமராட்சிப் பகுதியின் தென்எல்லையில் வயல் சூழ்ந்த ஓரிடமாகக் கப்புதூ அமைந்துள்ளது. இதன் தெற்கே பரவைக் கடலும், கண்டல், தில்லை முதலிய மரங்கள் செறிந்த காடும், புதர்ப் பகுதிகளும் காணப்படுகின்றன. இதனைக் கும்பிக்காடு என்றும் கப்புதுவெளி என்றும் வழங்குவர். எனவே கப்புதுவெளி > கப்புதூ ஆயிற்று.

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் (18ம் நூற்றாண்டு) கர வெட்டியைச் சேர்ந்த செய்துங்கமாப்பாண வேலாயுதமுதலியார் மீது பாடிய 'கரவைவேலன்கோவை' என்ற நூலைக் கப்புதூவெளி என்னும் இடத்தில் அமைக்கப்பட்ட எல்லைமானப் பந்தலில் இருந்தே பாடினர் என்பது நூலோர் வழக்கு. இப் புலவரை மரக்கிளைகளாலான கப்புகள் நடப்பட்டு, அதில் பந்தரிட்டு வெள்ளை கட்டிப் பாராட்டுச் செய்த இடம் "எல்லைமானப் பந் தரடி' என வழங்குகின்றது. இப் பந்தரடி கப்புதூவெளியில் உள்ளது. இது பண்டை நாளில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டு வில் வழியாகக் கரவெட்டிக்குப் போகும் வழியாகவும் இருந்தது. இங்கு கி.பி.15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிள்ளையார் சிலை ஒன்று நிலத்தின் கீழே கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இவ்விடத்தின் பழைமையைக் குறிப்பிடுகிறது. பிள்ளையார் கோயில் ஒன்றும் இங்கே உள்ளது.

கரம்பொன் (தீவு.ப.34.4)

வேலணைத் தீவின் வடக்கே ஊர்காவல்துறைக்கு அணித் தாய் உள்ள இடம் கரம்பொன். இதன் பழைய பெயர் கரம்பன் என்பதாகும். மலையாளத்திலே சேரிப் பெயராக உள்ள கரம்பன் என்ற பெயரை ஈண்டு ஒப்பிட்டு நோக்கலாம். கல்வியாளர் இதனைத் திருத்திக் கரம்பொன் என எழுதினர் என்கிறார் குலச

பாநாதன் (1955:.30). கரம்பொன் என்ற பெயரே இன்று பெரிதும் வழக்கிலுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்கரம்பனூர் மக் கள் இங்கு வந்து குடியேறியபோது இட்டு வழங்கிய கரம்பன் என்ற பெயர் பின்னர் கரம்பொன் என மாற்றப்படுவதாயிற்று. இங்கு தெலுங்குத் தொடர்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

உடுப்புத் தோய்த்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு கல் லிலே 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழில் பொறிக்கப் பட்ட கல்வெட்டு ஒன்று இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டின் தொடக்கப் பகுதி சிதைந்து போய்விட்டது. எஞ்சிய பகுதி வருமாறு:

1. .... னபது.........
2. .... யனாத சுவாமினாத ....
3. ....னி திருவி (ளம்) பன ....
4. .... லாபட்ட (னும்) திருமலைனா
5. ...-கர் புள்ளி (ய) மாக பெரு (ந்து).....
6. ......- (ந்த)ம் பிராலும் விட்ட நிலம்
7. ஒரு மா இந்த புண்ணியத்
8. தை பரிபாலனம் (ப) ண்ணி
9. னபெர் மாற் கண்டரயி (ம)
10. ராய மககா ராசனா யிருப்பார்கள்
11. விக்கினம் பண்ணின பெர் கெ
12. ங்கை (க) ரையிலெ காராம்ப
13. சுவை கொண்ண பெர்க
14. .... ன்.........................

கோயில் ஒன்றுக்கு மாநிலம் அறக்கொடையாக வழங் கப்பட்டமையை இக் கல்வெட்டுக் கூறுகின்றது. கல்வெட்டுச் செய்தி பொறிக்கப்பட்ட இக் கல் சிலாபப் பகுதியிலிருந்து வந்த தோணி ஒன்றுக்குப் பாரக்கல்லாகக் கரம்பன் வரை கொண்டு வரப்பட்டது என்று இது பற்றித் அறிந்தவர்கள் கூறுவர். ஒருவேளை இந்தியக் கரையிலிருந்தும் இது கொண்டு வரப்பட் டிருக்கலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது (க. இந்திர பாலா:1970:258-289).

இவ்வூரின் கிழக்கிலும், மேற்கிலும் முருகமூர்த்தி கோவில்கள் உள்ளன. கரம் பன்னிரண்டு உடையான் அருள்பாலிக்கும் இடம் இது என்றும், கரம் + பன்னிரண்டு என்ற சொற்களின் அடியாகவே கரம்பன் என்ற இடப்பெயர் தோன்றியது என்றும், விளக்கம் கூறப்பட்டுள்ளது. இவ்வூரின் தென்எல்லையில் சுருவில், கிழக்கில் நாரந்தனை, வடபால் ஊர்காவல்துறையும் கடலும் அமைந்துள்ளன. இங்கு கிறிஸ்துராசாகோயில், புனித அன்னம்மாள் கோயில், அன்னை வேளாங்கன்னி கோயில், சின்னமடு மாதாகோயில் ஆகியனவும் உள.

இதன் குறிச்சிகளாக ஒழுவில், தணுவில், பாலாவி, பாலக்காடு, செருக்கன், தம்பாட்டி, மெலிஞ்சிமுனை, திட்டில், உவாத்திபுலம், அம்பலப்புலம், பருத்தியடைப்பு முதலியன உள்ளன. கரம்பொன் (வடம.தெ.மே.124.1) என்ற பெயருடைய ஓரிடம் கரவெட்டிப் பகுதியிலும் காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

சித்திரமேழி (வலி.மே.50அ.4)

வலிகாமம் மேற்கேயுள்ள மாதகல்துறைக்குத் தென்கிழக்காகவும், சேந்தான் குளத்திற்கு மேற்காகவும் இவ்வூர் அமைந்துள்ளது. சித்திரம் + மேழி = சித்திரமேழி. அழகிய வேலைப்பாடுடைய கலப்பை என்ற பொருளில், இருமடிஆகுபெயராய் மக்களையும், இடத்தையும் சுட்டிற்று. இப் பெயர் பல்லவ, சோழர் காலத்துத் தொடர்பைச் சான்றுபடுத்துவதாக உள்ளது. 'சித்திரமேழி' என்பது விவசாயக்குழு, வேளாளர்களின் விவசாயக் கூட்டு நிறுவனம், விவசாயக் குழுவின் சின்னம், விவசாய நிலத்தின் எல்லைகளில் நாட்டப்படும் சின்னம் என டி.சி. சிஸ்கார் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

> "Chitrameli (S.I.T.I.) also spelt Sittirameli an organization of the agriculturists; agricultural corporation of tha Vellalas; the plough which was the emblem of the organization of boundary stone with the representation of the plough emblem planted to mark the limits of their land". (D.C. Siscarr; 1966, P.75. See also; 291, 346).

தமிழகத்துச் சித்திரமேழி மக்கள் இங்கு வந்து குடியேறிய போது தம் தாய்நாட்டுப் பெயரை இங்கும் சூட்டலானார்கள் எனக் கொள்வதிலே தவறில்லை. ஜடாவர்மன் ஸ்ரீபல்லவ பாண்டியனது ஆட்சியாண்டிற் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டின் பின்வரும் சில வரிகள் சித்திரமேழிபற்றி மேலும் சில தகவல்களைத் தருகின்றன:

> 'உத்தம நீதி உயர் பெருங் கீர்த்தி
> முத்தமிழ் மாலை முழுமையும் நிரந்த
> சித்திமேழிப் பெரிய நாட்டோமும்'
> (South Indian Inscription,Vol..xv.Pt.iv.p.154)

இதிற் 'சித்திரமேழிப் பெரிய நாட்டார்' என்ற தொடர் இடம்பெறக் காணலாம். இச் சித்திரமேழிப் பெரிய நாட்டினரே இங்கும் வந்து குடியேறியிருக்கலாம். இவர்களைப் பற்றி இரா. நாகசாமி வருமாறு கூறுகிறார்:

> 'சித்திரமேழி பெரிய நாட்டார் என்போர் உழவையே தங்கள் தொழிலாகக் கொண்டு தமிழகத்தில் வாழ்ந்த ஒரு குடிமக்களாவர். இவர்கள் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் சீரும் சிறப்புமாக வாழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் பல நாடுகளிலும் வாழ்ந்திருக் கிறார்கள். கலப்பையையே தங்களது கொடியாகக் கொண்டிருந்தனர். இத்தகு செய்திகள் யாவும் சோழர் காலத்துக் கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன'
> (இரா.நாகசாமி:1973:166-169)

தென்னிந்தியாவில் பிரான்மலை என்ற இடத்திலுள்ள ஒரு கல்வெட்டு சித்திரமேழியினைப் பற்றிப் பல செய்திகளைத் தருகின்றது (இரா. நாகசாமி:1973:188-189). தமிழகத்தில் பிரான்மலைக்கும் சித்திரமேழிக்கும் தொடர்பு இருக்கிறது. அதே போன்று இங்கும் பிரான்பற்று, சித்திரமேழி என்ற இரு இடங்களும் ஒரே பகுதியில் அமைந்த அயல் ஊர்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. எனவே சித்திரமேழிப் பெரிய நாட்டவரே இங்கு வந்து குடியேறினர் என்ற எமது கருத்து மேலும் வலுப்பெறுகிறது.

சித்திரமேழி பசுமையான புற்றரைகளும் வயல்வெளி களும் அமைந்த வளமான ஊராகும். இங்கே வீடுகளில் பசுமாடு களை வளர்த்து, தயிர், நெய் தயாரித்தல் ஆகியன வீட்டுத் தொழிலாக நடைபெற்றுவருகிறது. வலிகாமம் மேற்குப் பகுதியில் பால், தயிர், நெய் என்பனவற்றுக்குப் பெயர் பெற்ற இடமாகச் சித்திரமேழி விளங்குதல் குறிப்பிடத்தக்கதாகும்.

பரந்தன் (கர.5.164)

யாழ்ப்பாணம் - கண்டி பெருந்தெருவில் ஆனையிறவுக் குத் தெற்கே அமைந்துள்ள நகர் பரந்தன் ஆகும். இரசாயனத் தொழிற்சாலையுடன் இந் நகர் சிறந்து விளங்குகிறது. பரந்தன் என்பது வரலாற்றுத் தொடர்புடைய இடப்பெயராகும். தமிழக அரசர்களின் படை எடுப்பின் நினைவாகப் பல இடப்பெயர்கள் தோற்றம் பெற்று வழங்கி வந்துள்ளமை இந்நூலிற் பல இடங் களிற் குறிப்பிடப்பட்டுள்ளது. சோழப் பேரரசின் எழுச்சிக்கு வித்திட்ட முதலாம் பராந்தகன் (கி.பி.907-953) பாண்டி நாட்டுக் குப் படை எடுத்துச் சென்று மூன்றாம் இராசசிம்மனை கி.பி. 910இல் வெற்றி கண்டான். இப்போரில் பாண்டிய மன்னன் சிங்கள மன்னன் ஐந்தாம் காசியப்பனின் (கி.பி.914-923) உதவியை நாடியிருந்தான். இதனால் பராந்தகனுக்குச் சிங்களப் படை எதிரியாயிற்று. தோல்வி கண்ட பாண்டியன் தனது முடி யையும் சிம்மாசனத்தையும் சிங்கள மன்னனிடம் பாதுகாப்புக்காக ஒப்படைத்திருந்தான். இவற்றைப் பெறுவதற்காகப் பராந்தகன் ஈழத்திற்குப் படை எடுத்து வந்தபோது, அவனை எதிர்கொள்ள முடியாது, அப்போது ஆட்சியிலிருந்த உதயன் இப்பொருட் களுடன் உரோகணத்திற்கு ஓடி மறைந்தான் என சூளவம்சம் விரிவாகக் கூறுகிறது. இப்படை எடுப்பின் நினைவாகவே "பராந் தகன்" என்ற இடப்பெயர் தோற்றம் பெற்று, அது காலப்போக்கில் பராந்தகன் > பரந்தன் என மருவி வழங்குவதாயிற்று எனக் கொள்வதே பொருத்தமாகும்.

குஞ்சுப்பரந்தன் (கர.5-165.3)

முதலாம் பராந்தகனுக்கு "குஞ்சரமல்லன்" என்பதும் ஒரு சிறப்புப் பெயராகும். குஞ்சரம் > குஞ்சு எனவும், பராந்தகன்

> பரந்தன் எனவும் மருவி, பின்னர் இரு சொற்களும் இணைந்து (குஞ்சு +பரந்தன்) குஞ்சுப்பரந்தன் என வழங்கி வருவதாயிற்று. முதலாம் பராந்தகனின் ஆட்சி பூநகரிப் பகுதியில் இருந்தமைக் குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு 1985இல் முதுமக்கள்தாழி கண்டுபிடிக்கப்பட்டமை இவ்விடத்தின் பழைமையைக் குறிப்ப தாகும்.

புளியம்பொக்கனை (கர:168)

புளி + அம் + பொக்கணை = புளியம்பொக்கணை. பொக்கணை என்பது = பள்ளம், குழி, பொந்து எனப் பொருள் குறிக்கும் சொல்லாகும். கிளிநொச்சியிலிருந்து கிழக்கே 15 மைல் பொறிக்கப்பட்ட எல்லைக்கல் தொலைவில் புளியம்பொக் கணை அமைந்துள்ளது. புளியம்பொக்கணை என்ற இடத்தில் முன்பு புளியமரங்கள் செறிந்து காணப்பட்டமையாலும், இவ்விடம் நிலத்தோற்றத்தில் பள்ளமாக இருந்தமையாலும் புளியம்பொக் கணை என்ற பெயர் ஏற்படுவதாயிற்று. இப் பெயருக்கு வேறு விளக்கம் கூறும் வகையில் நாட்டார்கதை ஒன்று வருமாறு வழங்குகிறது:

> 'செம்பாத்து என்ற பெயருடைய கிழவிக்கு ஏழு பிள்ளைகளுடன் ஏழு பாம்புகளும் பிறந்தன. ஒரு நாள் பாம்புகள் முற்றத்தில் விளையாடும்போது, கோபத்துடன் கிழவி 'சீ, போ' எனக் கடிந்து அவற்றைக் கலைத்தாள். இதனால் சீற்றம் கொண்ட ஏழு பாம்புகளும் காட்டினுள் சென்றுவிட்டன. பின்பு கிழவியும் கிழவனும் இப் பாம்புகளைத் தேடியும் காணாது வெகு கவலை யடைந்தனர். ஒருநாள் இறைவன் கிழவனின் கனவில் தோன்றி பாம்புகள் இருக்குமிடத்தைக் கூற, அக் கிழவன் சென்று பாம்பு கள் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தார். (இப்போது அவ்விடம் புதூர் எனப்படுகிறது) ஏழு பாம்புகளில் முதல் ஆறும் கிழவனி டம் வரமறுத்தன. கடைசிப்பாம்பான சூழைவாலன் தந்தையுடன் வந்து புளியமரப் பொந்தில் இருந்தது. இதன்பின்னர் இப்பாம் புக்குப் பாலும் பழமும் வைத்து வழிபட்டு வந்தனர்.'

இக் கதையை நோக்கும்போது சூழலுக்கு ஏற்ற வகை யில் இயற்கையை வழிபடும் காரணகாரியத் தொடர்பாக ஏற்பட்ட கதையாக இது காணப்படுகிறது. காட்டுப்பகுதியில் வாழ்ந்த

மக்கள் பாம்புத் தொல்லையிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் நோக்குடன் நடாத்திய பாம்பு வழிபாட்டிற்குக் கற்பிக்கப்பட்ட கதையாகவே இது தென்படுகிறது. எவ்வாறாயினும் இவ்விடப் பெயர் இயற்கையோடொட்டிய மரம் - பொந்து - பாம்பு என்பவற்றின் தொடர்பாக ஆக்கம் பெற்றிருத்தலை நோக்கலாம்.

மாசர் (பச்:160.7)

இது சோரன்பற்றுக் கிராமசேவகர் பிரிவிலுள்ள ஒரு மருத நிலத்தூர். இரா. நாகசாமி பதிப்பித்துள்ள தஞ்சாவூர் பெருவுடையார் கோயிற் கல்வெட்டுக்களில் "முன்துடையாரை மாற்றி ...." எனத் தொடங்கும் கல்வெட்டுச் செய்தியில் 'மாசர்' என்ற ஊர்ப் பெயர், வேளாளர் வாழுமிடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தமிழகத்திலுள்ள மாசர் என்ற ஊரில் வாழ்ந்தோர், இங்கு வந்து குடியேறினர் எனக் கூறுதல் பொருந்தும். இப் பகுதியில் சோழராட்சியும் சோழர் குடியேற்றமும் ஏற்பட்டிருந்தமைக்கு இவ்விடப் பெயரும் சான்றாதல் காண்க. மாசார் என இவ்விடப் பெயர் வழங்கப்படுதலுமுண்டு.

மாதகல் (வலி.தெ.மே52.5)

மாது + ஏகல் > மாதகல் எனப் புணர்ந்தது என்பர். இந்த மாது யார் என்பதில் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்குமுனையின் கடற்கரைப் பகுதியிலுள்ள பழம்பதியே மாதகல். தேவநம்பியதீசன் காலத்தில் (கி.மு.247-207) இலங்கைக்கு வெள்ளரசுக்கிளையுடன் கடல்வழியாக வந்த சங்கமித்தை ஜம்புகோளப் பட்டினத்தில் இறங்கினாள் என்பதும், அது சம்பில்துறை என்ற இடம் என்பதும், அதற்கு அண்மையில் மாதகல்துறை அமைந்துள்ளது என்பதும் ஈண்டு நோக்கத்தக்கன.

ஈழத்திற்குக் கண்ணகி வழிபாடு இத் துறையினூடாகவே கொண்டுவரப்பட்டதென்றும், கண்ணகிசிலை முதன்முதலாக இத் துறையில் இறக்கப்பட்டமையினால் (மாது + கல் = கண்ணகி சிலை) மாதகல் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர். மாது + கல் = மாதகல். மாது = உமாதேவி; கல் = உருவச்சிலை.

உமாதேவியின் உருவச்சிலையை வைத்து வழிபட்ட இடம் என்ற பொருளில் இப் பெயர் ஏற்பட்டது என்றும் விளக்கம் கூறுவர். மணிமேகலையில் கூறப்படுவதுபோன்று மணிமேகலாத் தெய்வமும், ஈழவரலாற்று நூல்களிலே கூறப்படும் மாருதப்பிரவீக வல்லியும் வந்திறங்கிய இடம் இதுவாக இருக்கலாம்.

மிசுரி (தென்ம.100.4)

"கள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிரி.." (அகநானூறு:149)

என வரும் பாடல் சங்க காலத்திலே வணிக மையமாகத் திகழ்ந்த முசிரிப்பட்டினம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இம் முசிரிப் பட்டினத்திற்கும் யாழ்ப்பாணத்து மிசுரிக்கும் தொடர்பு உண்டோ என்பது இங்கே ஆராயப்படுகிறது. தென்மராட்சியில் மட்டுவில் ஊரின் வடக்கில் மிசுரி அமைந்துள்ளது. சேரநாட்டுப் பழங்காலத் துறைமுகமாகிய முசிரி என்பதே > மிசுரி என மருவியிருக்க வேண்டும். முசிரியிலிருந்து வந்த மக்கள் இங்கே குடியேறிய போது, தம் நாட்டு இடப்பெயரை இங்கும் இட்டு வழங்க, அது காலப் போக்கில் முசிரி > மிசுரி எனத் திரிந்துள்ளது. இவ்வூரினருக்கும் தென்னிந்தியாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது. சிதம்பரம் கோயிலுக்குரிய காணிகள் இங்கேயுள்ளமை தென்னிந்தியத் தொடர்பை மேலும் வலியுறுத்துகின்றது. இவ்விடத்தில் முன்பு வரி வசூலிக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. பண்டை நாளில் சேரநாட்டுக் குடியேற்றம் ஈழத்தில் நடைபெற்றது போன்று, 'ஈழவர்' என்ற குலத்தினர் இலங்கையிலிருந்து சேரநாட்டிற் குடியேறியிருக்கின்றனர். எனவே இருநாட்டவர் தொடர்பினாலும் சேரநாட்டு முசிரித் துறைமுகப் பெயர், கடல்துறையாக விளங்கிய இவ்விடத்திற்கும் வழங்குவதாயிற்று. அப் பெயர் பின்னர் வழக்கிலே மிசுரி என மாற்றம் பெற்றுள்ளதெனக் கொள்வது பொருத்தமாகும்.

ராக்கா (வடம.வ.கி.23.3)

இது தொண்டைமானாற்றுப் பகுதியிலுள்ள ஓரிடம். 'இராக்கா' என்னும் பெயருடைய படைத்தலைவர்கள் தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இங்கு 'இராக்கப் பனை' என்று சொல்லப்படும் காணியுமுள்ளது. இது தொண்டைமானாற்றுப் பாலத்தின் கிழக்கே சுமார் 75 யார் தொலைவில் செல்லச்சந்நதிக்குப் போகும் வழியிற் கிழக்குப் பக்கமாக அமைந்திருக்கிறது. இங்கேதான் ஆற்றின் மேற்குக் கரையிலிருந்து ஆற்றைக் கடக்கும் வழி அமைந்திருந்தது. ஆற்றைக் கடந்து அரச கோட்டமாக இருந்த வடமராட்சிக்குள் செல்லும் யாவரும் 'இராக்கா' குடும்பத்தைச் சேர்ந்த ஓர் அலுவலரால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பின்னரே தொடர்ந்து செல்ல இசைவு அளிக்கப்பட்டார்கள். இந்த அரச அலுவலர்களின் பெயரால் வழங்குவதே இவ்விடப் பெயராகும். யாழ்நகரிலுள்ள றாக்காவீதி என்ற பெயரையும் ஈண்டு ஒப்பிட்டுப் பார்த்தல் பொருத்தமாகும்.

வரணி (தென்ம.114.1)

கொடிகாமம் + பருத்தித்துறை சாலையில், கொடிகாமத்திலிருந்து 3மைல் தொலைவில் வரணி அமைந்துள்ளது. இது பழம்பெரும் மூதூர் என்பதற்குரிய சான்றுகள் பல காணப்படுகின்றன. வரணி என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறலாம்:

I) வரணி என்பது மாவிலங்கம் என்ற ஒரு வகை மரம் (Crataevareligiesa Rexburghii) என அறியப்படுகிறது (த.லெ.6:3508).

II) வருணி என்பதன் திரிபே வரணி ஆகும். வரணி என்பது செழிப்பான நிலம் எனப்பொருள்படும். இப்பொருளின் அடிப்படையிலேயே வரணி என்ற இடப்பெயர் ஆக்கம் பெற்றுள்ளது என்பர்.

III) வரணம் என்பது பால், மதில், சூழ்தல் என்ற பொருள்கள் தரும் சொல்லாகும் (மதுரைத்தமிழ்ப் பேரகராதி:526).

IV) மந்தைகள் செறிந்துள்ள இடம் என்ற பொருளிலும் இப்பெயர் தோன்றியிருக்கலாம் என விளக்கம் தருவர்.

வரணி மருத நிலப்பாங்கான நில அமைப்பையும், பரந்தளவிலான வயல் நிலங்களையும் கொண்டுள்ள ஊராகும். வரணியிலுள்ள வெங்கிராயன், தீனிக்கிராய், தாவளம், குடமியன் முதலானவை வயற்பகுதிகளாகும். கிராய் என்பது களிமண் நிலத்தைச் சுட்டும் சொல். நல்ல களிமண் நிறைந்த பகுதிகள் வெங்கிராயன் எனப்பட்டன.

வரணியிலுள்ள குறிச்சிப் பெயர்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். வெங்கிராயன், அல்வர்மடம், தனிவளை, நாவற்காடு, மாரியார்தோட்டம், புனைவேலி, குடமியன், காரைக்காடு, நொத்தாரிசுத்தோட்டம், காட்டுப்புலம், குறண்டிப்பிட்டி, சேவலப்பிட்டி, இடைக்குறிச்சி, மாசேரி, கறுக்காய், போக்கன், சுட்டிபுரம், இயற்றாலை, பாலவாய்க்கால், கட்டுமேய்ச்சல், குருக்கள் குடியிருப்பு, சைவக்குடியிருப்பு, முத்தட்டு, கோயிலடி, கொம்புதட்டி ஆலடி, ஆலடி, தில்லையம்பலப்பிள்ளையார், கரம்பான், தம்பான் கஞ்சகம், தீனிக்கிராய், சூழங்கிராய் என்பனவாகும்.

பண்டைநாளில் இங்கு யானைகளின் நடமாட்டம் இருந்ததாகக் கூறுவர். அத்துடன் சங்கிலி மன்னனின் தொடர்பும் இவ்வூரில் இருந்தபடியால் மன்னனது யானைகளும் இங்கு திரிந்திருக்கலாம். அத்தகைய யானைகளில் ஒன்று விழுந்து இறந்த இடமே 'ஆனை விழுந்த வெங்கிராயன்' என அழைக்கப்படுகிறது. இது வரணியின் கிழக்குப் பக்கமாக உள்ள வயல் நிலமாகும். இதன் மேற்கேயுள்ள தாவளம் என்ற பகுதி மருத நிலத்தூர் என்ற பொருள் அடிப்படையில் பெயர் பெற்றுள்ளது.

வரணி மக்களுக்கும் சோழநாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. இங்கு சோழக்கன்சீமா, சோழங்கன் புலம், சோழங்கன்வளவு எனத் தோம்புகளிற் குறிப்பிடப்படும் காணிப்பெயர்கள் இன்றும் வழக்கிலுள்ளன. தமிழகத்திலுள்ள முதலியார், ஐயனார் முதலிய பெயர்கள் ஆட்பெயர் ஈறாகவும் இங்கு வழங்கி வந்துள்ளன. சான்றாக இவ்வூரில் வழக்கிலுள்ள சந்திரசேகரமுதலியார், கந்தையனார், நீலையினார் முதலான ஆட்பெயர்களைக் குறிப்பிடலாம்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் நடத்திய பசு வதைக்கு ஒருப்படாத இவ்வூர்ப் பெரியார் தில்லைநாதத் தம்பிரான் என்பவர் இரவோடிரவாக மரக்கலமேறிச்சென்று தஞ்

சாவூர் போய்ச் சேர்ந்தார். அவர் தஞ்சாவூர் மகாராசாவின் மகனின் தீராதநோயைத் தீர்த்தமையால் அவருக்குத் திருமறைக் காட்டு வேதாரணியக் கோயிலின் பொறுப்பும், மற்றும் பல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இன்றுவரை திருமறைக் காட்டின் கோயில் நிருவாக உரிமை வரணியூர்ச் சைவக் குரு மாரிடம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் சிதம்பரம் கோயி லுக்கு வரணியில் வயலும் புலமும் அறக்கொடையாக அளிக்கப் பட்டுள்ளன. இதன் தொடர்பாகச் சிதம்பரத்தில் 'வரணியான்மடம்' ஒன்றிருப்பதாகவும் அறியப்படுகிறது.

இங்கு சுட்டிபுரம் என்னுமிடத்தில் வரலாற்றுப் பழைமை மிக்க கண்ணகிஅம்மன் கோயில் ஒன்றுள்ளது. சிவன், முருகன், பிள்ளையார், ஐயனார் முதலிய கடவுளருக்குரிய கோயில்களும் இவ்வூரில் உள்ளன. தமிழரசர் காலத்தில் இப்பகுதிக்கு ஆட்சி யாளராக நியமிக்கப்பட்டோர் வாழ்ந்த இடம் மாசேரி என அழைக் கப்படுகிறது என்றும், இவர்களது மரபினர் இன்றும் இங்கு வாழ்கின்றனர் என்றும் கூறுவர். அவ்வாறே 'முத்தட்டு' என்ற குறிச்சிப் பெயருக்கும் ஆட்சியியல் அடிப்படையில் விளக்கம் கூறுதல் சாலும். "முத்தூட்டு" என்பது ஒருவகை அரசவரி. 'முத்தூட்டு' வரியைச் செலுத்துவோர் வாழ்ந்த இடம் அப்பெயரால் வழங்கி, பின்பு மருவி 'முத்தட்டு' என்றாயிற்று.

கொடிகாமம் + பருத்தித்துறை சாலையில் 5ஆவது மைல் கல்லுக்கு அணித்தாகச் 'சங்கிலியன் திடல்' என்ற மேட்டு நிலம் காணப்படுகிறது. இங்கு மட்பாண்ட ஓடுகள், சுண்ணக் கற்கள், மற்றும் கட்டிட அழிபாட்டுத் தடயங்கள் முதலியன காணப்படுகின்றன. இத்திடர் மேடாகவே தென்படுவதால் இவ் விடத்தில் பழைய கட்டிடமொன்று இருந்திருக்க வேண்டும் என் பது புலனாகின்றது. மேலும் வரணியில் சுமார் 3மைல் பரப்பள வில் பழைய கட்டிட அழிபாடுகள் தென்படுவதால், இவை முன்பு தமிழரசரின் மறைவிடங்களாக அல்லது தரிப்பிடங்களாக இருந்திருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகிறது. 1658இல் போர்த் துக்கேயத் தளபதி (Constantine de Braganza) சங்கிலி மன்னனின் கோப்பாய்க் கோட்டையை அழித்தபோது, சங்கிலி மன்னன் வரணிக்கோட்டைக்கு ஓடித் தப்பி வந்திருக்கலாம் என சுவாமி ஞானப்பிரகாசர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் அரண்மனையிலிருந்து உப்பாற்றைக் கடக் கும் போது நேரே 'சங்கிலியாத்திடல்' என்ற இடம் அமைந்துள்

ளது. இவ்விடம் தென்மராட்சிப் பகுதியில் வரிவசூலிக்கப்படு மிடமாகவும் இருந்திருக்கலாம். தோம்புகளில் சங்கிலிக் கொல்லை, சங்கிலியன் திடல், சங்கிலிக்கோட்டம் எனவும் இவ்விடம் குறிப் பிடப்பட்டுள்ளது. 'அரசிநின்றபுலம்' என்ற காணிப் பெயர் இங்கு வழக்கிலிருப்பதும் வரணிக்கும் யாழ்ப்பாண அரசுக்கும் இருந்த நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றது.

மக்கட் குடியிருப்பையடுத்து அவர்கட்குத் தேவையான மட்பாண்டங்களைச் செய்வோரது சாலைகள் இங்கே அமைந் திருந்தமையும் தொல்லியல் தளங்களை ஆராயும்போது அறியப் படுகிறது. வரணியில் களிமண்வளம் அமைந்திருந்தமையால் இங்கு பல மட்பாண்டத் தொழிற்சாலைகள் இருந்திருக்க வாய்ப்பு உண்டு. இங்கு தாவளைஇயற்றாலை, வரணிஇயற்றாலை, ஆலடி என்ற மூன்று இடங்களிலும் மட்பாண்டத்தொழில் நடை பெற்றிருக்கிறது. யாழ்ப்பாண வழக்கில் 'இயத்து' என்பது மட் பாண்டங்களைக் குறிக்கும் சொல்லாகும். எனவே இயத்து + ஆலை > இயற்றாலை என மருவுதல் இயல்பாயிற்று.

பண்டை நாளில் குருக்கள்குடியிருப்பு என்ற இடத்தில் பிராமணர்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இப் பின்னணி யிலும் வரணி என்ற சொல்லுக்கு விளக்கம் கூறுவாருமுளர். வரை என்ற சொல்லிலிருந்து > வரைதல், கோடு, எல்லைக்கோடு முதலிய பொருள்கள் பெறப்படுகின்றன. வடஇலங்கைத் தமிழரசர் காலத்திலும், சோழராட்சி நிலவியபோதும் எல்லை வரையறுக்கப் பட்டுப் பிராமணருக்குப் பிரமதேயக் காணிகள் வழங்கப்பட்ட இடம் அல்லது எல்லை வரையறுக்கப்பட்ட இடம் வரணி எனப் பெயர்பெற்றதெனவும் நோக்கலாம்.

(ii) எண் ஈற்று இடப்பெயர்கள்

எண்ணுப்பெயர் அடிப்படையில் ஆக்கம் பெற்ற இடப் பெயர்கள் ஈழத்தின் பல இடங்களிலும் காணப்படுகின்றன. அவற் றுள் 'ஏழு' என்ற எண் ஈற்றுப் பெயர் பெருவழக்குப் பெற்றுள்ளது. யாழ்ப்பாண மாவட்டதில் அச்செழு, ஊரெழு, ஏழாலை என்ற இடப்பெயர்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. தமிழகத்தி லுள்ள திருவெழுகூற்றிருக்கை என்ற இடத்தை இவ்வகையிற் குறிப்பிடலாம்.

முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்தி, அஞ்சிலாம்புச் சந்தி என சந்திப் பெயர்களும் எண்ணுப் பெயரடிப்படையில் ஆக்கம் பெற்றுள்ளமை காண்க.

முன்னொட்டு நிலையில் இரணைமடு, இருபாலை, ஏழாலை என்ற இடப்பெயர்கள் எண்ணுப்பெயரால் ஆக்கம் பெற்றுள்ளன. குறிச்சிப் பெயர்களில் சேரன்ஏழு என்ற குறிச்சி நவிண்டிற் பதியிலுள்ளது. சங்க இலக்கியங்களிலே 'ஏழு' என்ற சொல்லாட்சியும் ஆங்காங்கே பயின்று வந்துள்ளன. சங்ககால இலக்கியங்களில் முடியுடைய மூவேந்தரோடு, முடிமன்னர் எழுவரைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இம் மன்னர் எழுவரையும் ஒருமுறை சேரமன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வென்ற செய்தி 'எழுமுடி கெழீஇயதிரு ஞெமர் அகலத்து நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை' (பதிற்றுப்பத்து பாடல் 14) என்னும் பாடல் வரிகளால் அறியப்படுகிறது. ஏழ்நாடு, எழுநாடு, ஏழிசைச்சூழல், ஏழியல் முறையது, ஏழகப்படை, ஏழகத்தகர் என்ற வழக்காறுகளும் நோக்கற்பாலன.

மேலும் தொல்காப்பியர் உழிஞைத்திணை பற்றிய செய்தியில் 'எழு' பற்றிக் குறிப்பிடுவர். உழிஞைத் திணையிற் கூறப்படும் கோட்டை வாசற் கதவுகள் யானை தாக்கினும் தகர்ந்து போகாத் திண்மை வாய்ந்தவை. அக் கதவுகளின் உட்புறத்தில் அமைந்த நிலவுகாலையடுத்து இருபுறமும் தடுப்பு மரங்கள் நாட்டப்பட்டிருக்கும். அவை 'எழு' என்ற பெயரால் வழங்குவதும் நோக்கத்தக்கதே.

சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையிலே 'ஏழுநாடு' பற்றிய செய்திகள் வருமாறு கூறப்படுகின்றன:

> ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன்பாலைநாடும்,
> ஏழ்பின்பாலைநாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குணகரைநாடும்,
> ஏழ்குறும்பனைநாடு மென்னும் இந்த 49 நாடும் குமரிகொல்ல..
> (சிலப்பதிகாரம் -அடியார்க்கு நல்லார் உரை: 8:11 1-2)

இவ்வாறாகத் தமிழ்ப் பண்பாட்டுப் பின்னணியும் விளக்க முங் கொண்ட 'எழு' (எழு - ஏழு. ஏழ்) என்னும் சொல்லை ஈறாகக் கொண்ட அச்செழு, ஊரெழு ஆகிய இடப்பெயர்களை, எவ்வித விளக்கமுமின்றி, இவை சிங்களப்பெயர்கள் என எழுதி

யுள்ளார் ஹேர்ஸ்பேர்க் (Hersburgh:1916:56). யாழ்ப்பாண மாவட்டத்திலே எண்ணுப்பெயர்களை அடிப்படையாகக் கொண்ட அச்செழு, இருபாலை, ஊரெழு, எழுவைதீவு, ஏழாலை ஆகியன பற்றிய விளக்கம் ஈண்டுத் தரப்படுகிறது.

அச்செழு (வலி.கி.80.1)

வலிகாமம் கிழக்கில் அச்செழு அமைந்துள்ளது. அச்செழு என்ற இடம் மலையாள நாட்டிலும் இருப்பதாக அறியப்படுகின்றது. அச்செழுவில் 'மலையாளன்வளவு' என்ற இடம் காணப்படுவதை நோக்கும்போது, மலையாளத்திலுள்ள அச்செழு என்ற ஊரிலிருந்து வந்து இங்கு குடியேறியோர் தம்மூர்ப் பெயரை ஈண்டும் இட்டு வழங்கினர் என்றே கூறவேண்டும். அச்செழுவின் அயலில் 'ஊரெழு' என்ற இடப்பெயர் காணப்படுவதும் நோக்கற்பாலது.

ஊரெழு (வல.கி.39.7)

ஊர் + ஏழு = ஊரேழு > ஊரெழு என இப்பெயர் வழக்குப் பெற்றிருக்கலாம். ஏழு இடங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து குடியேறியிருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. எழுச்சியுள்ள மக்கள் வசிக்கும் ஊர் ஊரெழு என்ற கருத்துமுண்டு. போர்க் காலங்களில் இவ்வூர் மக்கள் ஒன்றாக அணி திரண்டெழுந்து (ஊர் எழுதல்) போருக்குச் சென்றிருக்கலாம். அதனால் ஊரெழு என்ற காரணப்பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும். அவ்வகையில் ஊர் என்பது ஈண்டு இடவாகுபெயராகும்.

இவ்வூரின் வடக்கே சிறிது தொலைவில் எண்ணுப் பெயர் கொண்ட ஏழாலை என்ற ஊர் இருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. வலிகாமம் கிழக்கில் அமைந்த ஊரெழுப் பதி, யாழ்ப்பாணம் + பலாலி பெருஞ்சாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 9கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் உரும்பிராய், நீர்வேலி, அச்செழு, புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, சுன்னாகம், இணுவில் என்னும் ஏழு ஊர்கள் எல்லைகளாகச் சூழ்ந்திருப்பதால் ஊரெழு என்றும் அழைக்கப்படுகிறது. ஏழு ஊர்களின் நடுவணாக அமைந்தமையால், 'எழுஊர்' (இல்முன் >முன்றில் போல) ஊர்எழு என அமைந்துள்ளது எனலாம்.

ஏழு என்பதை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் சொற்களில் வாரம், கடல்கள், தீவுகள், மேகங்கள், கன்னியர், தோற்றங்கள், பிறவிகள், தாதுகள், நிறங்கள், சுரங்கள், கற்புடைப் பெண்டிர், வள்ளல்கள், முனிவர்கள் என்பன அவற்றுட் சிலவாகும். எனவே ஏழுவிதமான சிறப்புகள் மிக்க ஊர் எனினும் பொருந்தும். மண்வளம், நீர்வளம், தொழில்வளம், எழில்வளம், கனிவளம், குணவளம், கலைவளம் என்னும் எழுவகை வளங்களுடைய தெனினும் பொருந்தும்.

வற்றாத நீரூற்றொன்று ஊரெழுவில் உண்டு. அது 'யாமா' என்றழைக்கப்படுகிறது. இந் நீர்ச்சுனை இராம பாணத்தால் ஆக்கப்பட்டதெனக் கதைகள் வழங்குகின்றன. 'ராமா' - காலப் போக்கில் 'யாமா' என மாறியிருக்கலாம் என ஊரெழு முருக. வே. பரமு கூறுவர்.

புத்தூர் - நவகிரியிலுள்ள 'நிலாவறை' என்ற கிணற்றைப் போன்றே, ஊரெழுவிலும் வற்றாத நீரூற்றொன்று உண்டு. இது 'பொக்கணை' என்றழைக்கப்படும். இக்கிணறு 33அடி ஆழமுள்ளது. கோடையிலோ மாரியிலோ இதன் நீர்மட்டத்தில் மாற்றம் ஏற்படுவதில்லை. அள்ள அள்ள வற்றாத சுனையாக இது அமைந்திருத்தல் வியப்புடையதாகும்.

(iii) சிறப்பு ஈறு பெற்ற இடப்பெயர்கள்

'அடி' ஈறு பெற்ற இடப்பெயர்கள்

அடி என்பது = இடம் என்ற பொருளில் வழங்கும் பெயர்ச் சொல்லாகும். ஒரு பொருளைச் சுட்டி, அதனை அடிப் படையாகக் கொண்டு ஆக்கம் பெற்ற இடப்பெயர்கள் இங்கே வரிசைப்படுத்தித் தரப்படுகின்றன:

ஆத்தியடி	(தென்ம.106.1; வடம.தெ.மே.136.1)
உப்புமடத்தடி	(நல்.36.4)
கள்ளவேம்படி	(வலி.மே.49.3)
குருக்கள்மாவடி	(தென்ம. 111.1)
சப்பாச்சிமாவடி	(தென்ம.பீ.21.11)
காரையடி	(வடம.தெ.மே.139.4)
சிதியம்புளியடி	(வலி.வ.65.60)

சூளையடி	(நல்.36அ.2)
தாவடி	(வலி.தெ.57அ.3)
தாழையடி	(பச்.148.3)
தொட்டிலடி	(வலி.மே.ப.31.6)
நாவலடி	(நல்.23.5)
நெல்லியடி	(வடம.தெ.மே.ப.37)
பத்துப்பனையடி	(வலி.வ.62அ.8)
பந்தியடி	(வலி.தெ.மே.39.4)
புறாப்பொறுக்கிஆலடி	(வடம.தெ.மே.119.4)
மஞ்சத்தடி	(நல். 36.2)
மருதடி	(வடம.வ.கி.ந.22.9; வடம.தெ.மே.ப.37.3)
முல்லையடி	(வலி.தெ.மே.ப.38.4)
வங்களாவடி	(தென்ம.100.7)
வேம்படி	(வடம.வ.கி.ந.23.4)
றாத்தலடி	(வலி.மே.49.6)

'அணை', 'அனை' ஈறு பெற்ற இடப்பெயர்கள்

சேர்தல், பொருந்துதல் என்ற பொருளில் 'அணை' ஈற்று இடப்பெயர்கள் ஆக்கம் பெற்றுள்ளன. 'அணை' ஈற்றுப்பெயர்கள் காலப்போக்கில் 'அனை' என மருவிற்று என்றே கொள்ள வேண்டும். இவ்வரிசையில் இக்கீரணை, சரவணை, குடத்தனை, நாரந்தனை, மாத்தனை, மாதனை முதலான பெயர்கள் குறிப் பிடத்தக்கவை.

சரவணை (தீவு.தெ.150)

சரம் + அணை = சரவணை; சரவணன் + அணை = சரவணை. சரவணப் பெருமானின் சரம் (வேல்) அணைந்த (தங்கிய) இடம் எனவும், சரவணன் எழுந்தருளிய இடம் எனவும் தெய்வநிலை சுட்டியதாகவும் இவ்விடப்பெயருக்கு விளக்கம் கூறுலாம். இங்குள்ள கதிர்வேலாயுத சுவாமிகோயிலும் இக் கருத்தைச் சான்றுபடுத்துகிறது.

வேலணைத்தீவில், வேலணைக்கும் நாரந்தனைக்கும் இடையே சரவணை அமைந்துள்ளது. இங்கு புளியங்கூடல், ஆவுடையான்புலம், கம்மாந்திக்கு, முங்கானைப்புலம், பள்ளம் புலம், சங்குதுறை, கரப்பியன், வேப்பங்குழி, செட்டியடைப்பு, கட்டுவன், இடிப்பான், மயிலப்புலம் முதலிய குறிச்சிப்பெயர் களும் வழங்குகின்றன. இடிவிழுந்து குளம் அமைந்த இடமே இடிப்பான் ஆகும். மயிலை நிறமான நரைமண்பகுதி மயிலப் புலம் எனப்படும். மந்தை மேயும் புல்வெளிகள் செறிந்த கரந்தை நிலம் கரப்பியன் எனப் பெயர் பெற்றுள்ளது.

நாரந்தனை (தீவு.வ.14)

இது வேலணைத் தீவின் ஒரு பகுதியாகும். ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் யாழ்ப்பாண அரசு 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு பகுதி தீவுகள் அனைத்தையும் உள்ளடக்கியிருந்தது. ஊர்காவல்துறையில் வீரசிங்கன் தலைமை யில் நாற்படையும் வைக்கப்பட்டிருந்தன. ஊர்ப்புறக்காவற் படைத் தளபதியாக நாராயணன் நியமிக்கப்பட்டான். அவனுக்குக் கீழ் வேலன் என்பவன் தானைத் தலைவனாக்கப்பட்டான். நாரயணன் தானையும் அவனது ஆட்சியும் நிலைபெற்றிருந்தவிடம் நாரந் தனை எனவும், வேலன் தானை இருந்தவிடம் வேலணை எனவும் வழங்கிவருகின்றன என்கிறார் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1933: 20-21).

நாரந்தனை வரலாற்றுப் பழைமை மிக்க இடம் என்பதை இங்கு கிடைத்துள்ள தொல்லியற் பொருட்கள் சான்றுபடுத்து கின்றன. 1951இல் கடற்கரை ஓரத்தே கல்தோண்டி எடுப்பதற்காக நிலத்தடியில் வெடிவைத்தபோது நிலத்தின்கீழ் அரும்பொருட்கள் கொண்ட ஒரு புதையல் அகப்பட்டது. அதில் அடங்கியவை:-

* இராஜராஜ சோழனது 38 செப்பு நாணயங்கள்
* சேரரது 5 வெள்ளி நாணயங்கள்
* பொன்மணிகளின் உடைந்த துண்டுகள் 29.
* நிக்கல் உலோகத் துண்டுகள் 2
* கொழுக்கியுள்ள வட்ட மணிகள் 7
* இளஞ்சிவப்புக் கல்
* அம்மனின் உருவம் பொறிக்கப்பட்ட பொற்றகடு.

(தகவல்:ம.பொ.செல்வரத்தினம் நாரந்தனையிற் கண் டெடுக்கப்பட்ட தொல்பொருட்கருவூலம்:1975-40)

இச் சான்றுகள் இப் பகுதியிலே நிலைபெற்றிருந்த சோழர் மேலாட்சியையும், அவர்களது வணிக நடவடிக்கைகளை யும், அம்மன் வழிபாட்டு முறைகளையும் நினைவுபடுத்துகின்றன.

மாத்தனை (வலி.வ.65.5;வடம.வ.கி137)

இது தெல்லிப்பளைப் பகுதியில் அமைந்துள்ளது. மகா + ஸ்தானம் என்ற பொருளில் மகாத்தனை என எழுதிவருகின் றனர். வடமராட்சி வடகிழக்கில் புலோலிப் பகுதியிலும் இப் பெயர் கொண்ட ஓரிடமுள்ளது.

மாதனை (வடம.தெ.கி.120.4)

மா + துறை = மாதுறை என்பதே > மாதனையாக மாறிற்று என்கிறார் பருத்தித்துறையைச் சேர்ந்த ஆ. தேவராசா. மா + துறை > மாத்தறை என மருவியது போன்று, இதுவும் அவ்வாறு மக்கள் வழக்கிலே திரிதல் இயல்பே. இது கற் கோவளத்தின் தென் மேற்கே கால்மைல் தொலைவில் அமைந் துள்ளது. இங்கு இரும்பு வேலை, மரவேலை செய்வோர் பெரிதும் வாழ்கின்றனர். இங்கு வாழ்ந்த மக்கள் பருத்தித்துறைப் பகுதியில் கப்பல் கட்டுந் தொழிலாளராக இருந்தனர் என்பதை யும் ஊகித்துணரலாம். இவ்விளக்கங்களுடன் மா + தானை (சேனை) > மாதானை > மாதனை எனத் திரிபடைந்ததோ எனவும் ஆராயலாம்.

இங்குள்ள புகழ் பெற்ற கண்ணகி கோயிலின் கோயி லுறை தெய்வத்தின் பெயர் அடிப்படையிலும் இடப்பெயர் விளக் கம் கூற வாய்ப்புண்டு. மாது + அணை = மாதணை > மாதனை என்றும் இப் பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம். மாது = கண்ணகி. கண்ணகி பெயரால் இப்பெயர் தோன்றிற்றோ என நோக்குதல் தகும்.

'ஆய்' ஈற்று இடப்பெயர்கள்

ஆய் என்பதற்கு = தெரிந்தெடு, பிடுங்கு, கிள்ளு, கொய், இடைக்குலம், இடைச்சாதி என்ற பொருள்களுள (தாவீது: 1970:24). இம் மாவட்டத்தில் 'ஆய்' ஈற்றுப் பெயர்களாக அத்தாய், கச்சாய், மூளாய் முதலிய இடங்களுள்ளன. தமிழகத்தில் 'ஆய்' என்ற குலத்தார் பொதியமலைக்கு அண்மையில் இருந்த நாட்டை நெடுங் காலம் ஆண்டு வந்தனர். அக் குலத்தில் தோன்றிய ஆய் அண்டிரன் என்னும் வள்ளல் புலவர் பாடும் புகழுடையவனாய் விளங்கினான். அவன் காலத்துச் சிறந்து விளங்கிய 'ஆய்குடி' என்னுமூர் (புறம் 99) இன்றும் பொதிய மலைச் சாரலில் உள்ளது என்கிறார் ரா.பி. சேதுப்பிள்ளை (1976 - 129).

மூளாய் < Mullaya'ya, அத்தாய் < Hattaya'ya, துனுக்காய் < Dunukaya'ya - இப்பெயர்கள் சிங்களத்திலிருந்து திரிந்து தமிழில் வழங்கிற்று என்றார் குமாரசுவாமி (1918:258). ஞானப்பிரகாசர் மூளாய், வளலாய் என்பன சந்தேகத்திற்கிடமின்றி இவை "Yaya" என்ற சிங்களப் பெயரீற்றுச் சொற்கள் என்று கூறினார் (1917:168). ஆனால் அவை தமிழ்ச் சொற்கள் என்பது இங்கே நிறுவப்படுகிறது.

அத்தாய் (வடம.தெ.மே.133.2)

அத்து + ஆய் = அத்தாய். அல் + து = அற்று; அஃது > அத்து 'அத்தே அற்றே ஆஇருமொழி மேல் . . .' (தொல் எழுத்து: 133.1) சில வேளைகளில் 'அத்து' நீண்டு 'அத்தை' என ஒலிப்பதுண்டு. நிலியரோஅத்தை (புறம் 2:20) என்ற வழக்காறு காண்க. அஃது > அற்று > அத்து > அத்தை; அத்தை என்பது கற்றாழைச் செடியையும் குறிப்பதாகும். ஆத்தா (atta) என்பது அன்னமின்னாப்பழத்தைச் சுட்டும் போர்த்துக்கேயச் சொல் என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. இவ்வாறு அத்தாய் என்பதற்குக் கூறப்படும் பல்வேறு சொற்பொருள் விளக்கங்களும் இப் பெயர் தமிழிலிருந்து தோற்றம் பெற்றது என்பதை நிறுவுகின்றன.

இது அல்வாய் தெற்கிலுள்ள ஓரிடமாகும். இங்கு 'அத்தாய்ப் பிள்ளையார்' கோயில் உள்ளது. கோயிற்பெயராலேயே இடமும் அழைக்கப்படுகிறது. இங்கு 'ஒந்திராய்க்குளம்' அப் பெயரால் அமைந்த வயல்வெளி, திமிலிக்கண்டை வயிரவர் கோயில் என்ற பெயர்களும், பள்ளப்பாதி, இலகடி, தென்னியம் பிள்ளை, புதுக்கலட்டி என்ற குறிச்சிப்பெயர்களும் வழக்கிலுள்ளன.

கச்சாய் (தென்ம.105.3-4)

கச்சு + ஆய் = கச்சாய். கச்சு என்பது பொதி எனப் பொருள்படும். ஆய் = ஆராய்தல். தமிழரசர் காலத்திலும் டச்சுக்காரர் காலத்திலும் கச்சாயில் துறைமுகம் செயற்பட்டிருக்கிறது. எனவே பொதிகள் ஆராயப்பட்டு (Custom Checking) கடவைச் சீட்டுகள் வழங்கப்பட்ட இடம் என்ற நிலையில் கச்சாய் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

பண்டைநாளில், கச்சாயை மையமாகக் கொண்டு பச்சிலைப்பள்ளிப் பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து வன்னியர் குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. காலிங்கர், மலையாளத்தார், கன்னார் முதலியோர் கச்சாயிற் குடியேறியதாக வையாபாடல் (செய்-44) கூறுகிறது. கைலாயமாலையிலும் (பக்.12-15) வட இலங்கையில் ஏற்பட்ட தென்னிந்தியக் குடியேற்றம் பற்றிக் கூறப்படுகிறது. கச்சூர் என்ற இடத்திலிருந்து நீலகண்டன் என்ற தலைவன் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் குடியேறியபோது தனது அடிமை குடிமைகளையும் அங்கு குடியேற்றினான். இப்பகுதிக்கு அணித்தாயுள்ள கச்சாய் என்பது கச்சூர் என்பதன் திரிபு என்றே கருத வேண்டும்.

கொடிகாமத்திற்குத் தெற்கே கடற்கரையோரமாகக் கச்சாய் அமைந்துள்ளது. இங்கு மன்னவராயன்காடு, கோட்டைப்பட்டி, துறைமுகம், கச்சான்தரவை, கோண்டாமூலை, கொக்கட்டிச்சோலை (கொக்கட்டியன்காடு), ஆலடி, புங்கடி, பறையன் தென்பு முதலிய குறிச்சிப்பெயர்கள் வழங்குகின்றன.

பண்டைநாளிற் கச்சாய்ப் பகுதியில் பெருங்காடுகள் இருந்திருக்கின்றன. தமிழரசர் தம் காலத்தில் இங்கு வேட்டைக்குச் சென்றிருக்கிறார்கள். எனவே மன்னன் வேட்டைக்குச் செல்

லும் காடு என்ற நிலையில் இப்பகுதிக்கு மன்னவராயன்காடு என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். தற்போது பெருங்காடுகள் யாவும் அழிக்கப்பட்டு இங்கு சிறு பற்றைகளே காணப்படுகின் றன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலே கச்சாய்த்துறையில் ஒரு கோட்டை கட்டியிருந்தனர். கச்சாயத்துறைக்கு அணித்தாகக் கோட்டைப்பிட்டி என்ற இடமுள்ளது. இதனைப் பாதிரித்தோட்டம், மணியன்காடு என்றும் வழங்குவர். கோட்டைப்பகுதியை அடுத்து துறைமுகம் அமைந்திருந்தது. இங்கு முன்பிருந்த கலங்கரை விளக்கம் இன்று இடிந்த நிலையிற் காணப்படுகிறது. டச்சுக்காரர் காலத்தில் மரம், உப்பு, யானை முதலியன கச்சாய்த்துறைமுகம் மூலமாகவும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அன்று சிறப்போடு விளங் கிய கச்சாய் வணிகத்துறை இன்று மீன்பிடித்துறையாக மட்டுமே பயன்படுகிறது. இன்றும் இப் பகுதி ‘துறைமுகம்’ என்ற பெய ருடன் வழங்குகிறது. தமிழ் மன்னர் காலத்தில் கச்சாய் பெருந் துறைமுகமாகப் பயன்பட்டு வந்துள்ளமையைச் செகராசசேகர மாலை (கி.பி.1380-1417) என்ற சோதிட நூற்பாயிரமும் (செய்8) சான்றுபடுத்துகிறது.

தமிழகத்தில் கச்சி, கச்சியம்பதி என்னும் பெயர்கள் வழக்கிலுள்ளன. சுமாத்திராதீவிலே இந்தியக் குடியேற்றம் ஏற் பட்டபோது அங்கு கச்சா என ஓரிடத்துக்குப் பெயர் வைத் தனர். தமிழக கச்சியம்பதியே அம்மொழியில் கச்சா என்றாயிற்று. 13ஆம் நூற்றாண்டில் யாவா, சுமத்திரா ஆகிய இடங்களிலிருந்து சாவகர், வடஇலங்கையிலே குடியேறியபோது சாவகச்சேரியில் அவர்கள் குடியிருப்புக்கள் பெரிதும் ஏற்படலாயின. எனவே ‘கச்சா’ என்ற இடத்திலிருந்து வந்து குடியேறியோர், தாம் குடி யேறி வாழ்ந்த இடத்திற்குக் ‘கச்சா’ எனப் பெயரிட்டு வாழ்ந் திருக்கலாம். காலப்போக்கில் கச்சா > கச்சாய் என நீண்டொலிப் பதாயிற்று.

மூளாய் (வலி.மே.48அ.1)

மூலை > மூளை + ஆய் = மூளாய். இது தொல் புரத்திற்கும் வட்டுக்கோட்டைக்கும் இடைப்பட்ட மூலைப் பகுதியா கும். மூலைப் பகுதி மூலாய் என வழங்கிக், காலப்போக்கில் மூளாய் என மருவிற்று. மூளல் (மூளுதல்) = என்பது நெருப்புப்

பற்றுதல், கோபமிகுதல் (தமிழகராதி பக்:296) எனப் பொருள் படும். இப்பொருள் நோக்கிலே போருடன் தொடர்புபடுத்திக் களபூமி - வலந்தனை, தொல்புரம் என்பனவற்றை இணைத்து நோக்கும்போது, பண்டை நாளில் போர் மூண்ட இடமாக இது அமைந்தமையால் மூளாய் எனக் காரணப்பெயர் பெற்றதென லாம்.

இங்கு ஐயனார் கோயில், காளி கோயில், பிள்ளையார் கோயில், முருகன் கோயில் என்பன அமைந்து, இவ்விடத்தின் பழைமையைக் காட்டுகின்றன. கிறிஸ்தவத் தேவாலயம், தனியார் மருத்துவமனை முதலியனவும் அமைந்துள்ளன.

வளலாய் (வலி.சி.75.5)

வளம் + ஆய் = வளலாய். வளம் என்ற சொல்லடியாகப் பிறந்த காரணப் பெயர் கொண்டதாக இவ்விடப் பெயர் அமைந் துள்ளது. இப் பெயர் விளக்கத்திற்குச் சான்றாக இவ்விடம் நெல் வயல்கள் செறிந்த செழிப்பான மருதநிலத்தூராகத் திகழ் கிறது. இங்கு வளலாய்ப் பெரியகுளம், குமைச்சன்கேணி, மருதடிக்கேணி என்பன விளங்குகின்றன. இங்குள்ள எச்சாட்டி, தச்சன் கலட்டி, கொச்சாட்டி, நீர்ப்பட்டி, பனுவில், மாம்புலவு என்ற குறிச்சிப் பெயர்களும் ‘நாகர் வயல்’ என்ற காணிப்பெயரும் குறிப்பிடத்தக்கனவாகும்.

வளலை - ஒருவகைச் சிறு விசப்பாம்பு. வளலை + ஆய் > வளலாய். வளலைப் பாம்புகள் வாழுமிடம் என்பது இதன் பொருள். இது தம்பாலை, இடைக்காடு ஆகியவற்றுக்கு மேற்கேயுள்ள ஓரிடமாகும். பழைமைமிக்க பெரியதம்பிரான் கோயில் என்பன அமைந்துள்ளன. பண்டைநாளில் ‘நாகர்கோயில்’ என அழைக்கப்பட்டு மருவிய ஒரு கோயில் இன்று ‘பிள்ளையார் கோயில்’ என்ற பெயரில் வழங்குகிறது.

‘ஆலி’ ஈற்று இடப்பெயர்கள்

ஆலி (< ஆலு கன்னடம், மலையாளம்) = மழைத்துளி, காற்று; ஆலி > ஆலித்தல்- = ஒலித்தல் (த.லெ.248). இவற்றில் ஆலி = ஒலித்தல் என்ற பொருள் நிலையே இடப்பெயராக்கத்தில்

முதன்மை பெற்றுள்ளது. ஆலி ஈற்றுப் பெயர்களாக இம்மாவட்டத்தில் அராலி, கிளாலி, நவாலி, பலாலி என்ற நான்கு பெரிய ஊர்கள் உள்ளன.

அராலி (வலிமே.45அ,46)

யாழ்ப்பாணத்திலிருந்து 5மைல்தொலைவில் வடமேற்கே அராலி அமைந்துள்ளது. அரா + லி = அராலி என்பதற்குப் பாம்பினிடம், நாகமல்லிக்கொடி என்னும் பொருள்களுள்ளன (த.லெ.1:1220). இங்கு தாழை மரங்களும் அலரிச்செடிகளும் மலிந்து காணப்படுகின்றன.

'அறலியைக் குறித்த 'அறலியகம்' என்ற சிங்களச் சொல்லின் சிதைவே அராலி' என பி.சி. நடராஜா, 1955 ஸ்ரீலங்கா மார்ச் இதழில் 'அராலி' என்ற கட்டுரையிற் குறிப்பிட்டிருந்தார். 'அறா' என்பது ஒருவகை மீன். இங்கே அந் நாட்களில் இவ்வகை மீன் பெரிதும் கிடைத்ததாலோ அல்லது அலரிச் செடி அதிகமாக இருந்ததாலோ இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். அராலி கடற்கரையோரத்து ஊராகும். பண்டைநாளில் இது கடலால் அரிக்கப்பட்டது என்பதும் உண்மையே. மன்னாரில் அரிப்பு என்ற இடமுண்டு. அராவுதல், அரவுதல் என்றால் கூராக்குதல், தேய்த்தல் என்பது பொருளாம். எனவே இப் பின்னணியில் கடலலையால் அரிக்கப்பட்ட இடம் அராலி எனப் பெயர் பெற்றிருத்தலும் இயல்பானதே.

தமிழ் அரசர்களாகிய சிங்கை ஆரியச்சக்கரவர்த்திகளால் யாழ்ப்பாணத்திற் குடியிருத்தப்பட்ட ஏழு முதலிமார்களில் ஒருவராகிய குமாரதேவேந்திர முதலியார் அராலியிற் குடியேறினார் என்பது வரலாற்றுச் செய்தி (யாழ்ப்பாண வைபவமாலை:80). இங்கு முத்துமாரி அம்மன்கோயில், காணப்பட்டிப் பிள்ளையார், ஏரம்பப்பிள்ளை யார்கோயில், திருக்கேணி (ஆகாயகுளம்) வண்ணபுரம் விசுவநாத சுவாமி கோயில் முதலியன அமைந்துள்ளன. பெருமளவிலான நெல்வயல்கள் நிறைந்த வளம் மிக்க இடமாக அராலி விளங்குகிறது.

இவ் வயல்களுக்கு, அராலியின் வடக்கேயுள்ள கோட்டைக் காடு என்ற இடத்திலுள்ள பெரிய குளத்திலிருந்து நீர் பாய்ச்சப்படுகிறது. வழுக்கையாறு இதனூடாகப் பாய்ந்து கடலிற் கலக்கிறது. நாட்டிற் பெரும்பஞ்சம் ஏற்பட்ட காலத்திலும் இங்கு

பஞ்சம் தாக்குவதில்லை என்பர். 1784இல் நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தின்போது அராலியிலிருந்து இப் பகுதி மக்களுக்கு நெல் இலவசமாக வழங்கப்பட்டதாக முத்துத்தம்பிப்பிள்ளை (1933:107) குறிப்பிடுகிறார்.

பண்டை நாளிற் வழுக்கையாற்றின் ஊடாகக் கந்தரோடை நகருக்குக் கப்பல்கள் சென்றதாகக் கூறப்படுகிறது. வடஇலங்கையில் சிறந்த நகராக கந்தரோடை திகழ்ந்தபோது, அது உள்துறையாகவும் விளங்கிற்று. அவ்வகையில் அராலித் துறையும் வணிகச் சிறப்புப் பெற்றிருந்தது. இதன் தென்பகுதியில் அராலித்துறை அமைந்துள்ளது. இது ஏனைய தீவுகளுக்குப் போக்குவரத்து நடைபெறுவதற்குரிய துறையாகவும் முன்பு பயன் பட்டது. பண்ணைப்பாலம் அமைக்கப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வேலணை, ஊர்காவல்துறை ஆகிய இடங்களுக்குப் பேருந்து வண்டிப் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டதும் இத்துறையின் முதன்மை குறைந்து போயிற்று. தற்போது மீன் பிடித்துறையாக இது பயன்படுகிறது.

அராலி மேற்கில் (கோட்டைக்காடு >) கொட்டைக்காடு, வண்ணபுரம் என்ற பகுதிகள் அமைந்துள்ளன. அராலியில் கொத்தைத்துறை, அராலித்துறை, கருப்பிட்டி (கரைப்பிட்டி), ஆவரம் பிட்டி, செம்படவன்பிட்டி, துலனை, ஈச்சங்காடு, கைலாயர்காடு, கம்பன்புலோ, பூனாவடை, இலந்தைத்தாழ்வு, உழுந்தறை என்ற இடப்பெயர்களும் உள்ளன. கொற்றம் > கொற்றத்துறை > கொத்தைத்துறை என்றாயிற்று. காரைநகரின் களபூமி, வலந்தலை ஆகிய இடங்களுடனும், அராலிக் கொற்றத்துறையையும் தொல் புரத்துக் கோட்டைப் பகுதியையும் ஒப்பு நோக்கும்போது படையெடுப்பு > போர் > வாகைசூடல், - வெற்றிக்களிப்பு - என்ற நிலையில் இப்பெயர்கள் ஆக்கம் பெற்றுள்ளனவா என்பதும் ஆய்வுக்குரியதாகும். மேலும் கொற்றத்துறையிலுள்ள இடம் நொச்சிக்காடு எனப்படுவதும் பண்டைய நொச்சிப் போர் தும்பைப் போர் ஆகியனவற்றை நினைவுபடுத்துகின்றன.

கிளாலி (பச்.158)

கிளா + ஆலி = கிளாலி. கிளா என்பதற்குப் பின்வரும் விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

(அ) கிளா = ஒருவகைச்செடி; கிளாய் - எள்ளுக்காய்க் கோது
(ஆ) கிளாலை = களர்நிலம்,
(இ) கிழான் = உரியவன் (த.லெ.2:937).

கிழாஅன் = தயிர்த்தாழி (curd pot); கிழார் = வேளாளர் பட்டப்பெயர், தோட்டம். வேணாட்டார் தோட்டத்தைக்கிழார் என்பர். வேணாடு என்பது கன்னியாகுமரிப் பகுதியாகும் (த.லெ.2.936). இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது கிழாலி > கிளாலி என்ற இருசொற்களும் செடிப்பெயர் அடிப்படையில் இடப்பெயர்த் தோற்றத்திற்குக் காரணமாய் உள்ளமை புலனா கின்றது. இங்கு சிறு குளங்களும், தென்னந்தோட்டங்களும் காணப்படுகின்றன.

பளைப் புகையிரத நிலையத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் கிளாலி அமைந்துள்ளது. இது போர்த்துக்கேயர் காலத்தில் மக்கள் நடமாட்டம் மிக்க ஒரு நகரமாக விளங்கிற்று. அத்துடன் பல கோயில்களும், யேசுசபையின் ஒரு கல்விக்கழக மும் இடம்பெற்றிருந்தன. அவை ஒல்லாந்தர் காலத்தில் கைவிடப் பட்டன எனவும் அறியப்படுகிறது (ஸ்ரீலங்கா. செப்.1951::11:21).

நவாலி (வலி.தெ.மே.41.3)

நவாலி, மானிப்பாய் பகுதியில அமைந்துள்ளது. இது கடற்கரை ஓரத்தில் அமைந்திருப்பதால் சிப்பி, ஊரி என்பன விளைகின்றன. இங்கு உப்பளமுமுண்டு. நவாலியில் இயற்கை யாலமைந்த ஆழமான ஒரு பெரும் பள்ளமுங் காணப்படுகிறது. இப்பள்ளம் 1905இல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது:

> 'On Friday the 19th May 1905 at Navaly near Manipay, a samll opening was found and it continued to enlarge covering all area of over one fourth of the rood. The water is about 40ft. deep and is salt. It is within one or two feet of the ground level. it is presumed that this new circular pit has the same connection with the sea as the old rootangular pit at Puttur' (S. Katiresu. 1905 : 33).

நவாலியை நவாலியூர் என்றும் வழங்குவர். நவாலியூர் சோமசுந்தரப்புலவர் இவ்வூரில் பிறந்த பெருங்கவிஞராவார்.

நவாலியிற் களியோடை என்ற குறிச்சியும், இங்கு களியோடைக் கண்ணகி அம்மன்கோயிலும் அமைந்துள்ளன. இப்பகுதியில் பழைமைவாய்ந்த மட்பாண்ட ஓடுகள் கிடைத்துள்ளன. இவை கிறிஸ்து ஆண்டின் தொடக்க கால நூற்றாண்டைச் சார்ந்தவை என்கிறார் கலாநிதி பொ. இரகுபதி (1983:239). இங்கு நவ ஆலயங்கள் இருந்தமையால் நவஆலயம் + இ = நவாலி யாயிற்று என்றும், ஒன்பது செக்கு ஆலைகள் இருந்தபடியால் நவ + ஆலை = நவாலை > நவாலி ஆயிற்று என்றும் மரபு வழியாகக் கூறப்படுகிறது.

பலாலி (வலி.வ.73.1-5)

பல் + ஆலி = பலாலி. பலா + ஆலி = பலாலி. இதன் அயலில் மயிலிட்டி அமைந்துள்ளது. மயில்கள் பலவாகக் கூடி நின்று ஆலிக்குமிடம் பலாலி என்றாயிற்றென்பர் நா. சிவ பாதசுந்தரனார். பலாலி என்பது மயில்களுக்காகி, பின் இடத்தைச் சுட்டியதால் இது இரு மடியாகு பெயராகும். யாழ்ப்பாண மாவட் டத்தின் வானூர்தித் தளம் இங்கு அமைந்துள்ளது.

புலோலி (வடம.தெ.மே.136:139)

புலவர் + ஒலி > புலோலி. பருத்தித்துறைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு பெரிய இடம் புலோலி. இங்கு பண்டைநாளில் புலவர்களின் ஒலி முழங்கியமையால் இப்பெயரேற்பட்டதென்பர். பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள புலோப்பளை (பக்246) என்ற இடப்பெயர் விளக்கம் ஈண்டு நோக்கத்தக்கது. மன்னார் மாவட் டத்தில் 'புலவர்குடியிருப்பு' என்ற ஓரிடப்பெயருள்ளமை நோக்கற் பாலது. இக்கூற்றைச் சான்றுபடுத்தும் வகையில் இங்கு கல்விச் சான்றோர்களாக பலர் வாழ்ந்திருக்கிறார்கள். புலோலியில் பல் கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் பிறந்துள்ளனர். யாழ்ப் பாணத்துச் சிங்கை ஆரியச்சக்கரவர்த்திகளால் இவ்வூர் புலவர் களுக்குப் பரிசாக வழங்கப்பட்டது என்றும் கூறுவர்.

இங்கு குறிச்சிப் பெயர்களாகப் பல்லப்பை, ஆலடி, துறையாமூலை, முறாவில் முதலியன உள்ளன. முன்னர் இவ் வூரின் பெரிய ஆலமரத்தடியில் சந்தை கூடுவது வழக்கம்.

அதனை ஆலடிச் சந்தை என்றனர். அது பின்னர் ஆலடி என மருவிற்று. துறைமூலை என்பது ஒரு குளத்தை அண்டிய பகுதியாகும். அக்குளத்தில் சலவைத் தொழில் நடைபெறுகிறது. இத்தகைய இடங்களைத் 'துறை', 'துறையடி' என்பது ஈழவழக்கு. இங்கே ஒரு பள்ள வயலும் குளமுமுள்ளன. இவ்வயலுக்கு முறாவில் என்று பெயர். முறையாக வயல் செய்து பயனடைந்து வந்தமையால் இது 'முறைவில்' என வழங்கிப் பின் 'முறாவில்' என்றாயிற்று. இவற்றோடு பாலையடி, வடுவாவத்தை என்ற குறிச்சிப் பெயர்களும் வழக்கிலுள்ளன. வடுகர் எனப்படும் தெலுங்கர் வாழ்ந்த இடம் வடுவர்வத்தை > வடுவாவத்தை எனப் பெயர் வழங்குவதாயிற்று.

மேலும் வரலாற்றோடு தொடர்புடைய பெயர்களாக சிங்க பாகுதேவன் குறிச்சி, செகற்கொடி தேவன்குறிச்சி, மழவராயன் குறிச்சி என்பனவும் அமைந்துள்ளன. புலோலியில் சவளாய், மாதனை, மூக்கம், இலட்சுமணன் தோட்டம், சின்னஅத்தாய், பெரியதேவன் அத்தாய், அத்தியடி, கோணல்கலட்டி, சாளம்பை, கூவில், தொப்பிளாவத்தை, சாரையடி மாரக்காய், ஒப்பியாவொடுப்பு, மந்திகை, குறணங்கவாளி, பொக்கலப்பனை முதலான பல குறிச்சிப் பெயர்களும் வழக்கிலுள்ளன (தகவல்: வ.கு. கணபதிப்பிள்ளை. சட்டத்தரணி. புலோலிமேற்கு, பருத்தித் துறை). பல்லப்பை என்ற குறிச்சியில் பள்ள நிலமும் கேணியுங் காணப்பட்டன. அந்நிலையில் இது பள்ளக்கை என வழங்கி, பின்பு பல்லப்பை என மருவியிருக்கலாம். பண்டைநாளில் நடைபெற்ற பல்லவர் படையெடுப்புடன் இப் பெயரைத் தொடர்புபடுத்திக் கூறுவாருமுளர். மந்திகையில் பழைமை மிக்க கண்ணகி கோயில் அமைந்துள்ளது.

புலோலி கிழக்கில் காணிபெயர்களாகவுள்ள சிவந்த மரக்காயன்சீமா, வல்லபெருமாற்மரக்காய், குளக்கோட்ட வத்தை, பனிக்கன்தோட்டம், தாண்டவக்கோனான் குடியிருப்பு, இலங்கையன் கட்டுவாசல், பாப்பானவளவு, தம்பசிட்டி முதலிய பெயர்கள் வரலாற்றுத் தொடர்புடையனவாகத் திகழ்தல் மேலும் ஆராய்ச்சிக்கு வழி வகுக்கின்றது.

வடமராட்சிப் பகுதியில் பண்டை நாளில் 23 மறவர் கிளையினர் குடியமர்த்தப்பட்டனர். இவர்களில் சமரபாகுதேவன், வதிரிபாகுதேவன், வென்றிபாகுதேவன், குறுளிபாகுதேவன்,

செகற்கொடிபாகுதேவன், சிங்கபாகுதேவன் முதலிய சிலமறவர் களின் பெயர்களைக் குறிப்பிடலாம். இவர்களிற் புலோலியில் மழவராயர், சிங்கபாகுதேவன், வென்றிபாகுதேவன் ஆகிய மூவரது கிளையினரும் குடியமர்த்தப்பட்டு, புலோலி மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. அவர்களின் பெயர்களாலேயே மேலே குறிப்பிட்ட குறிச்சிப் பெயர்கள் வழங்கிவரலாயின. இங்குள்ள களப்பிராவத்தை என்ற இடப்பெயர் களப்பிரர் தொடர்பினைத் தொடுத்துக் காட்டுகின்றது

தென்புலோலியில் 'உபயகதிர்காமம்' எனப்படும் பழைமை வாய்ந்த முருகன் கோயில் உள்ளது. 'புலவர் கான நகரம்' என்ற பெயரே புலோலி என ஆயிற்று எனவும் கூறப்படுகிறது. புலவர் என்பது தேவர் எனப் பொருள்படும் சொல்லாகும். எனவே பண்டை நாளில் உபயகதிர்காமத்திலே தேவர்கானம் ஒலித்தமையினால் இவ்விடமும் "தேவர்கானம்" என வழங்கிற்று என விளக்கம் கூறுவாரும் உளர்.

ஆய்வு முடிபுரை

இந் நூலிலே யாழ்ப்பாண மாவட்டத்து இடப்பெயர்களின் விளக்கங்கள் பற்றி வரலாறு, மொழி, பண்பாடு, நாட்டார்வழக்கியல் என்பனவற்றின் அடிப்படைகளில் ஆராயப்பட்டுள்ளது. இடப்பெயர்கள் அனைத்தும் இயற்கைநிலைப் பெயர்கள், செயற்கை நிலைப் பெயர்கள் என இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் இப் பெயர்கள் நீர், நிலம், நிலவியல்பு, நிலப்பயன்பாடு, குடியிருப்பு, ஊராட்சி, தெய்வம், மானுடம், விலங்கு, பறவை, மரம், செடிகள் முதலியன வற்றின் கூறுகளோடு இணைந்து பெயராக்கம் பெற்றுள்ளமை நன்கு விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெரும்பிரிவின் கீழும் இடம்பெறும் துணைப்பகுதிகளில் அமைந்துள்ள அனைத்துப் பெயர்களும் விரிவாகப் புதுப்புது விளக்கங்களுடன் அணுகப் பட்டுள்ளன. இவ்வகைப் பிரிவுகளில் அடக்க முடியாத சில இடங்கள் சிறப்புநிலை இடப்பெயர்கள் என்ற தலைப்பின் கீழ் ஆராயப்பட்டுள்ளன.

ஓரிடத்தின் உட்பிரிவுகள் குறிச்சிப் பெயர்களாக வழங்கு கின்றன. ஊர்த் தலைவனோ அன்றி அவ்வூர் மக்களோ தமது ஊரின் பகுதிகளைத் தனித்தனியாகக் குறித்து அறிய வேண்டிய நிலையிற் குறித்து வழங்கிய பெயர்களே குறிச்சிப் பெயர் களாகும். இக் குறிச்சிப் பெயர்கள், ஊர்ப்பெயர்கள் போன்றே இயற்கைக் கூறுகளையோ அல்லது செயற்கைக் கூறுகளையோ பெற்று இடு குறியாகவும், காரணகாரியத்தோடும் பெயர் ஆக்கம் பெற்றுள்ளன. குறிச்சிப் பெயர்களானவை அவை வழங்கும் இடங்களின் பல்வேறு பட்ட தகவல்களை அறிந்துகொள்ளப் பெரிதும் துணையாக அமைவதால், இயன்றளவு குறிச்சிப் பெயர் களும் இந் நூலிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இயற்கை நியதிகளுக்கு ஆளாகி, இயற்கை வளங்க ளையே தம் வாழ்வுக்குத் துணையாக்கிக்கொண்ட பண்டைக் கால மனித இனங்கள், இயற்கை வளம் செறிந்த இடங்களையே தமது குடியிருப்புக்களாக ஆக்கிக் கொண்டன. உலகின் மூத்த நாகரிகங்களாகிய எகிப்திய, சுமேரிய, பாபிலோனிய, சிந்துவெளி நாகரிகங்கள் அனைத்தும் ஆற்றங்கரைக் குடியிருப்புக்களாகத் தோன்றி வளர்ச்சி பெற்றவையாகும். பண்டைய நாளில் தம் வாழ்வை வளமாக்கிக் கொள்ள முனைந்த மனித இனத்தினர் நீர் நிலைகளைத் தேடிக் குடியேறியபோது அங்குள்ள ஆறு, குளம், வாவி, கேணி, குன்று, மலை, மரம், செடி, தானியம் முதலான இயற்கை நிலைப் பெயர்களை முன்னொட்டாக அல்லது பின்னொட்டாக வைத்துத் தாம் வாழ்ந்த இடங்களுக்குப் பெயர் வழங்கலாயினர்.

லெமுரியாக் கண்டமே (குமரிக் கண்டம்) மனித தோற்றத் தின் பிறப்பிடம் என்றும், மனித இனம் தோற்றம் பெற்று, அங் கிருந்து வடக்கு நோக்கிப் பரவியதென்றும் கூறப்படுகின்ற கருத் தும் உண்டு. இப் பின்னணியில் ஈழத்திலும், தென்னிந்தியாவிலும் காணப்படும் இடப்பெயர் ஒற்றுமைகளைக் கொண்டு பண்டை நாளில் ஈழத்தவரின் குடிப்பெயர்ச்சி தமிழகத்திலிருந்து ஏற்பட் டிருக்குமோ என்ற ஆய்வு நடத்தப்பட வேண்டியது இன்றியமை யாததாகிறது. முன்னாளில் இலங்கை யிலிருந்து தமிழ் நாட்டிற் குடியேறியவரும் உண்டு. தமிழ்நாட்டிலும், மலையாளத்திலும் காணப்படுகின்ற 'ஈழவர்' என்னும் சாதியார் ஈழ நாட்டிலிருந்து வந்தவராதலால் அப்பெயர் பெற்றனர். இன்னும் திருநெல்வேலி யிலுள்ள 'இல்லத்துப்பிள்ளைமார்' என்பார் ஈழத்துப் பிள்ளைமாரே யாவார் என ரா.பி.சேதுப்பிள்ளை கூறுவதும் ஈழத்தவரின் தமிழகம் நோக்கிய குடிப்பெயர்ச்சி பற்றிய எமது கருத்தைச் சான்றுபடுத்து கின்றது.

ஈழத்து வரலாற்று நூல்கள் யாவும் நாகர்கள் பற்றிய செய்திகளுடனேயே தொடங்குகின்றன. கி.மு. 6ஆம் நூற்றாண் டில் இலங்கையின் மேற்குக் கரையில் வல்லமை வாய்ந்த நாக அரசுகள் நிலவின. அதனாலேயே வட இலங்கை நாகதீவு என்று அழைக்கப்பட்டது. நாகர் என்போர் ஆதித் திராவிடர். தமிழகத்தில் வாழ்ந்த பழங்குடி மக்களாகிய நாகர்கள் இங்கும் பரவி வாழ்ந்தனர். இலங்கையில் கந்தரோடை, நாகர் கோயில், நயினாதீவு, களனி, மாதோட்டம் முதலான இடங்களில் நாக மன்னர்கள் ஆட்சி புரிந்திருக்கின்றனர். நயினாதீவில் விளங்கிய நாக அரசு நிலைபேறு உடையதாகவும், அன்னை நாகராஜேஸ் வரியின் கோயில் அதன் தலை வாசலாகவும் விளங்கிற்று என்றும் கூறப்படுகிறது.

சிலாபம் - உடப்பு ஆகிய இடங்களுக்குக் கிழக்கே பாயும் *பற்றுளிஓயா* என்ற சிற்றாறும், தெதுறுஓயா என்ற ஆறும்

பழந் தமிழரது நாகரிகத்தோடு தொடர்புடையன. பற்றுளி + ஓயா என்பது *பஃறுளி* ஆற்றின் எஞ்சிய பகுதி என்று நோக்கத் தக்கது. சிங்களத்திலே ததுறு = பல் எனவும், ஓயா என்பது ஆறு எனவும் பொருள்படும். தமிழ்ப் பஃறு (பல்) சிங்களத்தில் ததுறு > தெதுறு என மொழிபெயர்ப்பாக வழங்குவதாயிற்று. இந்த ஆற்றுப்பெயர் 1930க்கு முன்பு வெளிவந்த இலங்கைப் படம், வரலாற்றுப் புவியியல் ஆகியனவற்றிலே '*பற்றுளிஆறு*' என்ற தமிழ்ப் பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளது. எனவே இப் பகுதிகளிலுள்ள ஆற்றுப்படுக்கைகளை ஆய்வு செய்யின், பண்டைத் தமிழரின் தொல்சீர் பெருமைகள் வெளிப்படக் கூடிய வாய்ப்புக்கள் உளவாகலாம். அது போன்றே வழுக்கைஆற்றுப் பகுதிகளிலே தொடர்ச்சியான அகழ்வராய்ச்சி மேற்கொள்ளப் படும்போது ரோம, பாரசீக, சீன நாடுகளுடனான வணிக, பண் பாட்டுத் தொடர்பான விரிவான செய்திகள் வெளிப்படுவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படலாம்.

இடப்பெயர்களின் தோற்றம், அவற்றின் நிலைபேறு என்ப வற்றின் அடிப்படையில் வரலாற்று நிகழ்வுகள் முதன்மை பெறு கின்றன. சான்றாக கந்தரோடையிலே (கதிரமலை) தமிழ் அரசு மேலோங்கி இருந்தது என்பதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. அதன் பின்னர் தமிழ் அரசிருக்கை சிங்கை நகருக்கும், அங் கிருந்து நல்லூருக்கும் மாற்றப்பட்டுள்ளது. வட இலங்கையில் புத்தமதச் செல்வாக்கு ஏற்பட்டபோது அம்மதச் சார்பான இடப் பெயர்களும் வடக்கே நிலைபெறலாயின. இதுபோன்றே தென்னிந் திய அரசுகளின் செல்வாக்கால் புதுப்புதுப் பெயர்கள் ஈழத்திலே தோற்றம் பெறலாயின.

நல்லூரிலே தமிழரசு நிலைபெற்றிருந்த காலத்திலே வழக்கிலிருந்த இடப்பெயர்கள் தொடர்ந்தும் வழக்கில் இருந்தன. அவற்றைப் போர்த்துக்கேயர் தம் சமயப் பரப்புரை நடவடிக்கை களின்போது பயன்படுத்தினர். அவற்றைத் தமது சமய நட வடிக்கை அறிக்கைகளிற் பதிவு செய்தும் வைத்தனர். பின்னர் வந்த ஒல்லாந்தர் அப்பெயர்கள் அனைத்தையும் வரி அறவிடல், நீதி, நிருவாகம் முதலிய நோக்கங்களுக்காகப் பதிவுசெய்தனர். அப் பதிவேடுகள் 'தோம்பு' எனப் பெயர் பெற்றன. இத்தோம்பு களின் மூலமும் பழைய இடப்பெயர்கள் பற்றிய விபரங்கள் அறியப்படுகின்றன. ஒவ்வொரு அரசஅதிபர் செயலகங்களிலும் இத்தோம்புகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, பேணப்பட்டு வரு கின்றன.

பண்டைக் காலம் முதலாக வழங்கி வந்த பழைய பெயர்களின் தோற்றக் காரணம் காலப்போக்கில் மறைந்து போதலுண்டு. அதற்குப் பதிலாகப் பின் வந்தோராற் புதுக் காரணங்களும் காரண, காரியத்தோடு ஒட்டிய புதுக் கதைகளும் புனைந்து உரைக்கப்படுகின்றன. வரலாற்றாசிரியர்களுக்கும், சமூகவியலாளர்களுக்கும் இவை பல்வேறு சிக்கல்களைத் தரு கின்றன என்பதைப் பின்வரும் கருத்துச் சான்றுபடுத்துகின்றது:

> " The names which the original significance is lost may be considered as the most interesting is the philologist and to the historian. When the original meaning of the name is forgotten, one of two things happens: either the meaning of a homonym is given to it, or when a homonym is not available, the meaning of the word nearest to it in complexion is applied to it. Owing this process, the original significance of many important names is rendered unintelligible; several historical names have got most fanciful legends grown round them. .."
> (Julius D. De. Lanerolle:1930:83: p.511)

இதற்குச் சான்றாக இந் நூலிலே எடுத்துக் காட்டப்பட்ட வல்லிபுரம், ஊர்காவல்துறை, மாவிட்டபுரம், மணற்றி, யாழ்ப் பாணம் முதலான பெயர்களோடு தொடர்புடைய கதைகளை ஈண்டுக் கருத்திற் கொள்ளலாம்.

புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள் என்பன தோன்றிய பின், மக்கள் இடங்களையும், இலக்கிய நிகழ்ச்சிகளை யும் தொடர்புபடுத்திக் கதைகளைப் புனைந்தனர். பெரும்பாலும் ஒவ்வொரு ஊரிலுமுள்ள குன்று, பாறை, ஆறு, நீரூற்று முதலி யன இராமாயணம், பாரதம், புனைகதைகள் என்பவற்றோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. அக்கதைகள் இதிகாசங்களிலே கூறப்பட்டிருக்க வேண்டும் என்பதில்லை. தங்கள் ஊருக்குப் பழம்பெருமை கற்பிப்பதற்காக மக்கள் தங்கள் ஊரை இலக்கிய நிகழ்வுகளுடனும், அவற்றின் கதை மாந்தர்களோடும் தொடர்பு படுத்தினர் என நா. வானவமலை (1980:160) குறிப்பிடுவது, ஈழத்து இடப்பெயர்களுக்கும் பொருந்தும். இவ்வகையில் இங் குள்ள ராமாவில், மாரீசன்கூடல், வீமன்காமம், மயிலன்கூடல், கந்தர்மடம், பொக்கணை, மாயக்கை முதலிய இடப்பெயர்களைக் குறிப்பிடலாம்.

தென்னாசியாவின் ஆதி மதம் இந்து மதமாகும். இப் பரந்த பகுதிகளில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்த பல்வேறு மொழி பேசிய மக்கள் கடைப்பிடித்த மத நம்பிக்கைகளே ஈற்றில் ஒன்றிணைந்து, இந்து மதமாக வளர்ச்சி பெற்றன. இவ்வாறு ஏற்பட்ட இந்து மத வளர்ச்சியில் ஒஸ்ரிக், திராவிட, ஆரிய மொழிகள் பேசியோரின் பங்களிப்புக்கள் முதன்மைபெற்றன. ஈழமும் தென்னாசியக் கண்டத்தின் ஒரு கூறாக அமைந்தமையால் இங்கும் தொடக்க காலத்தில் இந்து மத நம்பிக்கைகள் கால்கொள்ளத் தவறவில்லை. கி.மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிற் புத்தமதம் இங்கு கால்கொள்வதற்கு முன்பாக, ஈழத்தின் தொடக்க கால மதமாக விளங்கியதும் இந்து மதமே. இக் கருத்தை ஈழத்து இடப்பெயர் ஆய்வு மேலும் வலுப்படுத்துகின்றது. கந்தரோடை, கதிர்காமம், கதிர மலை, திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முனீஸ்வரம், கீரிமலை, நாகர்கோயில், பொன்னாலை, வல்லிபுரம் முதலான இடப்பெயர்கள் பண்டைக் காலம் முதலாக இந்துமதத் தொடர் புடையனவாகக் காணப்படுகின்றமை ஆழ்ந்து நோக்கற்பாலது.

இடப்பெயர் ஆய்வாளருக்குப் பண்பாட்டுணர்வும், அதே வேளையில் சமன் செய்து சீர்தூக்கும் பண்பும் மிகவும் இன்றி யமையாதவை. அது போன்றே இடப்பெயர்களை நுணுகி அணு குவதற்குப் பன்மொழி அறிவும் தேவைப்படுகின்றது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இடப்பெயர்களை நோக்கும் போது இக்கூற்றின் உண்மை புலப்படும். சான்றாக உருசிய நாட்டின் இடப்பெயர்களை ஆராயும் ஒருவருக்கு இலத்தின், ஆங்கிலம், பிரஞ்சு மொழி, ஸ்பானிய மொழி, போர்த்துக்கேயம் முதலிய பல மொழிகளின் பயிற்சி நிறையப் பெற்றிருக்கும் போதுதான், அவர் தம் ஆய்வில் நிறைவைக் காண இயலும். அது போன்றே ஈழத்து இடப்பெயர் ஆய்வில், தமிழ், சிங்களம், வடமொழி, பாகதம், பாளி, மலையாளம், தெலுங்கு, டச்சு மொழி, போர்த்துக்கேயம், ஆங்கிலம் முதலாம் மொழிகளிற் பயிற்சியுடையோருக்கே தமது ஆய்வில் உண்மையைக் காண வாய்ப்புண்டு. மொழிக்கலப்பின் மூலம் ஒரு மொழி வழங்கு தலும், சில வேளைகளில் முன்னொட்டு, பின்னொட்டு நிலையில் இரு மொழிச்சொற்களும் இணைந்த ஒரே பெயராகத் தோற்றம் பெற்று வழங்குதலையும் நோக்கக் கூடியதாக உள்ளது.

ஈழத்தில் தமிழர் வாழும் பகுதிகளிற் சில சிங்கள இடப் பெயர்களும், சிங்களவர் வாழும் பகுதிகளில் தமிழ் இடப் பெயர்களும் வழங்குகின்றன. இவ்வாறு மொழிக்கலப்பால் ஏற் பட்ட இடப்பெயர்களை நோக்கும்போது முனைவர் குண்டர்ட் என்பவர் ஆரிய - திராவிட மொழிகளின் ஊடுருவல் பற்றிக் குறிப்பிட்ட கூற்றை ஈண்டு நினைவுபடுத்தல் பொருத்தமானது:

> "சிந்து நதியின் கரையில் முதற் குடியேறிய ஆரியர் மேன் மேலும் இந்தியாவின் தெற்குக் கண் புகுந்தனராக, ஆங்குள்ள புதுப்புது இந்தியப் பொருட்களைக் கண்டபோது அவற்றின் திராவிடப் பெயர்களை அறிந்து இவற்றையே தம் ஆரிய மொழிகளில் கூட வழங்கலாயினர். இங்ஙனம் அநேக திராவிடச் சொற்கள் ஆரிய மொழிகளுட் புகுந்தன எனக் கூறுதும்."
> (மேற்கோள்:- தாவீது அடிகள்: 1970:9)

இவ்வாறு மொழிக் கலப்பால் தோற்றம் பெற்ற இடப் பெயர்களின் தோற்றம், பரவல், நிலைபேறு, மாற்றம் என்பன பற்றி ஆய்வோருக்கு ஈழத்து வரலாற்றறிவு மிகவும் இன்றியமை யாததாகும். அவ்வகையிலே தொல்லியற் சான்றுகள், கல்வெட்டு கள், வரலாற்று ஆவணங்கள், பிற நாட்டார் குறிப்புகள், வரலாற்று நூல்கள், அறிஞர் கருத்துக்கள், களஆய்வுத் தரவுகள் என்பன எம்மால் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின் மூலம் தமிழகத்திற்கும் ஈழத்திற்கு மிடையே எத்தகு உறவுகள் பண்டைக்காலம் முதலாக இருந்து வந்தன என்பதும், தமிழகத்தின் எவ்வெப் பாகத்திலுள்ள மக்கள், இங்கு வந்து குடியேறித், தத்தம் இடப்பெயர்களைக் குடி பெயர்ந்து வாழ்ந்த இடங்களுக்கு இட்டு வழங்கினர் என்பதும் அறியப்படுகின்றன. இடப்பெயர் ஒற்றுமையுடையதாகக் காணப் படும் இரு நாட்டு மக்களுடைய கலை, பண்பாட்டு நடவடிக்கை கள், குடும்ப உறவுகள், குல உறவுகள் என்பன மேலும் ஆய் வுக்கு உரியவையாகும். இவ்வாய்வுகளின் மூலம் பல்வேறு சமூக வரலாற்றுச் செய்திகளைப் பெற வாய்ப்புகளுள என்பதும் களஆய்வில் அறியப்பட்டது.

சேரர், சோழர், பல்லவர், கன்னடர், தெலுங்கர், மராட்டிய மறவர் என்போர் தமிழரசர் காலத்தில் படை வீரர்களாகவும், வணிகக் குழுவினராகவும், ஆட்சியல் அலுவலர்களாகவும் காலத்

திற்குக் காலம், பல்வேறு அடிப்படையில் இரு நாட்டு அரசர்களின் பணிப்பின் பேரில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளில் வந்து குடியேறியுள்ளனர் என்பதை வரலாற்று ஆவணங்கள் சான்றுபடுத்துகின்றன. இம்மாவட்டத்திலுள்ள இடப்பெயர்கள் பற்றிய ஆய்வின்போது, பல்வேறு இடப்பெயர்களின் விளக்கங்களுக்கு மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு முதலிய மொழிச் சான்றுகளின் மூலமும், மொழியியல் சார்ந்த அடிப்படையிலும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இம் மாவட்டத்திலுள்ள பற்பல இடப்பெயர்கள் மேற்கூறிய மொழிகளைப் பேசியவர்களின் செல்வாக்கினால் ஆக்கம் பெற்றவை என்பதும் சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வழக்கில் இல்லாதனவும், பழந்தமிழ்ச் சொற்களாகவும் உள்ள இடப்பெயர் ஈறுகள் ஈழத்தில் மட்டும் வழக்கிற் காணப்படுதல் மனித இன வரலாற்று அடிப்படையில் மேலும் ஆழ்ந்து நோக்க இடம்வைக்கின்றது. தமிழகத்தில் வட மொழி கலந்த இடப்பெயர்களின் ஈறுகள் செல்வாக்குப் பெற்றுள்ள அளவுக்கு ஈழத்தில் அப்பண்பு மிக மிக அரிதாகவே காணப்படுகிறது. ஆரியர் பண்பாட்டுத் தாக்கம் ஈழத்து இடப்பெயர்களில் மிக அரிது என்றே கூற வேண்டும்.

தமிழகத்தில் வழக்கொழிந்துபோன இடப்பெயர் ஈறுகளை அல்லது முழுமையான பெயர்களை இனம் காணக்கூடிய வகையில் ஈழத்து இடப்பெயர் ஈறுகள், இடப்பெயர்கள், குறிச்சிப் பெயர்கள், காணிப்பெயர்கள் என்பன துணையாகலாம்.

சேர நாட்டுத் தொடர்பும், சேர மக்கட் குடியேற்றமும் இங்கு பெரிதும் இடம்பெற்றிருக்கின்றன. சேர நாட்டினர் தொடர்பைக் குறிக்கும் ஊர்ப்பெயர்கள் ஒப்பீட்டு அடிப்படையில் மேலாய்வுக்குரியனவாகும். சேரநாட்டுக் குடியேற்றம் பற்றி முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்களின் கருத்தே ஆசிரியர் கருத்தாகவும் அமைவதால் அவர் கூற்று ஈண்டுத் தரப்படுகின்றது:

> "முதலில் யாழ்ப்பாணத்திற் குடியேறியவர்கள் சேர நாட்டினராகிய மலையாளிகள் என்பது நீலகண்ட சாஸ்திரியார் கருத்து. கிறிஸ்து சகாப்தத்திற்கு முன் மலையாளிகள் இங்கு வந்து குடியேறினர் என்னும் பாரம்பரியக் கூற்று தமிழ் மக்களுள் இருந்து வருகிறதாகச் சேர். எமேசன் ரெனன்ற் (1860) கூறுகின்றார். மலையாளத்திலிருந்து நாடு கடத்தப்பட்டவர்கள்

> இலங்கைக்கு அனுப்பட்டவர்கள் என்று லிபிறோஸ் என்னும் சரித்திர ஆசிரியர் கூறுகின்றார். மலையாளத்திற் பரசுராமராற் குடியேற்றப்பட்ட நம்பூதிரிப் பிராமணர்கள் மலையாளிகளை நாட்டைவிட்டு வெளியேற்றினர் என்று மலையாள சரித்திர நூலாகிய 'கேரளோற் பத்தி' என்னும் நூல் கூறுகின்றது. இதே கருத்தைப் பேராசிரியர் வி. ரங்காசாரியரும் கூறி இருக்கிறார். நாட்டை விட்டு வெளியேறிய மலையாளிகளுட் சிலர் 20மைல் அகலம் உள்ள பாலைக்காட்டுக் கணவாய்க்கு உள்ளால் வந்து வியாபாரப் பாதை வழியாகச் சென்று யாழ்ப்பாணம் வந்து குடியேறினர். சிலர் அதே கணவாயாற் சென்று கொல்லிமலை, பச்சைமலை, சவ்வாதுமலை ஆகியன வற்றில் குடியேறி வாழ்கின்றனர். வேறு சிலர் கடல் மார்க்கமாகக் கன்னியாகுமரி, காயல்பட்டினம், இராமேஸ்வரம், மாந்தை வழியாக வந்து யாழ்ப்பாணத்திலும் தென்னிலங்கையிலும் குடியேறினர்."
>
> (கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை 1982: 9 –10).

எம்.டி. ராகவன் (1956:114-131) யாழ்ப்பாணக் குடாநாட்டினருக்கும், மலையாள மக்களுக்கும் இடையேயுள்ள பண்பாட்டுத் தொடர்பினைக் காட்டும்போது திருநெல்வேலி, நாகர்கோவில், கோவளம் என்ற இடப்பெயர் ஒற்றுமையை முதலிற் காட்டி, பின்பு கன்னக்குடுமி கட்டுதல், தோடு, கடுக்கண் முதலிய அணிகலன்கள் அணிதல், திருமணம் பேசுதல், பிட்டுச்சாப்பிடுதல், நாற்சார்வீடு கட்டுதல், வண்ணாத்திக் கடமைகள் முதலிய சமூக நடைமுறை களையும் விளக்கியுள்ளார். மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கும் மலையாள மக்களுக்கும் இடையேயுள்ள பண்பாட்டு உறவும் தொடர்பும் நாட்டார் வழக்கியல் ஆய்வு மூலமும் நிறுவப்பட்டுள்ளது (இ.பாலசுந்தரம்:1979). இத்தகைய பண்பாட்டுப் பின்னணிகளை மேலும் வலுப்படுத்துவனவாகக் கேரள நாட்டிலும், யாழ்ப்பாண மாவட்டத்திலும் உள்ள இடப்பெயர்கள் அமைகின்றன.

இந் நூலிலே ஆங்காங்குக் காட்டப்பட்ட மலையான் வளவு, மலையாளன்சீமா, மலையாளன்ஒல்லை, மலையாளன் தோட்டம் முதலான குறிச்சிப் பெயர்களும், மற்றும் முழுநிலையில் அமைந்த கேரளத்துடன் ஒப்புடையதாகக் காணப்படும் இடப்பெயர்களும் இவ்விரு நாடுகளுக்குமிடையிலான வரலாற்றுப் பழைமை மிக்க பண்பாட்டுத் தொடர்பினைக் குறித்துக் காட்டுவனவாக அமைகின்றன.

இம்மாவட்டத்து இடப்பெயர்களின் மொழிநிலையை நோக்கும்போது இடப்பெயராக்கத்தில் ஒரு வரையறையான முறையில் (Fixed Pattern) மொழி கையாளப்பட்டுள்ளது. இயற்கைக் கூறு, செயற்கைக் கூறு என்ற வாய்ப்பாட்டு அடிப்படையில் (a set of pattern) இடத்தின் முதன்மை நோக்கிப் பெயர்க் கூறுகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. சில வேளைகளில் மட்டும் இந்த "மாதிரிகள்" கைவிடப்பட்டிருந்ததும் உற்றுநோக்கப்பட்டது. இப் பெயர்களை ஆழ்ந்து அணுகும்போது இப் பகுதியின் மொழி வழக்கு, இப் பெயர்களிலே பதிவாகி இருத்தலைக் கண்டு கொள்ளலாம். மொழியின் வளமான சொல்லாட்சிகளால் இடப் பெயர்கள் ஆக்கம்பெற்று, கால ஓட்டத்தில் அவை எவ்வாறு ஒலிமாற்றம் பெற்றன (Phonemic Variations) என்பதும் விளக்கப் பட்டுள்ளது. இந்த இடப்பெயர்களின் மொழி நிலையானது இலக்கிய வழக்கு வடிவம் (Literary Form), பேச்சுவழக்கு வடிவம் (Colloquial Form) என இரு தன்மையனவாகக் காணப்படுகின்றது. இவ்விடயத்தில் மொழியியலாளர் ஆய்வு மேற்கொள்வாராயின் பேச்சுவழக்கு அடிப்படையிலான மொழிவரலாற்று உண்மைகளை இடப்பெயர்களின் வழியாக அறிந்துகொள்ள வாய்ப்புண்டு.

தொல்புரம், பளை, பூநகரி முதலாம் இடங்களைத் தளமாகக் கொண்டு பண்டை நாளில் பழங்குடியிருப்புகளும் அரசுகளும் நிலைபெற்றிருந்தன என்பதற்குரிய தரவுகள் இவ்வாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதே வேளையில் அச் சுற்றாடல்களில் அமைந்த இடப்பெயர்கள் தூய நற்றமிழ்ப் பெயர்களாக அமைந்துள்ளமையும் அறியப்பட்டது. அரசர்களின் மேலாட்சிக்கு உட்பட்ட பகுதிகள் பழந்தமிழ்ப் பெயர்களால் வழங்கப் பெற்றமைக்கு அரசர்கள், அதிகாரிகள் ஆகியோரின் ஆளுமையும் காரணமாக இருந்திருக்கின்றன.

இம் மாவட்டத்தின் சிறப்புநிலை இடப்பெயர்களை நோக்கும் போது அவை பண்டைக் காலத்துப் போர்முறைகளோடும், வெற்றி வாகை சூடுதலோடும் தொடர்புகொண்டிருந்தமையைக் காணலாம். இது பற்றிய விபரம் தொல்புரத்து இடப்பெயர் விளக்கத்தில் காட்டப்பட்டுள்ளது. மேலும் வீரப்பிராயன், தென்மராட்சி, வடமராட்சி, மறவன்புலோ, இயக்கச்சி, ஊரெழு, கொற்றாவத்தை, மல்லாகம், மூளாய் முதலிய இடப்பெயர்களும், "இட்டி" ஈற்றிடப் பெயர்களும் இப் பின்னணியில் பழைய வீர வரலாற்றை நினைவுபடுத்துவனவாக அமைகின்றன.

தமிழகத்தைப் போன்றே ஈழத்தில் தமிழ் மக்களிடம் புத்த மதம் பரவியபோதிலும், அது சிறிது காலம் நிலை பெற்றிருந்து, பின்னர் செயலிழந்திருக்கிறது. புத்தமதத்தின் ஊடாக பாளி, சிங்கள மொழிச் சொற்களும் தமிழ்ப் புத்தமதத்தினர் வழக்கில் நிலைப்பதாயின. பிற மொழிச் சொற்களும் வேற்று நாட்டார் உச்சரிப்பு முறைகளும் எளிதில் பாமர மக்களிடம் ஏற்படுதல் இயல்பாகின்றது. இதனை ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் கருத்தும் சான்றுபடுத்துகிறது:

> "The Non- Barahmin (NB) dialect less readily accepts the foreign words and the foreign phonemic pattern than the Brahmin dialect. The vocabulary of the NB is more archaic and its phonemic system lacks certain contrasts which the B has taken from Sanskrit. (A. Veluppillai. 1973: 1096)

இவ்விடப் பெயர் ஆய்வின் தகவல் தேட்டத்தின்போது ஊர்ப்பெயர்கள், மக்கள் வழக்காறுகள், நடைமுறைகள், இயல்புகள் முதலியன குறித்தனவாக ஆன்றோர் மொழி உரைகள், பழமொழிகள், நாட்டார் பாடல்கள் என்பவையும் சேகரிக்கப்பட்டன. ஆய்வு நோக்கில் பழமொழிச் சாயல் கொண்ட சில எடுத்துக்காட்டுகள் தரப்படுகின்றன:

"அச்சுவேலித் தென்னை மரம் போல"
"அறிந்தவன் அல்லோ அறிவான் அரியாலையூர்ப் பனாட்டை"
"எல்லாரும் கைவிட்டால் சில்லாலை வைத்தியம்"
"சில்லாலைதான் சோழ மன்னனின் எல்லை."
"நெடுந்தீவுக் குதிரை போல"
"யாழ்ப்பாணத்துப் பனைமரம் போல"
"வட்டுக்கோட்டைக்குப் போகும் வழி எது என்று கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு என்கிறார்"
"வந்தாரை வாழ வைக்கும் கந்தரோடை"

இத் தொடக்கத்தனவாக இன்னும் பல்வேறு ஊர் குறித்த மரபுத்தொடர்கள் உள்ளனவெனினும் அவை வெளியிடுவதற்கு உகந்தவையன்று.

இடப்பெயர் ஆய்வின் மூலம் பிற மொழியாளர் தொடர்பு, அரசியல் நிகழ்வுகள் என்பவற்றை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்ட ஊர்ப் பெயர்களை அணுகும்போது திராவிடப் பெயர்கள், சிங்கள மொழி வழிப்பட்ட மாற்றுப்பெயர்கள், ஐரோப்பிய மொழிப்பெயர் கள், யாவகர், முகமதியர் தொடர்புகள் என்பன அறியவருகின் றன. இம் மாவட்டத்து இடப்பெயர்களை ஆராய்ந்தபோது அவற் றின் மிகப் பழைய திராவிட மொழி மூலங்களும் (Proto Dravidian) ஆங்காங்கே காட்டப்பட்டன. அவற்றிலிருந்து அவர்கள் வாழ்ந்த காலம், பண்டைக் கால நிகழ்வுகள் முதாலானவற்றின் ஊடாக இப்பெயர்களின் உரிமையாளர் எவர் என்பது வெள்ளிடைமலை யாகிறது.

ஈழத்தின் வடபால் உள்ள ஊர்ப்பெயர்களை ஆராயும் போது அவற்றின் தூய தமிழ் வடிவம் புலனாவதோடு, அவற்றின் பழைமையும் வெளிப்படுகின்றன. இந்நிலையில் சுவாமி ஞானப் பிரகாசர் கூறுவது ஈண்டு மிகப் பொருத்தமாகிறது:

> " It is the evidence of really old place – names relating to the configuration of land, water courses and such other physical features, as distinguished from names connected with a for eign domination new religious institutions, town and villages. The former set of names remains the same from generation to generation even under successive colonization by people speaking different tongues. They never perish entirely but only receive a new twist or turn according to the genius of the new – comers who inherit them."
>
> (Rev.S. Gnanaprakasar:1952ஹ27).

இம் மாவட்டத்திற் புத்தமதப் பண்பாடு ஒருகால் நிலை பெற்றிருக்கிறது என்பதை வரலாற்றுச் சான்றுகள் நிரூபிக்கின்றன. அதனைத் 'தமிழ்ப் பௌத்தர் பண்பாடு' என்கிறார் கே. நவரத் தினம் (1959:3). சிங்களமொழியின் தாக்கத்தால் 'வில்', 'பாய', 'இட்டி' முதலான இடப்பெயர் ஈறுகள் இங்கு நிலை பெற்றுள்ளன என இதுவரை எழுதிய ஆய்வாளர் அனைவரும் பிழைபட வலிந்துரைத்தனர். சொற்பிறப்பியல், சொற்பொருள்நிலை, பண் பாட்டுநிலை என்பவற்றின் அடிப்படையில் இச்சொற்களுக்குத் தமிழ் மூலம் காட்டி, இவை தமிழ்ப் பெயர்களே என்பது எம்மால்

இந்நூலில் தக்க சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளது. இது போன்றே வடபால் அமைந்த தீவுப் பெயர்களுக்குச் சிங்கள மூலம் கற்பித்த முன்னையோரின் முடிபுகளும் பிழை என்பதும் இங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வத்தை ஈற்று இடப்பெயர்கள், குறிச்சிப் பெயர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகப் பரவலாகக் காணப்படுகின்றன. இச்சொல் வற்று என்ற வினையடியாகப் பிறந்து, வற்று, வற்றல், வற்றை, வத்தை ஆயிற்று என நூலில் நிறுவப்பட்டுள்ளமை காண்க. சிங்கள வழக்கில் இடப்பெயர் ஈறாகவும், குறிச்சிப் பெயராகவும் வரும் 'வத்தை' என்பது தோட்டம், வழி என்பவற் றைச் சுட்டுஞ் சொல்லாகும். ஆனால் பாளி மொழியில் 'வத்த' என்பது இப்பொருளில் நேரடியாகக் குறித்து வழங்கவில்லை (Rhys Davids:1921:55–56) என்பதைக் கருத்திற் கொண்டு, வத்தை என்பது தமிழ்ச் சொல் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தெலுங்கு மொழியிலும் 'வத்த' என்ற சொல் தமிழில் நாம் கருதியவாறு 'வற்று' என்ற வினையடியில் பொருள் சுட்டு வதாகவே வழங்குகிறது (Venkata Ratnam:1903:1133). எனவே இவ் வகையிலும் வத்தை ஈற்று இடப்பெயர்கள் திராவிட மொழி வழிப்பட்ட தமிழ்ச்சொல் என்பது நிறுவப்படுவதாயிற்று. மேலும் இது பற்றிய ஆய்வுகள் வெளிவருதல் பயன் உடையதாம்.

இடப்பெயர்களைப் பிரித்துச் சொற்பிறப்பு நிலையில் ஆராயும்போது, அவை பெரிதும் மாற்றம் அடைந்து காணப்படு வதை நோக்கலாம். இத்தகைய மாற்றங்கள் மக்களின் வாழ்க்கை முறைகள், தொழில் முறைகள், பழக்க வழக்கங்கள், அரசியல் மாற்றங்கள் முதலிய பல காரணங்களால் இயல்பாகவும், திட்ட மிட்டும் நிகழ்ந்திருக்கின்றன. இவ்வாறு பெயர்மாறும் தன்மை காலத்துக்குக் காலம் இடம்பெற்று வந்திருப்பதை இலக்கியங்கள், கல்வெட்டுகள், மற்றும் எழுத்து ஆவணங்கள் ஆகியனவற்றின் மூலமும் அறிய வாய்ப்புண்டு.

அசைநிலை, சொல்நிலை, தொடர்நிலை, பொருள்நிலை என்பனவற்றிலும் இந்த மாற்றத்தைக் காணலாம். சில இடப்பெயர் களின் ஈறுகளுக்குப் பொருள் அறிய முடியாதுள்ளமைக்கு இதுவே காரணமாகின்றது. இவ்வாராய்ச்சியின் பயனாக இடப் பெயர்கள் காலத்துக்குக் காலம் பல்வேறு வடிவங்களில் மருவி யும் திரிந்தும் புதுப்புதுப் பெயர்கள் பெற்றும் வந்திருப்பதை அறிவதன் மூலம் அப்பெயர்கள் வழங்கும் மொழியில் ஏற்பட்ட

பல்வேறுபட்ட மாற்றங்கள் பற்றிய தகவல்களையும் அறியக் கூடியதாயுள்ளது.

இடப்பெயர்களில் உயிர் எழுத்துக்கள் பெரிதும் திரிந்தே வழங்கப்படுகின்றன. உச்சரிப்பில் ஏற்படும் சோம்பல் தன்மை, பெயர் ஒப்புடைய தன்மை என்பவற்றால் இது நிகழலாம். திராவிட மொழிகளின் உயிர் எழுத்துக்கள் அடிப்படையில் மாறும் தன்மை யுடையவை என்பதை மொழியியல் அறிஞர்களான ரி. பறோவும் எமானோவும் நிறுவியுள்ளனர். எடுத்துக்காட்டாகப் *புல்* என்பது *புல்லு* (தமிழ்), *பில்லி* (கொடகு), *புல்லு, பில்லு* (தெலுங்கு) என மாற்றம் பெறுவதைக் குறிப்பிடுகின்றனர் (Burrow and Emeneau: 1961:285 No: 3528).

ஐரோப்பாவிலும், மேற்காசிய நாடுகளிலும் திராவிட மொழிப் பெயர்கள் ஊர்ப் பெயராகக் காணப்படுந் தன்மையை விளக்கி, நூற்றுக்கணக்கான திராவிடப் பெயர்களின் தொடர்பினை ஐரோப்பிய இடப்பெயர்களில் தக்க ஆராய்ச்சி மூலம் நிறுவு வதற்கு வாய்ப்புண்டு என்கிறார் சுவாமி ஞானப்பிரகாசர் (1935: 188). ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்த ஹேர் ஸ்கூனர் (Herr Schooner) தனது "Armalurisch" என்ற ஆய்விலும், ஏனைய கட்டுரைகளிலும் சுமார் 800 இடப்பெயர்களில் திராவிட மூலம் கண்டெழுதியுள்ளார். மேலும் "Arumalurisch" என்பதில் 'Aru' + ' Malai ' + ' Ur' என்னும் மூன்று தமிழ்ப் பெயர்கள் இருப்பதை விளக்கியமையை சுவாமி ஞானப்பிரகாசர் (1952) எடுத்துக் காட்டுவதும் நோக்கத்தக்கதாகும்.

கடல் கடந்த தமிழர் வாழும் மலாயா, இந்தோசீனம், மொறிஸியஸ், தென்ஆபிரிக்கா, பிஜித்தீவு, பர்மா முதலிய இடங் களிலும் தமிழ் ஊர்ப் பெயர்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள் ளுதல் காலத்தின் மிக இன்றியமையாத் தேவையாகும். இம் முயற்சிகள் முழுமையாக நிறைவுறும்போது "தமிழ் இடப்பெயர் களின் கலைக் களஞ்சியம்" ஒன்றை உருவாக்க வாய்ப்பு ஏற் படலாம்.

ஆய்வுத்துணைநூல்கள்

I - தமிழ்

நூல்கள்:

ஆறுமுகம். சி. பச்சிலைப்பள்ளிப் பகுதியின் பயன்பாடும் குடிப்பரம்பலும், (ஆய்வேடு) யாழ்ப்பாணப் பல்பலைக்கழகம், 1979

இந்திரபாலா, கா. - யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணத் தொல்லியற் கழக வெளியீடு, 1972

இராகவையங்கார், மு. - சேரன் செங்குட்டுவன், திருவல்லிக்கேணி, 1929

இராசமாணிக்கனார், மா. - பல்லவர் வரலாறு. சென்னை, சேக்கிழார் அச்சகம், 1944.

இராஜகோபால், பாமா. - வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பல் ஓட்டிய தமிழர்கள், யாழ்ப்பாணம், கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள், 1984

கணபதிப்பிள்ளை, க. - ஈழத்து வாழ்வும் வளமும், சென்னை, பாரிய நிலையம், 1962

கந்தவனம். வி.- நுணாவிலூர், சாவகச்சேரி, 1971

கந்தையா, வி.சீ. (பதிப்பு) - கண்ணகி வழக்குரை, காரைதீவு, இந்து சமய அபிவிருத்திச்சங்க வெளியீடு, 1968

கிருஷ்ணராசா, எஸ். - யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பிரதான தொல்லியல் தளங்கள், (கிபி.15ஆம் நூற்றாண்டு வரை), ஆய்வேடு யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம்,1979

குணராசா, க. - ஈழத் தமிழர் வரலாறு, கொழும்பு, பூபாலசிங்கம் பதிப்பகம், 1996

குணராசா, க. - பச்சிலைப்பள்ளி, கரச்சி, பூநகரி ஆகிய பிரிவுகளின் நீர் நிலப்பயன்பாடு, ஒரு புவியியல் ஆய்வு, ஆய்வேடு, யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம், 1983

குமாரசுவாமி, S.W.- வடமாகாணத்துச் சில ஊர்ப்பெயர்கள் யாழ்ப்பாணம், 1918 (யாழ்பாணவைபவகௌமுதி என்ற நூலின் பின்னிணைப்பு)

குமாரசுவாமி, வ. (பதிப்பு) - தண்டிகைக் கனகராயகன் பள்ளு, யாழ்ப்பாணம், 1932

சஞ்சீவி (பதிப்பு), - புதுக்கோடடை சமஸ்தான வரலாறு, சென்னை, 1980.

சண்முகசுந்தரம், த. - நாட்டார் இலக்கியத்தில் மழை இரங்கிப் பாடல், தெல்லிப்பளை, அருள் வெளியீட்டகம், 1984

சண்முகசுந்தரம், த. (பதிப்பு) - வன்னி நாச்சியார் மான்மியம், மாவிட்டபுரம், 1981.

சண்முகநாதபிள்ளை, நா.க. - புராதன நயினை நாகபூசணி ஆலயமும் வரலாற்றுப் பாமாலையும், யாழ்ப்பாணம், 1981

சந்திரசேகரன், மெய். - தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள், சென்னை, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிலையம், 1983.

சதாசிவம், செ. சேர நாடும் தமிழும், சென்னை, 1964

சபாநாதன், குல. - இலங்கையின் புராதன சைவாலயங்கள், நல்லூர்க் கந்தசுவாமி கோயில், யாழ்ப்பாணம், 1971.

சபாநாதன், குல. (பதிப்பு) -யாழ்ப்பாண வைபவமாலை, சுன்னாகம், ஈழ கேசரி வெளியீடு, 1949

சிங்கை ஆழியான், - ஆழ்கடலான், பருத்தித்துறை, 1983

சிவபாதசுந்தரனார், புலவர். நா. - புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி, வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கம், 1972

சிற்றம்பலம், க. - யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1993

சின்னத்தம்பி, ஆறுமுகம். - ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு, கரவெட்டி, தமிழ்ப் பூங்கா அச்சகம், 1994.

சீனிவேங்கடசாமி, மயிலை. - துளு நாட்டு வரலாறு, சென்னை, 1966

சுப்பிரமணியம், ச. வே. (தொகுப்பு). ஆய்வு மலர்த் தொகுதி - 1, சென்னை, 1972.

சுப்பிரமணியசாஸ்திரி, சு. - சொற்பொருள் விளக்கம் என்னும் தமிழ் அகராதி, பருத்தித்துறை, கலாநிதி அச்சுயந்திரசாலை, 1960

சுப்பிரமணியன், தி.நா. (பதிப்பு) - தென்னிந்திய கோயிற் சாசனங்கள், தமிழ்நாடு, 1957

சேதுப்பிள்ளை, ரா. பி. – தமிழகம் ஊரும் பேரும், (5ஆம் பதிப்பு), சென்னை, பழனியப்பா பிரதர்ஸ், 1976

சோமலே - செட்டி நாடும் தமிழும், சென்னை

ஞானப்பிரகாசர், சுவாமி எஸ். - *யாழ்ப்பாண வைபவ விமரிசனம்*, அச்சுவேலி, 1928

டானியல் ஜோன். - யாழ்ப்பாணச் சரித்திரம், 1878

டானியல் ஜோன், கந்தபுராண மறைபொருள், சென்னை, றோயல் பிரிண்டர்ஸ், (ஆண்டு குறிப்பிடப்படவில்லை)

தமிழவன், (மொழிபெயர்ப்பு) - ஸ்ட்ரக்சுரலிசம், சென்னை, பாரிவேள் பதிப்பகம், 1982.

தமிழ் லெக்ஸிகன். சென்னை, சென்னைப் பல்கலைக் கழகம், 1982

தாவீதுஅடிகள், ஹ. சி. – லீலா அன்றேல் சொற் பிறப்பு ஒப்பியல் தமிழகராதி, (முதற்பாகம்) யாழ்ப்பாணம், ஆசீர்வாதம் அச்சகம், 1970

நகுலசிகாமணி, வல்வை. ந. - வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள், ஸ்காபரோ, 1997.

நடராசா, F.X.C. - ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு, கொழும்பு, 1970

நாகசாமி, இரா. (பதிப்பு) - தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு, சென்னை.

நாகராசன், கரு. - செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1985

நாச்சிமுத்து, கி. - தமிழ் இடப்பெயர் ஆய்வு, *நாகர்கோவில்,* கோவிதம் பதிப்பகம், 1983

நீலகண்டசாஸ்திரி, கே. ஏ. – தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புக்கள் (மொழி பெயர்ப்பு) மு. ரா. பெருமாள்முதலியார், சென்னை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1976

பகவதி, கே. - இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - தொகுதி –2, சென்னை,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1984

பத்மநாதன், சி. - வன்னியர், பேராதனை, 1970.
பாலசுந்தரம், இ. - ஈழத்து நாட்டார் பாடல்கள் ஆய்வும் மதிப்பீடும், *மட்டக்களப்பு மாவட்டம்.,* சென்னை, தமிழ்ப் பதிப்பகம், 1979

பாலசுந்தரம், இ. - ஈழத்து இடப்பெயர் ஆய்வு-2 (தென்மராட்சி-வடமராட்சி), யாழ்ப்பாணம், 1989.

பாலசுந்தரம், இ. - இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள், யாழ்ப்பாணம், நாட்டார் வழக்கியல் கழகம், 1990

புஸ்பரத்தினம், ப. - பூநகரி-தொல்பொருளாய்வு - திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு. 1993

முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ. - யாழ்ப்பாணச் சரித்திரம், (மூன்றாம் பதிப்பு), யாழ்ப்பாணம், நாவலர் அச்சகம், 1933

முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு. - யாழ்ப்பாணக் குடியேற்றம், சுன்னாகம், புலவரக வெளியீடு, 1982

வானமாமலை, நா. - பழங்கதைகளும் பழமொழிகளும் - *சமூக மானுடவியல் ஆய்வுக் கட்டுரைகள்,* சென்னை, 1980.

வித்தியானந்தன், சு. - தமிழர் சால்பு (சங்ககாலம்), கண்டி, தமிழ்மன்றம், 1954

விபுலாநந்தர், சுவாமி - யாழ் நூல், கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1947.

வேலுப்பிள்ளை, ஆ. – சாசனமும் தமிழும், பேராதனை, 1971

வேலுப்பிள்ளை, க. – யாழ்ப்பாண வைபவ கௌமுதி, யாழ்ப்பாணம், ஜயஸ்ரீ சாரதா பீடேந்திரசாலை, 1918

கட்டுரைகள்

இந்திரபாலா, கா - "செய்தியும் குறிப்பும்" சிந்தனை, 1972: 1-2:98

இந்திரபாலா, கா. - "யாழ்ப்பாண இராச்சியத்தின் தொன்மை பற்றிய பழைய கருத்துக்கள்" *சிந்தனை.3,* 2, 1970.

இந்திரபாலா, கா. - "யாழ்ப்பாணக் கல்வெட்டுக்கள்", *சிந்தனை,* (2) ஜனவரி 1969: (3)2, 1970:258 - 259

இந்திரபாலா, கா. - " யாழ்ப்பாணத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி" *இளவேனில்.* 1970.

கிருஷ்ணராசா, செ. - யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைத்த நாணயங்கள், *சிந்தனை-* தொகுதி, 1, இதழ் 3, 1983

குணசிங்கம், செ. - "வல்லிபுரம் பொன்னேட்டின் வரலாற்று முக்கியத்துவம்-ஒரு மறுமதிப்பீடு. ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்சுவாமிகோயில் திருக்குடமுழுக்குமலர். 1977.

சபாநாதன், குல. - "ஈழ நாட்டின் பெயர்கள்" ஈழமணி, மலர்:1, இதழ் 1, 1947

சபாநாதன், குல. - "ஈழநாட்டு இடப்பெயர் வரலாறு " ஸ்ரீலங்கா. நவம்பர், 1955: 30-31, ஓகஸ்ட் 1956:16-17

சரவணபவன், ஐ.-"நயினாதீவு வரலாற்றுப் பின்னணி" கோமுகி, நயினாதீவு, மணிபல்லவ கலாமன்றம், 1972, 17-30

சிவசாமி, வி. ''யாழ்ப்பாணத்தில் 1972 ஆம் ஆண்டு கிடைத்த சில நாணயங்கள்" பூர்வகலா. 1973: 26-30

சிற்றம்பலம், க. - "பௌத்தத்திற்கு முந்திய ஈழத்து இந்துமதம் "சிந்தனை தொகுதி 1 இதழ் 3 ஆடி 1983

சிற்றம்பலம், க. - "ஈழமும் இந்துமதமும்" சிந்தனை. *2: 1,* 1984: 108 –141.

சீனிவேங்கடசாமி, மயிலை - "மறைந்து போன மருங்கூர்ப்பட்டினம்" இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு ஆராய்ச்சி செயல்முறைக் கருத்தரங்கு சென்னை, 1968

செல்வநாயகம், டீ.ரி. - 'நல்லூர் தரும் இதிகாசம். ஸ்ரீலங்கா.*ஜனவரி,* 1950.4 9.

செல்வரத்தினம், கலைஞானி. ஆ. - "கல்லும் கதையும் - கந்தரோடை" . *சங்கமம்,* ஒக் - நவ, 1974: 33-39.

தாவீது அடிகள். - "ஊரும் பெயரும்" . சில்லாலை சமூக சேவா(வெளியூர்) சங்க வெள்ளிவிழா நினைவு மலர், கொழும்பு.1971

நயினார், மா. - " ஊர்ப் பெயர் மாற்றங்கள்". 10ஆவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி. 3, 1978.

நாச்சிமுத்து, கி. - "நகர் என்ற சொல்லின் வரலாறு". ஏழாவது கருத்தரங்கு ஆய்வுரைக்கோவை, தொகுதி 2, 1 975.

பாலசுந்தரம், இ. - "வட இலங்கைத் தீவுப் பெயர்கள் ஓர் ஆய்வு". நாட்டுப்புறவியல், இந்திய நாட்டுப்புறவியல் கழக ஆய்வேடு., 1988

ரூபாமூர்த்தி. கா. "யாழ்ப்பாணப் பகுதியில் மீன்பிடித் தொழில் அபிவிருத்தி" *சிந்தனை, 1- 111.* 1983.

II - ENGLISH

BOOKS

Arumugam, S. - *Ancient Hindu Templse of Sri Lanka,* Colombo, 1980

Burrow, T. and Emeneau, M.B. - *A Dravidian Etimological Dictionary.* London. 1961

Casie Chetty, Siman. - *The Ceylon Gazetteer,* Colombo. 1834

Cave, Hentry W., - The Book of ceylon, London, Cassell & Company, 1908

Census of Population and Housing. 1981. (Code list of A.G.A Divisions)

Daaviidu, Rev.Fr.H.S. - *Maintan: The three in one and etimological and comparative Lexicon.,* Vol.2,Jaffna, Aseervatham Press.

Epigraphica Indica: Vol. XXII. *Epigraphia Tamilion,* Jaffna Archaeological Society Publication Series,No.I, 1971.

Erindle, J.W. - *Ancient India as Desoribed by Negasthenes and Arrian.* Culcutta. 1887.

Geiger, W. (Translation) - *The Mahavamsa or the Chronicle of Ceylon.*

Gege, H.Roghair. - *The Epic of Pal Nadu:* Oxford, Charendon Press, 1982

Hentry, W. Cave. - *The Book of Ceylon*, London, Cassell & Company, 1908

James. T. Ratnam - *Jaffna Before the dawn of History*

Kartikesu, S. - *Hand Book of the Jaffna Peninsula. Jaffna*, American Ceylon Mission press, 1905

Katti, Madhar N.- (Editor) *Studies in Indian Place Names. Vol. I & II,* Mysore, The place Names Society of India, 1980

Lewis, John Penny. - *List of Inscriptionas of Tombstones and monuments in Ceylon,* Colombo, Govt. Printers ,1913

Mendis. G.C. - *The Early History of Ceylon,* Colombo, 1946

Navaratnam C.S.- *Tamils and Ceylon.* Jaffna, 1958

Nelson. W.A. - *The Dutch Forts of Sri Lanka: the military monuments of Ceylon.* Scotland, Canoagat, 1984

Paranavithana, S. - *Sinhalayo,* Colombo. 1967

Parker.H. - *Ancient Ceylon: An account of the Aborigines and a Part of the Early Civilization.* London. 1909

Pathmanathan, S. - *The Jaffna Kingdom.* Colombo, 1978

Peiris, P.E. - *The Kingdom of Jaffnapattam. Colombo,* Ceylon Daily News Printers, 1920

Ptolemy. - *Ancient India.* Mc. Cridle. 1927.

Queyros, Fernando de,. *The temporal and spritual conguest of Ceylon..* Colombo.1930

Raghavan, M.D. -*Tamil Culture in Ceylon: a general introduction.* Colombo, KalaiNilayam, (Nodate)

Ragupati Kemtur.- 'A few interesting place names in Tulu Nadu." Studies in Indian Place Names Vols. I+II, 1980

Ragupathy,P. *Early settements in Jaffna, on archeslogical survey,* (Ph.D.Thesis). University of Jaffna ,1983

Rasanayakam, C. - *Ancient Jaffna.* Madras, Everyman's Publishers, 1926

Rhys Davids (Ed.) - *The Pali Text Society's Pali - English Dictionary,* London 1921.

Siscarr, D.C - *Indian Epigraphica Glossary.* Delhi, 1966

Sittampalam.S.K. - *The Megalithic Culture in Sri Lanka: Unpublished Ph.D. Thesis,* University of Poona.1980

Subramaniam , S.V. - *The Place names in Early Tamil Literatuire.* Madras, 1984, Xiv: 127+ 129.

Velupillai, A. -_*Study of the Dialects in Inscriptional Tamil,* Trivandram., D.L.A. University of Kerala, 1976

Velupillai, A. - *Ceylon Tamil Inscriptions.* Royal Printers, Kandy, 1971

Venkata Ratnam. -*Telugu English Dictionary,* Madras. 1903.

Wolters.O.W. *Early Indonesian commerce:A Study of the origin of Sri Vijaya.* New York 1967.

ARTICLES:

Arasaratnam., S. "The vanniar of North Ceylon: A study of feudal power and central authority" *The Journal of Historical and Social Studies*: No. 21, 1966: 103-106

Aravanan, K. P. ''Lemuria - The original Home of Dravidians", *10 கருத்தரங்கு ஆய்வுரைக்கோவை, தொகுதி-3,* இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, 1978:38-39.

Ayrton, E.R. - " Ancient names of Northern Ceylon" *J.R.A.S.C.B.* Pt.4 (25) July, 1914:60-62

Begley.V, Lukacs.J.R., and Kennedy, K.A.R. - 'Excavation of iron age burials at Pomparippu' *Ancient Ceylon, 4:* 1981: 51-132.

Coomaraswamy, S.W. - "Place Names in Jaffna ending in "Pay" *C.A.L.R.3,* (3). Jan.1918 : 157-162.

Gnanaprakasar, Rev. S. - "Some ruins in Jaffna "*C. A. L. R. 7. (2).* 1921: 118 - 121.

Gnanaprakasar, Rev. S. - 'Portuguese in Tamils.' Ceylon Antiquiary. C. A. L. R. 5,(2) *1919:* 70-77

Gnanaprakasar, Rev. S. - 'Sankily's fortress at Kopay" C.A.L.R. 2 (3). Jan.1917:1904-195

Gnanaprakasar, Rev. S. - "Dravidian place names in Europe" C.A.L.R 4 (4). Oct.1935:186-188

Gnanaprakasar, Rev. S. - "Ceylon originally a land of Dravidian" *Tamil Culture 1 (1),*1952: 25–27.

Godakumpura, C.E. '' Archaeology of Ceylon's Northern Peninsula". *Ceylon Today. I & III, Jan.* 1967:3-10

Hersburgh, B. "Sinhalese place names in the Jaffna Peninsula" *C. A. L. R 2 (1)* Jan, 1916: 54-58; 2(3) Jan 1917: 172- 174

Indrapala, K. - "A brief history of the city of Jaffna". *Commemorative souvenir opening of the rehabilitated building of the Jaffna public Library, 4. 6. 1984.*

Kularatnam, K. - "Tamil place names in Ceylon" Proceedings of the first International Conference Seminar of Tamil Studies.Vol.I, 1968: 486–93.

Lanerolle, Jullius De. - "Place names of Ceylon, *J. R. A. S. C. B.* 31 (83) 1930: 510 527.

Lewis John Penny, - "Derivation of Chavakachcheri" *Orientalist,2:* 1885–1886 200–203.

Lewis, John Penny, - " Some notes on archaeological matters in the Northern Province, *C. A.L.R.No.2: 1916:94-99.*

Lewis, John Penny, - "Place names in the Vanni" J. R. A. S. C. B 14 (47) 1896: 203 – 222

Lewis, John Penny,- "Names of the Portuguese forts in the Jaffna Islands" *C. A. L. R.5 (2) Oct.*1919:78 – 80

Lewis, John Penny, - *'Portuguese in Tamil, C. A. L. R. 5 (2)* 1919: 70- 77.

Lewis, John Penny, - "Sinhalese place names in the Jaffna Peninsula" *C. A. L. R. 2 (3) Jan. 1917: 171 – 172; (1) July, 1917: 44 – 46, 48.*

Nelson, W.A. - " The Dutch forts of Sri Lanka: The Military Movements of Ceylon":Scotland, Canongate, 1984:82-83

Nicholas.C.W. - " Historical Topography of Ancient and Medival Ceylon ". *JRASCB.(NS) VI*,1959.

Paranavithana.S. - " Vallipuram Gold Plate Inscription of the region of Vasabha". *Epigraphica Zeylanica. IV,* 1940: 229-237.

Pieris,P.E. - "Nagadipa and Buddhist Remains in Jaffna" *J.R.A.S.C.b. 26*: 1917: 11-30

Ragavan, M.D. - "The Malabar inhabitants of Jaffna : A study in the Sociology of Jaffna". *Sir Paul Pieris Felicitation Volume,* Colombo, 1956, 114-131

Rasanayagam, C. - " Jaffna Coins", *R.A.S.C.B. Vol.XXI.(83)* 1930:589-590

Sabaratna Mudaliyar. S.- "Sinhalese place names in the Northern Ceylon" *J. R. A. S. C. B.* (N.S). 5 (4) March, 1916: IXXX IIX – IXXX VI

Sabaratna Mudaliyar, S. - " Sinhalese place names in the Jaffna peninsula" *C. A. L. R.*_(2),(3):1917.

Subramaniam S. V. - "The place Names in early Tamil Literature". *All Indian Conference of the Place Names Society of India.* Mysouor 1984- 4- 20-22.

Velupillai, A. - "Tamil in Ancient Jaffna and Vallipuram Gold Plate". *Journal of Tamil Studies,*_No.19, 1981

Wayland.E.J. and Davise ,A.M. - "The Miocene of Ceylon", *Journal of the Geological Society,* 1923 : 577-602.

பின்னிணைப்பு - 1

யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயர்கள் -அகரநிரல்

		பக்கம்
அக்கராயன் குளம்	10/கர.161.	76,353,333
அங்கணாமைக்கடவை	10/வலி.வ.62	272
அங்கலப்பாய்	10/வலி.தெ.57.1	249,250
அச்சுவேலி	10/வலி.கி.76.1,2	318 - 319
அச்செழு	10/வலி.கி.80.1.	380
அத்தாய்	10/வடம.தெ.மே.133.2.	385
அத்துளு	10/வடம.தெ.மே.ப.37.5.	363 - 364
அந்தணன்திடல்	10/வடம.தெ.மே.119 அ.1.	333,131
அந்திரான்	10/வடம.தெ.மே.119.1.	333
அந்திரான்	10/வலி.தெ.56.1.	333
அம்பன்	10/வடம.கி.144.1	325
அம்பன்தோலை	10/நல்.37.2.	325
அம்பணை	10/வலி.வ.65.1.	240,337
அம்பன்கடவை	10/வடம. வ.கி.144.1.	273
அராலி	10/வலி.மே.45 அ.	356,389 - 390
அரியாலை	10/நல்.23.3.	202,203
அல்லாரை	10/தென்ம.105.1,2.	59
அல்லைப்பிட்டி	10/தீவு.தெ.19.	158
அல்வாய்	10/வடம.தெ.மே.133.1	266
அழகொல்லை	10/வலி.வ.62.1.	182
அளவெட்டி	10/வலி.வ.62.2, 62 அ.1.	188 -189
அனலைதீவு	10/தீவு.வ.7.	03,133 - 134
அன்னுங்கை	10/நல்.6	
ஆடியமடம்	10/நல்.37.1, 38.1	263,334
ஆத்திக்காடு	10/நல்.23.1.	124,336
ஆத்திக்கோவில்	10/வடம.வ.கி-10.ந.23.2.	326
ஆத்தியடி	10/வடம. தெ.மே-11.136.1	336,381
ஆர்த்திமயிலிட்டி	10/வலி. வ-13.72.1.	357
ஆர்த்தியடி	10/தென்ம-9.106.1.	381
ஆலங்கேணி	10/ப-8.170.1	336
ஆவரங்கால்	10/வலி.கி.12.79.1.	75
ஆழியவளை	10/பச்.7.148.1.	168
ஆனைக்கோட்டை	10/வலி.தெ.மே-15.40.1.	37,277,358
ஆனைப்பந்தி	10/நல்.6.மா.ந.1.	278
ஆனையிறவு	10/கர-5.62.1.	356,359 -361

வீமன்காமம்	10/வலி.வ.13.69.4	179-181
வீரபிராயன்	10/வடம.தெ.மே.11.119.6	332,333
வீரமனை	10/வலி.தெ.14.70அ.6	
வெட்டுக்காடு	10/பச்.8.172.3	125
வெள்ளாம்போக்கட்டி	10/தென்ம.9.105.9	334
வெள்ளிமனைத்தோட்டம்	10/பச்.7.157.2	183
வெள்ளையம்பதி	10/வலி.வ.13.62.8	326
வெளிக்கண்டல்	10/கர.5.163.14	336
வேம்படி	10/வடம.வ.கி.10.ந.23.4	338
வேம்பிராய்	10/தென்ம.9.102.4	347,337,338
வேம்பேடுகேணி	10/பச்.7.158.2	
வேர்குத்திக்கடவை	10/வலி.தெ.மே.15.53.11	276
வேரவில்	10/பூ.175.7	114,336
வேல்வை	10/வலி.வ.13.68.5	
வேலக்கைப்பிள்ளையார் கோவில்	10/வலி.தெ.மே.15.ப.36.6	326
வேலணை	10/தீவு.தெ.3.17,18	3,156-157
வேலப்பள்ளம்	10/தென்ம.6.111.7	157
வேலம்பராய்	10/தென்ம.9.91.5	337,338,348
வேவில்காடு	10/தென்ம. 9.91.5	125
வைரவர்கோவில்	10/வலி.தெ.மே.15.ப.36.4	326
றாத்தலடி	10/வலி.மே.16.49.6	174,382
ஸ்கந்தபுரம்	10/கர.5.161.3	317
ஜயந்திநகர்	10/கர.5.164அ.2	
BAZZAR	10/வலி.தெ.மே.15.ப.38.3	
BAZZAR	10/யாழ்.4.மா.ந.1.18	
BAZZAR	10/வடம.வ.கி.10.ந.23.6	
BAZZAR	10/வலி.தெ.14.ப.32.3	

பின்னிணைப்பு 2

தென்னிந்திய இடப்பெயர்களும் யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயர்களும்

தென்னிந்தியா	யாழ்ப்பாண மாவட்டம்
அச்செழு	அச்செழு, அச்சுவேலி
அம்பன்பேட்டை	அம்பன்
ஆரைக்கல்	கல்லாரை
ஆல்வாய்	அல்வாய்
ஆலங்காடு	ஆலங்கேணி
இடைக்காடு	இடைக்காடு
இராமநாதபுரம்	இராமநாதபுரம்
இருமுளை	இருபாலை, மூளாய்
இருக்கை	குடியிருப்பு
உடுப்பூர்	உடுத்துறை,உடுப்பிட்டி, உடுவில்
உப்புக்காய்ச்சிப்பேட்டை	உப்பளம், உப்புமடத்தடி
உமையாள்புரம்	உமையாள்புரம்
ஊருணி	ஊரணி
ஒட்டங்காடு	ஒட்டகப்புலம்
கண்டியூர்	கோயிலாகண்டி,பொலிகண்டி, முறிகண்டி, வலிக்கண்டி
கதிரி	கதிரிப்பாய்
கரம்பைக்காடு	கரம்பகம், கரம்பன்,
கரம்பன்	கரம்பைக் குறிச்சி
கரிசவயல்	கரிசலைநாகபடுவான்
கருணீகர்வாயில்	கரணவாய்
கரையூர்	கரையூர் (குருநகர்)
கல்லார்	கல்லாரை
கள்ளிக்காடு	கள்ளியங்காடு
காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்
காரைக்கால்	காரைக்கால், காரைதீவு
காவலூர்	ஊர்காவல்துறை
கிழாலி	கிழாலி
குடந்தை	குடத்தனை, குடமியன்
குறிச்சி	இடைக்குறிச்சி, சித்தன்குறிச்சி

கொட்டையூர்	கொட்டைக்காடு
கொல்லிக்கரை	கொல்லன்கலட்டி
கொற்றையூர்	கொற்றையூர்
கோட்டைநகர்	கோட்டைக்காடு
கோயில்குடி	கோவில்குடியிருப்பு
கோவளம்	கற்கோவளம்
கோவில்பத்து	கோவில்வயல்,கோவில்கடவை
சித்திரமேழி	சித்திரமேழி
சுழியல்	சுளிபுரம்
சூரப்பள்ளம்	வேலப்பள்ளம்
செட்டிபுலம்	செட்டியார்ஊர்,செட்டிச்சோலை, செட்டியாகுறிச்சி,செட்டியாமடம்
செட்டிவயல்	செட்டியாவெளி
செம்பியன்	செம்பியன்பற்று
சேந்தான்குளம்	சேந்தான்குளம்
சோளபுரம் + சுழியல்	சுளிபுரம்
தம்பன்வயல்	தம்பகாமம்,தம்பசிட்டி. தம்புவட்டை
தருமபுரம்	தருமபுரம்
தாழையூத்து	தாழையடி
திருநெல்வேலி	திருநெல்வேலி
திருவையாறு	திருவையாறு
தொண்டி	துண்டி
தோட்டம்	புதுத்தோட்டம்,பெரியதோட்டம் கொய்யாத்தோட்டம்
தோப்பூர்	தோப்பு, தச்சன்தோப்பு
நக்கம்பாடி	நக்கனாவட்டை
நல்லூர்	நல்லூர்
நாகர்கோவில்	நாகர்கோவில்
நாகாச்சுனாகொண்டா	கோண்டாவில்
நீராவி	நீராவியடி
பராய்த்துறை	உரும்பிராய்,தம்பிராய், வேம்பிராய்
பல்லவராயன்பேட்டை	பல்லவராயன்கட்டு
பாலைக்காடு	இருபாலை
பிரான்குடி	பிரான்பற்று
புத்தூர்	புத்தூர்
புதுக்கொல்லை	அழகொல்லை
பொன்னேரி	பூநகரி

மயிலை	மயிலப்பை
மயிலாடுதுறை	மயிலங்காடு,மயிலிட்டி, மயிலங்கூடல், மயிலணி
மருதடி	மருதடி
மாசர்	மாசர்
முசிரி	மிசுரி
வரங்கால்	ஆவரங்கால்
வல்லம்	வல்லம், வல்வை
வல்லிபுரம்	வல்லிபுரம்
விற்குடி	‘வில்’ ஈறறுப்பெயர்களை நோக்குக.

In a wide-ranging and insightful study, Professor E. Balasundaram demonstrates the multiple intersections – cultural, social, historical and political – that determine and shape the names of places in the Northern part of Sri Lanka. As a work of toponymy, the book reflects years of patient research and a mind capable of sifting through a mass of complex material and drawing from a wide range of disciplines and languages. Given the confusing historiography and ideological struggles of Sri Lanka, this work is both timely and valuable in that it dispels fallacies and misreadings and replaces them with a rigorous and scholarly approach to the names given to places. Professor Balasundaram offers a taxonomy that takes into account landscapes, patterns of migration, cultural transformation, hybridity and the politics of identity. Names of places are often, as the author demonstrates through his classification, a result of ecological factors such as the presence of water in the form of rivers and streams, of different configurations of the landscape, of patterns of cultivation or structures of settlement and governance. Further categories such as gods, animals, birds and plants serve as the scaffolding for the author to anchor his classification. The author's reading reveals the inadequacies of previous research, particularly that of the linguists during the British period, and suggests new ways of unpacking the meanings inherent in labels of identification. This book is a valuable resource to both the layperson and the scholar, and is likely to remain a standard work on the subject for a long time.

Professor Chelva Kanaganayakam
Department of English
University of Toronto.

The author of six books, Professor E. Balasundaram is a distinguished scholar, specializing in literature, folklore and toponymy. He was formerly Head of the Department of Tamil at the University of Jaffna. The recipient of several Fellowships, he has conducted research in India, UK, USSR and the States.

